

# மேலே உயரே உச்சியிலே

(முதல் பாகம்)

இந்திரா சௌந்தர்ராஜன்



# மேலே உயரே உச்சியிலே

(முதல் பாகம்)

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 600 017.
போன் : 24342899, 24327696
Fax : 91-44-2434155
E-mail ID : enquiry@thirumagalnilayam.com
Website : www.thirumagalnilayam.com

முதற்பதிப்பு : நவம்பர், 1998
இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 1999
மூன்றாம் பதிப்பு : ஏப்ரல், 2010

உரிமை : ஆசிரியருக்கு

**MELA UAYARE UACHIYILE**

**By : Indira Soundarrajan**

First Edition : November - 1998
Third Edition : April - 2010

No.of Pages : 480
Paper Used : 11.6 N.S. Book Print

விலை : ரூ.165.00

**Thirumagal Nilayam**
New No. 16, Old No. 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017.

**Laser at : Goodwill Computers,** T.Nagar, Chennai - 17.
E-mail : goodwilltngr@yahoo.co.in Cell:9444006583

**Printed at :** மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# பதிப்புரை

**கோ**ட்டைப்புரத்து வீடு, மர்மதேசம், ஓடாதே கருப்பா போன்ற தொடர்கதைகள், தொலைக்காட்சித் தொடர்கள் மூலம் லட்சக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்த எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜனின் மற்றுமொரு வெற்றிப்படைப்பு ‘மேலே உயரே உச்சியிலே!’ ஒரு தினசரியில் தினமும் தொடராக வந்து தினமும் விறுவிறுப்பு வேகம் என வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட நாவல் இப்போது நூலுருவில் உங்கள் கரங்களில் தவழ்கிறது. படிக்க கையில் எடுத்துவிட்டால் முழுவதும் படித்து முடிக்காமல் நாவலை கீழே வைக்க முடியாது என்பதுபோல் கதையின் வேகமும் விறுவிறுப்பும் மேலே உயரே உச்சியிலே செல்வதை படிப்பவர்கள் உணர்வார்கள்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த தேவநாதன் 24 வயது இளைஞன். கஷ்டப்பட்டு படித்து முதல் வகுப்பில் தேறி பட்டம் வாங்கிய வேலையில்லாத லட்சக்கணக்கான இளைஞர்களில் அவனும் ஒருவன். அன்னை மீனாட்சியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். பெரிய குடும்பம். இரண்டு அக்காள், இரண்டு தம்பி, தந்தை அருணகிரிக்கு மில்லில் உத்யோகம். உடனடியாக ஏதாவது ஒருவேலை தேடிக்கொண்டால்தான் குடும்பக் கஷ்டத்தை ஓரளவாவது குறைக்க முடியும் என்ற நிலை.

கோயிலுக்குச் சென்று மீனாட்சியை தரிசிக்கும் தேவநாதனுக்கு மனோரஞ்சித மலர் அருட் பிரசாதமாகக் கிடைக்கிறது. இனிமேல் உனக்கு நல்லகாலம்தான் என அர்ச்சகர் அருள்வாக்கும் கூறுகிறார், பிராகாரத்தில் வலிப்பு

கொடுத்து உதவுகிறான். சாமியார்கள் மீது வெறுப்புக் கொண்டிருந்த தேவநாதன் அவரையும் போலிச் சாமியாராக நினைக்க தான் போலி மாந்திரீகன் இல்லை என்றும் தன் ரசமணியின் சக்தியை அவனுக்கு நிரூபித்துக் காட்டுவதாகக் கூற,

தேவநாதனும் அப்போது கோயிலுக்கு தரிசனம் செய்ய வந்த பிரபல மில் ஓனர் கைலாஷின் மகள் பிருந்தா தன்னிடம் வந்து தனக்கு முத்தமிட வேண்டும் என்கிறான் அப்படியே நடக்கிறது. பிருந்தா தேவநாதன் காதல் மலர்கிறது. கூடவே தடைகளும்.

ரசமணியின் சக்தியை தேவநாதன் வியக்கிறான். அவனுக்கு ஒரு ரசமணியைக் கொடுக்கிறார். அதன்பின்தான் அவன் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள்?

பிரபல நகைக்கடை அதிபர் அருணாசல ஆசாரி கடைப்பையன் விலைமதிப்பற்ற நவரத்தினங்களைத் தவற விட, அவை தேவநாதன் கையில் கிடைக்க தேவநாதன் அதன்மீது ஆசைப்படாமல், நேர்மையாக போலீஸில் ஒப்படைக்க அருணாசல ஆசாரி அவன் நேர்மையைப் பாராட்டி தன் நகைக் கடையிலேயே மானேஜர் வேலை கொடுக்கிறார். அருணாசல ஆசாரி மகள் லேகாவும் தேவநாதனைக் காதலிக்க தேவநாதன் இருதலைக்கொள்ளி யாகிறான்.

இந்த சுவையான நாவலை வெளியிட அனுமதியளித்த எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜனுக்கும் படித்து மகிழ்ந்து ரசனையில் மேலே உயரே உச்சியிலே செல்ல விருக்கும் வாசகர்களாகிய உங்களுக்கும் எங்கள் நன்றிகள்.

பதிப்பாளர்

# மேலே உயரே உச்சியிலே...



## 1

**தே**வநாதன்! இந்த இருபத்து நாலு வயது இளைஞன் இப்பொழுது மீனாட்சி அம்மன் கோயில் முன் நின்று கொண்டிருக்கிறான். நினைத்தபடி பட்டம் படித்து முடித்தாயிற்று. ரிசல்ட்டும் வந்துவிட்டது.

கஷ்டப்பட்டு படித்ததன் பலன் முதல் வகுப்பி லேயே தேறிவிட்டான். எல்லாவற்றுக்கும் காரணம் என்று அவன் கருதுவது மீனாட்சியைதான்!

அவள் அருள்தான் கரை சேர்த்திருக்கிறது.

நன்றி சொல்லத்தான் கோயிலுக்கு வந்திருக்கிறான்.

நான்கு மாடவீதியும் 'ஜேஜே' என்ற ஜனத் திரளால் மிரண்டு போய் கிடக்கிறது.

நீந்தி நடந்து தெற்கு கோபுரம் வழியாக உள்ளே நுழைகிறான். வலது ஓரமாய் விபூதி பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். துளி விபூதியை சுவர் மேல் அவர் மேல் தூவி தொட்டே வழிபடலாம். அவரைத் தொடும் அடுத்த நொடி நமது அழுக்கு, தீட்டு

எல்லாமே அவர்மேல் கிடக்கும் சாம்பலோடு சேர்ந்து சாம்பலாகி விடுவதாக ஐதீகம்.

அதன்பின் அம்மன் சந்நிதியை நெருங்கும்போது தூய்மை ஒன்றுதான் உடன் தொடரும்.

பெரியவர்கள் அந்த நாளிலேயே காரண காரியங்களை ஆராய்ந்து இப்படி செய்து வைத்திருக்கிறார்கள். இதனால் பக்தன் மட்டுமல்ல, கோயிலின் தூய்மையும் பாதுகாக்கப்படுகிறது.

ஆனால் இதை எல்லாம் புரிந்து அனுஷ்டிக்கும் நிலையில் தேவநாதன் இல்லை.

படித்தாயிற்று-பாஸ் பண்ணியாயிற்று!

இனி அடுத்து?

இந்த கேள்விதான் அவனை இப்பொழுது கொத்திக் குதறிக் கொண்டிருக்கிறது.

இந்த படிப்புக்கு என்ன வேலை கிடைக்கும்? இன்றைய தினம் பட்டதாரிகள் அதிகபட்சம் ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் வாங்கி குமாஸ்தாவாகலாம். இல்லாவிட்டால் மருந்து மாத்திரை என்று விற்கும் ரெப்ரசன்டேட்டிவாகலாம். அதற்கு மேல்-

நினைக்கவே வலிக்கிறது.

பெரிய குடும்பம். இரண்டு அக்காள், இரண்டு தம்பி என்று உடன் பிறப்புகளே நான்கு பேர். அப்பா அருணகிரி, மில்லில் உத்யோகம். கிட்டதட்ட முப்பது வருஷ சர்வீஸ் முடிக்க போகிறார். மூவாயிரம் சம்பளத்தை தொட்டபாடில்லை.

வீட்டு வாடகைக்கே கிட்டதட்ட தொள்ளாயிரம் தந்துவிட்டு சொச்சத்தில் வீட்டு வாழ்க்கை நடத்தப் பட்டிருக்கிறது.

நன்றாக சாப்பிட்டுப் பார்த்ததில்லை. ஒரு கோக்கோ கோலா குடித்ததில்லை. தரை டிக்கட்டில் மட்டுமே சினிமா பார்த்த அனுபவம். அனைத்தையும் மீறிய ஒரே சந்தோஷம். மீனாட்சி அம்மன் கோயிலும், அவளது வழிபாடும்தான்.

இன்றும் அது தொடர்கிறது.

அம்பிகை பச்சைப்பட்டில் கம்பீரமாக காட்சி தருகிறாள். பட்டர் குங்குமம் தரும் போது அவன் ஆச்சரியப்படும்படி ஒரு மனோரஞ்சித மலரை சேர்த்துத் தருகிறார்.

“மனோரஞ்சிதம் வந்தா ரொம்ப விசேஷம்!” என்று கருத்து வேறு கூறியபடி நகர்கிறார்.

இனி தன் வாழ்க்கை விடிந்து விடுமா?

குடும்ப கஷ்டம் தீர்ந்து விடுமா?

நல்ல வேலை கிடைக்குமா?

நெஞ்சு கொள்ளாத கேள்விகளோடு வெளியே வருகிறான். வறண்டு கிடக்கும் பொற்றாமரைக் குளம் வா வா என்கிறது.

போய் படித்துறை கல் ஒன்றில் அமர்கிறான்.

எத்தனை புராதனமான புனித குளம் இது? நக்கீரன், வள்ளுவன் என்று எத்தனை எத்தனை புலவனைப் பார்த்த திருக்குளம் இது?

இன்று இதன் மடியில் அமர்ந்து கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கை விடியவேண்டும்.

எல்லாரையும்போல் மட்டும் வாழ்ந்துவிடக் கூடாது.

ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழவேண்டும்.

சராசரிப் பிழைப்பு வேண்டவே வேண்டாம்.

குமாஸ்தா உத்யோகமோ, மருந்துப்பெட்டிச் சுமையோ எதுவும் வேண்டாம். இதை எல்லாம் தாண்டிய ஒரு மனிதனாக மாறவேண்டும்.

உலகம் இது நாள்வரை பசி, பட்டினி என்று போட்டு பார்த்துவிட்டது. சிலரிடம் பெட்டி பெட்டி யாக உள்ள பணம் தன் வீட்டில் சில்லறைக் காசாக மட்டுமே இருந்துவிட்டது.

மாமன் மச்சான் என்று ஆயிரம் சொந்தம் இருந் தும் ஏழை என்கிற தகுதி அவர்களை தூரத்திலேயே நிறுத்திவிட்டது.

போதும்... இது நாள் வரை விட்டதெல்லாம் போதும்;

இனி அனைத்தையுமே மாற்றிப் போடவேண்டும்.

முயன்றால் முடியாதது இல்லையாமே!

இனி முயன்று பார்த்து விடவேண்டியதுதான்.

'எங்கு தொட்டு எதில் தொட்டு தொடங்கலாம்?' கேள்வி அவனைப் பின்னும்போதுதான் எதிரில் நடக்கக் கூடாத ஒன்று நடந்தது.

கருப்பு வேட்டியும் சட்டையுமாய் உள்ள ஒரு ஐய்யப்ப சாமி ஒன்று யாத்திரையாக கோயிலுக்கு வந்துவிட்டு வெளியேறும் கட்டத்தில் வலிப்பு வந்து கீழே விழுந்து கை கால்கள் உதறல் எடுக்க ஆரம்பித்திருந்தது.

சிலர் நின்று வேடிக்கை பார்க்க, சிலர் இரும்பு இரும்பு என்று கத்த தேவநாதனை அந்த வலிப்பு மனிதர் பரிதாபத்துடன் பற்றி இழுக்கிறார்.

பாய்ந்து அவரை நெருங்குகிறான்.

நல்லவேளையாக சாவிக்கொத்து பாக்கெட்டிலேயே இருந்தது. எடுத்துக் கொடுத்து வலிப்பை முதலில் கட்டுப்படுத்துகிறான்.

பின் மடிமேல் போட்டு ஆசுவாசப்படுத்தி மார்பை வருடி விடுகிறான்.

அவருக்கும் போன உயிர் திரும்பினதுபோல ஒரு ஸ்மரண நுரை தப்பிவிட்டு வாயோடு மெல்ல தேசநாதனைப் பார்த்தபடி எழுந்து அமர முயற்சிக்கிறார்.

"பரவால்ல படுங்க. அப்புறமா எழுந்திருக்கலாம்" அவன் தடுக்கிறான்.

"இல்லப்பா... சரியாயிடுச்சி, வுடு இனி எனக்கு ஒண்ணுமில்லை" - அமர்ந்து கொண்டு பெரிதாக இழுத்து மூச்சு விடுகிறார்.

சற்றே நன்றி கசியும் கண்களுடன் அவனைப் பார்க்கிறார். "ரொம்ப நன்றிப்பா!" என்கிறார்.

"இதெல்லாம் என்னங்க... சாதாரண உதவி தானே?"

"சாதாரண உதவிதான். ஆனா, சமயத்துக்கு நீ செய்தே. நான் மட்டும் உருண்டு புரண்டிருந்தா இந்த ரசமணி உடைந்திருக்கும். அப்புறம் எல்லாமே கெட்டிருக்கும்" -சொல்லிக்கொண்டே இடுப்புப் பகுதியில் இருந்து ஒரு ஈயகுண்டைப் போன்ற ரசமணி ஒன்று எடுத்துக் காட்டுகிறார். பட்டுத்துணி ஒன்றில் கட்டி துணியை இடுப்பில் கட்டிக் கொண்டிருக்கிறார்.

"என்னங்க இது?"

"அதான் சொன்னேனே ரசமணி"

"அப்படின்னா?"

"அப்படின்னான்னா என்ன சொல்ல... இது ஒரு அபூர்வ விசயம். இது இருக்கிற நபர்களுக்கு கெடுதலே

நடக்காது. வர்ற கெடுதலும் எப்படியாவது போயிடும். இப்ப எனக்கு வந்தது. ஆனா நீ வந்து காப்பாத்தலையா அப்படி?"

"ஆச்சரியமா இருக்கே?"

"இது என்ன ஆச்சரியம்-மந்திர சாஸ்த்ரம் ஒரு கடல்; அதுல ரசமணி ஒரு சின்ன விசயம்"

"அப்படின்னா நீங்க?"

"நான் ஒரு சக்தி உபாசகன்."

"சக்தி உபாசகன்னா?"

"ஒரு சக்தி உபாசகன்றவன் சக்தியோட அம்சம். அவன்தான் எல்லாமே. அவன் நினைச்சா எதை வேணா செய்யலாம். நரியை பரியாக்கலாம். பூனையை புலி ஆக்கலாம். இரும்பை தங்கமா ஆக்கலாம்."

தேவநாதன் உடனேயே சிரித்து விடுகிறான்.

"ஏன் சிரிக்கிறே?"

"இல்லே, உங்களை மாதிரிதான் இந்த உலகத்துல இப்படி பினாத்தறவங்க எவ்வளவு பேர்? சாமியார்னா எங்கே தப்பா நினைச்சுடுவேனோன்னு உபாசகன்னு பாலீஷா சொல்றீங்கன்னு நினைக்கிறேன்."

"கதையா?"

"கூடவே முடியாததே கிடையாதுன்னு கதை வேற விடுறீங்க."

"ஆமா... இல்லையா பின்னே? இரும்பை தங்கமாக் கிறது இருக்கட்டும். உங்க.வலிப்பை குணப்படுத்திக்க உங்களால முடியலியே. உங்க சக்தியால உங்களையே சரி பண்ணிக்க முடியலை. ஆனா அதை பண்ணுவேன் இதை பண்ணுவேன்னா எப்படி? எப்படிங்கறேன்."

அந்த சக்தி உபாசகர் முகம் கருத்து இருண்டு போகிறது. ஒரு தீவிரமும் தீர்மானமும் அவருக்கு வந்து விட்டது நன்றாக தெரிகிறது.

“என் வியாதிய விடு. இப்ப நீ எதாவது சொல்லு. என் சக்திய நான் நிரூபிச்சு காட்டுகிறேன்.” என்றார் சற்று கடுமையான குரலில். தேவநாதனும் இதான் சாக்கு என்று அவரை பிடித்துக் கொள்கிறான். இருங்க சொல்றேன், சொல்றேன் என்று பல்லைக் கடிக்க ஆரம் பிக்கும் போது அம்மன் சந்நிதியில் இருந்து தெப்பகுளம் ஓரமாக ஒரு பணக்கார பெண்ணும் கூடவே தடிதடியாக சில எஸ்கார்ட்டுகளும் வந்து கொண்டிருக்கின்றனர்.

“யார் அது?”

“உம்...மில் ஓனர் கைலாஷோட பொண்ணு பிருந்தா, தோரணையா வரதுலேயே தெரியலியா?”

“அப்படியா? அப்படின்னா அந்த பொண்ணு என்கிட்ட வந்து முத்தம் இடணும். எங்க செய்ய வைங்க பாப்போம்.”

அவர் அடுத்த நொடி உள்ளங்கை மூடி எதையோ உச்சரிக்க தொடங்க மெல்ல அந்த பெண் தேவநாதனை நோக்கி வர ஆரம்பித்தாள்.

“என்னடா இது அதிசயம்?” தேவநாதன் திகைத்து போகிறான்.



# 2

**தே**வநாதன் திகைப்பு கூடிக்கொண்டே போகிறது. அந்தப் பெண் மிக நெருங்கிவிட்டாள். அந்த சக்தி

உபாசகரோ வெறித்தபடி பார்த்துக் கொண்டிருக் கிறார்.

அந்தப் பெண் தேவநாதனை நெருங்கி சிரிக்கிறாள்.

"ஹலோ!" என்கிறாள்.

உடன் வந்த எஸ்கார்ட்டுகளின் முகத்தில் ஆச்சரியம் அதிர்ச்சி.

"மேடம் இவரை உங்களுக்கு தெரியுமா?" அதிர்ச்சி கலையாமல் கேட்கின்றனர். அவள் பதில் பேசாமல் அவனை மிக நெருங்குகிறாள். அவன் உடம்பு இப்பொழுது குளிர் ஜுரக்காரன் போல நடுங்கத் தொடங்குகிறது.

அவள் பார்வை அவன் முகத்தையே வெறிக்கிறது.

"மேடம்-மேடம்-" எஸ்கார்ட் ஒருவன் அவளை தன் குரலால் கலைக்கப் பார்க்கிறான். அவள் திரும்பி அவனை ஒரு முறை முறைத்துவிட்டு தேவநாதனை திடும்மென்று தன் கரங்களால் இறுக அணைக்கிறாள். அணைத்த மறுநொடி அவன் கன்னம் கழுத்து என்று உதடுகளால் ஒத்தி எடுக்கிறாள்.

அக்கம் பக்கம் மொத்தமும் இந்தக் காட்சியால் பரபரப்பாகி நின்று வெறிக்கிறது.

"மேடம்-மேடம்-" எஸ்கார்டுகள் பலமாகவே கத்தி அவளை தடுக்கப் பார்க்கின்றனர்.

உபாசகர் இப்பொழுது இடையிடுகிறார்.

"போதும்மா விட்ரு" அந்தக் குரலுக்கு அவள் உடனடியாக கட்டுப்படுகிறாள். அவனை விடுகிறாள்.

"போதும். போ. போய் மீனாட்சியை தரிசனம் செய் போ..."

அவள் சம்மதிக்கிற மாதிரி நடக்க ஆரம்பிக்கிறாள். எஸ்கார்ட் மனிதர்கள் பிரமை பிடித்த மாதிரி தொடரு கின்றனர்.

உபாசகர் பார்வை இப்பொழுது தேவநாதனை பார்க்கிறது.

"ஐயா-" தேவநாதன் சிரித்த நிலையில் கை கூப்பு கிறான்.

"இனி எந்த சக்தி உபாசகனையும் கேவலமாக நினையாதே" அவர் கண்டிப்பது போல பேசுகிறார்.

"நான் கேவலமாக நினைக்கலைங்க. இப்பகூட சொல்றேன் என்னால் நம்ப முடியலை."

"நேர்ல பார்த்துமா?"

"ஆமாம். ஏதோ கண்கட்டும்பாங்களே அப்படி இருக்குது!"

அவர் சிரிக்கிறார். சிரித்தபடியே எழுந்து நிற்கிறார் "நட" என்றபடி நடக்கிறார். அவன் தொடருகிறான். ஆடிவீதி வருகிறது. குரங்குகள் ஓடிவிளையாடிக் கொண்டிருக்கின்றன. அவரைப் பார்க்கவும் சில குரங்குகள் நின்று அவரை வெறிக்கத் தொடங்குகின்றன.

"இன்னொரு அதிசயம் பார்--" அவர் அந்த குரங்குகளை டார்த்து கை ஜாடை காட்டுகிறார். அவை அடுத்த நொடிப்பொழுது அவரை நோக்கி ஓடி வரு கின்றன. ஒன்று அவர் தோள் மேலேயே ஏறி நட்போடு அமருகிறது.

தேவநாதன் திகைப்பு கலையாமல் இவற்றைப் பார்க்கிறான்.

"என்னப்பா பார்க்கறே-இது ஒண்ணும் கண்கட்டு இல்லை. ஒரு சக்தி உபாசகனை இந்த உலகத்துல ஈ

எறும்புகூட நேசிக்கும் தெரிஞ்சுக்கோ" தோளில் அமர்ந்த குரங்கை வருடியபடியே பேசுகிறார் அவர்.

"என்னால-என்னால-" அவன் பதில் சொல்ல முடியாது தடுமாறுகிறான்.

"இன்னும் நம்பமுடியலேங்கற. அப்படித்தானே?"

அவன் ஆமோதிக்கிறான். அவர் குரங்குகளை இறக்கி விடுகிறார். அப்படியே கோயில் மதில் ஓரமாக அமருகிறார். "இப்படி உட்கார்-" என்று கை காட்டு கிறார். அவனும் உட்காருகிறான்.

"உன் பேர் என்ன" கேட்கிறார்.

"தேவநாதன்" அவன் இதமாக பதிலளிக்க தயா ராகிறான்.

"நல்லது. உன் கையை நீட்டு" அவன் நீட்டுகிறான். அவர் அதை பற்றிக் கொள்கிறார்.

"இனி நீ எதையும் சொல்லாதே. நானே உன்னைப் பத்தி எல்லாம் சொல்றேன்." அவர் அவன் கைவிரலை வருடியும், அழுத்தியும் விட்டபடி தன் கண்களை மூடு கிறார்.

"நீ மூத்தவன் சரிதானே?"

கண்களை திறக்காதபடி கேட்கிறார்.

"ஆமாங்க..."

"உன் அப்பா மில்லுல உத்யோகம் சரியா?"

"ரொம்ப சரி."

"நீ இருபத்து ஏழாம் தேதி எழுபத்து ஒன்பதாம் வருஷம் கார்த்திகை மாசத்துல பொறந்தவன்..."

"ரொம்ப ரொம்ப சரி..."

“பெரிய அளவு வாழ்க்கைல முன்னுக்கு வரணும். அந்த கவலையோடதான் மீனாட்சி தரிசனத்துக்கு வந்தே.”

“அய்யா... நான் நினைக்கறத அப்படியே புட்டு புட்டு வைக்கிறீங்களே...”

“பொறு... தரணி ஆள இடம் தரப் போற பரணி நட்சத்திரம் உனக்கு...”

“ஆமா... ஆமா...” தேவநாதன் சிரிப்பின் உச்சிக்கே போகிறான். அவர் கண் திறக்கிறார்.

“இப்ப இவ்வளவு போதும்” என்பதுபோல அவனைப் பார்த்து சிரிக்கிறார்.

“அய்யா உங்களுக்கு ஜோசியம் தெரியுமா என்ன?”

“ஜோசியமும் தெரியும்” அவர் பதில் அவனை பிரமிக்க வைக்கிறது.

“அப்ப என்னல்லாம் தெரியும்” -கேட்கிறான்.

“என்னெல்லாம்னா?”

“எனக்கு கேட்க தெரியல-நீங்களே சொல்லுங் களேன்.”

“என்னைப்பத்தி நான் பேசக்கூடாது. உன்னைப் பத்தி வேணும்னா நீ பேசு...”

“என்ன பேச... என்னைப் பத்தி ஒண்ணு மில்லீங்கய்யா...”

“ஏன் இல்லை? எவ்வளவோ இருக்கே...”

“நீங்க ஆரம்பத்துல இருந்தே அசத்தறீங்க. கேட்டா சக்தி உபாசகன்னு சொல்றீங்க. இது எல்லாம் எப்படி அய்யா சாத்யம். இது இண்டர்நெட் யுகம்?”

"அப்படின்னா..."

"அபாரமான விஞ்ஞான யுகம். எந்த ஒரு விசயத்துக்கும் விளக்கமும் நிரூபணமும் உள்ள உலகம். ரேடியோ, டி.வி., செல்போன்னு ஒவ்வொரு அதிசயத்துக்கும் பின்னால ஒரு சரியான விளக்கமும் இருக்கற உலகம்."

"இதை எதுக்கு சொல்றே?"

"மாய்மாலங்களுக்கு இந்த உலகத்துல இடம் கிடையாது. மதிப்பு கிடையாது. அது இந்த உலகத்தை பொறுத்தவரை ஏமாத்தற வித்தை..."

"அதனாலதான் கண்கட்டு வித்தைன்னு சொன்னியா?"

"அதுல என்ன தப்பு... நீங்க என்னைப் பத்தி சொன்னீங்களே எப்படி? அந்த பொண்ணு முத்துமிட்டாளே எப்படி? இந்த குரங்குகள்ளாம் ஓடிவந்து ஸ்னேகமா நடந்துகிட்டிச்சே எப்படி? இதுக்கெல்லாம் சரியான பதிலை நீங்க சொல்லணும். சொல்லாதவரை கண்கட்டு மாய்மாலம்ன்னுதான் நானும் சொல்வேன்."

அவனது திடமான பதிலை கேட்டு அவர் சிரிக்கிறார்.

"இப்படி சிரிச்சா எப்படீங்க... உங்களால பதில் சொல்ல முடியுமா?"

"உம்..." அவர் இதழ் பிரியாமல் தலை அசைக்கிறார்.

"சொல்லுங்க அப்ப..."

"இங்கையா?"

"வேற எங்க...?"

"என் இடத்துக்கு வா சொல்றேன்."

“ஏன் இங்க சொன்னா என்னா?”

“சொல்லலாம்... ஆனா அது ஒரு மணி அரை மணி நேரத்துல முடியற விசயமில்லை.”

“சரி... உங்க இடம் எங்க இருக்கு?”

“அழகர்கோயில் மலைல இருக்கற ராக்காயி கோயிலுக்கு வா. அங்கதான் நான் இருப்பேன்.”

“சரி வரேன்...”

“கட்டாயம் வரணும்.”

“வரேன். ஆமா உங்க பேர்...?”

“என் பேர் என் பேர் பசுபதி நாதன்.”

“அப்ப நான் கிளம்பறேன்...”

“ஒரு நிமிஷம்...” அவர் அவனை தடுத்து தனது இடுப்பு ரசமணியை எடுத்து தருகிறார்.

# 3



அந்த ரசமணியை ஆச்சரியத்துடன் பார்க்கிறான் தேவநாதன். “இது எனக்கு எதுக்குங்க?”

“இடுப்புல கட்டிக்கோ...”

“மன்னிக்கணும். காரண காரியம் தெரியாம இதை என்னால கட்டிக்கமுடியாது.”

“நீ இதை கட்டிக்கோ... தன்னால காரண காரியம் தெரியவரும்.”

“எதுக்குன்னு சொல்லுங்களேன்.”

"உனக்கு ஆபத்து வரப்போகுது தம்பி."

"ஆபத்தா?"

"ஆமாம்... அதனாலதான் அதுல இருந்து தப்பிக்க இதை நான் உனக்கு தரேன்."

"இது இருந்தா அந்த ஆபத்து என்னை ஒண்ணும் செய்யாதா?"

"எல்லாத்தையும் அனுபவிக்க தெரிஞ்சுக்கோ..." அவன் அரைமனதாக அந்த ரசமணியை வாங்கிக் கொள்கிறான். "முழுமனசா வாங்கிக்கோ. அதுதான் உனக்கு நல்லது." "ஆபத்து வரட்டும். இந்த ரசமணி என்னை காப்பாத்தட்டும் அது எப்படின்னும் புரியட்டும். அப்ப முழுமனசா இதை ஏத்துக்கிறேன். அதுவரை இது அரைமனசாதான் என்கிட்ட இருக்கும்."

அவர் சிரித்துக்கொண்டே கிளம்புகிறார்.

"சரி நான் வரேன். பாத்து வீட்டுக்கு போ..." அவன் தலையசைக்கிறான்.

வீடு நுழையும் போதே மூக்கை துளைக்கிறது முருங்கைக்காய் சாம்பார்.

அடுக்களையில் அம்மா சிவகாமி. எட்டிப்பார்க்கிறான். "அம்மா... சாம்பார் மூக்கைத் துளைக்குது. உன் கை மணமே தனி" -பாராட்டுகிறான். "சரிசரி சாப்பிட வா," அம்மா அழைக்கிறாள். அவனும் உற்சாகமாக கை கால்களை கழுவிக்கொண்டு சாப்பிட அமர்கிறான். சோறிடும்போது நெற்றியை பார்த்தபடியே சிவகாமி கேட்கிறாள், "எங்கப்பா கோயிலுக்கு போயிருந்தியா?"

"ஆமாம்மா... மீனாட்சியம்மன் கோயிலுக்கு" "நல்ல வேலை கிடைக்கணும்னு வேண்டிக்கிட்டியா?" "அதுக்கு தானேம்மா போனதே. ஆனா ஒரு அதிசயம்மா."

"என்னடா?"

"ஒரு ஆளை சந்திச்சேன். அவரை சாமியார்னு சொல்றதா, இல்லை மந்திரவாதின்னு சொல்றதான்னு தெரியல..."

சிவகாமி வெடுக்கென்று நிமிர்கிறாள். "என்னடா சொல்றே?"

"ஆமாம்மா... ஐம்பது வயசுக்குமேல இருக்கும் அந்த ஆளுக்கு, பேர் பசுபதிநாதன். நம்ப அழகர் கோயில் மலைலதான் இருக்காராம். ஆனா பாரும்மா ஒரு அதிசயம் அவர் என்ன பத்தி புட்டு புட்டு வெச்சிட்டார்."

"புட்டுபுட்டு வச்சாரா?"

"ஆமாம்மா... நம்ம மில் ஓனர் பிருந்தா இல்லை," அவளுக்கென்ன? "அவளை என்ன முத்தமிடச் செஞ்சாரும்மா..." "டேய்... என்னடா என்ன என்னவோ சொல்றே?" "ஆமாம்மா, கேக்கும்போதே உனக்கு ஆச்சரியமாக இருக்கே அனுபவிச்ச எனக்கு எப்படி இருக்கும்?"

சிவகாமி முகம் அநியாயத்துக்கு மாறுகிறது. "என்னம்மா மிரண்டுட்டே. நான் ஒண்ணும் அந்த ஆள் விஷயத்தில மயங்கிடலம்மா. வளைச்சு வளைச்சு கேள்வி கேட்டேன். உனக்கு பதில் தெரியணும்னா நான் இருக்கிற இடத்துக்கு வான்னு சொல்லிட்டாரும்மா அந்த ஆள்."

சொன்னபடி சோற்றைப் பிசைகிறான். ஆவி பறக்க முருங்கைக்காய் துண்டுகள் கைப் பிசைவில் வாசம் கிளப்புகின்றன. சிவகாமி பதில் பேசாமல் சிலையாக நிற்கிறாள். தேவநாதன் கலைக்கிறான். "என்னம்மா சிலையாயிட்டே, நான் என்ன இப்ப சொல்லக்கூடாததை சொல்லிட்டேன்."

அவள் கலைகிறாள்.

“ஒண்ணுமில்லேடா... ஒண்ணுமில்லை. சரி போகட்டும் விடு. இனி அந்த மாதிரி ஆளுங்க கிட்டல்லாம் சாவகாசம் வெச்சுக்காதே.”

சிவகாமி பயந்துவிட்டதை தேவநாதன் புரிந்து கொள்கிறான். அதன் எதிரொலி முகத்தில் கேலிச் சிரிப்பில் வருகிறது. அவளுக்கும் அது புரிகிறது. உடனே கோபிக்கிறாள்.

“சிரிக்காத தேவா... இந்த உலகம் ரொம்ப பொல்லாத உலகம்டா. இதுல விதம் விதமா மனுஷங்க. ஒருத்தர் நல்லா இருந்தா இன்னொருத்தருக்கு பொறுக்காது.”

“இப்ப எதுக்கும்மா இதை எல்லாம் சொல்றே?”

“சொல்லணும்னு தோணுச்சு சொன்னேன்.”

“நான் சொன்ன விஷயத்துக்கும் நீ சொல்றதுக்கும் சம்பந்தம் இல்லையே.”

“இருக்கு தேவா... ஒரு காலத்துல உன் தாத்தா, பாட்டி எல்லாம் எப்படி இருந்தாங்க தெரியுமா?”

“எப்படி?’

“இந்த மதுரையிலேயே அவங்கதாண்டா ராஜா. நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலம். ஆயிரம் பவுனுக்கு மேல நகை. தெருவுக்கு நாலு வீடுன்னு...”

“போதும்மா... இதை எத்தனை தடவை சொல்வே?”

“இதுக்கு முந்தி சொன்னதுக்கும் இப்ப சொல்றதுக்கும் வித்யாசம் இருக்கு தேவா... அவ்வளவு காசும் பணமும் எப்படிப் போச்சுன்னு தெரியுமா உனக்கு?”

"என்ன... தாத்தா சூதாடியே தோத்தாராக்கும், எல்லா வீட்டிலையும் இப்படி ஒரு வரலாறு இருக்கிறது தான் தெரியுமேம்மா..."

"போடா முட்டாள்... என்ன பேசவிடு. இந்த குடும்பத்துக்கும் மந்திரவாதிகளுக்கும் எப்பவும் ஒரு தொடர்பு உண்டுடா. உன் தாத்தாவையும் ஒரு மந்திர வாதி பிடிச்சான். அவருக்கு அதை கத்துதரேன், இதை கத்துதரேன்னு சொல்லியே அவரை பைத்தியம் பிடிக்கற அளவு கொண்டு போனான்."

"நல்லா இருக்கறவங்களாலேயே சொத்தை காபந்து பண்ண முடியல. இதுல பைத்தியம் பிடிச்சா...?"

சிவகாமி முதல் முறையாக அவனது குடும்ப வாழ்வின் ஒரு மர்மமான விஷயத்தை மெல்ல சொல் கிறாள்.

"இதை ஏன்மா முந்தியே சொல்லலை நீ?" சோறு சாப்பிடக்கூட மறந்து கேட்கிறான்.

"சொல்ல இது என்ன நல்ல விஷயமா? அதோட இதை பேசறதால ஏதாவது வரப்போகுதா என்ன?" சடைத்துக் கொள்கிறாள் சிவகாமி.

சோறு ஆறிவிட்டிருக்கிறது. ஆனால் மனது சூடாகிவிட்டிருக்கிறது.

"அதனாலதான் சொல்றேன் இந்த மாதிரி மனு ஷங்க சாவகாசம் நமக்கு வேண்டாம்," சிவகாமி திரும்பவும் அழுத்தம் தருகிறாள்.

அப்படியே டிபன் கேரியரையும் எடுத்து முன் வைக்கிறாள். "என்னம்மா அப்பாவுக்கு சாப்பாடு கொண்டு போகணுமா?"

"ஆமாம் கண்ணு!"

மகாதேவி மில்!

ராட்சஸ சொரூபத்தோடு ஏகப்பட்ட காக்கி தொழிலாளர்களோடு நூல் கக்கி, இழைப்பின்னி துணிவளர்த்துக் கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கில் வாதநாராயண மரங்கள். நிழலில் எல்லாம் தொழிலாளர்களின் கூடிக் குலவும் சம்பாஷணைகள்.

செக்யூரிட்டி கேட் அருகே வந்து நிற்கிறான் தேவநாதன். செக்யூரிட்டி நாராயண பிள்ளை தேவநாதனை பார்த்து சிரிக்கிறார்.

“வா தேவா, என்ன அப்பாவுக்கு... சாப்பாடா?”

“ஆமாம்.”

“வெச்சுட்டு போ... வழக்கம் போல் வந்து எடுத்துக்கட்டும்.”

நாராயண பிள்ளை சொன்னது போலவே சாப்பாட்டு கேரியரை செக்யூரிட்டி ஹவுசில் மேஜை மேல் ஓர் வைக்கிறான்.

திரும்ப ஆரம்பிக்கிறான். எதிரில் இரத்த சிவப்பில் ஒரு சுமோ.

உள்ளே மில் முதலாளி கைலாசம். அவர் அருகில் ஒரு ஜால்ரா. அவன் பார்வையில் படுகிறான் தேவநாதன். “சார் இவன்தான்... இவனேதான் அந்த ஸ்கௌண்ட்ரல் இவனைதான் நம்ம பிருந்தாம்மா பாத்துட்டுப் போய் முத்தம் கொடுத்தாங்க...”

அடுத்த கணம் அந்த கார் தேவநாதனை உரசியபடி நின்றது.

# 4



உரசி நிற்கும் காரிலிருந்து எட்டிப்பார்க்கிறார் அதிபர் கைலாஷ். வயதான அரவிந்தசாமி மாதிரி களையாக இருக்கிறார். கூலிங்கிளாஸ் தரித்திருக்கிறார்.

ஸ்டைலாக அதை கழட்டி வேறு பார்க்கிறார். தேவநாதன் ஒன்றுமே புரியாமல் விழிக்கிறான். செக்யூரிட்டி நாராயணபிள்ளை ஓடி வருகிறார்.

"வணக்கம் முதலாளி..." என்று உடம்பை எட்டாக வளைத்து கும்பிடு போடுகிறார். கைலாஷ் பார்வை அதை லட்சியமே செய்யாமல் தேவநாதனை பார்க்கிறது.

"உன்பேர் என்ன?" உதட்டில் கேள்வியும் பிறக்கிறது.

"தேவநாதன் எதுக்கு கேக்கறீங்க?" தேவநாதனும் பயமின்றி சாதாரணமாகவே பதில் தருகிறான்.

"உள்ள வந்து பார்... சொல்றேன்" அடுத்த நொடி கார் சீறிப் பறக்க ஆரம்பிக்கிறது.

"தம்பி தேவா... போப்பா போ. முதலாளி உன்னை பார்க்கணும்கறார். நாங்கள்ளாம் பார்க்கணும் பேசணும்னாலும் பேசமுடியாதுப்பா. இன்னிக்கு அவராவே உன்னை பாத்து வரச்சொல்றாருன்னா அது சாதாரண விஷயமில்லை... போ!"

நாராயணபிள்ளை நன்றாகவே தூண்டிவிடுகிறார். அரைமனதாக உள்நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான் தேவநாதன்.

அற்புதமான பெர்ஃப்யூம் வாசம் இழையும் அறை! மணி பிளான்ட் போஷிப்பாய் வளர்ந்து அறைச்சுவரில் அலங்காரப் பொருளாய் பரவிக்கிடக்கிறது. எதிர் சுவரில் சூப்பர் ப்ளோ அப் போஸ்டர்-ஜில்லென்ற ஏ.சிக்கு நடுங்கும் இளம் பெண்போல அந்த போஸ்டரில் ஒருத்தி.

அறை நடுவிலேயே ஒரு செயற்கை நீரூற்று, அதில் வண்ணம் பாய்ச்சும் மல்டி கலர் ரவுண்டட் லாம்ப். கிட்டத்தட்ட இந்திரலோகம் போலத்தான் இருக்கிறது. சிம்மாசனம் போன்ற நாற்காலியில் கைலாஷ். இப்பொழுது அவர் எதிரிலுள்ள இன்டர்காம் சிணுங்குகிறது.

"குட்மார்னிங் சார்... தேவநாதன்கறவர் உங்களைப் பார்க்க... வந்துருக்கார்..."

"வரச்சொல்லுங்க..." கைலாஷ் ரிசீவரை முடக்கி விட்டு நிமிர எதிரில் திறக்கிறது கதவு. உள் நுழைகிறான் தேவநாதன்.

"கம் இன்..." -அழைக்கிறார். தேவநாதன் நெருங்குகிறான்.

"பேர் என்ன சொன்னே?"

"தேவநாதன்"

"தேவநாதன்... நல்ல பேர்தான்! ஆமா உனக்கு பிருந்தாவை எவ்வளவு நாளா பழக்கம்"

"யார் பிருந்தா..."

"யார் பிருந்தாவா?" என்ன மேன் நடிக்கறே... தைரியமா கோயில்னும் பாக்காம ஒருத்தி உனக்கு முத்தம் கொடுத்தாளே அந்த பிருந்தாவை சொன்னேன்..."

"ஓ... அத சொல்றீங்களா... ஐ ஆம் சாரி உங்க மக இல்ல அவங்க. மறந்தே போயிட்டேன்."

"பரவால்லியே. இப்பவாவது ஞாபகம் வந்துச்சே. சரி விஷயத்துக்கு வா. எவ்வளவு நாளா பழக்கம்...?"

"சார் என்ன நீங்க... அவங்களுக்கும் எனக்கும் எந்த பழக்கமும் கிடையாது"

"போதும் தேவநாதா. நடிக்காதே! எனக்கும் காதலைப் பத்தி தெரியும். உன்னை பகிரங்கமா கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுக்கற அளவுக்கு காதல் இருக்குன்னா அது பல வருஷ காதலாதான் இருக்கணும்"

-கைலாஷ் பேப்பர் வெயிட்டை தூக்கிப் போட்டு பிடித்தபடி பேசுவது நிஜமாலுமே தேவநாதனுக்கு சிரிப்பை தருகிறது.

"சார் என்ன நீங்க... பேசறதையே பேசிகிட்டு. நம்புங்க சார். உங்க பொண்ணு அன்னிக்குத்தான் என்னையே பாக்கறாங்க..."

"அப்படியா... அப்படின்னா... முதல் பார்வையிலேயே அவளை நீ அட்ராக்ட் பண்ணி கவர்ந்து இழுத்துட்டியா?"

"நோ... அங்க நடந்தது வேற!"

"போதும் மேன். நான் இப்ப என் மகளுக்கு வேற இடத்துல வரன் பார்த்துருக்கேன். மாப்ளை பெரிய கோடீஸ்வரன். உன்னால என் மக அவனை கட்டிக்க முடியாதுங்கறா"

"என்னாலையா... என்ன சார் பேசறீங்க. நான் எங்க அவங்க எங்க..."

"நோ... நீ ரொம்பதான் நடிக்கறே. அவ தூக்கத்துல கூட உன் பேரதான் சொல்றா."

"யூ மீன் தேவநாதன்."

"யெஸ்"

"ஆச்சரியமா இருக்கு. நான் ஒரு ஆர்டினரி கிராஜிவேட். சாதாரண மில் தொழிலாளியோட மகன். என்ன விரும்பறாங்க. அதுவும் எனக்கு தெரியாமன்னா அதை என்னால நம்பமுடியலை."

"நீ இப்படி பேசறததான் என்னால நம்பமுடியலை. என் மாப்ளை ஒரு ஜெம் பர்சனால்டி தெரியுமா உனக்கு."

"இருக்கலாம். ஆனா நான் ஒரு சாதாரண மனுஷன் மட்டுமே. என்னை போட்டு நோண்டாம ப்ளீஸ் கொஞ்சம் நான் சொல்றத கேளுங்க. உங்க மக ஒண்ணு பொய் சொல்லணும். இல்லான்னா நடிக்கணும்."

"ரெண்டுமே என் மகளுக்கு தெரியாதுப்பா. அவ சாதிக்கறா. அவ கல்யாணம் பண்ணிகிட்டா உன்னை தான் பண்ணிப்பாளாம்."

கைலாஷின் தீர்க்கம் தேவநாதனை ஆச்சரியப் பள்ளத்தாக்கில் பிடித்து உருட்ட ஆரம்பிக்கிறது.

"பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிவது என்பது இதுதானா?" நினைப்போடு அவர் எதிரே மலங்க மலங்க விழிக்கிறான். அவர் தொடர்கிறார்.

"என் ஸ்டேட்டஸ் என்ன... உன் ஸ்டேட்டஸ் என்ன? உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா அவளை காதலிப்பே நீ, இப்ப அவளை தேடி மில்லுக்கே வர்ற அளவு அது வளந்துருக்கு இல்ல..."

"சார் நான் மில்லுக்கு வந்தது என் அப்பாவுக்கு சாப்பாடு கொடுக்க. என்ன நீங்க? விட்டா பேசிகிட்டே போறீங்க..."

"ஸ்டாப் இட். எவ்வளவு பணம் வேணும் உனக்கு."

"எதுக்கு சார்?"

"இந்த ஊரைவிட்டே ஓடிப்போக..."

"நான் எதுக்கு ஓடிப்போகணும்?"

"இல்லாட்டி உன் உயிர் போயிடும்."

"என்ன மிரட்றீங்களா?"

"அப்படித்தான் வெச்சுக்கயேன்."

"அதுக்கு வேற ஆளைப்பாருங்க..."

"அப்ப நீ போக மாட்டே அப்படிதானே"?

"என்ன சார் நீங்க... பைத்தியம் மாதிரி பேசினதையே பேசறீங்க. கூப்டுங்க சார் உங்க மகளை. என் எதுக்க அவங்க என்னை விரும்பறதா சொன்னா, நான் நீங்க எந்த தண்டனை தந்தாலும் ஏத்துக்கறேன்."

"நிஜமா...?"

"இது என் தாய் மேல சத்யம். போதுமா?"

"அப்படியா... அப்ப இரு..." அவர் உடனே இன்டர்காமை தட்டுகிறார்.

"ராதாகிருஷ்ணன் கொஞ்சம் பிருந்தாவை கூட்டிக்கிட்டு என் ரூமுக்கு வர்றீங்களா?" கேள்வியோடு ரிசீவரை முடக்குகிறார்.

அநியாயமாக சிவந்துவிட்ட முகத்துடன் நிமிர்கிறார். தேவநாதனை பார்வை சுடுகிறது. அவன் அந்த அறையை அளக்க ஆரம்பிக்கிறான்.

அவர் உதட்டில் உக்ரம்.

"எல்லாம் சினிமா படுத்தறபாடு. சாப்பாட்டுக்கு இருக்கோ இல்லியோ ஜம்முன்னு மேக்கப் பண்ணிக்கிட்டு சினிமாக்கு போய்ட வேண்டியது. எந்த பணக்கார

பொண்ணு வருவா அவளை எப்படி மயக்கலாம்னு அலைய வேண்டியது...” கருவுகிறார் கைலாஷ். தேவ நாதனும் முறைக்க ஆரம்பிக்கிறான்.

“யாரை சொல்றிங்க?” என்கிறான் பதில் கோபமுடன்.

“உன்னைதான்... உன்னைதாண்டா. என் மகளை மயக்கி அவ வாழ்க்கையையே கெடுக்க பார்க்கிறியே. உன்னைத்தான் சொன்னேன்.

தேவநாதனுக்கு அழுகையே வரும்போல இருக் கிறது.

“சார்... நீங்க என்னை தப்பா புரிஞ்சுகிட்டு பேச றீங்க. மிஸ் பிருந்தா எனக்கு முத்தம் கொடுத்ததுக்கு ஒரு சாமியார் காரணம். அவங்க மனோவசியம் காரணம். அவ்வளவுதான். மத்தபடி உங்க மகளை நான் பாத்தது கூட இல்ல. அவங்களோடட வந்த எஸ்கார்ட்டை வெச்சு தான் அவங்க உங்க மகள்ங்கறதே எனக்கு தெரியவந்தது. தயவு செய்து என்னை நம்புங்க...”

அவன் கதறி முடிக்கவும் கதவு திறக்கவும் சரியாக இருக்கிறது. உள்ளே நுழைகிறாள் பிருந்தா. தேவ நாதனை பார்த்து பதறியபடி “தேவா...” என்ற ஓடி வருகிறாள்.



# 5

**அ**திர்ந்து போகிறான் தேவநாதன்!

இதென்ன இந்தப் பெண் இத்தனை தெரிந்தவள் போல நடந்து கொள்கிறாள். “என்ன தேவா இப்படி

பாக்கறீங்க... சொல்லுங்க தேவா. நான் தான் உங்க காதலின்னு. டாட் இவரை எதுவும் செய்திடாதீங்க. செய்தா நடக்கறதே வேற ஆமா...” அவள் மிரட்டுவது போல் அவரை பார்த்து கையை உயர்த்தி விசும்புகிறாள்.

தேவநாதனுக்கு தலையை சுழற்றுகிறது.

ஒருவன் வேகமாக வந்து பிருந்தா என்னும் அவளை பிடித்து இழுத்து செல்ல ஆரம்பிக்கிறான்.

அவள் அகலவும் அங்கு இப்பொழுது நிசப்தம்.

அறை ஏ.சி. யின் ‘சர்ர்ர்...’ சப்தம் மட்டும் இடையில்!

கைலாஷ் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தபடி முறைப்பாக நிமிர்கிறார்.

“இப்ப என்ன சொல்றே...?” என்கிறார் புகையை கசக்கியபடி.

“சத்யமா சொல்றேன் சார்... எனக்கு எதுவுமே புரியலை. உங்க பொண்ணு இப்படி சொல்வாங்கன்னு நான் நினைக்கவேயில்லை.”

“திரும்ப பொய் சொல்றே பார்த்தியா...”

“பொய்யா... காதலிச்சா காதலிக்கிறேன்னு மட்டும் தான் நான் சொல்வேன் சார்...”

“அப்ப காதலிக்கலை... அப்படித்தானே?”

“சத்யமா காதலிக்கலை”

“இதை எழுதிக் கொடு...”

“பத்திரம் கொண்டு வாங்க. அதுலையே எழுதிக் தரேன்.”

அவர் ஒரு வெள்ளைத்தாளை எடுத்து முன் நீட்டுகிறார்.

அவன் எழுத ஆரம்பிக்கிறான்.

மீனாட்சி அம்மன் கோயில். பொற்றாமரைக்குள படிகள். அதில் ஒருபடியில் முட்டிக்கால் போட்டு முகம் புதைத்த நிலையில் தேவநாதன்.

"பிருந்தா தன்னை காதலிப்பதாக சொன்னது எப்படி...? எதனால்?" மனது அந்த கேள்வியிலேயே இருக்கிறது. அதிபர் கைலாஷைப் பார்த்தது, பேசியது, எழுதிக்கொடுத்தது எல்லாம் ஒரு கனவு போலவும் இருக்கிறது. நிஜம் போலவும் இருக்கிறது.

குளத்து நீரில் சலனம் மனதைப் போலவே!

எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தானோ தெரியவில்லை.

எழுந்திருக்க முனையும்போது "என்னப்பா தேவா எப்ப வந்தே?" -என்று ஒரு குரல். எதிரில் நேற்று அவர் சந்தித்த பசுபதிநாதன்.

அழியாத புன்னகை முகத்தோடு மீனாட்சி தரிசனம் முடிந்து வந்து கொண்டிருக்கிறார்.

அவனுக்கு அவரைப் பார்க்கவும் சற்று மிரட்சி ஏற்படுகிறது.

அம்மா சொன்னதெல்லாம் உள் ஓடுகிறது. சினிமாவில் பார்த்த சில மந்திரவாதிகளின் முகமெல்லாம் முன் எழுந்து நிற்கிறது.

"ஏம்ப்பா ஒருமாதிரி இருக்கே? என்ன ஆச்சு?" அவர் நிமிண்டுகிறார்.

"ஒண்ணுமில்லை."

"இப்படி ஒருவார்த்தைல பதில் சொன்னா எப்படி? என்னப்பா நடந்துச்சு..."

“அப்ப ஏதோ நடந்துருக்குங்கறது உங்களுக்கு தெரியும். அப்படித்தானே?”

“உன்னைப் பார்த்தா ஒரு மாதிரி இருக்கை யேங்கறத வெச்சு அப்படி கேட்டேன்பா...”

“எதையும் நான் உங்ககிட்ட பேச விரும்பலை. நீங்க போகலாம்.”

“எதனால இத்தனை கோபம்?”

“கோபமா... குழப்பமும் சேர்ந்து என்னை படுத்தி கிட்டிருக்கு.”

“இந்த கோயில்ல இருக்கும்போது அதுக்கு இடமே கிடையாதேப்பா...”

“எல்லாம் உங்களாலதான்...”

“என்னாலையா?”

“ஆமாம்... நான் ஏதோ ஒரு வேகத்துல அந்த பொண்ணு என்னை முத்தமிடணும்னு சொன்னேன். ஆனா அது பெரிய சிக்கலா மாறும்னு நான் நினைக்கவே யில்லை...”

“எந்த பொண்ணு?”

“எரிச்சலை கிளப்பாதீங்க... நேத்து இதே இடத்துல என்னை ஒருத்தி முத்தமிட்டாளே...”

“ஓ; அந்த பொண்ணா? சரி அதுல உனக்கு என்ன சிக்கல்?”

“இப்ப அந்த பொண்ணு நிஜமாலுமே என்னை காதலிக்கிறாளாம். இதை அவளே சொல்றா. அவ அப்பன் ஒரு கோடீஸ்வரன். அந்தஸ்து பார்த்து என்னை மிரட்றான். நல்லவேளை நான் காதலிக்கலைன்னு சொன்னேன். எழுதிக் கொடுப்பியான்னான். எழுதியும் கொடுத்தேன். தப்பிச்சேன்...”

-தேவநாதன் விளக்கத்தை கேட்டு தாடியை நீவிக் கொண்டு சிரிக்கிறார் அவர்.

"எதுக்கு சிரிக்கிறீங்க?"

"எதுக்கு அப்படி எழுதிக் கொடுத்தே... காதலிக்க றேன்னு அந்த பொண்ணே சொல்லும்போது நீயும் சொல்ல வேண்டியதுதானே?"

- இந்த கேள்வி தேவநாதனின் முகத்தில் குத்து கிறது.

"நல்லா இருக்கே... அவதான் உளறினான்னா நானுமா?"

காதல்னா என்னன்னு நினைச்சிக்கிட்டிருக்கீங்க சாமி. அது நிஜமாவே ஆசையிலே வர்றது..."

அவர் இதற்கும் இடக்காக சிரிக்கிறார்.

"சரி சரி விலகுங்க... உங்க கூட நான் இவ்வளவு பேசினதே தப்பு..." -அவன் அங்கிருந்து வேகமாக நழுவப் பார்க்கிறான்.

"ஏன்... அம்மா என்கூடெல்லாம் பேசக்கூடாது பழகக் கூடாதுன்னு சொன்னாளா?"

-சரக்கென்று பிரேக்கடித்த மாதிரி நின்று திரும்பி கூர்மையாக பார்க்கிறான். பார்வையே உங்களுக்கு எப்படி தெரியும் என்று கேட்கிறது. அவர் திரும்ப தாடியை நீவியபடி சிரிக்கிறார். அவனை அந்த சிரிப்பு என்னவோ செய்கிறது.

"இந்த மர்மச் சிரிப்பெல்லாம் வேண்டாம் நீங்க யாருன்னு தெரியும். உங்களால ஒரு விசயத்துல நான் பட்டுக்கிட்டிருக்கறதே போதும். வேற ஆளைப் பாருங்க..." -படபடவென பொரிந்துவிட்டு விறுவிறு வென கிளம்பி நடக்கிறான். அவர் சிரித்தபடியே நிற்

கிறார். ஆடி வீதியில் இறங்கி வளைந்து மேற்கு கோபுர வாயிலை நெருங்கும்போது “என்னங்க...” என்று ஒரு பெண் குரல் கேட்டது. திரும்பிப் பார்க்கிறான்.

அம்மன் விக்கிரகமாட்டம் பிருந்தா!

# 6



பிருந்தா!

பிருந்தாவேதான்!

என்ன இந்த பெண்... இங்கேயும் வந்து விட்டாள்!

தேவநாதன் மிரட்சியின் உச்சத்துக்கு போகிறான். முதலில் விறுவிறுவென்று ஓடிவிட நினைக்கிறான்.

பிறகு நின்று எதைவைத்து காதலிக்கிறேன் என்று சொன்னாய் என்று கேட்க நினைத்து தயங்கி நின்று அவளைப் பார்க்கிறான்.

அவள் நெருங்கி வருகிறாள். உடன் ஆள் அம்பு எஸ்கார்ட் என்று ஒருவரும் இல்லை. நெருங்கி வந்தவள் அவனைப் பார்த்து “வெரி சாரி மிஸ்டர் தேவநாதன்” என்கிறாள் மிருதுவான குரலில். அவன் எதுவும் பேசாமல் முறைப்பை தொடருகிறான்.

“நான் லவ் பண்றேன்னு சொன்னது உங்களுக்கு ஆச்சரியமா அதிர்ச்சியா இருந்திருக்கும் இல்லே...” அவளே கேட்கிறாள்.

“இருக்காதா பின்னே... உங்க அந்தஸ்து என்ன? என் அந்தஸ்து என்ன?”

அவள் அவன் பதிலால் ஒரு விரக்திச் சிரிப்பு சிரிக்கிறாள். “நல்ல அந்தஸ்து...” என்கிறாள் வாய்விட்டு கிண்டலாக. அவனுக்கு ஆச்சரியமாகிறது.

“ஆமா எதுக்கு அப்படி சொன்னீங்க?” வேட்டியை மடித்து கட்டியபடி கேட்கிறான்.

“அப்படி சொல்லவேண்டிய ஒரு கட்டாயம் எனக்கு.”

“கட்டாயமா?”

“ஆமாம். என் அப்பா எனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கார். அவன் ஒரு பொறுக்கி. ஆனா பணக் காரன். அவனைதான் நான் கல்யாணம் பண்ணிக்க ணும்னு சொன்னார். நிச்சயதார்த்தம் வரை போய்ட் டார். எனக்கு சுத்தமா பிடிக்கலை. மனசு வெறுத்துப் போய் கோயிலுக்கு வந்தேன். வந்த இடத்துல ஏதோ ஒரு சக்தி என்காதுல நீங்கதான் எனக்கு ஏற்ற புருஷன்னு சொன்னமாதிரி இருந்துச்சு. விறுவிறுன்னு வந்து உங்க ளுக்கு முத்தம் கொடுத்துட்டேன். இப்ப நினைச்சாகூட ஆச்சரியமாக இருக்கு, நான் எப்படி இப்படி நடந்து கிட்டேன்னு...”

“சரி... அப்ப ஏதோ ஒரு சக்தி அப்படி தூண்டிச்சு, அப்புறம்தான் தெளிஞ்சிட்டீங்கல்ல...? வீட்டுக்குப்போய் அப்பாகிட்டேயும் நான் கேட்கும் போதும் கூடவா அதையே சொல்லணும்? உங்களுக்கும் எனக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா?”

“எட்டாதுதான்... இருந்தாலும் நான் அப்படி சொல்லலேன்னா என் அப்பா அந்த பொறுக்கி ராஸ்கலுக்கு பண்ணி வெச்சுடுவாரே.”

“அதுக்கு நான்தான் கிடைச்சேனா உங்களுக்கு...?”

“அவனுக்கு நீங்க எனக்கு ஆயிரம் மடங்கு மேல்...”

“என்னது... நான் மேலா... அப்ப நீங்க?”

“யெஸ்... ரியலி ஐ லவ் யூ” சொல்லிவிட்டு அவள் வேக வேகமாக நடக்க ஆரம்பிக்கிறாள். அவனுக்கு நின்ற இடமே ஆடுகிறது... “மேடம், மேடம்...” என்று அவளை துரத்துகிறான். அவள் நிற்கிற மாதிரி தெரியவில்லை. நடந்தபடி துரத்திக் கொண்டே அவளை கேட்கிறான்.

“நீங்க லவ் பண்ணலாம்... நான் பண்ண வேண் டாமா?”

“பண்ணனும்... பண்ணுவீங்க”

“ஐயோ என்ன பேசறீங்க. எனக்கு ஒழுங்கா ஒரு வேலை கிடையாது. நான் ஒரு தெண்டச் சோறு...”

“அது இப்ப... நாளைக்கே வேலைக்கு போய்ட்டா மாறிடாதா?”

“நில்லுங்க... என்னங்க இது? சினிமாலதாங்க இதெல்லாம் சாத்யம். இது வாழ்க்கைங்க...”

“வாழ்க்கைலையும் இது சாத்யம்...”

“நான் உங்க அப்பாகிட்ட, காதலிக்கலைன்னு எழுதிக் கொடுத்திருக்கேன்...”

“அது சாதாரண விஷயம். அப்ப காதலிக்கலை இப்ப காதலிக்க ஆரம்பிச்சிருக்கீங்கன்னு சொல்லிட வேண்டியதுதான்...”

“அப்படி என்னதான் இருக்குன்னு என்னை காத லிக்கிறீங்க?”

“ஒரு பணக்கா:ர பெண் முத்தம் தந்தும், காதலிக்க றேன்னு சொன்ன பிறகும் இல்லை இல்லைன்னு சொல்றீங்க பாருங்க அதுதான் எனக்கு பிடிச்ச விஷயமே...”

“என்னங்க இது... இதுக்கெல்லாம் காதல் வருமா என்ன? வாழ்க்கைல நான் இன்னும் முதல்படி கூட ஏறலை. என்னைப் போய் காதலிக்கிறீங்களே...”

“இந்த கோயில்ல என் காதுல விழுந்த குரலை நான் பெரிசா நினைக்கறேன். அது என்னை நிச்சயம் காப் பாத்தும் நீங்க மீனாட்சியை நம்பறீங்களா?”

“ஐயோ இது என்ன கேள்வி... அவதானே எனக்கு எல்லாம்”

“அப்ப பேசாம வாங்க... நாம் ஒண்ணு சேர்ந்த இடம் இந்த கோயில். எல்லாரும் காதலிச்ச பிறகு முத்தமிட்டுப்பாங்க நாம முத்தமிட்ட பிறகு காதலிக்க தொடங்கியிருக்கோம். வாங்க சேர்ந்து போய் வழிபடு வோம்.”

அழுத்தம் திருத்தமாக பேசும் அவளை மலங்க மலங்க பார்க்கிறான் தேவநாதன். என்ன ஒரு உறுதி? என்ன ஒரு தெளிவு?

அவளும் அவளது அழகும் எவரையுமே கரைக்கும். உருக்கும், பாடாய் படுத்தும்! தேவநாதன் திறமைக்கு மட்டும் அது கிடையாதா என்ன?

நெகிழ்கிறான்...

“அய்யோ... எத்தனை இனிய தேவதை இவள்? இவளா என் வருங்கால மனைவி?”

“அம்மா... உன்னிடம் வாழ்க்கையைதானே... கேட் டேன், மனைவியையா கேட்டேன், இப்படி என்னை திக்கு முக்காட விடலாமா நீ?”

அவளோடு நடந்து சென்று சந்நிதிக்கு முன் நின்று வணங்கும்போது இப்படித்தான் கேட்கத் தோன்று கிறது. நடப்பது கனவா இல்லை நனவா என்று அடிக்கடி சந்தேகமும் எழுகிறது.

அப்பொழுது பார்த்து தோள்மீது முரட்டுக்கரம் ஒன்று விழுகிறது!



# 7

**மே**லே விழுந்த கரத்தைத் தொடர்ந்து திரும்பிப் பார்க்கிறான். ஒரு முரட்டு மனிதன் கனிவாய் அழுத்த மாக சிரிக்கிறான்.

“யார் நீங்க என்ன வேணும்?” அவன் கேட்க, பிருந்தாவும் திரும்பிட் பார்க்கிறாள்.

“ஒண்ணுமில்லை, சும்மா... சும்மாதான் பார்த்தேன். யாருன்னு பார்த்தேன்...” -சத்யராஜ் மாதிரி வார்த்தை களை நடித்து நடித்துப் போட்டு பேசுகிறான் அவன்.

கோயில் கூட்டம் உரசிச் செல்கிறது. இதற்கு மேல் நின்று அங்கு பேச முடியாமலும் போகிறது.

பிருந்தா உரிமையோடு தேவநாதன் கைகளை பிடித்து வலம் வர இழுக்கிறாள். அவன் மந்திரித்த கோழிபோல அவளைத் தொடருகிறான். அடிக்கடி திரும்பிப் பார்க்கிறான். அந்த சத்யராஜ் மனிதன் பார்வையில் இப்பொழுது அழுததம் ஆழம் அனைத் தையும் தாண்டி ஒரு கோபமும் தெரிய ஆரம்பிக்கிறது.

**வீ**டு.

நாயும், கோழியும் நடந்து திரியும் அழுக்கு திண்ணை ஓரமாக அமைதியாக படுத்துக்கிடக்கிறான் தேவநாதன். பிருந்தா மனம் முழுக்க நிரம்பிக் கிடக் கிறாள். நேற்றுவரை ஓர் இரும்பு பந்தாக தெரிந்த உலகம்

இன்று உதைக்க முடிந்ததாக மாறியிருக்கிறது. எல்லாம் அவளால்தான்.

நம்பவே முடியவேயில்லை.

சிவகாமி வருகிறாள்.

“என்ன தேவா... எப்பொழுதும் இல்லாத மாதிரி இருக்கே?”

“எப்படிம்மா?”

“உனக்குள்ளேயே நிறைய பேசிக்கறே. எப்பப்பாரு படுத்துக் கிடக்கே என்னாச்சு?”

“அது வந்து... அது வந்து...”

“திரும்ப அந்த மந்திரக்காரனை பார்த்தியா?”

“மந்திரக்காரனா... ஓ... நீ அந்த பசுபதி நாதனை சொல்றியா?”

“ஏதோ ஒரு நாதன்... அவன்தான் உன்னை ஏதாவது பண்ணிட்டானா?”

“இல்லம்மா... இல்லை. இல்லை...”

“எதுக்கு இத்தனை இல்லை சொல்றே. நீ சொல் றத பார்த்தா சந்தேகமா இருக்கு எனக்கு...”

“ஐய்யோ சும்மா... நான் எப்பவும் போலதான் இருக்கேன். உனக்கு என்ன வேணும் இப்ப...”

“அப்படி கேளு... இப்படி படுத்துக்கிடக்காம கொஞ்சம் ரேஷன் கடை வரை போய்ட்டு வாயேன்.”

“இவ்வளவுதானே... கொண்டா பையை. வாங் கிட்டு வர்றேன்.”

சிவகாமி உள்ளே சென்று பையுடனும் ஓர் ஐம்பது ரூபாய் தாளுடனும் வருகிறாள். வாங்கிக் கொள்கிறான்.

. "அம்மா நான் ஒரு அஞ்சு ரூபா எடுத்துக்கறேன்..."

"எடுத்துக்க..." சொல்லிச் செல்கிறாள் அவள். வீதியில் இறங்கி நடக்கிறான். ஐந்து ரூபாய்க்கு வக்கில்லை. உனக்கு கோடீஸ்வரியின் காதலா?" மனது குத்துகிறது. வெட்கமாகிப் போகிறது.

எப்படி மேலெழும்பப் போகிறோம்? -கவலை புரண்டு எழுகிறது. நடையில் சோர்வு தட்டுகிறது. இடுப்பு வேட்டி இளகுவது போல் தோன்றுகிறது. இறுக்கிக் கட்ட கைகள் விழையும் போது அந்த ரசமணி தட்டுப்படுகிறது.

இது வந்தால் கெடுதலே வராது என்று சொன்ன பசுபதிநாதன் முகம் தாடியும், மீசையுமாக முண்டி எழுகிறது. சிரிப்பும் வருகிறது. இது வந்தநேரம் ஒரு கோடீஸ்வரியின் காதல் வந்திருக்கிறது. எப்படி சமாளிக்கப் போகிறமோ தெரியவில்லை. மொத்தத்தில் குழப்பம் வந்திருக்கிறது... பாரம் வந்திருக்கிறது. இதனாலெல்லாம் அசட்டு சிரிப்பும் வருகிறது. கச்சிதமாக காலைத் தட்டுகிறது ஒரு பொட்டலம். என்ன அது?"

குனிந்து கைகளில் எடுக்கிறான். கனமாக இருக்கிறது. பிரிக்கிறான். திடுக்கிடுகிறான். உள்ளே எத்தனை நிறம் உண்டோ அத்தனையிலும் கற்கள்... நவரத்தினக் கற்கள்!

"ஐயோ என்ன இது... நடுரோட்டில் நவரத்தினமா" -புத்தி ஒரு வினாடி பேதலித்தே போகிறது. அந்த கற்களுக்கு நடுவில் ஒரு துண்டுக் காகிதம். அதில் இந்த கற்களை ஹாரத்தில் பொருத்தி விடவும். மற்றவை நேரில் -இப்படிக்கு அருணாசல ஆசாரி என்ற இருக்கிறது. யார் இந்த அருணாசல ஆசாரி? ஒரு வேளை அவர்தான் தவற விட்டு விட்டாரா?

இத்தனை கற்களை இப்படிதான் சாதாரணமாக பொட்டலமாக எடுத்து செல்வார்களா என்ன?

ரேஷன் கடை, சர்க்கரை அரிசி என்கிற சிந்தனையில் இருந்து விலகி நவரத்தினம் வசம் சிக்கிக் கொண்டு அல்லாட ஆரம்பிக்கிறான் தேவநாதன்.

வீதியில் சாதாரணமாக சுற்றிவரும் நாய் கூட அப்பொழுது இல்லாதபடி ஒரு வெறுமை.

சமயங்களில் வாழ்க்கையில் யாரிடமாவது சொன்னால் நம்பவே மாட்டார்கள். அப்படி எல்லாருக்குமே ஏதாவது நடந்து விடுவது உண்டு.

இன்று தேவநாதனுக்கு நடுத்தெருவில் நவரத்தினம்.

என்ன செய்யப்போகிறான்?

வேலையைப் பற்றி கவலைப்பட்டபோது கச்சிதமாக காலடியில் கிடந்து 'எடுத்துக்கோ ராஜா' என்று சொல்லி கைக்கு வந்திருக்கிறது. ஒன்றல்ல இரண்டல்ல மொத்தமாக முப்பத்தாறு கற்கள்.

நிச்சயமாக லட்சக்கணக்கான ரூபாய் மதிப்பு இருக்கும். என்னமாய் மின்னுகிறது. அடேயப்பா! வாயைப் பிளந்து கொண்டு பார்க்கிறான். பிறகு சுருட்டி எடுத்துக் கொண்டு படபடப்போடு நடக்கத் தொடங்குகிறான்.

என்ன செய்யப் போகிறான்?

...

புகாரை எழுதி நீட்டிக்கொண்டிருக்கிறார் அருணாசல ஆசாரி. மிகவும் கலங்கிப் போய் கிடக்கிறார் இன்ஸ்பெக்டர். அலட்சியமாக புகாரை வாங்குகிறார். முகத்தில் கோபம்.

"நாற்பது லட்சரூபாய் மதிப்பு நவரத்தினங்கிறீங்க. இப்படியா ஒரு பொட்டலமா கட்டி எடுத்துக்கிட்டு

போவீங்க" தொலைச்சிட்டும் வந்து புகார் தருவீங்க. சூட்கேஸ்ஸு பாதுகாப்பா எடுத்துக்கிட்டு போக எவ்வளவு இருக்கு?"

"இருக்குது சார்... இல்லேங்கல... நாங்க வியாபாரிங்க சாதாரணமாத்தான் கொடுத்துவிடுவோம். அப்படிதான் பையன்கிட்ட கொடுத்துவிட்டேன். பெட்டியோட போனா திருட்டு பசங்க ஃபாலோ பண்ற சான்ஸ் இருக்கு சார். பிச்சைக்காரங்க மாதிரி போனாதான் சார் ஒரு ஆபத்தும் இல்லை. என்னவோ தெரியல சார். இந்த தடவை இப்படி ஆயிடிச்சு. எப்படியாவது கண்டுபிடிச்சு கொடுங்க சார். ப்ளீஸ்" - அவர் கெஞ்சத் தொடங்குகிறார்.

# 8



இன்ஸ்பெக்டர் ஆசாரியின் கெஞ்சலை பார்த்து முறைக்கிறார்.

"சுத்த பொறுப்பில்லாத ஆள்சார் நீங்க?" நடு ரோட்டுல போட்டத எப்படின்னு கண்டுபிடிக்கிறது? முழுச்சிக்கிட்டு இருக்கும்போதே முழியத் திருடறகாலம் இது. தெரியும் தானே?"

"தெரியும் சார்... அதான் சொன்னேன். இப்படி இதுக்கு முந்தி ஆனதில்ல. என் நேரம் இப்படி ஆயிடிச்சு."

"ஓ.கே. ஓ.கே... இதுல நாங்க தேடிக் கண்டுபிடிக்க ஒரு வழியும் கிடையாது. யாராவது எடுத்தா, அவங்களா கொண்டுவந்து கொடுத்தா உண்டு. உங்களுக்கு

அதிர்ஷ்டம் இருந்து யாராவது கொண்டுவந்து கொடுத்தா பார்ப்போம்.''

நம்பிக்கையே இன்றி பேசுகிறார். நல்லவேளை, கிடைச்சா எவ்வளவு கவனிப்பீங்க? ள்ன்று உள்ளங் கையை சொரியவில்லை.

அருணாசல ஆசாரி முகத்தில் ஏற்கனவே கவலை, குழப்பம். இப்பொழுது அதை உருட்டிப் பிசைந்தது போல வேறொரு உணர்ச்சி. கும்பிட்டபடி எழுந்து நிற்கிறார்.

கூடவே நடுங்கியபடி நின்று கொண்டிருக்கும் தன் நகைக்கடையில் வேலை பார்க்கும் பையன். நவரத்ன கற்களை தொலைத்தவன்.

"போங்க... போய் அடுத்தத்தடவை கோடி ரூபாய் கல்லுங்களை இந்த பையன் பாக்கெட்டுல கடலை பருப்பை போட்டு விட்றமாதிரி போட்டு அனுப்புங்க. பையனும் தொலைச்சிட்டு வந்து தலையை சொரி யட்டும்.''

இன்ஸ்பெக்டர் கோபம் அடங்காமல் பேசுகிறார். மிகவும் நேர்மையானவர் போல் தெரிகிறது. இல்லை என்றால் இப்படியா கோபப்படுவார்? எதிரில் அமர்ந் திருக்கும் நகைவியாபாரி ஒரு லட்சாதிபதி என்று தெரிந்து பர்ஸை திறந்து வைத்துக் கொண்டிருக்க மாட்டாரா என்ன?

அருணாச்சல ஆசாரி அந்த கோபமான விமர் சனத்தை தாங்கிக் கொண்டு திரும்பும்போது கச்சிதமாக உள் நுழைகிறான் தேவநாதன்.

வேட்டி சட்டை கையில் நூல் பை என்கிற தோற்ற முடன் ஒரு வாலிபன் உள் நுழைந்தால் யாருக்குமே இளப்பமாகதான் இருக்கும்.

போலீசுக்கு...?

“என்னய்யா என்ன விசயம்- நீ என்ன கம்ப்ளையிண்ட் கொடுக்க வந்திருக்கே...”

“கம்ப்ளையிண்ட் இல்ல சார்... இந்த பொட்டலம் ஒண்ணு ரோட்டுல கிடந்துச்சு...” அவர் எதிரே அவன் பொட்டலத்தை நீட்ட அதை அருணாசல ஆசாரியும் பார்க்க அவர் விழிகளில் ஆயிரம் வாட்ஸ் ஒளி உடனே பரவ ஆரம்பிக்கிறது.

“என்ன பொட்டலம்?”

“நவரத்ன கல்லு மாதிரி தெரியுது சார். யாரோ பொட்டுக் கடலை பொட்டலம் மாதிரி ரோடுல போட்டுட்டு போயிட்டாங்க. யாருன்னு தெரியல. அதான் ஒப்படைச்சுட்டு போகலாம்ன்னு...” தேவநாதன் மிடறு விழுங்குகிறான்.

இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டு அவனை பார்க்கிறார்.

“இப்படியும் ஒரு இளிச்சவாயனா?” என்று அவர் நினைக்கின்ற மாதிரியும் இருக்கிறது.

“என்ன சார் பார்க்கிறீங்க?”

“ஒண்ணுமில்லை... எந்த தெருவுல கிடைச்சது?”

“காமராஜர் வீதி சார்...” இன்ஸ்பெக்டர் உடனடியாக கம்ப்ளையிண்ட் பேப்பரை எடுத்துப் பார்க்கிறார். அருணாச்சல ஆசாரி சரியாகத்தான் . குறிப்பிட்டிருக்கிறார். ஆசாரியும் பாய்ந்து முன் வருகிறார்.

“சார் அதான் சார்... அந்த பொட்டலமேதான். அதுல என் கையெழுத்துல ஸ்லிப் கூட இருக்கும் பாருங்க...”

இருக்கிறது. இன்ஸ்பெக்டரின் இறுகிய முகத்தில் கோபமான முகத்தில் இப்பொர்ழுது புன்னகை பரவ ஆரம்பிக்கிறது.

"ரொம்ப அதிர்ஷ்டக்காரருங்க நீங்க. ஆமாம் தம்பி உன் பேர் என்ன?"

"தேவநாதன் சார்!"

"நிஜமாலுமே நீ தேவநாதன்தான். தேவநாதன் மட்டுமல்ல இவர் வரைல தேவதூதன் கூட. இந்தா உன் கையாலேயே அவர்கிட்ட கொடு. அவர்தான் தொலைச் சவர்..."

தேவநாதன் அப்படியே செய்கிறான்.

கேஸ் கம்ப்ளைண்டை கிழித்துப் போடுகிறார்.

"நல்ல வேளை எஃப். ஐ. ஆர் பதியலை. பதிஞ் சிருந்தா கோர்ட்ல ஒப்படைச்சு அதுமூலம்தான் வாங்கிக்கவேண்டி வந்திருக்கும். நல்லபடியா கடவுள கும்பிட்டுகிட்டு எடுத்துட்டு கிளம்புங்க ஆசாரியாரே. பையனையும் கொஞ்சம் கவனிங்க. ஏழைப்பட்ட பையனா இருந்தாலும் ரொம்ப நேர்மையா இருக்கான். இந்த நேர்மை இன்னிக்கு ரொம்ப அபூர்வம்."

இன்ஸ்பெக்டர் சொன்னது போல தேவநாதனை நெருங்கி வந்து அவன் கைகளை பற்றிக் கொள்கிறார் அருணாசல ஆசாரி.

"தம்பி... உனக்கு என்ன வேணும் கேள்!" ...நாக்கு தழுதழுக்கிறது.

"ஒண்ணும் வேண்டாங்க. இப்படி நீங்க கேட்டதே போதும்."

"நீ என்னப்பா பண்றே?" அந்த கேள்வி முன் தடுமாற ஆரம்பிக்கிறான் தேவநாதன் 'சும்மா இருக் கிறேன்' என்று எப்படி சொல்வது? மௌனம் சாதிக் கிறான்.

"ஏன்பா பேசமாட்டேங்கறே... எங்க வேலை பார்க்கிற?"

அவர் விடுவதாக தெரியவில்லை.

"வேலை பாக்கலைங்க. கிடைச்சாத்தானே பாக்க?" மிடறு விழுங்கியபடி அவன் சொன்னதை தொடர்ந்து ஆதரவாக அவன் தோள் மேல் கை வைக்கிறார்.

"கவலைப்படாதே... இனி நீ என் நகைக்கடை மேனேஜர்"

தேவநாதன் திகைத்துப் போகிறான்.

"சார்.. நான்.. நான்..."

"சும்மா சொல்லலை நிஜமாத்தான் சொல்றேன். கோடி ரூபா புரள்ற வியாபாரம் என் வியாபாரம். உன்னை மாதிரி நேர்மையான ஆள்தான் வேணும். சம்பளத்த பத்தி கவலைப் படாதே. என் கடையே உன் கடை மாதிரிதான்..."

தேவநாதன் விழிகளில் கண்ணீர் பெருகுகிறது. திரும்பவும் வேட்டி இளகுகிறது. கைகள் இறுக்கிக் கொள்ள முனையும் போது ரசமணி தட்டுப்பட்டு "இப்ப என்ன சொல்றே தேவா?" என்று கேட்கிறது.

இன்ஸ்பெக்டர் குறுக்கே நுழைகிறார்.

"சபாஷ் ஆசாரி... இதை விட ஒரு நல்ல பரிசை நீங்க இந்த பையனுக்கு தர முடியாது."

பாராட்டுடன் இருவரும் கிளம்புகின்றனர். அப் பொ:ழுது கோயிலில் தோள்மேல் கைபோட்டு முறைத்த அந்த முரட்டு மனிதன் தேவநாதனை தாண்டிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைகிறான்.

தனக்கு முன் அவனை ஸ்டேஷனில் பார்த்து விட்டதில் அவனிடம் திடுக்!

# 9



**போ**லீஸ் ஸ்டேஷனுக்குள் நுழையும் அவனை ஏட்டு முதல் ரைட்டர் வரை இணக்கமாகப் பார்த்து சிரிக்கிறார்கள். இன்ஸ்பெக்டரும் அவனைப் பார்த்து "வாய்யா பிஸ்தா..." என்கிறார் சற்று இடக்காக.

"என்ன இன்ஸ்பெக்டர் சார்... பையன் எங்க வந்துட்டு போறான்?" -எடுத்த எடுப்பிலேயே அவன் தேவநாதனைப் பற்றி கேட்கிறான்.

"யாரைய்யா சொல்றே?"

"அதான் இன்ஸ்பெக்டர் இப்ப வந்துட்டு போறானே தேவநாதன் அவனைத்தான் சொல்றேன்."

"அவனை உனக்குத் தெரியுமா?"

"தெரியாமத்தான் அவனை பத்தி புகார் கொடுக்க உங்களைப் பார்க்க வந்திருக்கேனா?"

"அவனைப்பத்தி புகாரா?" -அதிர்ந்துபோய் கேட்கிறார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம்... ஆள் பார்க்கத்தான் வேட்டி சட்டைன்னு பிச்சைக்காரன் மாதிரி இருக்கான். ஆனா குறிவைக்கற விஷயம்லாம் கோடிகளுக்குதான்..."

"ஏய்... சுத்தி வளைக்காம நேரா விசயத்துக்கு வா!"

"வரேன்... வரேன்... நான் இப்ப வந்துருக்கறதே அதுக்குத்தான். முதல்ல இந்த கம்ப்ளையிண்டை படியுங்க..." -அவன் இன்ஸ்பெக்டர் எதிரில் ஒரு கவரை

நீட்டுகிறான். அவர் அதை வாங்கி படிக்க ஆரம்பிக்கிறார். படித்து முடித்துவிட்டு அப்படியே மடக்கிச் சுருட்டி எறிகிறார். அதைப் பார்க்கும் அவன் அதிசயப்படுகிறான்.

"என்ன இன்ஸ்பெக்டர் தூக்கிப் போட்டுட்டீங்க. அது தொழிலதிபர் கைலாஷ் கொடுத்த கம்ப்ளையின்ட்." அவன் கத்துகிறான்.

"தெரியும்பா... அதுக்காக அவர் நாயை ஓனாய்னு நம்பச் சொன்னா நான் நம்பவா? இந்த தேவநாதன் எவ்வளவு நேர்மையானவன்னு எங்களுக்கு தெரியும். இவர் மகளை காதலிக்கிறான்கறதுக்காக அவனை கூப்பிட்டு திருட்டு கேஸ்லாம் போட்டு மிரட்ட முடியாது. வேணும்னா அவர் மகளை கண்டிச்சு திருத்தச் சொல்."

இன்ஸ்பெக்டர் தீர்க்கமாகப் பேசிவிட்டு கிளம்பியும் விடுகிறார். அவனுக்கு பலத்த அவமானமாகிப் போகிறது.

கைலாஷ் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எழுந்து கை கட்டி நிற்பவரா இப்படி பேசியது? அவனால் நம்பவே முடியவில்லை.

கைலாசத்துக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

"அந்த இன்ஸ்பெக்டர் அப்படியா சொன்னான்?" என்று திரும்பத்திரும்ப கேட்கிறார்.

"ஆமாங்க... அவன் என்ன மாயம் பண்ணுனானோ மந்திரம் பண்ணுனானோ தெரியல. நம்ம பாப்பா, இன்ஸ்பெக்டர் இரண்டு பேருமே அவன் பேரை சொன்னாலே கன்னத்துல போட்டுக்கறாங்க..."

அவன் விவரிக்க விவரிக்க அவர் முகம் கறுத்துக் கொண்டே போகிறது.

“இதை இப்படியே விடக் கூடாதுடா.” என்கிறார்.

“ரவுடிப்பசங்கள வெச்சு கால கையை வாங்கிடட்டுங்களா?”

“அது கடைசி ஆயுதம். அதுக்கு முந்தி வேற ஒரு வழி இருக்கு.”

“என்னங்க...”

“அவனோட அப்பன் நம்ம மில்லிலதானே வேலை பாக்கறான்.”

“ஆமாங்க... நான் கூட மறந்தே போய்ட்டேன். நம்ம அருணகிரி இருக்கானே அவனை பிடிச்சு நாலு தட்டு தட்டுனா முடிஞ்சுச்சு கதை...”

“போ போய் கூட்டிக்கிட்டு வா.”

அவன் அகலுகிறான் அவர் சிகரெட்டை எடுத்து பற்ற வைக்க தொடங்குகிறார்.

**அ**ருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்லர்ஸ்!

பெயர் பலகையே படுபிரம்மாண்டமாக இருக்கிறது. உள்ளே அற்புதமான அலங்காரத்தில் ஷோ கேஸ்கள். அதிலெல்லாம் தங்க நகைகளின் அணிவகுப்பு. ஜில்லென்று ஏ.சி. யின் தாக்கம் வேறு. வாடிக்கையாளர் கூட்டம் பலாப்பழத்தில் ஈ போல மொய்த்துக் குவிந்த படி இருக்கிறது.

உள்ளே நுழைந்த தேவநாதனைப் பார்த்துவிட்டு கேஸ் கவுண்டரில் இருந்து எழுந்து வருகிறார் அருணாசல ஆசாரி.

“வா தம்பி... வா... வா!”

தேவநாதன் நெகிழ்ந்து போகிறான்.

“வா உட்கார்...” உட்காருகிறான் மலங்க மலங்க சூழ்நிலையை பார்க்கிறான். இருவருக்கும் மேல் ஊழியர்கள் வியாபாரமே குறியாக இருக்கிறார்கள். மருக்கொழுந்து ஸ்ப்ரே வாசம் மூச்சைக் குடைகிறது.

“எப்படி இருக்கு கடை” கேட்கிறார்.

“நான் நகை கடை பக்கமெல்லாம் வந்ததே இல்லீங்க இதான் முதல் தடவை...” அவன் பதிலைக் கேட்டு அவர் சிரிக்கிறார்.

“என்ன சாப்பிடறே?”

“ஒண்ணும் வேண்டாங்க. எனக்கு ஒரே பிரமிப்பா இருக்கு...”

“எதுக்கு பிரமிக்கறே. இது உன் கடை தேவா. எனக்கு இந்த ஒரு கடை மட்டும்னு நினைக்காதே! இன்னும் ஆறு கடை இருக்கு. கோயம்புத்தூர், சேலம், திருச்சி, சென்னை, திருநெல்வேலின்னு ஊருக்கு ஒண்ணு. ஒரு நாள் வியாபாரம் சமயங்கள்ள ஒரு கோடி.”

அவர் சொல்லச் சொல்ல அவன் வாயைப் பிளக்கிறான்.

“சரி சரி வா... உன்னை கடையாட்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். நல்ல நேரம் போய்டப் போவுது...”

பரபரப்பாக தொடங்குகிறார். மளமளவென்று அறிமுகம் முடிய கடையின் மாடியில் உள்ள தனது தனி அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

உள்ளே நுழைந்த மாத்திரத்தில் அப்படியே சிலிர்த்து போகிறான் தேவநாதன்.

அறையில் ஆளுயர புகைப்படமாய் பூஜைக்குரிய தெய்வமாய் பசுபதிநாதன் உருவம்!



# 10

பசுபதிநாதன் படத்தைப் பார்த்து அகல விரிப்பவனை அருணாசல ஆசாரியும் கவனிக்கிறார்.

"என்ன தேவா... இவரை உனக்குத் தெரியுமா?"

"தெரியும் சார். மீனாட்சி அம்மன் கோயில்ல பாத்துருக்கேன்"

"பெரிய மகான் தேவா இவர். இவராலதான் நான் வாழ்க்கைல இந்த அளவு ஒசந்துருக்கேன்"

"இவராலையா?"

"என்ன அப்படி கேக்கறே... இவருக்கு தெரியாத வித்தைகளே கிடையாது. இவர் நினைச்சா இந்த இந்தியாவே இவருக்கு சொந்தமாக்க முடியும் ஆனா ஆசையே இல்லாம சன்யாசியா ஒரு நாடோடியா சுத்திக்கிட்டிருக்காரு..."

அருணாசல ஆசாரி சொல்லச் சொல்ல தேவநாதன் ஆச்சரியத்தின் உச்சத்துக்கே போகிறான்.

"இவர் மாதிரி ஆட்களை நம்பக்கூடாதுன்னு எங்க அம்மா சொல்வாங்க..."

"அது சில போலிகளால வந்த அபிப்ராயமா இருக்கலாம். இவர் மாசில்லாத மாணிக்கம். என் வாழ்க்கைல இவர் எனக்கு செய்த உதவியை சொன்னா தான் உனக்கே அது தெரியும், சொல்றேன் கேளு..."

அவர் சொல்ல ஆரம்பிக்கிறார். அதே சமயம்...

**ம**காதேவி மில். எம்டி...அறை!

"வாய்யா கிரி... அருணகிரி..." கிண்டலான வர வேற்போடு ஒரு சிகரெட்டுக்கு தாவிக் கொண்டிருக் கிறார் கைலாஷ். அவர் எதிரில் தேவநாதனின் தந்தை யான அருணகிரி கைகட்டி வாய் பொத்தி இந்திய தொழிலாளிகளின் ஒட்டுமொத்த அடிமைச் சின்னமாக நிற்கிறார்.

"வரச் சொன்னீங்களாமே முதலாளி"

"ஆமாம் காலைலயே வரச்சொன்னேன். சாயங் கால டூட்டின்னாங்க அதான் இப்ப வந்திருக்கியா?"

"ஆமாங்கய்யா"

"ஆமா உனக்கு எத்தனை பசங்க?"

"இரண்டு பொண்ணு, ஒரு மகனுங்க"

"ஒரே மகனா, அது சரி என்ன பண்றான் அவன்?"

"சும்மாதாங்க இருக்கான். எப்படியோ கஷ்டப் பட்டு பட்டம் படிக்க வெச்சுட்டேன். நம்ம மில்லுலேயே கூட ஒரு வேலை போட்டு கொடுத்தீங்கன்னா..."

"நீ வேலை கேக்கறே... அவன். என்ன கேக்கறான் தெரியுமா"

"தெரியாதுங்களே... முதலாளிய அவன் பாத் தானா?"

"பாத்தானாவா... ஒரு பக்கத்துக்கு எழுதி கையெழுத்தே போட்டுக் கொடுத்துருக்கான்."

"கையெழுத்தா எதுக்குங்க?"

"பாவம் உனக்கு ஒண்ணும் தெரியாதுபாரு. டேய் பீட்டர் அந்த லட்டரை காட்றா"

பீட்டர் என்கிற அடியாள் அந்தத் தாளை எடுத்து அருணகிரி எதிரில் நீட்டுகிறான். வாங்கிப்படிக்கும் அருணகிரி முகம் கசங்கிப் போகிறது.

"என்னங்க இது... இதுல என்னென்னமோ எழுதியிருக்கு?"

"என்னென்னமோ இல்லை. நடந்ததைதான் எழுதியிருக்கான் உன் மகன். என் மகளை காதலிக்கலை. அது பொய்னு எழுதி கையெழுத்து போட்டுக் கொடுத்துட்டு அன்னிக்கு சாய்ந்தரமே அவளை கூட்டிகிட்டு கோயிலுக்கு போனா என்ன அர்த்தம்?"

"ஐயா... என்னால நம்பவே முடியலிங்க. அவனுக்கு அதெல்லாம் தெரியாதுங்க..."

"அப்படின்னு நீ சொல்றே. ஆனா அவனோ பெரிய ஆளா இருக்கான். புத்திசாலித்தனமா ஏரியா இன்ஸ்பெக்டரையே தனக்குத் துணையா சேத்துக்கிட்டு இருக்கான். அவன் பயங்கரமான திட்டங்களோட இருக்கான்னு நல்லா தெரிஞ்சு போச்சு எனக்கு. அவன் என் சொத்துக்கு குறிவைக்கிறான்னு நினைக்கிறேன்."

"ஐயோ... நிச்சயம் அப்படி இருக்காதுங்க. அவன் தங்கமான பிள்ளைங்க..."

"தங்கமா பித்தளையாங்கறத வீட்லபோய் கேட்டு முடிவு செய். இந்த காதல் கத்திரிக்காய் தொடர்ந்தா என்ன நடக்கும்னும் சொல்லிட்றேன். உன் குடும்பத்துல ஒருத்தர்கூட உயிரோட இருக்க முடியாது. ஞாபகத்துல வை. இப்ப கிளம்பு.

நடுங்கியபடி வெளியேற ஆரம்பிக்கிறார் அருணகிரி.

❑ ❑ ❑

**பொ**த்தென்று மேஜை மேல் விழுகிறது ஏர் டிக்கெட். எதிரில் பிருந்தா. "மேடம் உங்களுக்குத்தான் இந்த டிக்கெட். உடனே கிளம்பறீங்க."

கைலாஷின் பி.ஏ. சேகர் சற்று கடுமையாகவே அவள் முன் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"எங்க்?"

"கொல்கத்தாவுக்கு அங்கதான் உங்க நிச்சயதார்த் தமும் நடக்க இருக்கு..."

"அப்பாவோட திட்டமா இது?"

"..........."

"இது நடக்காது மிஸ்டர் சேகர். நான் செத்தாலும் சாவேன். அவர் ஏற்பாடு செய்திருக்கிற அந்த நபரை மட்டும் கட்டிக்கவே மாட்டேன்."

"மேடம்... இது உங்க குடும்ப பிரச்சினை. நான் இங்க உங்க வேலைக்காரன். என்கிட்ட சொல்றதால ஏதாவது பிரயோஜனம் உண்டா. யோசிச்சுப்பாருங்க..."

அவள் உடனே விசும்பி அழ ஆரம்பிக்கிறாள். அவன் விலகிச் செல்கிறான். அவளுக்கு உடனே தேவ நாதனை சந்திக்கும் ஆசை அரும்புகிறது.

ஆனால் அவளைச்சுற்றி கழுகாக கண்காணித்தபடி ஒரு கூட்டமே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவர்களைப் பார்த்து விட்டு அவள் மேலும் அழ ஆரம்பிக்கிறாள்.

"தேவா... தேவா..." என்கிற துடிப்பு உதட்டில்.

❑ ❑ ❑

**அ**ருணாசல ஆசாரி முன் தன்னையே மறந்த நிலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் தேவநாதன்.

அவர் தனது பரவசமான அனுபவத்தினை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

"அது ஒரு அமாவாசை நாள். நானும் என் மகளும் ஊர்ல இருந்து எங்க கார்ல திரும்பிக்கிட்டிருந்தோம். அப்படி திரும்பும்போது உளுந்தூர் பேட்டை கிட்ட ஏதோ கலவரம்னு காரை குறுக்குப்பாதைல விட்டான் டிரைவர்.

அந்த பாதைல ஒரு சுடுகாடு குறுக்க வந்தது. சரியா அந்த இடம் வரவும் காரும் பிரேக் டவுனாகி நின்னு போச்சு. ரேடியேட்டர்ல தண்ணி இல்லை!

இறங்கி வெளில நிக்கலான்னாலும் பயமா இருந்தது. டிரைவர் துணிச்சலா தண்ணி கொண்டுவர போனான்.

அப்பதான் அந்த கொடுமையான சம்பவம் நடக்க ஆரம்பிச்சது. ஒரு சமாதி மேல ஒரு பொண்ணு உட்காந்து அழுதுக்கிட்டிருந்தா..."

# 11



ஒரு சுடுகாட்டில் ஒரு பெண் ஒரு சமாதியருகே அமர்ந்து அழுது கொண்டிருக்கிறாள் என்றால் அதை எப்படி எடுத்துக் கொள்வது?

எனக்குப் பயமாப் போச்சு... அவ பொண்ணுதானா இல்லை பேயான்னுல்லாம் ரொம்ப குழம்பிப் போனேன். என் பொண்ணு லேகா அதுக்கும் மேல அப்பான்னு என்னை நெருங்கி கட்டிக்கிட்டா.

கொஞ்சநேரம் கழிச்சு அந்தப் பொண்ணு எங்களை திரும்பிப் பார்த்தா, ரொம்ப அழகான முகம். எழுந்து மெல்ல எங்க காருகிட்ட வந்தா.

எனக்கு சப்த நாடியும் ஒடுங்கிடிச்சு. திடீர்னு அவ கை எடுத்து கும்பிட்டா. எனக்கு ஆச்சரியமா போச்சு.

இந்த ராத்திரிலே இந்த பக்கம் எங்க வந்தீங்கன்னு கேட்டா.

நான் முழிச்சேன். தைரியத்தை வரவழைச்சுகிட்டு நீ எங்க வந்தேன்னு கேட்டேன். என் புருஷன் ஞாபகம் வந்திருச்சு. அதான் வந்தேன்னா...

புருஷன் ஞாபகம் வந்தா சுடுகாட்டுக்கா வருவாங்க...?

அதுக்கு அவளே பதிலும் சொன்னா...

அவ புருஷன் செத்துட்டானாம். அவன் சமாதிக்கு வந்திருக்காளாம்..."

-அருணாசல ஆசாரி தன் நீண்ட விவரிப்பில் ஒரு சின்ன இடைவெளி விடுகிறார். வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருக்கிறான் தேவநாதன்.

"என்னப்பா... நான் சொன்னத உன்னால நம்ப முடியல்ல..."

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல... நீங்க இன்னும் முழுசா சொல்லி முடிக்கலியே... அப்புறம் தானே நான் என் கருத்தை சொல்லணும்..."

"என்னத்த சொல்ல... அந்த ராத்திரியிலே பார்த்த பொண்ணால அப்புறம் எனக்கென்னவோ நடந்துடுச்சி..."

"என்ன சார்..."

"கார்லையே ஏறிகிட்டா... டிரைவரும் வந்தான். ரேடியேட்டர்ல தண்ணிய ஊத்தி காரைக் கிளப்பினான். ஊர் எல்லையில அந்த பொண்ணு இறங்கிட்டா. சரி இதோட விட்டது விசயம்னு நினைச்சேன். ஆனா அப்புறம்தான் விசயம் விபரீதமாக ஆரம்பிச்சது..."

"எப்படி சார்?"

"ஊர் திரும்பிவிட்ட நிலையில் என் பொண்ணு லேகா திடீர்னு ஒரு நாள் காணாம போயிட்டா. தூக்கி வாரிப் போட்டிச்சு. ஊர் பூரா தேடினோம். கடைசில பார்த்தா ஊர் மயானத்துல ஒரு சமாதிகிட்ட உட்கார்ந்திருந்தா. கூப்டதுக்கும் வரமாட்டேன்னுட்டா... எனக்கு பயமா போச்சு. அப்பதான் பசுபதிநாத சாமியை பார்த்தேன். பச்சைத் தண்ணியை மந்திரிச்சு கொடுத்தார். போய் என் பொண்ணு மேல தெளிச்சேன். சரியாயிடிச்சு. அன்னிக்கு ராத்திரி நாங்க பார்த்த பொண்ணு ஒரு மோகினிப் பேய்னும் அவதான் என் மகளை பிடிச்சுகிட்டதும் பிறகுதான் தெரியவந்தது. எப்படியோ சாமி காப்பாத்துனார்."

-அருணகிரி சொல்லிவிட்டு அவர் படத்தை பார்த்து கை கூப்புகிறார். தேவநாதன் சிரிக்கிறான்.

"ஏம்ப்பா நம்ப முடியலையா?"

"ஆமாங்க... எல்லாமே தற்செயலான ஒரு நடவடிக்கையா இருக்கு. இதை நீங்க பேய் பிசான்னு போட்டு குழப்பிக்கிட்டீங்கன்னு நினைக்கறேன்..."

"இல்லப்பா... அதுக்கப்புறம் எவ்வளவோ நடந்தது. அதை எல்லாம் சொன்னா அசந்து போயிடுவே..."

"வேண்டாங்க. இதை தெரிஞ்சு நான் என்ன பண்ணப்போறேன். எனக்கு என்ன வேலை அதை சொல்லுங்க..."

“என்னப்பா இப்படி சொல்லிட்டே. சாமி தங்க மான மனுஷர்பா.”

“இருக்கலாம். எனக்குகூட ஒரு ரசமணி கொடுத் தார். ஆபத்து வரும் அதுல இருந்து இது உன்னை காப்பாத்தும்னார். ஆபத்தும் வரலை. நான் காப்பாத் தவும் படலை. மாறா என் நேர்மைக்கு பதிலா வேலை கிடைச்சு இப்ப உங்க கிட்ட பேசிக்கிட்டிருக்கேன். வாழ்க்கைல எப்பவும் நடக்கறது தாங்க நடக்கும். இதெல் லாம் சும்மா...”

தேவநாதன் ரசமணி பற்றி கூறி சலித்துக் கொள்ளவும் அருணாசல ஆசாரி முகத்தில் அபரிமித மாக ஆச்சரியம் கூத்தாட ஆரம்பிக்கிறது.

“தம்பி... சாமி உனக்கு ரசமணி தந்தாரா என்ன?”

“ஆமாம்... இதோ...” அவன் உடனே இடுப்பில் கைவைத்து அதை எடுத்து அவர் எதிரில் நீட்டுகிறான். ஒரு ஈயக்கோலிக்குண்டு போல சற்று தட்டையாக மின்னுகிறது அது.

“நான் கேட்டேன். தரமாட்டேன்னுட்டாரு. ஆனா நீ கேக்காமலே தந்திருக்காரே...”

“இந்தாங்க நீங்க கூட வெச்சுக்குங்க...”

“வேண்டாம் வேண்டாம். அவர் உனக்குத் தந்தது. உன்கிட்ட இருக்கறதுதான் நல்லது.”

“என்ன நல்லதோ... முட்டாள் தனமா இதை கட்டிக்கிட்டு திரியறேனோன்னு எனக்கு சந்தேகமாக இருக்கு.”

“அப்படி நினைக்காதே... ரசமணி சக்தி வாய்ந்தது. அது உன்கிட்ட இருந்தா உன் கால்கள் நல்ல திசை

யில்தான் போகும். உன்னை அடிக்க நினைக்கிறவனும் உன்கிட்ட அடங்கிப்போவான்."

"இல்லேன்னா பெரட்டி எடுத்துடுவானாக்கும் விடுங்க அந்த பேச்சை. என் சீட் எது...? என் வேலை எது? கொஞ்சம் சொல்லுங்க..."

அருணாசல ஆசாரி நம்பிக்கை ததும்ப பேசு வதும் தேவநாதன் வெட்டிப் பேசுவதும் அந்த ரச மணிக்கே பிடிக்கவில்லையோ என்னவோ? இடுப்பில் அவன் வைத்து முடிந்த மறுநொடி நழுவி யாருக்கும் தெரியாதபடி கீழே விழுந்து உருண்டு பசுபதிநாதர் படத்துக்கு கீழே போய் தேங்கி நிற்கிறது.

அருணாசல ஆச்சாரி அவனை அழைத்துக் கொண்டு கீழ் இறங்குகிறார். இனி அவனிடம் இது பற்றியே பேசக்கூடாது என்று முடிவெடுத்தவர் போல வும் தெரிகிறார்.

**ஏ**.சி. கார் ரெடியாக நின்று கொண்டிருக்கிறது. விரும்பியபடியே அதில் ஏறி அமருகிறாள் பிருந்தா. கூடவே சித்தி செங்கமலம்.

"செங்கமலம் பார்த்து கூட்டிகிட்டு போ. நான் காலைல வந்துடறேன்."

கைலாஷ் எச்சரித்தபடி அவர்களை காரில் ஏற்ற அந்த கார் சீறிக் கிளம்புகிறது.

அழுதபடியே வரும் பிருந்தாவை பார்த்து செங்க மலத்துக்கு கோவமாக வருகிறது.

"என்ன பிருந்தா நீ... கொஞ்சம் கூட புரிஞ்சுக்க மாட்டேங்கிறயே. இந்த மாப்பிள்ளைக்கு என்ன குறை? இவனைவிட்டு ஒரு அன்னக் காவடியைக் கல்யாணம் பண்ணிப்பேங்கறியே..."

பிருந்தா நிமிர்ந்து பார்த்து முறைக்கிறாள்.

"இதோ பார்... இப்படி பாக்கறதால எல்லாம் எதுவும் மாறிடாது மனசை மாத்திக்கோ. சினிமால வேணும்னா கதாநாயகி இந்த மாதிரி வித்யாசமா லவ் பண்ணுவா அவனுக்காக கார்ல இருந்தேகூட குதிச்சு ஓடிப் போவா. ஆனா இது வாழ்க்கை. ஞாபகம் வெச்சுக்கோ"

சித்தி புத்தி சொல்லும் சாக்கில் பிருந்தாவுக்கு எடுத்துக் கொடுக்கிறாள்.

"நானும் ஓடி சினிமாவும் வாழ்க்கையும் வேறு இல்லேன்னு காட்றேன் சித்தி..." மனதுக்குள் தீர்மானிக்கிறாள்.

ஏர்போர்ட் வந்துவிட்டது.

லவுன்ச்சில் ஏகத்துக்கும் கூட்டம்.

லக்கேஜை டேக் போட்டு கிராஃப்ட்டின் வயிற்று பாகத்துக்குள் தள்ளும் முயற்சிகள் ஒரு புறம், அதில் செங்கமலம் ஈடுபடத் தொடங்க இதுதான் தருணம் என்று பிருந்தா மெல்ல சித்தி காதைக் கடிக்கிறாள்.

"சித்தி டாய்லெட்"

"போயிட்டு சீக்கிரம் வா..."

அப்பாடா... உற்சாகமாக கிளம்பினவளுக்கு பெரிய விடுதலை கிடைத்தது போல சந்தோஷம்.

"சித்தி... என்னை காணாம அல்லாடிச் சாகு..."

உரக்க சாபம் கொடுத்துவிட்டு வெளியே வந்து டாக்சி என்ற கத்தி அதில் ஏறி அமருகிறாள்.

"எங்க மேடம் போகணும்?"

“தேவநாதன் வீட்டுக்கு?”

“தேவநாதன் வீட்டுக்கா... இப்படி சொன்னாவீ எப்படி மேடம்... அட்ரஸ் சொல்லுங்க...”

அப்பொழுதுதான் அட்ரஸ் தெரியாத குழப்பம் தன் முகத்தை காட்டுகிறது.



# 12

**மு**கவரி தெரியாத குழப்பத்தோடு டிரைவரை வெறிக்கத் தொடங்குகிறாள். அவன் திரும்பக் கேட்கிறான்.

“எங்கங்க போகணும்... அட்ரஸ் சொல்லுங்க...”

“அட்ரஸ்... அட்ரஸ்...”

“என்னங்க... மறந்துட்டீங்களா?”

“ஆ...ஆமாம்...ஆமாம்.”

“சரி என்ன பண்ணப் போறீங்க?” டிரைவ் செய்த படியே கேட்கிறான்.

அவள் முகத்தில் கவலையின் பெருக்கம்.

என்ன செய்வது? தடுமாற்றம் தாண்டவம் ஆட ஆரம்பிக்கிறது.

“பார்த்தா பெரிய மனுஷ வீட்டுப் பொண்ணு மாதிரி இருக்கீங்க, இப்படியா அட்ரஸ் இல்லாம தனியா வருவீங்க...?”

“அது வந்து... இதுக்கு முந்தி ஒரு தடவை போயிருக் கேன். அந்த ஞாபகத்துல...”

“சரி... அப்படியாச்சும் வழிகாட்டுங்க. எந்தப் பக்கம் போகட்டும்?”

“அப்படியே நேரா... ஜெய்ஹிந்துபுரம்... வேண்டாம் வேண்டாம் மீனாட்சியம்மன் கோயிலுக்கு போங்க...”

மாற்றி மாற்றிப் பேசுகிறாள்.

டிரைவர் அவனியாபுரத்தில் ஓர் ஓரமாக பிரேக்கடித்து காரை நிறுத்துகிறான்.

“இப்படி நினைச்சு நினைச்சு சொன்னா எப்படி?”

அவள் சற்று கலங்கிப் போய் அவனைப் பார்க்கிறாள். அதே சமயம் ஒரு புதிய முடிவுக்கும் வந்த மாதிரி அவளை ஒரு தினுசாக பார்க்கிறான் டிரைவர்.

❑ ❑ ❑

**கை**லாஷ் சாரின் டேபிள் போன் சிணுங்கி அவரை அழைக்கிறது. எடுக்கிறார் மறுமுனையில் இருந்து சித்தி செங்கமலம் கத்துகிறாள்.

“அத்தான்... பிருந்தா என்னை ஏமாத்திட்டா. ஏர்போர்ட்வரை வந்தவ எப்படியோ தப்பிச்சிட்டா!”

இடி பாய்ந்த மாதிரி ஆகிறார் கைலாஷ்,

“என்னம்மா சொல்றே... இப்படியா கேர்லெசா இருப்பே?”

“ஐயோ... பேக்கேஜ் கிளியரென்ஸ் பண்ணப் போனேன். டாய்லெட் போறேன்னு சொல்லிட்டு போனா கம்பி நீட்டிட்டா...”

கைலாஷ் ஏராள வியர்வையோடு போனை பொத்தென்று வைக்கிறார்.

சில வினாடி வரை பேச்சே வரவில்லை.

எதிரில் மில்லின் அன்றாட ஃபைல்கள். ஏகமாக கையெழுத்து போட்டு பல முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பிருந்தா இப்படியா பிரச்சினைக்குரியவளாக மாறுவாள்?

நடுவில் திரும்ப அலறுகிறது தொலைபேசி.

வேண்டா வெறுப்பாக எடுத்தால் காதில் பாய்கிறான் வருங்கால மாப்பிள்ளை.

“ஹல்லோ அங்க்கிள் ஹவ் ஆர் யூ... நான் செல்வா பேசறேன்...”

கைலாஷிற்குள் அந்த குரல் என்னென்னவோ செய்கிறது.

“ஹலோ மாப்ள...”

“என்ன மாமா... பிருந்தா கிளம்பிட்டாளா... நான் ஏர்போர்ட்டுக்கு போய் ரிசீவ் பண்ணிக்கட்டுமா?”

மாப்பிள்ளையின் கேள்விக்கு எந்தப் பதிலைச் சொல்வது? பட்டென்று ஒரு பொய் அகப்படுகிறது.

“அது வந்து மாப்ள... ஒரு சின்ன தப்பு நடந்து போச்சு...” வாயில் உண்மை எட்டிப் பார்க்க ஆரம்பிக்கிறது.

“தப்பா... என்ன மாமா...?”

“அது வந்து... வந்து பிருந்தாவுக்கு உடம்பு திடீர்னு சரியில்லை. இஷ்டத்துக்கும் ஐஸ்கிரீமை சாப்ட்டு சரியான ஜலதோஷம் காய்ச்சல்...”

“அப்புறம்...”

“ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ற நிலை. நீங்க கவலைப்பட வேண்டாம். சரியாயிடும்-நான் சரியானவுடன் அழைச்சுகிட்டு வரேன்....”

ஒரு வழியாக பொய்யை மெய்யை சொல்லி சமாளிக்கிறார். போனை முடக்கிவிட்டு மல்லாந்து பெருமூச்சு விடுகிறார்.

“பிருந்தாாாா...”

-என்று உஷ்ணமாக ஒரு கத்து கத்துகிறார். சப்தம் கேட்டு பி.ஏ. எட்டிப் பார்க்கிறான்.

“எனி திங்க் ராங் சார்?”

-பயத்துடன் கேட்கிறான்.

“டோட்டலி ராங்... ஆமா வைண்டிங் செக்ஷன் அருணகிரி வேலைக்கு வந்துருக்கானா?”

“கேக்கறேன் சார்...”

-பி.ஏ. அடுத்த நொடி இண்டர்காமில் ஓர்க்ஷாப் சூப்பர்வைசரை பிடிக்கிறான். அருணகிரி வேலைக்கு வந்திருப்பது தெரிந்திருக்கிறது.

“சார் வந்துருக்கார் சார்...”

அந்த இடியட்டை இம்மீடியட்டா என் முன்னால இழுத்துக்கிட்டு வாங்க...”

-அடுத்த நொடி பி.ஏ. தலை மறைகிறது!

❑ ❑ ❑

**மீ**னாட்சியம்மன் கோயில்!

ஏகமாய் சந்தோஷத்துடன் உள்நுழைந்து கொண்டிருக்கிறான் தேவநாதன். வேலை கிடைத்துவிட்ட சந்தோஷம். அதுவும் கௌரவமான வேலை கிடைத்த சந்தோஷம்.

முதலில் காதலி! இப்பொழுது வேலை!

அன்னை மிக சீக்கிரமே கருணை செய்துவிட்டாள்.

நினைக்க நினைக்க அவனுக்கு குதூகலமாக இருக்கிறது.

விபூதி பிள்ளையாரை தொட்டு விபூதி தூவிவிட்டு வணங்கித் திரும்புபவனை "தேவா..." என்றொரு குரல் அழைக்கிறது. நிமிர்ந்து பார்த்தால் பசுபதிநாதன்!

பொற்றாமரைக்குள படித்துறைக் கல்லில் அமர்ந்து கொண்டு இருக்கிறார்.

அவரைப் பார்க்கவும் சிரிப்பு வருகிறது. சிரித்த படி அவர் அழைப்பை பொருட்படுத்தாதபடி சந்நிதி நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான்.

திரும்ப அவர் அழைக்கிறார்.

"தேவா கொஞ்சம் வந்துட்டு போ..."

-அவன் நின்று முறைக்கிறான்.

"வாப்பா... வராம மட்டும் போய்டாதே. உன் நல்லதுக்குதான் கூப்புட்றேன்."

நின்ற இடத்தில் இருந்தபடி கேட்கிறான்.

"என் நல்லதுக்கா?"

"ஆமாம்... வா உன் பிருந்தாவுக்கு ஆபத்து."

-அவர் சொன்னதில் தேவநாதனுக்குள் உதைப் பெடுக்கிறது.



# 13

**ப**சுபதிநாதனை நோக்கி வேகமாக ஓடி வருகிறான்.

“என்ன உளர்றீங்க... பிருந்தாவுக்கு ஆபத்துன்னா நான் என்னன்னு கேட்டு கிட்ட வருவேன்னு தானே?”

-பசுபதிநாதன் அதை கேட்டு வருத்தத்தோடு பார்க்கிறார்.

“சந்தேகம் இருக்கவேண்டியதுதான். ஆனா அதுக்கு ஒரு அளவு இருக்கு தேவா... என்னமோ தெரியல மனசே சரியில்லை. உன்னை பார்க்க நான் கோயிலுக்கே வந்தேன்...”

“என்ன சாமி என்னென்னவோ சொல்றீங்க?”

“எப்பவும் என் போன்ற மனிதர்களை உள்ளுணர்வு ஏமாத்தாது தேவா. அன்னிக்கு உனக்கு ரசமணி கொடுத்தேன் இல்லியா?”

“ஆமாம்...”

“இப்ப எங்க அது?”

தேவநாதன் அடுத்த நொடி இடுப்பு பகுதியை தொட்டு பார்க்கிறான் ஒரு சின்ன அதிர்ச்சியை முகத்தில் காட்டியபடி நிமிருகிறான்.

“எங்கேயோ தவற விட்டுட்டேன்...”

என்கிறான் நிதானமாக...

உடனேயே பசுபதிநாதன் முகம் கறுக்கிறது.

“விதி ரொம்ப வலியதுதான்”

-என்கிறார் சற்று விரக்தியாக...

"எதுக்கு என்னை கூப்பிட்டுவெச்சு இப்படி அறுக்கிறீங்க... நான் இப்ப நல்லா இருக்கேன். அந்த மீனாட்சி என்னை கைவிடலை. நல்ல வேலை கிடைச்சிடுச்சு. சாதாரண வேலைகூட இல்லை. தங்கம் வைரம்னு பண்ற வியாபாரம்.

என்னை கொஞ்சம் நிம்மதியா விடுங்க. தயவு செய்து ரசமணி அது இதுன்னு எனக்கு நம்பிக்கை இல்லாத விஷயத்தை இனியும் பேசவேண்டாம்.

உங்க மாய்மாலங்களுக்கு நான் ஆளில்லை?"

-படபடவென்று பொரிந்து தள்ளுகிறான் தேவ நாதன். பசுபதிநாதன் முகம் மேலும் இறுகுகிறது.

"கொஞ்சம் என் பேச்சு கேள்... என்னை நம்பு, நீ நினைக்கிற மாதிரி ஆள் நான் இல்லை. இப்ப உன் பிருந்தாக்கு நிஜமாலுமே ஆபத்து. அது உன் அப்பா அம்மா குடும்பம் எல்லாரையும் தொடரப் போகுது. ஒரு வகைல நானும் அதுக்கு காரணம்..."

பசுபதிநாதன் தவிப்போடு பேசுவதை சற்று அலட்சியமாகத்தான் பார்க்கிறான் தேவநாதன்.

"என்னை நம்பு உன் நம்பிக்கையை பெற உணர்ச்சி வசப்பட்டு அன்னிக்கு அந்த பெண்ணை முத்தமிட செய்தேன். அது பெரிய சிக்கலா உருமாற ஆரம்பிச்சிடிச்சு, இப்ப அந்த பெண் காணாம போய்ட்டா.

அவளை நீதான் கடத்திட்டதா அவ அப்பன் நினைக்கிறான். அவன் கோடீசுவரன். மோதினா நீ தாங்குவியா? யோசிச்சு பார்..."

"இதெல்லாம் என்ன கதை? எப்ட்டியும் என்னை உங்க கைக்குள்ள போட்டுக்கற முடிவுக்கு வந்துட்டீங்க.

அதான் இப்படி எல்லாம் சொல்லிப் பாக்கறீங்க. அப்படிதானே?"

"சத்யமா இல்லை... என்னால வந்த ஆபத்து அது. உன்னை காப்பாத்த நினைக்கறேன்."

"சரி... என்னை இப்ப சாமி கும்பிடவிடுங்க. கும்பிட்டு வீட்டுக்கு போறேன். நீங்க சொல்ற மாதிரி நடந்து இருந்தா உங்களை வந்து பார்க்கறேன்."

"அவ்வளவு சந்தேகமா உனக்கு... நீ வந்தெல்லாம் பார்க்க வேண்டாம். இப்ப நீ சாமி கும்பிடக்கூடாது. நேரா உன் அப்பாவை பார்க்கப் போ. இந்தா இந்த விபூதியை பூசிக்கோ. மில்லுக்கு போ!

இன்னும் முக்கால் மணிப்பொழுது இருக்கு. அதுக்குள்ள நீ உன் அப்பாவை பாக்கணும். அதன் பிறகு நட்சத்திரம் மாறி உன் அப்பாவின் பகை நட்சத்திர நேரம் வருது அதுக்குள்ள அவரைப் பார்த்து பிருந்தாவை காப்பாத்தற வழியை பார். உன் அப்பாவை பாக்கப்போ. மற்ற வழிகள்தானா கிடைக்கும்."

"இல்லேன்னா என்னாகும்?"

"அவள் விதி முடிஞ்சிடும்பா... போ... பேசினது போதும்."

பசுபதிநாதன் பிடித்துத் தள்ளுகிறார். அவனை அது என்னவோ செய்கிறது பிருந்தாவை மயங்க செய்து முத்தமிடவே செய்தவர் பொய்யா சொல்வார், அரை மனதாக கிளம்புகிறான்!

❑ ❑ ❑

**அ**ந்த இருண்ட அறையில் கண்களை திறக்கும் பிருந்தாவின் எதிரில் டாக்சி டிரைவர் நின்று கொண்

டிருக்கிறான். பாதி தெரிந்து மீதி தெரியாமல் இருக்கிறான்.

"என்னம்மா கண்ணு... பணக்கார வீட்டு பொண்ணு உன் பேர் என்ன? அப்பா அம்மா யார் எங்க இருக்காங்க. சொல்றியா... உன்னை வெச்சு கொஞ்சம் அவங்க கிட்ட நாங்க சம்பாதிச்சுக்கறோம்..."

டிரைவர் சொல்லிவிட்டு திரும்ப, அவனை சுற்றி ஒரு அடியாள் பட்டாளம்.

அவர்கள் அத்தனை பேரும் கொல்லென்று சிரிக்கிறார்கள்.

"தேடி அலைஞ்சாலே இப்படி பறவைங்க மாட்டாது. இது வலிய வந்து மாட்டின பறவை, விடலாமா சாரங்கா. அஞ்சு லட்சமாவது தாளிச்சுடணும் இவ அப்பன்கிட்ட."

ஒருவன் டிரைவரிடம் சொல்கிறான்.

டிரைவர் சாரங்கன் முகத்தில் அதை கேட்டு அட்டகாசமான ஒரு சிரிப்பு பிருந்தா, தான் தப்பான ஒரு நபரிடம் மாட்டிக் கொண்டதை அப்பொழுதுதான் புரிந்து கொள்கிறாள். ஐய்யய்யோ!

# 14



**பீ**தி நிரம்பிய விழிகளுடன் சுற்றியிருப்பவர்களைப் பார்க்கிறாள் பிருந்தா. ஒருவன் அவளை தன் கூர்மையான விழியால் அளந்துவிட்டு சொல்கிறான்.

“மாப்ள இவள பம்பாய்ல ரெட்லைட் ஏரியால கொண்டு போய் வித்தா பல ஆயிரம் நிச்சயம் போவா.”

“போடா முண்டம்... நாங்க லட்சத்துக்கு திட்டம் போட்டுகிட்டு இருக்கோம். ஆயிரமாம்ல...! ஏய் குட்டி உன் பேர் என்ன... யார் நீ சொல்றியா இல்லையா...”

முஷ்டியை மடக்கிக் கொண்டு முன் வருகிறான் இன்னொருவன். பிருந்தா மான்குட்டி போல துடித்தபடி ஓர் ஓரமாக முடங்கி அமருகிறாள்.

“நான்... நான் மில் ஓனர் கைலாசத்தோட பொண்ணு...”

தட்டுத்தடுமாறி சொல்லி விடுகிறாள்.

“மகாதேவி மில் ஓனர் கைலாசம் பொண்ணா நீ?”

ஒருவன் மிகப்பெரிய அளவில் ஆச்சரியப்பட்டு திரும்பிக் கேட்கிறான்.

“ஆங்...”

“வாரே வா... பழம் இப்படியா நழுவி பால்ல விழும்?”

“என்னடா சொல்றே?”

“சொல்றேன்... நல்லா கேட்டுக்கோ மாணிக்கம்... இவ அப்பனுக்கும் நமக்கும் ஒரு கணக்கு இருக்கு. ஞாபகம் இருக்கா.”

மாணிக்கம் என்பவன் புரியாத மாதிரி அப்படி கேட்ட சாதிக் அலி என்பவனை பார்க்கிறான்.

“முண்டம்... நம்ம உசுர் சினேகிதன் லோகநாதன் இந்த மில்லுல வேலை பார்த்தப்போ அவன் மேல திருட்டு பழி போட்டு அவனை வேலைய விட்டு நீக்குனது யாருடா...?”

சாதிக் அலி எடுத்துக் கொடுக்கவும் நச்சென்று பிடித்து சொல்கிறான் மாணிக்கம் என்பவன்.

"அட ஆமாம்ல..."

"அதுமட்டுமா? ஒரு வகைல நாமல்லாம் உருப்படியா தொழில் பண்ணமுடியாம கடத்தல் பிராத்தல்னு இறங்கக் கூட அந்த கைலாசம் காரணமா இருந்துருக்கான்.

என் கார்லேயே அவனுக்கு எத்தினி தடவை பொம்பளைங்கள ஏத்திக்கிட்டு போயிருப்பேன்..."

மூன்றாவதாக ஒருவன் தலையை சிலிப்பியபடி குறுக்கில் நுழைகிறான்.

பிருந்தா அரண்டு போகிறாள்.

'தன் தந்தை இவர்கள் சொல்வது போல் அத்தனை மோசமானவரா?' கேள்வி தீ கண்களில் எரிகிறது.

அவர்கள் இப்பொழுது கூடிப் பேசுகிறார்கள்.

"கைலாசத்தை இரண்டுல ஒண்ணு பாக்க சரியான சந்தர்ப்பம் வந்துருக்கு. நிதானமாவே காய் நகர்த்துவோம். கைலாசம் அரசியல் செல்வாக்கு உள்ளவன். என்ன செய்யறான்னு பார்ப்போமே."

அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள்.

பிருந்தாவுக்கோ மயக்கம் வருகிறது.

❑ ❑ ❑

**ம**காதேவி மில்!

செக்யூரிட்டி கேட் முன் தேவநாதன்.

"வா தம்பி... அப்பாவுக்கு சாப்பாடு கொண்டு வரலையா வெறும் கையோட வந்திருக்கியே..."

ஹெட் வாட்ச்மேன் கேட்கிறார். அவருக்கு பதில் சொல்லாமல் கைகெடிகாரத்தை பார்க்கிறான் தேவ நாதன். பசுபதிநாதன் சொன்ன முக்கால் மணிப் பொழுது முடியப் போகிறது. பதற்றத்துடன் நிமிர்ந்து "நான் அப்பாவை உடனே பார்க்கணும்" -என்கிறான்.

"அப்பாவையா... அவர முதலாளி பாக்கணும்னு வரச் சொல்லி அவரை பார்க்க போயிருக்காருப்பா உன் அப்பா..."

"உடனே பார்க்கணும். அவரோட காண்டாக்ட் பண்ணுங்க. உங்க முதலாளியை நல்ல ஆம்பளையா இருந்தா என்கிட்ட மோதச் சொல்லுங்க..."

"என்னப்பா சொல்றே... மோதல் அது இதுன்னு...? ஒரு முதலாளி தொழிலாளியை பாக்கறாரு அவ்வளவு தான். இதுல மோதிக்க என்ன இருக்கு... புரியலையே..."

"ஐயா உங்களுக்கு சொன்னா புரியாது. பேச நேரமில்லை, எங்க இருக்கு உங்க முதலாளி ரூம்..."

-அங்கிருந்து உள் நுழைய ஆயத்தமாகிறான் தேவ நாதன்.

"நில்லுப்பா... அனுமதியில்லாம யாரையும் நான் உள்ள அனுமதிக்க முடியாது."

"ஐய்யோ... ரொம்ப அவசரங்க! அப்பாவை பார்த்து ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிடறேன். அவரை பார்த்தா போதும்..."

-ஹெட் வாட்ச்மேன் அரைமனதாக இண்டர்காம் அருகில் சென்று எம்.டி. அறை எண்ணை அழுத்தத் தொடங்க...

❑ ❑ ❑

அலறும் இண்டர்காமை எடுக்கிறான் பி.ஏ.

"யெஸ்... அஸிஸ்டெண்ட் ஸ்பீக்கிங்!"

"ஐயா நான் செக்யூரிட்டில இருந்து பேசறேங்க. நம்ம அருணகிரியோட பையன் தேவநாதன் வந்துருக்காருங்க. அவங்க அப்பாவை பாக்கணுமாம்."

-பி.ஏ. இண்டர்காமை முடக்கியபடி, உள் அறையை கண்ணாடி ஜன்னல் வழியாக பார்க்கிறான்.

உள்ளே அருணகிரி மண்டியிட்டு ஏதோ புலம்பிக் கொண்டிருக்கிறார். எதிரில் சிகரெட் ஊதியபடி கைலாஷ். இண்டர்காமை கட் செய்யாமல் வைத்துவிட்டு மெல்ல அறைக் கதவை திறந்து கொண்டு உள் நுழைகிறான்.

"என்னய்யா?"

"சார்... அந்த தேவநாதன்- அதான் இவரோட சன் வந்திருக்காராம்."

"அவனுக்கென்னய்யா மரியாதை... எங்க வந்துருக்கான்?"

"கேட்ல இருக்கானாம்..."

-கைலாஷ் முகம் கசங்கிப் போய் யோசிக்க தொடங்குகிறது.

"சரி அவனை வரச்சொல்லு" என்கிறார். பின்பு சற்று இணக்கமாக தகவல் பறக்க ஆரம்பிக்கிறது. தேவநாதனும் உள் நுழைந்து அறையை அடைந்து கதவை திறந்தபடி வந்து நிற்கிறான். நல்லவேளை இன்னமும் முக்கால் மணி பொழுது ஆகவில்லை. இன்னும் சில நிமிடங்கள் இருக்கிறது. பெருமூச்சு விடுகிறான்.

"என்னடா பெருமூச்சு விடறே... எதுக்காக?"

சாம்பலை கிண்டிக் கொண்டே கைலாஷ் சேரில் அமர்ந்தபடி அவனை பார்த்து கேட்கிறார்.

"ஆயிரம் காரணம் இருக்கு அதுக்கு... நீங்க தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க?"

-ஊசி போல் பதில் தேவநாதனிடம்.

"அது சரி... பிருந்தா இப்ப எங்க இருக்கா?"

-அந்த கேள்வியை துளி கூட எதிர்பார்க்காதபடி அவரை வெறிக்க ஆரம்பிக்கிறான் தேவா.

"கேக்கறேன்ல..." அவர் கத்துகிறார்.

"எனக்கு என்ன தெரியும்?"

-பதில் கத்தல் தேவாவிடம்

"ராஸ்கல். என் மகள் உன்கிட்டதான் இருக்கா. ஏர்போர்ட்ல வெச்சு அவளை கடத்திட்டு கதையா பேசறே..."

"நான் உங்க மகளை கடத்தினேனா..."

"என்ன நாடகம் ஆடுறியா?"

-தேவநாதன் சீட்டை விட்டு எழுந்து கொள்கிறான்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. அதுக்கு நேர மும் இல்ல எனக்கு..."

"இதோ பார்... இது என் பிரஸ்டீஜ் விசயம். அதான் இதுவரை போலீசுக்கு போகலை. உனக்கு எவ்வளவு பணம் வேணும் கேள். விட்டெறியறேன். என் மகள் வாழ்க்கையோட விளையாடாதே..."

-கைலாஷின் தீர்க்கம் பசுபதிநாதன் சொன்னதில் தொட்டு முடிகிறது. தேவநாதன் நிஜமாலுமே நடந்ததை நினைத்து வியக்கிறான். 'அந்த பெரிய மனிதர் சொன்னது சரிதான்.'

பிருந்தா எங்கேயோ போய் விட்டிருக்கிறாள். இந்த நபரின் கல்யாணத் தொல்லையிலிருந்து தப்பிக்க...

எங்கே? அவனும் கேள்விக்குள் விழும்போது கச்சிதமாக தொலைபேசி சப்திக்கிறது.

எடுத்து காதில் வைக்கிறார் கைலாஷ்.

"டாடி" என்கிறாள் பிருந்தா!

# 15



**ம**களின் குரலை கேட்ட மாத்திரத்தில் புத் துணர்ச்சி வந்தவரைப்போல,

"அம்மாடி பிருந்தா எங்க இருந்தும்மா பேசறே...?" என்று உச்சஸ்தாயிக்கு செல்கிறார் கைலாஷ்.

அதற்குள் அவளது குரல் கட் ஆகிறது. மாறாக மாணிக்கம் என்பவன் பேச ஆரம்பிக்கிறான்.

"குரலை கேட்டியா கைலாசு..." என்கிறான் கிண்டலாக.

"யார்டா நீ?"

"கத்தாதே... நாங்கல்லாம் பொறுக்கி பசங்க. பேமானிங்க. உன்னை மாதிரி பெரிய பணக்கார ஜாதி கிடையாது. கோட் சூட்கேஸ் கிடையாது."

"உனக்கு என்ன வேணும். என் மக குரல் கேட்டுச்சே..."

"கேட்டுச்சா. நல்லது. அதுதான் எங்களுக்கு வேணும். உன் மக இப்ப என்கிட்டதான் இருக்கா

உன்மக உனக்கு வேணும்னா ஒரு பத்து லட்ச ரூபா பணம் எங்களுக்கு வேணும்.

நீ எப்படிப்பட்ட ஆள் உன் செல்வாக்கு என்ன... எல்லாம் எங்களுக்கு தெரியும். தெரிஞ்சிருந்தும் உன் கிட்ட மோதறோம்னா பாத்துக்கையேன்.

உன் மக தானா எங்க கைல வந்து சிக்கினா டாக்சில ஏறிட்டதா நினைச்சு எங்க வலைக்குள்ள விழுந்துட்டா. அவ உனக்கு வேணும்னா பணம் தந்தே தீரணும் நீ. பத்து லட்சம்லாம் உனக்கு சுண்டைக் காய். பணத்துக்கு பதிலா போலீஸ் கீலீஸ்னு ஏதாவது பண்ணுனே நடக்கறதே வேற தெரிஞ்சுக்கோ...

பணத்தோட எங்க வரணும்னு பத்து நிமிஷம் கழிச்சு போன் பண்றோம். "டொடக்!"

-தொலைபேசி மறுமுனையில் முடங்குகிறது. கைலாஷ் வேர்த்து வடிந்து நிமிர தேவநாதன் கேட்கிறான்.

"என்ன சார்... யாராவது பிருந்தாவை கடத்திட்டாங்களா?"

"ஆமாம்... பிருந்தாவா போய் கிட்நாப் பண்ற பார்ட்டிகிட்ட மாட்டிகிட்டு இருக்கா..."

"மைகாட்... இப்பவாவது நான் இல்லைன்னு தெரிய வந்ததே. போகட்டும். யார் அந்த நாய்ங்க...?"

"அதெல்லாமா சொல்வாங்க. பத்து லட்சம் பணம் வேணுமாம்."

"பணத்தோட எங்க வரச் சொன்னாங்க... நீங்க கவலைப்படாதீங்க. பணமும் தராதீங்க. நான் பாத்துக்கறேன்."

“நோ... இந்த மாதிரி தப்புல துணிஞ்சு ஈடுபடற வங்க எல்லாத்துக்கும் துணிஞ்சவங்களா இருப்பாங்க. பணம் போனா போய்ட்டு போகுது. என் மக எனக்கு கிடைச்சா போதும். இந்த விசயம் வெளியவும் தெரியக் கூடாது.”

-சற்று முன்வரை சண்டைக் கோழிகளாக மோதிக் கொண்டவர்கள் இப்பொழுது சமாதானமாக பேசு வதை அருகில் நின்று கொண்டிருக்கும் அருணகிரியும் பார்த்து அப்பாடா என்று பெருமூச்சு விடுகிறார்.

“முதலாளி... நீங்க சொல்றதுதான் சரி பணம் போனா போய்ட்டு போகுது. பாப்பாக்கு எதுவும் ஆயிடக்கூடாது” என்று சொல்பவர் அப்படியே தேவ நாதன் பக்கம் திரும்பி,

“தேவா நீ முதலாளி மகளை விரும்பறியா என்ன?” என்று தட்டுத் தடுமாறி கேட்கிறார்.

தேவநாதன் மௌனமாக நிற்கிறான்.

“ஏண்டா நம்ம அந்தஸ்து எங்கே... இவங்க அந் தஸ்து எங்கே... உனக்கு இப்படி ஒரு ஆசை வரலாமா?” - கோபமாக அவனை நோக்கி பாயத் தொடங்குகிறார்.

-உயரும் கைலாஷின் கரங்கள் அருணகிரியை தடுக்கிறது.

“அருணகிரி அந்த விசயத்தை பிறகு பேசுவோம் முதல்ல என் மக என்கிட்ட வரணும். அப்புறம்தான் மத்ததெலாம்...”

சொல்லிவிட்டு கைலாஷ் கெடிகாரத்தையும் தொலைபேசியையுமே பார்க்கிறார்.

அவர் எதிர்பார்த்தபடியே பத்து நிமிட முடிவில் அதன் மணிச்சப்தம் அவரைக் கூப்பிடுகிறது. தேவா

பசுபதிநாதனின் அக்கறையை முன்கூட்டியே செய்த எச்சரிக்கையை நினைத்து விதிர்த்து போக தொலை பேசியில் குரல்...

"என்ன கைலாசம் பணத்த ரெடி பண்ணிட்டியா?" கேட்கிறான் மாணிக்கம்.

"உம்... இடத்த சொல்லு."

"போலீஸ் கீலீஸ்னு திருகு வேலை பார்க்கலையே..."

"இல்ல என்னை நம்பு."

"நம்புறோம் பணத்தோட இன்னிக்கு ராத்திரி 10 மணிக்கு மேல திருமங்கலம் தாண்டி தென்காசி போற சாலைல நாலுமைல் வா. ரோடு ஓரமா ஒரு தோப்புவரும். அந்த தோப்புக்குள்ள வா. மிச்சதெல்லாம் அங்க வந்த பிறகு தெரிஞ்சுக்குவே... டொடக்" கைலாஷ் இடம் தெரிந்துவிட்ட மகிழ்ச்சியோடு பத்து லட்ச ரூபாய்க்கு ஏற்பாடு செய்யத் தொடங்க தேவநாதன் பசுபதி நாதனை பார்ப்பது நல்லது என்கிற முடிவிற்கு வந்திருந்தான்.

❑ ❑ ❑

**மீ**னாட்சியம்மன் கோயில்.

படித்துறையில் சோகமாக பசுபதிநாதன்.

ஓடிவருகிறான் தேவா. அவனை பார்க்கும் அந்த கிழட்டு மனிதர் நிம்மதி பெருமூச்சு விடுகிறார்.

"வா தேவா... வந்துட்டியா போனகாரியம் நல்ல படியா முடிஞ்சிடிச்சா..."

"முடிஞ்சிச்சு சாமி. எனக்கு ஒரே ஆச்சரியமா இருக்கு. எப்படி சாமி பிருந்தா காணாம போனது உங்களுக்கு தெரியும்...?"

“பாத்தியா இனிமே இந்த மாதிரி எப்படி தெரியும் எதனால தெரியும்னுல்லாம் கேக்காதே தேவா. நீயும் முயற்சி செய்தா தெரிஞ்சிக்கலாம். எல்லாம் மனுஷ சக்திக்கு கட்டுப்பட்ட விசயங்கதான். எப்படியோ அப்பாவை காப்பாத்திட்டேல்ல.”

“அப்பாவுக்கு ஒண்ணுமில்லே. ஆனா பிருந்தா தான் எசகு பிசகா ஒரு கிட்நாப் கோஷ்டிகிட்ட மாட்டிகிட்டிருக்கா...”

“தெரியும் அவளுக்கு இப்ப நேரம் சரியில்லை இப்படியெல்லாம் நடக்கும்னு எனக்கு தெரியும்.”

“இப்படி சொன்னா எப்படி சாமி... நான் உங்களை இப்ப பரிபூரணமா நம்பறேன். நீங்க நல்லவர்தான். இல்லாட்டி என் அப்பாவை காப்பாத்த என்னை அப்படி துரத்தியிருப்பீங்களா...?

“நானும் போகலை அந்த போனும் வரலைன்னா நிஜமா என் அப்பாவை அந்த கைலாஷ் அடிச்சே கொன்னுருப்பார்...”

பசுபதிநாதன் அது எதையும் காதில் வாங்காதபடி கண்ணை மூடிக்கொண்டு தனக்குள் பிருந்தாவை தேட ஆரம்பிக்கிறார்.



# 16

**கோ**யிலில் நான்கு பேர் வந்து போகும் படியான ஓர் இடத்தில் இப்படி அவர் கண்ணை மூடிக் கொண் டால் பார்ப்பவர்களுக்கு எப்படி இருக்கும்?

தேவா சற்று லஜ்ஜையோடு அவரையே பார்த்துக் கொண்டு நிற்கிறான். இந்த வாழ்க்கைதான் எத்தனை புதிர்கள் நிரம்பியது? ஒருபுறம் எண்ணிப்பார்க்க மாட்டாத திருப்பங்கள். மறுபக்கம் அதை பற்றியறியும் கணிப்புகள், சலிப்புகள்.

எந்த நேரம் எது நடக்கும் என்று தீர்மானிக்க முடியவில்லையே... கோயிலில் மணி ஒலிக்க ஆரம்பிக்கிறது. கேட்க ஆனந்தமாக இருக்கின்றது. ஒரு வாரத்துக்குள்தான் இந்த கோயிலில் என்னென்ன நடந்துவிட்டது!

பசுபதிநாதனை பார்த்ததும் பிருந்தா முத்தமிட்டதும் நவமணிகள் கிடைத்ததும் அருணாசல ஆசாரி தொடர்பு ஏற்பட்டதும் அடேயப்பா...

மிகச் சாதாரணமாய் போய் கொண்டிருந்த வாழ்க்கை பாதை எப்படி எப்படியோ திரும்பி எந்த மாதிரி எல்லாமோ முகம் காட்ட ஆரம்பித்துவிட்டதே...

அதில் பிருந்தா தொலைந்துவிட்ட சிக்கல் மட்டும் எதற்காக? எந்த நன்மையை உத்தேசித்து இப்படி நடக்கிறது. இது நல்லதற்கா... கெட்டதற்கா?

கேள்வியும் குழப்பமுமாக நின்று கொண்டிருக்கிறான் தேவநாதன். பசுபதிநாதன் கண்களை திறக்கிறார். ஒரு தூண் ஓரமாக ஒடுங்கி இடுப்பு வேட்டி மடிப்பில் கைவைத்து எதையோ எடுக்கிறார். சின்னதாக ஒரு டப்பாபோல் இருக்கிறது அது. மெல்ல தேவநாதன் பக்கம் திரும்பியவர் “தேவா ஓடிப்போய் ஒரு வெற்றிலை வாங்கிட்டுவா...” என்கிறார். எதற்கு என்றெல்லாம் கேட்காமல் ஓடுகிறான் தேவநாதன். சற்று நேரத்தில் திரும்புகின்றவன் கையில் வெற்றிலை.

“கொண்டா...” வாங்கிக் கொள்பவரின் ஆள்காட்டி விரலில் ஏதோ மை ஒட்டியிருப்பதுபோல் இருக்கிறது.

ஆமாம் மையேதான்.

அதை எடுத்து வெற்றிலைமேல் தடவுகிறார். வெற்றிலை கருக்கிறது. வெற்றிலையை இப்பொழுது உற்றுப் பார்க்கிறார். பார்த்தபடியே தேவநாதனிடம் பேசுகிறார்.

"தேவநாதா... அந்த பொண்ணு இப்ப தூங்கிக் கிட்டு இருக்கா. அவ இருக்கிற இடத்துக்கு பக்கத்துல நாலு ரோடு சந்திச்சுக்கிற ஒரு சாலை சந்திப்பு இருக்கு."

அவர் சொல்லச் சொல்ல கூர்ந்து கவனிக்க ஆரம் பிக்கிறான் அவன்.

"சாமி இதெல்லாம் எப்படி?" என்ற கேட்க தொடங்குகிறான்.

"அதை பிறகு சொல்றேன் இப்போதைக்கு இன் னும் சில அடையாளங்களை சொல்றேன். கேட்டுக்கோ முதல்ல அந்த நாலுரோடு சந்திக்கிற இடத்துல ஒரு காந்தி சிலையும் இருக்கு."

அவர் சொன்ன மறுவினாடி காந்தி சிலை உள்ள நான்கு ரோடு சந்திப்பு இந்த மதுரையில் எங்கு உள்ளது என்று யோசிக்க ஆரம்பிக்கிறான்.

"அந்த காந்தி சிலைக்கு நேர் எதிர்ல மல்லிகை கொடி படர்ந்த வீட்டுமாடிலதான் பிருந்தா இப்போ படுத்திருக்கா. அவளை அங்கே வச்சு பூட்டிட்டு ஒருத் தனை காவலுக்கு வெச்சுட்டு எல்லாரும் போய்ட்டாங்க. போலீஸ் உதவியோட இப்ப நீ அங்க போனா பிருந்தாவை பிடிச்சுடலாம். போ... ஒரு மணி நேரத்துல காரியத்த முடி. அப்புறமா குளிகன் காலம். அது உனக்கு உதவாது..." சொல்லிவிட்டு வெற்றிலையை மடித்து கசக்கி விட்டெறிகிறார்.

தேவநாதன் சில நொடிகள் நின்று வெறித்துப் பார்க்கிறான். பின் கை கூப்பியபடி கிளம்பத் தொடங்கிய

வனை அருகழைத்து இடுப்பு விபூதியை திரும்ப பூசி விடுகிறார்.

"இது அழியாதவரை உனக்கு ஒரு ஆபத்தும் வராது" என்றும் கூறுகிறார்.

❑ ❑ ❑

**நா**ன்கு ரோடு சந்திக்கும் இடமும் அதில் ஒரு காந்தி சிலையும் இருப்பதை எப்படியோ ஆனையூர் பக்கத்தில் கண்டுபிடித்து அங்கு இரண்டு போலீஸ்காரர் களுடன் போய் நிற்கிறான்.

காந்தி வெயில் மழையில் காய்ந்தபடி நின்று கொண்டிருக்கிறார். பரிதாபமாக அருகே வந்து நிற்கும் தேவநாதனை பார்க்கிறார்.

"என்னப்பா இந்த இடம்தானா... இதுல எங்க இருக்கு அந்த மல்லிகை கொடி படர்ந்த வீடு?" -ஒரு போலீஸ்காரர் கேட்க இன்னொரு போலீஸ் அதோ என்று கை காட்ட ஒரு வீட்டின் முன் புஷ்டியாக வளர்ந்த நிலையில் மல்லிகைக் கொடி.

வேகமாக நெருங்குகின்றனர்.

போலீஸ் வருவதை பார்த்து ஒருவன் விடைத்து எழுந்து நிற்கிறான்.

"என்னடா... எப்படி கரெக்டா வந்து நிக்கறோம்னு பாக்கறியா பத்து லட்ச ரூபா வேணுமா உங்களுக்கு...?" -போலீஸின் கிண்டலான கேள்வி முடிவதற்குள் அவரைப் பிடித்து தள்ளிவிட்டு ஓட ஆரம்பிக்கிறான்.

தேவநாதன் பாய்ந்து அவனை பிடிக்க முயல ஒரு போலீஸ்காரர் பக்கவாட்டில் உள்ள மாடிப்படியில் ஏறுகிறார். மேலே ஒரே ஒரு அறை தட்டுமுட்டுச்

சாமான்களால் நிரம்பிக் கிடக்கிறது. அதில் எங்கே பிருந்தா?

ஆவலாக எட்டிப்பார்க்கிறார். ஓர் உடைந்த கட்டிலில் வாயையும் கையையும் கட்டி படுக்கப் போட்டிருக்கிறார்கள். இதற்குள் பாய்ந்து வருகிறான் தேவ நாதன்.

“பிருந்தா...” என்று ஓடிச் சென்று கை வாய் கட்டுகளை அவிழ்க்கிறான். அவள் விழிகளில் கண்ணீர்...

“தேவா... எப்படி கண்டுபிடிச்சீங்க இந்த இடத்தை...”

“அதுவா இப்ப முக்கியம்? முதல்ல கிளம்பு உங்க வீட்டுக்கு...”

“வேண்டாம் தேவா... உங்க வீட்டுக்கு கூட்டிகிட்டு போங்க. என் வீட்டுக்கு வேண்டாம். என் அப்பா திரும்ப அந்த அயோக்யனோட கல்யாணம் பண்ணி வைக்கறத பத்தி பேச ஆரம்பிச்சுடுவாரு...”

-அவள் பேசப்பேச அவளை இழுத்துச் செல்ல ஆரம்பிக்கிறான். மனதில் பசுபதிநாதன் பற்றிய பக்தி யோடு...

# 17



**கி**ரீன்வேஸ் சாலை! பணக்கார வீடுகளின் அணி வகுப்பில் பளிச்சென்று கிடக்கும் மதுரையின் செல்வப் பகுதி போலீஸ் ஜீப் ஒன்று அந்த பகுதியில் ஊடுருவிய படி இருக்கிறது.

கச்சிதமாக கைலாஷின் பங்களாவை கண்டறிந்து முன்னால் நிற்கிறது. ஜீப்பிலிருந்து இறங்கும் தேவ நாதனையும், பிருந்தாவையும் பங்களாவே ஆச்சரிய முடன் பார்க்க கைலாஷ் ஓடி வருகிறார்.

அவர் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை.

"தேவா... பிருந்தாவை எப்படி... எப்படி... கண்டு பிடிச்சே?" நாக்கு தடுமாறுகிறது அவருக்கு

"எப்படியோ கண்டுபிடிச்சேன் சார்... இப்ப இது இல்லை முக்கியம். இந்தாங்க உங்க மகள் ஒப்படைச் சுட்டேன். இனியாவது பத்ரமா பாத்துக்குங்க.

இப்ப ஒரு விஷயத்த உங்களுக்கு சொல்றேன். நீங்களா முழு மனசா சம்மதிக்காத வரை உங்க மகளை நான் கல்யாணம் செய்துக்க மாட்டேன்" அழுத்தமாக சொல்கிறான். தேவா எங்கும் நிசப்தம் நிலவ பின் தொடருகிறான்.

"நீங்க சம்மதிக்க அந்தஸ்துதான் தடைன்னா அதை நான் நிச்சயமாக அடைவேன் உங்களைவிட பெரிய இடத்துக்கு வருவேங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. அப்படி நான் வந்தா எனக்கு உங்க மகளை கொடுங்க இல்லேன்னா உங்க விருப்பப்படி யாருக் காவது கட்டிக் கொடுங்க. அதுவரை பிருந்தாவை தொந்தரவு செய்யாதீங்க. நீங்க அவளுக்கு பிடிக்காத இடத்தில் கட்டி வைக்க முயற்சி செய்ததாலதான் அவ வீட்டை விட்டு ஓடினா. திரும்பவும் அப்படி நடந்து கிட்டீங்கன்னா அவ உலகத்தை விட்டே ஓட முயற்சி செய்யலாம்..." பக்கத்தில் போலீஸை வைத்துக் கொண்டு படபடவென்று அவன் பேசுவதைக் கேட்டு கைலாஷிற்கு கையும் ஓடவில்லை காலும் ஓட வில்லை.

இருந்தாலும் ரோஷம் மிகுந்த அந்த பேச்சு அவருக்கு பிடித்ததுபோல் இருக்கிறது. மகளைப் பார்க்கிறார். அவள் கலங்கிய விழிகளுடன் அங்கிருந்து விலகும் தேவநாதனையே பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

கூட வந்த போலீஸ்காரரர் இப்பொழுது கைலாஷை பார்த்து சொல்கிறார்.

"என் சர்வீஸ்ல எவ்வளவோ கேஸை பார்த்துருக்கேன். ஆனா இப்படி மந்திரம் போட்ட மாதிரி ஒரு வேகத்துல முடிஞ்ச கேஸ் இதுதான் சார். அவருக்கு அந்த பொண்ணு இருக்கிற இடம் எப்படி தெரிஞ்சிச்சுன்னு எங்களுக்கே தெரியலை. வந்தாரு சொன்னாரு பெரிய இடத்து சமாசாரம்னு நாங்களும் மளமளன்னு கிளம்பினோம். போனா எல்லாம் முடிஞ்சிது நல்ல படியா.

ஆமாம் இவ்வளவு நடந்துருக்கு... நீங்க ஏன் சார் போலீசுக்கு சொல்லலை...?"

அந்த கேள்வி முன் கைலாஷ் தடுமாறுகிறார்.

"சாரி சார்... தப்பா எடுத்துக்காதீங்க. அந்த தம்பி பேசுனபடி ஜாக்கிரதையா பார்த்துக்குங்க. உதவி எதுன்னாலும் போன் பண்ணுங்க சார். வந்து செய்யறோம்.

-போலீஸ் அட்வைஸோடு கிளம்புகிறது. கைலாஷ் முகத்தில் இப்பொழுது அதீதமான சிந்தனை!

❑ ❑ ❑

**வீடு**

உள்ளே நுழைபவனை ஆவலாக பார்த்தபடி எழுந்து நிற்கிறார் அருணகிரி.

"தம்பி தேவா... என்னப்பா ஆச்சு... அந்த பொண்ணு வந்துடுச்சா?"

"ஆமாண்டா... நானும் ஏதேதோ கேள்விப்பட்டேன். உன்னை அந்தப் பொண்ணு காதலிக்குதாமே... தேவா... என்னடா இதெல்லாம்?" அம்மா வேறு பக்க வாத்தியம் வாசிக்க ஆரம்பிக்கிறாள்.

சாவித்திரி, சந்திரா என்கிற இரண்டு சகோதரிகளும் கூட இப்பொழுது வீட்டில் இருக்கின்றனர். தேவநாதனை சற்று கவலையோடு பார்க்கின்றனர்.

"ஏற்கனவே எவனோ ஒரு சாமியாரை பார்த்தே. பயந்து போனேன். இப்ப என்னடான்னா ஒரு கோடீஸ்வரியை காதலிக்கிறேங்கறே... என்னதாண்டா நடக்குது தேவா?" -சிவகாமி அதிகமாகவே கவலைப்பட்டு பதறுகிறாள்.

தேவா நிதானமாக நிமிர்ந்து பார்க்கிறான்.

"சும்மா... இப்ப என்ன ஆயிடிச்சின்னு புலம்பறே. ஒண்ணும் ஆயிடலம்மா. உன் மகன் எப்பவும் தப்பா நடந்துக்கமாட்டேன். உனக்கு நம்பிக்கை இருக்குதானே?"

"இருக்குடா... இருந்தாலும் வாழ்க்கையில சில சமயம் என்னதான் நாம திடமானவங்களா இருந்தாலும் கெட்ட காலம்னு ஒண்ணும் வேலை செய்ய ஆரம்பிச்சா நம்பநிலை ரொம்ப சிக்கலாயிடும் தேவா..."

"நமக்கு கெட்ட காலம்லாம் இல்லம்மா. நல்ல காலம்தான். மீனாட்சி இருக்கறப்ப ஏம்மா கெட்டதை நினைக்கறே. அவ விட்டுடுவாளா என்ன?"

-பதிலோடு அக்காக்களை பார்க்கிறான். கல்யாணத்துக்கு தயாராக இருக்கிறார்கள் இருவரும்.

தேவா உன்னால்தான் எங்கள் வாழ்க்கை கரை ஏற வேண்டும், என்று பார்வையாலேயே சொல்கிறார்கள்.

கவலை வந்து கவ்வுகிறது. சட்டென்று கடை நினைப்பு வருகிறது.

கோயிலுக்கு போவதற்காக என்று சொல்லிக் கொண்டு கிளம்பி வந்ததில் இருந்து -பிருந்தாவை மீட்டு ஒப்படைப்பது வரை ஒரே போக்காக போய்விட்டது.

அருணாசல ஆசாரி காத்துக் கொண்டிருப்பார்.

கிளம்ப வேண்டியதுதான்.

கால் கையை கழுவிக் கொண்டு உடை மாற்றிக் கொண்டு கிளம்பத் தயாராகிறான்.

போகும்வழியில் அப்படியே பசுபதிநாதனை கோயிலில் பார்த்து முதல் காரியமாக காலில் விழ வேண்டும்.

என்ன ஓர் அற்புதம்? ஒரு துண்டு வெற்றிலையை வைத்துக்கொண்டு மனிதர் எத்தனை பெரிய அற் புதத்தை நிகழ்த்திவிட்டார்...

'எப்படி முடிந்தது இது'....

# 18



**எ**ப்படி?

மனதில் விரும்பிய கேள்வியோடு கடைக்கு கிளம்பு கிறான் தேவா. முதலில் போகும் வழியில் கோயிலுக்கு சென்ற பசுபதிநாதனைப் பார்த்து நன்றி சொல்ல வேண்

டும் அப்படியே அந்த மையைக் கொண்டு பிருந்தா இருந்த இடத்தை அறிந்ததை எப்படியென்றும் கேட்டறிய வேண்டும்.

வியப்பும் சிந்தனையுமாக வெளிக்கிளம்புகின்றவனை சிவகாமி தடுக்கிறாள்.

"என்னடா... வந்தே உடனே கிளம்பறே...?"

"இன்னைக்கு தானேம்மா வேலைல சேர்ந்திருக்கேன் சேர்ந்து அரைநாள் ஒழுங்கா வேலை செய்யலை. அதுக்குள்ள கோயில், அந்த பிருந்தா பொண்ணை கண்டுபிடிக்கிறதுன்னு பொழுது ஓடிடிச்சு... முதலாளி எதிர்பார்த்துக்கிட்டே இருப்பாரும்மா. போய்ட்டு வந்துட்றேன்." -பொறுப்பாக பேசி வாசலையும் தாண்டுகிறான்.

**கோயில்!**

பசுபதிநாதனை குளத்தின் படித்துறையில் காணோம்.

எங்கு போய்விட்டார். எப்பொழுதும் இங்கு தானே அமர்ந்திருப்பார். அவன் தேடுவதை அறிந்தது போல ஒரு பெரியவர் அவன் அருகே வந்து கேட்கிறார்.

"யாரை தம்பி தேட்றே... மைச்சாமியையா?"

"மைச்சாமியா?"

"ஆமாம், அந்த கருப்பு வேட்டிக்காரரர் அழகர் கோயில் மனுஷன். அவரைத்தாம்பா சொன்னேன்...

"அவரையேதான்... அவருக்கு பேர் மைச்சாமியா!"

"ஆமாம்ப்பா... அவர் கூட அடிக்கடி பேசற உனக்கு தெரியாதாக்கும்?"

"தெரியாதுங்க... இந்த கோயில்ல பாத்துகிட்டது தான்."

“சரிதான் போ... நீ அவரோட சிஷ்ய பிள்ளை யோன்னுல்ல நினைச்சேன். அவரும் என்கிட்ட அப் படிதானே சொன்னார்...”

‘‘நான் அவரோட சிஷ்யப்பிள்ளையா?’’

“ஆமாம்ப்பா... மைச்சாமிதான் சொன்னார். அதான் கேட்டேன். அதோட இன்னிக்கு பௌர்ணமி பாரு. சாமி மை எடுக்க காட்டுப்பக்கம் போயிருக்கும்...”

“என்னங்க என்னென்னமோ சொல்றீங்க. எனக்கு எல்லாமே புதிரா இருக்கு...”

“ஒரு புதிரும் இல்ல தம்பி. சாமி ரொம்ப தங்க மான சாமி அதுக்கு 1008 ஜாலவித்தை தெரியும். நான் கூட ஒண்ணு ரெண்டையாவது எனக்கு கற்றுக்கொடுக்க சொன்னேன். முடியாதுன்னு சொல்லிடிச்சு. உன்மேல அதுக்கு பிரியம் இருக்கு... கத்துக் கொடுத்தாலும் கத்து கொடுக்கும். கத்துக்கோ என்ன...” அவர் அபிப் ராயத்தோடு கழண்டு கொள்கிறார்.

ஆயிரத்தெட்டு ஜாலவித்தையா?

மீனாட்சி என்ன இது... இப்பொழுது சாமி எங்கே?

❑ ❑ ❑

அழகர் கோயில் குறுமலை பகுதிமேல் சூரியன் கவிழ்ந்து கொண்டிருக்கிறான். பௌர்ணமி நிலவும் அந்தி வானச் சருக்கத்தில் நிமிர்ந்து எழுந்து கொண் டிருக்கிறது.

பார்க்க பரவசமாக இருக்கிறது.

அந்த மலையின் வலப்பக்கமாக தெரிகிறது பழ முதிர்ச் சோலை மலைக்காடு. அழகான முருகன்

கோயில் கோபுரமும், ராக்காயி கோயில் சுனையும்கூட தெரிகிறது.

மலையின் பின்புறத்தில் அடர்த்தியான காட்டுப் பரப்பு. காணக்கிடைக்காத மூலிகைகள் அங்குதான் இருப்பதாக சொல்வார்கள். அந்த பகுதி நோக்கி செம்பட்டையாக உள்ள ஒற்றையடிப் பாதை மேல் நடந்து கொண்டிருக்கிறார் பசுபதிசாமி.

வழியில் கள்ளிச்செடி ஒன்று தட்டுப்படுகிறது. அதில் கள்ளிக்காய்கள். அதை எடுத்துப் பிளக்க உள்ளே வெண்ணிறத்தில் சோற்றுப்பகுதி அதை வழித்து எடுத்து தன் கைவசம் உள்ள ஐம்பொன் பாத்திரம் ஒன்றில் போட்டுக்கொள்கிறார். அப்படியே நடக்கிறார். ஓணான் ஒன்று முன்னிரெண்டு கால்களால் நிமிர்ந்து ஒரு பாறை மேலிருந்து பார்க்கிறது.

சாமியின் பார்வை அதை பார்த்த நொடியில் அது திரும்பி ஓட முயல்கிறது. சாமி ஒரு கல்லை எடுத்து குறி பார்த்து எரிய தலை அடிபட்டு அப்படியே பிரண்டு விழுகிறது.

பிரண்டு விழுந்த ஓணானை எடுத்து அதன் தோலை உரித்து எலும்பையும் நீக்கிவிட்டு, உள்ளிருக்கும் சதைப் பகுதியை வழித்து ஐம்பொன் செம்பில் முன் புள்ள சோற்றுக் கத்தாழை சோற்றுடன் சேர்த்துப் போட்டுக் கொண்டு சுற்றிச்சுற்றி பார்க்கிறார். எட்டி மரம் ஒன்ற தெரிகிறது. மரத்தில் எட்டிக்காய்கள் காய்த்துக் கொழித்திருக்கின்றன.

சில காய்களை பறித்து அதையும் பாத்திரத்தில் போட்டுக் கொள்கிறார்.

இன்னும் சில தூரம் நடக்க சிரியாநங்கை தட்டுப் படுகிறது. அதன் வேர் பூமியில் பல பாகத்திற்கு பரவி

யிருந்தாலும் வடபாகத்து வேராக பார்த்து உருவி எடுத்து அதையும் பாத்திரத்தில் போட்டுக்கொள்கிறார்.

பாத்திரத்தைப் பார்க்கிறார். நிரம்பியிருக்கிறது. துர்வாடையும் வருகிறது. கத்தாழை சோறு ஓணானின் சதைப்பிண்டம், சிரியா நங்கை வேர், எட்டிக்காய் என்று எல்லாம் கலந்து கலவையாக இருக்கும் அதெல்லாம் எதற்கு?

பார்த்தபடியே திரும்பி நடக்கிறார்.

மலையடிவாரம் வருகிறது. அழகர்கோயிலுக்கு சாமி கும்பிட வந்த கூட்டம் அவ்வளவாக இல்லை. பாத்திரத்தை ஒரு வாத மர இலையால் வாய்மூடிகட்டி எடுத்துக் கொண்டு கோயிலுக்கு எதிர் சா்ரியில் உள்ள சாலையில் நடக்கிறார். சாலையில் பல கடைகள். ஒரு கடை முன் போய் நிற்கவும் ஒருவன் டீ போட்டு தரு கிறான். அப்படியே காதோரமாக வந்து சாமி... இன்னிக்கு கிராமத்து மயானத்துக்கு ஒண்ணுக்கு நாலு பிணங்கள். எல்லாம் வெந்துக்கிட்டிருக்கு...'' என்கிறான். அதை கேட்டபடியே டீயை குடிப்பவர் காலி டம்ளரை நீட்ட அதை ஒரு பிரசாதம் போல வாங்கிக்கிறான்.

பசுபதி சாமி நடக்க ஆரம்பிக்கிறது.

மயானம் நோக்கிய நடை என்பது அவனுக்கு தெரியுமோ என்னவோ, “ஜக்கம்மா... எல்லாம் நல்லபடி முடியணும் தாயி'' என்று கை கூப்புகிறான்.

ஊர் மயானத்தில் அவன் சொன்னது போலவே நான்கு பிணங்கள் வெந்துகொண்டிருக்கின்றன. எங்கும் புகை மூட்டம்.

# 19



**பு**கை மூட்டத்தை குடைந்து கொண்டு நடக்கிறார் பசுபதிநாதன். ஆளரவமில்லை. வழக்கமாக நடமாடித் திரியும் ஜந்துக்களான ஓணான், உடும்பு, பாம்பு, பல்லி, வகையறாக்கள் கூட இது நடமாடும் இடமல்ல என்கிற மாதிரி எங்கோ சென்ற ஒளிந்து விட்டிருக்கிறது.

மயானத்துகேயுரிய அரளியும் கத்தாழையும் உரம் போட்டது போல் வளர்ந்திருக்கின்றன. நடுநடுவே சில சமாதிகள். அவை காலத்தால் பிளந்து கொண்டு உள்ளிருக்கும் எலும்புகள் வெளிவந்து கிடக்கின்றன.

சில வகை நாய்களுக்கும், ஓநாய்களுக்கும் மனிதப் பிணம் என்றால் மிகப்பிரியம் அவற்றுக்கு அபார மோப்ப சக்தியும் இருப்பதால் மயானம் புகுந்து புதைத்த பிணங்களின் குழிகளைத் தோண்டி பிணங்களை வெளியே இழுத்துப் போட்டு கடித்துக் குதறிச் செல்வதுண்டு.

இன்னும் சில ஓநாய்கள் அதுபோல் நான்கு நாட்களுக்கு முன் புதைக்கப்பட்ட ஒரு கன்னிப் பெண்ணின் பிணத்தை இழுத்துப்போட்டு குதறிக்கொண்டிருக்கின்றன.

பசுபதிநாதன் அந்த பெண்ணின் சடலத்தை பார்த்தபடி நடக்கிறார். சடலத்தை ஒட்டி புகைபோல ஓர் உருவம் அவரது யோகவிழிகளுக்கு எப்படியோ தட்டுப்படுகிறது. பசுபதிநாதன் தன்னையே வெறிப்பதை அதுவும் உணர்ந்தது போல் விசும்புகிறது.

“யார் நீ?”

தீர்க்கமாக கேட்கிறார்.

"நாய் குதறிப் போட்ட இந்த பிணத்துல வாழ்ந்தது சாமி நான்..."

"தற்கொலை செய்துக்கிட்டியா?"

"ஆமா..."

"அப்ப அனுபவி. வாழ்க்கை துன்பத்தில் இருந்து தப்பிச்சுக்க நினைச்சா அது முடியாது. அதிகமாகும்..."

"சாமி ஏதாவது வழி சொல்லுங்க... இப்படி சொன்னா எப்படி?"

"நான் யார் வழி சொல்ல... நல்ல மாந்திரீகன் எவன்கிட்டயாவது அடிமைப்பட்டு நல்ல காரியங் களுக்கு உதவி செய். சீக்கிரமா இந்த அலைச்சல் தீர்ந்து மேல் உலகம் செல்லலாம்..."

"நல்லது சாமி... நீங்களே ஒரு மாந்திரீகனா இருந்து என்னை பயன்படுத்தக் கூடாதா?"

"நான் மாந்திரீகன் இல்லை, தாந்திரீகன். போ அப்பால! வழியை விடு..."

அதட்டலாக அவர் கத்த அதுவும் வழிவிடுகிறது. பசுபதி நேராக எரியும் பிணங்களை நோக்கி இப் பொழுது நெருங்குகிறார். சற்று தொலைவில் வெட்டி யான் குடிபோதையோடு படுத்துக் கிடக்கிறான். பசுபதி வருவதை பார்த்து எழுந்து அமருகிறான்.

அவர் அந்த பெண்ணின் ஆவியோடு பேசிய தெல்லாம் அவனுக்கு புதிராக இருக்கிறது. எழுந்து தள்ளாடியபடி அவரை நோக்கி வருகிறான்.

"வாங்க சாமி..."

"அதான் வந்துட்டேனே... என்ன குடிச்சிருக் கியா?"

“ஆமா சாமி குடிக்காம ஒரு ராவு இங்க தங்க முடியலையே சாமி...”

“சரி சரி... எரியற பிணத்துல எதுடா இளைய சரீரம்...”

“அதோ... அந்த மூணாவது கட்டைதான் சாமி ரொம்ப சின்ன பையன்...”

பசுபதி அந்த பிணமேடை அருகே நெருங்குகிறார். பாதி வெந்தும் வேகாமலும் கனன்று கொண்டிருக்கிறது அந்த சடலம்...

வெட்டியான் பார்த்தபடி நிற்கிறான். அவர் இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்து சில ஆணிகளை எடுக்கிறார். சரியாக மூன்று ஆணிகளை மட்டும் கையில் வைத்துக்கொண்டு மற்றதை இடுப்பில் திரும்பச் செருகிக் கொள்கிறார்.

பின் ஒரு ஆணியோடு பிணத்தை நெருங்குபவர் அதன் வெந்துபோன வாயில் அதை போடுகிறார். அடுத்ததை வயிற்றுப் பாகத்தில் வைத்து குத்த அது உள் அழுந்துகிறது. மூன்றாவதை ஆசனபாகத்தின் உள் சொருகுகிறார்.

எழுந்து திரும்புகிறார். வெட்டியான் கச்சிதமாக கேட்கிறான்.

“சாமி அந்த மூணு ஆணியையும் காலைல எடுத்து வெச்சிருக்கட்டுமா?”

“ஆமாம்...”

“அடிக்கடி இப்படி செய்யறீங்க கேட்டா சொல்ல மாட்டேங்கறீங்களே...”

“சொல்றேன். வேளை வரும்போது சொல்றேன்”

“சீக்கிரமா அந்த வேளை வரட்டும். பிணங்க ளோடு கிடந்து கிடந்து வெறுத்து போச்சு. இரண்டு

நாளா ஒரு காத்து தூங்கவிடாம அழுது உபத்ரவம்தான் பண்ணுது சாமி.”

அவன் சொல்லும் முன் புரிந்து கொள்கிறார்.

“கிட்டவா...”

என்று அவனை அழைக்கிறார்.

இடுப்பில் இருந்து மை டப்பாவை எடுக்கிறார்.

அதில் துளி மை எடுத்து நெருங்கி நிற்கும் அவன் புருவம் மேல் பூசுகிறார். அப்படியே டப்பியை அவன் கையில் கொடுக்கிறார்.

“வெச்சுக்கோ... ராவானா தடவிக்கிட்டு படுத் துக்கோ... எந்த காத்தும் உன்னை எதுவும் பண்ணாது. பொதுவாவே காத்து கருப்புகள் மயான வெட்டியானை காவலனா நினைக்கும், எதுவும் செய்யாது.

சில காத்துகள் சமயங்கள்ள மிரட்டிப் பார்க்கும். ஆனா எதுவும் செய்யாது. பயப்படாதே. ஆமா... மண்டை ஓடு கேட்டிருந்தேனே...”

“தலைக் குழந்தை ஓடு தாங்களே...?”

“அதுதானே என்னை மாதிரி மயான சாமிகளுக்கு தேவை.”

“ஒரு குழந்தையை புதைச்சிருக்காக சாமி. ஆனா இன்னும் 10 நாள் கூட ஆகலை...”

“ஆகட்டும்... அதோட ஆவி மேல் லோகம் போய்க் கட்டும். அப்பதான் அந்த ஓட்டை நான் எடுத்துக்கிட்டா எனக்கு எந்த பாவமும் கிடையாது. ஆகையால் 19 நாள் கழிஞ்ச பிறகு ஒரு சொம்பு பாலை விட்டுட்டு பிறகு தோண்டி எடு...”

“சரி சாமி...”

பசுபதி திரும்பி நடக்கிறார். அவன் பார்த்துக் கொண்டே நிற்கிறான். பிணங்கள் வந்துகொண் டிருக்கின்றன.

உலகில் எவ்வளவோ புதிர்கள், சுடுகாட்டுப் புதிர் அதில் எதோடு சேர்த்தி? தெரியவில்லை. பசுபதிநாதன் போன்ற சாமியார்களின் செயல்களும் எதை உணர்த்து கின்றன. போகப் போக தெரியுமோ?



# 20

அருணா ஜெம்ஸ் அண்ட் ஜூவெல்ஸ்!

கடைக்குள் கனஜோராக வியாபாரம் கல்லா அருகில் ஒரு மேஜை நாற்காலி. அதில் தேவா. நடப்பதை எல்லாம் கவனித்தபடி இருக்கிறான்.

இந்தியா ஏழை நாடு என்பதெல்லாம் பொய் என்பது போல கூட்டம் கட்டி ஏறிக் கொண்டிருக்கிறது. பவுன் ஐயாயிரம் விற்றாலும் கூட்டம் வாங்காமல் விடாது போல தோன்றுகிறது.

வியாபார மும்முரத்தின் நடுவில் கடைவாசலில் படகு போல ஒரு கார் வந்து நிற்கிறது. உள்ளிருந்து அழகு தேவதையாக ஒரு பெண் இறங்கி வருகிறாள். கடையில் இருப்பவர்கள் பதற ஆரம்பிக்கிறார்கள்.

“லேகாம்மா வராங்க... லேகாம்மா வராங்க...”

“யார் அது?”

தேவாவும் கேட்கிறான்.

"முதலாளி மக லேகாங்க சார். எழுந்திருச்சு நில்லுங்க சார். ரொம்ப கோவக்கார பொண்ணு."

- ஒருவன் விளக்கிக் கொண்டிருக்கும் போதே லேகா என்னும் அந்த குதிரை போன்ற பெண் கண்ணாடி கதவை திறந்து கொண்டு உள் நுழைந்து எல்லாரையும் ஒரு பார்வை பார்க்கிறாள். அருணாசல ஆசாரி கடையில் இல்லை.

"வணக்கம்மா..."

"வணக்கம்மா-உக்காருங்கம்மா..."

"அம்மா எங்கம்மா இவ்வளவு தூரம்? கூல் ட்ரிங்க்ஸ் சாப்பிட்றீங்களா?"

ஆளாளுக்கு உபசரிக்க தொடங்க கடைக்கு வியாபாரம் செய்ய வந்தவர்களும் இந்த தர்பாரை பார்த்து அரண்டு போக தேவநாதன் மெல்ல எழுந்து லேகா என்னும் அந்தப் பெண்ணை நெருங்குகிறான்.

"வணக்கம் மேடம்..."

-என்கிறான் பணிவாக.

"நீ தான் புதுசா சேர்ந்துருக்கற நபரா...?"

லேகா அலட்சியமாக கேட்கிறாள். ஜீன்ஸ் பேண்ட் ஷர்ட்டில் பார்க்கத்தான் நாகரிகமாக இருக்கிறாள். ஆனால் பேச்சில் நாகரிகமாக இல்லை.

"ஆமாங்க..."

"என்ன படிச்சிருக்கே?"

"டிகிரிங்க..."

"டிகிரின்னா... பி.ஏ.வா, பி.காமா, பி.எஸ்ஸியா?

"பிகாம்ங்க..."

"அதை முதல்லையே சொல்லணும். ஆமா, கணக் கெல்லாம் நல்லா போடவருமா?"

"........."

"கேக்கறேன்ல..."

தேவா அடுத்த நொடி அவளை கூர்மையாக பார்க்கிறான். அருணாசல ஆசாரி கூட இப்படி எல் லாம் பார்க்கவோ, கேட்கவோ இல்லை. எதற்காக இந்த பெண் இப்படி கேட்கிறாள் என்றும் தெரியவில்லை. மௌனமாகவே நிற்கிறான்.

"கேட்டா பதில் சொல்லணும், இப்படி பார்த்தா என்ன அர்த்தம். நான் உனக்கு சம்பளம் கொடுக்கற முதலாளியோட பொண்ணு..."

-அவள் கைகளை அசைத்து அழுத்தமாக சொன்ன விதத்தில் அனல் பறக்கிறது.

"அதுக்கு என்ன பண்ணணும்கறீங்க. உங்க முன் னால தோப்புகரணம் போடணும்கறீங்களா?

-தேவாவும் கோபமாக திரும்பி கேட்கிறான்.

"என்ன மேன் எதுத்து பேசறே... இந்த வேலைல நீடிக்கற ஆசை இல்லையா உனக்கு...?"

"உனக்கும் உன் அலட்டலுக்கும் சல்யூட் அடிச்சா தான் இங்க வேலைன்னா எனக்கு இந்த வேலையே வேண்டாம் தாயே..."

"என்ன திமிர் உனக்கு...?"

"தப்பா சொல்றீங்க... சுயமரியாதை."

"புடலங்கா. சுயமரியாதையாம்ல சுயமரியாதை, இரு இரு அப்பா வரட்டும் வெச்சுக்கறேன்."

-அவள் கருவிக் கொண்டு வந்த ஜோரில் வெளி யேறுகிறாள்.

எல்லாரும் தேவாவையே பார்க்கின்றனர்.

"என்ன சார். அம்மாகிட்ட இப்படி நடந்துக் கிட்டீங்க. அது ரொம்ப முன்கோபமுள்ள பொண்ணு சார். வேலைல சேர்ந்து இரண்டு நாள் கூட ஆகல. அதுக்குள்ள முறைச்சிகிட்டீங்களே சார்."

எல்லாரும் தங்கள் அபிப்ராயத்தோடு வருத்தத் தையும் போட்டு கிளறிக் கொட்டுகிறார்கள்.

தேவாவுக்கும் சங்கடமாகிறது. நல்ல வேலை கிடைத்தது என்று நினைத்தது தவறோ?

❑ ❑ ❑

**சோ**கமாக அமர்ந்து கொண்டிருக்கிறாள் பிருந்தா. தேவா அப்பாவிடம் படபடவென்று பொரிந்து தள்ளி விட்டுபோன சம்பவம் ரிவைண்ட் ஆகிக்கொண்டே யிருக்கிறது.

அவன் சொன்னதுபோல பெரிய பணக்காரனாக மாறி வருவானா... வரமுடியுமா?

-கேள்வி கேட்டுக் கொண்டு சினிமாவில் வேண்டு மானால் வரலாம். ஆனால் இது சினிமா இல்லையே... அசல் வாழ்க்கையாயிற்றே என்று தனக்குதானே பெரு மூச்சுடன் சமாளித்துக் கொள்கிறாள்.

அவனை பார்த்து நான்கு நாட்கள் ஓடிவிட்டது. ஏதோ பல வருடம் ஆனமாதிரி இருக்கிறது. இதுதான் காதலோ? சரியாக சாப்பிடவில்லை. தூக்கம் இல்லை கலகலப்பு போய்விட்டிருக்கிறது.

யாரோ வருவதுபோல் சப்தம் கேட்கவே திரும்பு கிறாள்.

கைலாஷ் வந்து கொண்டிருக்கிறார். மகளின் அழிச்சாட்டியமான போக்கு அவருக்கு தெரியாமல் இல்லை இருந்தும் கேட்கிறார்.

"இப்படி இருந்தா எப்படிம்மா?"

"எப்படி இருக்கேன்."

"சாப்பிடலை, குளிக்கலை, சரியா தூங்கக்கூட இல்லைன்னு கேள்விப்பட்டேனே..."

"இதுக்கெல்லாம் ஒரே வரில... இல்லையில்ல ஒரு வார்த்தைல நான் பதில் சொல்லட்டுமா?"

"சொல்..."

"காதலிக்கலை... அதனாலதான் இப்படி இருக்கேன்."

"திரும்ப அந்த அன்னக்காவடி நினைப்பா உனக்கு?"

"நீங்க பாத்துருக்கற குடிகாரனுக்கு அவர் எதுல குறைஞ்சவர்...?"

"அப்படியா... அதான் சவால் விட்டுட்டு போயிருக்கான்ல. வருவான். லட்சாதிபதியா... இல்லையில்ல கோடீஸ்வரனா...?"

"நிச்சயம் வருவார் டாட். எனக்கு நம்பிக்கை இருக்கு..." -சொல்லிவிட்டு கவுந்துபடுத்துக்கொள்கிறாள். எரிச்சலாகிப் போகிறது கைலாஷிற்கு.

"சை!" -திரும்புகிறார். எதிரில் பி.ஏ. சேகர்.

"சார்... அவன் ஒரு நகை கடைல வேலைக்கு சேர்ந்துருக்கான். பத்தா!யிரம் வரை சம்பளமாம். அந்த கடைக்காரர் அவன் சொன்னா எதையும் செய்வாராம். அப்படி ஒரு நம்பிக்கையாம்..."

-கைலாஷ் முகம் அதைக் கேட்டு சிவக்க தொடங்கு கிறது.



# 21

**தே**வநாதன் நகைக்கடையில் நல்ல நிலையில் வேலையில் இருப்பதை அறியும் கைலாஷ் ஆழ்ந்து யோசிக்க ஆரம்பிக்கிறார். சேகர் அதை கூர்ந்து கவனிக் கிறான். கேட்கிறான்.

"சார்... அவன் நம்ம பாப்பா விஷயத்துல தொடர்ந்து தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக்கானா சார்..."

"எதுக்கு கேக்கறே?"

"பாப்பா கூட என்கிட்ட தன் பிடிவாதத்தை காட்

"அதுக்கு வழி... பொதுவுல இந்த மாதிரி காதல் விஷயத்துல கூடாதுன்னு சொல்லச் சொல்ல எதிர்ப்பு தான் சார் அதிகமாகும்."

"நான் உன்கிட்டே விளக்கம் கேக்கல. பிருந்தா அந்த பரதேசி நாயை மறக்கணும். அதுக்கு வழி இருக்கா..."

"அதுக்கு ஒரே வழி அவன் ரொம்ப மோசமானவன்னு அவங்க நினைக்கறதுதான்..."

"அவன் மோசமானவனா ஆக முடியாது. காணாம போனவளை மந்திரம் போட்டமாதிரி கண்டு பிடிச்சு சேர்த்துட்டான். எனக்கே இந்த நிமிஷம் வரை அது ஆச்சரியமாத்தான் இருக்கு."

"என்ன சொன்னீங்க... மந்திரம் போட்ட மாதிரியா?"

"சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்."

"பேச்சுக்குத்தான் சொன்னீங்க, ஆனா எனக்கு அதுல ஒரு வரிய காமிச்சுட்டீங்க சார்..."

"என்னய்யா சொல்றே..."

"சார்... நம்ம பாப்பா அவனை மறக்க நிஜமாலுமே வழி இருக்கு. கத்தி எடுக்க வேண்டாம். யுத்தம் நடத்த வேண்டாம். ஓசைப்படாம காரியத்த முடிச்சுடலாம்."

"எப்படிய்யா?"

"கொண்டைய ராஜுன்னு ஒரு மந்திரவாதி இருக்கான். அவன் இந்த விஷயத்துல எக்ஸ்பர்ட்டுன்னு கேள்விப்பட்டிருக்கேன்..."

"மந்திரவாதியா..."

"ஆமாம் சார்... பெரிய பெரிய பணக்காரங்கள் லாம் தங்கள் எதிரிகளை ஜெயிக்க அவன்கிட்ட போய் பார்த்துருக்கேன் நான்."

"எனக்கு இந்த மந்திரம் தந்திரத்துல எல்லாம் நம்பிக்கை இல்லைய்யா."

"சார்... கொண்டைய ராஜு வரட்டும். அப்புறம் பாருங்க. நம்ம பாப்பா, நீங்க அந்த தேவநாதன் பேரைச் சொன்னாலே எரிஞ்சு விழுவாங்க..."

-சேகர் சொல்லச் சொல்ல கைலாஷ் தீவிரமாக கொண்டையராஜுக்குள் விழத் தொடங்குகிறார். மனதுக்குள் 'பிள்ளையார் பிடிக்க குரங்காகிவிடுமோ?" என்றும் பயப்படுகிறார்.

“சார் பயப்படாம ஒத்துக்குங்க. பாப்பா மனசை மாத்தறது மட்டுமில்ல. அந்த தேவநாதனையும் ஒண்ணு மில்லாம பண்ணிப்பிடலாம்...”

“நிஜமாவா?”

“சத்யமா சார்... அவனை நடுத்தெருவுல பிச்சை எடுக்கக்கூட வைக்க முடியும் கொண்டைய ராஜு வாலா...”

“இதோ பார்... நீ சொல்றதுக்காக நான் இதை நம்பறேன். எனக்கு இதுல சுத்தமா நம்பிக்கை கிடை யாது. அந்த கொண்டைய ராஜு எல்லாத்தையும் கச்சிதமா முடிக்கட்டும். அப்புறம் பார் அவன் ஆயிரம் கேட்டா நான் லட்சம் கூட தருவேன்.”

கைலாஷ் உற்சாகமாகிறார். சேகர், கொண்டைய ராஜுவை பார்க்க தயாராகிறான்.

❑ ❑ ❑

**அ**ருணா மகால்!

அருணாசல ஆசாரியின் வீட்டிற்குத்தான் இப்படி ஒரு பெயர். பெயரளவில் மட்டுமல்ல நிஜத்தில் அது ஒரு மகாலாகத்தான் இருக்கிறது.

இரண்டாயிரம் சதுர அடி மாளிகை. சுற்றிலும் ஐயாயிரம் சதுர அடிப்பரப்பில் தோட்டம். விசிறி வாழை, போகன் வில்லா, வேலி மாணிக்கம் என்று பணக்காரச் செடி கொடிகளி தேய்ந்து நிற்கும் காரில் இருந்து இறங்கி கோபமாக உள் செல்வது லேகா. கோபத்துக்கு காரணம் தன்னை எதிர்த்துப் பேசிய தேவநாதன்.

நடு ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார் அருணாசல ஆசாரி. மகள் புலிபோல் உறுமியபடி வந்து

நிற்பதை பார்த்தும் பார்க்காதபடி பேப்பரை படிக்கிறார்.

"அப்பா..."

கத்துகிறாள் லேகா.

"சொல்லு... காதுதான் கேட்கும்ல."

"நிமிர்ந்து பாருங்க..."

"மாட்டேன். கோபமா வந்துருக்கே போல இருக்கு. அப்புறம் நெற்றிக் கண்ணை திறந்து என்னை எரிச்சிடுவே...?"

அவள் கோபம் உடனே அவரது பேச்சால் சிரிப்பாக மாறுகிறது. சிரிப்போடு கெஞ்சுகிறாள்.

"அப்பா கொஞ்சம் நிமிர்ந்து பாருங்களேன்."

"சொல்லு..."

"யாருப்பா அந்த தேவநாதன்?"

"ஏம்மா... நம்ம கடைக்கு அவன்தான் ஜி.எம்."

"முதல்ல வீட்டுக்கு அனுப்புங்கப்பா. என்ன ஒரு திமிர் தெரியுமா அவனுக்கு."

"அவனுக்கா?"

"அட ஆமாப்பா..."

"அத நீ சொல்றியாம்மா..."

"அப்பா... கிண்டல் வேண்டாம். பீ சீரியஸ், என் கிட்டே எப்படி எதுத்து பேசுனான் தெரியுமா?"

"நீ என்ன பேசுனே..."

"உங்ககிட்ட சொல்லி வெச்சிக்கறேன்னு சொன்னேன்."

"அப்ப நீ அவனை வெச்சுக்கப் போறியா?"

லேகா அவரின் கிண்டலை முறைத்துக் கண்டிக் கிறாள்.

"நான் வெச்சுக்க அவன் என்ன பெரிய இளவரசர் சார்லஸா...?"

"அப்ப உனக்கு இளவரசர் லெவலுக்கு ஆட்கள் வேணுமா?"

"இல்லியா பின்னே... கோடீஸ்வரர் அருணாசலம் மகளுக்கு கோடீஸ்வரனுக்கும் மேல் மாப்ள வந்தா தானேப்பா நல்லாயிருக்கும்" மகளின் கருத்து அவரை எதனாலோ வருத்தமடைய வைக்கிறது.

# உஉ



அந்த வருத்தம் கலையாதபடி மகளைப் பார்க் கிறார். லேகாவும் ஆச்சரியப்படுகிறாள்.

"என்னப்பா ரொம்ப வருத்தப்பட்ட மாதிரி தெரி யுதே?"

"ஆமாம்மா... உன் ஆசையை நினைச்சா பயமா இருக்கும்மா..."

"ஐய்யோ அப்பா நான் விளையாட்டுக்கு சொன் னேன்."

மகளின் திடீர் பல்டி அவருக்கு ஆச்சரியம் தரு கிறது.

"என்னம்மா சொல்றே...?"

"சும்மா உங்களை சீண்டறதுக்காக அப்படி சொன்னேன். ரியலி தேவநாதன் ஒரு நல்ல ஆம்பளப்பா. முதலாளி மகங்கற பயமோ வயசுப் பொண்ணுங்கற சலனமோ இல்லாம என்கிட்ட பட்பட்ன்னு பேசினார். எந்த போலித்தனமும் இல்லை. ஐலைக் ஹிம் வெரிமச்"

அருணாசல ஆசாரிக்கு இப்பொழுதுதான் நிம்மதியாகிறது.

"நல்லவேளை... என்னடா அந்த புள்ளைய நீ இப்படி சொல்றியேன்னு நினைச்சேன். ரொம்ப ஏழைப் பட்ட குடும்பம். ஆனாலும் தேவநாதன் நேர்மைய நினைச்சா எனக்கே சிலிர்ப்பா இருக்கு.

"நீயே யோசிச்சு பார். நம்ம கடைல வேலை பார்த்த எத்தனைபேர் எப்படி எப்படி எல்லாம் பணத் தோடயும் நகையோடையும் ஓடியிருக்காங்க..."

"ஆமாம்ப்பா... ரியலி ஜென்டில்மேன். ஆளும் நல்ல பக்திமான் போல இருக்கே. அடிக்கடி மீனாட்சியம்மன் கோயிலுக்கு போவாரோ?"

"ஆமாம்மா - அந்த பையனை நான் நம்ம கடைகளுக்கு ஜி. எம்மா ஆக்கினதுக்கு காரணமே அவன் மீனாட்சி பக்திதான். எனக்கு ஒரு நல்ல ஆளை காமி தாயேன்னு போய் வேண்டிகிட்டு வந்த அன்னிக்குத்தான் அவ அனுப்பினமாதிரி நம்ம கடை பையன் தொலைச்ச நவரத்தினங்களோட வந்து நின்னான். இப்ப நினைச்சா கூட சிலிர்ப்பா இருக்கு."

அருணாசல ஆசாரி தேவநாதன் நினைப்பில் மிகுந்த உயரத்துக்கு போகிறார். அவருக்கு சமமாக அவரது மகளும் போகிறாள். லேகா அப்பாவுக்கு சரியாக பேசியது மட்டுமின்றி தன் டயரியினை திறந்து தன் கருத்தை அதில் பதிக்க ஆரம்பிக்கிறாள்.

'தேவநாதன் ஒரு நல்ல ஆண் மகன். அவர் எனக்கு கிடைத்தால் நான் கடவுளுக்கு நன்றி சொல்வேன்.'

❑ ❑ ❑

**பி**ருந்தா என் வரையில் கடவுளால் காட்டப் பட்டவள் அவள் எனக்கு மனைவியாக வாய்க்க நான் எது வேண்டுமானாலும் செய்வேன். அவளுக்காக வாவது நான் பெரிய பணக்காரனாக தொழிலதிபராக மாறவேண்டும்.

லேகா போன்ற திமிர்பிடித்த பெண்களுக்கும் பாடம் புகட்ட வேண்டும்.

மேற்கண்ட குறிப்பை எழுதி டயரியை மூடுகிறான் தேவநாதன். அருகில் அவனது சகோதரி சாவித்திரி காப்பியுடன் "தேவா ரொம்ப மாறிட்டேடா நீ..." என்று பேச்சை ஆரம்பிக்கிறாள் அவள்.

"எப்படிக்கா சொல்றே?"

"என்கிட்ட டீக்கு காசு கேட்டு நிப்பே. இப்ப என்ன டான்னா உன் பாக்கெட்ல நூறுரூபாதாள் சாதார.ண மாக இருக்கு. சதா அழுது வடிவே. இப்ப உன்னை பார்க்க ராஜ குமாரனாட்டம் இருக்கே."

"எல்லாமே நல்ல மாற்றம் தானேக்கா..."

"ஆமாம் தேவா... நல்ல மாற்றம்தான். ஆனா ஒரு மனுஷனுக்கு மாற்றங்கள் எப்பவும் நிதானமா வரணும் தலைதெரிக்கிற வேகத்துல வரவே கூடாது..."

"என்னக்கா சொல்றே... நான் ரொம்ப வேகமா மாறிட்டேங்கிறியா?"

"அப்படித்தான் எனக்கு தெரியுது. ஆமாம் உன்னை நம்ம முதலாளி மக லவ் பண்றாளாமே நிஜமா...?"

"........"

"உன் மௌனமே சம்மதம்னு சொல்லுது. அதுசரி இது சரிப்பட்டு வரும்னு நினைக்கறியா?"

"சினிமால இந்த மாதிரி நடந்தா ரசிக்கிறீங்க. ஏன்க்கா வாழ்க்கைன்னா மட்டும் பயந்து இப்படி பேச றீங்க..."

"நல்லா கேட்டே தேவா. சினிமால முடிவு என் னன்னு எடுக்கிறவங்களுக்கு தெரியும். ஆனா நமக்கு நாளைய பொழுது எப்படி விடியும்னு நமக்கே தெரி யாது. அடுத்து சினிமாங்கறமே வாழ்க்கைல நிஜத்துல நடக்காததை கற்பனைலயாவது நடத்திப் பார்ப்போ மேன்னு பண்ற ஒரு விஷயம் தானே?"

அக்கா சாவித்ரி அர்த்த பூர்வமாக பேசுவதில் தேவநாதன் சற்று குழம்பினாலும் உடனேயே தெளி வடைந்தது போல் அவளை பார்க்கிறான்.

"என்ன தேவா... நான் சொல்றது உனக்கு புரிய லையா?"

"நல்லாவே புரியுதுக்கா. நாமல்லாம் அன்னக் காவடிங்க. நிஜமாலுமே பிருந்தா தங்கத்தட்டுல சாப் பிட்றவ. இருந்தாலும்கா அவளை நான் மீனாட்சி சந்நிதி யில சந்திச்சேன். அது ஒரு வித்யாசமான சந்திப்பு. எடுத்த எடுப்பிலையே ஒரு முத்தம் அதுமட்டுமில்ல அவளை கல்யாணம் பண்ணிக்கற ஆசை எனக்குள்ள இருக்கறதாலதான் பெரிய அளவுல வரணும்கற எண்ண மும் ஆசையும் எனக்கு ஏற்பட்டிருக்கு.

என்வரையில பிருந்தா ஒரு மோடிவேட்டர். ஆகை யால எங்க காதலை பாத்து நீ கவலைப்பட வேண்டாம். இது ஆரோக்கியமான ஒண்ணு.

ஒரு விஷயம்க்கா, நான் பெரிய அளவு வந்தாதான் எங்க காதலும் ஜெயிக்கும். இல்லேன்னா நான் நிச்சயம் அவளை மறந்துடுவேன், நீ கவலைப்படாதே...”

தம்பி தந்த தெளிவான விளக்கம் அவனுக்கு வரப் போகும் ஆபத்தை பற்றி நினைக்க விடாதபடி அவன் தலையை வருடிவிடச் சொல்கிறது.

தலையிலேயே அவனுக்கு ஆபத்து தொடங்கப் பார்க்கிறது இன்னோரிடத்தில்...

❑ ❑ ❑

“**எ**னக்கு தேவை ஒரு தலைமுடி... ஒரே ஒரு தலை முடி. அவனோட ஒரு தலை முடியை நீ எப்படியாவது கொண்டுகிட்டு வந்து கொடு. நான் அதை வெச்சு என்னெல்லாம் செய்யறேன்னு பார்...”

“சேகர் எதிரில் சொல்லிக் கொண்டிருக்கிறான் கொண்டயராஜ் என்னும் அந்த மந்திரவாதி. நம்பி யாருக்கு நூறு வயதான மாதிரி ஒரு தோற்றம். ‘ஜடா முடியும் புருவமுடியும் பார்க்கவே மிரட்டுகிறது. மான் தோலை இடுப்பில் துண்டுபோல் கட்டிக்கொண்டிருக் கிறான், கையில் ஒரு எலும்புத் துண்டை மந்திரக்கோல் போல் பற்றியுள்ளான்.

அவனது குருநாதர் பெத்தண்ணசாமியின் வலது கை எலும்புத்துண்டு அது. அவர் மகா சமாதி அடைய வும் ஒரு மண்டலம் கழித்து அவரது உடம்பை தோண்டி எடுத்து கை எலும்பை தன் கோலாகவும், அவரது மண்டை ஓட்டையே தன் தாயத்து பாத்திரமாகவும் ஆக்கிக் கொண்டு விட்டான். இப்பொழுது சேகர் எதிரில் ஒரு மயிர்த்துண்டு கேட்டு நிற்கிறான்.

# 23



தன் எதிரில் மயிர்த்துண்டு கேட்டு நிற்கும் கொண்டய ராஜுவை சேகர் ஒரு தினுசாக பார்க்கிறான்.

"எடுத்துக்கிட்டு வந்து தரேன் கொண்டயா... ஆனா காரியத்த கச்சதமா முடிச்சுடணும். முடிச்சிடுவியா...?"

"நீ கொண்டு வா. பிறகு பார். ஆனா ஒண்ணு அது அவ்வளவு சுலபமில்ல..."

"ஒரு தலை முடிய கொண்டுகிட்டு வர்றதா கஷ்டம். நானே நேர்ல போய் பார்த்து காரியத்த முடிச்சுட மாட்டேன்."

-கொண்டயராஜ் சேகரின் கருத்துக்கு பதில் சொல்லாமல் சிரிக்கிறான். அது 'நீ முடித்துக் கொண்டு வா பார்த்து விடலாம்' என்கிற மாதிரியும் இருக்கிறது. கொண்டயராஜ் அமர்ந்திருக்கும் அறையில் கீரிப் பிள்ளை ஒன்றும், உடும்பு ஒன்றும் கூட இருக்கிறது. அவனுக்கு பக்கத்தில் கூண்டு ஒன்றில் தேவாங்கும் அதன் பக்கவாட்டு அறைப்பகுதியில் ஆந்தை ஒன்றும் இருக்கிறது.

-சேகரின் பார்வை அவற்றை ஒரு மாதிரி பார்த்து அருவருப்படைய கொண்டய ராஜு சொல்கிறான்.

"இதெல்லாம்தான் எனக்கு உதவற ஜென்மங்க. எனக்கு நல்லது நடக்கப் போகுதுன்னாலும், கெட்டது நடக்கப் போகுதுன்னாலும் இதுங்க முன்னாடியே சொல்லிவிடும்..."

"எப்படி?"

“இந்த ஆந்தை... ஈசான்ய சுடுகாட்டு எட்டி மரத் தில இருந்து பிடிச்சுகிட்டு வந்தது. இது சாதாரணமா பகல் போதுல கத்தாது. ராத்திரிலதான் கத்தும். இது பகல்ல கத்துனா எனக்கு ஆபத்து வருதுன்னு அர்த்தம். அதே மாதிரி இந்த தேவாங்கு எப்பவும் தூங்கிகிட்டே இருக்கும். இது முழிச்சுக்கிட்டு இருந்தாலும் எனக்கு ஏதோ கெட்டது நடக்கப்போகுதுன்னு தெரிஞ்சிக்கு வேன்.

இந்த கீரி சாதாரணமா நடந்துக்கிட்டே இருக்கும். ஒரு இடத்துல உட்காராது. அப்படி இது உட்கார்ந் துட்டா எனக்கு எதிரா எங்கேயோ யாரோ எதுவோ செய்யறாங்கன்னு அர்த்தம்.

-கொண்டய ராஜுவின் விளக்கம் சேகரை திகைக்க விடுகிறது. கச்சிதமாக ஆந்தையும் அந்த பகல் போதில் ‘சர்ரக்... சர்ரக்...’ என்று கத்தத் தொடங்குகிறது.

கொண்டயராஜு முகம் உடனே மாறுகிறது,

“என்ன கொண்டயராஜு... உனக்கு ஆபத்து வரப் போகுதா என்ன?”

“ஆமா... ஆனா எப்படின்னு தெரியலியே...?” - கேட்டுக் கொண்டே கொண்டயராஜ் பக்கமாக உள்ள மண்டை ஓட்டை எடுக்கிறான். அதில் உள் கிடக்கும் விபூதியை எடுத்து நெற்றியில் பூசிக் கொள்பவன்.

“நீ போ சேகர்... போயிடு, எனக்கு எதிரா யாரோ எங்கேயோ ஏவல் செய்திருக்காங்க. அது இப்ப என்னை நோக்கி வர ஆரம்பிச்சிருக்கு. நீ போயிடு. போகலைன்னா உன்னை பிடிச்சிடும்.

“அதுகிட்ட இருந்து நான் இப்ப தப்பிக்கணும் போ... போ...”

-கொண்டயராஜு சொல்லிக் கொண்டே தன் உடைகளை கழற்றி திடீர் என்று நிர்வாணமாகிறான். சேகர் தயங்கித் தயங்கி நடந்தபடி இவற்றை திரும்பி பார்க்க அவன் கழற்றிப் போட்ட உடையை அருகில் ஏறத்தாழ அவனைப்போலவே உள்ள ஒரு வைக்கோல் பொம்மைக்கு அணிவிக்கிறான்.

அணிவித்துவிட்டு நிர்வாணத்தோடு எதிரில் உள்ள குளம் ஒன்றில் கழுத்துவரை மூழ்கி அமர்ந்து கொள் கிறான். திரும்பி பார்த்தபடி செல்லும் சேகருக்கு இதெல்லாம் மிகத் த்ரில்லான விஷயமாதலால் ஒரு மரத்தின் பின் நின்று கொண்டு நடப்பதை பார்க்கத் தொடங்குகிறான்.

அவன் பார்த்துக் கொண்டே இருக்கும்போதே அது வைக்கோற் பொம்மை, திடீர் என்று பற்றி எரிய ஆரம்பிக்கிறது. கொண்டய ராஜூவும் குளத்தில் இருந்து எழுந்து சிரித்தபடி வெளியே வருகிறான்.

சேகருக்கு கொண்டய ராஜுவின் எச்சரிக்கையை நினைத்து சிலிர்ப்பு! இதற்கு மேல் நிற்பதும் ஆபத்து என்று தோன்றவே நடக்க ஆரம்பிக்கிறான். கைலா ஷிடம் சொல்லிவிட்டு தலைமுடியை எப்படியாவது கைப்பற்ற வேண்டும்.

தீர்மானிக்கிறான்.

❑ ❑ ❑

**க**டையில் நல்ல கூட்டம். வியாபாரம் தூள் பறந்து கொண்டிருக்கிறது. அனைத்தையும் மேற்பார்வை இட்டுக்கொண்டிருக்கிறான் தேவநாதன். குளு குளு ஏசியை மீறி பொறுப்பை உத்தேசித்து நிறைய வியர்த் திருக்கிறது.

புது அனுபவம். வாடிக்கையாளர்களிடம் பேசு வதில் இருந்து பில் போடுவது வரை எல்லாம் புதிதாக இருந்தாலும் ஆர்வம் நிறைய இருப்பதால் வேலை மிகச் சீக்கிரமாக பழகி விடும் போலத் தோன்றுகிறது.

நடுவில் இண்டர்மாமில் ஒரு குரல், அழைப்பது அருணாசலம். "தேவா... கொஞ்சம் மேலே வாப்பா..."

தேவாவும் மேலே கிளம்பிச் சொல்கிறான்.

"கூப்ட்டீங்களா..."

"ஆமாம் தேவா... ஒரு முக்கியமான வேலைய உனக்கு கொடுக்கப் போறேன். நல்லபடி செய்து முடிக் கணும்..."

சொல்லுங்க சார்..."

"நேபாளம் தெரியும் தானே?"

"நல்லா தெரியும் சார்... காஷ்மீருக்கு மேல் இருக் கிற நாட்டை தானே சொல்றீங்க?"

"ஆமா தேவா... அங்கதான் விலை மதிக்கமுடியாத சாளக்கிராமங்கற கற்கள் கிடைக்குது. அது ரொம்ப மதிப்பானது கேள்விப்பட்டிருக்கியா?"

"சாளக்கிராமமா... புதுசா இருக்கே சார்..."

"ஆமாம்... பிராமணர்களுக்கு அதுலையும் வைஷ்ணவர்களுக்கு சாளக்கிராமம் பற்றி நல்லா தெரியும். பெருமாள் அதுல தங்கி இருக்கிறதா ஐதீகம்..."

"அதுக்கென்ன சார்..."

"நேபாளத்துல இந்தியா கார்னர்னு ஒரு இடம் இருக்கு. அங்க ஒரு பௌத்த சன்யாசி இருக்கார். பேரு ஷிவான்- அவர்கிட்ட நிறைய சாளக்கிராமங்கள் இருக்கு. நீ அவரைப் பார்த்து அவற்றை வாங்கிட்டுவரே..."

“நமக்கு எதுக்கு சார் அது?”

“சாளக்கிராமங்கறது நவரத்ன கல்லு மாதிரி விலை மதிக்க முடியாத கல்லுப்பா. அதோட மதிப்பே தனி. எனக்கு அதுக்கு ஒரு பத்துலட்ச ரூபா ஆர்டர் ஒண்ணு வந்திருக்கு. அதனாலதான் உன்னை அனுப்பறேன்...”

“அப்படின்னா இப்பவே கூட கிளம்பறேன் சார்...”

“நல்லது... போறதுக்கு முந்தி நம்ம பசுபதிநாத சாமியையும் ஒரு பார்வை பார்த்து போப்பா...”

அருணாசலம், பசுபதி நாதசாமி பற்றி சொல்லவும் அவரை தான் இன்னமும் போய் பார்க்காதது அவனுக்கு உறைக்கிறது.

“நானே போய் பார்க்கணும்னு இருந்தேன் சார்... வேலை மும்முரத்துல மறந்துட்டேன்.” என்கிறான்.

“சரிப்பா... போய் பார்த்துட்டுவா டிராவல் ஏஜென்சிக்கு சொல்லியிருக்கேன். டிக்கெட் வந்துரும். மதுரை, பாம்பே, பாம்பே வாரணாசி, வாரணாசி நேபாள்ன்னு மூணு இடத்துல இறங்கி ஏறணும் சாமியை பார்த்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வா... சீக்கிரம் கிளம்பு.”

தேவநாதன் வேகப்பட்டு கீழே இறங்கி வருகிறான். கடையில் நகை வாங்க வந்த ஒருவனாக சேகர்!

## 24



**தே**வாவும் சேகரை பார்க்கிறான். எங்கேயோ பார்த்த ஞாபகத்தை அசை போடுகிறான். நெருங்கியும் சென்று “நீங்க...” என்கிறான்.

"என்ன சார் அதுக்குள்ள மறந்துட்டீங்களா நான் தான் சார் கைலாஷ் சார் பி.ஏ. சேகர்..."

"ஆங்... அன்னிக்கு என்னை அவர்கிட்ட கூட்டிகிட்டு போனீங்கல்ல..."

"ஆமா சார் எங்க இங்க?"

"நான் இங்கதான் வேலைல இருக்கேன்..."

"இங்கையா... என்ன ஆச்சரியம்? அப்பா மில்லுல மகன் நகைக் கடையிலேயா?"

"கூடாதா?"

"நோ நோ... உழைக்கணும் பிழைக்கணும்... அவ் வளவுதான். அது எந்த தொழிலா இருந்தா என்ன?"

"சரி உங்களுக்கு என்ன வேணும்?"

"எனக்கு... எனக்கு ஒரு ஆனைமுடி மோதிரம் வேணும்."

"ஆனைமுடி மோதிரமா..."

"ஆமாம் சார்... கேள்விப்பட்டதில்லையா? ரொம்ப விசேஷம் அது. அத போட்டுக்கிட்டா தோஷம் தாக்காது..."

"இது என்ன புதுசா இருக்கு...?"

"புதுசா இல்ல சார்... கால காலமா இருக்கு, மகா பாரதத்துல ஏகலைவன் இதை போட்டுக்கிட்டு எவ்வளவு வெற்றிகளை அடைஞ்சிருக்கான் தெரியுமா?"

"ஈஸ் இட்... இருங்க கேக்கறேன், மிஸ்டர் நாகராஜ்"

தேவா கடையின் சர்வீஸ்மேனை அழைக்கிறான்.

"யெஸ் சார்..."

"நம்மகிட்ட ஆனைமுடி மோதிரம் இருக்கா!"

"இல்ல சார் பட் அளவு கொடுத்து முடியையும் கொடுத்தா செய்து தரலாம்..."

"அது போதுமே தேவா... நான் முடியை கொண்டு கிட்டு வந்துருக்கேன். இதோ..." சேகர் முடியை ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் வைத்து காட்டுகிறான்.

'தயாராத்தான் வந்திருக்கீங்க போல..."

"ஆமாம் தேவா... எங்கேயும் இதுதான் வழக்கம், போகட்டும் உங்களுக்கு ஒரு முடி வேணுமா?"

"எனக்கா... சேச்சே... இப்பதான் ரசமணி பத்தியே எனக்கு தெரிய வந்தது... அதுக்குள்ள ஆனை முடின்னா?"

"நோ தேவா... நீங்க ஒண்ணு வாங்கிக்குங்க. சும்மா வெச்சுப்பாருங்க. உங்க காரியம்லாம் சக்ஸஸ் ஆகும். ஒன்மினிட்."

-சேகர் நைச்சியமாக பேசிக் கொண்டே அவன் தலை முடியில் கை வைக்கிறான்.

"எதுக்கு சார்... தலைமுடிய பிய்க்கிறீங்க?"

"அது ஒண்ணுமில்ல தேவா... உங்க தலை முடி யளவு தான் ஆனைமுடி இருக்கணும். அதுக்கு அளவு பாக்கத்தான் பிடுங்கினேன்..."

-கச்சிதமாக தான்வந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்கிறான் சேகர். தன் காரியம் முடிந்ததன் அடையாளமாக ஏளனமாக சிரித்து ஒரு ஆனை முடியையும் தந்துவிட்டு நைஸாக நழுவுகிறான்.

இது எதில் போய் முடியப் போகிறதோ?

❑ ❑ ❑

முதல் முதலா விமான பயணம்.

மதுரை விமான நிலையம் வரையிலும் கூட அருணாசலத்தின் கார்தான். கைவசம் ஒரு பிரிஃப்கேஸ். அது நிறைய கட்டுக் கட்டாக பணம் ட்ரிம் செய்தது போல புதிய உடை. தேவநாதனின் நடையிலே அன்னம் கொஞ்சுகிறது.

ஆகாயத்தில் வெட்டுக்கிளி போல பார்த்த விமானம் ஏறி இன்று தான் பயணம் செய்ய இருப்பதை நினைத்துப் பார்க்கவே பரவசமாக இருக்கிறது. அதை விட பரவசமானது பசுபதிநாதனை பார்த்த அந்த அனுபவம்தான்.

அவர் சொன்னது போலவே அழகர் கோயில் போய் அவரை தேடி மேலே நூபுர கங்கை வரை போன தில வழியிலேயே ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டு "தேவா" என்று அழைத்து அவனை தேடி அலைய விடாது பார்த்துக்கொண்டார். அவன் நன்றிகூறி காலில் விழவும் எழுப்பி, கட்டி அணைத்துக் கொண்டார்.

"சாமி உங்களாலதான் இவ்வளவு தூரம் வந் திருக்கேன் ஆசீர்வாதம் செய்யுங்க..."

"என்னால இல்லப்பா... அந்த மீனாட்சியால..."

"அந்த மீனாட்சி தானே எனக்கு உங்களைக் காட் டுனா"

"நல்லது... அந்த பிருந்தா பொண்ணை காப் பாத்திட்டியா..."

"காப்பாத்தி அவங்க அப்பாகிட்ட சேர்த் துட்டேன். அவர் சம்மதம் இல்லாம வாழ்க்கைலயும் ஒரு நல்ல நிலைக்குவராம உங்கபொண்ணை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னும் சொல்லிட்டு வந்துட்டேன்."

"ரொம்ப நல்ல முடிவு இப்ப எங்க கிளம்பிட்டே நேபாளத்துக்கா?"

"சாமி...உங்களுக்கெப்படி...."

"இப்படி ஒரு கேள்விய இனி என்னை பார்த்து கேக்காதே எனக்கு தெரியாதது எதுவுமே இல்லை. ஆமா... தலை முடிய எவனாவது பிடுங்கினானா?"

"சாமி... இதுவும் எப்படி?"

"பாத்தியா... திரும்ப அதே கேள்வி கேக்கறியே... போகட்டும் இனி யாரையும் தலை முடிய தொட விடாதே கை நகத்தைகூட வெட்டினா புதைச்சுடு தூக்கி எறியாதே என்ன?"

"என்ன சாமி என்னென்னமோ சொல்றீங்க?"

"மந்திர சாஸ்த்ரத்துல செய்வினைல சொல்லி யிருக்கற எச்சரிக்கைகளை உனக்கு சொல்றேன். அவ்வளவு தான். அதேபோலதான் உன் வியர்வை படிஞ்ச துணிகளும் அதையும் யாருக்கும் கொடுக்காதே..."

"எதுக்கு இதை எல்லாம் சொல்றீங்க...."

"காரணமாத்தான். உனக்கு செய்வினை செய்ய பார்த்திருக்கான் அந்த மில் முதலாளி...."

"செய்வினையா?"

"அதிராதே...அது அவனுக்கே எதிராக திரும்பப் போகுது பார். இப்போதைக்கு உன் இன்னொரு முடியை தா..."

அவர் கேட்டு வாங்கிக் கொள்கிறார். "போய் வா..." என்று உச்சி மோந்து அனுப்பி வைக்கிறார்.

நினைக்க நினைக்க எல்லாமே ஆச்சரியமாய் இருக் கிறது. நினைத்துக்கொண்டே விமானத்தில் ஏறி அமருகிறான். தலையை கோதி விட்டுக் கொள்ளும் போது தலைமுடி நினைவுதான்.

அதை அவர் என்ன செய்யப் போகிறார்?

# 25



பசுபதிநாதன் தேவாவின் ஒற்றைமுடியையே உற்று பார்த்துக் கொண்டிருக்கிறார். பின் ஒரு வெற்றிலை எடுத்து அதில் மை தடவி அதன்மேல் அந்த முடியை ஒட்டவைக்கிறார்.

பின்னர் அந்த வெற்றிலையை மடக்கி எடுத்துக் கொண்டு மயானம் நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார்.

மயானத்தில்...

ஓடி வருகிறான் மாசாணம்.

"கும்பிட்றேன் சாமி... அந்த ஆணிங்களை எடுத்து வெச்சிருக்கேன்" - என்றான்.

"நல்லது...இப்ப எதாவது பிணத்தை புதைச்சிருக் காங்களா?" -கேட்கிறார்.

"ஆமாம் சாமி. அதோ..."- மாசாணம் ஒரு புது சமாதியை காட்டுகிறான்."

"ஏகாந்தம் அந்த சமாதியை தோண்டி பிணத்தை காட்டேன்."

"எதுக்கு சாமி?"

"சொன்னதை செய் மாசாணம்."

-மாசாணம் மறுபேச்சு பேசாமல் அந்த சமாதியை தோண்ட ஆரம்பிக்கிறான்.

ஆறு அடி ஆழத்தில் போட்டு புதைத்த பிணம் திரும்ப தோண்டுவதற்குள் உடம்பைப் பிரட்டுகிறது வலி.

ஒருவாறாக தோண்டி முடித்து பிணத்தின் முகத்தை பார்க்கிறான் மாசாணம். அப்படியே திரும்பி "சாமி... பிணத்தோட முகம் தெரியுது. போதுமா இல்லை தோண்டி வெளியே எடுத்துப்போடவா?" பசுபதி நெருங்கி வந்து பார்க்கிறார். 80 வயது கிழவியின் முகம்! மண் திப்பிகளோடு மிரட்டுகிறது.

"இருக்கட்டும் மாசாணம்" என்னும் பசுபதிநாதன். கைவசம் சுருட்டிவைத்திருக்கும் அந்த வெற்றிலையை எடுக்கிறார். எடுத்து மாசாணம் முன் நீட்டி

"மாசாணம் இதை அந்த பொணத்து வாயைத் திறந்து உள்ள தள்ளிடு..."

"என்ன சாமி இது...செத்த பொணத்துக்கு போய் தாம்பூலம்..."

"ஆமாம் தாம்பூலம்தான். நீ போடு சொல்றேன்."

-மாசாணம் கஷ்டப்பட்டு கிழவி பிணத்தின் வாயைப் பிளந்து திறந்து உள்ளே பார்க்கிறான். ஏகமாய் வாய்க் கரிசி நிரம்பியிருக்கிறது.

"சாமி வாய்க்கரிசி இருக்குதே..."

"அதை வெளியே எடுத்துட்டு இதை உள்ளே வெச்சு மூடிடு..."

அவன் அவ்வாறே செய்கிறான். அவர் புன்னகை யுடன் திரும்பி நடக்க ஆரம்பிக்கிறார். அதே சமயம்...

❑ ❑ ❑

**கொ**ண்டைய ராஜின் முன் நின்று கொண்டிருக் கிறான் சேகர்.

"இந்தா கொண்டையா நீ கேட்ட அந்த பையனோட முடி" நீட்டுகிறான்.

"சபாஷ்..." தன் முரட்டுக்கரம் நீட்டி அதை வாங்கும் கொண்டையராஜு அந்த முடியையே ஒரு சில வினாடி உற்றுப் பார்க்கிறான்.

பார்க்கும் அவன் முகம் கசங்குகிறது.

"சேகர் ... இது யாரோட முடி....." கத்துகிறான்.

"அந்த தேவநாதனோடதுதான் கொண்டையா..."

"இல்ல...இது ஒரு சவத்தோட முடி, கிழட்டுப் பெண் சவத்தோட முடி..."

"உளறாதே....நான் என் கையால பிடுங்கி எடுத்துக் கிட்டு வந்தேன்."

"இல்லையே... இந்த முடியை நான் மூன்றாம் கண் வெச்சு பாக்கும்போது கிழட்டு சவம்தானே தெரியுது."

"எனக்கு அதெல்லாம் தெரியாது. முடியை கேட்டே கொண்டு வந்துட்டேன்."

"நல்லா கேட்டுக்கோ...இதை நான் என் குட்டி சாத்தான் கிட்ட தந்து இந்த முடிக்கு உரியவனை பிடிச்சு உலுக்குன்னு சொல்லப் போறேன். அதுவும் முடிக்கு உரியவனைப் தேடிப் போகும். பிடிச்சு உலுக்கும் முடிக்கு உரியவன் உயிரோடு இல்லைன்னா சாத்தான் கோபிக்கும் கொண்டு வந்த உன்னைத்தான் தாக்கும் உனக்கு எது வேணும்னாலும் ஆகும்..."

"அட என்ன கொண்டையா... நான் நேர்ல போய் பறிச்சிட்டு வந்துக்கேன். நீ புரியாம என்னென்னமோ சொல்றியே..."

-சேகர் திரும்பத் திரும்ப தன் தரப்பை வலியுறுத்த கொண்டைய ராஜு அந்த தலைமுடியை தன் விரல்களால் நீவிப் பிடிக்கிறான். பின் கண்கள் இருள ஜெபிக்கத் தொடங்குகிறான்.

கைவசம் உள்ள முடி ஒரு கட்டத்தில் யாரோ தீயிட்டதுபோல அப்படியே கருகுகிறது.

"சரி நீபோ. இனி சாத்தான் எல்லாம் பாத்துக்கும். நீ வேணா பாரு. அந்த பையன் பைத்தியம் பிடிச்சு சட்டையை பிய்ச்சுக்கிட்டு அலையப் போறதை..."

"அதைச் செய். அவனை அந்த கோலத்துல பார்த்துட்டு உன்கிட்ட வரேன்."

"இப்ப முதல்ல பணத்தை கொடு..."

"எவ்வளவு?"

"பத்தாயிரம் ..."

ரூபாய் கை மாறுகிறது. சேகரும் மார்பை நிமிர்த்திக் கொண்டு வெளியே வருகிறான்.வெளியே ஸ்கூட்டர் நின்று கொண்டிருக்கிறது. போய் கிளப்பிக் கொண்டு நேராக அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ் கடைக்கு போகவேண்டும். போய்ப் பார்த்தால் தெரிந்து விடும். அங்கு அனேகமாக இந்நேரமெல்லாம் தேவ நாதன் சட்டையை பிய்த்துக் கொள்ள தொடங்கி யிருப்பான்.

நினைத்துக் கொண்டேட் ஸ்கூட்டரை உதைத்து கிளப்புகிறான். நல்லவேகம். ஸ்கூட்டர் அடுத்து அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ் முன் நிற்கிறது. வேகமாக இறங்கி உள்ளே செல்ல முனைபவனை ஏதோ ஒன்று தாக்கின மாதிரி இருக்கிறது. முகம் கோணிப் போக உடம்பு நெளிகிறது.

ஐய்யய்யோ...என்னாயிற்று?

கொண்டைய ராஜு சொன்னதுபோல திரும்பி விட்டதா?

ஆமாம் என்கிற மாதிரி சேகர் ஓட ஆரம்பிக்கிறான் சட்டையை கிழித்துக் கொண்டு...

# 26



**பா**ர்க்க பளிச்சென்று இருக்கும் ஒருவன் இப்படி நடுத்தெருவில் சட்டையை கிழித்துக்கொண்டு காட்டுக் கூச்சல் எழுப்பிக் கொண்டு ஓடினால் பார்ப்பவர்களுக்கு எப்படி இருக்கும்?

கடைத்தெருவே இதை வேடிக்கை பார்க்கிறது. தன்வினை தன்னைச்சுடும் என்பது இதுதானோ? சேகரின் ஓட்டத்தை மகாதேவி மில்லில் பணியாற்றும் ஒருவன் பார்த்துவிடுகிறான்.

“இதென்ன இந்தாளு இப்படி பைத்யமா அலைய றான். அடுத்தவங்களை அலையவிட்டுதானே பழக்கம் இவனுக்கு...?”

கேள்வியோடு தாடையை வருடும் அவன் மூலமாக விஷயம் மில்லின் பர்சனல் டிபார்ட்மெண்ட்டிற்கு போய் அங்கிருந்து கைலாஷ் காது வரைக்கும் போகிறது.

கைலாஷ் இடிந்து போகிறார். சேகர் எப்படி பைத்தியமானான்? புரியாமல் ஆச்சரியப்புயலில் சிக்கு கிறார். சேகரைப்பிடித்து பைத்தியக்கார ஆஸ்பத்திரி யிலும் சேர்க்க ஏற்பாடு செய்கிறார்.

❑ ❑ ❑

நேபாளம்.

இயற்கையின் ராஜநடனம் நடைபெறும் பூமி. திரும்பின பக்கம் எல்லாம் பசுமை. வானுக்கு ஒட்டடை அடிக்கும் மரங்கள். இந்திய மண்ணில் இல்லாத மலைப் பறவைகள்; அதன் கூக்குரல்கள்!

புதிய உலகுக்கு வந்து விட்ட பரவசத்தோடு ஏர் போர்ட்டில் கால்வைக்கிறான் தேவநாதன். நேபாளம் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறான். கூர்க்காக்களின் பூர்வ புண்ணிய பூமி அது. இன்றும் இந்து மதச் சின்னங்களும், கோயில்களும் பவித்ரமாய் காக்கப் படுகிறது என்பதோடு மந்திர தந்திரங்களுக்கும் பேர் போன கிராமங்கள் நேபாளத்தில் மிகுதி. அதிலும் மந்திர தந்திரத்தை மட்டுமே தொழிலாய் கொண்டது ஷிபோகா என்கிற கிராமம். இந்த கிராமத்தில் ஒரு பிறந்த குழந்தை கூட ஏதாவது ஒருமேஜிக்கை செய்துகாட்டும். தென்னை மரம் ஏறாமலே தேங்காய் பறிப்பதில் இருந்து, ஆளில்லாமலே சைக்கிளை ஓட்ட வைத்துப்பார்ப்பது வரை எல்லாவித்தைகளும் செய்யும்.

பெரிய நிலப்பரப்போ விவசாயம் செய்திட ஏற்ற சமதளப்பரப்போ அவ்வளவாக இல்லாததால் சுற்றுலாப் பயணிகளின் வருகையும், அவர்கள் செல வழிப்பதுமே பணப் புழக்கத்திற்கு அடித்தளம். அழகிய மண், ஆனால் அங்கு வாழும் மக்களுக்கு பிழைப்புகளை உருவாக்கி தராத மண். இதனால் விபசாரமும் அதிகம்.

ஏர்போர்ட்டில் இறங்கி நடக்கும் தேவநாதன் இப்படி தனக்கு தெரிந்த நேபாள செய்திகளை அசை போட்டபடியே நடக்கிறான். ஏர்போர்ட்டுக்கு வெளியே டாக்ஸி டிரைவர்களின் முற்றுகைப் போராட்டம்.

தலையில் குல்லாவும் சப்பை மூக்குமாய் வரு பவர்களை வளைத்துப்பிடிக்க அவர்கள் கொலைகூட செய்வார்கள் போல் உள்ளது. ஒரு வயதான டாக்சி டிரைவரை பார்த்து பரிதாபப்பட்டு அவரது டாக்சியில் ஏறுகிறான் தேவநாதன். சைகை பாஷைதான். அவன் பேசும் பாஷை புரியவில்லை. அவனுக்கு ஆங்கிலமும் தெரியவில்லை.

"இந்தியா கார்னர் போ..."என்று சொன்னதை வைத்து காரை கிளப்புகிறான் அவன். அவன் முகத்தில் கண்ணிரண்டும் எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. அத்தனை பூசிமெழுகிய முகம். வயதான கிழவனாக இருந்தாலும் கார் ஓட்டுவதில் சூரனாக இருக்கிறான்.

நேபாளப்பாதைகளும் ஓரளவு சர்வதேச தரத்துடன் இருப்பதால் கார் சிட்டாக பறக்கிறது. தேவா வெளியே பார்வையிட்டு ரசித்தபடி வருகிறான்.

நல்ல குளிர்... பனி மூட்டம் இன்னும் விலகியிருக்கவில்லை; கார் பனிமூட்டத்தை குடைந்து பறக்கிறது. இந்தியா கார்னரில் ஓட்டல் சித்தார்த்தா முன் தேய்ந்து நிற்கிறது.

சித்தார்த்தா பற்றி அருணாசலமும் நிறைய சொன்னது நினைவுக்கு வருகிறது. "அங்கு போய் ரூம் போட்டுரு...நான் தரப்போற நம்பருக்கு போன் பண்ணி நீ வந்துட்டதை சொல். உன் ரூமுக்கே ஷிவானு வருவான். ஜாக்ரதையா வியாபாரம் செய்யணும். போலி சாளக்கிராமங்களும் நிறைய உண்டு. கிளிஞ்சலை அரைச்சு மெருகாக்கி அதைக்கொண்டு சாளக்கிராமம் மாதிரியே செய்து வித்துடுவாங்க...

கருநீலக்கற்களையும் சாளக்கிராமம்னு சொல்லி வித்துடுவாங்க... பார்த்து வாங்கணும். எந்த நிலையிலும் பயந்துடக்கூடாது. ஜாக்ரதை..."

அருணாசலம் நிறையவே சொல்லி அனுப்பியிருக்கிறார். எச்சரிக்கையோடு நடக்கிறான்.

ரூம்போட்டு கதவை திறந்துகொண்டு உள் நுழைகிறான். சொர்க்கலோகமாக இருக்கிறது அறை; ஒரு நாள் வாடகை ஆயிரத்தைந்நூறு ரூபாய் 'கொள்ளை... கொள்ளை' என்கிறது மனது.

மனிதன் ஒரு கட்டம் வரையில் நூறு ரூபாய் வாடகை கூட கொடுக்கமுடியாத அவஸ்தையில் இருக்கிறான். மறுமுனையிலோ இப்படி ஆயிரக்கணக்கில். எவ்வளவு வித்யாசம்?''

கம்யூனிச சிந்தனை குறுக்கிடுகிறது. சமத்துவமாக ஏன் எங்கும் மனிதனால் போக முடிவதில்லை...? புதிய சிந்தனைகளும் கேள்விகளுமாக வந்த களைப்பு தீர குளிக்கத் தயாராகிறான்.

ஸ்டார் ஓட்டலின் நவீனக் குழாயைத் திறப்பதில்கூட அவனை குழப்புகிறது எந்த பக்கம் திருப்புவது என்றே பிடிபடவில்லை. அப்படியும் இப்படியும் அசைத்துப் பார்த்துவிட்டு எதார்த்தமாய் மேலே உயர்த்த தண்ணீர் துள்ளி வந்து விழுகிறது.

சரிதான்.

என்ன பெரிய பட்டம் படித்துவிட்டோம், குழாயை திறக்கத் தெரியவில்லையே...' அவன் மனதே அவனை கேலி செய்கிறது.

வெண்ணீர் சுகமாக பாய்கிறது. பாத்டப்பை நிரம்பி வழியவிட்டு இறங்கிப்படுத்து ஆனந்தமாய் குளிக்கிறான். உலகை, தன்னை மறந்த வேளை திடும்மென்று எங்கோ யாரோ முனங்கும் சப்தம் காதில் கசிய ஆரம்பிக்கிறது.

எங்கு...?

யார்? தேவா கூர்மையாகிறான். ஈர உடலுடன் எழுந்து இடுப்பு டவலோடு சப்தம் வரும் திசையை உணர்ந்து கூர்மையாக ஒவ்வொரு அடியையும் போட்டு பாத்ரூம் சுவரை நெருங்கியபோது சுவரில் ஒரு மர அலமாரி. அது மூடப்பட்டிருக்கிறது அதில் இருந்துதான் சப்தம் வந்து கொண்டிருக்கிறது.

தேவாவுக்கு வியர்த்துக் கொட்டுகிறது.

அருணாசலம் நேபாளம் பற்றி நெகடிவாக சொன்னதெல்லாம் எட்டிப்பார்க்கிறது.

"யாருன்னு கேட்டேன்..."

திரும்ப அதட்டல் ஊஹூம்...சுத்தமாக சப்தமில்லை.

"I want to know who is inside" ஆங்கிலத்தில் கத்திப் பார்க்கிறான். மெல்ல அலமாரிக்கதவு திறக்கிறது. உள்ளே...

# 27



உள்ளே முழுநிர்வாணமாய் ஒரு பெண்! அச்சாலடித்த பதுமையாக இருக்கிறாள். துளிகூட வெட்கமின்றி தேவாவை பார்க்கிறாள். மிகச் சோர்ந்து காற்றின்றி அடைபட்டு கிடக்கும் அவஸ்தையோடு இருந்ததை பார்த்த உடனேயே உணர முடிகிறது.

மேனிமேல் பருவம் கொழித்து வளர்ந்திருக்கிறது. சோர்வோடு கைகூப்பி "நமஸ்தே!" என்கிறாள். தேவாவால் வைத்த விழியை எடுக்க முடியவில்லை.

"Who are you..." தட்டுத் தடுமாறியபடி கேட்கிறான். அவள் அவனுக்கு பதில் சொல்லுமுன் பக்கமாய் ஹேங்கரில் தொங்கும் டவலை இழுத்து தன் உடம்பை மூடிக்கொள்கிறாள்.

நல்ல நீளக் கூந்தல். சற்று சப்பையான மூக்குதான். ஆனாலும் மனீஷாகொய்ராலா வட்டமுகத்தில் அத்தனை பழுதாக தெரியவில்லை.

தேவா முதல் காரியமாக பாத்ரூமை விட்டு வெளியே வருகிறான்.அவளும் அவனோடு வருகிறாள். அவன் இன்டர்காமை எடுத்து ஹோட்டல் ரிசப்ஷனோடு தொடர்பு கொள்ள முயல்கிறான். அவள் பட்டனை அழுத்தித் தடுத்தபடி அவனை பார்க்கிறாள். மெல்லிய குரலில் “ப்ளீஸ் ஹெல்ப் மீ...ஐ ஆம் நாட் டிஸ்டர்பிங் யூ” என்கிறாள். சொன்னதோடு நில்லாமல் பக்கத்தில் கண்ணாடி ஜாடியில் உள்ள மினரல் வாட்டரை ஒரே மூச்சில் குடிக்க ஆரம்பிக்கிறாள். நடுவில் டவல் நழுவி கீழே விழுகிறது. சாவதானமாக எடுத்துக் கட்டிக்கொள்கிறாள். மெல்ல நடந்து பக்கத்து படுக்கையில் அமர்ந்து தேவாவையும் அமரச் சொல்கிறள். மிக மிருதுவான குரலில் பேச ஆரம்பிக்கிறாள்.

“ஐ ஆம் தத்தா, பிராஸ்டிடியூஷன் ஈஸ் மை பிசினஸ்” சற்று இடைவெளி விட்டு பெருமூச்சு விடுகிறாள். “ஹூ ஆர்.யூ... யுவர் நேம்...என்று அரைகுறை ஆங்கிலம் கடிக்கிறாள்.

“யூ டர்ட்டி பிட்ச்...இம்மீடியட்லி கெட் அவே ஃபரம் ஹியர்...” -தேவா பாய்ந்து எழுகிறான். அவள் முகம் உடனே சூம்பிப் போகிறது.

“நோ...ஐ வோன்ட்கோ . சர்தார் பீப்பிள்ஸ் வான்ட் டூ கில் மீ....ஐ வோன்ட் கோ....”

-அவள் சொன்னதில் அதிர்ச்சி பரவுகிறது அவனிடம். ‘சர்தார் என்பவன் ஆட்கள் இவளை கொல்ல அலைகிறார்களா?” அதிர்ச்சி குறையாமல் பார்ப்பவன் எதிரில் அவள் கை கூப்புகிறாள். லேசாக கண் கலங்கவும் செய்கிறாள்.

“ப்ளீஸ் ஹெல்ப் மீ...” -என்று சடாரென காலிலும் விழுகிறாள். அவன் அவளை நிமிர்த்தி நிறுத்துகிறான்.

அவள் முகத்தையே ஊன்றிப் பார்க்கிறான். அது பொய் சொல்லும் முகமாக, நடிக்கும் முகமாக தெரியவில்லை. பாதி குளித்த உடம்பு முழுவதுமாய் காய்ந்து விட்டிருக்கிறது அப்பொழுதுதான் உறைக்கிறது. அதுவரை ஜட்டியுடன் அவளிடம் நின்று பேசிக்கொண் டிருப்பதே...கூச்சமாகிப் போகிறது. மளமளவென்று சூட்கேஸைத் திறந்து லுங்கி ஒன்றை வெளியே எடுத்து அணிந்துகொள்கிறான். திரும்ப அவளைப் பார்க்கிறான்.

'சரி... இனி அடுத்து என்ன செய்வது?' -குழப்பம் வந்து கூடு கட்டப் பார்க்கிறது.

"நீ தமிழ்நாடா....?"-அவள் தமிழில் கேட்கிறாள். அவனுக்கு ஆச்சரியமாகிறது.

"அடிப்பாவி...உனக்கு தமிழ் தெரியுமா?"

"தமிழ் மட்டுமில்ல... தெலுங்கு, மலையாளம் எல்லாம் தெரியும். ஆனா கொஞ்சம் கொஞ்சம்...."

"இதுவா கொஞ்சம் பின்னறையே... ஆமா எப்படி இந்த ரூம் அலமாரிக்குள்ள வந்தே...?"

"சர்தார்னு இங்கு ஒரு மாமாக்காரன் இருக்கான். உன்னை மாதிரி வர்றவங்களுக்கு என்ன மாதிரி பொம்பளங்கள சப்ளை பண்றதுதான் அவன் வேலை அப்படி சப்ளை பண்ணும்போது ரூம்ல இருக்கற சாமானையெல்லாம் அடிச்சுகிட்டு போய் அவன்கிட்ட கொடுத்துடணும் இது எனக்கு பிடிக்கலை. நான் திருடி அவன்கிட்ட எதுக்கு தரணும்? அதுக்கு நானே வெச்சுக்கலாமே..."

"சரி விஷயத்தை முடி... இந்த ரூமுக்குள்ளே எப்படி வந்தே?"

"ஆந்திராவுல இருந்து ஒரு ஆள் வந்துருந்தான். அவன்கிட்ட இருந்து திருடிக்கிட்டு வரச்சொல்லி என்னை அனுப்பினான். நான் அதை அந்த ஆந்திராக் காரன்கிட்ட சொல்லி நீ இங்க இருந்து போயிடுன்னு சொன்னேன். அவனும் உடனே ரூமை காலி பண்ணிட் டான். இது எப்படியோ சர்தாருக்கு தெரிஞ்சு போய் என்ன கட்டிவெச்சு அடிச்சான். 'டிரெஸ்ஸை எல்லாம் பிடுங்கிகிட்டு இப்படி நியூட் பண்ணிட்டான். நான் எங்கேயும் போய் யார் கிட்டையும் எதையும் சொல்லக் கூடாதுன்னு இப்படி ஒரு ஏற்பாடு.

இந்த நிலையிலேயே நான் அந்த ரூம்ல இருந்து தப்பிச்சு நீ கதவை திறக்கும்போது பாத்துருந்து உள்ள நுழைஞ்சிட்டேன். இந்த அலமாரியிலையும் ஒளிஞ்சு கிட்டேன். இருந்தாலும் மூச்சு விடமுடியல...நீ கண்டு பிடிச்சுட்டே..."

அவள் நீண்ட விளக்கம் தந்துவிட்டு அடுத்து அவன் என்ன சொல்லப்போகிறான் என்று மலங்க மலங்கப் பார்க்கிறாள்.

"சரி போலீசுக்கு போன் பண்ணி சொல்லட்டுமா?"

"ஐயோ வேண்டாம்..."பாய்ந்து தடுக்கிறாள்.

"ஏன்?"

"அவங்க சர்தார் ஆளுங்க. அவன் கிட்ட சொல்லிடுவாங்க..."

"பின்ன என்னதான் பண்ணட்டும். நீ இங்க என்கூட இருக்கிறது ஆபத்து. என்ன சந்தேகப்படுவாங்க..."

"ப்ளீஸ் எப்படியாவது என்ன இந்த நேபாள் விட்டே வெளியே கூட்டி கிட்டு போயிடு...நீ என்ன சொன்னாலும் கேக்கிறேன்."

“அம்மா தாயே...நானே வேற ஒருத்தர் அனுப்பி வந்துருக்கேன். குடிக்கற காபிக்கு கூட கணக்கு எழுதிக் கொடுக்கணும் நான். உனக்கு எப்படி உதவ முடியும்?”

“ப்ளீஸ் எப்படியாவது உதவு...எனக்கு இந்த தொழிலே பிடிக்கலை, நான் உன்கூட வந்துடறேன். உனக்கு வேலை கொடுத்த முதலாளிகிட்டயே எனக்கும் ஒரு வேலை கேட்கறேன். சாப்பாடு போட்டா போதும் சம்பளம்கூட வேண்டாம். இந்தத் தொழிலை நான் விட்டா போதும்....”

அவள் கெஞ்சிக் கதறுகிறாள். அது அவனை என்னவோ செய்கிறது.

“சரி... இப்போதைக்கு இரு. நான் யோசிச்சு சொல்றேன்.” என்பவன் கையை பிசைந்து கொள்கிறான். அடுத்து என்ன செய்வது என்பது பிடிபடாத குழப்பம் அவனை வதைக்க ஆரம்பிக்கிறது.

வருவது வரட்டும்...ஒரு விபசாரியை காப்பாற்றுவது தான் நல்லது...’ துணிகிறான். மளமளவென்று அடுத்து கட்டத்திற்கு செல்கிறான் அருணாசலம் சொன்ன எண்ணிற்கு தொடர்பு கொள்ள முயல்கிறான்.

அதை அவள் பார்த்துவிட்டு கேட்கிறாள்.

“யார் கூட பேசப் போறீங்க...?”

“ஷிவான்...நவரத்ன கற்கள் விக்கற வியாபாரியாமே அவர் கூடதான்...”

அவள் முகம் உடனே மாறுகிறது.

“ஷிவான் இப்போ உயிரோட இல்லையே.... அவரை கொன்னுட்டாங்களே?” என்கிறாள்.

அதிர்கிறான் தேவா.

# 28

**த**த்தா, ஷிவான் இறந்து விட்டதாக சொன்னது கேட்டு அவளை அதிர்ச்சியுடன் பார்க்கிறான் தேவா.

"உனக்கு எப்படி தெரியும்?"

"நேபாள் என்ன பெரிய சாம்ராஜ்யமா என்ன...? ஷிவான் பத்தி மட்டுமல்ல. இந்த ஊர் வி.ஐ.பிங்க பல பேர் பத்தியும் எனக்கு தெரியும்."

"நீ சொல்றது நிஜமா?"

"உனக்கு நம்பிக்கை இல்லைன்னா நேற்றைய நேபாள பேப்பர் வாங்கி பார்த்துட்டு சொல்லு..."

"சரி அவரை எதுக்கு கொலை செய்தாங்க?"

"அவர் இந்த ஊர்ல பெரிய வியாபாரி. ரவுடிங்க அவர் கிட்ட பணம் கேட்டு கிட்டே இருப்பாங்க. அந்த தகராறுலதான் அப்படி ஆயிடிச்சு, அவரை கொன்ன தோட மட்டுமில்லை, அவர் வெச்சிருந்த மாணிக்க கற்கள், டைமண்ட்ஸ் எல்லாத்தையும்கூட திருடிக்கிட்டு போயிட்டாங்க..."

"மை குட்நஸ்... இப்ப நான் என்ன பண்றது?"

"நான் வேற ஒரு வியாபாரிய காட்டுறேன். வாங்க றையா?"

"யார் அது... ரொம்ப நல்ல மனுஷன், ஷிவான் இருந்தவரை அவரை தலை எடுக்கவேவிடலை. இப்ப ஷிவான் இல்லை. பிரச்சினையும் இல்லை."

தத்தாவின் பேச்சும் விளக்கமும் ஒரு புதிர்போல இருக்கிறது. தேவாவுச்கு புதிய இடம்-புதிய முகம்-புதிய செய்திகள்...என்ன செய்யலாம்? எஸ்.டி.டி. போட்டு அருணாசலத்திடம் பேசிவிடுவதுதான் சரி....

அறையில் இருந்தபடியே அதற்கான முயற்சியில் இறங்குகிறான். மறுமுனையில் அருணாசலம் அகப்படு கிறார்...

"என்ன தேவா...?

"சார் நல்லபடி வந்து சேர்ந்தேன். ஆனால் ஷிவான் உயிரோட இல்லை. அவரை கொன்னுட்டாங்களாம்...."

"ஐய்யய்யோ... என்ன பண்ணப்போற?"

"நீங்க சொல்லுங்க. என்ன பண்ணட்டும்?"

வேற யார் கிட்டேயாவது வாங்கிட்டு வரட்டுமா?"

"லட்சக்கணக்கான ரூபா வியாபாரம் தேவா. தப்பு நடந்துடக்கூடாது. பார்த்து நடந்துப்பியா?"

"முயற்சி செய்யறேன் சார். இங்க ஒரு லேடி ஃப்ரண்ட் கிடைச்சிருக்காங்க. நேபாளி. அவங்க மூலம் சமாளிச்சிடுவேன்னு நம்புறேன்."

"ஆல் த பெஸ்ட்!"

-டெலிபோன் முடங்குகிறது. தேவா நிமிறுகிறான். தத்தா அவனைப் பார்த்து கண்ணடிக்கிறாள்.

"ஏய் என்ன இது?"

"அந்த பிஸினஸ் அப்புறம். எனக்கு அடைக்கலம் கொடுத்துருக்கற உன்னை சந்தோஷப்படுத்த விரும்ப றேன். கமான் மேன் என்னை எடுத்துக்கோ..."

-டவலை தளர்த்துகிறாள். தேவாவை வாலிபம் சூடாக்குகிறது, ஆனாலும் மனதில் வேகமாய் குற்ற உணர்வு பரவுகிறது.

“நோ...நோ...ஏய் வேண்டாம். நான் மாட்டேன். எனக்கு பழக்கமில்லை....” கண்களை மூடிக்கொண்டு கத்துகிறான். அவள் சிரிக்கிறாள். பின் ஓ.கே.ஓ.கே. இஷ்டம் இல்லைன்னா வேண்டாம் என்கிறாள். ரவுடிக் கூட்டம் துரத்தும் உயிருக்குப் பயந்த பெண்ணாகவே தெரியவில்லை.

தேவா வியர்வையில் தெப்பமாய் நனைந்து விட்டிருந்தான்.

அவளை ஒருமாதிரி பார்க்கிறான்.

அவள் நெருங்கி வருகிறாள். தன் வெண்டை விரல் கரங்களை குலுக்குவதற்காக நீட்டுகிறாள்.

“எதுக்கு?”

“ஷிவான் உனக்கு ஒரு பரீட்சை வெச்சார். அதுல நீ பாஸ் பண்ணிட்டே. ரியலா நீ ஒரு ஜென்டில்மேன்....” - என்றபடி அறையின் கட்டிலுக்கு அடியில் இருந்து தனது உடுப்புகளை வெளியே எடுக்கிறாள். அவன் எதிரேயே அணிந்து கொள்கிறாள்.

“பரீட்சையா?” அவன் கேட்கிறான்.

“ஆமாம்...உனக்கு பொம்பள ஆசை இருக்கான்னு பாக்க சொன்னார், பார்த்தேன். இல்லை...”

தேவா திடுக்கிறான், அப்பொழுது கதவு தட்டப்படும் சப்தம். போய் திறக்கிறான். ஒரு வயதான நேபாளி சிரித்தபடி பார்க்கிறான்.

“ஐ ஆம் ஷிவான்.... டயமண்ட் மெர்ச்சண்ட்” என்று அவனிடம் ஆங்கிலத்தில் அறிமுகம்.

“நீங்க செத்துப் போயிட்டதா சொன்னாளே இவ...”

அவன் உள்ளே வந்து கதவை மூடியபடி பதில் தருகிறான்.

"அது பொய்...சும்மா சொல்லச் சொன்னேன்."

"என்ன பொய்... விளையாட்றீங்களா.... இவ என்னன்னா பொம்பள ஆசை இருக்கான்னு பாத்தேங்கறா. நீங்க என்னடான்னா சும்மா பொய் சொல்லச் சொன்னேன்ங்கறீங்க. என்னை என்ன கிறுக்கன்னு நினைச்சீங்களா?"

"கூல் டவுன் மை பாய்... உன் பாஸ் அருணாசலம் தான உன்னை இப்படி சோதிக்க சொன்னார். உன் நேர்மை, ஒழுக்கம், திறமை எல்லாத்துக்கும் இது ஒரு பரீட்சை"

"எதுக்கு?"

"பல கோடி ரூபாய் வியாபாரம் செய்யற கம்பெனி முதலாளி பல காரணங்களுக்காக அப்படி சொல்லலாம் நீ அதை அவர் கிட்ட கேட்டுக்கோ. எனிவே நீ எல்லாத்துலேயும் பாஸ். கங்கிராட்ஸ்.

அந்த சப்பை மூக்கு நேபாளி கைநீட்டுகிறான். அரைமனதாக கை கொடுக்கிறான்.

சரக்கு எடுத்துக்கிட்டு நான் இன்னும் ஒரு மணி நேரத்துல வரேன். பணத்தோட ரெடியா இரு. வியாபாரம் முடிக்கலாம்: அப்புறமா நீ ஊரையும் சுத்தி பார்க்கலாம். எல்லாம் என் ஏற்பாடு. ஷிவான் கை குலுக்கியபடி சொல்லிப் பிரிகிறான். அவளும்....

தேவா மனம் மட்டும் நடந்து முடிந்ததை நினைத்து ஜீரணிக்க முடியாது துடிக்கிறது.

"இது என்ன கொடுமையான பரீட்சை..." எதற்கு? கேள்வி கொத்துகிறது.

# 29



**ம**னது அடங்கவே மாட்டேன் என்கிறது. அலை பாய்கிறது. பேசாமல் எஸ்.டி.டி. போட்டு அவரிடமே கேட்டுவிடலாமா? கேள்வி எழும்புகிறது அதுதான் சரி... டெலிபோனை தட்டி விடுகிறான். எண்கள் சுழல மறு முனையில் ரிசீவரை எடுப்பவள் லேகா.

"ஹலோ அருணாசலம் சார் இருக்காரா?"

"இல்லியே...நீங்க ?"

"நான் தேவா பேசறேன் மேடம். அப்பா இல்லியா?"

"அவர் வெளியே போயிருக்காரு.... எப்படி இருக்கு நேபாள்.?"

"ஊர் அழகாத்தான் இருக்கு, மனசுதான் சரியில்லை."

"மனசுக்கு என்ன வந்துச்சு..."

"பரீட்சைங்கற பேர்ல என் சுயமரியாதையை ரொம்பதான் சீண்டிட்டான் இங்க ஒருத்தன். ஓ.கே. விடுங்க. உங்ககிட்ட பேசி என்ன பிரயோஜனம் நான் அவர்கிட்டையே பேசிக்கிறேன்."

தேவா தொலைபேசியை முடக்குகிறான்.

**லே**கா!

தேவா பேசியது புரியாத கவலையோடு சோபாவில் சாய்கிறாள். எதனால் தேவா அப்படி பேசினான்... அவனுக்கு என்ன சிக்கல்? அவளை உணர்வுகள் பிசையத் தொடங்குகின்றன.

வாசற்புறம் கார் வந்து தேங்கும் சப்தம்.

அருணாசலம் இறங்கி வந்து கொண்டிருக்கிறார். மகளை துவண்ட நிலையில் பார்த்து ஆச்சர்யமும் படுகிறார்,

"என்னம்மா...ஏன் ஒரு மாதிரி இருக்கே...?"

"அப்பா தேவா போன் பண்ணினாரு..."

"எனக்கும் பண்ணினானே..."

"உங்களுக்கு பண்ணினதுக்கு அப்புறம்..."

"என்ன விஷயமாம்?"

"ரொம்ப கோபமா பேசினாரு. என் சுயமரியாதையை ரொம்ப கோபப்படுத்திட்டாங்க. அப்படி இப்படின்னு..."

அருணாசலம் அதைக்கேட்டு கலகலவென சிரிக்கிறார்.

"என்னப்பா அவர் அப்படி கோவிக்கறாரு நீங்க சிரிக்கறீங்க..."

"எல்லாம் சரியாயிடும்மா."

"சரியாகறது இருக்கட்டும். என்ன செஞ்சீங்க?"

"ஒண்ணுமில்லைம்மா தேவாவுக்கு நம்ம கடைல மேனேஜர் போஸ்ட் கொடுத்தது ரொம்ப பேருக்கு பிடிக்கலை. ஒரு சின்னப் பையனுக்கு வந்ததும் வராததுமாக தூக்கி கொடுத்திட்டீங்க நாங்க இல்லையான்னு சில சீனியர்லாம் கேட்டாங்க.

நான் அவன் நேர்மையை சொன்னேன். என்ன பெரிய நேர்மை அந்தக் கல் மதிப்பு தெரிஞ்சிருக்காது. தெரிஞ்சிருந்தா கொடுத்திருக்கமாட்டான். சுட்டிருப்பான். அப்படி இப்படினாங்க...

நான் உடனே சொன்னேன். தேவா ரொம்ப நேர்மையானவன் ஒழுக்கமானவன்னு என் உள்மனம் சொல்லுது அதை நிரூபிக்கறேன். பல லட்ச ரூபாயை கைலகொடுத்து நேபாள் அனுப்பறேன். ஒரு பிராஸ்டி டியூட் அங்க அவனை கார்னர் பண்ணுவா. ஆனா அவன் மயங்க மாட்டான். வியாபாரத்தையும் எப்படியாவது செய்ய பார்ப்பான். ஓடிடமாட்டான்னேன்.

அதேபோல என் கணிப்பை நிஜமாக்கி இங்கு பேசுனவங்க வாயையும் அடைச்சுட்டான் தேவா. எனக்கு ஷிவான் போன் பண்ணி முந்தியே சொல்லிட் டான்..."

மூச்சுவிடாமல் பேசுகிறார் அருணாசலம். லேகா அதை கேட்டு வாயைப் பிளக்கிறாள்.

"நீங்க சொல்றத கேட்டா ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நம்ம கடைல வேலை பார்த்த எத்தனை பிசினஸ் ரெப்ரசென்டேடிவ்ஸ் பணத்தோட ஓடியிருப்பாங்க...?

"ஆமாம்மா... தேவா நம்மை பொறுத்தவரை கடவுள் கொடுத்திருக்கிற நல்ல மனுஷன். இவனை விட்றக் கூடாது."

"விட்றவே கூடாது" என்கிறாள் லேகாவும் இரு பொருள்படி...

❑ ❑ ❑

**பு**கையாக கக்கிக் கொண்டிருக்கிறார் கைலாஷ். அந்தரங்க சிஷ்யன்... பி.ஏ. என்று சகல அந்தஸ்தில் இருந்த சேகர் பைத்தியமாகி ஆஸ்பத்திரியில் கிடக்கிறான்.

நினைப்பது நடக்காதுபோல் இருக்கிறதே... கவலை பிடுங்குகிறது. வீட்டிலோ பிருந்தா படுக்கையறை முழுக்க

தேவா...தேவா... என்று அவன் பெயரையே எழுதி வைத்திருக்கிறாள். அவளை நினைத்தால்தான் அவரது பி.பி. அதிகரிக்கிறது. தேவா ஒரு சாதாரண மில் தொழிலாளி மகனாக இருந்து கொண்டு எப்படி இப்படி பதிலடி கொடுக்கிறான்...? அவருக்கு புரியவேயில்லை. குழப்பம்... குழப்பம்...அதன் எதிரொலியாக சிகரெட் கரைந்து கொண்டிருக்கிறது.

நடுவில் கதவை யாரோ தட்டுகின்றனர்.

"யெஸ் கமிங்..." அழைக்கிறார். அசிஸ்டெண்ட் ஒருவன் கொண்டைய ராஜிவை எப்படியோ அழைத்து வந்திருக்கிறான். "வணக்கங்க..."

"நீ தான் கொண்டைய ராஜுவா?"

"ஆமாங்க..."

"என்னய்யா...உன்னை உலகத்திலேயே பெரிய மாந்திரீகன்னு சொன்னான் சேகர். இப்ப பைத்தியமா அலையறானேய்யா..."

"எனக்கும் அதுதான் ஆச்சரியம் தருதுங்க. சேகர் சொன்ன தேவாகிட்ட ஏதோ தெய்வ சக்தி இருக்கு."

"இதை சொல்லத்தான் வந்தியா.... என் மக என்ன டான்னா அவன் பேரை ராமஜெயம் மாதிரி சொல்லிக்கிட்டிருக்கா...."

"கவலை வேண்டாம். நான் இந்தமுறை எப்படியாவது அந்த தேவாவை இரண்டில் ஒன்று பார்க்கும். உங்க பொண்ணுக்கு ஒரு மருந்து தரும். அதை கொடுங்க தேவா பேச்சையே எடுக்கமாட்டா..."

"நீ முதல்ல அவனை கண்ட்ரோல் பண்ணு. அப்புறம் என் பொண்ணுகிட்ட வரலாம்."

“இது சவால் முதலாளி இந்த முறை நான் அவனை கவிழ்த்தே தீருவே.ன. சேகர் போல அவனை பைத்திய மாக்குவேன்...”

சபதம் செய்கிறான் கொண்டையராஜி.



# 30

மதுரை விமான நிலையம். வட்டமடித்து சீற்றம் குறைய நிற்கும் விமானத்தில் இருந்து இறங்கிக்கொண் டிருக்கிறான். தேவா. விமான நிலையத்திற்கு கார் வந் திருக்கிறது. ஆனாலும் போகும்போது இருந்த மகிழ்ச்சி வரும்போது இப்பொழுது இல்லை.

அம்மா அக்காக்கள் நேபாளத்தில் ஸ்வெட்டர் டவல்கள் எல்லாம் நன்றாக இருக்கும் வாங்கிவா என்று கூறியிருந்தனர். அருணாசலம் வைத்த பரீட்சை அவனை சீண்டி கோபமூட்டியிருப்பதால் எதிலும் கவனமே செல்லவில்லை.

விரைப்பாக நடந்துவருகிறான். டெர்மினல் வழி யாக வெளியேறி காரிலும் ஏறிக்கொள்கிறான். கார் கிளம்ப ஆயத்தமாகிறது. டிரைவர் கேட்கிறான்.

“எப்படிங்க இருந்துச்சு நேபாளம்?”

“ஆமாம் பெரிய அமெரிக்கா பாரு...” கோபமான பதில். “சீக்கிரமா அமெரிக்காவுக்கும் போகப் போறீங்கய்யா...!” -டிரைவர் சொன்னதை கேட்டு தேவா முகத்தில் கோபத்தை மீறிய ஆச்சரியம்.

"என்னய்யா சொல்றே?"

"ஆமாங்க...கூடிய சீக்கிரம் அமெரிக்காவுக்கும் போகப் போறீங்க. உங்களை வெச்சு ஐயா என்னென்ன திட்ட மெல்லாம் போட்ருக்காரு தெரியுமா?"

"ஒரு டிரைவர் நீ... உனக்கு எப்படி தெரியும்?"

"ஐயா நிம்மதியா பேசிகிட்டுவரதே கார்ல தாங்களே. அதோட இருபது வருஷமா இருக்கேன். எனக்கு தெரியாததா?"

"உங்க அய்யா அனுப்பினா நான் போக ஒத்துக் கணுமே..."

"ஏன் அப்படி சொல்றீங்க... உங்க பேர்ல எவ்வளவு நம்பிக்கை தெரியுமா ஐயாவுக்கு...?" .

"வேண்டம்ப்பா...என் வாயைக் கிளறாதே! நம் பிக்கையாம் நம்பிக்கை நேபாளத்துல பிராஸ்டி டியூட்டை எல்லாம் விட்டா செக் பண்றது?"

"அது என்னன்னு எனக்கு தெரியாதுங்க... ஆனா ஒண்ணு. இந்த தொழில்ல லட்சமும், கோடியும் சாதா ரணமா புழங்கும் . அதை கையாள்றவங்க நெருப்பா இல்லேன்னா அதனால முதலாளிகளுக்குதாங்க ஆபத்து."

"இதுக்கு முந்தி ஒரு மானேஜர், மாசம் பத்தாயிரம் சம்பளம் இருந்தும் ஏகமா கமிஷன் அடிச்சான். சின்ன வீடு வெச்சிருந்தான். ஒருநாள் ஏழெட்டுலட்ச ரூவா சரக் கோட இந்த ஊரைவிட்டே ஓடிட்டான்.

அதனால தான் ஐயா நேர்மையான நாணயமான ஆளைதான் இனி மேனேஜராக்கறது -வெளியூருக்கு அனுப்பறதுன்னு முடிவு செய்திருந்தாரு. அதனாலதான் உங்களை அனுப்பினாரு.

இது கடையில சில பெருச்சாளிங்களை கண்டபடி பேச வெச்சிச்சுங்க. கார்ல வரும்போது போகும்போது என்கிட்ட சொல்லி வருத்தப்படுவாருங்க. அதனால எனக்கு இதெல்லாம் தெரியும்.

அவங்க வாயை அடக்க இப்படி செய்திருக்கலாம் அவர்..."

டிரைவர் விளக்கம் மெல்ல தேவாவை சாந்த மாக்குகிறது. நாம் ஒரு பக்கத்தை மட்டும்தான் பார்த் திருக்கிறோம். ஆனால் முதலாளி என்பவருக்கு பல பக்கங்களில் இருந்தும் பிரச்சினைகள்... அடடா... இது புரியாமல் கோபித்துக் கொண்டு விட்டோமே...

நல்லவேளை டிரைவர் மூலமாக உண்மை தெரிய வந்து விட்டது. இல்லாவிட்டால் அந்த மனிதரிடம் மல்லுக்கு நின்றிருப்பேன்...மதிப்பை கெடுத்து கொண் டிருப்பேன்.

நெருப்பாய் இருந்த மனது மெல்ல நிலவாக மாற ஆரம்பிக்கிறது. அருணா மகாலும் வருகிறது. தேவா வுக்கு வரவேற்பு பலமாக இருக்கிறது. தங்கப்பதுமை யாட்டம் வாசலில் நின்று சிரித்தபடிடி அவனை பார்க் கிறாள் லேகா. அவனை அது என்னவோ செய்கிறது.

"வாய்யா...."-உரிமையோடு வரவேற்கிறார் அருணாசலம்.

" என்னங்க என்னை இப்படி சோதிச்சுட்டீங்க...?" கோபத்தை மிக அழகாக வெளிப்படுத்துகிறான்.

"தப்புதான் தேவா. என்னை மன்னிச்சுடு..." அந்த பெரிய மனிதர் துளி கூட ஈகோ இல்லாமல் மன்னிப்பு கேட்கிறார். அது அவனை மேலும் குளிர்விக்கிறது.

"சரக்கெல்லாம் நல்லா பார்த்து வாங்குனியா?"

"வாங்கியிருக்கேன்... பார்க்கறீங்களா?"

"இருக்கட்டும், நீ முதல்ல காபிய குடிச்சுட்டு உன் வீட்டுக்கு கிளம்பு. அப்புறம் தேவா ஒரு முக்கிய விஷயம்..."

"என்னங்க ...?"

"உன் வீடு இனி பழைய அந்த ஒண்டு குடித்தனம் கிடையாது."

"என்னங்க சொல்றீங்க..."

"ஆமாம்பா... என் ஜுவல்லரி மேனேஜர் ஒரு நல்ல வீட்ல இருந்தாதானே எனக்கு பெருமை மரியாதை எல்லாம்?"

"அதனால?"

"உனக்கு ஷெனாய் நகர்ல ஒரு பங்களா பார்த்து உன் வீட்டையும் அங்கு குடியேத்திட்டேன். உன்னை கேட்காம செய்துட்டேனேன்னு நினைச்சு அதுக்கும் ஒரு தடவை கோவிக்காதே. நல்லது செய்ய யார்கிட்ட கேட்கணும் சொல்லு பார்ப்போம்..."

அருணாசலம் அவன் முன் விஸ்வரூபம் எடுக்கிறார். அவன் கரங்கள் கும்பிடத் தொடங்குகின்றன. ரசித்தபடி நின்று கொண்டிருக்கிறாள் லேகா, மனதில் ஆயிரம் கற்பனைகளோடு...

❑ ❑ ❑

**ஷெ**னாய் நகர்

புதிய பங்களா!

வீட்டைச்சுற்றி அசோக மர நிழல் வட்டம். அணில் பிள்ளைகளின் ஆரவாரமான விளையாட்டு. உள்பாகம்

அரண்மனைபோல் இருக்கிறது. மார்பிள் கற்களில் முகம் தெரிகிறது. காசைக்கொட்டி இழைத்திருக்கிறார்கள்.

சிவகாமி நிலை கொள்ளாமல் வீட்டை அங்குலம் அங்குலமாக பார்த்து மலைத்துக் கொண்டிருக்கிறாள். சகோதரிகள் சாமான்களை அடுக்கிக் கொண்டு, அருண கிரி மில்லுக்கு வேலைக்கு போய் விட்டிருக்கிறார்.

வாசலில் தேங்கும் காரில் இருந்து இறங்குகிறான் தேவா. எட்டிப் பார்க்கின்றனர் அனைவரும். உற்சாகமாக ஓடிவருகின்றனர்.

"வா தேவா... பாத்தியா உன் முதலாளி பெரிய மனசை. நீ அவங்க கடை மேனேஜராம். ஒண்டு குடித் தனத்துல இருக்கலாமான்னு கேட்டு அள்ளி போட்டு கிட்டு வந்துட்டாருப்பா..."

"நல்லதும்மா.. அவர் நிஜமாலுமே தங்கமனசுக்காரர்."

"எல்லாம் அந்த மீனாட்சி அனுக்ரகம்மா அவ கண்ணு திறந்ததால் தானே எல்லாம்...உனக்கு இனி ஒரு குறையும் வராது..."

அவள் வாழ்த்தும் போதே வாசற்புறம் "அம்மா பழைய துணி எதாச்சும் இருந்தா போடு தாயி..." என்று குடுகுடுப்பைக்காரனாக கொண்டைய ராஜி!

# 31



**அ**ச்சு அசல் குடுகுடுப்பைக்காரனாக உருமாறி வாசல் புறம் வந்து நிற்பவனை தேவாவின் சகோதரி எட்டிப் பார்த்து துரத்துகிறாள்.

போப்பா...போ! போ ஒண்ணுமில்லை..." அவன் போகாமல் அழிச்சாட்டியமாக குடுகுடுப்பை ஆட்டு கிறான்.

அப்படி சொல்லாத தாயி... வானமேறி பறந்துட்டு வந்துருக்கார் ராசா... அவர் வாழ்க்கை வண்ணமா மாறப்போகுது வாழ்த்தி ஒரு துணி...ஒரே ஒரு துணி கொடு தாயி..."

-அவன் சொல்வது தேவாவின் காதுகளிலும் விழு கிறது. கூர்மையாகிறான். சூட்கேஸை திறந்து பொருள் களை எடுக்கும்போது அப்படி வெளியே எட்டியும் பார்க்கிறான்,

'நான் வானமேறிப் பறந்தது இவனுக்கெப்படி தெரியும்?' மனதில் முளைத்த கேள்வியோடு அழுத்த மாக பார்க்கிறான்.

தேவாவின் தாய் சிவகாமி ஒரு ரூபாய் நாணய முடன் அவனை நோக்கி நடக்கிறாள்.

"எவ்வளவு சொன்னாலும் போகமாட்டீங்களே..." என்று முணுமுணுத்தபடி ஒரு ரூபாயை அவன் எதிரே நீட்ட அவன் இளக்காரமாக சிரிக்கிறான்.

"தாயி...காசு வேண்டாம் தாயி. மவராசன் போட்ட ஒரு சட்டை இல்ல வேட்டி."

"இஷ்டம் இருந்தா இந்த காசை வாங் கிக்க...இல்லாட்டி நடையை கட்டு. வேட்டி சட்டைன்னு போட நாங்க என்ன துணிக்கடையா நடத்தறோம்.

அதைக்கேட்கும் கொண்டைய ராஜி முகம் இறுகு கிறது. முறைத்தபடி அடுத்த வீட்டை பார்க்க ஆரம் பிக்கிறான். இதை வெறித்துப் பார்த்து கொண்டிருக் கிறான் தேவா.

“தேவா அங்க என்ன பார்வை. புது வீட்டை பார்... என்னமா இருக்கு பார்த்தியா?”

“உம்...உம்...”

“என்ன அதுக்குள்ள மூட் அவுட்டா. எதனால?”

“ஒண்ணுமில்ல...”

“அப்ப நிறைய இருக்கு...”

“ஒண்ணுமில்லேங்கறேன்ல...” பலமாக கத்தி அனைவர் வாயையும் அடைக்கிறான்.

அனைவருக்குமே அதிர்ச்சி. எதற்காக இத்தனை கோபம் இவனுக்கு என்று ஆச்சரியமும்.

தேவாவோ, பசுபதிநாதன் தன்னை எச்சரித்ததில் மையம் கொண்டிருக்கிறான். தலைமுடியை கொண்டு தன்னை கஷ்டப்படுத்த நினைத்தது நினைவுக்கு வருகிறது ‘சின்ன நகத்துண்டோ, துணியோ எதையும் தராதே’ என்று அவர் எச்சரித்தது நினைவில் கொத்திக் கொண்டிருக்கிறது.

விடாமல் துணியையே கேட்ட இந்த குடு குடுப்பைக் காரன் ஒருவேளை கைலாஷின் ஏவலாளாக இருப்பானோ? புத்தி எல்லாத்திசையிலும் ஆராயத் தொடங்குகிறது.

❑ ❑ ❑

**இ**ப்படி நினைப்பதை எல்லாம் வீட்டில் கூற முடியுமா? புதிய வீடு சந்தோஷமான சூழ்நிலை என்று வாழ்வில் முதல் முறையாக இன்பத்தின் வசம் சேர்ந் திருக்கிறார்கள். அதை கெடுக்கவா? கூடாது...கூடவே கூடாது தீர்மானிக்கிறான். சகோதரிகளை பார்க்கிறான். அவர்கள் போட்டது போட்டபடி இருக்க ஓர் ஓரமாய்

போய் உட்கார்ந்து விட்டிருக்கிறார்கள். அவர்களை நெருங்குகிறான்.

“சாரிம்மா... தப்பா எடுத்துக்காதீங்க...”என்கிறான்.

“எதுக்கு கத்துனே... கத்தற அளவுக்கு என்ன ஆச்சு அதைச் சொல்...” -பெரியவள் கேட்கிறாள்.

“இப்படி கத்துனா தானே ஏன் ஸ்வெட்டர் வாங்கி வரலே... போர்வை வாங்கி வரலைன்னு நீங்க கேட்க மாட்டீங்க...”

“அடப்பாவி இதுக்குதானா?” அவர்கள் சிரிக்கத் தொடங்குகின்றனர்.

“அப்பாடா...”அவர்கள் சிரிக்கத் தொடங்கியதில் அவனுக்கும் மகிழ்ச்சி இந்த சிரிப்புக்கு குந்தகம் வரவே கூடாது வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக ஒரு வேலை...

மளமளவென்று சட்டையை போட்டுக் கொள் கிறான்.

“எங்க கிளம்பிட்டே?”

“ஒரு நிமிஷம். முக்கு கடைக்குபோய் ஒரு சோடா குடிச்சுட்டு வரேன். வயிறே சரியில்லை...” - கச்சித மான பொய்யை சொல்லிவிட்டு வெளியில் இறங்கு கிறான்.

குடுகுடுப்பைக்காரனாகிய கொண்டைய ராஜி நூறு அடி முன்னால் எந்த ஒரு வீட்டு முன்னாலும் நின்று கெஞ்சாமல் கேட்காமல் நடைபோட்டபடி இருக்கிறான்.

அதுவே தேவாவின் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்துகிறது. மனதில் பயம் கிளர்ந்தெழ ஆரம்பிக்கிறது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு

கொண்டைய ராஜி எதுவரை போகிறான் என்று பார்க்கும் ஆசை அவனை இயக்க ஆரம்பிக்கிறது.

கொண்டைய ராஜுவின் கால்கள் சிறிது தூரத்தில் ஓர் ஆட்டோவை பிடிக்கின்றன. தேவாவும் ஆட்டோவை தொடர ஆரம்பிக்கிறான். முதலில் விரையும் அந்த ஆட்டோ நேராக கைலாஷின் பங்களா முன்னால் தான் போய் அமைதி அடைகிறது.

தேவா சற்று முன்பாகவே இறங்கிக் கொள்கிறான். கொண்டைய ராஜி கைலாஷின் வீட்டினுள் நுழைகிறான். தேவா முகத்தில் அதிர்ச்சியின் அணைப்பு!

❑ ❑ ❑

**பி**ருந்தா!

படுக்கையில் மல்லாக்க படுத்துக்கொண்டிருக்கிறாள். கீழே ஹாலில் கைலாஷ் பேசும் சப்தம் கேட்டு காதை உரசுகிறது, பேச்சில் தேவா பெயர் அடிபடவும் விரைப்பாகிறாள். எழுந்து எட்டிப் பார்க்கிறாள். ஹாலில் குடு குடுப்பைக்காரனாக கொண்டைய ராஜி பேசிக் கொண்டிருக்கிறான்.

“முதலாளி... தலைகீழா நின்னும் அவன் பழைய துணி கிடைக்கவில்லை. அடுத்து வேற ஒருவழி வெச்சிருக்கேன்.”

“என்ன அது?”

“அவன் நடந்த இடத்து மண். அதை அவன் தர மாட்டேன்னு சொல்லமுடியாது. அதை வெச்சு என்ன பாடுபடுத்தறேன் பாருங்க.”

“சொல்லாதே செய்...”

இருவர் பேச்சும் பிருந்தா இதயத்தில் ஈட்டியாக பாய்கிறது.

# 32



**மா**டியிலிருந்து பதற்றத்தோடு கீழே இறங்கி நேராக கைலாஷ் கொண்டைய ராஜி எதிரில் போய் நிற்கிறாள் பிருந்தா. கண்கள் பனித்திருக்கின்றன. உடம்பு லேசாக நடுநடுங்கிக் கொண்டிருக்கிறது.

தங்கள் பேச்சைக் கேட்டு மகள் இப்படி ஓடி வரு வாள் என்று எதிர்பார்த்திராதவர் போல கைலாசும் பதற்றப் படுகிறார்,

"எங்கம்மா வந்தே... என்ன விஷயம்?"

"என்ன டாட் இது... யார் இந்த ஆள்..."

"இது உனக்கு சம்பந்தம் இல்லாத விஷயம்மா பிருந்தா-கோ இன்சைட்."

"நான் நீங்க பேசினது எல்லாம் கேட்டுட்டேன் டாட் இதுலை எனக்கு சம்பந்தமில்லை..."

-கைலாஷ் மௌனம் சாதிக்கிறார். பிருந்தா, பார்வை கொண்டைய ராஜி பக்கம் திரும்புகிறது.

"ஏய்யா...மந்திரம் மாயம்னு எதையாவது பண்ணி எங்க காதலை ஒழிச்சிடலாம்னு பாக்கிறியா... அது உன்னால முடியுமா."-கத்துகிறாள்.

அவன் முறைப்போடு அவளை பார்க்கிறான்....

"அடுத்தவங்க வாழ்க்கையை அழிக்கறதுக்குன்னு உங்களை மாதிரி எத்தனை பேர் கிளம்பியிருக்கீங்க? இதெல்லாம் ஒரு பொழைப்பா?"

"பிருந்தா நீ அதிகம் பேசறே. வாயை மூடிகிட்டு உள்ளே போ..."

"வேண்டாம்ப்பா... இதுபாவம்! இந்த மாதிரி ஆட்கள் வீட்டுக்குள்ளேயே வரக்கூடாதுப்பா! உங்க மனசுக்குள்ள எங்க காதல் இவ்வளவு பெரிய பாதிப்பையா உருவாக்கியிருக்கு?"

"ஆமாம்... இந்த நிமிஷம் என்பேச்சைக் கேட்டிருந்தா உனக்கு நிச்சயம் முடிஞ்சிருக்கும். கல்யாண பத்திரிகை ரெடியாயிருக்கும். எல்லாத்தையும் அந்த அன்னக்காவடிக்காக கெடுத்துக்கிட்டே. எப்ப பார் அவன் நினைப்போடு இருக்கே... அப்படி என்ன அவன் பெரிய பேரழகன் உன்னை வெச்சு காப்பாத்த முடிஞ்சவன்?"

"நீங்க பார்த்த மாப்ளை மட்டும் பெரிய பேரழகனா குடிகாரன் இல்லையா அவன்?"

"குடி, ஒரு பணக்கார லட்சணம். அதை பெரிசு படுத்தாதே, எந்த பணக்காரனும் குடிச்சிட்டு வேட்டி அவிழ்ந்து கிடக்க சாக்கடைல விழுந்து கிடக்க மாட்டான். ஞாபகம் வெச்சுக்கோ..."

"நீங்க என்ன சொன்னாலும் சரி... கல்யாணம்கறது மனது ஒப்பி நடக்கணும்னு ஆசைப்படறேன். இப்படி கட்டாய கல்யாணம் செய்யக்கூடாது. அது யாருக்கும் நல்லதுல்ல...."

"வழவழன்னு இது பேச நேரமில்லை... கொண்டைய ராஜி நீ அவனை முடக்கிப்போடு...மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்..."

கைலாஷ் தன் செயலின் தீவிரத்தை குறைக்க மாட்டேனென்கிறார். பிருந்தா நகம் கடிக்கிறாள்.

"ப்ளீஸ் டாட்... வேண்டாம். தேவா ரொம்ப நல்லவர். அவரை விட்டுடுங்க..."

விட்டுட்றேன் நீ அவரை மறந்துட்டேன்னு சொல்லு..."

"முயற்சிக்கறேன்... இவனை முதல்ல போகச் சொல்லுங்க..."

-பிருந்தா கொண்டய ராஜுக்கு மிகவும் பயப் படுவது கைலாஷிற்கு நன்கு புரிய ஆரம்பிக்கிறது. அதை நன்கு பயன்படுத்திக் கொள்ள ஆரம்பிக்கிறார்.

"கொண்டையா நீ கிளம்பு... சேகர் அலையறத விடகொடுமையா அவன் அலையணும். போ... ஆக வேண்டியத பார்..."

"சரிங்க..."

"நில்லு... அப்பா வேண்டாம், ப்ளீஸ் உங்களை கையெடுத்து கும்பிட்டு கேட்டுக்கறேன். அவர் பேர்ல ஒரு தப்பும் இல்லை. அவரை காதலிக்க ஆரம்பிச்சது, காதல்ல இழுத்து போட்டது எல்லாம் நான்தான். என்னை தண்டியுங்க, அவரை விட்ருங்க"

"விட்றேன், அவனை மறக்கறேனு சொல்லு. நான் பார்த்த மாப்ளையை கட்டிக்கிறேனு சத்யம் செய்து தா..."

-கைலாஷின் வெறித்தீவிரம் இறுதியில் அவளை பணியவைக்கிறது. அரைமனதாக தலையசைக்கிறாள்.

"என்னை ஏமாத்த முடியாது. இப்ப தலையாட் டிட்டு திரும்ப அவனை எங்கையாவது பார்த்தே, பேசினே அடுத்த நொடி எனக்கு தெரிஞ்சிடும். அவனை யும் சும்மா விட மாட்டேன். என்னோட ஏவுகணை கொண்டய ராஜி இருக்கான், இருந்த இடத்துல இருந்தே அடிப்பான் இல்லை கொண்டையா..."

அவன் அதை கேட்டு ஆமோதிக்கிறான். அவர் கை நீட்டி சத்யம் கேட்கிறார். அதில் அவள் கைகள் பதிகின்றன.

❑ ❑ ❑

**மி**கவும் சிரமப்பட்டு பர்மிஷன் வாங்கிக்கொண்டு மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் கால் வைக்கிறாள். முன்பு வந்தபோது அவள்தான் தேவாவை காட்டி காதலையும் தந்தாள். இன்று எல்லாமே முடிந்து போனது போல இருக்கிறது.

நான் அந்த கொல்கத்தாகாரனுடன் கிடந்து சீரழிய வேண்டும் என்று இருக்கிறது. யார் என்ன செய்துவிட முடியும்?

சோகமாக நடக்கிறாள் பிருந்தா. கூடவே இரண்டு தடி காவல்கார எஸ்கார்ட்டுகள். சந்நிதியில் கூட்ட மில்லை. நின்று பிரார்த்தித்துக் கொள்ள நிறையவே அவகாசம் இருக்கிறது.

"கல்கத்தா குடிகாரனை கட்டிக் கொள்வதைவிட சாவதுமேல்" என்று தோன்றுகிறது. அதுவே அந்த சந்நிதியில் அவள் எடுக்கும் இறுதி முடிவாகவும் ஆகி றது.

சோர்வுடன் குங்குமத்திலகம் தரித்தபடி வெளியே வருகிறாள். சோமசுந்தரர் நவக்கிரகங்கள் என்று ஒரு வட்டம் முடித்து கம்பத்தடி மண்டபத்தை சுற்றும்போது அகோர வீரபத்திரர் எதிரில் பசுபதி!

"அம்மாடி..." அழைக்கிறார். அவளும் பார்க்கிறாள். தெரிந்தும் தெரியாமலும் அவர் முகம் விளையாட்டு காட்டுகிறது.

“உன்னை எனக்கு நல்லா தெரியும்மா... நீ இப்ப மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இருக்கேன்னும் தெரியும். தற்கொலை பெரிய பாவம்மா...”

அவர் அப்படி சொல்லவும், திடுக்கிட்டு போவது பிருந்தா மட்டுமல்ல...கூட வந்த எஸ்கார்ட்டுகளும்...

“உங்களுக்கெப்படி நான் அந்த முடிவுக்கு வந்திருக்கிறது தெரியும்?”

“மீனாட்சி திருவடிகளை விடாம பிடிச்சுகிட்டு இருக்கிறவங்களுக்கு மூணு காலமும் தெரியவரும்மா. அது ஒண்ணும் பெரிய வித்தை இல்லை...”

“நான் என்னங்க பண்ணட்டும். எனக்கு வேற வழியே தெரியலை...”

“தெரியும்மா... நல்லா தெரியும். கவலைப்படாதே உன் அப்பா விருப்பப்படி எதுவுமே நடக்காது. நீ பொறுமையா இரு. எல்லாமே நல்லபடி நடக்கும்...”

“நீங்க யார்? எதுக்காக என்மேல உங்களுக்கு இவ்வளவு அக்கறை?”

-பசுபதிநாதன் அந்த கேள்விக்கு பதில் சொல்லாமல் சிரிக்கிறார். கைகளை மட்டும் ஆசீர்வதிப்பதுபோல உயர்த்துகிறார்.

“யோவ் யார் நீ?” ஒரு எஸ்கார்ட் கடுமையாக குறுக்கில் நுழைகிறான். அதற்கும் சிரிப்புதான்.

“மேடம் இந்த மாதிரி பிச்சைக்காரங்க கூடல்லாம் நீங்க பேசக்கூடாது. எம்.டி.க்கு தெரிஞ்சா எங்களைத்தான்....” பசுபதிநாதன் பார்வை தன்னை பிச்சைக்காரன் என்று வர்ணித்தவனை பார்க்கிறது. அவன் பிச்சைக்காரனாக தெருவில் நடப்பதுபோல ஒரு காட்சியும் வருகிறது.

# 33

அவர் உடனே கண்ணை மூடி "சுந்தரேசா... இவனை காப்பாத்து..."

-என்று அவனுக்கு கேட்கும்படி வேண்டிக்கொள் கிறார்.

"ஓய்... யாரைக் காப்பாத்துன்னு சாமியை வேண் டிக்கிறே... உன் பார்வையே சரியில்லையே..."

"அது நீ பார்க்கறத பொறுத்து இருக்குப்பா..."

"நாங்க நல்லாத்தான் பார்க்கறோம். பிச்சைக் காரனா இருந்துகிட்டே இந்த பேச்சு பேசறியே. உன் கிட்டல்லாம் காசு பணம் இருந்தா என்ன பேச்சு பேசுவே"

"என்கிட்ட இல்லாத காசு பணமா?"

"ஆமாம் பெரிய குபேரன்... நடங்க மேடம் இவன் லாம் ஒரு மனுஷன்னு பேசிக்கிட்டிருக்கேன் பாரு..."

"ஒரு நிமிஷம் நில்லுப்பா..."

"என்னய்யா...?"

"என்ன குபேரனான்னு கேட்டேல்ல..."

"ஆமாம். அதுக்கென்ன?"

"இப்ப பாரு..."

அவர் சொல்லி வாய்மூடிய மறுநொடி ஒரு பெரிய பணக்காரர் கையில் பிரிஃப் கேசுடன் கோயி லுக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்.

நுழைபவரை பசுபதிநாதன் பார்க்கவும் அவர் பசுபதிநாதரை நோக்கி நடந்து வருகிறார்.

"வணக்கம் சாமி..."

"வணக்கம்"

"நல்லா இருக்கீங்களா?"

"உங்க ஆசிர்வாதம் சாமி. ஒரு குறைவும் இல்லை."

"கைல என்ன பணமா?"

"ஆமாம் சாமி..."

"எவ்வளவு இருபது லட்சத்து எழுபதாயிரமா?"

"சாமி...எப்படி அவ்வளவு கரெக்டா?"

"எனக்கு தெரியும்னு தானே கேக்கறே... இதையே எத்தனை தடவை கேட்பே. போகட்டும். அது எனக்கு வேணுமே..."

"எடுத்துக்குங்க சாமி... உங்களுக்கு இல்லாததா?"

அவர் உடனே அந்தப் பெட்டியையே அவர் முன் வைக்கிறார். எஸ்கார்ட்டுகள் ஆடிப் போகின்றனர். பிருந்தாவும்! பசுபதியின் பார்வை மூவரையும் ஆழமாக ஒரு பார்வை பார்க்கிறது. பின் பெட்டியை எடுத்து பணக்காரர் கையில் தருகிறார்.

"ஏன் சாமி...திருப்பித் தரீங்க?"

"சும்மா கேட்டேன்பா...எனக்கு எதுக்கு பணம்?"

"இது நீங்க தந்தது தானே சாமி..."

"நான் தரலை எல்லாம் அவ தர்ரா...சரி சரி போ. போய் தரிசனம் பண்ணிட்டுவா..."

அவர் கும்பிட்டபடி விடைபெறுகிறார்.

திரும்ப ‘நீ என்ன குபேரனா?’ என்று கேட்ட எஸ்கார்ட்டை பார்க்கிறார். அவன் முகம் வெளிறிப் போய் கிடக்கிறான். பிருந்தா கலங்கி விட்டிருக்கிறாள்.

“சாமி உங்களைப் புரிஞ்சிக்க முடியல... உண்மை லேயே நீங்க...”

“கவலைப்படாம போம்மா. எல்லாம் நல்லபடி நடக்கும்.”

“உங்களுக்குத்தான் என்மேல எவ்வளவு அக்கறை?”

“அக்கறைங்கறதைவிட பரிகாரம்னு சொல்லலாம்... நான் ஒரு தாந்திரிக சன்யாசி. நூறு வயசை தொடப் போறேன். இருந்தும் இன்னமும் சில கோப தாபங்களை அடக்க முடியலை. அன்னிக்கு அப்படித்தான் என்னை பார்த்து சிரிச்ச ஒருவனுக்காக உன்னை சோதிச் சுட்டேன். அது என்னடான்னா...”

அவர் எதையோ சொல்ல வந்து பாதியில் முடித்துக் கொள்கிறார்.

“என்னை சோதிச்சீங்களா?”

“ஆமாம்மா... ஒரு வாலிபனுக்கு உன்னை முத்தம் கொடுக்கச் செய்து தப்பு செய்துட்டேன். பிறகுதான் இதை உணர்ந்தேன்....’

“அது தப்பு இல்லை சாமி. என் வரைல பெரிய திருப்பம்...”

“இப்ப எப்படி வேணா சொல்லிக்கலாம். ஆனா நான் அதுக்கு காரணமாக இருந்துருக்கவே கூடாது. போகட்டும் நீ கிளம்பு எல்லாம் சரியாயிடும்...”

-பிருந்தா தேவா பற்றி எதையோ கேட்க நினைக் கிறாள். ஆனால் எஸ்கார்ட்டுகளை உத்தேசித்து எதுவும் கேட்காமல் கைகூப்பி வணங்கிவிட்டு விடை பெறுகிறாள்.

எஸ்கார்ட்டுகளில் ஒருவன் அவரை வணங்கு கிறான். பிச்சைக்கார சன்யாசி என்றவன் முறைத்தபடியே நடக்கிறான்.

❑ ❑ ❑

**கை**லாஷ் முகத்தில் ஆச்சரியம். அருகில் எஸ் கார்ட் நம்பர் டூ! கச்சிதமாய் கோயிலில் நடந்ததை போட்டு விட்டிருக்கிறான். அதனால்தான் அவரிடம் அத்தனை ஆச்சரியம்.

“அந்த சன்யாசி பார்க்க எப்படி இருந்தான்?”

“ஒல்லியா கருப்பு வேட்டி துண்டோட பிச்சைக் காரன் மாதிரியே...”

“சரி நான் பாத்துக்கறேன். ஆமா பிருந்தா தேவா பத்தி எதாவது கேட்டாளா?”

“இல்லீங்க. வாயே திறக்கலை...”

“நல்லது. நீ போ...”

-அவன் விடை பெற்றுக் கொள்கிறான். கைலாஷ் பைப்பை எடுத்து புகையிலை போடுகிறார். தீயை வைக்கிறார்.மனதில் ஏதேதோ கணக்குகள். நாற்காலி ஆடிக் கொண்டே இருக்கிறது.

❑ ❑ ❑

**தி**ரும்பவும் கோயில்!

இந்த முறை தேவா உள் நுழைந்து கொண்டிருக்கிறான். தரிசனம் முடிந்து கம்பத்தடி மண்டபத்தை சுற்றும்போது கச்சிதமாய் அழைக்கிறார்.

“தேவா.....!”

-அவரைப் பார்க்கவும் மகிழ்ச்சியுடன் அவரை நெருங்குகிறான்.

"சாமி...என்ன இடம் மாத்திட்டீங்க குளத்தங் கரைல இல்ல உட்கார்ந்திருப்பீங்க...?"

"ஆமாம்ப்பா...கொஞ்சம் நாளைக்கு இங்கதான். இருப்போமே... இந்த கம்பத்தடி மண்டபம் பத்தி உனக்கு தெரியாது...முப்பது முக்கோடி தேவர்களும் இங்க அடக்கம்..."

"என்னென்னமோ சொல்றீங்களே சாமி..."

"இனிமேதான் சொல்லப் போகிறேன். என் னென்னமோ..."

"புதிர் போடாதீங்க சாமி-நானும் உங்ககிட்ட ஒரு முக்கிய விஷயமா பேசணும்..."

"என்ன...அந்த பிருந்தா பொண்ணு பார்த்தியா?"

"ஆமாம் சாமி .... அந்த கைலாஷ் சார் என்னை அழிக்க மாந்திரிகனை வீட்டுக்கே அனுப்பிட்டாரு..."

"தெரியும்பா....ஆனா உன்னை ஒண்ணும் பண்ண முடியாது. கவலைப்படாதே..."

"காதலுக்காக இப்படி எல்லாம் கூடவா எதிர்ப்பு கள் இருக்கும். நான்தான் ஒதுங்கி வந்துட்டேனே..."

"இனி இருக்காதுப்பா... அந்த பிருந்தா கோயிலுக்கு வந்திருந்தா. பார்த்தேன். பேசினேன்..."

"என்ன சொன்னா?" ஆவலுடன் கேட்கிறான்.

# 34



**தே**வாவின் ஆவல் பசுபதிநாதனை என்னவோ செய்கிறது. முகம் மாறுகிறது.

பாவம்பா அந்த பொண்ணு!... நான் செய்த தவ றாலே உன்மேல காதல் கொண்டு இப்ப உன் காதலையும் விடமுடியாம அப்பா பார்த்த மாப்ளையும் பிடிக்காம ரொம்ப கஷ்டப்பட்றா...!

தேவா அதைக் கேட்டு கலங்குகிறான்.

"சாமி...நீங்க சொல்லுங்க எங்க காதல் ஜெயிக்கும் தானே?"

"நிச்சயமா ஜெயிக்கும்பா. நான் என்னாலான எல்லா உதவியும் செய்வேன்."

"நானும் பிருந்தாவுக்காக வேகமா தகுதிகளை வளர்த்துக்கறேன் சாமி. இப்ப பெரிய வீட்டுக்கு குடி போயிருக்கேன். என் முதலாளி எனக்காக எதையும் செய்யத் தயாரா இருக்கார் சாமி..."

"பாத்துப்பா தகுதிக்குரிய முன்னேற்றங்களை மட்டும் ஒத்துக்கோ. மத்ததை வேண்டாம்னு சொல்லிடு."

"அதுல நான் எப்பவுமே கவனமா இருக்கேன். சாமி அந்த மந்திரக்காரனால் ஏதாவது பிரச்சினை..."

"வருமான்னு தானே கேக்கறே?"

"ஆமாம்."

"வராது நான் கொடுத்த ரசமணி இப்ப எங்கே?"

"அது எப்படியோ தொலைஞ்சு போச்சுங்க சாமி..."

"இப்ப ஒண்ணு தரேன். தொலைச்சிடாதே! பத்ரம் இன்னொரு விஷயம்..."

"என்ன சாமி?"

"நான் ஒரு தாந்திரீகன். சக்தி உபாசகன். சிவ ராத்திரிக்கு மட்டுமே மயானத்துக்கு போக

வேண்டியவன். உனக்காக நான் சமீபத்துல போய் வந்தேன். இனி ஒரு முறை என்னை அந்த மாதிரி போக வெச்சுடாதே.”

“நான் போக வெச்சேனா?”

“ஆமாம்... அந்த மாந்தரீகன் உன் முடியை கொண்டு உன்னை அழிக்க நினைச்சதுக்கு ஒரு திருப்பம் ஏற்படுத்த நான் போகும்படி ஆயிடிச்சு. மயானம் போறவங்க இப்படி கோயிலுக்கு வரக்கூடாது. அது நல்லதல்ல. இருந்தாலும் இந்த சிவனே சுடலையாண்டிதானே? அதனாலதான் சக்தி உள்ள மீனாட்சி சந்நிதிகிட்ட உட்காரமா இங்க இந்த கம்பத்தடி மண்டபத்துக்கு வந்துருக்கேன்.”

பசுபதி நாதனின் விளக்கம் அவனுக்கு புதிதாக இருக்கிறது. அவரையே வெறிக்கிறான். அவர் தொடர் கிறார்.

“இனி ஒருமுறை இந்த ரசமணியை தொலைச்சு டாதே. இது உன்னை எல்லா அபாயங்கள்ள இருந்தும் எப்படியாவது காப்பாத்தும், அதே சமயம் தொலைஞ்சு போச்சுன்னா உன்னை அந்த ஆண்டவன் கூட காப் பாற்ற பிரியப்படலைன்னு அர்த்தம் ஜாக்ரதை.”

அவர் ரசமணியை எடுத்து தருகிறார். பவ்யமாக வாங்கிக் கொள்கிறான்.

“உங்க முதலாளி பொண்ணு எப்படி பழகறா?”

கேட்க வேண்டியதை அப்பொழுதுதான் கேட் கிறார்.

“நல்லா பழகுதுங்க. ஆரம்பத்துல அது ரொம்ப முரடோன்னு நினைச்சேன். இப்ப அப்படி தெரியலை.”

“ஜாக்ரதை...” அவரின் எச்சரிக்கையை அத்தனை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் கிளம்ப ஆயத்த மாகிறான்.

“அப்ப நான் கிளம்பறேன் சாமி...”

“போய்ட்டு வா... நான்கூட பெரிசில்லை, மீனாட்சி பெருசு. மறந்துடாதே....”

“அத நான் மறக்கவே மாட்டேன் சாமி...”

-உறுதிபட சொல்கிறான். கும்பிட்டபடி விடை பெறுகிறான். சாமி தாடியை வருடியபடி அவன் செல்வ தையே பார்க்கிறது அப்படியே தலைக்கு மேலுள்ள கல்யாண சுந்தரர் ஸ்தூபியை பார்த்து கன்னத்திலும் போட்டுக் கொள்கிறது.

**கோ**யிலில் இருந்து உள் நுழைந்தவள் வெளியே எட்டிக்கூட பார்க்கவில்லை. அது கைலாஷை என் னவோ செய்கிறது. அவள் அறையை வாயில் பைப்புடன் எட்டிப் பார்க்கிறார்.

சிலைபோல அமர்ந்திருக்கிறாள் பிருந்தா. அவளை நெருங்கினார்.

“என்னம்மா...கோயில்ல நல்ல கூட்டமோ?” பேச்சை ஆரம்பிக்கிறார். “ஆமாப்பா...” தயங்கியபடி பிருந்தாவும் பதில் தருகிறாள்.

“ஆமாம்...யார் அந்த பிச்சைக்காரன்?-கைலாஷ் குத்தலாக கேட்கவும் அவள் முகம் மாறுகிறது. பதில் சொல்லாமல் முறைக்கிறாள்.

“கேக்கறேன்ல...”

“யாரோ...உங்களுக்கென்ன?”

“அந்த ஆள் உதவியாலதான் அந்த தேவநாதன் நம்ப சேகருக்கு பைத்தியம் பிடிக்க வெச்சானா?”

"தெரியாது..."

"என்னை பார்த்து இப்படி மாயக்காரங்க கூடல் லாம் பழகாதீங்க தப்பு; அது நல்லதுல்லன்னு சொல் விட்டு நீ மட்டும் இந்த மாதிரி ஆட்களோட பேசலாமா?"

"அவர் மாயக்காரன் இல்ல..."

"இல்லாமதான் நீ சாக நினைச்சதை எல்லாம் தானா கண்டுபிடிச்சு சொன்னானா?"

"எல்லாத்தையுமே உங்க எஸ்கார்ட்டுங்க போட்டு விட்டுட்டாங்களா?"

"அதுக்கு தானே அவங்களுக்கு சம்பளமே..."

பிருந்தா கைலாஷை கடுமையாக முறைக்கிறாள்.

"இப்பவும் சொல்றேன். என்னை ஏமாத்த நினைச்சே உன்னை சும்மாவிட மாட்டேன். எனக்கு என் செல் வாக்கு கௌரவம் இதெல்லாம்தான் பெரிசு. உனக்கு நல்லது செய்ய நினைக்கிற என்னை தவறா புரிஞ்சுகிட்டு இந்த குடும்ப கௌரவத்தை கெடுத்துடாதே. இது உனக்கு லாஸ்ட் வார்னிங்..."

கைலாஷ் கறுவிக்கொண்டே விடைபெறுகிறார்.

அவள் தலையணையில் முகம் புதைத்து அழ ஆரம் பிக்கிறாள். அப்பொழுது தொலைபேசியின் அரவம், ஓடிச் சென்று காதை கொடுக்கும் கைலாஷ் இடி விழுந்தது போலாகிறார்.

# 35

ஒரு தொலைபேசி செய்தி இப்படி கூட ஆக்குமா என்ன? பிருந்தா கவனித்து ஓடி வருகிறாள்.

“என்னப்பா ... என்ன ஆச்சு ஏன் இப்படி ஆயிட்டீங்க?” கைலாசுக்கு பேச்சு வர மறுக்கிறது. அது வந்து... வந்து ...என்று மிடறு விழுங்குகிறார்.

“என்ன வந்து போயி...”

“அந்த கல்கத்தா மாப்ளை இல்லை...”

“ஆமாம்...”

“மாப்ளைக்கு ஆக்ஸிடெண்டாம். பயங்கர அடியாம். உயிர் பிழைக்கிறதே அபூர்வமாம்...”

தயங்கித் தயங்கி பிருந்தாவிடம் கைலாஷ் சொல்லச் சொல்ல பிருந்தாவிற்கு நின்ற இடம் நழுவுகிறது. தன் பிரச்சினைக்கு இப்படி கூட ஒரு தீர்வு வருமா என்ன?

நின்ற இடத்தில் இருந்தபடியே மீனாட்சியையும் கைலாஷையும் நினைத்து கை கூப்புகிறாள். அதை பார்க்கும் கைலாஷ் கடூரமாகிறார்.

“எல்லாம் நீ சந்திச்சு பேசினியே அந்த பிச்சைக் காரன் வேலையா?” கடூரமாய் கேட்கிறார்.

“ஐய்யோ அப்பா இதுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்...?”

“இல்ல இருக்கு... நீ தான் அவ’ரை சந்திச்சு எதையோ சொல்லி இப்படி நடக்க ஏற்பாடு செய்துருக்கே....”

“இது கொடுமையான கற்பனை அவர் ஒண்ணும் உங்க கொண்டைய ராஜு மாதிரியான ஆள் கிடையாது.”

“அதை நான் சொல்லணும். என் நினைப்பு மட்டும் சரியா இருக்கட்டும். உன்னை அவரை சும்மாவிட மாட்டேன். இப்பவே கொல்கத்தா கிளம்பறேன். வந்து வெச்சுக்கறேன்....”

-கைலாஷ் கறுவியபடி கிளம்புகிறார். பிருந்தா மருண்டு போகிறாள். இது என்ன கொடுமை....கிணறு வெட்ட பூதம் புறப்பட்டு விட்டதே...

❑ ❑ ❑

அருணா ஜெம்ஸ் அண்ட் ஜூவெல்ஸ்!

கடையில் நல்ல கூட்டம். வியாபாரத்தில் மும்முரமாக இருக்கிறான் தேவா. கடைக்குள் நுழைகிறாள் லேகா. தேவாவை நெருங்குகிறாள்.

“தேவா...” -மிருதுவாக அழைக்கிறாள். நிமிர்ந்து பார்க்கிறான்.

“ரொம்ப பிசியா இருக்கீங்களா?”

“என்ன விஷயம் மேடம்?”

“இல்ல... ஒரு முக்கியமான வேலை. கொஞ்சம் என் கூட வரமுடியுமா?”

“ஐய்யோ... கடைல கூட்டத்தை பார்த்தீங்கல்ல...”

“இதை எல்லாம் மத்தவங்க பாத்துக்குவாங்க. ஆனா என் சிக்கலை நீங்கதான் தீர்க்க முடியும்...”

“என்ன உங்க சிக்கல்?”

லேகா தயங்கிக் தயங்கி அவன் காதில் மட்டும் கேட்கும்படி சொல்கிறாள்,

"ஒரு ராஸ்கல் என்னை விடாம ஃபாலோ பண்றான். கேட்டா ஐ லவ் யூ லேகாங்கறான். எனக்கு பயமா இருக்கு..."

தேவா அடுத்த நொடி திடுக்கிட்டு போகிறான்.

"இதை அப்பாகிட்ட சொல்லவேண்டியது தானே?"

"வினையே வேண்டாம். ஆ ஊன்னு குதிச்சு பிராப்ளத்தை பெரிசாக்கிடுவார்..."

"அப்ப நீங்களே அவன்கிட்டே சொல்லிவிடலாமே..."

"என்னன்னு..."

"எனக்கு உன்னை பிடிக்கலேன்னோ... இல்லை பிடிச்சிருக்குன்னோ..."

"பிடிச்சிருச்சின்னா... நோ நோ... அவனை பார்க்க சகிக்கலை..."

"அப்ப பிடிக்கலைன்னு சொல்லிடுங்களேன்."

"சொல்றேன். கேக்கமாட்டேங்கறான். விடாம ஃபாலோ பண்றான்."

-தேவா அவள் தயங்கித் தயங்கி பேசுவதைக் கேட்டு மிகவும் நெகிழ்ந்து போகிறான். வேறு வழி தெரியாதவனாக அவளுடன் கிளம்புகிறான்.

கடையின் மூத்த சீனியர்கள் எல்லாரும் இதை பார்க்கின்றனர். அவனுக்கும் அது புரிகிறது. இருந்தாலும் லேகா விடமாட்டேன் என்கிறாள்.

❑ ❑ ❑

**எ**ல்லீஸ் நகரின் மரம் சூழ்ந்த சாலை. ஒரு வாத நாராயண மரத்துக்கு கீழே யமஹா மேல் ஸ்டைலாக அவன்.

“அதோ அவன்தான்...” கை காட்டுகிறாள் லேகா தேவாவும் அவனை பார்க்கிறான். பார்க்க பணக்கார வீட்டுப்பிள்ளை என்னும் கட்டியங்கள். கையில் கோல்ட் ரிஸ்ட் லாக்கெட். நவரத்ன மோதிரம் என்கிற பணக்கார மினுமினுப்புகள் கழுத்திலும் தேர்வடம்கணக்காய் சங்கிலி. மேல் பட்டனை போடாமல் திறந்த புசுபுசு முடி மார்பு தெரிகிறமாதிரி திறந்து விட்டிருக்கிறான். ஜீன்ஸ் பாண்ட், ஸ்டோன்வாஷ் ஷர்ட். கான்வாஸ் ஷு.

லேகாவை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு தேவா அவனை நெருங்க அவனிடம் எதற்கோ தயாராகி விட்டது போல ஆயத்தம்.

“ஹலோ...” -இது தேவா.

“ஹலோ...” இது அவன்.

“என்ன ரோமியோ சார்... லேகாவை டாவடிக்கி றீங்களா?”

“டாவடிக்கலை-லவ் பண்றேன்.”

“குட்... வளவளன்னு பேசாம ஒப்புகிட்டதுக்கு. ஆனா அவ உங்களை லவ் பண்ணலை தெரியும் தானே?”

“நல்லா தெரியும்...”

“பிடிக்கலைன்னு தெரிஞ்சும் ஃபாலோ பண்றது நல்லாவாயிருக்கு?”

“இன்னிக்கு பிடிக்காம போகலாம். நாளைக்கு பிடிக்கலாம் இல்லையா?”

“எப்படி?”

“அதை எனக்கு சொல்லத் தெரியாது. ஆனா லேகாதான் என் மனைவி. ஐ ஆம் ஷ்யூர்.”

“இது பிடிவாதம். வீம்பு...”

"எதுவா இருந்தாலும் கவலையில்லை... நான் அடைய நினைக்கறத அடையாம விடமாட்டேன். ஏன்னா நான் மில் ஓனர் கைலாஷ் மகன்!"

அவன் பதில் தேவாவை ஓர் உலுக்கு உலுக்குகிறது.

❑ ❑ ❑



# 36

அவன் தன்னை அப்படி அறிமுகப்படுத்திக்கொண்ட மறுநொடியே தேவாவுக்கு தூக்கி வாரிப் போடு கிறது.

"மகாதேவி மில் கைலாஷ் சார் மகனா நீ?" கேட்கிறான்.

"ஏன் சந்தேகமா?"

"இல்ல....அவருக்கு ஒரு டாட்டர் மட்டும் தானே..."

"ஐ ஆம் சாரி...நான் அவரோட இரண்டாம் தாரத்து பிள்ளை..."

"இரண்டாம் தாரமா...?"

"இதோ பாருங்க மிஸ்டர். நான் உங்களுக்கு இவ் வளவு சொன்னதே பெரிசு. நீங்க யார் அதை சொல்லுங்க முதல்ல..."

"நான் லேகாவோட வெல்விஷர்..."

"அப்ப அண்ணன் இல்லையா...ஹூம்..." -அவன் சடைத்துக் கொள்கிறான்.

"அண்ணன் மாதிரிதான்...."

“மாதிரியெல்லாம் அண்ணனாக முடியாது. ஓ.கே. உங்களுக்கு இப்ப என்ன வேண்டும்?”

“லேகா உன்னை லவ் பண்ணலை. அவ வழியில் குறுக்கிடாதே...”

“வாயால பேசற நான், வேறு விதங்களால பேச வேண்டி வரும்...”

-அவன் உடனே நின்று அனல் பறக்க ஒருமுறை முறைக்கிறான்.

“இந்த விஜயன் பத்தி நீயும் போகப் போக தெரிஞ் சிப்பே...”- என்று சொல்லி விட்டு யமஹாவை உதைக்க அது சீறிக் கிளம்புகிறது.

அவன் பறப்பதையே பார்த்தபடியே லேகாவிடம் திரும்ப வருகிறான் தேவா.

“என்ன சொன்னான் தேவா...?”

“ஒண்ணுமில்லை. இனி உன் வழிக்கு வரமாட் டான். வந்தா இரண்டுல ஒண்ணு பார்த்துட வேண்டி யதுதான்.”

“அப்ப வருவானா?”

“வரலாம். ஆனா அதுக்காக நீ கவலைப்படாதே லேகா. லைஃப்ல இதெல்லாம் சகஜம். எத்தனை சினிமா பார்க்கறே...”

“நான் எதுக்கு கவலைப்படணும். எனக்குதான் தேவா இருக்காரே...”-லேகா கண்சிமிட்டி மார்பை ஆட்டி பேசுவதில் வேறுவிதமாய் ஒரு பொருள் இருக்கத் தான் செய்கிறது. ஆனால் அது தேவாவுக்கு புரிந்ததா புரியவில்லையா என்று தெரியவில்லை.

“சரி கிளம்பலாமா?”

"என்ன அவசரம் வாங்க. மாடர்ன் போய் லஞ்ச் சாப்டுவோம்-"

"ஹோட்டலுக்கா...ஐ ஆம் சாரி லேகா கடைக்குப் போகணும். நல்ல பிசினஸ் டைம்ல என்னை கூட்டிகிட்டு வந்துட்டே..."

"பெரிய பிசினஸ் வாங்கன்னா..."

"வேண்டாம் லேகா...திஸ் ஈஸ் டூ மச்..."

"எது டூ மச்...? ஒரு வயசுப் பொண்ணு அதுலையும் முதலாளி பொண்ணு வருந்தி கூப்பிட்றா... என்னான்னு கேட்காம டூ மச், த்ரீமச்சுன்னுகிட்டு..."

இறுதியில் அவளது பிடிவாதம்தான்ஜெயிக்கிறது!

❑ ❑ ❑

**மா**ர்டன் ரெஸ்டாரெண்ட் பரபரப்பான கூட்டத்தோடு நளபாகச் சமையலின் வாசமுடன் வரவேற்கிறது. உள்ளிருக்கிறது ஏ.சி. அறை போய் கதவை சாத்திக் கொள்கிறாள் லேகா. தர்மசங்கடமாக இருக்கிறது தேவாவுக்கு. உட்காருமிடத்திலும் ஒட்டி உரசியபடி உட்காருகிறாள்.அது அவனை என்னவோ செய்கிறது. என்ன இந்தப் பெண் இத்தனை உரிமை எடுத்துக் கொள்கிறாள். அன்பையும் காட்டுகிறாள்? தடுமாறத் தொடங்குகிறான்.

சப்ளையர் வரவும் இரண்டு மீல்ஸ் என்று சொல்பவள் "தேவா இந்த மாதிரி ஹோட்டலுக்கு வந்து சாப்ட்டு எவ்வளவு நாளாச்சுத் தெரியுமா?" என்று மார்புசேலை நழுவ ஸ்லாகிக்கிறாள். அது அவனை என்னவோ செய்கிறது.

அந்த ஏர்கண்டிஷன் அறையில் அவர்களைத் தவிர யாரும் இல்லை. அவள் கிசு கிசு குரலில் கேட்கிறாள்.

“தேவா-வாட் டு யூ திங் எ பவுட் மீ...?”

“நைஸ் கேர்ள்?”

“அவ்ளோ தானா?”

“வேற என்ன சொல்லணுங்கறே?”

“நான் ஃபேரா இருக்கேனா?”

“நிச்சயமா...யூ லைக் மனீஷா கொய்ராலா...”

“நிஜமாவா!”

“சத்யமா... மணிரத்னம் உன்னை முன்ன பார்த் திருந்தா பாம்பேல உன்னைதான் போட்டுருப்பார்...”

“ரியலி...”

“ எனக்கு பொய் சொல்லிப் பழக்கமில்ல...”

“ஏய் மேன்...யூ ஆல்ஸோ லைக் அரவிந்த் சாமி...”

“சத்தம் போட்டு சொல்லாதே... அரவிந்த் சாமி ரசிகர் யாராவது இருந்தா இப்படி சொன்னதுக்காக உன்னை அடிக்கப் போறாங்க,”

“சத்யமா தேவா...உனக்கென்ன குறை நீ அரவிந்த சாமிதான்.”

அவள் அடித்துப் பேசும் சமயம் மீல்ஸ் பிளேட் வருகிறது.

“ஓ.கே...ஓ.கே... சாப்ட்டுட்டு மிச்சத்தை பிறகு பேசுவோம்.

அப்பொழுது பார்த்து அறைக்கதவு திறந்து கொள்ள சாப்பிட உள்நுழைகிறார் கைலாஷ்!

லேகாவையும், தேவாவையும் ஒரு சேரப் பார்த்து நெற்றியில் வரிகள் விழ அதிர்ச்சியடைய தொடங்கு கிறார்.

அவனும் ...

வந்த வேகத்தில் வெளியேறவும் ஆரம்பிக்கிறார்.

அது தேவாவை என்னவோ செய்கிறது. முகம் க்ஷணத்தில் மாறிப்போகிறது.



# 37

**மா**றிப்போகும் தேவா முகத்தைப் பார்த்து லேகா கச்சிதமாக கேட்கிறாள்.

"வாட் ஹேப்பன்ட் தேவா... என்னாச்சு?"

"ஒண்ணுமில்ல. ஒண்ணுமில்ல."

"பொய்...யாரோ உள்ளே வந்தாங்க அவங்களைப் பார்த்துட்டுதான் உங்க மூஞ்சி மாறிப்போச்சு..."

"அது யாரோ இல்லை எங்க அப்பாவோட பாஸ்..."

"யூ மீன்... மகாதேவி மில் ஓனர் கைலாஷ்?"

"உனக்கு கைலாஷ் பத்தி தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கேன். அவ்வளவு பெரிய மில் ஓனர் எதுக்கு இங்க சாப்பிட வராரு...?"

"நீ வரலியா... அப்படித்தான். இட்ஸ் ஓ.கே. எனக்கு சாப்பாடு வேண்டாம். நீ சாப்டுட்டு கிளம்பு..." தேவா படபடவென்று பொரிந்து மிக வேகமாக மாறிப் போனது லேகாவை மிக ஆச்சரியப்படுத்துகிறது.

"இப்ப என்ன நடந்துருச்சின்னு இப்படி பொரி யிறே"

“ப்ளீஸ் லேகா...ஐ ஆம் நாட் இன் தி மூட்...”

-கத்துகிறான் தேவா. அவன் மனதில் இந்த பார்வையால் பிருந்தா நெடுந்தூரம் போய் விடுவாளோ என்கிற பிரமையும் பயமும் பொங்கி வழிய தொடங்கிவிட்டது.

அதோடு லேகாவை பார்க்கிறான். மனதுக்குள் சொல்லிக் கொள்ளவும் செய்கிறான்.

‘இனி எங்கையாவது கூப்பிட்டுப் பார் வரேனான்னு’

❑ ❑ ❑

**அ**ந்த கார் கைலாஷு"டையதுதான். இருந்தும் இருட்டுகட்டியிருக்கும் இடமாக பார்த்து ஒதுங்கி நிற்கிறது. டிரைவர் துணை இல்லாமல் கைலாஷ் தான் மட்டும் செல்ஃப் டிரைவிங்கில் வந்திருக்கிறார்.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறார். சரியான திருட்டு முழி. நடப்பவரை அருகில் உள்ள சுமாரான கட்டடம் வரவேற்கிறது. இடது புறமாய் மாடிப்படி... ஏறுகிறார். கதவு வருகிறது. தட்டுகிறார்.

“டொக்...டொக்...”

-கதவும் திறக்கப்படுகிறது, கதவுக்கு அப்பால் நாற்பத்தைந்து வயது மதிக்க முடிந்த பெண் ஒருத்தி.

புன்னகையுடன் வாங்க சொல்லி வரவேற்கிறாள்.

அவர் உள் நுழைந்த மறுநொடி கதவு அடைபட்டுக் கொள்கிறது.

உள்ளே...

“ஏன் ரொம்ப டயர்டா இருக்கீங்க...? கல்கத்தா போய் வந்திங்க போல் இருக்கு...”

"ஆமாம் வைதேகி...மாப்பிள்ளைக்கு ஆக்சி டெண்ட். குடிச்சிட்டு கார் ஓட்டி கைகால் ஒடிஞ்சு படுத்துக் கிடக்கிறான். நடமாட முடியுமாங்கறதே சந் தேகம்தான்னு சொல்றார் டாக்டர்..."

"அடடா..." அவள் நெருங்கி வந்து தன் புடவைத் தலைப்பாலேயே அவரது நெற்றி வியர்வை ஈரத்தை ஒத்தி எடுக்கிறாள். அதில் நல்ல அன்பும் இதமும் தெரி கிறது...

"ஆமா எங்க விஜயன்?"

"அவன்கூட உங்களை பார்க்கணும்னு துடிச்சிக் கிட்டிருக்கான்..."

"என்ன விஷயம்?"

"அவன்கிட்டையே கேளுங்க..."-சொன்னபடி சமையல் கட்டுக்குள் நுழைந்து கொள்கிறாள். அவர் பெருமூச்சு விட்டபடி கேட்கிறார்.

"வேற ஒண்ணும் பிரச்சினை இல்லையே..."

"என்ன பிரச்சினை... நீங்க இப்படி திருடன் மாதிரி ராத்திரி வர்றதுதான். முந்தி வீதி என்னை கேலி பேசிச்சு, இப்ப போகட்டும்னு மன்னிச்சு விட்றுச்சு..." -உள் ளிருந்த படி பதில் வருகிறது. சற்றைக்கெல்லாம் அவள் டீ கோப்பையுடன் வருகிறாள்.

"சாப்டுங்க..."-அவரும் வாங்கிச் சூப்புகிறார். அப் பொழுது வாசலில் யமஹா வந்து அடங்கும் சப்தம்.

"விஜயன் வந்துட்டான் போலிருக்கு..."

"அவனேதான்... உங்களை அவன் இன்னிக்கு அநேகமாக உலுக்கி எடுத்தாலும் எடுப்பான்..."

“டெய்லியே அப்படிதானே...?”-அவர் தொடர்ந்து டீயை சூப்புகிறார். விஜயன் என்னும் அவன் கதவை தட்டுகிறான். போய் திறக்கிறாள். உள் நுழைபவன் ‘ஹாய் டாட்’-என்கிறான். அது அவரை என்னவோ செய்கிறது. அவனும் அதை புரிந்து கொண்டு கேட்கிறான்.

“என்ன டாட்... நான் அப்படி கூப்பிடக் கூடாதா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்லியே.”

“உங்களுக்கு உங்க மக பிருந்தா மட்டும் தானே உங்களை அப்பான்னு கூப்பிடலாம்...”

“குத்தாதேடா...எங்க சுத்திகிட்டு வரே...”

“ஊரைத்தான்... ஆமாம். இன்னும் எத்தனை நாளைக்கு டாட் இப்படி திருட்டுத்தனமா...”

“வாயை மூடு. என் பிரஸ்டீஜ் பத்தி உனக்கு என்ன தெரியும்...”

“பெரிய பிரஸ்டீஜ். அதான் மூத்த பொண்டாட்டி செத்துட்டாங்கல்ல. எங்கம்மாவை ஊரறிய ஏத்துக்கறதுல என்ன தயக்கம்?”

“இதோ பார் இந்த மாதிரி விஷயமெல்லாம் இனி பேசாதே. நீ சின்னப்பையன். உனக்கு சொன்னா புரியாது...”

“சின்னப் பையனா நான்... சரி இருக்கட்டும். ஏன் நீங்க ஊரறிய எங்கம்மாவை ஒத்துக்கலைங்கறதுக்கு நான் காரணம் சொல்லட்டுமா?”

-அவர் அவனை கூர்மையாக பார்க்க ஆரம்பிக்கிறார். அவன் சொல்லத் தொடங்குகிறான்.

# 38



விஜயன் எதையாவது சொல்லி கைலாஷின் கோபத்துக்கு ஆளாகி விடுவானோ என்று வைதேகி பயப்பட விஜயன் அந்த பயமே துளிகூட இன்றி பேசு கிறான்.

"கௌரவம் பார்க்கறீங்க நீங்கன்னு சொல்ல மாட்டேன். ஏன்னா இந்த நாட்ல எல்லா பெரிய மனுஷனுக்குமே சின்ன வீடு இருக்கறதுங்கறது ரொம்ப சாதாரணமான விஷயம்.

சொத்துல பங்கு தரணுமேங்கற பயமோ கவலையோ கூட உங்களுக்கு கிடையாது. அதுவும் எனக்கு தெரியும். எங்கம்மாவோட சேர்ந்து வாழ்ந்தா உங்களுக்கு கஷ்டம் வரும் நஷ்டம் வரும்னு ஒருமுட்டாள் ஜோசியன் சொல்லியிருக்கான். அதை நம்பிக்கிட்டுதான் சினிமா தியேட்டருக்கும், கிளப்புக்கும் தற்காலிகமா வந்துட்டு போற மாதிரி வந்து போய்கிட்டிருக்கீங்க.

இனிமேலும் நீங்க அப்படி வந்துபோக நான் அனு மதிக்க மாட்டேன். அது மட்டுமில்ல... இன்னிபில இருந்து நான் உங்க மகன்னு பகிரங்கமா சொல்லிக்கவும் ஆரம்பிச்சிருக்கேன்..."

மூச்சு விடாமல் பேசுகிறான் விஜயன். கைலாஷ் எதுவுமே சொல்லாமல் அமர்ந்திருக்கிறார்.

"வாயை மூட்றா... இனியும் நீ எதிர்த்து பேசுனே தெரியும் சேதி..." வைதேகி கையை தூக்கிக்கொண்டு முன் செல்கிறாள்.

“வைதேகி...” அவர் கத்தி அவளை தடுக்கிறார்.

“என்னங்க நீங்களும் பேசட்டுங்கற மாதிரி தடுக்க நீங்க?”

“வேற என்ன செய்யச் சொல்றே... இந்த காலத்துப் பசங்களை அடக்க அடக்கதான் அதிகம் பாய்வாங்க அதோட விஜயன் சொல்றதுலையும் தப்பில்லை...”

முதல் முறையாக விஜயனே அதிசயிக்கும்படி அவர் பேசவும் விஜயன் அவரைஅதிர்ச்சியுடன் பார்க்கிறான்.

“ராசியான பொண்ணுன்னு நினைச்சு வளர்த்த பிருந்தாவே மார் மேல பாயறா. ராசியில்லாதவன்னு சொல்லி வளர்த்த இவன் பாஞ்சா என்ன?”

அடுத்த பதில் அவர்களை அசைக்கிறது.

“ஏன் பிருந்தாவுக்கு என்ன?”

“சரியான அதிர்ஷ்டக் கட்டை. கஷ்டப்பட்டு கொல்கத்தா மாப்ளை பார்த்தேனே அவனையே விழுங் கிட்டா”

“என்னங்க சொல்றீங்க...?”

“என்னத்த சொல்ல... முதல்ல ஒரு அன்னக்காவடி பின்னால ஓடப் பார்த்தா. கஷ்டப்பட்டு தடுத்தேன். அரைமனசா என் ஏற்பாட்டுக்கு சம்மதிச்சா. இப்ப அதுவும் இல்லாம போச்சு...”

“அட இந்த இடம் இல்லைன்னா இன்னொரு இடம்...”

“அதுசரி...நான் இப்படியே ஒவ்வொரு இடமா பாத்துகிட்டே போக வேண்டியதுதான்...” சலித்துக் கொள்கிறார் கைலாஷ்.

"சாப்பிட்டீங்களா?"

"கட்டாயமாக... உன் கையால சாப்பிடணும்னு தானே வந்துருக்கேன்..." வைதேகி உள் செல்ல விஜயன் அவரை இப்பொழுது தர்ம சங்கடத்துடன் பார்க்கிறான்.

"என்னப்பா... இன்னும் எதாவது பேச வேண்டி இருந்தா பேசு..."

"சாரி டாட்."

"என்ன சாரியோ. லுங்கியோ..."

"அப்பா நான் ஏதோ கோபத்துல பேசிட்டேன். பிருந்தா பத்தி நீங்க கவலைப் படாதீங்க. நீங்க சரின்னு சொல்லுங்க நான் பாக்கறேன்..." கைலாஷ் விஜயனை உடனேயே சற்று சிலிர்த்துப் போய் நிமிர்ந்து பார்க்கிறார்.

"ஏன்பா எதுவும் பேச மாட்டேங்கறீங்க. நான் பார்ப்பேன்பா நல்ல இடமா பார்ப்பேம்பா..."

அவன் படபடவென்று சொல்ல திரும்ப தலையை நிமிர்த்துபவர் "ரொம்ப நன்றிப்பா" என்கிறார்.

"எதுக்குப்பா நன்றியெல்லாம்..."

"குறைஞ்ச பட்சம் உனக்காவது என் சுமை தெரிஞ் சிருக்கே. அதுக்குதான்."

"எதுக்குப்பா பெரிய வார்த்தை எல்லாம்...?"

"பெரிய வார்த்தை இல்லப்பா இது. உண்மையான வார்த்தை. சரி அதை விடு. மில்லுக்கு வந்து ரெஸ் பான்ஸை எடுத்துக்கறியா..."

"நிச்சயமா... எப்ப சொல்வீங்கன்னு காத்துகிட் டிருக்கேன்."

“வெரிகுட். நான் சொல்றேன் அப்ப வா. ஒவ்வொரு ஏரியாவா போய் முதல்ல என்ன நடக்குதுன்னு பார். பிறகு சார்ஜ் எடுத்துக்கலாம். என்ன...”

உள்ளே சமையல்கட்டில் இருக்கும் வைதேகி காதிலும் இதெல்லாம் விழுகிறது. மகிழ்ச்சியில் அவள் மனது மிதக்க தொடங்குகிறது.

கைலாஷும் எழுந்து சமையல்கட்டை நோக்கி வருகிறார்.

“வைதேகி.”

“என்னங்க?”

“நீ இந்த சின்ன இடத்துல இருந்து இனியும் கஷ்டப் படவேண்டாம்...”

“என்னாங்க சொல்றீங்க?”

“ஆமாம் வைதேகி... எனக்கு இப்ப மனசே சரியில்லை. உன்னை பிரிச்சு வெச்சு பார்த்த பாவம்தான்னு நினைக்கறேன். பேசாம நீ என்னோடு வந்துடு...”

“நிஜமாங்களா?” -வைதேகி சிலிர்த்துப் போகிறாள். அதற்கு மேல் சிலிர்த்துப் போகிறான் விஜயன்.

“அப்பா...நிஜமாவாப்பா.”

“சத்யமா விஜயா...”

“உங்க பிரஸ்டீஜ், இமேஜ்...”

“புடலங்கா. நீங்க இரண்டு பேரும் இன்னிக்கே அங்க வர்றீங்க... வைதேகி வந்துட்டா பிருந்தா பத்தி கூட நான் அதிகம் கவலைப்படவேண்டாம்.”

“ஆமாங்க அவளை பக்குவமா பாத்துக்கறது என் பொறுப்பு...”

மொத்தத்தில் அங்கே மகிழ்ச்சி பூத்துக் குலுங்குத் தொடங்குகிறது. விஜயன் மனதில் இப்பொழுது மலையே கடுகாகி விட்டதைப்போல் ஒரு பிரமை. மன திற்குள் லேகாவை நினைத்துக் கொள்பவன். 'லேகா இனி நானும் உன்னைப்போல ஒரு கோடீஸ்வரன். உன்னை விடவே மாட்டேன்'- என்று சபதமே எடுக் கிறான்.

# 39



**பி**ருந்தா இப்பொழுது முன்போல் இல்லை. நிறையமாறி விட்டிருக்கிறாள். காதல் நிறைய பேர் வாழ்வை பல விதங்களில் மாற்றி விடுகிறது. முன் பெல்லாம் விடிந்து எட்டு ஒன்பது மணி வரை படுக்கை யில் கிடப்பாள். ஜாகிங் போகிறேன் என்று எல்லீஸ்நகர் பக்கம் ஓடிவிட்டு வருவாள். நாய் குட்டியோடு கொஞ்சிக் கொண்டு கப் அண்ட் சாஸர்களை எல்லாம் போட்டு உடைப்பாள்.

இப்பொழுது எல்லாமே தலைகீழாகி விட்டது. சதா மோட்டு வளையத்தை பார்த்தபடி நிசப்தமாக இருக்கிறாள். வீட்டு வேலைக்காரர்கள் ஆச்சரியத்தில் மிதக்கிறார்கள். தேவா பற்றியே அவள் சதாசர்வ காலமும் நினைப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அவள்கூட அவனை இனி நினைக்க கூடாது என்றுதான் நினைக்கிறாள். ஆனால் முடியாது போகிறது.

அப்பாவின் கையில் அடித்து சத்யம் செய்து தந்த பிறகு அவனை நினைப்பது தர்மமாகவும் படவில்லை.

ஒரே குழப்பம் கவலை. உடம்பும் துரும்பாகிக் கொண்டு வர ஆரம்பித்து விட்டது.

இந்த நிலையில் ...

“பாம் பாம்...”

சப்தம் கேட்டு அவள் பார்வை போர்டிகோ பக்கம் திரும்புகிறது. அங்கு நிற்கும் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறாள் வைதேகி, அவளோடு விஜயன்.

“யார் இவர்கள்?” பிருந்தாவின் முகத்தில் கேள்வி தேங்க, கைலாஷும் வருகிறார்.

உள்நுழையும் வைதேகி நேராக தன்னையே பார்த்தபடி நிற்கும் பிருந்தாவைதான் முதலில் சென்று பார்க்கிறாள்.

“எப்படிம்மா இருக்கே...?”

“நீங்க...?”

“நானா?”

“அது உன் சின்னம்மா...” வேகமாக பதில் கைலாஷிடம் இருந்து வருகிறது. அவளுக்கு அம்பு தைத்த மாதிரி ஆகிறது.

“சின்னம்மாவா?”

“ஆமாம்... சின்னம்மா சொந்த அம்மா எல்லாம் இனி அவங்கதான். இவன் விஜயன். உன் அண்ணன்.”

பிருந்தா கலங்கிப்போய் அவர்களைப் பார்க்கிறாள்.

“இனி இங்கதான் இவங்க இருப்பாங்க...உனக்கும் துணையாச்சு. நல்லவிதமா நீயும் நடந்துப்பேன்னு நினைக்கிறேன்...”

கைலாஷ் மளமளவென்று அறிமுகம் முடித்து அபிப்ராயத்தை கூறுகிறார். அவளோ குழப்பத்தின் உச்சத்தில்...

“அப்பா... இப்படி திடீர்னு இரண்டுபேரை கூட்டி கிட்டு வந்து சித்தி, அண்ணன்னா எப்படிப்பா?”

“உனக்கு வேணும்னா இது திடீர்னு தோணலாம் எனக்கு அப்படி இல்லை, நான் ரொம்ப லேட் பண்ணிட் டேன்னு நினைக்கிறேன்.”

“என்னால நம்ப முடியல, ஜீரணிக்க முடியல...”

“அதுக்கு நான் என்ன செய்ய முடியும். நம்பணும் நீ...”-கைலாஷ் கட்டளை இடுகிறார்.

வைதேகி இப்பொழுது அவள் கரங்களை பற்றிக் கொண்டு சொல்கிறாள்.

“அம்மாடி... உன் நிலை எனக்கு நல்லா புரியுது. உனக்கு என்னைத் தெரியலேன்னாலும் எனக்கு உன்னை நல்லா தெரியுண்டா. உன்னை பத்தி கேட்டுகிட்டே இருப்பேன்.”

“பேசாதீங்க... நான் உங்க கூட பேச விரும்பலை. கிட்டத்தட்ட இருபது இருபத்தஞ்சு வருஷம் எப்படி நீங்க இவருக்கு மனைவியா ரகசியமா வாழ ஒத்துக் கிட்டீங்க. எங்கம்மாவுக்கு இவர் பண்ணின துரோகத்தை எப்படி ஜீரணிச்சீங்க...? உங்களுக்கு அந்த மாதிரி இவர் பண்ணியிருந்தா ஒத்துக்குவீங்களா?”

-பிருந்தா படபடவென பொரிகிறாள். வைதேகி அதற்கெல்லாம் அசந்தமாதிரி தெரியவில்லை. மென்மை யாக சிரிக்கிறாள்.

“எல்லா கேள்விக்கும் உனக்கு நான் பொறுமையா பதில் சொல்றேனே...”

“ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்...” -பிருந்தா முகத்தில் கோபமும் கண்ணீரும் போட்டி போடுகின்றன.

“வைதேகி நீ போய் வேற வேலைய பார். இவகிட்ட போய் பேசிகிட்டு...”

-கைலாஷ் கோபமாக குறுக்கே வருகிறார்.பிருந்தா குலுங்கி குலுங்கிஅழ ஆரம்பிக்கிறாள். விஜயனைக்கூட அது என்னவோ செய்கிறது.

❑ ❑ ❑

நல்ல முத்துக்களை வாங்க கோவாவுக்கு போய் வரச் சொல்லியிருக்கிறார், அருணாசலம். அதற்காக ஊருக்கு கிளம்பி கொண்டிருக்கிறான் தேவா. டிபன் கேரியரில் சாப்பாட்டை அடைத்து எடுத்து வந்து எதிரில் நீட்டுகிறாள் சிவகாமி.

“என்னம்மா இது...”நான் ஓட்டல்ல சாப்டுக்க மாட்டேனா?”

“உடம்பு கெட்டுடும்ப்பா...தண்ணிகூட நீ வெளியில குடிக்க கூடாது. இப்பல்லாம்தான் நல்ல தண்ணியே கிடைக்கறதில்லையே.”

“ஆமாம் தேவா....அதோட போறவழியில தவறாம ஜுஸ் கிடைச்சா வாங்கி சாப்பிடு. வயித்துக்கு இதமா இருக்கும். உடம்புக்கும் நல்லா இருக்கும்...” சகோதரிகள் கோரஸாக சொல்கின்றனர். அவனுக்கு சிரிப்பு வருகிறது. அப்படியே அவர்களை பார்க்கும்போது ஒரு கல்யாணத்தை இவர்களுக்கு செய்யவேண்டுமே என்ற கவலையும் சேர்ந்தே அரும்புகிறது.

‘ஒரு வருடம்... ஒரே வருடத்தில் சம்பளத்தில் சிக்கனப்படுத்தி முதல் காரியமா ஒருத்தியையாவது கரைசேர்க்க வேண்டும். அவனுக்குள் தீர்மானம் விழும்

சமயம் வாசல் புறமாய் காரின் சீற்றமான தேய்வு. இறங்கு பவள் லேகா!

# 40



**லே**காவின் வருகை தேவாவை என்னவோ செய் கிறது. சலிப்போடு பெருமூச்சு விடுகிறான். இதை சகோதரிகளும் கவனிக்கின்றனர். கவனித்தபடி லேகாவை யும் வரவேற்கின்றனர்.

“குதிரையாட்டம் துள்ளியபடி வருகிறாள்.

“என்ன தேவா... கோவா கிளம்பியாச்சா?”

முதல் கேள்வியே அதுவாகத்தான் இருக்கிறது.

“உம்.”

“ஆமா...எப்படி இருக்கு வீடு வசதியா இருக்கா?”

“இருக்கும்மா... உனக்கு, உங்கப்பாக்கெல்லாம் எப்படி நன்றி சொல்லப்போறோம்னுதான் தெரியலை. உக்காரும்மா...”

சிவகாமி கசிகிறாள்.

“நன்றியெல்லாம் வேண்டாம் ஆன்ட்டி...உங்க பிள்ளையை கொஞ்சம் சிரிச்சு பேசச் சொல்லுங்க அது போதும்...”

“நான் சிரிக்கிறது இருக்கட்டும். நீங்க எங்க மேடம் இவ்வளவு தூரம்?”

“நானும் உங்க கூட வரப் போறேனே...”

சின்னக் குழந்தை போல சொல்லிவிட்டு சுற்றி எல்லாரையும் பார்க்க அவர்கள் முகங்களில் எல்லாம் ஒரு சின்ன அதிர்ச்சி.

"நீங்களுமா?"

அதிக அழுத்தமுடன் கேட்கிறான் தேவா.

"என்ன நீங்களுமா... நானும் பிசினஸ் கத்துக்க வேண்டாமா... நீங்களே சொல்லுங்கம்மா..."

தேவா அடுத்த நொடி தலையில் கைவைத்தபடி பக்கத்து சோபாவில் அமருகிறான்.

"இப்படியெல்லாம் போஸ் கொடுத்தா விட்டுருவேனா என்ன? எனக்கும் இங்க போரடிக்குது. கோவாவோ சூப்பர்ப் ப்ளேஸ். ஸோ ஐ வில் கம் அண்ட் எஞ்ஜாய் தி ட்ரிப்"

தேவாவின் திணறலை சகோதரிகள் ரசிக்கின்றனர். சிவகாமி காபி போட்டு எடுத்துவர உள் செல்கிறாள்.

"நோ மேடம்... நீங்க என் கூட தனியா வர்றது நல்லது இல்லை..."

வேகமாக நிமிர்ந்து மறுக்க ஆரம்பிக்கிறான் தேவா.

"தனியா வராம ஒரு படையையேவா கூட்டிக்கிட்டு வருவாங்க."

"அப்பா சம்மதிச்சாரா?"

"அவர் சம்மதிக்காமலா...தி டிக்கெட்ஸ்"

அவள் ஹேண்ட் பேக்கை திறந்து ஏர் டிக்கெட்டை எடுத்து டேபிள்மேல் போடுகிறாள்.

"ஒன் மினிட்..."

-தேவா புதிதாக முதல்நாள்தான் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும்... டெலிபோனை நெருங்கி எண்களை சுழற்றி அருணாசலத்தை பிடிக்கிறான்.

“சார்... லேகாவும் என் கூட வராங்களா என்ன?”

“ஆமாம் தேவா....நானும் போவேன்னு ஒரே அடம்”

“சார் இது பிசினஸ் ட்ரிப்...”

“நானும் சொன்னேன் தேவா. கேக்கமாட்டேங்கறா எங்கேயாவது என்னை அனுப்புங்கறா. என்ன பண்ணட்டும். சரின்னுட்டேன்...”

“என்ன சார் நீங்க... யாராவது பார்த்தா தப்பா எடுத்துக்க மாட்டாங்களா?”

“நோ தேவா... யாரும் பார்க்கப் போறதில்லை. பார்த்தாத்தான் இப்ப என்ன? ஐ ட்ரஸ்ட் யூ! எனக்கு உன் மேல நம்பிக்கை இருக்கு. தைரியமாக கூட்டிகிட்டு போய்ட்டுவா. செலவை பத்தியும் கவலைப்படாதே. இன்ஃபாக்ட் இந்த ட்ரிப்ல நான் எதிர்பார்க்கற சில முடிவுகள் ஏற்பட்டா நான் ரொம்ப சந்தோஷப் படுவேன்....”

அருணாசலம் பூடகமாக பேசுவது மேலும் தேவா மனதில் பீதியை பரப்புகிறது. டெலிபோனை சோர்வாக வைக்கிறான். திரும்புகிறான்.

“ஆசைப்படறாங்க. கூட்டிகிட்டுதான் போய்ட்டு வாயேம்ப்பா.”

அம்மா வேறு சுருதி சேர்க்கிறாள்.

அவனுக்கு குழப்பமாகிறது.

❑ ❑ ❑

**ம**காதேவி மில்!

காரிலிருந்து இறங்குகிறார் கைலாஷ் உடன் விஜயன். செக்யூரிட்டியிலிருந்து க்ளார்க், மேனேஜர்வரை ஒருவர் பாக்கியில்லாதபடி சல்யூட் அடிப்பதும் விலகி நிற்பதும் விஜயனுக்கு புது அனுபவமாக இருக்கிறது.

எதிரே வரும் பர்சனல் ஆபீசர் மிக ப்ளீஸிங்காக "வெல்கம் சார்..."

என்கிறார் விஜயனைப் பார்த்து.

"மிஸ்டர் சந்தானம் இவன்தான் என் சன் விஜயன். இனிமேல் மில்லைப் பார்த்துக்கப் போறவன்..." அறிமுகப்படுத்துகிறார்.

"ஆமாம்...ஆபீஸ் பேரர்ஸ் எல்லாரையும் கூட்டி ஒரு மீட்டிங் போடச் சொல்லியிருந்தேனே ஏற்பாடு செய்துட்டீங்களா?"

நடந்தபடியே அவர் கேட்க பி.எம். பெரிதாக தலையை அசைக்க நடை தொடர்கிறது.

பிரம்மாண்ட மில் ஒருபுறம் அதன் ராட்சஸ ஓட்டம் போடும் சப்தம் மறுபுறம் மரங்கள் சூழ்ந்த ஆபீஸ் பகுதி அங்கு தெரியும் தூய்மை எல்லாமே விஜயனை புதிய அனுபவத்திற்கு தயாராக்குகிறது.

கைலாசத்தோடு வேகமாக நடக்க முடியாதபடி நடக்கிறான் விஜயன். அவர் நடந்து தன் அறைக்குள் நுழைகிறார்.

அவனும்சேர்ந்து நுழைகிறான். குபீரென்று முகத்தில் அறைகிறது ஏ.சி. இதமான ரோஜா வாசம் வேறு.

பிரம்மாண்ட மேஜை குஷன் நாற்காலிகள். ஓரமாக பர்சனல் கம்ப்யூட்டர், பிரிண்டர், ஃபாக்ஸ் மெஷின், சுவரில் தொங்கும் நவீன மேப்கள்.

அதில் மில்லின் தயாரிப்புகள் செல்லும் இடங்கள் எல்லாம் பச்சைப்புள்ளியால் கட்டமிட்டப்பட்டிருக்கின்றன.

"வாவ்..."

-வாயைப் பிளக்கிறான் விஜயன். கத்தரிக்கிறது இன்டர்காம். காதைக் கொடுக்கிறார் கைலாசம் மிகக் கடுமையாக முகம் மாறுகிறது.

எதனால்?



# 41

**கை**லாசம் கசங்கிப் போய் நிற்பதைப் பார்த்து விஜயனும் கேட்கிறான்...

"என்னப்பா...எனிதிங் பேட் நியூஸ்?"

"ஆமாம்ப்பா...."

"என்னப்பா..."

"ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகியிருந்த என் பி.ஏ. சேகர் செத்துப் போயிட்டானாம்..."

"ஐசீ...எப்படி?"

"உனக்கு சில விஷயமெல்லாம் தெரியாது. சேகர் என்னோட லாயல் பி.ஏ. பாவம் எனக்காக ஒரு விஷயத்துல இறங்கி பைத்தியமாகி இப்ப இறந்தும் போயிட்டான்..."

"என்னென்னமோ சொல்றீங்களே?"

"என்னென்னமோ நடந்தா என்னென்னமோ தானே சொல்ல வேண்டியிருக்கு..."

-நடுவில் கதைவை திறந்து கொண்டு உள்நுழை கிறார் பர்சனல் மேனேஜர்.

"சார் கான்ஃப்ரன்ஸ் ஹால்ல எல்லாரும் காத் திருக்காங்க..."

-அவர் சொன்னதை கேட்டு விஜயனை பார்க் கிறார்.

"அப்பா...மீட்டிங்கை வேணும்னா முதல்ல கேன்சல் பண்ணுங்க. என்னை அப்புறமா அறிமுகப்படுத்தலாம். முதல்ல அந்த சேகரை போய் பார்த்து மலர்வளையம் வெச்சுட்டு வருவோம்..."

-பொறுப்புணர்ச்சியோடு, சேகர் எக்ஸ்பையர்ட். ஸோ மீட்டிங் கேன்சல்..."

"நானும் சொல்ல நினைச்சேன் சார். ஆபீஸ் நோட்டீஸ் போர்டுல கண்டலென்ஸ் நியூஸ் போட்டுடலாமா?"

"ஷ்யூர். அப்படியே காஸ்ட்லியா ஒரு மலர்வளை யம் அப்புறமா சேகரோட பி.எஃப், கிராஜுவிட்டி, அதர் சேவிங்க்ஸ் எல்லாம் எவ்வளவுன்னு பார்த்து அதோட கூடுதலாக இரண்டு லட்சம் சேர்த்து ஒரு செக்!

ரெடி பண்ணிட்டு எனக்கு தகவல் தாங்க நாம கிளம்புவோம்..."

"ஓ.கே. சார்..."

-கைலாசம் நெற்றியில் தேய்த்தபடி தன் நாற் காலியில் அமருகிறார்.

"உக்காரு விஜய்..."

-என்கிறார்.

"இருக்கட்டும்பா...கவலைப்படாதீங்க. நான் பார்த் துக்கிறேன். இனிமே அவர் விதி முடிஞ்சுபோனா நாம என்ன பண்ணமுடியும்?"

"நோ...விதி முடியல விஜய் முடிக்கப்பட்டது. இங்க மட்டுமல்ல...கல்கத்தா மாப்ளை விஷயத்துலையும்..."

"என்ன சொல்றீங்க?"

"எல்லாம் பிருந்தாவால வந்த வினை..."

"கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்..."

"சொல்றேன்...சொல்றேன்..."

கைலாசம் மீனாட்சி அம்மன்கோயிலில் முத்தத்தில் தொடங்கியதில் இருந்து பிருந்தா சத்யம் செய்து கொடுத்ததுவரை சகலத்தையும் கூறி நிறுத்துகிறார்.

"ரொம்ப ஆச்சரியமா இருக்குப்பா. ஒரு வயசான கிழவருக்கு இவ்வளவு சக்தியா?"

"எனக்கும் அந்த ஆச்சரியம்தான். ஆனா நம்பாம இருக்க முடியலை..."

"அப்போ அந்த தேவாதான் அந்த கிழவரை கைல போட்டுகிட்டு இதை எல்லாம் செய்துருக்கானா?"

"ஆமாம்... சேகர் சாவு, மாப்ளை ஆக்சிடெண்ட் எல்லாம் அந்த கிழவன் வேலையாதான் இருக்கணும்..."

"அதுசரி... இப்ப அந்த கிழவன் எங்கே?"

"எப்பப்பார் மீனாட்சி அம்மன் கோயில்லதான் இருப்பானாம்."

"நான் போய் பாக்கறேன்...எப்படி இருப்பான் அந்த ஆள்..."

"எனக்கு தெரியாது. பிருந்தாவுக்கு தெரியும். நீ வேணா ஒருநாள் அவளோட கோயிலுக்கு போகும் போது போய் பாரேன்"

"ஷ்யூர் டாட். அந்த கிழவனை என்ன செய்றேன், பாருங்க..."

“ஏய் ஃபூல்...அந்த மாதிரி நபர்கள் கிட்ட ரொம்ப எச்சரிக்கையா நடந்துக்கணும் ஞாபகம் வெச்சுக்கோ...”

“அதையும் பார்ப்போமே...”

“நோ... ஆளை மட்டும் பாத்து வெச்சுக்கோ. மிச்சத்தை பின்னால பார்த்துக்கலாம். இப்போதைக்கு சேகர் பாடிக்கு மரியாதை செய்யக் கிளம்புவோம்...”

கைலாசம் சொல்லி முடிக்க, பி.எம். “செக் ரெடி சார்” என்று முன்வர மூவரும் கிளம்புகின்றனர்!

❑ ❑ ❑

**கோ**வா!

கொஞ்சம் அழகு, பிகினி டிரஸ் கன்னிகள், பெர்முடாஸ் ட்ரவுசர் தொப்பித் தலையர்கள், என்று வண்ணம் காட்டி மின்னிக் கொண்டிருக்கிறது.

கர்ட்டனை விலக்கி லாட்ஜ் அறையின் முன்னாடி ஜன்னல் வழியாக இந்த அழகை ரசித்தபடி நின்று கொண்டிருக்கிறான் தேவா. பின்னாலேயே அவனை கழுத்தை அணைத்துக் கட்டிக் கொள்ளத் தயாராக லேகா!

இப்படி கட்டி அணைத்து அவனை திக்குமுக்காட விடவேண்டும்.

பிறகு அவன் திணறும் போது ‘ஐ லவ் யூ தேவா’ என்று அவன் காதில் சொல்லிவிட வேண்டும். இதற்கு மேலும் விஷயத்தை போட்டு இழுக்கக் கூடாது. தீர்மானத்துக்கு வருகிறாள்.

மனதிற்குள் சொல்லிக் கொள்கிறாள். ஒன்-டூ-த்ரி ஹய்...’ பாய்ந்து அவன் கழுத்தை கட்டிக்கொள்ள திடுக்கிட்டுப்போகும் தேவா அவளை விடுவித்து நேருக்கு நேர் நிறுத்தி கண்கள் சிவக்க ஓங்கி ஓர் அறை விடுகிறான்.

# 42



அறையா அது?

கண்களில் கண்ணீர் துளிர்த்துவிட்டது. காதில் விமானம் பறப்பதுபோல் ஒரு சப்தம் வேறு.

பனித்த கண்களுடன் கொஞ்சம் அதிர்ச்சியும் கலந்து லேகா அவனை பார்க்கிறாள். அவனுக்கே என்னவோ போல் ஆகிவிட்டது.

“சாரி...ஐ ஆம் சாரி...” தடுமாறிபடி தன் தவறுக்கு அவள் முன் வருத்தம் தெரிவிக்கிறான். அவள் சிறிது வினாடி அவனை உற்று நோக்கிவிட்டு, மெல்ல இதழ் பிரிக்கிறாள்.

“ஐ லைக் இட்...ஐ லைக் இட் தேவா! ஆம்பிளைன்னா இப்படிதான் இருக்கணும். இந்த அறையை நான் ரசிக்கிறேன். ஏன் தெரியுமா?”

அவன் அதிர்ந்துபோய் அவளில் ஊன்ற அவள் தொடர்கிறாள்.

“அறையற, சந்தர்ப்பத்துல நீங்க என்னை தொட்டுட்டீங்க பாருங்க. அதுவே எனக்கு பெருசு. அது மட்டுமல்ல ஒரு ஆண் ஒரு பெண் மேல எவ்வளவு பொசசிவா இருந்தா இப்படி நடந்துக்குவான்னு எனக்கு தெரியும். எனிவே...ஐ ஆம் ஹாப்பி.. வெரி ஹாப்பி...”

தேவாவுக்கு அவள் பதில் எரிச்சலை மூட்டுகிறது. விஷயம் பிள்ளையார் பிடிக்க குரங்காகி விட்டதையும் புரிந்துகொள்ள முடிகிறது. தலையில் கைவைத்து நெற்றி தேய்த்து பேசுகிறான்.

"லுக் லேகா...நீ என் முதலாளி மக. கிட்டதட்ட சோறு போட்ற தெய்வம். நான் உன் ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் மதிப்பு கொடுத்தா அதுக்கு பேர் நன்றி கெட்டதனம்.

சில சமயங்கள்ல வாங்க போங்கன்னும், சில சமயங்கள்ள இப்படி வா போ நீன்னும் பேசறதையே நான் பெரிய தப்பா நினைக்கறேன்.

"நீ போய் உன்னிலை மறக்கலாமா?"

"அப்படின்னா?"

"எனக்கு சுத்தி வளைச்சுபேசத் தெரியாது லேகா. நான் நேரா விஷயத்துக்கு வரேன், நீ என்னை நேசிக்கிறது எனக்கு தெரியுது. ஆனா என்னால உன்னை..."

முடிக்க முடியாமல் கலங்கிப் போகிறான்.

பிருந்தாவை நேசிக்கிறேன் என்றால் தாங்குவாளோ மாட்டாளோ...? இந்தப் பக்கம் நீ பணக்காரி, நான் ஏழை ஒத்துவராது என்கிற ரீதியில் பேசிவிட்டு அந்த பக்கமாய் இவளைவிடவும் பெரிய பணக்காரியை காதலிக்கிறேன் என்று சொன்னால் அதை லேகா எப்படி எடுத்துக்கொள்வாள். என்று தெரியவில்லை. அவனுக்கு குழப்பமாகிறது. தடுமாறியபடியே நிற்கிறான்.

"தேவா... என்கிட்ட உனக்கு எது பிடிக்கலை?" அவள் கேவியபடி கேட்கிறாள்.

"நீ தேவதை... உன்கிட்ட பிடிக்காம போக எதுவுமே இல்லை லேகா. நான்தான் சாதாரண மனுஷன் போன மாசம் இந்த நாள் பட்டம் கூட வாங்கியிராத ஒரு ஏழை மில் தொழிலாளி மகன் நான். மீனாட்சி அருளால இன்னிக்கு உங்க கடை மேனேஜராகியிருக்கேன். இந்த உயர்வே எனக்கு அதிகமா தெரியுது. இதுல கடைக்கு

சொந்தக்காரி மேலே ஆசைப்பட்டா அது நல்லாவா இருக்கும்...”

“நோ... இது பத்தாம் பசலித்தனமான பேச்சு. காதல்ங்கறது ஆள் பார்த்து, அந்தஸ்து பார்த்து வர்றது கிடையாது தேவா. அது கேரக்டர் பார்த்துதான் வர ணும். எனக்கும் அப்படித்தான்னு நினைக்கிறேன்...”

“ப்ளீஸ் லேகா... வேண்டாம் எனக்காக என் அத்தை மகள் காத்திருக்கா.”

சட்டென்று ஒரு பொய்யை அவிழ்க்கிறான். லேகா திடுக்கிட்டு நிமிர்கிறாள்.

“அத்தை மகளா... யார் அது?”

“அவ பேரு. அவ பேரு ராதா. எனக்கும் அவளுக் கும்னு சின்ன வயசுலேயே முடிச்சு போட்டாச்சு...”

“இது ஏன் முன்னாலேயே சொல்லலை...?”

கண்கள் கலங்க நிமிர்கிறாள்.

“இப்ப தானே உன் விருப்பத்தையே நான் புரிஞ்சு கிட்டேன்.”

அவன் சொல்லவும் அவள் இடிந்ததுபோல் ஆகி றாள். பக்கத்து படுக்கையில் போய் விழுகிறாள் அவ னிடம் தான் தப்பித்தது போல் ஒரு உணர்வு.

❑ ❑ ❑

**பி**ருந்தா கோயிலுக்கு கிளம்பிக் கொண்டிருக் கிறாள். அமைதியாக புடவை ரவிக்கை என்று உருமாறி திருத்தமாக குங்குமமெல்லாம் இட்டுக்கொண்டு அவள் கிளம்புவதையே உன்னிப்பாக கவனித்துக் கொண் டிருக்கிறான் விஜயன்.

அவள் காரில் ஏறவும் பின்னாலேயே யமஹாவில் தொடர ஆரம்பிக்கிறான். கோயிலுக்குள்ளும் பூனை போல் பின் தொடர்கிறான். அவள் நேராக விபூதி பிள்ளையார், அம்மன் சந்நிதி பின்சுவாமி சந்நிதி என்று போய்விட்டு சனீஸ்வரனையும் வணங்கிவிட்டு கம்பத் தடி மண்டபம் வரும்போது மண்டபத்து கிராதி... மேல்சாய்ந்தபடி உட்கார்ந்திருக்கிறார் பசுபதி. அவரை நெருங்கும் அவளை சிரித்தபடி வரவேற்று உட்காரச் சொல்கிறார். அவளும் உட்காருகிறாள்.

"சாமி நீங்க சொன்ன மாதிரி கல்யாணம் நடக் கலை.

எனக்கு நிச்சயம் செய்த மாப்ளைக்கு கல்கத்தாவுல ஆக்சிடெண்ட் ஆயிடிச்சு. கல்யாணமும் நின்னு போச்சு! ஆனா அதுக்கு நீங்கதான் காரணம்னு நினைக்கிறார் அப்பா..."

அவர் அதை கேட்டு சிரிக்கிறார்.

"அப்புறம்...?"

"தேவானவை நினைக்கக்கூடாது பார்க்கக்கூடா துன்னு சத்யமும் வாங்கிட்டார்..."

"மொத்தத்துல உன்னை தூக்கி ஜெயில்ல போட் டுட்டார்."

"ஆமாம்... நான் இன்னிக்கு கோயிலுக்கு வந்ததே உங்களைப் பார்க்கத்தான், என் மனநிலை இப்ப எப்படி இருக்குன்னு உங்களுக்கு சொல்லத் தேவையில்லை. இனி எப்படிப் போகும்னு கொஞ்சம் சொல்லுங் களேன்..."

அவள் கோரிக்கையை கேட்டு பசுபதி தாடியை தடவி விட்டுக் கொள்கிறார்.

"அது மட்டுமல்ல சாமி... புதுசா எனக்கு ஒரு சித்தி அண்ணன் எல்லாம் முளைச்சிருக்காங்க. அப்பாவோட சின்ன வீடாம். இப்ப என் வீட்டுக்கே வந்துட்டாங்க. எனக்கு எதுவுமே பிடிக்கலை..."

பசுபதி அதையும் கேட்டுக் கொள்கிறார். ஆனால் எதையும் பேசாமல் யோசித்தபடியே இருக்கிறார்.

கச்சிதமாக இப்பொழுது பிருந்தா பின்னால் வந்து சேருகிறான் விஜயன்.

"அப்பா சொன்ன மாயச்சாமியார் இவர்தானா?"

-என்கிற கேள்வியோடு...

# 43



**வி**ஜயனை அங்கே பிருந்தா துளிகூட எதிர்பார்த்திருக்கவில்லை.

"ஏய் நீ இங்க...?"

"இங்க தான்...உனக்கு தெரியாம உன்னைஃபாலோ பண்ணி வந்தேன். நீ இந்த சாமியாரை சந்திப்பேன்னு தெரியும்."

"உனக்கு இவரை பற்றி?"

"அப்பா எல்லாத்தையும் சொன்னார். சேகர் சாகவும், கல்கத்தா மாப்ளைக்கு ஆக்சிடெண்ட் உருவாகவும் இந்த நபர்தான் காரணம். அது மட்டுமில்ல அந்த தேவா உன்னை நேசிக்கவும் நீ அவனை நேசிக்கவும் கூட இந்த சித்து வேலைக்காரன்தான் காரணம். இதெல்

லாம் தெரிஞ்சுதான் இந்த நபரை சந்திக்க வந்திருக்கேன்.என்ன சித்து வேலைக்காரரே ... இன்னும் என்னென்ன எல்லாம் திட்டம் வெச்சிருக்கீங்க..."

விஜயன் படபடவென்று பொரிந்து தள்ளுகிறான். பசுபதி முகத்தில் துளிகூட பதற்றமோ, அதிர்ச்சியோ இல்லை. ஆனால் பிருந்தா பதறிப் போகிறாள்.

"விஜயா... இவரைப் பத்தி தெரியாம பேசறே நீ இவர் ஒரு மகான்..."

"மகானா...எந்த மகான் மனசை மயக்கி முத்தம் கொடுக்க செய்துருக்கார்? எந்த மகான் அடுத்தவங்க காதல் விஷயத்துல எல்லாம் தலையிட்டிருக்கார்? மகான்னா மோட்சத்துக்கு வழிகாட்டணும், தப்பே செய்தாலும் மன்னிக்கணும். இவர் அப்படிப்பட்டவரா என்ன?"

"விஜயா நீ அதிகம் பேசறே..."

"பேசட்டும் விடம்மா..." பசுபதியும் நடுவில் நுழைகிறார்.

"சாமி...என்ன நீங்களும்? இவன் புரியாம பேசறான். இவன்தான் எனக்கு புதுசா முளைச்சிருக்கிற அண்ணன்."

"அண்ணன்மட்டுமில்ல சரியான அவசரக் குடுக்கையும் கூட...."

"யார் அவசரக்குடுக்கை. நானா?"

"பொறுப்பா ...எதுக்கு இத்தனை கோபம்?"

"கோபப்படாம...சேகரை அநியாயமா பைத்தியம் பிடிக்க செய்து கொன்னுட்டீங்களே..."

"நான் கொல்லலை... அவன் சூனியத்தை நான் திருப்பி விட்டேன். அவ்வளவுதான்."

"அது போதாதா?"

"அப்படி திருப்பலைன்னா ஒரு பாவமும் அறியாத தேவா இறந்துருப்பான் தம்பி, அது மட்டும் சரியா?"

"அவன் எதுக்கு என் சிஸ்டருக்கு குறி வைக்கறான் நிறைய சொத்து இருக்குன்னுதானே?"

"உங்க சொத்தெல்லாம் சுண்டைக்காய் தம்பி, அவனே ஒரு பெரிய சொத்து. அவன் சம்பாதிக்கப் போறான். உங்க சொத்தை போல பல மடங்கு..."

"என்ன உங்க மந்திர தந்திரத்தாலையா?"

"அவனோட திறமையாலே..."

"இந்த ஜென்மத்துல நடக்காது...எங்க சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?"

"அது போகப்போக என்னாகப் போகுதுன்னு உனக்கு தெரியுமா?"

"என்ன...எனக்கே ஜோசியம் சொல்லப் போறீங்களா?"

"இல்ல தம்பி...ஏதோ என் மனசுல தோன்றத சொல்றேன். உன் சொத்தெல்லாம் மண்ணோட மண்ணாகப் போகுது...

தேவா தன் சுய உழைப்பினால் மேலே உயரேன்னு உச்சிக்கு போகப் போறான். நீ பார்க்கத்தான் போறே."

"அதுல உங்க பங்கு என்ன?"

"வெறும் பிரார்த்தனை. அவ்வளவுதான்."

"வேற எந்த உதவியும் செய்யமாட்டீங்களா?"

"சோமசுந்தரர் மேல சத்யமா செய்யமாட்டேன்."

"சரி நீங்க சொல்ற மாதிரி நடக்கலேன்னா?"

“நீ என்ன சொன்னாலும் கேட்கறேன்.”

“சரி...இதுக்கு நான் சம்மதிக்கிறேன். பாக்கறேன் உங்க வாக்கு எப்படி பலிக்குதுன்னு...”

“அதுக்கு முந்தி ஒரு விஷயம் தம்பி...”

“என்ன?”

“உன் காதல் விஷயத்துல நிதானமா போ இல்லேன்னா ரொம்ப ஆபத்தாயிடும்...”

“என் காதல் விஷயத்துல...அது எப்படி உங்களுக்கு தெரியும்?”

-அவர் சிரித்தபடி சொல்கிறார்.

“நான்தான் மாயக்காரனாச்சே...” அவனை அது குத்துகிறது. அவரை முறைத்தபடி கிளம்புகிறான். போகும்போது திரும்பவும் சொல்லுகிறான். “இந்த கோயில் சாமி மேல சத்யம் செய்திருக்கீங்க. ஞாபகம் வெச்சுக்குங்க...”

நீயும் காதல் விஷயத்தை ஞாபகம் வச்சுக்க.

-அவன் வேகமாய் வெளியேறுகிறான். பிருந்தா கலக்கமாய் இருந்தவள் சற்று தெளிந்திருக்கிறாள்.

“சாமி...தேவா நீங்க சொல்றமாதிரி பெரிய மனுஷன் ஆயிடுவாரா?”

“நிச்சயம் ஆயிடுவான்மா... கவலைப் படாதே. உன்னை மறக்காம தேடிவருவான். ஆனா நடுவுல சில பரீட்சைகள் இருக்கு. அதைத்தாண்டனும். அதை நல்ல விதமா தாண்ட பிரார்த்தனை செய். உன் சத்தியத்துல நில்லு. அதை விட்டு விலகிடாதே...”

“நிச்சயமா சாமி...” பிருந்தா கவலையோடு வந்து விட்டு இப்பொழுது சந்தோஷமாக கிளம்புகிறாள்.

# 44



**ய**மஹா உள் நுழைகிறது.

வெளியே கிளம்பிக் கொண்டிருந்த கைலாஷ் சப்தம் கேட்டு தன் புறப்பாட்டை சற்றுத் தள்ளிப் போடுகிறார். உள்நுழைகிறான் விஜயன். முகத்தில் கலக்கம், கவலை, கோபம் கொப்பளிப்பு எல்லாம்...

"விஜயா..." கூப்பிடுகிறார் கைலாஷ். நின்று அவரைப் பார்க்கிறான். "போன காரியம் என்னப்பா ஆச்சு?"

"ப்ச்ச்ச்."

"இப்படி சொன்னா எப்படி...பிருந்தா அந்த கிழவனை சந்திச்சாளா? பார்த்தியா அவனை..."

"உம்...பார்த்தேன்."

"என்ன சொன்னான்..."

"நமக்கு சாதகமா எதையும் சொல்லலை. அதே சமயம் பிருந்தாவும் அவனை மறக்கலை டாட்."

"நடந்ததை முழுசா சொல்லு...இப்படி பிச்சு பிச்சு பேசினா என்ன அர்த்தம்?"

-விஜயன் நடந்தது முழுவதையும் கூறி முடிக்கிறான்.

கைலாஷ் இறுகிப் போய் விட்டிருக்கிறார்.

"நம்ம மில்லுல வேலை பார்க்கற ஒரு சாதாரண வைண்டர் பையன் நமக்கு மேல் உயருவானாம். இதை தடுக்க முடியாதாம். கதை விட்றாரு அந்த ஆள்..."

"நீ என்ன சொன்னே?"

"எப்படி முன்னுக்கு வர்ரான்னு பாக்கறேன்னு சொன்னேன்..."

கச்சிதமாக குறுக்கிடுகிறாள் வைதேகி.

"என்ன அப்பாக்கும், பிள்ளைக்கும் இடைல வாக்கு வாதம் பலமா இருக்கு..."

"எல்லாம் பிருந்தா பத்திதான்..."

"விஜயன் ஒரு அவசரக்காரன், அவன் பேச்சை வெச்சு ஒரு முடிவுக்கு வந்துடாதீங்க..." -மகனாக இருந்தாலும் உண்மை பேசுகிறாள் வைதேகி. அது அவனைக் கூட குத்துகிறது.

"அம்மா... நாங்க என்ன பேசறோம்னு தெரியாம பேசாதே..."

-கோபமாய் கத்துகிறான்.

"தெரிஞ்சுதான்பா பேசறேன். யாரோ ஒரு பையன் உங்களை மாதிரி முன்னுக்கு வருவான்னு ஒரு பெரியவர் சொல்லியிருக்கார். தாராளமா வந்துட்டு போகட்டுமே... இதுல நீங்க பொறாமை எதுக்கு படணும்?"

"அவன் யாரோ இல்லை... பிருந்தாவை காதலிக்கறவன்."

"அப்ப இன்னும் வசதியா போச்சு. இதுக்காக சந்தோஷம்ல படணும்."

"என்ன சொல்றே வைதேகி."

"என்னங்க பின்ன... நம்ம மகளுக்கு மாப்பிள்ளையா வரப்போறவன் சோம்பேறி, உழைப்பில்லாதவன், அதிர்ஷ்டக்கட்டைன்னா, கவலைப்படணும். இவன்தான் உங்களுக்கு சரியா முன்னுக்கு வருவான்னு சொல்றீங்களே..."

"அப்பா...அம்மாகூட முதல்ல பேச்ச நிறுத்துங்க. இல்லாத நியாயம் பேசுவாங்க. இதோ பாரும்மா... நம்ம மாதிரி-அவன் முன்னுக்கு வரக்கூடாது. ஞாபகம் வெச் சுக்கோ..."

"அப்படிச் சொல்லு விஜயா..." -கைலாசம் சேர்ந்து தாளம் போடுகிறார். ஆனால் வைதேகி அது தப்பு என்பதுபோல பார்க்கிறாள். இனி பேசிப் பயனில்லை என்று நழுவுகிறாள்.

ஆனால், இவ்வளவையும் தன் அறையில் இருந்த படி கேட்டுக் கொண்டிருக்கும் பிருந்தா முதல்முறையாக வைதேகியை நினைத்து சற்று பெருமிதம் கொள்கிறாள்.

மனதுகூட சொல்லிப் பார்க்கிறது.

"சித்தி நீங்க இவ்வளவு நல்லவங்களா?"

❑ ❑ ❑

**க**ல்லூரிச் சாலை! மொத்த டீன் ஏஜ் கூட்டமும் தன்னை பிரசாந்த், கார்த்திக் என்று நினைத்துக்கொண்டு மிடுக்கு நடைபோட்டபடி இருக்க அங்கங்கே கொத்துக் கொத்தாக யுவதிகள் கூட்டம்!

அவர்களுக்கு நடுவில் தூக்கலான அழகுடன் பார்க்க அச்சு அசல் ரதிமகளாகவே இருக்கிறாள் லேகா. சரியான பணக்கார போஷாக்கு! நிறைய விடலைகள் பார்வை அவள் மேல்தான் இருக்கிறது. ஆனால், அவ ளிடமோ சர்வ அலட்சியம்.

அதிசயமாக சியலோ காரில் வந்து உரசியபடி நின்று மிடுக்காக இறங்குகிறான் விஜயன். விஜயனை அப்படி காரில் அவள் துளிகூட எதிர்பார்த்திருக்க வில்லை. அதன் எதிரொலி முகத்தில் தெரிகிறது.

"ஹாய்..."-விரல்களை லாகவமாய் அசைக்கிறான். அவள் முகத்தை திருப்பிக் கொள்கிறாள்.

"லேகா உன்னைத்தான்... உனக்குதான் நான் ஹாய் சொன்னேன்."

"நீ சொன்னா நான் சொல்லணுமா?"

"இதோ பார்...நீ...கோடீஸ்வரன் பொண்ணு என்னையும் சாதாரணமா எடை போட்டுடாதே. நானும் இப்ப கோடீஸ்வரன் பையன்தான், என்னை காதலிக்க உனக்கு ஏன் தயக்கம். என்கிட்ட என்ன இல்லை?"

"எல்லாம் இருக்கு...கூடவே வைப்பாட்டி மகன்கற அருவருப்பான பேரும் சேர்ந்தே இருக்கு...'

"நோ... அப்படி சொல்லாதே. இப்ப நான் அப்பா அம்மா எல்லாம் சேர்ந்தேதான் இருக்கோம்..."

"சேர்ந்து இருந்துட்டா உன் அசிங்கம் மாறிடுமா? முட்டாள்...சாகற வரை நீ சின்ன வீட்டு பையன்தான். நான் அப்படி இல்லை. ஏழையா கூட என் லவ்வர் இருக்கலாம், ஆனால், உன்னை மாதிரி கறை படிஞ்சவனா..."

-லேகா அவனை ஆழமாகவே கீறுகிறாள். நெஞ்சைக் கையில் பிடித்துக் கொள்கிறான். 'வைப் பாட்டி மகன், வைப்பாட்டி மகன்' என்று அது அடித்துக் கொண்டு கேலி செய்கிறாற்போல இருக்கிறது.

எப்பொழுதுமே காதல் இப்படித்தான், உருவ அழகில் உருவாகி பின்னர் பலமாதிரி விபத்துக்குள்ளாகி நெருப்பை உருவாக்குவதில் அதற்கு இணையான ஒன்று உலகில் எதுவுமே கிடையாது. அதனால்தான் ஆயிரம் காவியங்கள், கதைகள், வரலாறுகள், சம்பவங்கள்!

இன்று விஜயன் மனதிலும் காதல் தன் பங்கை கச்சிதமாகச் செய்கிறது. வைப்பாட்டி மகன் என்று

சொன்ன உன்னை பதிலுக்கு வைப்பாட்டியாக்கி காட்டு கிறேன். சமூக அந்தஸ்தோ, கௌரவமோ துளியும் கிடைக்காத படி செய்கிறேன். வீதியில் இறங்கி நீ நடக்க விடாதபடி அது பார்த்துக் கொள்ளும். சபதம் செய் கிறான் விஜயன்.



# 45

**ச**பதம் செய்தபடி சியலோவை கிளப்புகிறான். அது சீறிப்பாய்கிறது. அவன் செல்வதையே முறைத்துப் பார்க்கிறாள் லேகா. கூடவே இருக்கும் சினேகிதி கேட் கிறாள்.

"எதுக்கு லேகா அவனை அப்படிச் சொன்னே?"

"நான் சொன்னதுல என்ன தப்பு?"

"வைப்பாட்டி மகன்னு எதுக்கு சொல்லணும். அது எந்த ஆணையும் புலியாக்கிடும் லேகா..."

"ஆகட்டும், இவனும் புலியாகட்டும். என் பின் னால சுத்தற நாயா இல்லாம புலியா மாறினா நல்லது தானே?"

"தப்பு லேகா... நாய்க்கு மனுஷங்களை கடிக்கத் தெரியாது. ஆனா புலி அப்படி இல்லை. அது பிடிச்சு விழுங்க ஆரம்பிச்சா நாம தாங்க முடியாது..."

"கவலைப்படாதே... நான் வேட்டைக்காரி, இந்த புலியை சுட எனக்கு தெரியும்..."

"பதிலுக்கு பதில் இங்க சொல்றது பெரிசில்ல லேகா. வாழ்க்கைல சொல்றது ரொம்ப கஷ்டம். இந்த

காலத்துல யாரை யார் காதலிக்கலை? சினிமாவும், கதை புஸ்தங்களும் நமக்கு முதல்ல சொல்லிக் கொடுக்கறதே அதை தானே? பிடிச்சா பிடிச்சிருக்குன்னு சொல்லு. பிடிக்கலைன்னா பிடிக்கலைன்னு சொல்... எதுக்கு அநாவசிய வார்த்தைகள்."

"ஏய்... நான் பிடிக்கலேன்னு சொல்லிட்டேன். அதுக்கு பிறகும் சுத்தி சுத்தி வந்தா என்ன அர்த்தம்..."

"அப்புறமாவது காதலிக்கமாட்டியாங்கற நப்பாசைதான்."

"நப்பாசைக்காரங்களை அப்ப இப்படித்தான் இடிக்கணும்..."

"சரி... நான்தான் கேக்கறேன். விஜயன் கிட்ட என்ன குறையை பாக்கற..."

"சாரிடி...நான் அல்ரெடி என்கேஜ்டு..."

"நிஜமாவா? யாருடி அந்த அதிர்ஷ்டக்காரன்"

"பேர் தேவா. எங்க கடை மேனேஜர்."

"மேனேஜரா?"

"என்னடி மேனேஜரான்னு இழுக்கிறே? ஹி ஈஸ் மேனேஜ் நாட் ஒன்லி இன் அவர் ஜுவெல்லரி. ஹி மேனேஜ்டு எவ்ரி திங்க்"

"ஆல் த பெஸ்ட்"

"என்னத்த ஆல் த பெஸ்ட்... நான் லவ் பண்ணினா ஆச்சா தேவா என்னை லவ் பண்ணணுமே?"

"அப்ப இதுக்கு பேர் காதல் இல்லை. இது ஒரு தலைராகம்."

"தெரியும். நிச்சயம் இருதலை ராகமா மாறும் மாத்துவேன்..."

“எப்படி?”

“பொறுத்திருந்து பார்...”

லேகா எந்த அர்த்தத்தில் அப்படி சொல்கிறாள் என்று தெரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதி யாக புரிகிறது. அவள் தேவாவை மறப்பதாக இல்லை.

❑ ❑ ❑

**தே**வா வீடு. அம்மா சமையல் செய்து கொண் டிருக்கிறாள். அக்காக்களில் ஒருத்தி எம்பிராய்டரியில், இன்னொருத்தி தையல் மெஷினில்...

வாசலில் நிற்கும் காரிலிருந்து இறங்குகிறாள் லேகா. குதிரை கணக்காக உள்ளே நுழைகிறாள். அவளைப் பார்க்கும் தேவாவின் சகோதரிகள் துள்ளிக்கொண்டு எழுந்திருக்கின்றனர்; கோரஸாக வரவேற்கின்றனர்.

“வாங்க...வாங்க...”

“எப்படி இருக்கீங்க?”

“நல்லா இருக்கோம்...கோவா ட்ரிப் இருந்திச்சா?”

“சூப்பர்...உங்க அண்ணன்கூட இருந்தாரா ரொம்ப ஜாலியா கழிஞ்சிச்சு...” லேகாவின் விளக்கம் சகோதரிகள் இடையே வேறுவிதமாய் சங்கடத்தை உருவாக்குகிறது.

“ரொம்ப ஜாலியான்னா?” பெரியவள் சந்தேக மாய் கிண்டுகிறாள்.

“ரொம்ப ஜாலியான்னா... ரொம்ப ஜாலியான்னு தான் அர்த்தம். ஆமா தேவா எதையும் சொல்லலையா?”

“அவன் எங்ககிட்ட பிஸினஸ் விசயமெல்லாம் பேச மாட்டான். அதுலையும் இந்த தடவை என்ன நடந்துச்சின்னே தெரியலை. ரொம்ப கோபமா இருந் தான். உங்களுக்குள்ள ஏதாவது சண்டையா?”

லேகா அந்த கேள்வி முன் சற்று முகம் சுண்டு கிறாள்

“ஆமாம்...உங்க பேர் என்ன? சொல்லவே யில்லையே...”

“என்பேர் சாவித்ரி, இவ பேர் சந்திரா...”

“உங்களுக்கு என்னை பிடிச்சிருக்குதானே”

“எதுக்கு இப்படி கேக்கறீங்க?”

“இல்ல சும்மாதான் கேக்கறேன். பிடிச்சிருக்கா. பிடிக்கலையா”

“பிடிச்சிருக்கு...பிடிச்சிருக்கு...”

“ஆனா...தேவா என்னை பிடிக்கலேன்னு சொல்றார்.

லேகா சுற்றி வளைத்து எங்கே வருகிறாள் என்பது புரிந்தவளாக சந்திராவும், சாவித்ரியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர்.

அவன் பிருந்தாவிடம் மயங்கி இருப்பதுதான் இருவருக்குமே அரசல் புரசலாக தெரியுமே...

“என்ன பேசமாட்டேங்கிறீங்க... நான் தேவாவை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா?” கிட்டதட்ட லேகா கண்கலங்கும் அளவு போகிறாள். சகோதரிகள் இரு வரும் ஒதுங்குகின்றனர்.

“சாவித்ரி இது தப்பான ஆசை... நம்ம தேவாக்கு ஆனாலும் மச்சம்டி....இந்த பக்கமும் கோடீஸ்வர பொண்ணு காதலிக்குது. இந்த பக்கமும் கோடீஸ்வர பொண்ணு காதல். இது எதுலை போய் முடியும்னு தெரியலையே...”

“அதானே....இது இப்படி வீடுதேடி வரும்போதே நினைச்சேன் விபரீதமா எதாவது இருக்கும்னு...”

“இப்ப என்ன பண்ணலாம்?”

“அந்த பிருந்தாவுக்கு இவ எவ்வளவோ மேல் சந்திரா. இவங்க நமக்கு நல்ல வாழ்க்கை கொடுத்த வங்க...”

“அதனால...”

“தேவாவை நாம பாத்துப்போம். இப்போதைக்கு இவளை சமாளிச்சு தைரியம் சொல்லி அனுப்பி வைப் போம் என்ன?”

“தைரியம் சொல்லின்னா எப்படி?”

“வந்து பாறேன்...”

சந்திரா சோகமாக அமர்ந்து கொண்டிருக்கும் லேகா அருகில் வந்து தலையை வாஞ்சையாக வருடி விடுகிறாள். பின்

“கவலைப்படாதீங்க...தேவா உங்களை லவ் பண்ணு வான். அதுக்கு நாங்க பொறுப்பு”

லேகாவிற்கு உச்சி முதல் பாதம் வரை அதன் காரணமாக சிலிர்க்கிறது.

“நிஜமாவா சொல்றீங்க....”

“சத்யமா... என் தம்பிக்கு பெரிய அந்தஸ்து கொடுத் தது நீங்கதான். உங்களுக்கு நாங்க கடமைப்பட் டிருக்கோம் அந்த பிருந்தாவுக்கு இல்லை...”

“பிருந்தா?”

“உங்களுக்கு தெரியாதா... மில் ஓனர் கைலாஷ் டாட்டர் பிருந்தா. தெரியும்னு நினைச்சிருந்தோம்...”

“இல்லை... அத்த பொண்ணு ராதாவைதான் கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொன்னாரு...”

"அத்த பொண்ணு ராதாவா? அப்படி யாருமே கிடையாதே" சாவித்ரியும், சந்திராவும் உண்மைகளை போட்டு உடைக்க லேகாவின் முகத்தில் இப்பொழுது அசாத்ய மாற்றங்கள்...



# 46

**பெ**ட்டி நிறைய பேங்கில் கட்ட வேண்டிய பணம், கிட்டத்தட்ட முப்பது லட்சரூபாய் பணத்துடன் கிளம்பத் தயாராக இருக்கிறான் தேவா. உடன் கடையின் கேஷியர் ராமானந்தம்.

"சார் கிளம்பலாமா?"

"ஒரு நிமிஷம் எம்.டி. வந்துடட்டும்..."

அவன் சொன்னது போலவே அருணாசலமும் வந்துவிட்டார்.

"என்ன தேவா... பேங்குக்கு கிளம்பலை?"

"கிளம்பிக்கிட்டே இருக்கோம் சார்...நீங்க வந்த உடனே சொல்லிட்டு கிளம்பலாம்னு..."

"ஓ.கே.. ஓ.கே. கிளம்புங்க. ஆமா எவ்வளவு கலெக்‌ஷன் அமௌண்ட்?"

"முப்பது லட்சம் சார்..."

"குட்...இருபது லட்சமா இருந்தது முப்பது லட்ச மாகியிருக்கா சபாஷ்"

'அப்ப நாங்க கிளம்பறோம்'

தேவா கிளம்புகிறான். வெளியே கார் காத்திருக்கிறது. ராமானந்தமும் தேவாவும் ஏறிக்கொள்ள சீற

ஆரம்பிக்கிறது. காருக்குள் ராமானந்தம் சொல்ளகிறார்.

“மிஸ்டர் தேவா... இந்த தொழில்ல எனக்கு கிட்டத் தட்ட இருபது வருஷ அனுபவம், இருந்தும் சொல்றேன், சேர்ந்து ஒண்ணரை மாசத்துல நீங்க பெரிய அளவுல உங்க திறமையை நிரூபிச்சிகிட்டு வர்ரீங்க. உங்களுக்கு மேனேஜர் போஸ்ட்டான்னு நானும் ஆரம்பத்துல ரொம்ப வருத்தப்பட்டேன். ஆனா இப்ப சொல்றேன். யு டிசர்வ் இட்.”

‘தேங்க்யூ சார்...”

“இந்த தொழில் மாதிரி ஒரு மோசமான தொழிலை நீங்க உலகத்துல பார்க்கவே முடியாது. தூக்கி விட்டாலும் சரி ஒரேயடியா தூக்கிவிடும். இறக்கி விட்டாலும் சரி ஒரேயடியா கவுத்துடும்...

‘ஏன் அப்படி?’

“அதான் கோல்ட் பிசினஸ் தலையெழுத்தே. உலகம் முழுக்கும் மதிக்கப்பட்ற ஒரே பொருள் தங்கம் மட்டும் தானே? நாம இங்க ரொம்ப விரும்பி சாப்பிட்ற அரிசி. பருப்புக்கு ஐரோப்பா அமெரிக்கால மதிப்பு கிடையாது, அவங்க விரும்பற ஐட்டங்கள் நமக்கு பிடிக்காது.

ஆனா தங்கம் அப்படி இல்லை. ஒவ்வொரு கவர்மெண்டும் தன்பலத்தை சேர்த்து வெச்சுருக்கிற தங்கம் மூலமாதானே காட்ட நினைக்குது?

“கேள்விப்பட்டிருக்கேன். இந்தியா அந்த மட்டுல தங்கத்துக்கு தனிமரியாதை தரும் நாடு அதான் ஒரு ஏழை கூட தாலியாவது தங்கத்துல இருக்கணும்ன்னு ஆசைப் பட்றான்.”

“இதுல செமையா ஏமாத்தவும் செய்யலாம். அது தெரியுமோ உங்களுக்கு?

-கார் போய்க்கொண்டேயிருக்கிறது. இருவருக்கும் இடையே சுவையான பரிவர்த்தனை.

‘கணிசமா செம்பு சேர்த்து நல்லாவே ஏமாத்த லாம். செம்போட வெயிட்டும் அதிகம். ஆகையால வித்தை தெரிஞ்சவங்க நல்லாவே விளையாடுவாங்க. ஒரு தங்க பிஸ்கட் நடுபாகத்துல ஒரு தகடு அளவுக்கு செம்பு இருக்கும் மேல பூசின மாதிரி தங்கம் இருக்கும். நாம அந்த பாகத்தைதான் உரசிப் பார்ப்போம். தங்கம்னு நினைச்சு வாங்கிடுவோம். உள்ளே செப்புத் தகடு நாலணா மதிப்பு பெறாது. நாலாயிரம் மதிப்புக்கு நம்ம கிட்ட வந்துடும்.”

“பின்னால தெரிஞ்சுடாதா?’

“எப்படி தெரியும்? உருக்கி நகை செய்யும்போது அதுவும் உருகிடும். ஆசாரிக்கு தெரிஞ்சாலும் சொல்ல மாட்டார். ஏன்னா...கிட்டத்தட்ட இந்தமாதிரி வித்தையை அவரும் செய்வார்.

ராமானந்தம் புதிது புதிதான தொழில் ரகசியங் களை சொல்லியபடி வருகிறார். பேங்கும் வந்துவிட்டது. இறங்கி உள்சென்று சலான் போட்டு பணத்தை கட்டி ரசீதை வாங்கிக்கொண்டு திரும்பத் தொடங்கியபோது தான் அந்த அசாம்பாவிதம் தெரியவந்தது.

“மிஸ்டர் தேவநாதன்...”

-உள்ளிருந்து கேஷியர் அழைக்கிறார்.

“என்ன சார் விஷயம்?”

“கொஞ்சம் உள்ளே வாங்க...”

-தேவா உள் செல்ல ராமானந்தம் தொடர கேஷியர் இருவரையும் மேனேஜர் அறைக்கு அழைத்துச் செல்கிறார்.

"என்ன சார் விஷயம்?"

"ஐ ஆம் சாரி... நீங்க கட்டின முப்பது லட்சத்துல பாதிக்கும் மேல கள்ள நோட்டு..."

-பேங்க் கேஷியரின் பதில் முன் நொறுங்கிப்போகிறான் தேவா.

"கள்ள நோட்டா?"

"ஆமாம்...நானே ஆரம்பத்துல நம்பலை. அப்புறமா ஸ்பெஷல் டிடெக்டர் மூலமா செக் பண்ணி தெரிஞ்சுக்கிட்டேன்.

சார் இது கடைல நகை வாங்கினவங்க கட்டின பணம்.

"இருக்கலாம். ஆனா நாங்க இங்க வாங்கிக்க முடியாதே..."

"இப்ப நான் என்ன பண்ணட்டும்?"

"உடனே இந்த பணத்தோட போலீசுக்கு போங்க. அதான் எல்லாத்துக்கும் நல்லது."

-தேவா திணறிப்போய் ராமானந்தத்தை பார்க்கிறான்.

"சார்...இப்படி எங்க கடைல இதுக்கு முந்தி ஆனதே இல்லை சார்ர்" என்கிறார் அவர்.

❑ ❑ ❑

**போ**லீஸ் ஸ்டேஷன்.

டேபிள்மேல் கட்டுக்கட்டாக லட்சங்கள், இன்ஸ்பெக்டர் முகத்தில் தீர்க்கமான சிந்தனை ரேகை. அருகிலேயே அருணாசலம் முதல் தேவா வரை சகலரும்...

"சார் இப்படி மௌனமா இருந்தா எப்படி? எங்க

ளுக்கு பல லட்சம் நஷ்டம். இப்ப அலைச்சல், கெட்ட பேர் எல்லாம். நீங்கதான் எங்களுக்கு உதவி செய்யணும்"

-அருணாசலம் சற்று இதமாக கெஞ்சுகிறார்.

"பொறுமையா இருங்க... நானும் அதபத்திதான் யோசிக்கிறேன். நகைங்க வாங்குனவங்க விவரம் இருக்கா?"

"இருக்கு சார்... ஆனா கள்ளநோட்டு கொடுத்து நகையை வாங்கினவன் ஒரிஜினல் அட்ரஸா கொடுத் துருப்பான்...?"

"யூ ஆர் ரைட்.... சரி நீங்க போங்க...இந்த விவரம் யாருக்கும் தெரிய வேண்டாம். கள்ளநோட்டு விவகாரம் போலீசுக்கு தெரிய வந்ததே தெரியக்கூடாது. எப் பொழுதும் போல கடையை நடத்துங்க. அப்பதான் முதல் தடவை வெற்றிகரமா பணத்தை மாத்தினவன் இரண்டாவது தடவையும் வருவான். அப்ப அவனை எப்படி பிடிக்கணும்கறது எங்களுக்கு தெரியும்."

-இன்ஸ்பெக்டர் தரும் யோசனை அருணாசலத் துக்கும் ஏற்புடையதாகதான் இருக்கிறது. தேவா அதை ஒரு சவாலாகவே எடுத்துக்கொள்கிறான். இருந்தாலும் ஒரு பயம், திட்டப்படி அவன் வந்தால் ஆயிற்று... வரா விட்டால்?

# 47



**தே**வா தன் கவலையை கேள்வியாக்குகிறான்.

"சார் நம்ம பிளான்படி அவன் வந்தா ஆச்சு... வரலைன்னா...?"

இன்ஸ்பெக்டரும் புரிந்துகொண்டு பதில் சொல்கிறார்.

"இதுதான் இப்ப இருக்கிற ஒரே வழி தேவா. அதே சமயம் அதை மட்டும் நம்பிக்கிட்டிருக்காம எப்படி டிபார்ட்மெண்ட் ஓசைபடாம என்ன செய்யணுமோ அதை செய்யும்..."

-அருணாசலத்துக்கும் அந்த பதில் திருப்தியை தருகிறது.

"நல்லது சார்... என் கடைல கள்ள நோட்டு பிடிபட்டதுங்கற செய்தி வெளியே தெரிஞ்சா என் வியாபாரம் தடுமாறும். நீங்க சொல்றதுதான் சரி. அப்படியே செய்யுங்க..." என்கிறார்.

பின்னர் இருவரும் வெளியே வருகின்றனர். வாசல் வரை வந்து விட்டவர்களை என்ன நினைத்தாரோ திரும்ப அழைக்கிறார்.

"ஆமாம் உங்க கடை கேஷியர் யார்?"

"ராமானந்தம்."

"அவருக்கு கள்ள நோட்டுக்கும், நல்ல நோட்டுக்கும் வித்யாசம் தெரியாதா?"

"எப்படி சார் தெரியும்... கள்ள நோட்ட பார்த்திருந்தா தானே? இதுதான் முதல் அனுபவமே..."

"ஆமா அவருக்கு எத்தனை வருஷ அனுபவம்?"

"கேஷ்ல அவருக்கு பத்து வருஷமா அனுபவம் சார்..."

"சரி நீங்க போகலம்."-இன்ஸ்பெக்டர் கத்தரிக்கிறார். இருந்தும் திரும்பும்போது அந்த கேள்வி தேவாவை உறுத்தியபடியே இருக்கிறது. அருணாசல ஆசாரி புரிந்து கொண்டு கேட்கிறார்.

"என்ன தேவா சிந்தனை... ராமானந்தம் பத்தியா?"

"ஆமாம் சார்... பத்து வருஷ அனுபவசாலிக்கு கள்ள நோட்டு நல்லநோட்டு தெரியாதா எனன?"

"அதனால..."

"ஒரு நோட்டு இரண்டு நோட்டுன்னாலும் பரவால்ல. தவறிப்போய் விட்டிருக்கலாம். லட்சக் கணக்கான ரூபாயை எண்ணி வாங்கியிருக்காரு... அவ் வளவு ஏமாளியாவா இருந்துருப்பாரு..."

"அப்ப ராமானந்தத்துக்கு பங்கு இருக்குன்னு நம்பறியா?"

"ஆமாம் சார்... கார்ல பேங்குக்கு பணம் கட்ட போகும்போது கூட ரொம்ப செயற்கையா என்ன புகழ்ந்தாரு..."

"சரி எப்படி அதை ஊர்ஜிதப்படுத்திக்கப் போறே..."

"நிச்சயமா இன்ஸ்பெக்டர் சொன்ன மாதிரி கள்ள நோட்டு நம்ம கடைக்கு திரும்ப வராது சார். ஏன்னா போலீஸ் பிடிக்க வலை விரிச்சுட்டத ராமானந்தம் மோப்பம் பிடிச்சிருக்கலாம். அதே சமயம் கள்ள நோட் டால பேர் கெடணும்னு விரும்பியிருந்தா அதையும் நாம தடுத்துட்டோம். ஆகையால அந்த நபர் இருதலை கொள்ளி எறும்பா தவிக்க ஆரம்பிச்சிருக்கணும்."

"இல்ல தேவா... ராமானந்தம் என், சின்சியர் சர்வன்ட். அவன்மேல இத்தனை வருஷத்துல ஒரு புகார் கூட கிடையாது"

"அவர் சம்பளம் எவ்வளவு சார்?"

"நாலாயிரத்து ஐநூறு சார்..."

"இதுபோதுமே சார்... அந்த நபர் மாறவும் தப்பு செய்யவும்."

"நீ பேசறதே புரியல..."

"உங்களுக்கு புரிய வேண்டாம் சார், கவலைப் படாதீங்க...போலீசை நான் முந்திடுவேன்."

தேவா ஒரு தினுசாக பேசுவது அருணாசலத்தை குழப்பினாலும் அப்போதைக்கு அவரால் அதற்கு மேல் எதுவும் பேச முடியவில்லை.

❑ ❑ ❑

அருணா மகால்.

தோட்டத்தில் ஷட்டில்காக் ஆடிக்கொண்டிருக் கிறாள் லேகா. மார்பு முயல்களின் பாய்ச்சலில் இளமை யின் கவர்ச்சித் துள்ளல். தோட்டக்காரன் தண்ணீர் விடும் சாக்கில் அதைப் பார்த்து சற்றுசூடாகிக் கொண் டிருக்க உள் நுழைகிறான் தேவா. டெனிம் ஜீன்ஸ், டிஷர்ட் என்கிற டக்கரான தோற்றம். அவனைப் பார்க்க வும் பேட்டையும், ஷட்டிலையும் விட்டெறிந்தவளாக ஓடி வருகிறாள் லேகா,

"வருக வருக... மகாகனம் பொருந்திய தேவநாதன் அவர்களே."

"என்ன லேகா...ரொம்ப குஷியா இருக்கே. தமிழ் எல்லாம் கொப்பளிக்குது."

"எல்லாம் ஒரு குஷிதான். ஆமா அத்த மக ராதா என்ன சொல்றா?"

அவள் மடக்குவதில் அவனிடம் திணறல்.

"அவ...அவ...உம் நல்லா இருக்கா. உன்னைக் கூட பாக்கணும்னு சொன்னா..."

"எங்க...கனவுலையா...கற்பனையிலையா?"

"லேகா..."

"நீ டூப் விட்டத எப்படி கண்டுபிடிச்சேன்னு பாக்க நீங்களா?"

"என்ன திடீர்னு மரியாதை தூள் பறக்குது..."

"தமிழ் பண்பாடு மிஸ்டர் தேவநாதன். அது போகட்டும். எங்க இவ்வளவு தூரம்?"

"உன்னை பாக்கத்தான்."

"நிஜமாவா...?"

"ஏன் நம்ப முடியலியா?"

"அத்த மக கோவிச்சுக்கமாட்டா..."

"பைத்தியம். விடமாட்டியா அதை..."

"இல்ல தேவா நம்ப முடியலை. அதான் அப்படி கேட்டேன். போகட்டும் எங்க போகலாம் பார்க், பீச், சினிமா..."

"மதுரைல எங்கம்மா இருக்கு பீச்... அப்புறம்... உன்கிட்ட ஒண்ணு கேக்கணும்."

"என்ன சீக்கிரம் கேளுங்க. நான் ஏழை என் கூடி சேர்ந்து கஷ்டப்பட தயாரான்னு தானே... தயார்! தயார்! தயார்!"

தேவா உடனேயே காதை பொத்திக்கொள்கிறான்.

"தயவு செய்து என்னை பேசவிடேன்" என்கிறான்.

"சொல்லுங்க" -புல்வெளியில் மண்டியிட்டு அமர்ந்தபடி அவனைப் பார்க்கிறாள்.

"சமீபத்துல அந்த விஜயன் உன்னை பார்த்தானா?"

"இப்ப எதுக்கு அந்த இடியட் பத்தி..."

"சொல்லேன்."

"பாத்தான்...நால்லா வாங்கியும், கட்டிகிட்டான்..."

“என்ன சொன்னே?”

“வைப்பாட்டி மகனே போடா நாயேன்னேன்.”

தேவா உடனேயே எழுந்து கொள்கிறான்.



# 48

அவன் புறப்பாடு அவளுக்கு அதிர்ச்சியளிக்கிறது.

“என்ன தேவா கிளம்பிட்டீங்க...?”

“கிளம்பாம...ஆமா ஒரு ஆம்பளைய அப்படித்தான் எடுத்து எரிஞ்சு பேசறதா?”

“அவனைப் பேசினா உங்களுக்கென்ன... அதோட நான் சொன்னதுல ஒண்ணும் தப்பில்லையே...”

“தப்பில்லையா...யாரையும் அவங்க பிறப்ப பழிச்சு பேசினா நெருப்பாயிடுவாங்க. தெரிஞ்சுக்க...”

“ஆமாம்... கிழிச்சான் அவன். இப்ப என்ன நடந்துச்சுன்னு இப்படி எல்லாம் பேசறீங்க...”

“என்ன நடந்துச்சா ...அதை பிறகு சொல்றேன். இப்ப எனக்கு வேலை இருக்கு வரேன்.”

-வேகமாக புறப்படுகிறான். “தேவா தேவா” என்று அவள் எவ்வளவோ கத்தியும் பலனில்லை. அவன் சப்தம் மாடி பால்கனி வரை போய் அருணாசலத்தை அங்கு இழுத்துவந்து நிறுத்தியிருக்கிறது. அவர் முகத்தில் இப்பொழுது புதிய கலக்கங்கள். லேகாவும் அதை கவனிக்கிறாள்.

“டாடி நீங்க”

“எல்லாம் கேட்டுகிட்டுதான் இருந்தேன், யாரும்மா அது விஜயன்?”

“துரத்தித் துரத்தி லவ் பண்ணின ஒரு பையன்பா... மகாதேவி மில் ஓனர் கைலாஷ் இல்ல...”

“சொல்லு...”

“அவரோட சின்னவீட்டு பையன்னு...”

-லேகா முடிக்குமுன் அதிர்ச்சி தாளாது பால் கனியை விட்டு உள் செல்கிறார் அருணாசலம். சென்ற வேகத்தில் தோட்டத்து பக்கமாய் லேகாவை நெருங்கி படபடப்போடு வருகிறார்.

“அப்பா...”

“இதை ஏன் என்கிட்ட சொல்லலை...”

“உங்களுக்கு சங்கடமா இருக்குமேன்னுதான்...”

“தேவா கிட்ட சொன்னியா...”

“ஆமா... தேவாதான் அவனை பார்த்து கண்டிச்சார்.”

“அவன் என்ன சொன்னான்...”

“அவன் என்னென்னமோ சொன்னான். என்னை கல்யாணம் பண்ணிக்காட்றேன் பார்னு சவால்லாம் கூட விட்டான்.”

“கடவுளே...”

-அருணாசலம் மாய்ந்து போகிறார். அதே சமயம்...

❑ ❑ ❑

**ரா**மானந்தம் வீட்டு கதவை தட்டிக் கொண்டிருக்கிறான் ஒருவன். கதவு திறக்கப்படுகிறது. எதிரில் ராமானந்தம்.

"நீங்க..."

"நான் விஜயன் அனுப்பி வந்திருக்கேன்..."

-அவன் பதில் சொன்னபடி வேகமாக உள் நுழைகிறான்.

"என்ன விஷயம்?"

-சற்று தடுமாற்றமுடன் கேட்கிறார் ராமானந்தம்.

"இந்த பத்து லட்சத்தையும் நாளைக்கு கேஷ்ல கலந்து பேங்குக்கு கட்டுவீங்களாம். விஜயன் கொடுத்துட்டு வரச் சொன்னார்.

"ஐயோ மறுபடியுமா... ஒரு தடவை செஞ்ச தப்புக்கே என் உடம்பு நடுக்கம் இன்னும் தீரலை.

"அதெல்லாம் தெரியாது. கொடுக்கச் சொன்னார் இந்தாங்க." .

"வேண்டாம். என்னால முடியாதுன்னு சொல்லுங்க. என் முதலாளி போலீஸ்கிட்ட போய்ட்டார். போலீஸ் கண்கொத்தி பாம்பா அலைய ஆரம்பிச்சுட்டாங்க. என் மேலயும் அவங்களுக்கு சந்தேகம்."

"அதெல்லாம் எனக்கு தெரியாது. இதுக்குத்தான் உங்களுக்கு ஒரு லட்சரூபா தந்துருக்காருல்ல..."

"ஒரு லட்சமா...ஐம்பதாயிரம்தானே."

"சாரி ஐம்பதாயிரம். இந்த தடவையும், காரியத்த கச்சிதமா முடியுங்க... இந்த தடவை கடை பேர் பேப்பர்ல வந்தாகணும். விட்றாதீங்க..."

"என்னால முடியாது. ப்ளீஸ்...அப்புறம் எல்லாரும் மாட்டிக்குவோம்"

"இல்லேன்னா மாட்ட மாட்டீங்களா?"

"நீங்க என்ன சொல்றீங்க..."

"இப்பவே நீங்க மாட்டின மாதிரிதான் ராமானந்தம்."

-அந்த இளைஞன் உரக்க பேச சில வினாடி இடை வெளியில் வீட்டுக்குள் பிரவேசிக்கிறான் தேவா.

"சபாஷ் கேஷியரே-சபாஷ்"என்கிற பாராட் டோடு.

ராமானந்தம் திடுக்கிட்டுப் போகிறார்.

"இப்படித்தான் இருக்கணும். உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்றதுல ஒரு டாக்டர் பட்டமே தரலாம் உங்களுக்கு...

-ராமானந்தம் எதுவுமே பேசவில்லை. நேராக தேவாவின் காலில்தான் விழுகிறார்.

❑ ❑ ❑

**சி**கரெட் பற்ற வைத்துக்கொண்டிருக்கிறான் விஜயன் மார்பு நிறைய இழுத்து நீண்ட புகைப்பாதை போடு கிறான். குறுக்கும் நெடுக்கும் நடக்கிறான். செருமியபடி அங்கு வந்து நிற்கிறார் கைலாஷ். அவரைப் பார்க்கவும் சிகரெட்டை விட்டெறிந்து தடுமாறிப்போகிறான்.

"ஏன் ஒரே டென்ஷனா இருக்கே..."

-கச்சிதமாக கேட்கிறார் கைலாஷ்.

அவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு எதுவும் சொல்லாமல் தலையை குனிந்து கொள்கிறான்.

"ஆபீஸ்ல இருந்து ஒரு லட்ச ரூபா வரை ட்ராப் பண்ணி இருக்கே போல இருக்கே... எதுக்கு."

-அவர் உரத்த குரலில் கேட்கவும் தயங்கித் தயங்கி சொல்ல ஆரம்பிக்கிறான்.

"அப்பா ஒரு ஸ்ட்ராட்டஜி போட்டேன். அதுல அந்த தேவா மாட்டப்போறான். அவன் வேலை பாக்கற கடை பேர் கூட கிழியப்போகுது. அதான்..."

"என்ன ஸ்ட்ராட்டஜி?"

"அது வந்து...வந்து..."

-கள்ள நோட்டை அண்டர்கிரவுண்ட் பார்ட்டிங்க கிட்ட வாங்கி சப்ளை செஞ்சியா?"

-கைலாஷ் சகலமும் தெரிந்த மாதிரி கேட்க விஜயன் திடுக்கிட....

"என்ன...எனக்கு எப்படி தெரியும்னு பாக் கிறியா? உனக்கு பணம் கொடுத்தவன் என்கிட்ட வந்து சொல்லிட்டான். ஆமா உனக்கு இந்த ஐடியா எப்படி வந்தது..."

"ஒரு கதைல படிச்சேன்...அதான்..."

"மண்ணாங்கட்டி...இப்ப போலீஸ் உன்னைப் பிடிக்க வந்துக்கிட்டிருக்கு. அது தெரியுமா உனக்கு?"

-அடுத்த நொடி ஆடிப்போகிறான் விஜயன்.

# 49



**அ**திர்ச்சியில் விஜயன் உறைந்துபோய் நிற்க கைலாஷ் கையை பிசைந்தபடி அவனை முறைக்கிறார். அவன்

அடுத்து, செய்வது தெரியாமல் கைலாஷை பார்த்து கேட்கிறான்.

"உங்களுக்கு எப்படி தெரியும்பா..."

"என்ன...நான் பொய் சொல்றேன்னு நினைக்கி றியா? என் பணத்துக்கு மசியாத போலீஸ்காரனும் இருக்கானா என்ன? உன்னை குறி வெச்சு அந்த இன்ஸ் பெக்டர் கிளம்பிட்டானாம்."

"அப்படின்னா அந்த ராமானந்தம் போட்டு விட்டுட்டானா...?"

"போட்டுவிடாம....போலீசை நீ என்னன்னு, நினைச்சே..."

கைலாஷ் கத்த விஜயன் நகத்தை கடிக்கிறான் வைதேகி எதுவும் பேச முடியாமல் சிலையாக கிடக்கி றாள். அவளுக்குள் விதம்விதமான எண்ணங்கள்.

"சரி சரி...நீ முதல்ல இங்க இருந்து கிளம்பு. இந்தா பணம். நீ இந்த ஊர்லேயே இருக்கக்கூடாது. கொடை கானல்ல நம்ம எஸ்டேட் இருக்கு, அங்கு போயிடு. நான் சொல்றவரை அங்கு இருந்து நீ வெளியே வரக்கூடாது. ஆமா..."

"சரிப்பா..." விஜயன் பணக்கட்டை எடுத்துக் கொண்டு வைதேகியிடம் செல்கிறான். அவள் கண்ணீர் விழிகளுடன் அவனைப் பார்க்கிறாள்,

"பேசாம நாம தனியாவே இருந்துருக்கலாம். இப்படி எல்லாம் சிக்கலே வந்துருக்காது. ஜோசியக் காரன் சொன்னதை நிரூபிச்சிட்டியேடா..." அவள் பெரிதாக விசும்புகிறாள்.

"அப்புறம் அழலாம். கிளம்பு....கிளம்பு..."-கைலாஷ் முடுக்கிவிட சிட்டாய் பறக்க ஆரம்பிக்கிறான் விஜயன்.

❑ ❑ ❑

இந்தப் பக்கமாய் அவன் செல்ல அந்தப் பக்கமாய் இருந்து போலீஸ் ஜீப் வீட்டு வாசலில் தேங்கி நிற்கிறது.

உள்ளே வேகமாய் நுழைபவர்களை கடைவாயில் பைப்புடன் ஒன்றுமே தெரியாத மாதிரி பார்க்கிறார் கைலாஷ்.

"ஹலோ இன்ஸ்பெக்டர். எங்க இவ்வளவு தூரம்?"

-நட்புடன் விசாரிப்பு வேறு.

"மிஸ்டர் விஜயன்கறது உங்க மகனா..."

"ஆமாம்...என்ன விஷயம்?"

"அவரை ஒரு ஃபோர்ஜரி சம்பந்தமா அரஸ்ட் பண்ணணும்."

"என்னது ஃபோர்ஜரியிலையா... என்ன இன்ஸ் பெக்டர் சொல்றீங்க?"

"ஆமாம்...."இன்ஸ்பெக்டர் விளக்கி முடிக்கிறார். கைலாஷ் முகத்தில் துளிகூட சலனமேயில்லை. ஏதோ கதை கேட்பதுபோல ஒரு பாவம்.

"என்ன சார் நான் இவ்வளவு சொல்லியிருக்கேன். கொஞ்சம்கூட வருத்தமோ கவலையோ உங்களுக்கு இல்லையே..."

"எதுக்கு வருத்தப்படணும். என் மகனுக்கும் இந்த தப்புக்கும் சம்பந்தமே இல்லாதப்ப நான் எதுக்கு வருத்தப்படணும்."

“நீங்க என்ன சொல்றீங்க...சம்பந்தம் இல்லாம நாங்க வருவோமா...ராமானந்தம்கறவர் சாட்சி. அது தெரியுமா உங்களுக்கு...?”

“புடலங்கா, இப்ப நான் சொல்றத நல்லா கேட்டுக் குங்க. என் மகன் மும்பை போய் மூன்று நாள் ஆச்சு. அவன் உள்ளூர்லையே இல்லை. சந்தேகமா இருந்தா இந்தியன் ஏர்லைன்ஸ் டிக்கெட் லிஸ்டைப் பாருங்க. அவன் பேர் இருக்கும். அதுக்கும் மேலே சந்தேகமா இருந்தா நான் அட்ரஸ் தரேன். மும்பை போய் பாருங்க அங்க அவன் இருப்பான்...”

“அப்ப ராமானந்தம் சொன்னதெல்லாம்?”

“நான் ஒரு கிருஷ்ணாந்தத்தை கூட்டிக்கிட்டு வந்து எல்லா தப்பையும் செஞ்சது தேவா. என் மகன் மேல பழி போட்றான்னு சொன்னா நீங்க அதுக்காக தேவாவை பிடிப்பீங்களா என்ன?”

கைலாஷ் தான் எத்தனை பெரிய எமன் என்பதை தன் திறமையால் காட்டுகிறார். இன்ஸ்பெக்டருக்கு புரிகிறது.

“சரி நான் இப்பவே ஏர் டிக்கெட் லிஸ்ட்டை பார்த்துட்டு வரேன். மிஸ்டர் கைலாஷ் சட்ட விரோதமா பையனை காப்பாத்த நீங்க குறுக்கு வழியில போனா நான் ரொம்ப பொல்லாதவனா மாறவேண்டி இருக்கும்...”

போகிற போக்கில் இன்ஸ்பெக்டர் எச்சரிக்கிறார்.

“நில்லுங்க இன்ஸ்பெக்டர்...உங்கபேர் என்ன?”

“என்பேர் பிரேம்நாத். எதுக்கு கேக்கறீங்க?”

“மிஸ்டர் பிரேம்நாத்! நான் ஒரு மில்லியனர். பிரஸ்டீஜ்தான் எனக்கு எப்பவுமே முக்கியம். நீங்களும் ஒரு ஒன்றையணா பையன் சொன்னதை கேட்டு இன்

ளொரு முறை இந்த மாதிரி அவசரப்பட்டு வந்தா நானும் சும்மா இருக்கமாட்டேன்."

கைலாஷும் பலமாகவே எச்சரிக்கிறார். பிரேம் நாத் முறைத்துக் கொண்டே கிளம்புகிறார்.

❑ ❑ ❑

"**எ**ந்த நம்பிக்கைல அவர் கிட்ட அப்படி சொன் னீங்க?"

வைதேகி ஆரம்பிக்கிறாள்.

"தெரிஞ்சு என்ன பண்ணப்போறே வைதேகி. பையன் அசட்டுத்தனமா தப்பு பண்ணிட்டான். காப் பாத்திதானே தீரணும்."

"தப்பு செய்துட்டான்னு தெரியுதுல்ல, எதுக்கு காப்பாத்தணும்?" -வைதேகியின் கேள்வி கைலாஷை திக்குமுக்காட விடுகிறது.

"ஏய் அவன் நம்ம மகன்..."

"மகனைவிட நியாயம் பெரிசு..."

"பெரிய்ய நியாயம்... அந்த அருணாசலம் பொண்ணு உன்னை பத்தி மட்டும் தப்பா பேசலாமா? அது நியா யமா?"

"அந்தப் பொண்ணு பேசற நிலைல தானே நான் இருந்தேன். இப்பதானே என் வாழ்க்கை மாறியிருக்கு."

'வைதேகி இதுக்கு மேல இந்த விஷயத்துல நீ மூக்கை நுழைக்காதே. நான் என் பணத்தால் கழுதையை குதிரை ஆக்குவேன். குதிரையை கழுதை ஆக்குவேன். அப்படியே சுத்திச்சுத்தி என் குடும்பத்தையே சீர்குலைக்க நினைக்கற அந்த தேவாவையும் நிர்மூலமாக்குவேன்..."

-விஷயம் அங்கே இங்கே என்று தேவாவிடம் முடிகிறது. இருவர் பேசுவதையும் ஒளிந்திருந்து கேட்ட படி இருக்கும் பிருந்தா முகத்தில் அதன் காரணமாக அதிர்ச்சி வந்து முகாமிடுகிறது.



# 50

**பே**ச்சு அங்கே இங்கே என்று சென்று தேவாவின் மேல் முடிகிறது. திரும்பவும் கைலாஷிற்கு கோபம் மிகுந்து போகிறது. பிருந்தா அதை எண்ணிக் கலங்கு கிறாள்.

ஏற்கனவே தன் காதல் ஒரு யுகப் பழியுணர்ச்சியை கைலாஷிற்குள் வளர்த்து விட்டிருக்கிறது. இதில் விஜயன் வேறு உள் நுழைந்து வேறு தினுசாக மோதி மேலும் பழியை அள்ளியிருக்கிறான். நினைக்க நினைக்க கலக்க மாய் இருக்கிறது. இருந்தும் பசுபதிநாதன் கோயிலில் சொன்னது அவளுக்கு சற்று தெம்பு தருகிறது.

“நிச்சயம் அவர் சொன்ன மாதிரி தேவா சகல விதமான சிக்கல்களில் இருந்தும் மீண்டு உயரத்தான் போகிறான். பரிபூரணமாக நம்புகிறாள்.

ஆனால், விஜயனை குறி வைத்து வந்ததில் குழப்பம் ஏற்பட்டு விட்டதே?

❑ ❑ ❑

**போ**லீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரிடம் அதன் எதிரொலிகள்.

“அந்த பணக்காரன் தன் சாமார்த்தியத்தை என் கிட்டயே காட்டப்பாக்கிறான்...”

தேவா அதற்காக நன்றியோடு இன்ஸ்பெக்டரை பார்க்கிறான்.

“தேங்க்யூ சார்...” என்கிறான்.

“எதுக்கு?”

“விஷயத்தை கச்சிதமாக புரிஞ்சிட்டிருக்கிங்க.”

“புரிஞ்சுக்க முடிஞ்சதாலே தானே இன்ஸ்பெக்டர் ஆகியிருக்கேன்”

“அடுத்த உங்க ஸ்டெப் என்னன்னு தெரிஞ்சுக்க லாமா?”

“அந்த விஜயனை பிடிக்கணும். அவனுக்கு எப்படி கள்ளநோட்டுகள் கிடைச்சதுங்கறது இந்த கேஸ்ல ஒளிஞ்சிருக்கற இன்னொரு கேஸ்...”

“அதான் அவன் பம்பாய்ல இருக்கறதா சொன்னாரே, அங்கபோய்...”

“அவ்வளவும் பொய்! அவன் பம்பாய்ல இல்ல...”

“எப்படி சொல்றீங்க?” எப்பவும் இவனை மாதிரி பெரியமனுஷங்க இருக்கிற இடத்தை சொல்லமாட்டாங்க. போலீஸை அலைய விட நினைப்பாங்க. அப்படியே அங்க இருந்தாலும் நாம தேடறது தெரிஞ்சு மகனை அங்க இருந்து வெளியே பறக்க விட்டுடுவாங்க...”

இருவரும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கும் சமயம் நடுவில் புகுந்து சப்திக்கிறது தொலைபேசி. காதைக் கொடுப்பவர் கண்கள் காதுவரை விரிகிறது.

“தேவா...ஐ ஆம் லக்கி. அந்த விஜயன் எங்க இருக்கான்னு தெரிஞ்சு போச்சு...” ரிசீவரை முடக்கியபடி கத்துகிறார்.

"எங்க சார் இருக்கான்? யார் சொன்னது...?"

"யார்னு தெரியலை ஒரு லேடி வாய்ஸ் விஜயன் கொடைக்கானல் த்ரீ ஸ்டார் எஸ்டேட் பங்களால ஒளிஞ்சிருக்கான். போய் பிடிச்சுக்குங்கன்னு சொல்லி வெச்சுட்டாங்க..."

"இதை நம்பலாமா?"

"ஒரு போலீஸ் தன் கேரியர்ல எந்த சின்ன சந்தர்ப் பத்தையும் மிஸ் பண்ணக்கூடாது. கொடைக்கானல் போய்ப் பார்ப்போமே..."

இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் அடுத்த நொடி சிண்டிக்கொண்டு கிளம்புகிறார்.

❑ ❑ ❑

**கொ**டைக்கானல்! கொஞ்சிக் கொண்டிருக்கிறது. இயற்கை. தவழ்ந்து கொண்டிருக்கிறது, குளிர்காற்று ஊடே ஊர்ந்து கொண்டிருக்கிறது பிரேம்நாத்தின் பர்சனல் மாருதி கார். சிவில் உடுப்பில் சீவிவிட்ட மாதிரி மிடுக்கோடு காரை டிரைவ் செய்து கொண்டிருக் கிறார். கூடவே ஒருவன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். பார்க்க சரியான ரவுடியாட்டம் இருக்கிறான்.

டிரைவிங்போதே அவனை ஒரு மாதிரிப் பார்த்து கேட்கிறார்.

"சொன்னது ஞாபகம் இருக்குல்ல..."

"இருக்கு சார்... கரெக்டா நடந்துக்குவேன்."

"சொதப்பிடாதே. அந்த கைலாஷ் பயங்கரமான ஆள்."

"நான் அதைவிட பயங்கரமான ஆள்."

"சபாஷ்!" பிரேம்நாத் அவன் தோளைத் தட்டிப் தருகிறார். ஜீப்பையும் ஊருக்கு வெளியில் 'த்ரீ ஸ்டார்

எஸ்டேட்' என்கிற பெயர் பலகை அருகே நிறுத்து கிறார். அவன் கையில் ஒரு சூட்கேசுடன் இறங்குகிறான். எஸ்டேட் பாதை வழியே நடக்க ஆரம்பிக்கிறான். அற்புதமான பசுமை நூறடிக்கு குறையாத உயரத்தில் மரங்கள் சுற்றிச்சுற்றி பார்த்தபடி நடக்கிறான். கீழெல் லாம் வால் பேரி மரங்கள், கமலா ஆரஞ்சுக்கிளைகள்...

அவன் நடந்தபடியே இருக்கிறான். சற்றுத் தொலைவில் மரங்கள் சூழ்ந்த மறைவில் ஒரு கட்டடம் தெரிகிறது. அதற்கும் நூறு அடிமுன் செக்யூரிட்டி கேட். கேட்டில் ஒரு செக்யூரிட்டி, வாட்ச்மேன். நடந்துவருப வனை பார்த்து சாலைக்கு முன்னால் வருகிறான்.

"ஏய் யார் நீ...இங்க என்ன வேலை?"

"விஜயன் சாரைப் பார்க்கணும்."

"அப்படி யாரும் இங்க இல்லை..."

"ஏய்...முதலாளி சொல்லி வந்துருக்கேன், போய் உள்ற சொல்லு,"

"உள்ற யார் இருக்கா சொல்றதுக்கு? போ...போ."

அடுத்தவினாடி அந்த செக்யூரிட்டி நெற்றிக்கு நேராக அவனது துப்பாக்கி நிமிர்கிறது,

"வழியை விடப்போறியா... இல்லை?"

அவன் கண்கள் மிரள்கின்றன. தடுமாறிபடி வழியை விடுகிறான். உள்ளே செல்கின்றான் அவன். அழகான பங்களா அவனை வா! வா என்கிறது. யாருமே இல்லாத அமைதி.

" விஜயன் ...மிஸ்டர் விஜயன்" வாசலில் இருந்து குரல் கொடுக்கிறான். பதிலில்லை. சூட்கேஸோடும் உள்ளே நுழைகிறான். மரத்தால் ஆன படிகள் வரவேற்க உள் நடக்கிறான். பெரிய பெரிய வராண்டா, ஹால், கர்ட்டன் தொங்கும் ஜன்னல்கள் என்று பார்க்கப் பார்க்க

பளிச்சென்று இருக்கிறது.

ஆனால், ஆள் அரவம் இல்லை. அவன் உள்ளே ஒவ்வோர் இடமாய் நோட்டமிட்டபடி நடந்து ஓர் அறை முன் போய் நிற்கிறான். அது சாதாரணமாகத் தான் மூடிக்கிடக்கிறது. அதை ஓர் உதை உதைக்க திறந்து கொள்கிறது.

உள்ளே நடு மையமாக ஒரு கட்டில், அதன்மேல் குப்புறப்படுத்த நிலையில் விஜயன்.

"இங்கதான் இருக்கையா நைனா. அவ்வளவு கத்து கத்தினேன் காதுல விழலையா உனக்கு...?" உள்ளே நுழைந்தபடி கேட்கிறான் அவன். விஜயனிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.

"யேய் உன்னைத்தான்..." நெருங்கித் தோளைத் தொடுகிறான்.

சிலுசிலுப்பு கவ்விப்பிடிக்கிறது. புரட்டிப் போட்டு பார்க்கிறான்.

விஜயன் பிணமாக வாயில் இரத்தக்கசிவோடு அவனை பார்க்கிறான்!



# 51

**பி**ணமாக விஜயனைப் பார்க்கும் அந்த நபர் அதிர்ந்து போகிறான். போன வேகத்தில் வெளியில் திரும்ப ஓடி வருகிறான். மூச்சிரைக்க இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்தின் ஜீப்பை நெருங்கி மூச்சு முட்டுகிறான்.

"என்னய்யா... என்ன நடந்துச்சு?"

“சார்...சார்...”

“சொல்லு. என்ன நடந்துச்சு...எதற்கு இத்தனை வேகம்?”

“சார்...உள்ள அந்த விஜயன்...அந்த விஜயன்...”

“அதுக்கென்ன... உன்னைக் கொன்னுடுவேன்னானா?”

“இல்ல சார்...அவனையே யாரோ கொன்னு போட்டுருக்காங்க...”

“என்னய்யா சொல்றே?”

“ஆமாம் சார். வந்து பாருங்க...”

அடுத்த கணம் பிரேம்நாத் காற்றாய் பறக்க ஆரம்பிக்கிறார். விஜயன் சடலம் கிடக்கும் இடத்தில்தான் போய் நிற்கிறார்.

விஜயன் விரைத்த பிணமாக அவரைப் பார்த்த படி...

“எப்படியய்யா...எப்படி எப்படி?”

“தெரியல சார்... ஒண்ணும் புரியல. பய உள்ள எங்கையாவது ஒளிஞ்சிருப்பான். அவனைப் பார்த்து கள்ள நோட், கேஷ், நான் பணம் மாத்த வந்தேன்னு சொல்லி அவனை மடக்கலாம்னு நினைச்சோம். இப்ப அவன் பிணம் நம்மை மடக்கிடுச்சே...”

-பிரேம்நாத் பார்வை அந்த அறையை அளக்கிறது. யாரும் வந்துபோன தடயங்களுக்காக ஒரு கழுகுப் பார்வை பார்த்து முடிக்கிறது.

“சரி... அந்த செக்யூரிட்டி எங்க இப்போ?”

“ஓடிட்டான் சார்...முதல்ல உள்ள விடமாட்டேன் னான். துப்பாக்கிய காமிச்சுட்டு உள்ள வந்தேன். திரும்பி ஓடி வரும்போது அவனைக் காணோம்...”

“ஐ...சீ...” -பிரேம்நாத் தாடையை வருடியபடி மொத்த வீட்டையும் சுற்றி வருகிறார். அங்கங்கே விஸ்கி, பிராந்தி பாட்டில்களும், உடைந்த சிப்ஸ் பாக்கெட்டுகளும், முட்டைக் கூடுகளும் கிடக்கின்றன.

மற்றபடி எந்தவிதமான கொலைத் தடயங்களையும் பார்க்க முடியவில்லை. ஒரே ஓர் இடத்தில் சில உடைந்த வளையல் 'துண்டுகளைப் பார்க்க முடிகிறது. இங்கே யாரோ ஒரு பெண் வந்து போயிருக்க வேண்டும்.

பிரேம்நாத் அந்த வளையல் துண்டுகளை பொறுக்கி எடுத்துக் கொள்கிறார்.

விஷயம் தலைகீழாக போய்விட்ட வருத்தமுடன் பங்களாவிற்கு வெளியே வருகிறார். இனி அடுத்த சம்பிரதாய நடவடிக்கைதான். மோப்ப நாயின் வருகை, பாடி போஸ்ட் மார்ட்டம் என்று சட்டமும் தன் கடமையை செய்யத் தொடங்கிவிடும்!

❑ ❑ ❑

**மி**ல்லில் தன் அறையில் இருந்தவருக்கு விஜயனின் கொலைச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. கைலாஷ் நெஞ்சைக் கைகளில் பிடித்துக் கொள்கிறார். சுதாரித்து எழ நெடுநேரமாகிறது. சமாளித்து காரில் ஏறி ஜி. ஹெச்.ஐ அடையும்போது எதிரில் பிரேம்நாத்!

அவரைப் பார்க்கவே சோகத்தை மீறி எரிச்சல் ஏற்படுகிறது.

“வாங்க கைலாஷ். உங்க மகன் பம்பாய்ல இருக்கறதா சொன்னீங்களே...”

எடுத்த எடுப்பிலேயே மடக்கத் தொடங்குகிறார் பிரேம்நாத்.

"அஃப்கோர்ஸ்...பம்பாய் போறதாதான் சொல்லிட்டுப் போனான். எதனால கொடைக்கானல் போனான். அங்க எப்படி இப்படி ஆச்சு ஒண்ணும் தெரியலியே இன்ஸ்பெக்டர்?"

"போகப்போக நிச்சயமா தெரியும்."

"அதுசரி...விஜயன் கொடைக்கானல் போனது உங்களுக்கு எப்படி தெரியும்? எப்படியோ தெரியும். இப்ப எங்க கேள்விக்கு பதில் சொல்லுங்க. இனியாவது உண்மைய மறைக்காம சொல்லுங்க, உங்க மகனுக்கு விரோதிங்க யாராவது உண்டா?"

"யாரைன்னு சொல்ல...சமீப காலமா அவன் ரொம்ப வருத்தப்பட்டது அந்த தேவாவுக்காகதான்..."

"தேவாவா...?"

"ஆமாம்...இவன் அந்த அருணாசலம் பொண்ணு லேகாவை லவ் பண்ணான். அவளோ பண்ணலைன்னு தோணுது. தேவாவை வெச்சுக்கூட மிரட்டியிருக்கா. இது அந்த தேவா வேலையாதான் இருக்கணும்."

"அவசரப்படாதீங்க...உங்க மகன் கொடைக்கானல் போன விஷயமே எனக்கு மட்டும்தான் தெரியும். தேவா கடை வேலைல மும்முரமா இருக்கார்..."

"இல்ல...என் சந்தேகம் அவன் மேலதான்.இது அந்த தேவாவோட வேலைதான்..."

"ஓ.கே...ஓ.கே...மிச்சத்த நான் விசாரிச்சுக்கறேன், இப்ப பாடிய வாங்கிக்குங்க..."

கைலாஷ் கண்கள் பனிக்க போஸ்ட் மார்ட்டம் முடிந்து வெள்ளை மூட்டையாக கட்டப்பட்டுவிட்ட மகனின் சடலத்தின் முன்போய் நிற்கிறார்.

ஒரே மகன்... வாரிசு ...மில்லை கவனித்துக் கொள்வதில் கவலையில்லை என்கிற எல்லா எண்ணத்

தின் மேலேயும் மண்ணை வாரிக்கொட்டி விட்டு எனக்கென்ன என்று படுத்துக் கிடக்கிறான் அவனைப் பார்க்கவும் கைலாஷ் வாய்விட்டு கதறுகிறார்.

❑ ❑ ❑

**ஆ**ம்புலன்சில் வந்து இறங்குகிறது உடல். வைதேகி ஓடிவந்து கட்டிக் கொள்கிறாள். பிருந்தாவிற்கு நடப்பதெல்லாம் கனவா இல்லை நனவா என்கிற மாதிரி இருக்கிறது.

மில்லின் மொத்த கூட்டமும் கூடியிருக்கிறது. மதுரையின் வி.ஐ.பிக்களின் கூட்டமும் ஒரு பக்கம். ஆளாளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க நடு ஹாலில் ஊதுபத்தி மணக்க மாலையும் கழுத்துமாக கிடக்கிறான் விஜயன்.

வரிசையாக அஞ்சலிகள் போலீசும் ஒருபக்கம் அமைதியாக நின்று கொண்டு நோட்டமிட்டபடி இருக்கிறது. வரிசையாக வந்து செல்வோர் நடுவில் இப்பொழுது அருணாசலமும் தேவாவும் கூட கையில் மலர் வளையத்துடன் தெரிகிறார்கள். அவர்களை அங்கே கைலாஷ் துளிகூட எதிர்பார்த்திருக்கவில்லை. உள்ளே நுழையும் அவர்களை கண்கள் சிவக்க பார்ப்பவர் “டேய் அவங்களை வெளியே போகச் சொல்லுங்கடா” என்று உரக்க கத்துகிறார்.

# 52



**கை**லாஷ் அப்படி கத்துவார் என்பது தெரிந்தவராக- இருவருமே ஒருவரை ஒருவர் பார்த்துக்

கொள்கின்றனர். அதற்குள் ஒரு கூட்டம் அவர்களை நெருங்கிவிடுகிறது.

நடைப்பதை பிருந்தாவும் பார்த்தபடி இருக்கிறாள். விஜயனுக்கு மரியாதை செய்ய வந்திருக்கும் சாக்கில் அவனை பார்க்க முடிந்த சந்தோஷம் அவளுக்கு.

நெருங்கிவிட்ட கூட்டத்தைப் பார்த்து அருணா சலம் சொல்கிறார்.

“இதோ பாருங்க...நாங்க யாரையும் நிரந்தர பகையா நினைக்கறதில்லை. புத்ரசோகம் எவ்வளவு கொடுமையானதுன்னு எனக்கு தெரியும். அதனாலதான் விஜயன் சாவுக்கு துக்கம் விசாரிக்க வந்தேன். ஆனா அவர் இந்த மனிதப் பண்பை உணர்ந்த மாதிரி தெரியலை. எனவே நாங்களே கிளம்பறோம் வழியை விடுங்க.”

அருணாசலத்தின் விளக்கம் அனைவர் முகத்திலும் அறைகிறது. யாருக்கு அது புரிந்ததோ இல்லையோ இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் புரிந்து கொள்கிறார். தோளில் தட்டிக் கொடுத்து வாஞ்சை காட்டுகிறார்.

❑ ❑ ❑

அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸ்!

கடையில் கூட்டம் கட்டி ஏறிக் கொண்டிருக்கிறது. ராமானந்தம் சீட்டில் இப்பொழுது வேறு ஒருவர் உட் கார்ந்திருக்கிறார். ரூபாய் நோட்டு ஒரு முறைக்கு இருமுறை செக் செய்து வாங்கும் எச்சரிக்கை அவரிடம் தெரிகிறது.

தேவா கம்ப்யூட்டர்முன் உட்கார்ந்தபடி கணக்கு வழக்குகளை பார்த்துக் கொண்டிருக்கிறான். நடுநடுவே கள்ள நோட்டுச் சிக்கல் மனதில் எழும்பி உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

ராமானந்தம் சாதிக்கிறார். "சார். அவன்தான் செய்யச் சொன்னான். சந்தேகமே இல்லை..."என்று.

"இப்பொழுது அந்த அவன் இல்லை. பரலோகம் போய்ச் சேர்ந்துட்டான். இது யார் வேலையாக இருக்கும்? எப்படி இது நடந்திருக்கும்?"

கம்ப்யூட்டர் திரைமுன் கணக்கு வழக்குகளை மீறி இந்த மாதிரி நினைப்புதான் ஓடுகிறது.

கள்ள நோட்டை விஜயனுக்கு தந்தது யார்?

விஜயனை கொலை செய்தது யார்? இரண்டு கேள்விகளுக்கும் விடை தெரிந்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பது புரிகிறது. ஆனால் இதற்கான ஆரம்பம் எங்கே, யாரிடம் இருக்கிறது?

புரியாமல் மண்டையை போட்டு கசக்கிக் கொள் கிறான். மாடியில் இருந்து அருணாசலம் பேசுகிறார்.

"தேவா கொஞ்சம் மேல வர்றியாப்பா..."

அழைப்பை ஏற்று மேலே செல்கிறான். பேண்ட்டை சற்று நெகிழ்த்திவிட்டுக் கொள்ளும்போது இடுப்பில் ரசமணி கையில் முண்டுகிறது.

பசுபதிநாதன் முகம் ஞாபகத்தில் வருகிறது. இக் கட்டான இந்த தருணத்தில் அவரால்தான் நல்ல வழி காட்ட முடியும். மனது உறுதிபட நம்புகிறது. அவரைப் பற்றி நினைத்துக் கொண்டே மாடிக்கு அருணாசலத்தை காணச் செல்கிறான்.

அவர் தேவா வரவும் நிமிர்ந்து உட்காருகிறார். "வா தேவா...உட்கார், சில முக்கியமான விஷயங்களை பேச ணும்"என்கிறார்.

"என்ன சார்!"

"ஒரு பக்கம் நீ வந்ததுக்கு அப்புறம் கடை வியாபாரம் நல்லா முன்னேறினாலும், மறுபக்கம் கள்ள நோட்டு போலீஸ் விவகாரம்னும் சிக்கல். வியாபாரத்துல இதெல்லாம் சகஜம்தான்னாலும் என் மனசு என்னை கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கச் சொல்லுது."

"எச்சரிக்கையாதானே சார் இருக்கோம். ராமானந்தம் மாதிரி ஆட்களை களை எடுத்து கடைல நிறைய டிசிப்ளின் ரூல்ஸை போட்ருக்கோமே."

"கடைக்கு போட்டோம். வாழ்க்கைக்கு போட்டோமா?"

"நீங்க என்ன சொல்றீங்க?"

"எனக்கு ஒரே மகள் தேவா. அவ வாழ்க்கை விஷயத்துல நான் இப்பவே கவனம் செலுத்தினாத் தானே..."

-தேவா அருணாசலம் எங்கு வரப்போகிறார் என்பதை புரிந்து கொள்கிறான்.

"அவங்களுக்கு இப்ப கல்யாண ஏற்பாடு செய்யணும். அவ்வளவுதானே சார்...?"

"என்ன தேவா தெரியாத மாதிரி பேசறே. மாப்ளையே எங்கையாவது ஏற்பாடு செய்வானா?"

"நான் மாப்ளையா?"

"ஆமாம். லேகாவும் கட்டிகிட்டா உன்னைதான்னு சொல்லிட்டா. ஆகையால..."

-தேவா அடுத்த நொடி அருணாசலத்தின் கைகளை எட்டிப் பிடிக்கிறான்.

"சார்... மன்னிச்சுக்குங்க சார். என்னால..."

"என்ன தேவா சொல்றே?"

"என்னால லேகாவை கல்யாணம் செய்துக்க முடியாது. இப்படி சொல்றதுக்காக என்னை மன்னியுங்க."

"ஏன்?"

"நான் ஏற்கனவே ஒரு பொண்ணை விரும்பறேன். விருப்பங்கற எல்லையை கடந்துட்ட ஒரு விஷயம் அது. அப்படி இருக்க நான் எப்படி லேகாவை..."

"யார் அந்த பொண்ணு?"

"சொன்னா அதிர்ச்சியா இருக்கும்..."

"நீ முடியாதுன்னு சொன்ன அதிர்ச்சியை விடவா"

"அந்தப் பொண்ணு...அந்த பொண்ணு..."

"உம் சும்மா சொல்லு"

"மில் ஓனர் கைலாஷ் மகள் பிருந்தா!"

-அடுத்த நொடி அருணாசலம் முகம் கொடூரமாக மாறுகிறது.

"அவன் மகளையா நேசிக்கறே... இது நடக்கற காரியமா?"

"அது தெரியாது சார். ஆனா எனக்காக அவ காத்துகிட்டிருக்கா. கல்யாணம்னு ஒண்ணு நடக்கற வரை காத்துகிட்டும் இருப்பா-இது எனக்கு உறுதியா தெரியும்."

"அதான் அவனுக்கு உன்மேல அவ்வளவு கோபமா?"

"காதல்னாலே கோபம் தாபம் வெறுப்பு எல்லாம் தானே சார்?"

"ஒரு வேளை அந்த பிருந்தாவோட உன்னால சேர முடியலேன்னா...?"

"இந்த ஒருவேளை இரண்டாவது வேளைக் கெல்லாம் காதல்ல இடம் இல்லை சார். கட்டாயம் சேருவோம் நம்பிக்கை இருக்கு."

-அருணாசலம் அதை கேட்டு மிக சோர்ந்து போய் தேவாவை பார்க்கிறார் "தேவாவோட எனக்கு கல்யாணம் நடக்கலைன்னா நான் நிச்சயம் தற்கொலை செய்துகொள்வேன்..." என்று லேகா சொன்னது காதில் ஓடுகிறது.

# 53



அருணாசலம் முகம் அதிகபட்சமாக கலங்கு வதைப் பார்க்கிறான் தேவா.

"புரியுது சார்... நீங்களும் இதை எதிர்பார்க்க லைன்னு நல்லா தெரியுது. இதுக்காக எனக்கு லேகா பிடிக்கலைன்னு அர்த்தமில்லை. நான் என்ன செய்யட் டும் பிருந்தா என் வாழ்க்கைல முந்திகிட்டா..."

-தேவா சொல்வதை கேட்டு விரக்திச் சிரிப்பு சிரிக்கிறார் அருணாசலம். கூடவே நேர்மையாக அவன் தன் காதலை கூறி உண்மையை சொல்கின்ற சந்தோஷ மும் சேர்கின்றது.

சாதாரணமாக இதைபோன்ற சந்தர்ப்பத்தில் எந்த ஆணும் அதிக காசும் பணமும் உள்ள பக்கம் சாயவே விரும்புவான். ஒருபடி மேலே போய் சிலர் இரண்டு பெண்களையுமே கட்டிக்கொண்டு சமாளிக்க நினைப் பார்கள்.

தேவா அப்படி இல்லாத சந்தோஷம் அருணா சலத்தை சற்று மகிழச் செய்கிறது. கூடவே ஒவ்வொரு முறையும் கேரக்டரோடு அவன் உயர்வதில் சற்று பிர மிப்பும் ஏற்படுகிறது.

காணாமல் போன நவரத்ன கற்களை கொண்டு வந்து தனது நேர்மையை காட்டத் தொடங்கினான். பின்னால் நேபாளம் வரை போயும் எந்த பரிசோதனை யிலும் தோற்றுவிட வில்லை. கடையில் கள்ளப்பணம் கலந்த சந்தர்ப்பத்திலும் புத்திசாலித்தனமாக போலீசை விட சுறுசுறுப்பாக செயல்பட்டு ராமானந்தத்தை அடை யாளம் கண்டு பிடித்து அது விஜயன் வரைபோய் முடிய காரணமாக இருந்திருக்கிறான்.

எந்த விஷயத்திலும் சோடை போகவில்லை. இவன் கடைக்கு பணியாளாக கிடைத்ததே பெரிய பாக்யம்... அருணாசலம் தன்னை மறந்து தேவா நினைப்பில் கசிந்து உருகுகிறார்.

“சார்...என்ன சார் நான் எதாவது தப்பா சொல்லிட் டேனா?”

தேவா அவரை சுயநினைவுக்கு இழுக்கிறான். அவரும் மிரளுகிறார். அவனை சற்று கண்கள் கலங்க பார்க்கிறார்.

“தேவா எனக்கு ஒரு உதவி செய்வியா?” கெஞ்சு கிறார்.

“என்ன சார்...சொல்லுங்க உங்களுக்காக நான் உயிரைக்கூட தரத் தயாராக இருக்கேன்...”

“வேண்டாம்பா...உன் உயிர் பிருந்தாவை சேர்ந்தது அது எனக்கு எதுக்கு? எனக்காக நீ கொஞ்சம் நடிச்சா போதும்.”

“நடிப்பா....என்ன சார் சொல்றீங்க?”

“ஆமாம்ப்பா... லேகா நீ சொன்ன விஷயங்களை கேட்டா தாங்குவாளான்னு தெரியலை. நீ கிடைக்க லேன்னா அவ தற்கொலையே செய்துக்கலாம்...”

“ அப்படி நடக்கக்கூடாது அதுக்கு நான் என்ன செய்யணும்.”

“ஒண்ணுமில்லை. கொஞ்ச நாளைக்கு அவளை நேசிக்கிற மாதிரி நடி...”

“ஐய்யய்யோ...இது பின்னால பெரிய அளவுல்ல ஆபத்த உருவாக்கும்.”

“அவளை நேசிக்கிற மாதிரி நடிக்கலேன்னா அவளுக்கு இப்ப இருக்கற நிலைல பைத்தியமே பிடிச் சுடும். அப்புறம் அதவிட பெரிய ஆபத்தால்ல ஆகும்.”

“சார் என்ன தர்மசங்கடப் படுத்தறீங்களே”

“நான் சொல்றத கேள். கொஞ்ச நாள்தான். பிறகு நான் பக்குவமா அவகிட்ட சொல்லி உன்னை பிரிச் சுடறேன்.”

சார் இது சரியா வருமா?”

“சந்தேகப்படாதே-நிச்சயம் சரியா வரும்... நான் சரியா முடிச்சு காட்டறேன்.”

அரை மனதாக தலையை அசைக்கிறான்.

“இது போதும்ப்பா எனக்கு!” அருணாசலம் சந் தோஷப்படுகிறார்.

❑ ❑ ❑

**மீ**னாட்சியம்மன் கோயில்!

வேட்டியும் சட்டையுமாக உள் நுழைகிறான் தேவா. முன்பெல்லாம் கசங்கிய வேஷ்டி, கிழிந்த சட்டையோடு நுழைந்தவன், இப்பொழுது அம்பிகை நல்ல முன் னேற்றத்தை தந்திருக்கிறாள். கூடவே இடியாப்ப சிக்கல் களையும் அல்லவா தந்திருக்கிறாள்.

பழைய வாழ்க்கையே தேவலாம் போலிருக்கிறது. பணம் காசும் வந்தால் சந்தோஷம் வந்துவிடும் என்று நினைப்பதெல்லாம் எவ்வளவு பெரிய பொய்.

விசாரத்துடன் நடந்து மீனாட்சி சந்நிதி முன் நிற்கிறான். சந்நிதி முன்போல இல்லை. ஜனக்கூட்டம் மிகுந்து விட்டதால் அம்பிகையை ஆற அமர தரிசிக்க முடியவில்லை. மின்னல் போல் தோன்றி மறைகிறாள். ஜனங்களிடமும் பொறுமை இல்லை.

எல்லாமே மாறி எல்லாருமே மாறிவிட்டிருக் கிறார்கள். தெய்வம்கூட மாறித்தான் தெரிகிறது. பணம் காசுடன் வருகிறவனுக்கு முதலிடம். மற்றவர்கள் கோபு ரத்தை பார்த்து கன்னத்தில் போட்டு கொள்ள வேண்டி யதுதான்.

மீனாட்சி தரிசனம் முடிந்து வெளியே வருபவன் பார்வை பசுபதிநாதனை தேடுகிறது. எப்பொழுது வந் தாலும் கண்ணில் படுவாரே...இன்று என்னாயிற்று...? கண்கள் படபடக்க சுற்றிச் சுற்றி பார்க்கிறான்.

அப்படியே சாமி சந்நிதி சென்று அங்கும் தரி சனம் முடித்துவிட்டு பிராகார வலம் வந்து கம்பத்தடி மண்டபம் வருகிறான், அதோ பசுபதிநாத சாமி!

கண்களை மூடியபடி உட்கார்ந்து கொண்டிருக் கிறார், “சாமி...” அவன் அழைப்பை கேட்டு கண் திறக்கிறார்.

“வா....எப்படி இருக்கே?” பரிவுடன் விசாரிப்பு.

“எங்க சாமி... எல்லாமே சிக்கலா, சவாலா இருக்கே...”

சிரிக்கிறார் பசுபதிநாதன்.

“வாழ்க்கைன்னா என்ன சும்மாவா?”

“அதுக்காக இவ்வளவு கஷ்டமா?”

“என்னப்பா உனக்கு கஷ்டம். அதான் ஆயிரக் கணக்குல சமபளம், பங்களா காருன்னு வந்திருச்சே...”

“அதுதான் சாமி பெரிய தப்பா போச்சு. இது சும்மா வரலை. கூடவே நிறைய சிக்கலை இழுத்து கிட்டும் வந்துடுச்சி. வேலைபாக்கற இடத்திலே கள்ள நோட்டு கலந்ததால சிக்கல். வாழ்க்கைல இரண்டு பெண்கள் நேசிக்கறதால சிக்கல். வீட்லையும் இரண்டு கல்யாணம் ஆகாத அக்காக்களால சிக்கல்.”

“இதெல்லாம் சிக்கலில்லை. பரிட்சை பரிட்சைல பாஸ் பண்ணினாதானே வெற்றிபெற முடியும்.”

“அதுக்கு திடம் வேணும், குறிப்பா உங்க அருள் வேணும்.”

“உனக்கு இல்லாததா?”

“சாமி என் கடைல கள்ள நோட்ட கலந்து வியா பார சிக்கலை உருவாக்க நினைச்சான் அந்த விஜயன். இப்ப அவனையே யாரோ கொன்னுட்டாங்க. விஷயம் புதிரா இருக்கு. நீங்கதான் சாமி உங்க சத்தியால அது யார் எப்படி எதனால நடந்ததுன்னு சொல்லணும்...”

தேவா கேட்கும்போதே பக்கத்தில் யாரோ வந்து நிற்க திரும்புகிறான். அது பிருந்தா!

# 54



**தே**வா பிருந்தாவை துளியும் எதிர்பார்க்வில்லை. இன்ப அதிர்வுக்குள்ளாகி அவளைப் பார்க்கிறான்.

"பிருந்தா நீயா...எப்ப வந்தே? நல்லா இருக்கியா?"

அவனிடம் படபடவென்று கேள்விகள்.

அவள் சில வினாடிகள் நின்று அவனையும், பசுபதி நாதனையும் பார்க்கிறாள். உதடு எதையோ சொல்ல துடிக்கிறது. கண்களில் மளுக்கென்று ஈரம் சேர்கிறது.

அத்துடன் "சாமி, அப்புறம் உங்களைப் பார்க் கறேன்."

என்று அங்கிருந்து வேகமாக விலகுகிறாள்.

"பிருந்தா...பிருந்தா..."தேவா கத்தியும் பலனில்லை. அவன் முகம் வெகுவாக மாறிப்போகிறது. பசுபதிநாதன் அதை கவனித்துவிட்டு அவரும் சேர்ந்து கலங்குகிறார்.

"சாமி என்ன சாமி இது... நான் இவளுக்காக எவ்வளவு தவிச்சுக்கிட்டிருக்கேன். என்னை பார்த்ததும் பேசாம போறாளே..." பதறிப் போகிறான்.

"பொறுமை தேவா... பொறுமை! பாவம் அந்த பொண்ணு அது சத்தியத்துக்கு கட்டுப்பட்டு அப்படி நடந்துக்குது. அவளை தப்பா நினைக்காதே..."

"சத்தியமா?"

"ஆமா உன்னை பார்க்கவோ பேசவோ நினைக் கவோ கூடாதுன்னு அவங்கப்பா சத்யம் வாங்கி யிருக்கார் அவகிட்ட..."

"அவர் கேட்ருக்கலாம். இவ எதுக்கு பண்ணினா பைத்தியம்."

"எல்லாம் உன் மேலுள்ள காதலாலதான்னு வையேன்..."

"என்மேல காதல் இருந்தா என்ன மறக்க முடியாதுன்னுல்ல அவள் சத்யம் செய்துருக்கணும்..."

"அப்படி செய்துருந்தா நீ இப்ப இப்படி நின்னு பேசிக்கிட்டிருக்க மாட்டே..."

"என்ன ஆகியிருக்கும்? அந்த கைலாசம் என்னை வெட்டி போட்டிருப்பாரரா?"

"பைத்தியமாட்டம் பேசாதே. வெட்டிப் போட்டிருந்தா நீ உடனே செத்துப் போயிடுவே. பிரச்சினையும் உடனே முடிஞ்சு போயிடும். அவன் பில்லி சூனியம் னுல்ல போகப் பார்த்தான்."

"பெரிய பில்லி சூனியம். நீங்க இருக்கும்போது எனக்கு என்ன சாமி கவலை...என்னை யார் என்ன செய்துட முடியும்?"

"அதுசரிதான். என்னை என்ன உனக்கு காவல் காக்கற வேலைக்காரனாவே முடிவு செய்துட்டியா?"

பசுபதிநாதன் அப்படி கேட்பார் என்று தேவா துளி கூட எதிர்பார்க்கவில்லை.

"ஐய்யய்யோ...என்ன சாமி நீங்க. உங்களைபோய் நான் அப்படி எல்லாம் நினைப்பேனா...நீங்க வேற இந்த கோயில் சொக்கநாதர் வேறில்ல எனக்கு..." அவரும் வருடி விடுகிறார்.

"சும்மா சொன்னேன் தேவா. நீ நினைக்கற மாதிரி பில்லி சூனியம்லாம் எனக்கு தெரிஞ்சாலும் நான் அதை செய்யக்கூடாது. நான் மாந்திரீக ன் இல்லை தாந்திரீகன்

சக்தி உபாசகன். ஒரு முறை உனக்கு வந்த சூன்யத்தை திசை திருப்பவே நான் சுடுகாட்டுக்கு போனதாலதான்ள நான் இப்ப மீனாட்சி சந்நிதிக்கு எதிரே உட்கார்ற தில்லை. இங்க வந்துட்டேன்.

என் மாதிரி உபாசகர்கள் மாந்திரீகம்கற வித்தைல ஈடுபட்றது அவ்வளவு நல்லதில்லை..."

"அப்படின்னா..."

"உனக்கு அந்த மாதிரி கேடுகள் வந்தா நீதான் உன்னை காப்பாத்திக்கணும். அப்படி கேடு வராம அந்த ரசமணி பார்த்துக்கும்ணும் வெச்சுக்கோ.

அதுமட்டுமில்ல...உன் வரைல நான் உனக்கு எந்த உதவியும் செய்யமாட்டேன்னு அந்த கைலாசத்தோட மகனுக்கு நானும் சத்யம் செய்து கொடுத்துருக்கேன்."

"எதுக்கு இப்படி ஆளுக்கு ஆள் எனக்கு எதிராகவே முடிவு பண்றீங்க..."

"எதிரான முடிவு இல்ல... உன்னை பலசாலியாக்கற முடிவு, பராக்கிரமசாலியா காட்ற முடிவு. அப்பதான் நீ உன் போக்குல போவே. சுய முடிவெடுப்பே..."

"சாமி உங்களை நான் மலை போல நம்பி வந்தேன், நீங்க எதை எதையோ சொல்றீங்களே..."

"உள்ளதைத்தான் சொல்றேன். தைரியமா இரு. திடமா முடிவுகள் எடு. எள்ளளவு தப்பும் பண்ணாதே. நீ நிச்சயம் ஜெயிப்பே. அதே தவறு செய்தா காணாம போயிருவே. ஞாபகம் வெச்சுக்கோ..."

"அப்ப பிருந்தா இனி என்கூட பேசமாட்டாளா?"

"அவ அப்பா சத்யத்தை திரும்ப வாங்கிட்டா பேசுவா. அதை செய் அவ பேசுவா..."

“அது முடியுமா? அந்த நபர் தன் வாழ்க்கையையே என்னதான் இப்ப முதல் விரோதியா நினைக்கறார்.”

“வாழ்க்கைல எதுவும் நிலை இல்லை. அடுத்த வினாடி என்ன நடக்கும்னு யாருக்கும் எதுவும் தெரியாது. ஆனா நம்பிக்கைகளோ, புனிதமான முயற்சிகளோ ஆசைகளோ வீண் போறதில்லை. ஆகையால கைலாசம் அன்பை பெற முயற்சி செய். அவநம்பிக்கை வேண்டாம்.”

பசுபதிநாதன் அவன் எதிர்பார்த்து வந்ததற்கு எதிர் மாறான கருத்துகளை கூறி அவனுக்கு விடை கொடுக்கிறார். கலங்கினாலும் சுதாரித்துக்கொண்டு கிளம்புகிறான்.

ஒரு பக்கம் ஒருத்தி பேசத் துடிக்கிறாள். அவளோடு பேச மனமில்லை. இன்னொரு பக்கம் பேசத் துடித்து ஆசைப்படும் பெண் பேச முடியவில்லை.

இயற்கை விசித்ரமான விளையாட்டு விளையாடுவதில் நிகரில்லாதது என்பது அவனுக்கு புரிந்து போகிறது.

தேவா சோர்வுடன் செல்வதை ஒரு தூணுக்கு பின் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறாள் பிருந்தா. கண்கள் கலங்கிவிட்டிருக்கின்றன.

•

அவன் போகவும் பசுபதிநாதனை நோக்கி நடக்கிறாள். அவர் எதிரில் கும்பிட்ட கையுடன் நிற்கிறாள். அவள், அவருடன் பேச இருப்பதையும் அவர் பேச இருப்பதையும் அவர்களுக்கே தெரியாமல் அந்தக் கோயிலில் இரண்டு விழிகள் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறது!

# 55



**அ**ப்படி தன்னைக் கவனிக்கும் கண்களைப் பற்றி தெரியாமலும். அதை கவனிக்காமலும் பிருந்தா பசுபதி நாதனிடம் பேச ஆரம்பிக்கிறாள்.

"சாமி...அவர் ரொம்ப வருத்தப்பட்டாரா?"

முதல் கேள்வியையே தேவாவை பற்றித்தான் கேட்கிறாள். பசுபதிநாதன் சிரிக்கிறார். சிரித்தபடியே சொல்கிறார்.

"நான் சன்யாசிம்மா...எனக்கு குடும்ப வாழ்க்கை பாசபந்தம் பற்றி எல்லாம் தெரியாது. இருந்தாலும் சொல்றேன். உன்னையும், தேவாவையும் பார்க்கும் போது அத தெரிஞ்சுக்காம விட்டது தப்போன்னு நினைக்கறேன்.

இத்தனைக்கும் உனக்கும், அவனுக்கும் பல வருஷ பழக்கமோ காதலோ இல்லை, ஒரு முத்தத்துல சில மாசம் முந்திதான் தொடங்கிச்சு உங்க உறவு. அதுக்கு இவ்வளவு சக்தியா?"

சொல்லிவிட்டு கம்பத்தடி மண்டப மீனாட்சி சுந்த ரேஸ்வரர் சிற்பத்தை பார்க்கிறார்.

காதலும் திருமணமும் கடவுளர்களிடமும் முக்கி யத்துவம் பெற்றிருக்கும் சான்றாக நிற்கிறது அந்த திருமணச் சிற்பம். ஸ்ரீமன் நாராயணன் தாரை வார்த்து தர சுந்தரேசன் மீனாட்சியை கைத்தலம் பற்றும் காட்சி மிகத் துல்லியமாக செதுக்கப்பட்டிருக்கிறது.

பிருந்தாவும் அதை பார்க்கிறாள்.

“என்ன சாமி என் கேள்விக்கு பதில் சொல்லாம எதை எதையோ சொல்றீங்களே...”

“அட ஆமாம்ல... ஆமாம் நீ அவனை நினைக்கக் கூட கூடாதே. எதுக்கு இப்ப அவனை பத்தி கேக்கறே...”

“அந்த விஷயத்துல நான் தோத்துட்டேன். என் வீடும் கிட்டத்தட்ட சுடுகாடாயிடிச்சு, என் அண்ணன் இப்ப உயிரோட இல்லை தெரியுமா உங்களுக்கு...”

“தெரியும்மா...அவன் வினையே அவனுக்கு எதிரா முடிஞ்சு போச்சு...”

“நீங்க அன்னிக்கு தேவா ஜெயிப்பான்னு சொன் னீங்க. ஆனா விஜயன் செத்துப் போவான்னு சொல்ல லையே. ஏன் சாமி?”

“அதைச் சொல்ல எனக்கு மனசில்லம்மா. அவ னுக்கு ஆபத்து நேரக்கூடாதுன்னு அவன் போனப்பறம் கடவுள் கிட்ட நான் பிரார்த்தனை செய்துகிட்டது எனக்குத்தாம்மா தெரியும்...அப்படியும் அவன் விதி அவன் கதைய முடிச்சிடிச்சு...”

“போதும் சாமி...என் சித்தியை பார்க்கவே சகிக் கலை. ரொம்ப நல்லவங்களா தெரியற அவங்க பிள்ளையை பறிகொடுத்துட்டு படுற பாடு ரொம்ப கொடுமை...”

“என்ன செய்ய...விதியதான் நொந்துக்கணும். வேற வழி இல்லை. போகட்டும் நீ மனசு தளர்ந்துடாம இரு. தேவா நிச்சயம் உன்னை வந்தடைவான்...”

“அந்த நம்பிக்கைலதான் உயிரோட இருக்கேன். என் அப்பா கோபம்லாம் இப்ப அவர் மேலதான். எந்த நேரம் என்ன செய்வார்னு தெரியலை. நீங்கதான்...”

-பசுபதிநாதன் உடனே அவள் கையை திருப்பி சுந்தரேஸ்வரர் சந்நிதி பக்கம் காட்டி "அவன் கிட்ட விட்டுட்டு போம்மா...நல்லதே நடக்கும்..."

-தான் எதுவும் செய்ய இயலாது என்று சொல்லாமல் சொல்வதை புரிந்து கொண்டு பிருந்தா கேட்கிறாள்.

"எனக்கும் அவருக்கும் உறவை உருவாக்கினதே நீங்கதான். இப்ப கடவுள் பார்த்துப்பானா என்ன அர்த்தம் சாமி."

"கவலைப்படாதேன்னு சொன்னேன்ல. அதுதான் அதுக்கு அர்த்தம். அவன்கிட்ட இருக்கிற ரசமணி அவனை இந்த உலகத்துல மட்டுமில்லம்மா ஏழு உலகத்துலையும் காப்பாத்தற சக்தி உடையது..."

"இது விஞ்ஞான யுகம். இதுல எப்படி ஒரு ரச மணியோ, தாயத்தோ இல்லை, ரட்சையோ உதவிட முடியும்?"

"ரசமணியை பத்தி கேட்டுட்டு மத்ததை பத்தி எதுக்கும்மா பேசறே..."

"சரி தெரியாமதான் கேக்கறே. ரசமணின்னா என்ன? அது எப்படி ஒரு மனிதனை காப்பாத்தறது...?"

"பாதரச பஸ்பத்தோட பலவித மூலிகை சாற்றை கலந்து உருவாக்கற விஷயம்மா அது. பாதரசம் பத்தி தெரியுமா உனக்கு? ஒரு துளி பிரிஞ்சாலும் திரும்ப ஒட்டவே ஒட்டாது. ஒட்ட வைக்கிறதும் கஷ்டம். உடம்பை விட்டு உயிர் போனாலும் அப்படித்தானேம்மா? இந்த பாதரசத்தை சைவம் அந்த சிவனோட அம்சமா பாக்குது. இதை ஒன்பது கிரகங்களின் கதிர்களாலும் எதுவும் செய்ய முடியாது. உஷ்ணம் குளிர்ங்கற பஞ்சபூத அம்சங்களும் அழிக்க முடியாது.

இது சரீரத்துல இருந்தா அந்த சரீரம் கவசம் பூட்டப் பட்டது மாதிரிதாம்மா. எதிர் வினைகள் பட்டுத் திரும்பிடும். பட்டு தாக்கி அழிக்காது.

என் சிற்றறிவுக்கு எட்டின வரைல உனக்கு விளக்கம் தந்துருக்கேன். இதுக்குமேலையும் இத பத்தி சொல்ல முடியும். இவ்வளவு போதும்மா உனக்கு.

இந்த விளக்கம் உனக்கு மட்டுமில்ல தாக்க நினைக் கறவங்களுக்கும்தான்...”

சொல்லிவிட்டு பசுபதிநாதன் பார்வையை வேறு திசைக்கு திருப்புகிறார். ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக் கும் மனிதன் அந்த பார்வையை தாள மாட்டாது வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறான்.

❑ ❑ ❑

**கை**லாசம் அருகே நின்று கொண்டிருக்கிறான். இப்பொழுது அவன். பசுபதிநாதன் சொன்னது அவ் வளவையும் அவரிடம் சொல்லிவிட்டு “அந்த ரசமணி இருக்கற வரை அவனை ஒண்ணும் செய்ய முடியா துங்க...” என்று முத்தாய்ப்பும் வைக்கிறான்.

“நீ போய் அந்த கொண்டைய ராஜுவை வரச் சொல். மத்ததை நான் அவன்கிட்ட பேசிக்கறேன்...” “என்கிறார் கைலாஷ்!

“சரிங்க...”

-அவனிடம் சம்மதம்!

❑ ❑ ❑

**பு**த்தகம் படித்துக்கொண்டிருக்கும் லேகா, அருணாசலம் வரவும் புத்தகத்தை மடித்தபடி அவரிடம் தாவுகிறாள்.

"அப்பா அவர்கிட்ட பேசினீர்களா?"

"உம்..."

"என்ன சொன்னாருப்பா?"

"யோசிச்சு சொல்றேன்னு சொன்னாரும்மா...."

"பாத்தீங்களா...நீங்களே கேட்டும் சட்டுன்னு சம்மதம் சொல்லலை. அதான் தேவா. இதே வேற எவனாவது இருந்தா எப்ப மாமா தாலி கட்டட்டும். இப்பவே கட்டிடட்டுமான்னு ஓடி வந்திருப்பாங்க. என் தேவா கிட்ட எனக்கு பிடிச்ச விஷயமே இந்த ஸ்டெபிலிடிதான்..."

-லேகா அவனை வியந்து பாராட்டுகிறாள். ஆனால் அது அருணாசலம் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

இவளை எப்படி மாற்றுவது? கேள்வி வந்து அவர் முன் நடனமிடத் தொடங்குகிறது. திணறல் கொள்கிறார். அதே சமயம் மறுமுனையில் ஒரு விபரீதம் அரங்கேற ஆரம்பிக்கிறது. அது...?

# 56



**தே**வாவின் வீட்டில் தொலைபேசியிடம் பலமான சிணுங்கல். சிணுங்கும் தொலைபேசியை கையில் எடுக்கிறான் தேவா.

"தேவா... நான் ராமானந்தம் பேசறேன். ஜாமீன்ல வெளியே வந்தும் எனக்கு நிம்மதியே இல்லப்பா."

"என்ன சார் சொல்றீங்க. யார் என்ன சொன் னாங்க?"

"யார்னு தெரியலை. ஒருத்தன் அடிக்கடி போன் பண்ணி மிரட்றான். எங்களை காட்டிக் கொடுத்தே தெரியும் சேதிங்கறான்."

"அது யார்ன்னு உங்களுக்கு தெரியலையா?"

"எனக்கு தெரிஞ்சா நான் ஏன் சும்மா இருக்கேன். இந்நேரம் போலீசுக்கு சொல்லியிருக்கமாட்டேனா?"

"உங்களுக்கு தெரியாதவங்க உங்களை எதுக்கு சார் மிரட்டணும்?"

"எனக்கு தெரியும்னு நினைக்கலாமில்லையா?"

"எதை யாரை?"

"தேவா விஜயனை கொன்னவங்கதான் இப்ப எனக்கும் குறி வைக்கிறாங்க. அந்த கள்ளநோட்டு கும்பல் பத்தி என்கிட்டையும் அவன் சொல்லியிருக்கணும்கறது அவங்க எண்ணம்."

"தெரிஞ்சிருந்தாதான் நீங்க போலீஸ்கிட்ட சொல்லியிருப்பீங்களே..."

"சொல்லிட்டதாதான் நினைக்கிறாங்க."

"எதை வெச்சு அப்படி நினைக்கிறாங்க. யாரை யாவது இன்ஸ்பெக்டர் கைது பண்ணியிருக்காரா?"

"தெரியல தேவா...எனக்கு பயமா இருக்கு..."

"நீங்க பயப்படக்கூடாது. மிரட்டல்களுக்காக மாறிடவும் கூடாது. நான் இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் கிட்டே பேசறேன்...பேசிட்டு உங்களையும் வந்து பார்க்க றேன்..."

தேவா தொலைபேசியை முடக்கி விட்டு நிமிர் கிறான். இனி ஒரு வினாடி தாமதிக்க கூடாது. பிரேம்நாத்தை பார்க்க வேண்டியதுதான்!

❑ ❑ ❑

**லா**க்கப் அறைக்குள் துவண்டு போய் கிடக்கிறான் அவன். போலீஸ் கூட்டம் பிய்த்து மேய்ந்திருக்கிறது. இத்தனை அடிக்கு பிறகும் அவன் வாயைத் திறந்து உண்மையை சொல்லாததில் போலீசே ஆச்சரியப்பட்டு போய் கிடக்கிறது.

குறிப்பாக பிரேம்நாத் பிரம்பால் விளையாடிய களைப்போடு ஈரமாயும் சட்டையுமாக வந்து நாற்காலியில் விழுகிறார்.

கச்சிதமாக உள்ளே பிரவேசிக்கிறான் தேவா.

"வா தேவா..."

"என்ன சார் இது கோலம்?"

"போலீஸ் பொழப்பே நாய்பிழைப்புதானே...?"

-தேவாவின் பார்வை அப்படியே லாக்அப் செல் பக்கம் செல்கிறது. உள்ளே நைந்து பிய்ந்து படுத்து கிடப்பவனைப் பார்க்கவும் சுரீர் என்கிறது.

"யார் சார் உள்ளே...பிச்சுட்டீங்கபோல இருக்கு..."

"நீ உக்காருப்பா. என்ன விஷயம்?"

"ராமானந்தம் ரொம்ப பயந்து போயிருக்கார், அதான் பாத்துட்டு போகலான்னு வந்திருக்கேன்."

"அவர் எதுக்கு பயந்து போகணும். அவரை பார்த்து இந்த சமூகமேல்ல பயப்படணும்."

"விளையாடாதீங்க சார்...யாரோ போன் பண்ணி மிரட்டிகிட்டிருக்காங்க."

"யாரோன்னா??"

"பேர் தெரிஞ்சா சொல்லமாட்டேனா சார்.... எல்லாம் அந்த கள்ள நோட்டு கும்பல்தான்..."

“அப்ப அந்த கும்பலை ராமானந்தத்துக்கு தெரியுமா? இதை ஏன் அந்த ஆள் என்கொயரியின் போது சொல்லலை...”

“உண்மைல தெரியாது. ஆனா நீங்க அந்தக் கூட்டத்த சேர்ந்த யாரையோ அரெஸ்ட் பண்ணியிருக்கீங்க. எதனால அரெஸ்ட் பண்ணீங்க, எதுக்கு அரெஸ்ட் பண்ணீங்கன்னு எனக்கும் தெரியாது. அந்த ராமானந்தத்துக்கும் தெரியாது.

ஆனா அந்த கூட்டம் ராமானந்தம் போட்டு விட்டு தான் நீங்க அரெஸ்ட் பண்ணதா நினைக்கிறாங்க. விஜயன் தான் ராமானந்தத்துகிட்ட அவங்களை பத்தி சொல்லி இருக்கணும்கறது அவங்க எண்ணம்.”

-பிரேம்குமார் அடுத்த நொடி நிமிர்ந்து அமர்ந்து லாக்கப் பக்கம் பார்க்கிறார்.

கிசுகிசுப்பாக தேவாவுக்கு மட்டும் கேட்கும் படி பேசுகிறார்.

“தேவா...உள்ள இருக்கறவனை நான்தான் சந்தேக கேஸ்ல பிடிச்சு போட்டிருக்கேன். அவனும் சாதாரணமாக நடத்துக்காம ஏதோ பெரிய ரகசிமுள்ளவன் மாதிரிதான் வாயே திறக்கமாட்டேங்கறான்.

சரி வெடிகுண்டு தீவிரவாதியா இருக்கலாம்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்ப நீ சொல்றது பார்த்தா இவன் கள்ளநோட்டு கும்பல்னு தெரியவருது. பரவாயில்லியே... எதார்த்தமா பிடிச்ச சந்தேக கேஸ் கூட எனக்கு இப்படி உதவி செய்யுதே...” சொல்லிக் கொண்டே எழுந்து லாக்கப் அறை பக்கமாக செல்கிறார். அடிபட்டு கிடப்பவனை பார்க்கிறார். அவன் வாயில் இரத்தக் கோடு போட்டுக் கொண்டு அவரைப் பார்க்கிறான். அவன் பார்வை தேவாவின் மேலும் செல்கிறது. அது அப்படியே முறைப்பாக மாறுகிறது.

“என்னடா முறைக்கிறே? நீ வாயைத் திறக்கலேன்னா உன்னைப் பத்தி தெரியாதுன்னு நினைச்சியா...நீ யாருன்னு தெரிஞ்சுபோச்சு...”-அவர் சொல்வதைக் கேட்டு அவன் முகத்தில் அதிர்ச்சி பரவுகிறது.

“இப்பதான் எம்.எல்.ஏ போன் பண்ணினார். உன்னை வெளில விடச்சொல்லி. நான் எம்.எல்.ஏ. ஆளுன்னு சொல்றதுக்கென்ன?”

-வியூகம் வகுக்கிறார் இன்ஸ்பெக்டர் என்பது தேவாவுக்கு புரிந்து போகிறது. ஆச்சரியம் தொடர அவனைப் பார்க்கிறான். அவனிடமோ திணறல்.

லாக்கப்பை திறக்கின்றன கைகள். உள்ளே நுழைபவர் “நீ போகலாம்...” என்கிறார். அவன் தடுமாறியபடி எழுந்திருக்கிறான். அவரை நம்பமுடியாமல் பார்க்கிறான்.

“உன்னைத்தான்யா நீ போகலாம்” உரக்கச் சொல்லவே தள்ளாடியபடி கிளம்புகிறான். திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டுதான்...பிரேம்குமார் இப்பொழுது போகவிட்ட காரணத்துக்கு வருகிறார்.

“ராஜாமணி...அவன் எங்க போறான் யாரைப் பார்க்கறான் எல்லா தகவலும் எனக்கு வரணும். மஃப்டில நீ அவன ஃபாலோ பண்றே...”-போலீஸ் பிரதிநிதி ஒருவரிடம் சொல்லிவிட்டு தேவாவை பார்க்க, தேவாவிடம் பிரமிப்பு.



# 57

**அ**வன் வெளியே போய் எச்சரிக்கையாக திரும்பிப் பார்க்கிறான். போலீசுக்கும் தெரியாதா திரும்பிப் பார்ப்பான்

என்று...ராஜாமணி என்னும் அந்த போலீஸ்காரரும் பதுங்கிக் கொள்கிறார். அவன் நடை தொடர்கிறது. நேராக ஒரு எஸ்.டி.டி. பூத்துக்குள் நுழைகிறான். சில நிமிடங்கள் கழித்து வெளியே வருகிறான்.

அடுத்த நொடி ராஜாமணி அந்த பூத்துக்குள் நுழைந்து பட்டன் சிஸ்டமுள்ள டெலிபோனில் ரீசிவரை எடுத்து 'R' என்னும் ரிமைண்டர் பட்டனை தட்ட முன்பு பேசப்பட்ட எண்ணுக்கு ரிங் செல்கிறது. மறுமுனையில் இருந்து குரல் கேட்கிறது.

"ஹலோ..."

அடுத்த நொடி ராஜாமணியிடம் சுதாரிப்பான பதில்.

"ஹலோ 638947...தானே?"

"ராங் நம்பர்."

"இல்ல சார் நாங்க டெலிபோன் டிபார்ட் மெண்ட்ல இருந்து பேசறோம். நம்பர் மாறிடுச்சா?"

"டிபார்ட்மெண்டா...நம்பர்லாம் மாறலை 701392 தான் டொக்." மறுமுனை முடங்கிக் கொள்கிறது.

-ராஜாமணியின் மூளைக்குள்ளும் அந்த தடியன் யாருக்கு போன் செய்தான் என்கிற எண் தெரியவந்து விட்டதில் சந்தோஷம்.

பூத்தில் உள்ள பெண் ஒன்றும் புரியாமல் பார்க் கிறாள்.

"என்ன பார்க்கறே...நான் போலீஸ்காரன்..." ராஜாமணி சொன்ன மறுநொடி அந்த பெண் "ஐயோ சார்" என்கிறாள் பயந்து போய்...

"கண்டுக்காதே..." என்று வெளியே வந்து அந்த தடியனைப் பார்க்க அவனைக் காணோம்!

“அடடா தவறு செய்து விட்டோமா? ராஜாமணியின் மனது உதைப்பெடுக்கிறது. சில நொடி நகத்தை கடித்து விட்டு ஸ்டேஷனுக்கே திரும்பி வருகிறார்.

“என்னய்யா போன வேகத்துல வந்துட்டே?”

“கண்ணுல மண்ணு தூவிவிட்டு ஓடிட்டான் சார்...”

“இப்படி சொல்ல உனக்கு வெக்கமா இல்லை?”

“சார் சார்...அவன் ஒரு எஸ்.டி.டி. .பூத்துக்குள் போய் ஒருத்தர்கிட்ட பேசியிருக்கான். அந்த நம்பரை சஸ் பண்ணிபிடிச்சுட்டேன்.”

“சபாஷ் எங்க அந்த நம்பர்...”

-ராஜாமணி நம்பரைத் தரவும் அடுத்த நொடி தொலைபேசி இலாகாவுக்குத்தான் பிரேம்நாத்தின் கைகள் டயல் செய்கின்றன.

யார் அது? இன்னும் சில நிமிடங்களில் தெரிந்து விடும்.

❑ ❑ ❑

**கை**லாசத்தின் பங்களா முன் கொண்டைய ராஜு.

வாட்ச்மேன் கொண்டைய ராஜை ஒரு மாதிரி பார்த்தபடி உள்ளே விடுகிறான்.

கொண்டையராஜின் பார்வை பங்களாவை பெரிதாக அளந்தபடி இருக்க கால்கள் உள் செல்கின்றன.

கருப்பு வேட்டி திறந்த மார்பு-கைவசம் ஒரு பிரம்பு-நெற்றி நிறைய மையும் இரத்தப்பொட்டுமாய் அவனை யார் பார்த்தாலும் ஒருகணம் விடைத்துப்போய் விடுவார்கள்.

இப்பொழுதும் போகிறார்கள்.

உள்ளே நுழைபவன் ஹாலில் போடப்பட்டிருக்கும் சோபாவில் அமருகிறான். எதற்கோ அந்த பக்கமாய் வரும் வைதேகி அவனைப் பார்த்து ஒரு மாதிரியாகிறாள்.

“யார் நீங்க?” கேட்கிறாள்.

“முதலாளி வரச் சொன்னாராம்ல?”

“அப்படியா...”என்றபடி கைலாஷைத் தேடி திரும்ப கைலாஷே எதிரில் வருகிறார்.

“வா கொண்டையா ராஜு நேத்தே வரச் சொன்னேன். இன்னிக்கு வந்திருக்கியே...”

“நேத்து நான் ராமேஸ்வரம் போயிருந்தேன் அதான் வர முடியல. என்ன விஷயம் முதலாளி...”

“இங்க எதையும் பேச வேண்டாம் என்கூட வா ஆபீஸ்ல போய் பேசுவோம்...”

“உங்க இஷ்டம்!”

-அவர் உடனே கிளம்புகிறார். அவன் அவரை தொடர ஆரம்பிக்கிறான். வைதேகியை அது என்னவோ செய்கிறது. அவளை விடவும் பிருந்தாவை அது மிக பாதிக்கிறது.

வைதேகி நேராக பிருந்தா அருகே சென்று கேட்கிறாள் “உனக்கு இவனை தெரியுமாம்மா...”

“தெரியும் சித்தி. இவன் பேர் கொண்டையராஜு, மாந்தீரிக வித்தைக்காரன்...”

“இவனை மாதிரி நபர்கள்ளாம் வீட்டுக்கே வரக் கூடாதே.”

“அதை அப்பா கிட்ட சொல்லுங்க சித்தி...

“சரி எதுக்கு வந்திருக்கான் தெரியுமா?”

“எல்லாம் என் தேவாவை ஒழிக்கத்தான் வேற எதுக்கு?

“உன் தேவாவையா?” வைதேகி மடக்கவும் பிருந்தா நாக்கை கடித்துக் கொள்கிறாள்.

“அது வந்து...அது வந்து தேவான்னு ஒருத்தர் சித்தி, அவரை...அவரை...”

“தெரியும்மா...நானும் கேள்விப்பட்டேன். அந்த புள்ளையோட நீ பழகறது உன் அப்பாவுக்கு பிடிக் கலை. உங்களை பிரிக்க படாதபாடு பட்றார் சரிதானே...”

“இல்ல சித்தி. பிரிச்சாச்சு. நான் பிரிஞ்சு வந்துட் டேன். இப்ப தேவாவை வேற வகைல விரோதியாக நினைக்கறாரு...”

“வேற வகைலன்னா...”

“விஜயன் சாகவே அவர்தான் காரணம்னு நினைக் கிறார்.”

“அவன் தப்பான சாவகாசம் அவனுக்கு எமனா யிடிச்சு. இதுல இந்த பிள்ளை எங்க வந்தது?”

“இதுல மட்டுமில்லை...தேவா மேலே பல வகைல கோபம். அவரை செயல்படவிடாம செய்யத்தான் இந்த கொண்டைய ராஜை கூப்பிட்டிருக்கிறார்.”

“அப்படியா சேதி...”

“சித்தி...உங்களை கெஞ்சி கேட்டுக்கறேன். அப்பாவை தப்பா எதுவும் செய்து விடாம பார்த்துக்கங்க சித்தி...”

“கவலைப்படாதேம்மா...உனக்கு நான் இருக்கேன்.” பிருந்தாவுக்கு வைதேகியின் ஆறுதல் அதிசயமளிக் கிறது.

# 58



**கா**ர் ஓடிக் கொண்டிருக்கிறது. உள்ளே கைலாசம் கொண்டையராஜு. கைலாசம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

"ஏய்யா...ரசமண்ணின்னா என்னய்யா?"

"எதுக்கு கேக்கறீங்க..."

"கேட்டா பதில் சொல்லு...அது என்ன பெரிய சமாசாரமா?

"ஆமாங்க... முறையா செய்யத் தெரிஞ்சவங்க செஞ்சா அது பெரிய விஷயம்தான்...."

"அதை ஒருத்தன் கட்டிக்கிட்டிருந்தா அவனை யாரும் எதுவும் பண்ண முடியாதா?"

"ஆமாம்...அசைக்க முடியாத விதி யாருக்கு இருக்கோ அவங்களுக்குதாங்க அதுவும் கிடைக்கும்."

"அது அவ்வளவு பெரிய விஷயமா?"

"ஆமாம்...ஏன் உங்களுக்கு அது வேணுமா?"

"அப்படி ஒண்ணு கிடைச்சா பரவால்லதான். ஆனா அது என் எதிரிகிட்ட மட்டும் இருக்கக்கூடாது..."

"யார் அந்த தேவா பயகிட்ட இருக்கா?"

"ஆமாம். அதனாலதான் வரிசையா அவனுக்கு பிரச்சினைங்க வந்தும் அவனுக்கு எதுவுமே ஆகலை..."

"உங்க அந்தஸ்துக்கு அவன்லாம் ஒரு சுண்டைக்காய். நாலு ரவுடிப்பசங்களை விட்டு கை காலை

வாங்கறத விட்டுட்டு என்னங்க இது அவனைப்பத்தி பேசிகிட்டு....”

“அவன் கை காலை ரவுடிங்கதான் வாங்கணுமா? நீங்க வாங்கமாட்டீங்களோ...”

“அது...அது...”

“என்ன கொண்டையா தடுமார்றே...”

“அது வந்து...மந்திர சாஸ்திரப்படி ரசமணி உள்ள வங்க அந்த சிவத்துக்கு சமம். அவங்களுக்கு எதிரா நாங்க ஏதாவது செய்தா அது எங்களுக்கே எமனா முடிஞ் சிடும்...”

“அப்ப பயப்படறேன்னு சொல்லு.”

“நிச்சயமா!”

“அப்ப நீ கிளம்பு... நான் வேற மாந்திரிகனை பாக்கறேன்.”

“வேண்டாங்க...யாரை பார்த்தாலும் இதைத்தான் சொல்லுவாங்க.”

“நானும் அழிக்கணும்னுதான் சொல்வேன். சுண்டைக்காய் பயன்னு சொல்லிட்டு அவனுக்கு பயந்தா எப்படி?”

“அவனுக்கு பயப்படலை. அவனோட ரசமணிக்கு தான் பயப்பட்றோம்.”

“அதை அவன்கிட்ட இருந்து எடுத்துட்டா...”

“அப்படி எடுத்த பிறகு சொல்லுங்க...கை காலை என்ன ஆளையே உருத்தெரியாம பண்ணிட்றேன்.”

“சரி இப்ப நீ கிளம்பு. அதையும் அவனையும் பிரிச்சிட்டு உனக்கு தகவல் தரேன்...”

காரை நடுவழியில் நிறுத்தி கொண்டையராஜுவை இறங்கச் சொல்கிறார். கொண்டைய ராஜுவும் அரை மனதாக இறங்கிக் கொள்ள கார் பழைபடி வேகம் எடுக்கிறது.

"அட பாழாப்போன பணக்காரரா! உன் புத்தியை காட்டிட்டியே."

ராஜு சலித்துக் கொள்கிறான்.

❑ ❑ ❑

**அ**து மாணிக்கம் என்கிற தொழிலதிபரின் வீடு. வீட்டுக்கு வெளியே பெரிய தோட்டம். தர்பாராக விசிறி வாழை, ஜெர்மன் புல்வெளி என்கிற அம்சங்கள்.

வீட்டு முன் காற்றை கிழித்தபடி நிற்கிறது ஜீப். கையில் வாரண்டுடன் இறங்குகிறார். பிரேம்நாத் திபுதிபு வென ஒரு கூட்டத்துடன் உள் நுழைகிறார். உள்ளே நுழைபவரை பார்த்து ஐந்து விரலிலும் மோதிரம் தரித்திருக்கும் அந்த தொழிலதிபர் திடுக்கிட்டுப் போகிறார்.

பிரேம்நாத்தின் பதிலில் ஆவேசம்.

"என்னது கள்ள நோட்டா ...இல்ல பொய். யாரோ கதை கட்டி விட்டிருக்காங்க..."

"அப்படியா... அதை சோதனை செய்து பார்த்துட்டா தெரிஞ்சிட்டுப் போகுது..."

"வேண்டாம்...வேண்டாம் நான் மாட்டேன். நான் இந்த சமூகத்துல அந்தஸ்துல உள்ள ஒருத்தன்."

"பெரிய அந்தஸ்து. கள்ளநோட்டு அடிச்சு மாத்தியே பணக்காரன் ஆனவன்ல நீ...303, 508 உம் போன் தானே ஒரு இடம் பாக்கி விடக்கூடாது..."

பிரேம்நாத்தின் வேகம் அந்த நபரை கிலி யடையச் செய்கிறது.

"உன்னை உன் ஆளை வெச்சே பிடிச்சிட்டேன். ஜஸ்ட் போன் நம்பர் போதும் உன்னைபிடிக்க. போலீஸ் டிபார்ட்மென்ட்ட என்ன கேனப்பசங்க டிபாட்மென்ட் டுன்னு நினைச்சயா..."

பிரேம்நாத் பேசிக் கொண்டே வீட்டை நோட்டம் விடுகிறார். கூட வந்த போலீஸ் கூட்டம் சலித்து எடுக்க ஆரம்பிக்கிறது.

அந்த அதிபரின் உடம்பு தெப்பலாக நனைய ஆரம் பிக்கிறது. அதே சமயம் போலீஸ் வசம் கட்டுக்கட்டாக நோட்டுக் கட்டுகளும் படுக்கை விரிப்பின் அடியில் இருந்தும் மாடிப்படியின் முக்கிய படிகளில் இருந்தும் எடுக்கப்படுகின்றன.

"இப்ப என்னய்யா சொல்றே..." பிரேம்நாத் தன் துப்பாக்கியால் அவர் மார்பு முன் குத்தியபடி கேட்கிறார். அந்த நபரின் முகம் வெளிறிப் போகிறது.

"சரி மாட்டிகிட்டே, உண்மைய சொல்லு. உன் கூட்டத்துல இன்னும் யார் யார் இருக்காங்க. விஜயனை எப்படி வளைச்சு பிடிச்சீங்க. அவனை யார் கொலை செய்தது?"

சத்யராஜ் ஸ்டைலில் மார்பு முன் துப்பாக்கி நீண் டிருக்க அவர் கேட்பதில் மாணிக்கம் எனும் அந்த நபர் கதி கலங்கிப் போய் மின்னல் வேகத்தில் ஒரு முடி வுக்கு வருகிறார். சற்றும் எதிர்பாராத விதத்தில் பிரேம்நாத்தின் துப்பாக்கியை தட்டிப் பறித்து தன் நெற்றிப் பொட்டுக்கு நேராக வைத்துக் கொண்டு ட்ரிக்கரை அழுத்த...

# 59



டுஷ்யூம்ம்ம்...துப்பாக்கித் தோட்டா தொழிலதிபர் மாணிக்கத்தின் நெற்றிப்பொட்டை திருகிக் கொண்டு மறுபுறம் வழியாக வெளியேறி அவரையும் பிணமாக சாய்க்கிறது.

துளிகூட எதிர்பாராத செயல்.

பிரேம்நாத் திடுக்கிட்டுப் போனதில் கிட்டத்தட்ட ஒரு நிமிடம் அடுத்து என்ன செய்வதென்றே அவருக்கு தோன்றவில்லை.

சப்தம் அவர் மனைவியை பிடித்து இழுத்து வந்து புலம்பவிடுகின்றது.

"ஐய்யய்யோ...இப்படி பண்ணிட்டீங்களே. இதுக்கு தானே நான் அன்னிக்கே அடிச்சுக்கிட்டேன். அந்த தர்மராஜ் கோஷ்டியோடல்லாம் சாவகாசம் வெச்சுக்கா தீங்கன்னு. இப்ப என்ன தனிமரமா உட்டுட்டு போய்ட் டீங்களே..."

-அவள் புலம்பலில் தெறித்து விழுந்த தர்மராஜ் யார்? பிரேம்நாத் சுதாரிக்கிறார்.

"இந்தாம்மா... யாரோ தர்மராஜ் யார்? பிரேம்நாத் சுதாரிக்கிறார்.

அவள் உடனே அழுகைக்கு நடுவிலும் திருதிரு வென விழித்தபடி அவரை பார்க்கிறாள்.

"யார்னு கேக்கறேன்ல... யார்னு சொல்லும்மா இல்லேன்னா உன் புருஷன் மாதிரி நிறைய பேர் சாக வேண்டிவரும். நீயாவது பேசு..."

அவள் அழுது கொண்டே இரத்தம் பெருக் கெடுத்துக் கிடக்கும் கணவனை பார்த்தபடியே சொல்கிறாள்.

"முதல்ல என்னை கொஞ்சம் அழ விடுங்க. அப்பு றமா சொல்றேன்..."

-பிரேம்நாத்துக்கும் அவள் துக்கம் புரிகிறது. ஒதுங்கிக் கொள்கிறார். அவள் அழ ஆரம்பிக்கிறாள். மறுபுறம் பாடியை அப்புறப்படுத்துவதற்கான ஏற் பாடுகள். இதற்கு நடுவில் அந்த வீட்டில் நடப்பதை எல்லாம் கவனித்தபடி இருக்கும் ஒரு கிழட்டு வேலைக் காரன் ஓசைப்படாமல் வெளியேறுகிறான்.

வீட்டின் பதற்றமான சூழ்நிலையில் யாரும் அவனை கவனிக்கவில்லை.

❑ ❑ ❑

**வெ**ளியேறுபவன் அவசர அவசரமாக ஒரு டெலி போன் பூத்தை நெருங்குகிறான். எண்களை சுழற்றி மறுமுனையில் அந்த தர்மராஜையே பிடிக்கிறான்.

ஐயா, மாணிக்கம் ஐயா தற்கொலை செய்துக்கிட் டாருங்க. போலீஸ் எப்படியோ மோப்பம் பிடிச்சு வந்துட்டாங்க. வீட்ல இருந்த கள்ள நோட்டுங்களையும் எடுத்துட்டாங்க... நல்லவேளை மாணிக்கம் ஐயா உங்களை காட்டிக் கொடுக்கலை. ஆனா, அம்மா காட்டிக் கொடுத்துருவாங்க போல தெரியுது..."

"தெரியும்...எனக்கும் தெரியும்... சண்முகசுந்தரி அந்த பிரேம்நாத்கிட்ட என்ன பத்தி சொல்றதுக்குள்ள அவளையும் எப்படியாவது அவ புருஷனோட சேர்த்து அனுப்பிடு..."

“ஐய்யோ போலீஸ் இருக்குங்களே...?”

“போடா முட்டாள். நடுவுல காபி, டீ கொடுக்கற மாதிரி கொடுக்கலை அதுல விஷத்தை கலந்துடு.”

“அப்புறம் என்மேல சந்தேகம் வருங்களே?”

“அதுக்குள்ற நீ கம்பி நீட்டிடு. இதை நீ செய்யத் தவறினே நீ உசுரோட இருக்க முடியாது. நீ எந்த மூலைக்கு போனாலும் நான் உன்னை விடமாட்டேன்.”

“சரீங்க...சரீங்க... அப்படியே செஞ்சுட்றேன்.”

-போனை பதற்றத்துடன் கீழே வைத்துவிட்டு திரும்ப தொடங்குகிறான்.

❑ ❑ ❑

**வீ**ட்டின் ஒரே களேபரம். அக்கம் பக்கமெல்லாம் எட்டிப் பார்த்துக்கொண்டு நிற்க போலீஸ் சம்பிரதாயங் களுக்கு நடுவில் மாணிக்கத்தின் உடல் . உடம்பை சுற்றி சாக்பீஸால் கட்டம் கட்டி, ஃப்ளாஷ் மின்ன விழுந்து கிடக்கும் கோலத்தை புகைப்படம் எடுத்து அந்த தற் கொலை ஆயுதமான துப்பாக்கியை மாணிக்கத்தின் கைரேகை அழியாதபடி ஒரு வெல்வெட் துணியால் அந்த பிணத்தின் கைகளில் இருந்து பிரித்து எடுத்து...

சம்பிரதாயங்கள் தொடர்ந்து கொண்டிருக்க ஓரமாக உட்கார்ந்து புடவைத் தலைப்பால் வாயை மூடியபடி அழுது கொண்டிருக்கிறாள் சண்முகசுந்தரி எனும் மாணிக்கத்தின் மனைவி.

“அம்மா அழாதீங்கம்மா...நடந்தது நடந்து போச்சு. இனி ஆக வேண்டியது பாருங்கம்மா...”என்று ஓசைப் படாமல் அவள் அருகே போய் நின்று கொள்கிறான் வேலைக்காரன்.

"இல்ல வேலப்பா-நானும் இனி உசுரோட இருக்க மாட்டேன். இருந்து என்ன பிரயோஜனம் சொல்லு பார்ப்போம். மானம் போய் மரியாதை போய் இப்ப அவரும் போய்..."

"அப்படி எல்லாம் சொல்லாதீங்கம்மா, மனசை தேத்திக்குங்க. காலைல இருந்தே எதுவும் சாப்பிடலை, கொஞ்சம் பாலாச்சும் குடிங்கம்மா கொண்டுகிட்டு வரேன்"

- ஓசைப்படாமல் நழுவுகிறான். பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருக்கிறார் பிரேம்நாத்.

"மாணிக்கம் ஏமாற்றினாலும் சண்முகசுந்தரி வசமாக மாட்டிக் கொண்டிருக்கிறாள். இவளை விட்டு விடவே கூடாது."

அவர் மனதில் தீர்மான முடிச்சுகள்.

நடுவில் பால் கோப்பையுடன் வருகிறான் வேலப்பன் என்னும் அந்த வேலைக்காரன். சண்முகசுந்தரி எதிரில் நீட்டுகிறான். அவள் சாப்பிடாமல் அழுது கொண்டேயிருக்கிறாள்.

"சாப்பிடுங்கம்மா...சாப்பிடுங்கம்மா..." அவனிடம் கெஞ்சல் தொடர்கிறது.

"இது பால் குடிக்கற நேரமா... முட்டாள் போ அப்பால..."

அவள் நடுவில் கத்துகிறாள், அது அவனை என்னவோ செய்கிறது.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்கம்மா... சாப்பிடுங்கம்மா..."

-அவனும் விட மறுக்கிறான். அவள் தாமதிக்க தாமதிக்க அவன் கைகளில் நடுக்கம் பரவ ஆரம்பிக்கிறது. துல்லியமாக இதை கவனிக்கிறார் பிரேம்நாத்.

"ஏய் இங்க வா..."-அவனை அழைக்கிறார். அவன் நடுங்கியபடி வருகிறான்.

"ஏய் நடுங்கறே?"

"இல்லீங்களே..."

"பொய் சொல்லாதே..."அவர் உரக்கக் கத்திய மறுநொடியே அவன் பால் கோப்பையை நழுவவிட அது கீழே விழுந்து சிதற அந்த விஷப்பால் தரைப்பரப்பில் சில இடங்களில் கட்டி கட்டியாக விஷப்பொடி சரியாக கரையாத நிலையில் தேங்கி நிற்க...



# 60

**பா**ல் திப்பிகளை குனிந்து பிரேம்நாத் தொட்டுப் பார்க்கிறார். அதற்குள் தப்பித்தால் போதும் என்று ஓடப் பார்க்கிறான் வேலப்பன்.

அவனது செயலே அவனை காட்டிக் கொடுக்க போலீஸ் கூட்டம் அவனை வளைத்துப்பிடிக்க பிரேம் நாத் நெஞ்சை கைகளில் பிடித்தபடி எழுகிறார்.

அவருக்கு மேல் மருண்டு போய் திகைத்துப்போய் பார்க்கிறாள் சண்முகசுந்தரி.

"பாஸ்டர்ட் இந்தம்மா உண்மையை சொல்லிடப் போறாங்கன்னு பாய்சன் கலந்து பால் கொடுக்கப் பார்த்துருக்கான்."

“ஐய்யோ விஷமா... அடப்பாவி என்னையா கொல்லத் துணிஞ்சே. சண்டாளா...”-சண்முகசுந்தரி மயக்கம் போட்டே விழுகிறாள்.

❑ ❑ ❑

**ந**கை வியாபாரம் மும்முரத்தில் இருக்கிறது. தேவா வியாபாரத்துக்கு நடுவிலும் ஒருவித தவிப்புடன் இருக்கிறான். ஒரு பக்கம் பிருந்தா முகமும் மறுபக்கம் லேகா முகமும் வந்துவந்து செல்ல அனைத்தையும் தாண்டி பகை உணர்ச்சியோடு உலவும் கைலாஷ் முகமும் செத்துப்போன விஜயனின் முகமும் அதற்கும் மேல் முண்டுகிறது.

வியாபாரத்திலேயே லயிக்க முடியவில்லை.

-வாழ்க்கையில் முன்னேற்றம் ஒரு பக்கமாக ஏற்படும் சமயம் மறுபக்கம் இப்படித்தான் பிரச்சினைகள் தோன்றுமோ?

பசுபதிநாதன் உதவுவார் என்று பார்த்தால் நீயே சமாளித்துக்கொள் என்கிறார்.

எப்படி சமாளிக்கப் போகிறோம்... ராமானந்தத்துக்கு வேறு மிரட்டல் வந்து! கொண்டேயிருக்கிறது...

கலங்கிப்போய் கன்னத்தில் கைவைத்தபடி அமர்ந்து கொண்டிருக்கும் தேவாவை கலைக்கிறது தொலைபேசி மணி ஓசை. எடுத்து காதைக் கொடுக்கிறான்.

“யெஸ் தேவா ஹியர்!”

“ஏய் தேவா பிரேம்நாத் பேசறேம்பா...”

“சொல்லுங்க சார்...”

“அந்த கள்ள நோட்டு கூட்டம் யார்ங்கறது ஓரளவு தெரிஞ்ச போச்சு, யாரோ தர்மராஜாம். அவன் பேர்

தான் தெரியும் ஆளைக்கூட பார்த்து கிடையாதுங் கறாங்க தொழிலதிபர் மாணிக்கம்கறவர் மனைவி.

அவன் பெரிய கொலைகாரனா இருப்பான்போல. வீட்டுவேலைக்காரனை வெச்சு அவர் மனைவியையே கொல்ல ஒரு சதிதிட்டம் போட்டிருக்கான் அவன்.

இப்போதைக்கு துருப்புச் சீட்டு வேலைக்காரன் வேலப்பன்தான். எவ்வளவு அடிச்சாலும் உண்மையை சொல்லமாட்டேங்கறான்."

"அப்ப அடுத்து என்ன செய்யப் போறீங்க...?"

"நீ கொஞ்சம் ஜாக்ரதையா இரு. உன்மேலையும் அந்த தர்மராஜ் கோபம் திரும்பலாம். அதுக்காகதான் போன் பண்ணினேன்.

"மிஸ்டர் கைலாஷையும் வார்ன் பண்ணியிருக்கேன்."

"சார் முக்கியமான நபர் ராமானந்தன். அவரை விட்டுட்டீங்களே..."

"டோன்ட் ஒர்ரி. நான் பாத்துக்கறேன். தனியா எங்கேயும் போகாதே. என் செல் நம்பர் தரேன். எதுக்கும் வெச்சுக்கோ கான்டாக்ட் பண்ண வசதியா இருக்கும். ப்ளீஸ் நோட் மை நம்பர்..."

-பிரேம்நாத் எண்களை சொல்ல வேகவேகமாக குறித்துக்கொள்கிறான் தேவா. மறக்காமல் நன்றி சொல்லி தொலைபேசியை கீழே வைப்பவன் முகத்தில் "அப்பாடா என்கிற பெருமூச்சு..."

❑ ❑ ❑

**வே**லப்பனை நன்றாகவே நாற்காலியில் கட்டிப் போட்டிருக்கிறது போலீஸ். நார்நாராக பிய்த்து

தோரணம் கட்டாத குறை. இத்தனைக்குப் பிறகும் அவன் வாயிலிருந்து உண்மை வருவேனா என்கிறது.

போலீசுக்கு விதம்விதமாக அடிக்கத் தெரியும். டோப்பா தட்டு, பஞ்சாப் தட்டு, பின்மத்து, உருட்டுக் காய்ச்சல் என்று அவர்கள் புகுந்து விளையாட எவ்வளவோ இருக்கிறது.

அதில் ஒவ்வொருவராக வித்தையை காட்டியும் வேலப்பன் வாய் திறக்க மறுக்கிறான்.

ஆனால், ஒன்றை மட்டும் மறக்காமல் சொல் கிறான்.

ஐயா...டெல்லிவரை செல்வாக்குள்ளவர். என்னை அடிக்கறதுக்கெல்லாம் சேர்த்து அனுபவிப்பீங்க..." என்கிறான்.

பிரேம்நாத்தை அது பிடித்து உலுக்கிக் கொண்டே யிருக்கிறது.

"தண்ணீர் தண்ணீர்..." என்று கத்துகிறான் அவன். இருந்தும் ஒரு கவளம் கூட குடிக்கக் கொடுக்காமல் உண்மையச் சொல்...உண்மையச் சொல் என்று அடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நெஞ்சழுத்தத்தை போலீஸ், சமூக விடுதலைப் போராளிகளிடம்கூட பார்த்ததில்லை.

பிரேம்நாத் வெகுவாக யோசித்துவிட்டு இறுதி யாக ஒரு முடிவுக்கு வருகிறார்.

"த்ரீ நாட் செவன்...டாக்டர் கோபால்ராவுக்கு போன் போட்டு வரச் சொல்லுங்க. இவனை அடிச் செல்லாம் விஷயத்தை வாங்கமுடியாது. அவர்தான் சரி..."

...கோபால்ராவ் பேரைக் கேட்டதுமே மொத்த போலீஸ் கூட்டமும் சற்று புருவத்தை உயர்த்துகிறது. கோபால்ராவ் அற்புதமான மனநோய் நிபுணர் ஹிப்னாடிசம், மெஸ்மரிசத்தில் கரை கண்டவர். கொஞ்சம் வர்மமும் கற்று வைத்திருப்பவர். பேசியே கல்லையும் கரையச் செய்பவர்.

அவர் வந்து உண்மை வர உண்மையைச் சொல்ல மாட்டேன்." என்று ஆகாசம் கிழியும்படி கத்திப் பார்க்கிறான். அதேசமயம் அந்த ஸ்டேஷன் மூலையில் உள்ள தண்ணீர் பானையில் ஒரு போலீஸ்காரர் கரம் யாருக்கும் தெரியாமல் எதையோ கலந்து கொண்டிருக் கிறது.

# 61



அந்த கரம் விஷம் கலக்கி முடிக்கவும் ஒரு கான்ஸ்டபிள் வந்து அந்த பானையில் இருந்து தண்ணீர் மொள்ளவும் சரியாக இருக்கிறது.

"தண்ணி யாருக்கு?"

"ஆங்...மாத்து வாங்கிகுனு இருக்கற பார்ட்டிக்கு தான். தண்ணி தண்ணின்னு உசுர வாங்கறத கவனிக்க லியா?"-சொல்லிக் கொண்டே தண்ணீரை எடுத்துப் போகிறார் அந்த கான்ஸ்டபிள்.

அடுத்த நொடி கேள்வி கேட்ட போலீஸ்காரர் அப்படியே சைலெண்டாக அங்கிருந்து நழுவத் தொடங்க தண்ணீர் தம்ளர் அங்கே வேலப்பன் எதிரில் நிற்கிறது.

"குடி...செத்து கித்து வெச்சடாதே. டாக்டர் வரட்டும் உன் கிட்ட உண்மைய எப்படி வாங்கறேன் பார்..."

-பிரேம்நாத் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவன் முகம் என்னவோ போல் ஆகிறது. கண்களில் செருகல். வாயில் கோணல்.

"ஏய்...என்ன செய்யுது? என்னய்யா பண்றே?"

-பிரேம்நாத் அவனை நெருங்கித் தொடவும் அவன் அதிகம் உலட்டுகிறான்.

உலட்டிய வேகத்தோடு அப்படியே தலையையும் தொங்கப் போடுகிறான்.

தம்ளர் தரையில் விழுந்து உருள்கிறது. பிரேம் நாத்துக்கு புரிந்து போகிறது. மின்னல் வேகத்தில் தண்ணீர்ப் பானையை நெருங்குபவர் அந்த நீரை முகர்ந்து பார்க்கிறார்.

"ஏகாம்பரம்..."-என்று ஏழு கட்டையில் கத்தவும் ஓடி வருகிறார் ஹெட்கான்ஸ்டபிள்.

"இந்த தண்ணியை டெஸ்ட்டுக்கு அனுப்புங்க. யாரோ விஷம் கலந்து, இருந்த ஒரு நம்பிக்கையையும் தரைமட்டமாக்கிட்டாங்க. பாஸ்டர்ட்ஸ்..."

-பிரேம்நாத் அப்படி கத்தி அந்த போலீஸ் ஸ்டேஷனில் ஒருவர் கூட பார்த்ததில்லை. சப்தம் உத்திரத்தில் மோதி தூசி கொட்டுகிறது.

❑ ❑ ❑

**தொ**லைபேசி சப்திக்கிறது. எடுக்கிறான் தேவா.

"தேவா, நான் பிரேம்நாத் பேசறேன். எதிரி எமகாதகனாக இருக்கான். கிடைச்ச ஒரு நபரையும் பறிகொடுத்துட்டேன்..."

"என்ன சார் சொல்றீங்க?"

"என் கூட்டத்துலையே கருப்பு ஆடு இருக்கு தேவா. அதை நான் பார்த்துக்கறேன். நீ ஜாக்கிரதையா இரு. அந்த கள்ளநோட்டு கோஷ்டிக்கு பயம் தலைக்கு ஏறிடிச்சு. மாட்டிக்கிட்டா என்ன பண்றதுங்கற பயம் வந்துட்டதால அவங்க எதை வேணும்னாலும் செய்யத் துணியலாம் ஜாக்கிரதை..."

பிரேம்நாத்தின் எச்சரிக்கை கேட்டு சற்று சோர்ந்து போய் ரிசீவரை வைக்கிறான்.

அதை நான் மாற்றுகிறேன் என்பதுபோல வரு கிறாள் லேகா.

ஹாய் தேவா...ஏன் முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு..."

"ஒண்ணுமில்லையே...ஒண்ணுமில்லை."

"கொஞ்சம் உங்ககூட பேசணும். பேச வரீங்களா?"

"வேண்டாம் லேகா, இது பிசினஸ் டைம். எல்லா ஒர்க்கர்சும் தப்பா நினைப்பாங்க..."

"நத்திங் டூயிங். யார் தப்பா நினைக்கறாங்க. கமான் டெல் மீ. அவங்கள நான் இரண்டுல ஒண்ணு பாத்துட்றேன்..."

"அம்மா தாயே அமைதி அமைதி. இப்ப நான் உன் கூட வரணும், அவ்வளவுதானே?"

"யெஸ்...கமான்...கமான்..." அவள் ஒரு நாய்க் குட்டியை அழைப்பதுபோல அழைத்தபடி மாடிப்படி இருக்கும் பக்கம் செல்கிறாள்.

"கடவுயே... இதென்ன சோதனை. என் டென்ஷனை இவளுக்கு நான் எப்படி புரியவைப்பேன்..."-முணுமுணுப் போடு பின் தொடர்கிறான் தேவா.

❑ ❑ ❑

**மா**டி அறையில் இதமான ஏ.சி. கர்ட்டனை விலக்க, மீனாட்சி கோயில் கோபுரம் கண்ணாடி சாளரம் வழியே தெரிகிறது.

"அப்பா. பேசினாரரா தேவா..."கர்ட்டனை விலக்கி கோபுரத்தை பார்த்தபடி கேட்கிறாள்.

"எதை?"

"உம்...மீனாட்சியம்மன் கோயில் விலைக்கு வரு தாம் அதை வாங்கறது பத்தி..."

"லேகா...நீ நேரம் தெரியாம விளையாடிக் கிட் டிருக்கே. நானும் கடையும் இப்ப ரொம்ப சிக்கலான நிலைல இருக்கோம்..."

"கடைன்னாலே சிக்கல்தாதன். அது எப்பவும் இருக்கத்தான் செய்யும். அதனாலதானே நான் ரிலாக்ஸ் பண்ண வந்துருக்கேன்."

"இதுக்கு பேர் ரிலாக்ஸா... வந்த விஷயத்த சொல். எனக்கு நேரமாகுது."

"பறக்காதே தேவா...நான் எவ்வளவு மூடோட வந்திருக்கேன் தெரியுமா?"-லேகா பேச்சோடு ஆசையை கண்ணில் வழிய விடுகிறாள். செல்வச் செழிப்பான முகத்தில் யவ்வனம் மின்னல் போல ஒளிவிடுகிறது. அவனது இளமையும் ஒருவினாடி ஆடிப்போய் விடு கிறது.

"வேண்டாம் லேகா அப்படிப் பார்க்காதே... என்னை என்னவோ செய்யுது..."

"செய்யுதா...அதானே எனக்கு வேணும்?" சொல்லிக் கொண்டே அவன் தோள்மேல் சாய்கிறாள். அவன் மனதால் அவளை விலக்க விரும்புகிறான். ஆனால் உணர்வால் முடியாமல் துடிக்க ஆரம்பிக்கிறான்...

அவள் தன் பிடியை இறுக்க ஆரம்பிக்கிறாள். உடம்பில் அனல் பறக்க ஆரம்பிக்கிறது.

"தேவா...ஐ லவ் யூ தேவா..." உதட்டில் ஈனசுரம்... லே...லேகா...வேண்டாம் நான் உன் கூட இங்க இப்படி இருக்கிறது தப்பு..."-தடுமாறி சொல்லி முடிக்கிறான்.

"அப்பாவுக்கு தெரிஞ்சா கண்டிப்பார்ன்னு பயப்பட்றியா?"

"ஆ...ஆமாம்...இல்ல...இல்ல..."

"தடுமாற ஆரம்பிச்சுட்டியா...குட்! நான் எப்ப இருந்து தடுமாறிக்கிட்டு இருக்கேன் தெரியுமா? காதல் மாதிரி ஒரு கொடுமையான காய்ச்சல் உலகத்திலேயே கிடையாது..."

அவன் மிக வியர்த்து போயிருக்கிறான். சட் டென்று உறுத்தலை வரவழைத்துச் சொல்கிறான்.

"சாரி லேகா...ப்ளீஸ்..."அவள் பிடியில் இருந்து நழுவுகிறான்.

"ஏன் தேவா என்னை பிடிக்கலையா?"

"அது...அது....இப்படி நடந்துக்கறது பிடிக்கலை...

"உலகம் தோன்றின நாள்லே இருந்தே காதலர்கள் இப்படித்தான் நடந்துக்கறாங்க..."

"ஐய்யோ...அதுக்கு ஒரு இடமோ? நேரமோ இல்லையா?"

"ஓ.கே. சாயங்காலமா சினிமாக்கு போகலாமா?"

“டைட்டானிக். மாப்ள விநாயகா ஏ.சி.-ல ஜில்லுன்னு பாக்கலாம். அற்புதமான லவ் ஸ்டோரியும் அந்த கப்பல் கதையோட கலந்து கிடக்காம்...”

“வேண்டாம்...அந்த கப்பல் மூழ்கின கப்பல். உன் காதலும் அதுமாதிரி...”

-அவன் சொல்லி முடிப்பதற்குள் அவள் அவன் வாயை வேகமாக மூடுகிறாள்.



# 62

**கை**களால் வாயை மூடிய மறுநொடியே கண்களால் கலங்கி போகிறாள்.

“தேவா...வேண்டாம் அப்படிச் சொல்லாதே!”

அவனும் அவளை கவனிக்கிறான். அடேயப்பா இத்தனை காதலா? அவனுக்குள் திக்குமுக்காடல் ஏற்படத் தொடங்குகிறது.

இது எதில் போய் முடியுமோ தெரியவில்லையே...?

அவனும் கேள்வியுடன் கலக்கத்தின் உச்சிக்கு போகிறான்.

“லேகா என்ன இது, நெருப்புன்னா வாய் வெந்துடுமா என்ன?”

“நெருப்புன்னா வாய் வேகுமோ வேகாதோ உன் வெறுப்பு என்ன வேகவெச்சுடும் தேவா...”

அவள் மிடறு விழுங்கியபடியே சொல்கிறாள்.

"நீ இந்த அளவு நேசிக்க அப்படி என்ன இருக்கு என்கிட்ட..."

"தெரியல... சொல்லத் தெரியல. உடனே நான் ஏழை, வேலைக்காரன் அப்படி இப்படின்னு பேசிடாதே. ஒரு பொண்ணுக்கு ஒரு ஆண்கிட்ட ஒருமுறைதான் காதல் வரும். அது வந்துட்டா அவ அவனுக்காக எதையும் செய்வா. ராமாயணத்துல சீதை காட்டுக்கு போகலையா? நளாயினி தொழுநோய் கணவனை கூடைல சுமக்கலையா? இவங்கள விடவா நீயும் நானும் மோசம்?"

லேகாவின் விளக்கம் தேவாவை அழவே விடுகிறது.

"மடப்பெண்ணே..நான் உன்னை காதலிக்க வில்லை, காதலிக்கவும் முடியாது. உன்னை விட மோசமாக ஒருத்தி எனக்காக ஒரு பெரிய போராட்டமே நடத்திக் கொண் டிருக்கிறாள்" என்று நினைப்பதை சொல்லிவிட வாயெடுக்கும்போது கச்சிதமாக கதவைத் திறந்து கொண்டு உள் நுழைகிறார் அருணாசலம். அவரைப் பார்க்கவும் இருவரிடமும் சற்று பதற்றம், தயக்கம். அப்பாவை பார்க்கவும் லேகா ஏதோ தவறு செய்து விட்டவளைப் போல அங்கிருந்து அகல ஆரம்பிக் கிறாள்.

பார்த்துக்கொண்டே நிற்கிறார் அருணாசலம். அவள் வெளியேறி முடிக்கவும் தேவா பக்கம் திரும்புகிறார்.

"சாரி சார்."

"எதுக்கு?"

"இது ஓர்க் டைம். இப்ப போய்..."

"உன்னை நான் ஒண்ணும் சொல்லலையே. எல் லாம் லேகாவோட ஆர்வக் கோளாறாதான் இருக்க ணும்"

“தேங்க்யூ சார்...”

“எனக்கெதுக்குப்பா நன்றி சொல்றே?”

“சரியா புரிஞ்சுகிட்டிருக்கீங்களே-அதுக்கு...”

“நீயும் நானும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கறதா பெரிசு. அவ புரிஞ்சுக்கணுமே...”

“அதான் சார் எனக்குப் பயமா இருக்கு. லேகா என் மேல கண்மூடித்தனமான காதலோட இருக்கா....இது நல்லதில்ல சார்...”

“இல்லதான்...என்ன பண்ணலாம் சொல் பார்ப்போம். இத்தனை வருஷத்துல ஒரு பேனா பென்சில்கூட என்கிட்ட அவ கேட்டதில்லை! அவ முதல் முதலா கேட்ட விஷயம் நீதான். உன்னையும் வாங்கிட முடியும்னு நினைச்சேன். ஆனா தங்கம் வைரம் வாங்க முடிஞ்ச என்னால உன்னை வாங்க முடியல.”

“ சார்.” நான் அவ்வளவு மதிப்பானவன் இல்லை சார். என்னவோ தெரியல என்னையும் காதலிக்க இரண்டு பேர். அந்த இரண்டு பேருமே கோடீஸ்வர ஜாதி. பிருந்தா காதலைகூட நான் முதல்ல ஏத்துக்கல. ஆனா கோயில்ல வெச்சு தப்பு செய்துட்டேன். தட்ட முடியாமதான் ஒத்துகிட்டேன்.”

“சில நேரங்கள்ள அப்படித்தான். வாழ்க்கைல சில விஷயங்கள் நாம் நினைக்காத திசைல எல்லாம் போகும்.”

“இதுக்கு முடிவுதான் என்ன சார்...”

“கொஞ்சம் பொறுத்துக்க தேவா... நானே ஒரு நல்ல ஏற்பாடு செய்யறேன்.”

அவர் அப்படி சொல்லவும் அவன் அவரை பரிதாப மாக பார்க்கிறான்.

“போய் வேலையைப் பாரு...”

விடை கொடுக்கிறார். அவனும் ஆமோதிப்போடு கிளம்புகிறான். கதவருகே செல்பவன் நின்று திரும்பி "சார் ஒரு முக்கிய விஷயம்..." என்கிறான்.

"என்ன தேவா..."

"இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் போன் பண்ணினார். நாம ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும்."

"உம்ம்..."

"அந்த கள்ள நோட்டு கோஷ்டிக்கு போலீஸ் லையே ஆள் இருக்கு, இன்னிக்கு ஸ்டேஷன்ல ஒரு கொலை நடந்துடிச்சு."

"தெரியும். எனக்கும் போன் பண்ணினார். எதுவா இருந்தாலும் சந்திச்சுத்தானே தீரணும்."

நீங்க தனியா எங்கேயும் போகாதீங்க..."

அருணாசலம் அதைக் கேட்டு ஒருவகை விரக்தி யோடு சிரிக்கிறார்.

❑ ❑ ❑

**மி**குந்த டென்ஷனோடு இருக்கிறார் பிரேம்நாத். எஸ்.பி. வரை விஷயம் போய் காவலில் நடந்த தவறுக் காக பிய்த்து எடுத்து விட்டிருக்கிறார்கள் அவரை.

"எல்லாம் உங்க கேர்லெஸால."

...என்கிற அபிப்பிராயம் வேறு. சொன்னாத்தானே செய்வார்கள்...?

அவருக்கு ஒரே புழுக்கமாக இருக்கிறது. தர்மராஜ், தர்மராஜ், தர்மராஜ் என்று புத்தி அந்த மர்ம மனித னையே நினைத்து கறுவிக் கொண்டிருக்கிறது.

டெலிபோன் டைரக்டரி எடுத்து அதில் உள்ள அத்தனை தர்மராஜ் முகவரிகளையும் டைப் செய்து எடுத்து வந்திருக்கும் தாள் டேபிள் மேல் படபடத்துக் கொண்டிருகிறது.

நடுவில் தொலைபேசியில் சிணுங்கல். வேண்டா வெறுப்பாக எடுத்து காதைக் கொடுக்கிறார்.

"வணக்கம் இன்ஸ்பெக்டர். நான் தர்மராஜ் பேச றேன்" என்கிற குரல் நிமிர்த்தி எழுப்புகிறது.

"டேய் பாஸ்டர்ட் கண்ணாமூச்சியா விளையாடி கிட்டு இருக்கே உன்னை..."

-கண்கள் சிவக்க கத்துகிறார்.

"வேண்டாம் இன்ஸ்பெக்டர். பலம் தெரியாம மோதாதீங்க. எவ்வளவு சினிமா பார்த்திருப்பீங்க? நான்லாம் எல்லாத்துக்கும் துணிஞ்சுதான் இந்த தொழில்ல இறங்கியிருக்கேன். மந்திரிவரை இதுல தொடர்பு இருக்கு. பேசாம கேஸை அப்படி ஊத்தி மூடப்பாரு, அதுதான் உனக்கு நல்லது..."

"அப்படியா...என்ன பயமுறுத்தறியா. நீயும் எத்தனை சினிமா பார்த்திருப்பே...எதுலடா வில்லன் ஜெயிச்சிருக்கான்?"

"சினிமால வில்லன் தோக்கலாம். ஏன்னா அது கதை."

"ஆனா நிஜத்துல வில்லன் ஜெயிக்கறவன். அதை தெரிஞ்சுக்கோ."

"அதையும் பாத்துடுவோம். உன்னை நான் பிடிக் காம விடமாட்டேன். ஞாபகத்துல வெச்சுக்கோ..."

"வேண்டாம் ...என்னை நீ நெருங்க நெருங்க ஒவ் வொரு பொணமா விழும். ஜாக்ரதை"

"அதையும் பார்ப்போம்..."

"அப்ப பார்...இன்னும் கொஞ்ச நேரத்துல ஒரு சாவு உன்னை புரட்டி எடுக்கப் போறதை..."

தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட பிரேம் நாத் முகத்தில் அசுர கோபம்.

## 63



**ரா**மானந்தம் வீடு. குட்டி போட்ட பூனை போல அவரிடம் நடை. வீட்டுக்கு வெளியே கணேஷ் பீடி பிடித்துக்கொண்டு இரண்டு போலீஸ்.

தெருவே வேடிக்கை பார்க்கிறது. எதற்கு போலீஸ் காவல் என்று கேட்பதும் பதில் சொல்வதுமாக மாய்ந்து போய்விட்டாள் ராமானந்தம் மனைவி ரஞ்சிதம்.

"எதுக்கு தப்பு பண்ணணும். இப்ப இப்படி அவஸ்தை படணும்? மானமே போச்சு..."

-என்று நடுநடுவே மூக்கைச் சிந்துகிறாள். ராமானந் தத்துக்கும் போதும் போதுமென்றாகிவிட்டது.

"நீங்கள் சர்வீஸ் முடியும் வரை உழைத்தாலும் சம்பாதிக்க முடியாத பணம்" என்று ஆசை காட்டி விஜயன் அவரை இழுத்துவிட்டதை நினைத்துக் கொள் கிறார்.

ஒழுங்காகப் போய் கொண்டிருந்த வாழ்க்கையில் ஒரு புயலாக குறுக்கிட்டவன் ஆசை காட்டி மோசமும் செய்து விட்டான்.

முதலாளியிடமும் மதிப்பு போய் போலீசிடமும் மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டியதாக இருக்கிறது. நடுவில் அந்த கள்ள நோட்டுக் கும்பல் வேறு என்ன செய்யுமோ ஏது செய்யுமோ என்ற கண்டுபிடிக்க முடிய வில்லை.

போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளேயே புகுந்து அகப்பட்டுக் கொண்டவனை கொன்றவர்களுக்கு ராமானந்தத்தை கொல்வது தானா பெரிய விஷயம்?

அதிலும் இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்திடம் சவால் விட்டிருக்கும் இந்த தருணத்தில்...

ராமானந்தத்தையும் பயம் புரட்டி எடுத்துக் கொண்டிருக்கிறது. யார் வீட்டுக்கு வந்தாலும் பயமாக இருக்கிறது. பச்சைத் தண்ணீரைகூட குடிக்க பயமாக இருக்கிறது. குடும்பமே கலங்கிப்போய் அமர்ந்திருக் கிறது.

வாசலில் காவலுக்கு நிற்கும் போலீசிடமும் லேசான கலக்கம்.

மணியும் பகல் பொழுது ஒரு மணி.

தெருமுனையில் இப்பொழுது இரு குடிமகன்கள்.

வேட்டி அவிழ்ந்தது தெரியாதபோதையோடு கூத்தடிக்கத் தொடங்குகின்றனர். போகின்ற வருகின்ற வர்களை எரிச்சல் மூட்டி வம்புக்கும் இழுக்கின்றனர். குறிப்பாய் பெண்களால் அவர்களை கடந்து நடக்கவே முடியவில்லை.

போலீசாரும் பார்க்கின்றனர். பிடித்து நாலு மொத்து மொத்தும் ஆசையும் ஆத்திரமும் கலந்து வருகிறது. இருந்தும் வீட்டுக்காவலை விட்டுச்செல்ல பயமாகவும் இருக்கிறது.

குடிகாரர்களும் அவர்களை நோக்கி வருகின்றனர்.

ஒரே ஆட்டம்! பாட்டம்!

"ஏண்டா குடிச்சு விட்டு ஆட்டமா போடறே... முட்டிக்கு முட்டி தட்டிப்பிடுவேன் ஆமா..."

"யோவ் போலீஸ்னா முட்டிக்கு முட்டி தட்டு வேன்னு பேசியே தீரணுமா... வேற டயலாக் பேசுய்யா..."

"என்னடா கிண்டலா, யார்டா நீ?"

"உம்...உங்கப்பன், ஆமா இப்பல்லாம் என்ன சாதா ரணபட்ட பார்ட்டிக்கெல்லாம் கூட காவல் இருக்கீங்க. மந்திரி எம்.எல்.ஏ.ன்னு போய் காவல் காக்கறது தானே உங்களுக்கு பிடிக்கும்..."

"நாயே அதிகம் பேசறே. பெண்ட கழட்டிப் பிடுவோம்."

"எங்க கழட்டு பார்க்கலாம்."

குடிகாரர்கள் மார்பை நிமிர்த்த மோதல் வலுப்பட ராமானந்தம் வீட்டு வாசலில் ஒரு குட்டி யுத்தமே அரங்கேறுகிறது. எல்லாரும் வாசலுக்கு வாசல் நின்று இந்த கூத்தை வேடிக்கை பார்க்க ஒருவன் புத்தி சாலித்தனமாக போன் செய்கிறான்.

"சார்... இங்க வள்ளுவர் தெருவுல குடிச்சுபுட்டு ஒரே கலாட்டா போலீஸ்காரர்களையே போட்டு அடிக்கிறாங்க..."

"அப்படியா இப்பவே வரோம்..."

-மறுமுனை பதிலை கேட்டபடி நிம்மதியோடு ரிசீவரை முடக்குபவன் வெளியே வர பொது மக்களில் சிலர் போலீசுக்கு சாதகமாக களத்தில் இறங்கி அந்த குடிகாரர்களை பிடித்து தெருக் கம்பத்தில் கட்டுமளவு போய்விட்டிருந்தனர்.

பரவாயில்லையே...!

❑ ❑ ❑

**போ**லீசும் போன் செய்தி கிடைத்த ஐந்தாவது நிமிடமே பெரிய வேனுடன் நிறைய போலீஸ்களுடன் பிரவேசிக்கிறது.

இறங்கி ஓடி வந்து கட்டிப் போட்டிருக்கும் இருவரையும் பார்க்கிறார் இன்ஸ்பெக்டர் பிரேம்நாத்.

கோட்டு வாயில் ரத்தம் ஒழுக அவர்கள் மயங்கித்தலை தொங்கிப் போய் கிடக்கின்றனர்.

"ஏய்...யார் இது இந்த அடி அடிச்சது!"

"எல்லாரும்தான் சார். அட்டகாசம் தாங்க முடியல. பாத்தீங்களா சார் 303ஐ சட்டையை எல்லாம் எப்படி கிழிச்சிருக்கான்."

"ஆமாம் சார்...நான் எவ்வளவோ வார்ன் பண்ணினேன். அவங்க மோதிப் பாக்கறதுன்னு முடிவெடுத்து வந்த மாதிரி தெரியாது..."

"சரி சரி...இரண்டு பேரையும் வேன்ல ஏத்தி ஜி.எச். கொண்டுகிட்டு போங்க முதல்ல..."

-என்று சொல்லிவிட்டு பிரேம்நாத் ராமானந்தம் வீட்டு பக்கம் பார்வையை விடுகிறார்.

ராமானந்தம் மனைவி ரஞ்சிதம் வீட்டு வாசலில்! அவளைப் பார்க்கவும் நெருங்கி வருகிறார். அவளும் வணக்கம் சொல்கிறாள்.

"என்னம்மா எப்படி இருக்கார் உங்க புருஷன்."

"இருக்காருங்க...ஒரேடியா பயந்து நடுங்கிகிட்டு இருக்கார்."

"அதான் காவல் போட்டுருக்கோம்ல. எதுக்குப் பயப்படணும்?"

"என்ன இருந்தாலும் மனசு கேக்க மாட்டேங் துங்களே...?"

"நோ...நோ...தைரியமா இருங்க. வாங்க, நானும் வரேன். அவரைப் பார்ப்போம்..."

-பிரேம்நாத் நடக்க கால் எடுக்கிறார். குறுக்கிடு கிறார் ஒரு போலீஸ்காரர்.

"சார் இந்த இரண்டு பேரையும் ரிலீஸ் பண்ணச் சொல்லி செல்போன்ல எஸ்.பி. ஆபீஸ்ல இருந்து யாரோ போன் பண்றாங்க சார்...?"

"பாஸ்டர்ட் யார் அவன்?"

"பேரை சொல்லல...ஆனா நம்ம டிபார்ட்மெண்ட் தான்..."

"தூக்கி உப்புல போடுங்க. குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்கற அவங்கள வந்து கவனிச்சிக்கிறேன்."

-என்று சொல்லி விட்டு வீதியை நிமிர்ந்து ஒரு பார்வை பார்க்கிறார். அமைதியாக ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஜனக்கூட்டம். ப்ார்த்து விட்டு மீசையை நீவியபடி உள்ளே நுழைபவருக்கு தூக்கி வாரிப் போடு கிறது.

உள்ளே நடு ஹாலில் மார்பில் கத்தி பாய்ந்த நிலையில் பிணமாக ராமானந்தம்!

# 64

**பி**ரேம்நாத் ராமானந்தத்தின் சடலத்தைப் பார்த்து பதைத்துப்போக அவர் மனைவி அலறும் அலறலில் உத்திரமே நடுங்குகிறது.

எப்படி நடந்தது?

யார் செய்தது?

பிரேம்நாத்தை கேள்வி வந்து கொத்தி எடுக்கிறது.

இத்தனை காவலை மீறி இது எப்படி நடக்கலாம்...?

வெளியே ஒரு குடிபோதை சண்டையை உருவாக்கி அதில் அனைவர் கவனமும் திரும்பியிருக்க கனகச்சித மாக உள்ளே புகுந்து காரியத்தை முடித்துவிட்டு சென்று விட்டானே கொலைகாரன்....

பிரேம்நாத் வெட்டப்பட்ட மரம்போல அப்ப டியே பக்கமாக விழுகிறார். போலீஸ் ஓடி வந்து "என்ன சார் என்னசார் ஆச்சு?" என்று கேட்டு மரியாதை காட்டு கிறது.

"என்ன ஆச்சா...நம்ம மூஞ்சியில கரி பூசிட் டான்யா... கரி பூசிட்டான்..."

-உச்சஸ்தாயியில் கத்துகிறார். அதிகமாக வியர்த்து விட்டிருக்கிறது. நடுவில் சப்திக்கிறது வீட்டு டெலி போன்.

"ஹலோ பிரேம்நாத் ... எப்படி என் சாமர்த் தியம்."-என்று ஒரு குரல்.

"டேய்...கண்ணாமூச்சியா விளையாட்றே உன்னை...

"டென்ஷனாகாதே பிரேம். சொன்னா கேளு. கள்ள நோட்டு கேஸை தோண்டாதே. விட்டுடு. அப்படியே விட்டுடு. இல்ல அடுத்த 24 மணி நேரத்துல இன்னொரு பிணம் விழும். சம்பந்தப்பட்டவன். சம்பந்தப் படாத அப்பாவின்னு எல்லாரும் வரிசையாக சாவாங்க. வேண்டாம் விட்டுரு..."

-பிரேம்நாத் அப்படியே நொறுங்கிப் போகிறார்.

❑ ❑ ❑

**க்**ரைம் பிராஞ்ச் ஆபீஸ்!

எஸ்.பி., ஏ.எஸ்.பி., சர்க்கிள் என்று ஒரு படையே முற்றுகை இட்டிருக்கிறது

கான்ஃப்ரன்ஸ் ஹாலில் வட்டம் கட்டி அமர்ந்திருக் கின்றனர்.

"என் கேரியர்ல இப்படி ஒரு பெக்கூலியர் பிராப்ளத்தை நான் மீட் பண்ணினதே இல்லை. இதை அப்படியே விட முடியாது. விட்டா தேச பொருளாதா ரமே நாசமா போயிடும். இப்பவே ரூபாய் நோட்டு மதிப்பு ரொம்ப குறைஞ்சு போச்சு..."எஸ்.பி. பேச்சை ஆரம் பிக்கிறார்.

"எதிரிக்கு நம்ம கூட்டத்துலேயே ஆள் இருக்கும் போது நாம என்ன செய்ய முடியும்? நம்ம முடிவுகள் எப்படியோ அவனுக்கு தெரிஞ்சிடுது. பத்தாததுக்கு மந்திரிவரை அவனுக்கு செல்வாக்கு இருக்காம்."-பிரேம் நாத் வெம்பி வெடிக்கிறார்.

"நோ...மந்திரி, எம்.எல்.ஏ. யார் குறுக்கிட்டாலும் டோண்ட் கேர். விஷயம் டெல்லி வரை போயாச்சு.

கள்ள நோடடுங்கறது ஸ்டேட்-பிராப்ளம் மட்டுமில்லை. இது நேஷனல் வைட் பிராப்ளம். துணிச்சலா இறங்கி செயல்படுங்க. அதே சமயம் ஒரு உயிர்கூட இனி போகக் கூடாது...”

“அப்படின்னா ஒரு முக்கியமான விஷயம் சார்...”

“என்ன பிரேம்நாத்?”

“உங்ககிட்ட மட்டும் ரகசியமா சொல்ல விரும்பறேன் சார்.”

“ஓ.கே. எல்லாரும் கொஞ்சம் வெளியே போய் வெய்ட் பண்றீங்களா?”-எஸ்.பி.யின் கட்டளைப்படி அடுத்தநொடி அனைவரும் அகல, எஸ்.பி எதிரில் தன் ராஜினாமா கடிதத்தை எடுத்துப் போடுகிறார் பிரேம்நாத்.

“சார், ஒரு போலீஸா அந்த கூட்டத்தை என்னால பிடிக்க முடியாது. ஆனா தனி நபரா முடியும்னு நம்பறேன்.”

“என்ன பிரேம்நாத். இது ஃபத்தியக்கார முடிவு...”

“இல்லை சார். இதுதான் சரியான முடிவு. அது மட்டுமில்லை. நான் இப்ப உங்களை தாக்கப் போறேன். நீங்க என்னை தூக்கி உள்ள போடுங்க...”

“புரியுது பிரேம்நாத். போலீஸ் எதிரியா நீங்க மாறினா டிபார்ட்மெண்ட் கறுப்பு ஆடு உங்ககிட்ட நெருங்கி வருவான். அவனை பிடிக்கலாம்னு நினைக்க றீங்க அப்படித்தானே?’

“அது மட்டுமில்ல சார்-அந்த தர்மராஜு என்கிட்ட கொஞ்சம் பயமில்லாம வருவான். யார்னே தெரியாம இருக்கற அவனை அப்ப நான் ஐடென்டிஃபையும் பண்ண முடியும் இல்லியா?”

“குட்...எனிவே நல்லது நடந்தா சரி. ஆனாலும் என் ஸ்பெஷல் டீம் உங்களுக்கு உதவி செய்ய எப்பவும் தயாரா இருக்கும். இந்த வித்தியாசமான முடிவுக்கு பாராட்டுகள்...”

“சார், இது என் ஐடியா இல்லை. மிஸ்டர் தேவாங்கற தேவநாதனோடது...”

“யூ மீன் அந்த நகைக் கடைல வேலை பார்க்கறாரே அந்த நபரா...?”

“எக்ஸாக்ட்லி. இந்த விஷயத்துல என்னோட கூட்டு சேரப்போற நபரும் அவர்தான்.”

“எப்படி?”

“இந்நேரம் என்னை மாதிரியே கடைல தேவாவும் வேஷம்போட ஆரம்பிச்சிருப்பான்.”

“இந்த ரிஸ்க்கான விளையாட்டுல அந்த நபர் எதுக்கு?”

“தேவாவுக்கு இரண்டு பிரச்சினை சார். ஒண்ணு கள்ள நோட்டு கோஷ்டி. இன்னொண்ணு ஒரு பணக்கார பெண்ணோட காதல். இப்ப தேவா போடப்போற வேஷத்துல இரண்டு சிக்கலுமே தீரும்ங்கறது தேவா வோட நம்பிக்கை...”

“பி கேர்ஃபுல்...எதிரியை மட்டமா நினைச்சுடக் கூடாது...”

“இல்ல சார்... இந்த முறை எதிரியை இரண்டுல ஒண்ணு பார்க்காம விடமாட்டோம்.”

“ஆல் த பெஸ்ட்!” எஸ்.பி.கைகுலுக்க நீட்ட பிரேம் நாத் குலுக்கின ஜோரில் ஓங்கி ஒரு அறை விட, நாடகம் ஆரம்பமாகிறது.

❑ ❑ ❑

அதே நாடகத்தின் மறுபக்கமாக தேவா. அருணா ஜெம்ஸ் அண்ட் ஜுவல்ஸில்...

கல்லாவில் ஃபுல் போதையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். மொத்த கடையே இதை பார்த்து குசுகுசுத்துக் கொண்டிருக்கிறது. அருணாசலம் உள் நுழைகிறார். ஓடிச் சென்று ஒரு சீனியர் சகா போட்டு விடுகிறான்.

"சார். தேவா தண்ணியடிச்சுட்டு ஃபுல் போதைல கல்லால உட்கார்ந்துக்கிட்டிருக்கான்..."

"நெசமாவா?"

"பாருங்க தெரியும்?"-அருணாசலம் பார்வை தேவா பக்கம் திரும்ப, தேவா போதை விழிகளுடன் அவரை பார்த்துச் சிரிக்கிறான்.

# 65



அருணாசலம் ஆச்சரியமும், அதிர்ச்சியும் கலையாமல் தேவாவை நெருங்குகிறார். கடை சிப்பந்திகள் அப்படியே நடப்பதையே பார்த்தபடி இருக்கின்றனர்." வாய்யா முதலாளி... வா! வா!" ஒரு தினுசான வரவேற்புடன் தள்ளாடியபடி தேவா எழுந்து நிற்கப் பார்க்கிறான். முடியாமல் போகிறது.

"என்ன தேவா இதெல்லாம்?"

"எதெல்லாம்?"

"குடிச்சிருக்கியா?"

"ஓ...அதைச் சொல்றியா...ஆமாம்! எப்படியய்யா கண்டுபிடிச்சே-பெரிய ஆளுய்யா நீ..."

"என்னால் நம்பமுடியல தேவா...என்னாச்சு உனக்கு, ஏன் இப்படி எல்லாம் நடந்துக்கறே?"

"ரொம்ப பயமா இருந்துச்சு. அதான்."

"சரி சரி...வியாபாரம் நடக்கற நேரம். யோவ் கந்தசாமி. தேவாவை மேலே என் ரூமுக்கு கூட்டிக் கிட்டுவா..."

அருணாசலம் கவலை தோய்ந்த முகத்தோடு விறு விறுவென முன்னே நடக்கிறார்.

தேவா அப்படியே மேஜை மேல்விழ - கந்தசாமி என்பவர் அவனை நெருங்கி தொட்டு தூக்கப்பார்க் கிறார். முடியவில்லை. பின் இரண்டு பேர் சேர்ந்து ஒருமாதிரியாக தூக்கி மாடிக்கு அவர் அறை வரை அழைத்துச் சென்று விட்டு வருகின்றனர். உள்ளே...

"உனக்கே இது நல்லா இருக்கா...உன் மேலே நான் எவ்வளவு நம்பிக்கை வெச்சுருந்தேன் தெரியுமா?"

"போதும்...போதும்யா போதும்! நம்பிக்கையாம் நம்பிக்கை புடலங்காய். நானும் இங்கே வேலைக்கு சேர்ந்தாலும் சேர்ந்தேன் போதும் போதும்னு ஆயிகிட் டிருக்கு."

"ராமானந்தம் போய்ட்டாரு. அடுத்து நான். அப் புறம் நீங்க...வரிசையா எல்லாரும் செத்துப் போவோம்... என்ன?"தேவா கேட்டபடி அழுகிறான்.

❑ ❑ ❑

**மே**லே அருணாசலத்துக்கும் தேவாவுக்கும் வாக்கு வாதம் வலுக்கும் அதே சமயம் கீழே ரங்கன் என்னும் ஒரு குறும்புக்கார ஊழியன் லேகாவுக்கு போன் போடு கிறாள்.

"வணக்கம்மா....கொஞ்சம் வரீங்களா... இங்க தேவா தம்பி குடிச்சிட்டு கூத்தடிச்சுகிட்டு இருக்காரு."- சொன்ன சூட்டோடு சட்டென்று லேகா அடுத்து சொல்ல இருப்பதை கூட கேட்க பிரியமின்றி போனை வைத்துவிட்டு நிமிர்கிறான்.

"போட்டு விட்டுட்டியா ரங்கா?"

"பின்னே...நேத்து வந்த இந்த பயல என்னவோ இந்திரன் சந்திரன்னு நினைச்சு சுத்துதே அது... அதுக்கு தெரியவேண்டாம்.

"பெரிய ஆள்டா நீ..."

"நெஜமா...இனிமே நான் பெரிய ஆள்தான்."

"சொல்லிவிட்டு திரும்ப தொலைபேசியை நெருங்கி சுழற்றுகிறான். இந்தமுறை மறுமுனையில் கைலாஷின் பி.ஏ. முத்துக்குமார் அகப்படுகிறான்.

"ஐயா...நான் ரங்கன் பேசறேன். சார் இல்லீங்களா."

"இரு கொடுக்கறேன்." கனெக்ஷன், கைலாஷுக்கு பாசாகிறது.

"ஐயா வணக்கங்க. நான் ரங்கன் பேசறேன். உங்க ஆசைப்படி அதை அடிச்சிட்டேங்க..." சற்று ரகசியக் குரலில் யாரும் கேட்டுவிடாதபடி பேசுகிறான்.

"எதைய்யா?"

"அதாங்க...ரசமணியை!"

"நிஜமாவா?"

"அட ஆமாம்...இன்னொரு கூத்தை கேளுங்க. பய திடீர்னு பெரிய குடிகாரன் ஆயிட்டான். குடிச்சிட்டு இங்க ஒரே கலாட்டா. சரியான போதை வேற... நல்ல சந்தர்ப்பம் கிடைச்சுச்சு. முதலாளி வேற அவனைமேல

தூக்கி கிட்டு வான்னு சொன்னார். அப்பதான் அடிச்சேன்..."

"சபாஷ். அதோட என்ன உடனே வந்து பார்..."

"இப்ப முடியாது, சாயங்காலம் வரேன். இங்க அந்த லேகா பொண்ணு வந்து அழுது மூக்கைச் சிந்தப் போற சீன்லாம் இருக்கு. பாத்துட்டு வந்துட்றேன்..."

- ரங்கன் போனை வைக்கிறான். சற்று தள்ளி நிற்கும் இன்னொரு ஊழியன் கேட்கிறான்.

- இப்ப யாருக்கு போன் பண்ணினே?"

"உம்...தேவா அம்மாக்கு?" சொல்லி விட்டு சட்டை பாக்கெட்டில் கையை விட்டு அந்த ரசமணியை எடுத்து பார்க்கிறான். கோலிகுண்டு சைஸில் இப்பொழுது ரங்கன் என்னும் அவன் கைகளில்...

❑ ❑ ❑

**மே**லே...

அருணாசலம் சிலைபோல உட்கார்ந்திருக்க எதிரில் பசுபதிநாதன் படம். அவர் பார்வை அதன் மேலேயே இருக்கிறது. தேவா போதையோடு கீழே சாய்ந்து விட் டான். நடுநடுவே அரைக்கண் திறந்து பார்க்கிறான்.

அருணாசலத்தின் கவலை அவனை என்னவோ செய்கிறது. மனது அவரிடம் மன்னிப்பு கேட்கிறது.

"சாரி சார்...வேற வழி தெரியலை..." அப்படியே புரண்டு படுக்கும்போதுதான் இடுப்புப் பகுதி நெருடா தது தெரிய வருகிறது. கைகள் வேகமாக ரசமணிகட்டி இருந்த பகுதிக்கு செல்ல அங்கே அது இல்லாத ஏமாற் றம் முகத்தில் வேகவேகமாக பரவுகிறது.

"ஐய்யய்யோ...இது என்ன விபரீதம். எங்கு தொலைந்தது இது?"

-மனசு அலைபாய்கிறது. அருணாசலம் என்ன நினைத்தாரோ அங்கிருந்து எழுந்து உட்கார்ந்தவன் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான்.

எங்கே உருண்டு போனது அது? பார்வை தேடோ தேடு என்று தேடியதில் அகப்படுகிறது அது. முன்பு முதல் தடவையாக இந்த அறைக்கு வந்தபோது அவ னிடம் இருந்து நழுவி விழுந்து உருண்டு ஓடி பசுபதி நாதன் படத்துக்கு கீழே போய் தேங்கி நின்றுவிட்ட ரசமணிதான் அது!

"அப்பாடா..." கீழே ரங்கன் தன்னிடம் சுட்டு விட்டது தெரியாமல் அதை ஓடிச்சென்று எடுக்கிறான். நன்றியுடன் படத்தையும் பார்க்கிறான்.



# 66

பசுபதிநாதன் படத்தை பார்த்படி ரசமணியை திரும்ப எடுத்து இடுப்பில் கட்டிக் கொள்கிறான் அப் பாடா...உயிர் வந்தது...! பசுபதிநாதன் படம் முன் நிமிர்ந்து நிற்பவன் அவரிடம் வேண்டிக் கொள்ள ஆரம் பிக்கிறான்.

"சார்...நீங்க சொன்ன மாதிரி என்னையும் என் புத்தியையும் நம்பி சில காரியம் செய்ய இறங்கியிருக் கேன். என்னை விடவும் என் எதிரிகள் புத்திசாலிகளா இருக்கும் போது நான் என்ன செய்ய முடியும் சொல் லுங்க பார்ப்போம்.

இப்ப போட்டுருக்கற குடிகார வேஷம் இரண்டு காரணத்துக்காக. ஒண்ணு என் முதலாளி மகள் என்னை

வெறுக்க ஆரம்பிக்கணும். அடுத்து என் முதலாளி வேலைய விட்டே வெளியே அனுப்பணும். நான் அவ ரோட விரோதியாகிட்டதா எல்லாரும் நம்பணும். நடுவுல பிரேம்நாத் சாரும் பிரிஞ்சு வேற ரூபத்துல நடந்துக்குவாரு.

இந்த நாடகத்தில் அந்த தர்மராஜை நாங்க தெரிஞ் சுக்க உங்க ஆசீர்வாதம்தான் துணை செய்யணும்."

-வாய்விட்டே பிரார்த்தித்துக் கொள்பவன் காதில் இப்பொழுது கைதட்டல் சப்தம் விழுகிறது. திடுக்கிட்டு திரும்புகிறான்-அருணாசலம்!

"முதலாளி!"

"சபாஷ் தேவா...நல்ல வேளை என் வயித்திலே பாலை வார்த்தே! இவ்வளவு நடிப்பா...பலே.பலே...!-அவர் உற்சாகத்துக்கு மாற ஆரம்பிக்கிறார். அவன் முகம் நாணிப் போகிறது.

"எதுக்கு வெட்கப் படறே... இது ஒரு ஐடியா. ஆமாம் நிறைய சினிமா பார்ப்பியா?"

அவன் நிமிர்ந்து பார்க்கிறான்.

"அதுலதான் ஹீரோ இப்படி எல்லாம் திட்டம் போடுவான். அவன் எதிர்பார்க்கற மாதிரியே காரியம் நடக்கும்..."

"சினிமாங்கறதே வாழ்க்கைய பார்த்து உருவாக் கறதுதானே சார்..."

"இல்லைங்கலே...இருந்தாலும் உன் வேஷம் எவ் வளவு எடுபடும்னு தெரியலியே. வேற வழியே தெரிய லியா?"

"இல்ல சார்... எங்க எதிரி நாடகப்படி நான் இப்ப உன்னை வெளியே போகச் சொல்லணும் அப்படித் தானே?"

“ஆமாம் ...சார் ஒரு வேண்டுகோள்...”

“என்ன?”

“இந்த விஷயத்த...”

“கவலைப்படாதே மூச்சுவிட மாட்டேன்.”

“லேகா கிட்ட கூட...”

“அவ வெறுத்துட்டா எனக்கும் அது வசதிதான். ஆனா அவ வெறுக்கறாளா இல்லை உன்னை திருத்தப் போறேன்னு உன் கூடவே கிடக்கப் போறாளான்னு எனக்கே தெரியலையே...”

“என்ன சார் குண்டை தூக்கிப் போட்டீங்க...”

“ஆமாம்ப்பா...சினிமா கதைன்னா நம்ம விருப்பத் துக்கு இந்த கட்டத்த அமைச்சிக்கலாம். ஆனா இது வாழ்க்கை. என்னாகுதுன்னு பொறுத்திருந்து பார்ப்போமே...” அவரிடம் பெருமூச்சு.

❑ ❑ ❑

**மே**லே அவர் சொல்லி வாய்மூட கடை வாசலில் கார் வந்து தேங்கி நிற்க புயல் காற்றாக இறங்கி உள் நுழைகிறாள் லேகா. பார்வை முதல் தாவலில் தேவா சீட் இருக்குமிடம் செல்கிறது. அவன் இல்லை.

“மேடம்...தேவா மேல இருக்கான்...”ரங்கன் மாடிக்கு கையை காட்டுகிறான்.

ஓடத் தொடங்குகிறாள்...மாடிப் படியெல்லாம் அதிருகிறது.

“ஏய்...வந்தாச்சு புயல்...”அருணாசலம் சமிக்ஞை கொடுக்க அடுத்த நொடி போதைக்காரன்போல தள்ளாட ஆரம்பிக்கிறான் தேவா.

“ஆய்ய்...என்னய்யா முதலாளி சௌக்யமா? எங் கய்யா உன் மக கூப்டு அந்த குதிரையை...”அவன் சவடாலாக பேசவும் அவன் எதிரில் மார்பு மேலும் கீழும் எழுந்து அடங்க போய் நிற்கிறாள். கண்களில் கனல்...

“தேவா இது என்ன கோலம்?” சற்று குரலிலும் கடுமை.

“கோலமா...அலங்கோலம்...”-அருணாசலம் ஒத்து ஊதுகிறார்.

“என்னால நம்ப முடியல...”

“என்னாலயும்தான்.”-இது அருணாசலம்.

“ஏன் இப்படி திடீர்னு அசிங்கமா நடந்துக்கறாரு?”

“இல்லையே...இல்லையே...நான் எப்பவும் குடிப் பேனே உங்ககிட்ட மறைச்சு வெச்சேன். அவ்ளோ தான்னா அவ்ளோதான்...” அச்சு அசல் போதைக்காரன் போலவே நடிக்கிறான் தேவா. அருணாசலத்துக்கே அவன் நடிப்பு அந்த நிலையிலும் சிரிப்பை தருகிறது.

அவள் அடுத்தநொடி அவன் கன்னத்தில் அறை கிறாள்.

“வெட்கமா இல்ல இப்படி சொல்ல...”-தேவா கலங்கிப் போகிறான். அறையா அது. காதில் விமானம் பறக்கும் சப்தம் கேட்கிறது. பதிலுக்கு அவனும் திருப்பி அடிக்கிறான். அவள் அப்படியே விக்கித்து போகிறாள்.

“ஒரு ஆம்பளையையா கை நீட்டி அடிச்சே... உன்னை...”-அவள் கழுத்தை நெரிப்பதுபோல பாவலா செய்ய அருணாசலம் குறுக்கே புகுந்து தடுப்பதுபோல தடுக்க,

"இனி ஒரு நிமிஷம் இங்க நான் இருக்கமாட்டேன். எனக்கு இந்த கடையும் வேண்டாம். வேலையும் வேண் டாம். மூஞ்சியப் பாரு..."-பொறுமியபடி வெளியேறத் தொடங்குகிறான்.

லேகா பொங்கி வரும் அழுகையோடு அருணா சலம் மார்பில் விழுகிறாள்.

அவரையே அது என்னவோ செய்கிறது. தன்னை யும் மீறி நடப்பதை நினைத்து கலங்கிப்போய் கண்கள் பனித்து விடுகிறது அவரிடமும்!

❑ ❑ ❑

உற்சாகமான நடை ரங்கனிடம். அடிக்கடி பாக் கெட்டை தொட்டுத் தொட்டுப் பார்க்கிறான். ரசமணி இருக்கிறது. இதை கொண்டு சென்று கொடுத்தால் ஐயாயிரம் ரூபாய் தருவார் கைலாஷ்.

ரங்கன் வீட்டிற்கே ஆளனுப்பி அவனை வர வழைத்து தேவா பற்றி கேட்டவர் அவர். "நேத்து வந்தவன் எங்களையே அதட்றான்"-என்று சொன்னதில் அவனுக்கு தேவாவின் மேல் வருத்தம் இருப்பது நன்றா கவே தெரிந்து போனது. மிச்சத்தை பணம் நன்றாகவே பார்த்துக் கொண்டது. ராமனந்தம் போல கள்ள நோட்டைக் கலக்கும் வேலையாக இருந்தால் பயப் படலாம். இது ரசமணி திருடும் வேலைதானே?

அதிலும் கடை சரக்கா இது...தேவாவின் சரக்கு தானே?

இதனால் எல்லாம் துணிந்து தலையாட்டியவன் இன்று காரியத்தையும் கச்சிதமாய் முடித்துவிட்டிருக் கிறான். மனதில் ஒரே குதூகலம். பல வகைகளில் சந்தோஷமாக இருக்கிறது.

ஐயாயிரம் வரப் போகிறது. தேவாவும் கடையை விட்டு துரத்தப்பட்டு விட்டான்.

நினைக்க நினைக்க சந்தோஷமாக இருக்கிறது.

என்னமோ தெரியவில்லை அனைத்தையும் மீறி மனது கோயிலுக்கு போ கோயிலுக்கு போ என்கிறது. ஏன் என்றே தெரியவில்லை.

பல வருடங்களாக மதுரையில் இருந்தாலும் மீனாட்சியம்மன் கோயிலுக்கு போகத் தோன்றாது.

இன்று என்ன இந்த மனது இப்படி ஆசைப்படு கிறது.

அவனாலேயே கட்டுப்படுத்த முடியவில்லை.

கால்கள் கைலாஷை பார்க்க என்றிருந்த முனைப்பி லிருந்து மாறி மீனாட்சியம்மன் கோயிலுக்கு என மாறித்திரும்புகிறது.

எல்லாம் ரசமணி படுத்தும் பாடோ?

# 67



**மீ**னாட்சியம்மன் கோயில். மாறாத பரபரப்போடு மணக்கும் மல்லிகைப்பூ வாச மங்கையர் கூட்டத்தோடு 'ஜே ஜே' என்று கிடக்கிறது.

ஒலிபெருக்கியில் மென்குரலில் தேவாரம் பாடிக் கொண்டிருக்கிறார் ஒருவர். திருக்குளத்தில் கணுக்கால் தண்ணீர். ஒருகாலத்தில் ஈசன் வந்து வாய் கொப்பளித்த குளம், பொற்றாமரை மிதக்க சங்கப்பலகை திருக்குறள்

முதல் திருவாசகம் வரை தாங்கிப்பிடித்த பெருமை யோடு...

இன்று மனது வறண்ட மக்களைப்போலவே அது வும் வறண்டுகிடக்கிறது. ரங்கனுக்கு இந்த மாதிரி விசார சித்தமெல்லாம் கிடையாது. இருந்தாலும் ஏதோ ஒரு சக்தி கட்டி இழுக்கிற மாதிரி கோயிலுக்குள் நுழைபவன் நேராக குளத்தில் இறங்கி கால் கழுவிக்கொள்கிறான்.

பின் நிமிர்ந்து கிழக்கு கோபுரம் பார்த்து கன்னத் தில் போட்டுக்கொண்டு நேராக மீனாட்சி சந்நிதிக்கு செல்கிறான்.

பச்சைப்பட்டோடு கையில் கிளியோடு எவராலும் புரிந்து கொள்ள முடியாத மர்மப்புன்னகையோடு மீனாட்சியும் எதிரில்...

வணங்குகிறான்.

கால்கள் அடுத்து சொக்கநாதர் சந்நிதிக்கு இழுக் கின்றன. வேகமாக நடக்கிறான். இடையிடுகிறார் முக்குறுணிப்பிள்ளையார். போடு அவருக்கும் ஒரு கும்பிடு. தோப்புக்கரணம் போடும் போது பாக்கெட்டில் ரசமணி சில்லறைக் காசுகளோடு சேர்ந்து குலுங்குகிறது. அங்கிருந்து சொக்கநாதரையும் வழிபட்டுவிட்டு வெளியே வர எதிரில் கம்பத்தடி மண்டபம்.

மண்டபத்தை ஒட்டிய தூணில் சாய்ந்தபடி கண் மூடியவராக உட்கார்ந்திருக்கிறார் பசுபதிநாதன்.

சுற்றிவரும் ரங்கன் சம்பிரதாயப்படி கம்பத்தடி மண்டபம் முன்னும் விழுகிறான். சற்றும் அவன் உணராத படி அவன் சட்டைப்பாக்கெட்டில் இருந்து ரசமணி உருண்டு நேராக பசுபதிநாதன் கை ஊன்றி அமர்ந்திருக்க அவர் விரல் இடுக்குக்குள் புகுந்து உள்ளங்கைக்குள் அடங்குகிறது.

ரங்கன் எழுந்திருக்கிறான். ரசமணி உருண்டதோ ஓடியதோ துளிகூட தெரியாதவனாக வெளியே நடக்கிறான்.

பசுபதிநாதன் கண்களைத் திறந்து கையை நெருடுவது எது என்று பார்க்கிறார். ரசமணி! கண்கள் அகல விரிகின்றன.

நிமிர்ந்தால் எதிரே ரங்கன் போய்க்கொண்டிருக்கிறான். அவருக்கு அடுத்த நொடியே எல்லாம் புரிந்து விடுகிறது. ரசமணியை எடுத்து தன் இடுப்பில் கட்டிக் கொள்கிறார்.

**ஆ**வலாக காத்திருக்கும் கைலாஷ் எதிரில் போய் நிற்கிறான் ரங்கன்.அவர் கண்களில் ஆவலாதியின் வழிசல்.

"எங்கய்யா அந்த ரசமணி சீக்கிரம் கொடு..."

அவர் கையை நீட்ட அவன் கைவிட்டுப் பார்க்க முகத்தில் குத்து விழுந்த மாதிரி ஓர்அதிர்ச்சி பரவுகிறது.

"என்னய்யா முழிக்கறே?"

"இல்லீங்க...பாக்கெட்ல தாங்க வெச்சிருந்தேன். எங்க போச்சுன்னே தெரியலீங்களே..."

கைலாஷ் முகம் அவன் சொல்வதை கேட்டு இரத்தச் சிவப்பாகிறது.

"எங்கபோச்சுன்னு தெரியலையா? யார்கிட்ட காதுகுத்துறே..."கோபத்தோடு எழுந்திருப்பவரை பார்த்து நடுநடுங்கிப் போகிறான்.

"ஐயா நிஜமாதாங்க சொல்றேன்..."

"பொய் சொல்லாதே...அவன் கிட்ட இருந்து ரசமணியை முதல்ல எடுத்தியா அதைச்சொல்..."

"எடுத்தேங்க...பத்திரமா இந்த பாக்கெட்டிலதாங்க வெச்சிருந்தேன். வரவழியில என்னமோ மீனாட்சி கோயிலுக்கு போகணும்னு தோணிச்சு போனேன். அங்க விழுந்துகும்பிடும்போது தான் உருண்டு போயிருக்கணும்."

அவன் சொல்லி முடிக்க அவர் கரம் அவன் கன்னத்தில் பட்டுத் தெறிக்கிறது. அவன் நிலைகுலைந்து போகிறான்.

ஓடிப்போயிடு...என் கண் எதிர்க்கையே நிற்காதே..."

அசுரக் கூச்சல் போடுகிறார் கைலாஷ்

சப்தம் பக்கத்து அறையில் இருக்கும் பிருந்தா, வைதேகி காதுவரைக்கும் செல்கிறது.

பிருந்தா கைகூப்பி கடவுளுக்கு நன்றி சொல்கிறாள் வைதேகியும்...

"எப்படியோ அந்த நல்ல பொருள் இங்க இவர் கிட்ட வந்து சேராம தப்பிச்சதே..." அவள் உதட்டில் முனங்கல்.

பிருந்தாவுக்கு உடனேயே பசுபதிநாதனை பார்க்கும் ஆசை துளிர்விடுகிறது.

❑ ❑ ❑

**பே**ப்பரில் பிரேம்நாத் போலீஸ் வேலையை விட்டு விலகிய செய்தி பளிச்சென்று ஒரு தூரமாக மின்னுகிறது. எஸ்.பி.யோடு மோதி விட்டு வெளியே வந்துவிட்டார் என்கிறது...தகவல்.

மேற்கொண்டு விஷயமறிய நிருபர்கள் அவர் வீட்டு முன்னால்.

உள்ளே அழைக்கிறார் பிரேம்நாத். நிருபர்களிடம் துளைப்பு.

“என்ன சார் திடீர்னு ராஜினாமா செய்துட்டீங்களே?”

“பிடிக்கலை, ரிசைன் பண்ணேன்”

“அதான் என்ன காரணம்னு...”

“காரணம் என்ன காரணம், வெங்காயம்? எஸ்.பி என்னை கையாலாகாதவன்னு சொன்னார். கொலைகள் நடக்க நான்தான் காரணம்னும் சொன்னார்...”

“மேலதிகாரிகள் கோபத்துல இப்படி பேசறது சகஜம் தானே...”

“இருக்கலாம்...ஆனா, என்னால பொறுத்துக்க முடியல. ஒருவிதத்தில அவருக்கு நான் நன்றி சொல்லணும். ஏன்னா இப்பதான் நான் போலீஸ் இலாகாவை புரிஞ்சுகிட்டேன். கொஞ்சம் கூட நன்றி இல்லாதவங்க. இவ்வளவு நாள் சின்சியரா இருந்து பாடுபட்டதுக்கு நானும் பேசாம கள்ள நோட்டு அடிச்சிருந்தா கோடீஸ்வரனா ஆகியிருப்பேன்.”

“ஒரு போலீஸ்காரர் இப்படி பேசலமா?.”

“நான் இப்ப போலீஸ் இல்ல. ஆசாபாசமுள்ள ஒரு மனுஷன்.”

“கள்ளநோட்டு அடிச்சிருப்பேன்னு சொல்றீங்களே. அது தப்பாச்சே.”

“எஸ்.பி. என்னை திட்டுனது மட்டும் சரியா...”

“ஒரு தப்புக்கு இன்னொரு தப்பு பரிகாரமாகுமா?”

“இந்த கதை எல்லாம் என்கிட்ட வேண்டாம். எனக்குத் தெரியும் எப்படி நடந்துக்கணுமின்னு...”

ரிப்போர்ட்டர்கள் முகத்தில் ஆச்சரிய அலை. அத்துடன் அவர்கள் கலைகிறார்கள். ஆனால் ஒருவன் மட்டும் கலையாமல்...



# 68

**க**லையாமல் நிற்பவனைப் பார்த்துப் கேட்கிறார் பிரேம்நாத்.

"ஏம்ப்பா நீ போகலை..."

-அவன் ஒரு மாதிரி சிரிக்கிறான்.

"என்னப்பா சிரிக்கிறே..."

-அவன் உடனே நக்கலாக பேசுகிறான்.

"நல்லா நடிக்கிறீங்க சார்..."

"நடிக்கிறேனா..."

"எல்லாம் தெரியும் சார். உங்க டிபார்ட்மெண்ட் பத்தி நாங்க கணிச்சு குறிச்சிருக்கோம்..."

"எதை...யார் நீ?"

"அது எதுக்கு உங்களுக்கு...திட்னதுக்காக ராஜினாமான்னா நம்பவா முடியுது."

"நீ நம்பி எனக்கு ஆகவேண்டியது ஒண்ணுமில்லை, கிளம்பறியா?"

-அவன் அவரை ஒரு மாதிரி பார்க்கிறான். பின் அரைச்சிரிப்பு சிரித்தபடி கிளம்புகிறான். போகும்போது திரும்பித் திரும்பிப் பார்த்தபடி செல்கிறான். யாராவது பின் தொடருகிறார்களா என்கிற சந்தேகம்.

யாருமில்லை என்கிற உறுதியோடு ஒரு டெலிபோன் பூத்துக்குள் நுழைபவன் யாரோடோ தொடர்பு கொள்கிறான்.

"சார்... நான் முத்துப்பாண்டி பேசறேன். அந்த இன்ஸ்பெக்டர் வாயை கிண்டினேன். நம்பாட்டி போடான்னுட்டான். நிஜமாலுமே கோபப்பட்டு ராஜினாமா செய்த மாதிரிதான் தெரியுது. அதோட நான் அப்படி பேசினதுக்கு போலீசா இருந்தா என்னை ஃபாலோ பண்ணி யாருன்னுல்ல தெரிஞ்சுக்க பார்த்திருக்கும்? ஆனா யாரும் வரலை..."

மறுமுனையில் என்ன பதில் வந்ததோ போனை முடக்கிவிட்டு வெளியே வருகிறான். சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு கிளம்புகிறான்.

❑ ❑ ❑

**கோ**யில்!

பசுபதிநாதன் எதிரில் பிருந்தா.

"வாம்மா..."என்கிற கனிவு அவரிடம்.

"சாமி ஒரு நல்ல சேதி சொல்ல வந்தேன்..."

"என்னம்மா?"

"தேவாகிட்ட இருந்து ரசமணியை ஒருத்தன் திருடி எங்கப்பாகிட்ட கொடுக்கப் பார்த்துருக்கான், ஆனா அது எப்படியோ வரவழியிலே தொலைஞ்சு போச்சு. அந்த தப்பை செஞ்சதுக்காக என் அப்பாகிட்ட நல்லா அறையும் வாங்கினான்."

-பசுபதிநாதன் சிரிக்கிறார். பின் தன்னிடமுள்ள ரசமணியை எடுத்து அவள் எதிரில் காட்டியபடி "இதாம்மா அவன் தொலைச்சது..."என்கிறார்.

அவளிடம் ஆச்சரியம்.

"இது எப்படி உங்ககிட்ட...."

"என்சொத்து என்கிட்ட தானே வரும்...?"

"அது எப்படி?"

"அதான் தெய்விகமான அனுபவம்கறது. தொலைச்ச நபர் இங்க என் எதுக்கதான் விழுந்து கும்பிட்டான். இதுவும் உருண்டு என்வசம் வந்துடுச்சு..."

"இப்படிக் கூட நடக்குமா?"

"அதுக்குபேர்தான் ரசமணிங்கறது"

"இப்ப தேவா இது இல்லாம கஷ்டப்படலாம் இல்லையா?"

"இல்ல...அவனுக்கு தான் தொலைச்சதே தெரியாது. அவன்கிட்ட வேற ஒண்ணு இருக்கு..."

"எனக்கு ஒண்ணுமே புரியலை."

"புரியவேண்டாம்... சில விஷயங்கள் புரியாம இருக்கறது எவ்வளவு நல்லது தெரியுமா?"

-புதிர் போடுகிறார் பசுபதிநாதன். வழக்கம்போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது இவர்களை இரண்டு கண்கள். அது பசுபதிநாதனுக்கு தெரியுமோ என்னவோ...

இடுப்பு மடிப்பில் இருந்து விபூதி எடுத்து தருவது போல் ரசமணியை அவள் கைகளில் போடுபவர்.

"அப்படியே கையை மூடிக்கோ...உன்னை பின் தொடர்ந்து பார்க்க ஆள் வந்திருக்கு. அந்த நபருக்கு நான் விபூதி தர்றமாதிரிதான் தெரியும். ரசமணியை நீ பத்ரமா வெச்சுக்கோ. அது உனக்கு துணை செய்யட்டும்."

-பிருந்தா அதை கேட்டு நெகிழ்ந்து போகிறாள்.

"ரொம்ப சந்தோஷம் சாமி...ஆமாம் தேவாவுக்கு ஒண்ணும் ஆயிடாது;தானே?"

பசுபதிநாதன் திரும்பச் சிரித்தபடி செல்கிறார்.

"அவனை யாராலும் அசைக்க முடியாதும்மா..."

-அவளுக்கு நிம்மதியாகப் போகிறது. கிளம்பு கிறாள்.

❑ ❑ ❑

**தே**வாவின் வீடு!

கவலையோடு அவனைச்சுற்றி அவனது சகோதரி கள் அம்மா மற்றும் அப்பா...

"இப்படி இருந்தா எப்படி...இனி நாம் என்ன பண்ற துன்னு சொல்லுடா..."

-அம்மா கேட்கிறாள்."

"என்ன பண்றதுன்னா?"

"பழைய வீட்டுக்கே போயிருவோம்."

-உடனே சகோதரிகளிடம் அழுகை.

"அழுதென்ன பிரயோஜனம். அசுரவேகமா சில விஷயங்கள் வளரும்போதே நினைச்சேன் இது நிலை யில்லாததுன்னு. அது நிரூபணம் ஆயிடுச்சு."

"அதுக்கென்ன பண்றது? நான் ஒரு அடி முன்னுக்கு போனா மூணு அடி பின்னுக்கு இழுக்கறவங்க இருக் காங்களே."

"அது சரி... இப்ப எதுக்கு அவசரப்பட்டு வேலைய விட்டே?"

"அவசரப்பட்டு இல்லை...பிரிங்கல் தாங்காமே ..."

“என்ன பெரிய பிடுங்கல்?”

“சரிதான்...முதலாளி ஒருபக்கம் நீ வந்ததுக்கு அப் புறம்தான் ஒரே பிரச்சினைங்கறார். போலீஸோ ஜாக்ர தையாஇரு. எப்பவேணா உன்னை கொல்ல பார்ப்பாங் கறார். அந்த பொண்ணு ஒண்ணுவிடாம சுத்திகிட்டு...”

“சரிடா...இனி பணக்காரங்க சாவகாசமே வேண் டாம்.”

“நிச்சயமா...! ரவுடியா மாறினாலும் மாறுவேன். ஆனா இனி ஒருத்தன்கிட்ட கைகட்டி வேலை பார்க்க மாட்டேன்.”

“சரி சரி...வீட்டை காலி பண்ற வழியைப்பார்...”

-அம்மாவும் சகோதரிகளும் முனங்கியபடி உள் ளிருக்கும் பாத்திரம் பண்டங்களை கட்டத் தொடங்கு கின்றனர்.

தேவா எழுந்து வெளியே செல்கிறான். பெட்டிக் கடை ஒன்றின் முன்போய் லுங்கியை மடித்துக்கட்டியபடி ஒரு சிகரெட்டை வாங்கி பற்ற வைக்கிறான். கடைக் காரன் ஆச்சரியமாக பார்க்க கச்சிதமாக அந்த கடை முன் இப்பொழுது பிரேம்நாத்தை கீறிப் பார்த்த அதே முத்துப்பாண்டி!



# 69

**மு**த்துப்பாண்டியின் பார்வை தேவாவை மேலும் கீழுமாக அளக்கிறது. அவன் பார்வை மட்டுமா? கடைக் காரரின் பார்வையும். தேவாவும் இதை கவனிக்கிறான். துளியும் நிரடலின்றி புகை விடுகிறான்.

"என்ன தேவா... என்னப்பா இப்படி மாறிட்டே? கடைக்காரனிடம் கேள்வி.

"மாறலை கடைக்காரரே மாத்திட்டாங்க..."

"புரியலியே..."

"விஸ்வாசத்துக்கு மரியாதையே இல்ல கடைக்காரரே."

"அதான் போய்யா நீயும் உன் வேலையும்னு விட்டுட்டு வந்துட்டியோ?"

"ஆமாம்...யாரோ கள்ளநோட்டை கடைல கொடுத்ததுக்கு நான் என்ன பண்ணுவேன். எல்லாம் உன்னால தான் நீ வந்த நேரம் தான்னா?"

"ஓஹோ அப்படி போவுதா கதை..."

"ஒண்ணு மட்டும் சத்யம் கடைக்காரரே. நேர்மை நியாயத்துக்கு எல்லாம் மதிப்பே இல்லை. நானும் அதை இனி நம்பற மாதிரி இல்லை."

"என்ன தேவா சராசரி மனுஷன் மாதிரி பேசறே... பல லட்ச ரூவா மதிப்புள்ள பணத்தை எடுத்துக்கிட்டு ஓட சந்தர்ப்பம் இருந்தும ஓடாதவன் நீ. காலடில கிடந்த வைரக்கற்களை நேர்மையா போலீஸ்ல ஒப்படைச்சவன் நீ. நீயா இப்படி பேசற...?"

"அதுக்கு பரிசுதான் இப்போ நடுத்தெருவு..." சொல்லிக்கொண்டே சிகரெட்டை ஒரு இழுப்பு இழுக்கிறான். முத்துப்பாண்டியை ஆச்சரியம் விட்டுத் தெரிக்கிறது.

மெல்ல நழுவுகிறான் அங்கிருந்து...

"என்ன செய்யப் போற இனி..."

"தெரியல... கால்போன போக்குல போகப் போறேன்."

தேவா சொன்ன சூட்டோடு சிகரெட்டை காலடியில் போட்டுத் தேய்க்கிறான். மூத்துப்பாண்டியை அது என்னவோ செய்கிறது. கொஞ்சம் தூரம் சென்றவன் திரும்பிவந்து "தம்பி"என்கிறான் இதமாக...

"என்ன?"

"நீ பேசுனத கேட்டுக்கிட்டிருந்தேன். சுலபமா பணம் சம்பாதிக்க நிறைய வழி இருக்கு. செய்வியா?"

தேவா முகம் உடனே மாறுகிறது. அவனை மிக நெருங்கி காதைக் கடிக்கிறான்.

"என்ன வழி?"

"வா சொல்றேன்." -அழைக்க தேவா பின் தொடர்கிறான்.

❑ ❑ ❑

**கை**லாஷ் பங்களா. கைலாஷ் முகத்தில் சுரத்தே இல்லை! நெருங்கி வருபவள் வைதேகி.

"சாப்பிடு வைதேகி. எனக்கு பசியில்லை."

"அப்படிச் சொல்லாதீங்க... ஏன் எப்ப பார் ஒரு மாதிரி இருக்கீங்க..."

"எல்லாம் வியாபாரச் சிக்கல். உனக்கு எதுக்கு இதெல்லாம். போய்வேலையப்பாரு" கைலாஷின் வெடுக்பேச்சு ஒன்றும் அவளுக்கு புதிதில்லை. இருந்தாலும் இந்த முறை வலிக்கிறது. சோர்ந்து திரும்புகிறாள். எதிரில் பிருந்தா. அவளைப் பார்க்கவும் வலி மேலும் கூடுகிறது, பெருமூச்சு வருகிறது.

"சித்தி..."

"என்னம்மா...?"

“அப்பா எடுத்தெரிஞ்சு பேசினாரா...”

“அதான்அவர் சுபாவமாச்சேம்மா...”

“என்ன சுபாவம்...நாம இனி இங்க இருக்கதுல அர்த்தமே இல்லை.”

“என்னம்மா சொல்றே”

“கோடி கோடியா பணம் இருக்கு ஆனா நிம்மதி இல்லை.”

“நம்ம நிலை மட்டுமில்லாம அது...ஒவ்வொரு பணக்காரங்க நிலையும் கூட அதுதான்.”

“உங்க நிலை ரொம்ப மோசம் சித்தி. வெளியே இருந்தவரை நல்லா இருந்தீங்க. இந்த வீட்டுக்கு வந்ததுல விஜயனும் செத்து, நீங்களும் வாடிப்போய்...”

விஜயன் நினைப்பை பிருந்தா மூட்டவும் கண்களில் கண்ணீர் பொலபொலவென்று கொட்டி விடுகிறது வைதேகியிடம்.

“சாரி சித்தி...நான் விஜயனை இப்ப ஞாபகப்படுத்தி இருக்கவே கூடாது...” இருவரும் பேசிக் கொள்வது கைலாஷ் காதிலும் விழுந்திருக்க வேண்டும். எட்டிப் பார்க்கிறார்.

வாயில் பைப். கொத்தாக புகைவளையங்கள். இருவரையும் நோக்கி நெருங்க வருகிறார்.

நடுவில் தொலைபேசி அலறுகிறது. கவனம் அந்தப் பக்கம் திரும்புகிறது.. காதை கொடுக்கிறார். “அங்கிள் செல்வா பேசறேன்...”குரல் கைலாஷை விருட்டென்று நிமிர்த்துகிறது.

“எப்படி இருக்கீங்க?” கல்கத்தாவில் இருந்து கேட்பவன் செல்வா. முன்பு பிருந்தாவுக்கு நிச்சயித்த மாப்ளை.

நடுவில் ஆக்ஸிடெண்ட் ஆகிப்போய் ஆஸ்பத்திரிக்கு போய் படுத்துக் கொண்டவன்.

“ஏய் செல்வா...வாட் எ சர்ப்ரைஸ் ஹவ் ஆர் யூ?”

“நல்லா இருக்கேன்.”

“எங்க இருந்து பேசறே?”

“நான் வீட்ல இருந்து பேசறேன். ஹாஸ்பிடல்ல இருந்து டிஸ்சார்ஜ் ஆயிட்டேன். நௌ ஐ ஆம் ஆல் ரைட்”

“சந்தோஷம்”

“நான் அடுத்தவாரம் மதுரை வரேன். பிருந்தாவை யும் பார்க்கறேன். அப்ப தட்டிப்போன நிச்சயதார்த்தம் இப்பவாவது நடக்கட்டும்.”

“நல்லது...நீ வந்தா எனக்கும் தெம்பா இருக்கும்.”

“ஓ.கே. அங்கிள். அப்புறம் பேசறேன். உடம்பைப் பார்த்துக்குங்க. பிருந்தாவை கேட்டதா சொல்லுங்க...”

“சரிப்பா..” போனை முடக்குகிறார் இப்பொழுது முகம் முழுக்க மாறி உற்சாகம் தெரிகிறது.

“யாருங்க போன்ல?” இது வைதேகி. “செல்வா வைதேகி. என் அக்கா மகன் பெரிய பிஸனஸ்மேன். அடுத்த வாரம் வரான். பிருந்தாவுக்கும் அவனுக்கும் அப்ப நிச்சயதார்த்தம்.” சொன்ன சூட்டோடு அவர் பார்வை பிருந்தாவை அளக்க அவளிடம் எல்லை யில்லாத திகைப்பு.

“ஐய்யோ என்ன இது புது சிக்கல்?” அவள் கலங் கும் போது கைலாஷிடம் ஒருவன் நெருங்கி வந்து பணிவாக நிற்கிறான்.

“என்னடா?”

"ஐயா...நீங்க சொன்ன மாதிரி எல்லாத்தையும் செய்திட்டேங்க. வர்ற வழியில் ஒரு ஆச்சரியங்க."

"என்ன?"

"அந்த தேவா இல்ல..."

"எந்த தேவாடா?"

"அதாங்க அருணாசலம் கடைல வேலை பார்க்கறானே..."

"அவனுக்கென்ன?"

"அவனை போலீஸ் பிடிச்சுக்கிட்டு போயிச்சுங்க!"



# 70

**தே**வாவை போலீசில் பிடித்து செல்வதாக அவன் சொல்லவும், கைலாஷ் இலேசான அதிர்ச்சியோடு அவனைப் பார்க்கிறார்.

"என்னடா கதை உட்றியா?"

"இல்லீங்க...நிஜமாதாங்க ஏதோ கடத்தல் வேலை செய்துருக்கான். வசமா மாட்டிக்கிட்டான்."

"நம்பமுடியலையே..."

"என்னாலையும் தாங்க..."

"சரி நீ போ நான் விசாரிச்சுக்கறேன்."

-பிருந்தாவையும், வைதேகியையும் ஒரு பிடி பிடிக்கலாம் என்று வந்தவர் நடுவில் வந்த தகவலால் திசை மாறுவது நன்றாகத் தெரிகிறது.

பிருந்தா இடி விழுந்த மாதிரி ஆகி விட்டிருக்கிறாள்.

ஒரு இடிக்கு இரு இடி. முதல் இடி செல்வா கல்கத்தாவிலிருந்து வரப் போவதாக சொல்லியிருப்பது. அடுத்து தேவா போலீஸில் அகப்பட்டிருப்பது...

அவளையும் மீறி கண்களில் நீர் கோத்துக் கொண்டு வழிய ஆரம்பிக்கிறது. வைதேகி அதை துடைத்து விட்டு ஆறுதல் சொல்லத் தொடங்குகிறாள்.

"அழாத... இதெல்லாம் சோதனை மாதிரி. ஒண்ணும் ஆயிடாது."

"எப்படி சித்தி...தேவா தப்பு செய்யற ஆள் இல்ல - அவர் போய் எப்படி போலீஸ்ல...எனக்கு புரியல. அப்பா ஏதாவது சதி பண்றாரான்னு சந்தேகமா இருக்கு"

"அப்படி தெரியலம்மா...அவருக்கு இப்பதானே தெரிய வந்திருக்கு. இரண்டு பேரும்தானே பார்த்தோம்?"

"அந்த சாமியார் உனக்கு இனி நல்ல காலம் தான்னு சொல்லி ரசமணியை கொடுத்தார். ஆனா இவ்வளவு சீக்கிரம் இப்படி இரண்டு இடி விழும்னு நான் துளிகூட எதிர்பார்க்கலை..."

-பொங்கி வரும் அழுகையை அடக்கமாட்டாமல் பொருமுகிறாள். வைதேகிக்கும் ஆறுதல் சொல்லும் வழி தெரியாதபோது...

கைலாஷ் தன் செல்போனில் போலீஸ் டிபார்ட்மெண்டில் தனக்கு பரிச்சயமான ஒரு அதிகாரியை பிடித்திருந்தார்.

தேவா அரெஸ்டாமே...நிஜமாவா?"

"ஆமாம் சார்...ஒரு அரை கிலோ அளவு பிரௌன்ஷுகர் அவன்கிட்ட இருந்து பிடிபட்டிருக்கு. யாரோ கூலிக்கு யூஸ் பண்ணிக்க பார்த்துருக் காங்க... அப்படியே போலீசுக்கு தகவலும் தந்துட் டாங்க..."

"எதுக்கு இந்த விளையாட்டு..."

"போலீஸ். தேவான்னு பாரபட்சம் பாக்குதா இல்லை. சட்டப்படி நடந்துக்கதான்னு தெரிஞ்சுக்க தான்..."

"ஐசீ...ஆமாம் என்ன செய்யப் போறீங்க..."

"கேஸ் புக் பண்ணியிருக்கோம். லாக்அப்ல இருக் கான். போதை மருந்து கேசுங்கறதால ஜாமீன் கிடைக் கறது கூட கஷ்டம்..."

"அப்ப பய...இப்போதைக்கு வெளியே வரமாட் டான்னு சொல்லுங்க."

"அப்படித்தான்னு வெச்சுக்குங்களேன்."

"தேங்க் யூ!"

-கைலாஷ் செல்லை ஆஃப் செய்கிறார். அப்படியே பக்கத்து நாற்காலியில் ரிலாக்ஸாக சாய்கிறார். எதிர் பார்த்ததை விடவும் வேகமாக தனக்கான பாதையில் அடைப்புகள் நீங்குகின்றன.

ரசமணி கிடைக்காவிட்டால் என்ன?

அது கிடைத்திருந்தால்கூட இப்படி விஷயங்கள் கைகூடி வருமா என்பது சந்தேகமே... நெடுநாளைக்கு பிறகு மனது இலேசாகிறது. தனது அந்தஸ்து கௌரவம் அனைத்தும் காப்பாற்றபட்டுவிட்டமாதிரி ஒரு சந் தோஷம் பாய்கிறது!

❑ ❑ ❑

**த**லையணை ஈரமாகும் அளவு அழுது தீர்த்து விட்டாள் லேகா.

"என்னால் நம்ப முடியல...தேவா எப்படி மாறினான். அவனுக்கு என்ன வந்துச்சு?"-அருணாசலத்தை பிடித்து உலுக்குகிறாள். அவர் இறுகிப் போயிருக்கிறார்.

அவருக்கே இந்த கைது ஆச்சரியம். நாடகத்தில் இது எந்தமாதிரியான சீன் என்பது அவருக்கே புரியவில்லை.

"அப்பா அவரை ஜாமீனில் எடுங்கப்பா ... பாவம்பா அவர்..."

-அருணாசலத்தை பிடித்து கெஞ்சுகிறாள்.

இத்தனைக்கு பிறகும் அவன் மேலான காதல் கரைந்திருக்கவில்லை. அதிகமாக வேண்டுமானால் ஆகியிருக்கிறது. அருணாசலத்துக்கு அது அதிக கவலையைத் தருகிறது.

"இரும்மா நான் போய் பார்த்துட்டு வரேன். வந்து சொல்றேன்."

"இல்ல ...நீங்க ஜாமீனின்ல எடுக்கறீங்க. எடுத்து இங்க கூட்டிகிட்டு வந்துடுங்க. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன். நான் நிஜமா தப்பு செய்திருந்தாலும் திருத்துவேன்பா. விடமாட்டேன்..."

-லேகா பேசப்பேச அருணாசலம் கண்களில் கண்ணீர்.

முதலில் தேவாவை சந்திப்போம்-தீர்மானிக்கிறார்.

❑ ❑ ❑

**போ**லீஸ் ஸ்டேஷன்.

வக்கீலுடன் நுழைபவரை போலீஸ்காரர் ஏளனமாக பார்க்கிறார்.

“முன்ன இருந்த இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் வேணும்னா உங்க ஜால்ராவா இருக்கலாம். இப்ப நடக்காது. தேவாவை பார்க்கல்லாம் முடியாது...”-புது சப்-இன்ஸ்பெக்டர் காரணமே இல்லாமல் திமிராக பேசுகிறார்.

“இதோ பாருங்க... அவரைப் பார்த்து பேச சட்டப் படி எங்களுக்கு உரிமை இருக்கு. நான் அவர் சார்பாக வாதாடப்போற வக்கீல்...”

“இருக்கலாம். ஆனா அவர் சொல்லணும் நீங்க தான் என் வக்கீல்னு...”

“கூப்பிடுங்க....சொல்வாரு!”

-அருணாசலமும் வக்கீலும் அழுத்தம் தருகின்றனர். தேவா லாக்கப்பில் இருந்து இழுத்து வரப்படுகிறான்.

அடி பின்னியிருக்கிறார்கள். நன்றாக தெரிகிறது.

பகீர் என்கிறது அருணாசலத்துக்கு.

“மிஸ்டர் தேவா உங்க சார்புல நான் அட்டெண்ட் ஆறேன். என்ன நடந்தது சொல்லுங்க...”

வக்கீலின் கேள்விக்கு தேவா அவரை முறைப்புடன் பார்க்கிறான்.

“உங்களை யார் கூப்பிட்டா?”-என்று கேட்கிறான். கேள்வியே இருவரையும் குதறுகிறது.

“என்ன தேவா இது...உன் நல்லதுக்குத்தான் சொல்றோம். எத்தனை லட்சம் செலவானாலும் சரி, நாங்க வெளிய எடுக்கறோம். என்ன நடந்ததுன்னு சொல்லுங்க கொஞ்சம்.”

"உங்க அன்புக்கு நன்றி. நான் குற்றவாளி. பிரௌன் ஷுகர் கடத்தினேன். மாட்டிக்கிட்டிருக்கேன். அவ்வளவு தான். அதுக்கு மேலே எதுவும் சொல்றதுக்கில்ல. நீங்க கிளம்பறீங்களா?"

அருணாசலம் குறுக்கிடுகிறார்.

"தேவா...திஸ் ஈஸ் டூ மச். நான் எல்லா தப்பையும் மன்னிச்சிடறேன். ப்ளீஸ்-என்ன நடந்தது சொல்லு..."

"முதல்ல வெளியே போங்க. உங்களாலதான் எல்லா சிக்கலும். உயிர் போனாலும் நான் என்னை இதுல இறக்கினவங்களை காட்டிக் கொடுக்க மாட்டேன்..." தேவா மன உறுதி இருவருக்குமே திகைப்பைத் தருகிறது.

# 71



**தே**வா இத்தனை உறுதிப்பட பேசியதில் அருணாசலம் நிஜமாலுமே சிலிர்த்துப்போகிறார். இவன் நடிப்பில் சினிமாக்காரர்களையும் மிஞ்சிக் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்து விடுகிறது. சரி இதற்கு மேல் இங்கே இருந்து கொண்டு சூழ்நிலையை எம்பரேஸ் செய்ய விரும்பாதவராக கிளம்புகிறார்.

போலீஸ்காரர் தேவாவை நெருங்குகிறார். "ஏம்பா யாராச்சும் ஜாமீன்ல எடுக்கிறன்னு வந்தா இப்படியா எதிர்த்து பேசுவே...இது என்ன சாராய கேசா, பிராத்தல் கேசா அம்பது நூறு அபராதம் போட்டு இல்ல, அஞ்சாறு மாசம் உள்ள வெச்சு அனுப்ப...? பிரவுன்

ஷுகர்னாலே பத்து வருஷம் குறையாது. அபராதமும் லட்சக் கணக்கு இருக்கும்."

வந்த சந்தர்ப்பத்த உட்டுட்டியே..."

தேவா தனக்காக பேசிய அந்த போலீஸ்காரரை ஒரு மாதிரி பார்க்கிறான்.

"என்ன அப்படி பாக்கறே?

"உன் பார்ட்டி நல்ல சவுண்டான பார்ட்டியா என்ன வந்து ஜாமீன்ல எடுப்பாங்கன்னு நம்பறே?"

திரும்பவும் தேவா வெறுமனே பார்க்கிறான். பதிலே இல்லை. என்ன நினைப்பில் இப்படி செய்கிறார் என்று தெரியவில்லை.

❑ ❑ ❑

**தே**வா வீடு!

கட்டி வைத்த சாமான்கள் அப்படியே இருக்க ஆளாளுக்கு மூலைக்கு மூலை உட்கார்ந்து அழுது கொண்டிருக்கின்றனர். அருணாசலத்தின் கார் வீட்டு முன் நிற்கிறது. இறங்கி நுழைவதை பார்த்து எல்லாரும் எழுந்து நிற்கின்றனர்.

வாங்க என்று சொல்லக்கூட தோன்றாத நிலை.

"எல்லாம் கேள்விப்பட்டேன்..." என்று ஆரம்பிக் கிறார் அருணாசலம். அதை கேட்டு சிவகாமி பலமாக அழுகிறாள்.

"நாங்க வாழ்க்கைல மேலே வந்துட்டோம்னு சந்தோஷமாக இருந்தோம். ஆனா இப்படி ஆகும்னு எதிர்பார்க்கலைங்க. யார் கண் பட்டதோ எது வந்து விழுந்ததோ இப்படி ஆயிடிச்சு. இனி இந்த வீட்ல இருக்க உரிமைகூட நமக்கு இல்லைன்னு சாமானை கட்டி வைச்சுட்டோம்.

நடுவுல இதோ வரேன்னுட்டு போனவன் இப்படி செய்துட்டான்.

அவனை போய் பார்க்கக் கூட எனக்கு தைரிய மில்ல. உங்க கால்ல விழறேன். நீங்கதான்...''

அருணாசலம் அவர்கள் முன் ஒரு பெருமூச்சு விடுகிறார். பின் நீங்க கவலைப்படாதீங்க...இங்கேயே இருக்கலாம் நீங்க. தேவாவோட மாசச் சம்பளம் வழக் கம் போல உங்களுக்கு வரும். தேவா வெளியே வரட்டும். நான பார்த்துக்கறேன்.''என்று ஒரு 100 ரூபாய் கட்டை எடுத்து அவர்கள் எதிரில் நீட்டுகிறார்.

சிவகாமி ஆடிப் போகிறாள்.

இதென்ன புதிராக இருக்கிறது. இவர் வருவார்-கத்துவார், காலி பண்ணச் சொல்வார் என்று பார்த் தால் பணம் தருகிறாரே!

அவள் ஆச்சரியத்துக்கு அருணாசலமே விடை தருகிறார்.

“நான் உங்களை துரத்தாம இப்படி உதவி செய்ய றது உங்களுக்கே ஆச்சரியமா இருக்கும் அதுக்கு காரணம் இருக்கு. அத பின்னால தெரிஞ்சுப்பீங்க ஆனா ஒண்ணு! நான் உதவி செய்ததோ. நீங்க எப்பவும் போல இருக்கறதோ வெளியே தெரியறது நல்லதுக்கில்ல! நீங்க உங்க இஷ்டப்படி மகனை வெளியே எடுக்க கஷ்டப்படற வங்களாவே நடிங்க. நான் இப்ப வந்துருக்கறது கூட உங்களை காலி பண்ணச் சொல்லத்தான்னு யாரும் கேட்டா சொல்லணும் என்ன?''

-அருணாசலத்தின் விளக்கத்துக்கு பலமான தலை யாட்டல் அனைவரிடமும்.

“ஆமாம் எங்க தேவாவோட அப்பா?''

"அவர் மில் வேலைக்கு போயிருக்காரு..."

"அவர் மகாதேவி மில்லுலயா வேலைல இருக்காரு?"

"ஆமாம். முப்பது வருஷமா அங்க அவருக்கு வேலை. ஏதோ இப்ப அந்த வருமானம்தான்..."

"அவர் இனி வேலைக்கு போக வேண்டாம். ஆமா எப்படி தேவா இவ்வளவு தூரம் அந்த கைலாஷுக்கு எதிரியா ஆகியும் அவர் உங்க வீட்டுக்காரரை வேலைல விட்டு வைச்சிருக்காரு?"

"அது, அது...யூனியன் நல்ல ஸ்ட்ராங். அதனால இருக்கலாம்."

"இல்ல...வேற ஏதோ காரணம் இருக்கு..."

"எதை வெச்சி சொல்றீங்க?"

"எல்லாம் ஒரு கணக்குதானம்மா. ஒரு பக்கம் ஜென்ம விரோதியப் போல நடத்திகிட்டு, மறுபக்கம் இப்படி இருக்கார்னா அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்."

"அப்படின்னா..."

"அவர் வந்த பிறகு அவரை இனி வேலைக்கு அனுப்பாதீங்க. அது அவருக்கோ, உங்களுக்கோ கொஞ்சம் கூட நல்லதில்ல..."

அருணாசலம் சொல்லிக் கிளம்புகிறார். வாசல் புறம் வரவும் வீதிக்காரர்கள் பார்வை: காரையும் தன்னையும் பார்ப்பதை உணருபவர் போலியாக ஒரு அதட்டல் போடுகிறார்.

"இன்னும் மூணு மாசம்தான் டயம். அதுக்குள்ற காலி பண்ணனும். இல்லைன்னா நடக்கறதே வேற

ஆமாம்..."என்று ஒரு அதட்டல். பின் காரில் ஏற கார் சிட்டாய் பறக்க ஆரம்பிக்கிறது.

❑ ❑ ❑

**மி**ல் சங்கு ஊதி முடிக்கிறது.

தொழிலாளர் கூட்டம் சரம்சரமாக வெளியே வர ஆரம்பிக்கிறது. கையில் தூக்குவாளி, தலையில் கொஞ்சம் பஞ்சுத் துண்டு ஒட்டிய அழுக்கு என்று ஒவ்வொருவ ராக வர அதில் தேவாவின் அப்பா அருணகிரியும் ஒருவர்.

தள்ளாடியபடி வருபவர் செக்யூரிட்டி கேட் அருகே வரும்போது செக்யூரிட்டி ஆபீசர் செல்கிறார்.

"அருணகிரி உள்ளே முதலாளி பி.ஏ. பார்க்கணும் னார்."

"நல்லதுங்க..."அருணகிரி திரும்பியவர் சென்று அலுவலக பகுதிக்குள் நுழைகிறார். காக்கி அரை டிராயர், சட்டை இளைத்த துரும்பான உருவம். ஆனால் தலையில் அதிகம் நரைத்திராத இளமை. விறுவிறு வென்கிற சுறுசுறுப்பான நடை.

தாங்கள் முதலாளி ஆபீஸ் முன் சென்று நிற்க அங்கு முதலாளி பி.ஏ.வாக புதிய நபர் ரசாக்.

"வணக்கம் சார்..."

"வணக்கம் யார் அருணகிரியா?"

"ஆமாங்க வரச் சொன்னீங்களாமே?"

"ஆமாம் முதலாளி உன்னை பார்க்கனுமின்னார்..."

"என்னையா?"

"ஆமாம்யா...பார்க்கக்கூடாதா என்ன...."

"ஐய்யய்யோ...இது அவர் கம்பெனி. நான் அவர் வேலைக்காரன். பார்க்கறதுலே தப்பு என்ன இருக்கு?"

"சரி போ..."உள்ளே அனுப்புகிறான் ரசாக்.

தயங்கித் தயங்கி உள் நுழைய எதிரில் சீட்டில் கைலாஷ்.

"வாய்யா சம்பந்தி" என்கிற வி[illegible]டப்பான வரவேற்பு அவரிடம்.

"சம்பந்தியா!"



# 72

சம்பந்தி என்று கைலாஷ் அழைப்பதில் அருணகிரியிடம் ஆச்சரியப் பெருக்கு.

"முதலாளி என்னையா சொன்னீங்க?"

"ஆமாம்...உள்ள வா! நீ இனிமே என் சம்பந்தி!"

"என்ன சொல்றீங்க நீங்க...நான் உங்க மில்லுல சாதாரண வைண்டர்."

"அதனால என்ன... என் மகள் கட்டிக்கிட்டா உன் மகனைத்தான் கட்டிக்குவேன்னு சொல்லும்போது நான் என்ன செய்யமுடியும் சொல்லு பார்ப்போம்..."

"அதான் முடியாதுன்னு முடிவாகி அவனும் உங்க வழிக்கே வரது இல்லீங்களே"

"இருக்கலாம்...ஆனா என் மக மனசுல இருந்து அவனை வெளியே அனுப்ப என்னால முடியல. நேத்துக் கூட தேவா தேவான்னுதான் தூக்கத்துல உளர்றா.

யோசிச்சு பார்த்தேன். இனி நாம சும்மா இருந்தா நல்லதில்லைன்னு பட்டுச்சு. சரின்னு சம்மதிச்சுட்டேன்."

கைலாஷ் பேசுவதை ஒரு கேலிப்பேச்சு போலதான் எடுத்துக் கொள்கிறார் அருணகிரி

"என்ன அருணகிரி நானும் பேசிக்கிட்டே இருக்கேன். நீ எதுவும் சொல்லாம இருக்கியே?"

"என்னத்தங்க சொல்ல ...அவன் இப்ப ஜெயில்ல! வெளியே தலைகாட்ட முடியல. இப்பபோய் எல்லாம் தெரிஞ்சும் நீங்கவந்து இப்படி பேசினா எப்படிங்க..? அவன் வெளியே வரவே முடியாது பத்து வருஷமாவது உள்ள போடுவாங்கன்னு வக்கீல் கூட சொல்றாரு...?"

"அப்படியா?" ஒண்ணுமே தெரியாத மாதிரி கேட்கிறார் கைலாஷ்.

"வேண்டாங்க ...நாங்க ஏழைங்க. எங்ககூட உங்க விளையாட்டு வேண்டாம்."

கெஞ்சுகிறது அருணகிரி உதடு.

"நான் விளையாடலை அருணகிரி. உண்மையை பேசறேன். உன் மகன் நிலைமை எனக்கு தெரியும். அவனை வெளியே எடுக்கறது என பொறுப்பு. எடுத்து இந்த மில்லுலேயே நல்லவேலை போட்டுத் தந்து என் மகளுக்கும் கட்டி வெச்சுட்றேன். என்ன சொல்றே..."

அருணகிரி இதை கேட்டு ஒருசில நிமிடங்கள் எதுவும் பேசவில்லை. இது நிஜமா? பொய்யா? இல்லை ஏதாவது சூதா? என்று பல தரப்பட்ட சந்தேகங்கள்

"சரி...நீ வீட்டுக்குப் போய் உன் மனைவி மக்கள் கிட்ட கலந்துக்கிட்டு வந்து இதைச் சொல். என்ன?"

-அருணகிரி அந்த நிமிஷத்துக்கு தப்பிக்கவழி கிடைத்த மாதிரியான ஒரு சந்தோஷத்தோடு சரி என்று தலையசைத்துவிட்டு கிளம்புகிறார்.

❑ ❑ ❑

**பி**ருந்தாவால் நடப்பதை துளிகூட நம்பமுடியவில்லை. இருப்பது மண்ணுலகமா? என்றெல்லாம் சந்தேகம். "உன் விருப்பப்படியே உனக்கும் தேவாவுக்கும் கல்யாணம் பண்ணித்தர சம்மதிக்கிறேன். அவனை ஜாமீனிலும் வெளியே எடுக்கப் போறேன்"-என்று அவர் பிருந்தாவிடம் சொன்னதுதான் காரணம்.

"டாடி நீங்க சொல்றது நிஜமா?"

"சத்யம்மா..."

"என்னால நம்ப முடியலை..."

"நம்பு."

"எப்படி டாடி...அவர் நல்லா இருக்கும்போது கூட ஒத்துக்காத நீங்க ஜெயிலுக்குள்ள அவர் இருக்கும்போது ஒத்துக்கறீங்களே..."

"அதுல அவன் மன உறுதிய பார்த்தேன். அதனால தான்."

"திரும்ப சொல்றேன் என்னால நம்பமுடியல..."

"திரும்பவும் நானும் சொல்றேன். உனக்கும் தேவாவுக்கும் கல்யாணம். தேவா இந்த மில்லோட ஜாய்ன்ட் டைரக்டராகவும் ஆகப்போறான்."

"இப்ப முதல்ல அவரை வெளியே எடுங்க. இனி நான் அவரை பார்க்கலாம் பேசலாம் இல்லியா?"

"நிச்சயமா...என் சத்தியத்த நான் வாபஸ் வாங்கிக்கிறேன். போ...போய் பார்த்துட்டு வா..."

"ஆமா எப்படி அவரை ஜாமீன்ல எடுக்கப்போறீங்க..."

"அந்த கவலை உனக்கெதுக்கு? பணம் இருக்கே அது பாதாளம்வரை பாயும்."-சொன்னபடி மகளின் கன்னத்தை வருடித் தருகிறார். பிருந்தா ஒரு மான்குட்டி போல துள்ளியபடி கிளம்புகிறாள். இடைப்பட்ட நேரத்தில் பைப்பில் புகையிலை ஏறுகிறது. தீக்குச்சி தீயிடுகிறது. புகை உதடு வழி பரவ ஆரம்பிக்கும்போது வைதேகி வருகிறாள். கேட்கிறாள்.

"என்ன இது திடீர் மாற்றம்?"

"இப்படி கேட்பேன்னு தெரியும். யோசிச்சு பார்த்தேன். ஒரு வகைல அந்த பையன் இப்படி ஆக நானும் ஒரு காரணம்."

"எப்படி?"

"பேசாம காதலுக்கு சம்மதிச்சிருந்தா தேவாவுக்கு இந்த நிமிஷம் நம்ம மில்லுல உத்யோகம் அமைஞ்சிருக்கும். அவனுக்கு இந்த மாதிரி சிக்கல்களே ஏற்பட்டிருக்காது."

"இதுதான் காரணமா... எனக்கென்னமோ ஆடு நனையுதுன்னு ஓநாய் அழுற மாதிரி இருக்கு..."

கைலாஷ் உடனே நெருப்புக்கண்களோடு வைதேகியை பார்க்கிறார்.

"வைதேகி...எதிர்த்தா அதுவும் தப்புங்கறீங்க. ஆதரிச்சா அதுவும் தப்புங்கறீங்களே...நான் எதை செய்தா. நீ ஏத்துக்குவே-நம்புவே?"

"எதைச் செய்தாலும் அது இயல்பா இருக்கணும் அதுல அதிகப்படி வேகமும் இருக்கக்கூடாது. அதிகப் படி பல்டியும் இருக்கக்கூடாது..."

"ஒத்துக்கிறேன்...உனக்கு இன்னொரு உண்மையை யும் சொல்றேன். கல்கத்தாவுல இருந்து செல்வா வரப் போறது தெரிஞ்சு பிருந்தா ரொம்ப பயந்து போய்ட்டா. ஒரு பக்கம் தேவாவை நினைக்கக்கூடாதுன்னு நான் சத்யம் வாங்கியிருக்கேன். மறுபக்கம் செல்வாவை கல்யாணம் பண்ணிக்க அவளுக்கு இஷ்டமும் இல்லை.

இந்த நிலைல அவளுக்கு சாகறது தவிர வேற வழி தெரியலை. இதுக்காக அவ தற்கொலை செய்துக்க பார்த்தா. நான் பார்த்து தடுத்தேன். நல்லவேளை அப் பவே இந்த முடிவுக்கு வந்துட்டேன்..."

"இதையெல்லாம் என்கிட்ட சொல்லலையே..."

"இப்ப வருவா கேட்டுக்கோ. இப்ப சொல்லு நான் சம்மதிச்சது சரியா...இல்லை எதுத்துக்கிட்டே இருக் கறது தான் சரியா..."

"சம்மதிச்சதுதான் சரி...ஆமா எப்படி தேவாவை வெளியே எடுப்பீங்க?"

"வழி இருக்கு..." என்றவர் அந்த வழியை சொன்ன போது வைதேகி முகத்தில் ஆச்சரிய ஜோதி!

73



**வை**தேகியின் ஆச்சரியம் தொடர்கிறது.

"அப்ப தேவாவை மீட்க முடியும்னு நம்பறீங்களா?"

"சந்தேகப்படாதே. மேலதிகாரிகள் எனக்கு நல்ல பழக்கம். ஆகையால நான் நினைச்சதை சாதிப்பேன்..." சொல்லி விட்டு உடனடியாக ஸ்டேஷனுக்கு கிளம்புகிறார்.

வைதேகி நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள்.

❑ ❑ ❑

**போ**லீஸ் ஸ்டேஷனில் கைலாஷை துளிகூட சப்-இன்ஸ்பெக்டர் எதிர்பார்க்கவில்லை.

"வாங்க சார்...வாங்க..." என்கிற பலமான வரவேற்பு. உள்ளே ஸ்டைலாக நுழைபவர் லாக்கப் கம்பியை பார்க்கிறார். தேவா தெரிகிறான். கைலாஷை பார்த்து சற்று ஆச்சரியப்படுகிறான்.

"என்ன சார் விஷயம் ...என்ன இவ்வளவு தூரம்?"

"எல்லாம் தேவா கேஸ் விஷயமாத்தான்..."

"இவன் விஷயமாவா...என்ன சார் சொல்றீங்க?"

"தமிழ்லதானே சொன்னேன்..."

"இவர் உங்க பரம எதிரின்னு கேள்விப்பட்டேனே..."

"கேள்விப்பட்ட விஷயம்லாம் உண்மையா இருக்கணுமா என்ன?"

"அப்ப..."

"அவரை ஜாமீன்ல எடுக்க வந்திருக்கேன்..."

"சார் இது பயங்கரமான கேஸ்..."

"எஃப் ஐ ஆர் போட்டாச்சா?"

"இல்ல... இனிதான் போடணும். இன்னிக்கு ஞாயிற்று கிழமை நேற்று சனிக்கிழமை மிலாடிநபின்னு நாளைக்கும் லீவு. செவ்வாய் கிழமை கோர்ட்ல ப்ரொட்யூஸ் பண்ணும்போது போட்டுக்கலாம்னு..."

"தெரியும் இப்படித்தான் ஏதாவது செய்வீங்கன்னு நல்லாத் தெரியும். இம்மீடியட்டா அவனை ஜாமீன்ல விட ஏற்பாடு செய்யுங்க..."

"அது எப்படி சார்...அவர் பிரௌன் ஷுகர் கடத்தியிருக்காரு."

"ஏன் அதை யாராவது அவர்கிட்ட கொடுத்து வெச்சிருக்கலாம் இல்லியா? அது என்னன்னே தெரியாம அவர் வெச்சிக்கிட்டு இருக்காலமில்லையா?"

"சார் இது கோர்ட்ல வக்கீல் பேச வேண்டிய பேச்சு, இது ஸ்டேஷன். அரெஸ்ட் பண்ண மட்டும்தான் எனக்கு ரைட் இருக்கு. அதோட தேவாவே தன்னை குற்றவாளின்னு ஒத்துக்கறாரு."

"அது இன்னொரு குற்றவாளியை காப்பாற்றன்னு நான் சொல்றேன்."

"என்ன சொல்றீங்க?" சப்-இன்ஸ்பெக்டர் கேள்வி முன் கை தட்ட ஒருவன் முன்னே வருகிறான்.

அட முத்துப்பாண்டி!

"இந்த நாய்தான் அந்த குற்றவாளி. நடந்ததை சொல்லுடா..." முத்துப்பாண்டி நிறைய உதை வாங்கியிருக்கிறான் என்பது பார்க்கும்போது தெரிகிறது.

"நான்தாங்க கடத்த சொன்னேன். பிரௌன் ஷுகர்னு சொல்லாம கெமிக்கல் பொருள்னு சொன்னேன். உண்மையை போலீஸ்கிட்ட சொன்னா குடும்பத்

துல இருக்கறவங்க அநியாயமாக சாவாங்கன்னும் சொன்னேன்.''

"ஐசீ..." சப்-இன்ஸ்பெக்டர் நிமிறுகிறார்.

"சார் இவனை எப்படி பிடிச்சீங்க...?"

"அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்ல சப்-இன்ஸ்பெக்டர். இந்த மதுரைல இருக்கிற ஒவ்வொரு ரவுடியும் எந்த ஒரு முதலாளிக்கும் பழக்கமானவங்கதான். அதுலையும் இவன் இருக்கானே என் மில்லுல கொஞ்ச நாள் வேலை பார்த்தவன். தேவாவை மாட்டி விட்டுட்டு என்கிட்ட வந்து சொன்னான். தேவா என் எதிரி. அதனால நான் அதை கேட்டு சந்தோஷப்படுவேன்னு நினைச்சான். ஆனால் நான் சந்தோஷப்படல. கவலை தான் பட்டேன் ஒரு வகைல. தேவா இப்படி எல்லாம் நடந்துக்க நானும் காரணம். அவரை நான் மாப்ளையா ஒத்துக்கிட்டிருந்தா எவ்வளவோ தப்பு, தவிர்க்கப்பட்டிருக்கும். ஓ.கே...இப்ப அதை எல்லாம் பத்தி பேசறது அர்த்தமே இல்லை. பாஸ்ட் ஈஸ் பாஸ்ட்..."

"சாரி மிஸ்டர் கைலாஷ்.... நானும் இவரை ரிலீஸ் பண்ண வேண்டியதை செய்யறேன்."

"தேங்க்யூ..." சொன்னபடியே எழுந்து லாக்கப் பக்கம் செல்ல தேவா அறையை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"என்ன தேவா பிரமிச்சுப் போயிட்டே. பேசினது நான்தானான்னு சந்தேகமா இருக்கா?"

"ஆ...ஆமா சார்..."

"சார் இல்ல இனி மாமா..."-அவர் திருத்துகிறார். "என்னால நம்ப முடியல சார்..."என்கிறான் திரும்ப... "நம்பு...நம்பினாதான் எல்லாருக்குமே நல்லது உன்னை

ரொம்ப அண்டர் எஸ்டிமேட் பண்ணிட்டேன் நீ ஒரு கிளவர்ஃபெலோ. நல்ல சந்தர்ப்பமும் வாய்ப்பும் வந்தா எவ்வளவு உயரமும் உன்னால ஏற முடியும் அதுல நிற்கவும் முடியும்..." சொல்லிக் கொண்டிருக்கும் போதே பிருந்தா வருகிறாள். அப்பா இருப்பதை பார்த்து தேங்கி நிற்கிறாள். கைலாஷ் இதை கவனிக்கிறார்.

"பிருந்தா வந்துட்டா... இனி நான் இங்க இருக்கக் கூடாது. கிளம்பறேன்..." இங்கிதமாக நழுவத் தொடங்கு கிறார்.

பிருந்தா லாக்கப் அருகே வருகிறாள். நிமிர்ந்து பார்க்கிறாள். கண்களில் ஆனந்த கண்ணீரின் சேர்க்கை.

"பிருந்தா..."

"தேவா..."

"நடக்கிறதெல்லாம் கனவு மாதிரி இருக்கு..."

"எனக்கும்தான். எல்லாம் ரசமணி வந்த வேளை..."

"ரசமணியா...உன்கிட்டையா?"

"ஆமாம்..."பிருந்தா தன் ஹேண்ட்பேக்கில் இருந்து எடுத்து அதை காட்டுகிறாள். தேவா ஆச்சரியத்துடன் தன் இடுப்பையும் தொட்டுப் பார்க்கிறான். அவனிடமும் இருக்கிறது.

எப்படி இரண்டு வந்தது?



## 74

**எ**ல்லாம் ரசமணி வேலை என்று சொன்ன பிருந்தாவை மலங்க பார்க்கிறான் தேவா.

"உனக்கு எப்படி கிடைச்சது ரசமணி?"

"நல்ல கேள்வி...பசுபதிநாதன் உங்களுக்குதான் தரணுமா என்ன..."

"ஓ... அவர் உன்னையும் விடலையா?"

"எப்படியோ எல்லாம் நல்லபடி முடிஞ்சிடுச்சு. முதல்ல வெளியே வாங்க. உங்ககூட நான் சண்டை போடணும்."

"அய்யோ சண்டையா?"

"ஆமாம்... பின்ன என்ன பிரௌன் ஷுகர் கடத்தல் அது இது உயிரைக் கூட விடலாம். இப்படி நடந்துக்கலாமா?"

"சொல்றேன் பிருந்தா. எல்லாத்தையும் வெளிய வந்து சொல்றேன்..." அவன் லாக்கப் கதவுக்கு அப்பாலிருந்து சமாதானிக்க அவள் செல்லச் சிணுங்கல், சிணுங்க..."

❑ ❑ ❑

**பா**ட்டிலில் இருந்த பிராந்தி கண்ணாடி தம்ளருக்கு த ாவிக் கொண்டிருக்கிறது. ஊற்றிக் கொண்டிருப்பவர் பிரேம்நாத்.

"சார் தேவாவை விடுதலை பண்ணிட்டாங்க. அவன் இப்ப அப்ரூவர் மாதிரி. எல்லாம் கைலாஷ் வேலை." விஷயம் அவரிடம் ஒரு போலீஸ்காரரால் சொல்லப்பட அதன் காரணமாக வந்த கோபமும், தாபமும் மதுவுக்கு தாவச் செய்திருக்கிறது அவரை...

"கைலாஷ் எப்படி இத்தனை சீக்கிரம் மனது மாறினார்? யாராவது மந்திரம் போட்டனரா? இது சாத்தியா..."

கேள்விகளாக கேட்டு குழம்பிப் போய்க்கொண் டிருக்கிறார். நடுவில் தொலைபேசி வேறு ரொய்ங் ரொய்ங் என்று...

"ஹலோ..."

"என்ன பிரேம்நாத் ஓவரா தண்ணி அடிக்கறே போலருக்கே?"

"யார் பேசறது..."

"சொன்னாதான் தெரியுமா?... நான்தான் தர்மராஜ் பேசறேன். தேவா விஷயம் தெரியுமா?"

"என்ன விஷயம்...?"

"அவன் இப்ப எங்க கோஷ்டி அவன் உண்மையா நடந்துக்கிட்டான். அதனால எப்படி வெளியே கொண்டு வந்துட்டேன் பாத்தியா."

"நீ எங்கே வெளிய கொண்டு வந்தே... மகளுக்காக கைலாஷ்தான் கொண்டு வந்திருக்கார்."

"வெங்காயம்... கைலாஷுக்கு என்ன திடீர்னு மகள் காதல்மேல் அக்கறை... இவ்வளவு நாள் இல்லாம... யோவ் போலீசு உன் புத்திக்கு புலப்படலியா?"

"புலப்படறதை எல்லாம் சொல்ல முடியாது தர்ம ராஜ்..."

"குட்- அப்படியே இரு இப்ப சொல்றத கேட்டுக்கோ" நீயும் எங்க கூட சேர்ந்துடு. உனக்கு உன் டிபார்ட்மெண்ட் சீக்ரெட்லாம் அத்துபடி. ஆகையால் நாம ஒண்ணு சேர்ந்தா தூள் கிளப்பலாம்.

"அது சரி... கைலாஷ் பத்தி பாதியில நிறுத்திட் டியே. அவர் யார்? உனக்கும் அவருக்கும் என்ன தொடர்பு..."

“வேண்டாமே... உனக்கு இதெல்லாம் தெரிய வேண்டாமே. ஒண்ணு தெரிஞ்சுக்கம்மா - கொஞ்சம் முந்திதான் மந்திரிகூட என்கிட்ட பேசினார்...”

“எந்த மந்திரி?”

“எதுக்கு...அந்த ஆள் மூலமா என்னை தெரிஞ்சுக் கவா. இதோ பார், நீ எங்க ஜாதியில் கலந்துடு, உன் அந்தஸ்தே மாறிப் போயிடும். உண்மைகளும் போகப் போக தெரிய வரும்.”

“சரி...நான் என்ன செய்யணும்?”

“தேவாவோட ஒட்டிக்கோ...அவன் கைலாசத் தோட ஒட்டியிருக்கான். நீ தானா என்கிட்ட வந்து சேர்ந்துடுவே...”

“நல்லது...”

“பழைய போலீஸ் விஸ்வாசத்துல எதுவும் திருகு வேலை பார்த்துடாதே பிரேம்நாத்...”

“பாத்தியா...நான் இப்ப அந்த டிபார்ட்மெண்ட் டையே நாசமாக்கற வெறியில இருக்கேன். என்கிட்ட போய் இப்படி பேசறியே.”

“சரி சரி...கூடிய சீக்கிரமா சந்திப்போம் என்ன?”

-மறுமுனை முடங்க பிரேம்நாத் சிலிர்த்தபடி எழு கிறார். கைலாஷ் பற்றி நினைத்தது சரிதான். அவருக்கும் கள்ள நோட்டு கூட்டத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது அதனால்தான் அவர் திடீரென்று மனம் மாறி தேவா வுக்கு வக்காலத்து வாங்கி களத்தில் இறங்கியிருக்கிறார். பாவம் தேவா! என்ன நினைத்துக் கொண்டிருக்கி றானோ... அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் போதே மறுபடி தொலைபேசி கூப்பிடுகிறது.

“சார், நான் தேவா பேசறேன்...ராஜாஜி பார்க் வரீங்களா கொஞ்சம் பேசணும்.”

“முட்டாள். அங்க வேண்டாம் நாலுபேர் நட மாடற இடம். நீ தத்தனேரி மயானத்துக்கு வந்துடு. அதான் சரியான இடம்.”

- தொலைபேசியை முடக்குகிறார்.



# 75

தத்தனேரி மயானம் அங்கங்கே திட்டுத் திட்டாக சமாதிகள். கூரைகளின் கீழ் பிணத்தின் எரிவுகள். நடுவில் ஜனக்கூட்டமும் பயமின்றி போய் வந்து கொண்டிருக் கிறது.

பரவாயில்லை. இந்த கால சமூகம் மரணத்தை ஒரு தவிர்க்க முடியாத அம்சமாக உணர்ந்து அதை சுலபமாக எடுத்துக் கொண்டும் விட்டது. இல்லாவிட்டால் மயா னத்தை ஒட்டியே வீடுகள்தான் வருமா! இல்லை அதன் புகைதான் அந்த வீட்டுக் கூரை மேலெல்லாம் சாதாரண மாக படர முடியுமா...

தேவா ஒரு சராசரி மனுஷனைப்போல் லுங்கி சட்டையுடன் துக்கம் விசாரிக்க வந்த மாதிரி மயானம் பக்கம் வந்து பிரேம்நாத்தை தேடத் தொடங்குகிறான்.

எங்கே அவர்?

பார்வை துழாவ அவரைக் காணவில்லை.

இங்கேதானே வரச் சொன்னார்... சுற்றிச்சுற்றி பார்ப்பவன் கண்களில் ஒரு சீட்டாட்ட கோஷ்டி கண்

ணில் படுகிறது. இந்த கோஷ்டிகளுக்கெல்லாம் மயானம் தான் பாாதுகாப்பான இடமோ? கேள்வி எழுகிறது. சீட்டாட்ட கோஷ்டியில் முத்துப்பாண்டியும் இருக்கி றான் தூக்கி வாரிப்போடுகிறது. லாக்கப்பில் இருக்க வேண்டியவன் இங்கு எப்படி? முத்துப்பாண்டியும் இருக்கிறான். தூக்கிவாரிப் போடுகிறது. லாக்கப்பில் தேவாவை பார்த்து விடுகிறான்.

"ஏய் தேவா...எங்க இவ்ளோ தூரம்?" அவன் குரலில் பயங்கர உற்சாகம்.

"ஆமா நீ உள்ளே லாக்கப்புலல்ல இருந்தே..."

"யார் இல்லேன்னா...இங்க சீட்டாடிட்டு ராத்தி ரிக்கு தூங்கறதுக்கு அங்கே போயிடுவேன்..."

"அடப் பாவி எப்படி விட்டாங்க...?"

"அதெல்லாம் எதுக்கும்மா...அப்புறம்? பெரிய இடத்து மாப்ளையாகப் போற. நம்மை மறந்துடுவியா?"

"சேச்சே...என்ன பெரிய இடம்? அதை நினைச் சாலே பயமா இருக்கு."

"அப்படித்தான் இருக்கணும். அதான் நல்லது."

"ஆமா. கைலாஷ் எப்படி உன்னைப் பிடிச்சார்... அவர் சொன்னதெல்லாம் நிஜமா?"

"ஏம்மா கண்ணு...வருங்கால மாமனாரையே சந் தேகப்படறியே..."

"இல்ல முத்துப்பாண்டி. இந்த திருப்பத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை. எப்படி இவ்வளவு சீக்கிரம் மனசு மாறினார்னே புரியல..."

"அதுதான் தர்மராஜ்யத்தோட, சக்தி, புரியல... எல்லாம் பாசோட வேலை. அவர் உக்காந்த இடத்துல இருந்துகிட்டு உலகத்தையே ஆட்டி வைக்கறவர்..."

"உண்மைதான் அவரைப் பார்க்கணுமே."

"அவசரப் படாதே நீ இப்ப நம்ம கூட்டத்துல எல்.கே.ஜி. நான்லாம் உன் முன்னால கிராஜுவேட். ஆனா எனக்கே அவர் தரிசனம் கிடைச்சதில்ல. தெரியுமா?"

"என்னப்பா நீ...தெலுங்கு சினிமா மாதிரியே இருக்கே நம்ம விஷயம்..."

"அதை விடவும் பிரமாத சீன்லாம் இனி வரும் பாரு. சரி சரி போய் வேலையப்பாரு. நான் உன்னை போட்டுவிட்டும் நீ என்னை காட்டிக் கொடுக்கலை. ரொம்ப தேங்க்ஸ் இந்த திடம், இந்த விஸ்வாசம் எப்பவும் இருக்கட்டும். நான் இங்க இருக்கறதையும் காட்டிக் காதே..."

-அவன் சொல்லித் திரும்பும்போது மின்னல் போல் ஒரு ஒளி அவர்கள் மேல் பட்டுத் தெரிக்க முத்துப் பாண்டி அதிர்ந்து திரும்புகிறான்.

ஒருவன் கூடையை தலையில் சுமந்தபடி போய்க் கொண்டிருக்கிறான். கூடையில் தகர டின். அதுதான் வெயில் பட்டு மின்னியிருக்கிறது.

"என்ன முத்துப்பாண்டி பயந்துட்டியா?"

"பின்னே...லாக்கப் கேஸ் நான். -வெளியே இருக் கேன். எவனாவது போட்டோ எடுத்தா விட்னஸ் ஆயிடாதா?"

"பயங்கர எச்சரிக்கையான ஆளுப்பா நீ..."

"சரி சரி கிளம்பு. ரொம்ப நேரம் இங்ககூட பேசக் கூடாது, பொணமாட்டம் எவனாச்சும் நடிச்சுக்கூட நம்மை நோட்டம் போடலாம்..."

"சரி வரேன்..."-தேவா கிளம்பக் கால் எடுக்கிறான். சற்றுதூரம் சென்ற முத்துப்பாண்டி நின்று திரும்பி

அழைக்கிறான். “ஆமா நீ எதுக்காக இங்க வந்தே சொல்லவேயில்லையே...” அந்த கேள்வி தேவாவை தடுமாற விட சட்டென்று புத்தி சுதாரித்து ஒரு சமாதியை காட்டுகிறது.

“என்ன அந்த சமாதிக்கு...”

“அது என் பெரியப்பா, அவர் நினைவு நாள் இன்னிக்கு. அதான் கும்பிட்டு போக வந்தேன்.”

“பயங்கர சென்டிமென்டெல்லாம் வெச்சுக் குனிகிறியே சரி சரி கிளம்பு” முத்துப்பாண்டி திரும்ப நடையை கட்ட தேவாவிடம் பெருமூச்சு.

இனி இங்க நிற்கக்கூடாது என்று கிளம்புகிறான். வேகமாக நடை மயானத்துக்கு வெளியில் மெயின்ரோடு ஜேஜே என்று கூட்டம் . கூட்டம் கடந்து ஆட்டோ பிடிக்க ஒரு ஆட்டோவை நெருங்கும்போது உள்ளே பிரேம்நாத் கைவசம் ஒரு வியாபாரியாட்டம் வேஷ்டி தொள தொள சட்டை தலையில் உருமா என்று...

“சரி நீங்களா?”

“ஏறு முதல்ல வண்டியிலே...”அவனும் வேகமாக ஏற ஆட்டோ சீறுகிறது. உள்ளே தேவா திகைப்புடன் அவரைப் பார்க்க அவன் எதிரே கூடையில இருந்து கேமரா ஒன்றை எடுக்கிறார் பிரேம்நாத்!



# 76

**கேம**ராவை, பார்ப்பவன் கண்களில் ஆச்சரிய மின்னல்!

"என்ன சார் இது வேஷம் ...கைலையும் கேமரா?"

"தெரியலியா...நான்தான். நீயும் முத்துப்பாண்டியும் பேசும்போது குறுக்கே போய் ஃபோட்டோ எடுத்த நபர்."

"நீங்கதானா..உங்களை அங்க காணோம்னு நினைச்சு திரும்பும்போதுதான் அவனை பார்த்தேன்..."

"நான் அங்க உன்னை சந்திக்க வந்தப்பவே அவனை பார்த்துட்டேன். ரொம்ப அதிர்ச்சியா இருந்தது. ஒரு லாக்கப் கைதியை வெளியே விட்ருக்காங்கன்னா அதுக்கு பின்னாடி நிச்சயம் ஒரு பெரிய சக்தி இருக்கு. சரி இதை விடக்கூடாதுன்னுதான் சாதுரியமா போட்டோவும் எடுத்துட்டேன்."

"அப்ப அந்த தர்மராஜ் உங்க டிபார்ட்மெண்ட்டையே தன் கைல வெச்சுகிட்டிருக்காங்கறது நல்லா தெரியுது..."

"தப்பா சொல்றே...என் டிபார்ட்மெண்ட்ஸ் சிலரைன்னு அர்த்தம். எல்லாரையும்னா நானும் இப்ப அவன் குரலுக்கு ஆமாம்சாமி போடணும்ல."

"சாரி சாரி...நீங்க சொல்றதுதான் சரி..."

"அது சரி...கைலாஷ் உன்னை வெளியே எடுத்து திடீர் அன்பை காமிச்சதை பத்தி என்ன நினைக்கறே?"

"நான் சொல்றேன். அந்த தர்மராஜ் இன்னிக்கு என்கூடவும் பேசினான். உன்னோட சேர்ந்து ஒட்டிக்க சொன்னான். கைலாஷ் அதுக்கு ஒத்துப்பார்னான். நாம நடிக்கறது தெரியாம அப்படியே நடப்போம். நடுநடுவுல இப்படி எவிடென்சையும் கலெக்ட் பண்ணிப்போம். எஸ்.பி. நம்ம ரூலவை சின்சியரா ஃபாலோ பண்ணிக்கிட்டிருக்கார். இந்த போட்டோ பிரிண்ட் இன்னிக்கே அவருக்கு போயிடும்.

நாளைல இருந்து அந்த முத்துப்பாண்டி வெளிய வர முடியாது. மத்ததை அவர் பார்த்துக்குவாரு..."

"அப்ப அடுத்த பிளான்..."

"கைலாஷ்கிட்ட தர்மராஜ் பத்தி பேசிப்பாரு. என்ன சொல்றார்னு வந்து சொல்."

"நல்லது சார்..." ஆட்டோ நிற்கிறது - இறங்கிக் கொள்கிறான் தேவா.

❑ ❑ ❑

**ம**துரை விமான நிலையம்! விமானத்தில் இருந்து இறங்கிக் கொண்டிருக்கிறான் செல்வா! முடுக்கான மைனர் தோற்றம், கூலிங்க்ளாஸ் என்கிற பந்தாக்களுடன்.

கைலாஷ் அவன் வருவதையறிந்து காரை அனுப்பி யிருக்கிறார். வெளியே வருபவன் டிரைவரிடம் கேட்கிறான்.

"கைலாஷ் சார் வரலை...?"

"வரலீங்க..."

- அங்கேயே முகம் செத்துப் போகிறது. கடு கடுவென்ற முகத்துடன் காரில் ஏறி அமருகிறான். காரும் கிளம்புகிறது. சரியாக பதினைந்தாவது நிமிடம் பங்களா முன் தேங்கி நிற்கிறது, இறங்குகிறான். உள் நுழைகிறான்.

"வாங்க தம்பி..."

- வரவேற்கிறாள் வைதேகி. அவளைப் பார்க்கவும் அதிர்ச்சியாகிறது.

"நீங்க எப்படி இங்க?"

"நான் இங்க வந்து ரொம்ப நாளாயிடுச்சு..."

"விஜயன் எப்படி இருக்கான்?"

- கேட்டுவிட்டு நிமிர்பவன் எதிரில் விஜயனின் மாலையிட்ட புகைப்படம்.

"மைகாட்... எப்படி?"

- பதறிப்போகிறான். அவளும் "விதிமுடிஞ்சிருச்சு.... என்ன பண்ண, போய்ட்டான்."

- என்கிறாள். கொஞ்சநேரம் அமைதி. உஷ்ணப் பெருமூச்சு.

"ஆமா அங்க்கிள் எங்க?"

"ஆபீஸ்ல இருக்கார். வந்துடுவார்..."

"நான் வரப்போறன்னு தெரிஞ்சுமா ஆபீஸ் போயிருக்கார்."

"ஏதோ முக்கிய வேலை..."

- அவள் சொல்லும்போது பிருந்தா தாண்டிச் செல்கிறாள். அவனைப் பார்க்கவும் முகம் மாறுகிறாள்.

"ஹாய் பிருந்தா..."

"ஹாய்..."

"எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன்..."

- என்று சொல்லிவிட்டு மாடிப்படி ஏறுகிறாள்.

"உங்களுக்குக்கூட ஆக்சிடென்டுன்னு சொன்னார். எப்படியோ தப்பிச்சுட்டீங்க... ரொம்ப சந்தோஷம்..."

"எல்லாம் பிருந்தாவோட புண்ணியம்."

"அவ புண்ணியமா?"

"ஆமாம்.. அவ கழுத்துல தாலிகட்ட நான் உயிரோட இருக்கணும்னு இருக்கு"- அதைகேட்டு துளி அதிர்ந் தாலும் சமாளித்து சிரிக்கிறாள்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"உங்களுக்கு விஷயம் தெரியாதா?"

"என்ன?"

"பிருந்தாவுக்கு வேற மாப்பிள்ளை பார்த்தாச்சு."

"வாட்..."

"அமைதி தம்பி... உங்களுக்குகூட தெரியும்னு நினைச்சேன்."

"என்ன ஆன்ட்டி இது அநியாயம். அவ எனக்காக பிறந்தவ"

"சாரி...நீங்க இனி அங்கிள்கிட்டதான் பேசணும்."

-அவன் உடனேயே எழுந்து கொள்கிறான்.

"உட்காருங்க காபிகூட சாப்பிடலையே."

"நோ...இந்த தப்பு எப்படி நடந்ததுன்னு தெரியாம பச்சை தண்ணிகூட குடிக்க மாட்டேன்."

-அவன் கருவுகிறான்.

# 77



**வை**தேகி சிரிப்பதை செல்வாவும் கவனித்து அதைப் பற்றி கேட்கிறான்.

"எதுக்கு நீங்க சிரிக்கிறீங்க?"

"சிரிக்காம என்ன தம்பி பண்றது. எல்லாத்தையும் அவர் வந்து சொல்வார்."

"ஏன் நீங்க சொல்லக்கூடாதா? அங்கிள்தான் சொல்லணுமா?"

"ஆமாம் செல்வா அதுதான் நல்லது. நான் ஏதாவது ஒண்ணு சொல்ல, அதனால எதாவது ஒண்ணு வர தேவையா எனக்கு?"

"எல்லாமே ஆச்சரியமா இருக்கு...நீங்க இந்த வீட்டுக்கு வந்திருக்கிறது விஜயன் செத்துருக்கறது, இப்ப அந்த வருத்தமே இல்லாம நீங்க பேசறது எல்லாமே ஆச்சரியமா இருக்கு... இங்க என்னவோ நடந்திருக்கு..."

"சரியா சொன்னீங்க தம்பி...ஒண்ணு இல்ல பலது நடந்து போச்சு. எல்லாம் இனிதான் சரியாகணும். ஆகும்னு நம்பறேன்."

-வைதேகி விடாமல் அவனுக்கு பதில் சொல்ல. அவன் எரிச்சலின் உச்சத்துக்கு போகிறான்.

"மொத்தத்துல எனக்கு நாமம் போடப் போறீங்கன்னும் தெரியுது."

"தெரியாது...அவர் வருவாரு பேசிக்குங்க..."

-வைதேகியை பார்த்து கொடூரமாக முறைக்கிறான். அவள் அதற்கு மேல் நிற்க பிரியமின்றி அங்கிருந்து அகலுகிறாள்.

ஒரு மாப்பிள்ளையாக கருதி தன்னை தலைமேல் வைத்து தாங்குவார்கள் என்று நினைத்த வீட்டில் இத்தனை அலட்சியமான போக்கை அவன் எதிர்பார்க்கவில்லை. நடந்து முடிந்த ஆக்சிடெண்ட்டைவிட இது பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது. அமர்ந்திருந்தவன் எழுந்திருந்து குட்டிபோட்ட பூனைபோல நடக்கத் தொடங்குகிறார்.

"வா செல்வா...எப்ப வந்தே?"

"எப்ப வந்தேனா...என்ன அங்கிள் தெரியாத மாதிரி கேட்கறீங்க. போன் பண்ணி சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன். இது என்ன விசித்திரமான கேள்வி."

"சாரிப்பா ஒரே பிசினஸ் பிரஷர்."

"உம் அப்புறம்..."

"நான் என்ன கதையா சொல்றேன்."

"கதை கூட கொஞ்சம் போரடிக்கும், -இது அதை விட நல்லாவே இருக்கு. என்னமோ நடந்துருக்கு. இந்த வீட்டு மாப்பிள்ளையாகப் போறவன் நான். ஆனா ஏதோ மூணாம் மனுஷன் மாதிரி உக்கார வைக்கப்பட்டு பேசிக்கிட்டிருக்கேன். உங்க பலவீனதுக்கு பலியான ஒரு மாதிரியான பெண்கள் எல்லாம் வைப்பாட்டி அந் தஸ்தை கடந்து வீட்டுக்கே வந்திருக்காங்க.

"என்ன நடக்குது அங்க்கிள் இங்க?"

கைலாஷ் கோபமாக திரும்புகிறார்.

"செல்வா... வார்த்தையை கொஞ்சம் அளந்து பேசறியா?"

"உம் அப்புறம்.. என்ன அப்புறம்... என் நிலைமை தெரியாம பேசறே நீ"

"என்ன பெரிய நிலைமை நான் எதுக்கு இருக்கேன். எதுவா இருந்தாலும் என்கிட்ட சொல்லலாமே..."

கைலாஷ் உடன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்.

"எல்லா விஷயங்களையும் சமயங்கள்ல பேச முடியாது செல்வா." அவர் பதிலுக்கு தோதாக ஒரு சம்பவமும் நடக்க ஆரம்பிக்கிறது.

ஒரு முரட்டு மனிதன் ஒருவன் வீட்டிற்குள் வெறுங் கையை வீசிக் கொண்டு நுழைகிறான். இருவருக்கும் நடுவே நுழைபவன் "தர்மராஜ் அனுப்பினார்" என் கிறான்.

கைலாஷ் அவனைப் பார்க்கவும் மிகவும் தடுமாறிப் போய் அவனுடன் தனியாக மாடிப்படி ஏறுகிறார்.

செல்வா வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்க ஒரு ஐந்து நிமிட இடைவெளியில் அவன் கீழிறங்குகிறான். அவன் கையில் ஒரு ப்ரீஃப் கேஸ்! அத்துடன் அவன் புன்னகையோடு வெளியேறுகிறான்.

செல்வாவுக்கு பார்க்கப் பார்க்க எல்லாமே அதிர்ச்சியாக இருக்கிறது.

"அங்க்கிள் யார் அவன்..."எதுக்கு வந்தான். அவன் என்ன எடுத்துக்கிட்டு போறான்-பணத்தையா?"

-கைலாஷ் மௌனமாக செல்வாவுக்கு ஆமோதிப்பை தருகிறார்.

"அங்கிள் இங்க பெரிசா ஏதோ நடந்திருக்கு. என்ன அது? சொல்லுங்க. நான் என்னால முடிந்த உதவியை செய்யறேன்..."

கைலாஷ் எதையுமே சொல்ல பிடிக்காதவராட்டம் சோபாவில் அமர்கிறார். பெருமூச்சு விடுகிறார். காபியுடன் குறுக்கிடுகிறாள் வைதேகி. பார்வை அவனை துளையிடுகிறது. அவள் அதை தாளாதவளாட்டம் நகர முயல, "வைதேகி பிருந்தா எங்கே?" என்று கேட்க, "கோயிலுக்கு" என்று பதில் வருகிறது. சரி நீ போ..." என்று அவளை அனுப்பியவர் செல்வா பக்கம் திரும்பு கிறார்.

"சொல்லுங்க அங்க்கிள். வாட்ஸ் த பிராப்ளம் - நான் உங்க பிசினஸ் பார்ட்னர் மட்டுமல்ல-மாப்பிள்ளையாகப் போறவனும்கூட...."கைலாஷ் அவன் பேசியதை கேட்டு நெடுநேரம் எதுவும் பேசவில்லை. பின் அரைமனதாக தலையை உயர்த்துகிறார். கண்கள் கலங்கி விட்டிருக்கின்றன.

"அங்க்கிள் 'என்ன இது...ஏன் கலங்கறீங்க...நீங்க அழுது பார்த்தேயில்லையே..."

"யு ஆர் ரைட்...எனக்கு அழவெச்சிதான் பழக்கம். அதனாலதான் ஆண்டவன் இப்ப என்னை அழ வைக்கி றான்."

"ப்ளீஸ் புரியும்படி சொல்லுங்க..."

"சொல்றேன்...செல்வா...அதுக்கு முந்தி ஒரு விஷயம் நீ என்னை முதல்ல புரிஞ்சுக்கணும்."

"இதென்ன இப்படிப் பேசறீங்க? உங்களைப் புரி யாதவனா நான்?"

"ஆமாம், என்னோட இன்னொரு பக்கத்தை நான் யாருக்குமே காட்டினதில்லை. இப்ப உனக்கு காட்டப் போறேன். இங்க வெச்சு பேச வேண்டாம். வா மாடிக்கு போவோம்..."

அவர் கிளம்ப அவன் பின் தொடர திடும்மென்று குறுக்கிட்டு வைதேகி அவர் அருகில் வந்து "விஜயன் பத்தி தயவு செய்து பேசாதீங்க"என்கிறாள்.

# 78



**வை**தேகி அப்படிச் சொல்வது செல்வாவின் காதுகளிலும் விழத்தான் செய்கிறது. எதுவும் சொல்லா மல் இறுக்கமான முகத்துடன் மாடி ஏறுகிறார் கைலாஷ். இத்தனையும் பார்க்கும் செல்வாவும் பின்தொடர்ந்து அவர் ஏ.சி.அறைக்குள் நுழைய.

“சொல்லுங்க அங்கிள்.”

“பல தவறுகள் நடந்து போச்சு செல்வா. அதோட விளைவு பிருந்தாவை நான் உனக்கு கொடுக்க முடியாத நிலைல இருக்கேன்.” தொடக்கமே செல்வாவிற்கு அதிர்ச்சி தருகிறது.

“அங்கிள் என்ன இது? என்ன தப்பு நடந்தது அதை சொல்லுங்க.”

“சொல்லுறேன். விஜயன் ஒரு கள்ளநோட்டு கும்பலோட எப்படியோ தொடர்பை உருவாக்கிட்டிருந்துருக்கான். அபின் கஞ்சால்லாம் கூட கடத்துற கூட்டம் அது. காலேஜ்ல ஏற்பட்ட பழக்கம்னு நினைக்கிறேன். இந்த நிலைலதான் லேகாங்கற பெண்ணை லவ் பண்ணியிருக்கான். அந்த பெண்ணோட பாடிகார்டா தேவா இருந்துருக்கான். தேவா தெரியுமில்லையா?”

“உம்...போன்ல சொல்லியிருக்கீங்க...”

“அவனை எதிரியா நினைச்சு பிரச்சினையில் சிக்க வெச்சு பின்னால அதுல இருந்து காப்பாத்தறதுங்கறது அவனோட பிளான். அப்படி காப்பாத்தற சாக்குல லேகாவோட காதலை அடையலாம். இல்லேன்னாலும் குறைஞ்ச பட்சம் அவளோட குடும்ப மானத்தையாவது வாங்கலாம்கறது அவன் திட்டம்.

பின் விளைவுகளை சரியா திட்டமிடாம மனம் போன வேகத்துல போயிட்டான், அதோட விளைவு ரொம்ப எதிர்மறையாயிருச்சு...”

“எப்படி?”

“கள்ள நோட்டு சிக்கல்ல இவன் நினைச்ச மாதிரி போலீஸ் தேவாவையோ அவன் கடை முதலாளி அருணாசலத்தையோ சந்தேகப்படலை. மாறாக

இவனுக்கு உதவி செய்த ராமானந்தத்தை வளைச்சு பிடிச்சிடுச்சு. இவன் பயப்படவும் இவனை நான் கொடைக்கானல் பங்களால போய் தங்கச் சொன்னேன். பம்பாய் போய்ட்டதா போலீசை சமாளிச்சேன். ஆனாலும் வைதேகி போன் பண்ணி விஜயன் கொடைக்கானல்ல இருக்கறத சொல்லிட்டா!”

“ஐ.சீ...”

“தப்பு பண்ணினவன் மகனாவே இருந்தாலும் தண்டனை அனுபவிக்கணும்கறது அவளோட எண்ணம். விட்டா தப்புமேல தப்பு பண்ணி அவன் முழுசா தொலைஞ்சே போயிருவான்கறது அவள் எண்ணம். ஆனா நானோ வைதேகியை நீ அவசரப் பட்டுட்டேன்னு சொல்லி சத்தம் போட்டேன்.”

பின்னால இரண்டு பேரும் விஜயனை பார்க்க கொடைக்கானல் போனோம். போனா அங்கேயும் அந்த கோஷ்டியோட கொட்டம் அடிச்சுகிட்டிருந்தான் வெறுத்துப்போனே. வைதேகி கன்னத்துல அறையவே செய்துட்டா.

கோபப்பட்ட விஜயன் அம்மான்னும் பார்க்காம குத்தறதுக்காக கத்தியோட பாய்ஞ்சு வந்தான். தடுக்க நினைச்ச போராட்டத்துல என் கையால நானே அவனை கொல்லும்படியாயிருச்சு! இதை அந்த கூட்டமும் பார்த் துட்டாங்க. அப்ப பார்த்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரேம்நாத் அங்க வரவும் நாங்க பதுங்கிட்டோம்.

போலீசும் வழக்கு விசாரணைன்னு போயிடுச்சு. அந்த கூட்டமோ நாங்க இதை வெளில சொல்ல மாட்டோம். சொல்லாம இருக்கணும்னா எங்க பேச்சை கேட்கணும்னு என்னையும், வைதேகியையும் மடக் கிட்டாங்க...”

"அப்படின்னா இப்ப நீங்க அவங்க பிடியில..."

"ஆமாம்...அவன் சொல்றபடி எல்லாம் கேட்க ணும்கறது கட்டளை. அவங்குதான் தேவாவுக்கு உன் மகளை கல்யாணம் செய்து கொடுக்கறேன்னு சொல்லி மிரட்டி..."-முடிக்காமல் அழத் தொடங்குகிறார் கைலாஷ்.

"தேவாவுக்கும் அந்த கூட்டத்துக்கும் என்ன சம் பந்தம்?"

"அவன் திடீர்னு மாறிட்டான். எப்படியோ அவங்க கூட்டத்துல ஒருத்தன் ஆயிட்டான். அதிர்ச்சியில பெரிய அதிர்ச்சி இது. எனக்கு எல்லாமே பயங்கர சர்ப்ரைஸ்..."

-கைலாஷ் சொல்லிவிட்டு படுக்கையில் விழு கிறார். நெடுநேரம் செல்வாவால் அதற்கு எந்த பதிலுமே சொல்ல முடியவில்லை. ஜன்னல் வழியாக பார்க்கிறான்.

"இதுக்கு முடிவுதான் என்ன?"

தெரியல!"

"நான் சொல்றேன்..."என்றபடி வைதேகி, உள்ளே வருகிறாள்.

"வைதேகி..."

"குற்றத்தை ஒத்துகிட்டு நான் ஜெயிலுக்குப் போறேன். நீங்க நல்லா இருங்க. இந்த நரக வேதனை போதும்..."-அழத் தொடங்குகிறாள்.

நோ...கூடாது. நான் போறேன் அதுதான் சரி..." கைலாஷ் இடைமறித்து கத்துகிறார்.

"இரண்டுபேரும் போக வேண்டாம். நான் வந்துட் டேன். பாத்துக்கறேன். அதுசரி தேவாவுக்கு கல்யாணம் கறது உறுதியா..."

"ஆமாம் அதை மாற்ற முடியாது..."

"அவனை உங்க மாப்பிள்ளையாக்கறதன் மூலம் மொத்த சொத்தையும் அடைய நினைக்கறாங்களோ?"

"இருக்கலாம். யார் கண்டது ..."

"சரி...அவங்க யார் ...உங்களுக்கு அடையாளம் தெரியுமா?"

"தர்மராஜ்னு ஒரு எமகாதகன், ஆனா அவனை பார்க்க முடியல. அவன் அடியாள் கூட்டம்தான் எல்லா காரியங்களையும் செய்யறாங்க."

"டோன்ட் ஒர்ரி அங்க்கிள்...நான் இருக்கேன்... தேவாவை நான் மீட் பண்றேன். என்ன நடக்குது ஏதுங் கறதை கண்டுபிடிக்கறேன். நிச்சயதார்த்தத்தை மட்டும் பேருக்கு வையுங்க. மிச்சத்தை பார்த்துக்கறேன்"

-கைலாஷ் சற்று மனபாரம் குறைந்தவராக எழுந்து நிற்கிறார்.

"செல்வா உன்னால முடியுமா?"கேட்கிறார்.

"முடிச்சுக்காட்றேன் அங்கிள்"அவன் சவால் விட அங்கு மேலும் ஒரு அதிர்ச்சி. பிருந்தா நுழைந்து கொண் டிருக்கிறாள். கண்கள் நிறைய கண்ணீர்.

"பிருந்தா நீ எங்கே இங்கே?"

"எல்லாம் கேட்டுதான் இருந்தேன்அப்பா. இப்ப தான் தெரியுது உங்க சம்மதத்தோட மர்மம்."-கண்களை கசக்குகிறாள்.

"பிருந்தா அனாவசியமா நீ அலட்டிக்காதே. நான் இருக்கேன்" செல்வா ஆறுதல் தருகிறான்:

"எப்படி அலட்டிக்கதே நான் இருக்கேன். செல் வந்தால் தருகிறேன்: எப்படி அலட்டிக்காம இருக்க

முடியும். தேவாவோட சந்தோஷமா வாழப்போறோம்னு நினைச்சேன். ஆனா அவர் மோசமான கூட்டத்த வர்ங்கறது எனக்கு தெரியாது. இப்ப நினைக்கிறேன். இவரையா காதலிச்சேன்னு. இந்த உலகத்துல எதை நம்பறதுன்னே தெரியலியே...'' அழுகிறாள். அதே சமயம் கீழே தேவா நுழைந்து கொண்டிருக்கிறான்!



# 79

**தே**வாவின் வருகை மேலே அனைவருக்கும் தெரிய வர கைலாஷ், செல்வாவுடன் கீழே வருகிறார். பிருந்தா வைதேகியுடன் கீழே வராமல் கண்ணீர் விழிகளுடன் மேலேயே தங்கிவிட....

"வாப்பா ..."-வரவேற்றபடி படி இறங்குகிறார் கைலாஷ். முறைத்தபடி கூட இறங்குகிறான் செல்வா.

"எங்க இவ்வளவு தூரம்?''

"சும்மா பார்த்துட்டு போகலாமுன்னு...''

"என்னையா-பிருந்தாவையா?''

"இரண்டு பேரையும்தான்...''

"இரு பிருந்தாவை கூப்பிட்றேன்...''சொல்லிவிட்டு மேலே பார்க்கிறார். தேவா நின்று கொண்டு இருக்கிறான். "பிருந்தா பிருந்தா''என்று கூப்பிட்டு விட்டு "உக்காருப்பா'' என்று தேவா பக்கமும் திரும்புகிறார். மேலே ஒரு பெரிய தர்க்கம் நிகழ்ந்த சுவடுகள் முகத்தில் பளிச்சென்று தெரிகிறது. தேவா அதைக் கொண்டு

ஏதோ நடந்திருக்கிறது என்று யூகிக்க செல்வா மேல் பார்வையை விட்டு "யார் இந்த புதுமுகம்?" என்று பார்க்கிறான்.

"தேவா இது செல்வா...என் ரிலேஷன்." அறிமுகம் செய்கிறார்.

கைகுலுக்க தேவா நீட்டுகிறான். செல்வா மறுப்பாக ஒரு சிரிப்பு மட்டும் சிரிக்கிறான். சிரித்தபடி "நான் ஃபேஸ் ரீடிங் தெரிஞ்சவன். எல்லோரோடையும் கை குலுக்க மாட்டேன்" என்கிறான். ஃபேஸ்ரீடிங்கா?"

"ஒருத்தரை பார்த்த மாத்தரத்துல அவங்களை பற்றி தெரிஞ்சுக்கிறது."

"ஐ.சீ...என்னைப்பத்தி என்ன தெரிஞ்சுக்கிட்டீங்க..."

"வேண்டாம் உண்மை சுடும்..."-செல்வாவின் பதில் தேவாவை நிமிர்த்தி அமர்த்துகிறது. பிருந்தா வருகிறாள். ஒரு மாதிரி பார்க்கிறாள். வந்ததும் வராமல் "எங்க வந்தீங்க?" என்று கேட்கிறாள். தேவாவுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அடக்கிக் கொள்கிறான்.

"என்ன கேள்வி இது பிருந்தா...உன்னைப் பார்க்கத் தான்..."

"பார்த்து என்ன பண்ணணும்?"

"பார்த்து என்ன பண்ணணுமா...உனக்கு உடம்பு கிடம்பு சரியில்லையா?"

"இப்பதான் நான் ரொம்ப நல்லா இருக்கேன்."

"பின்ன ஏன் இப்படி பேசற" பிருந்தா எதுவும் பேசாமல் முறைக்கிறாள். பின் மாடிக்கு திரும்ப ஏறு கிறாள். கைலாசம் இதனால் உளைந்து போகிறார்.

"சாரி தேவா...அவளுக்கு மனசே சரியில்லை..."

"அதான் நல்லா தெரியுதே, இவர் என்னடான்னா ஃபேஸ் ரீடிங் அது இதுங்கறார். பிருந்தாவோ வெடுக் வெடுக்குன்னு பேசறா. மொத்தத்துல நான்தான் உங்க பேச்சோட சப்ஜெக்டா இருந்துருக்கணும்."

"கரெக்ட் கொஞ்சம் புத்திசாலிதான் நீங்க..." என்று செல்வா அதற்கொரு பாராட்டு தெரிவிக்கிறான்.

"நீங்க எங்க வரைல ஒரு மூன்றாவது மனுஷன்-கொஞ்சம் சும்மா இருக்கீங்களா ..."

"நான் மூன்றாவது மனுஷன் இல்ல தேவா, நீங்க தான். நானாவது ஒரு தொழில் அதிபர். எம்.சி.ஏ. முடிச்சவன். இந்த குடும்பத்தோட பத்துவருஷமா பழகறவன். ஆனா நீங்க ஒரு சில மாதங்கள்ல அறிமுகமாகி காதல்ங்கற கலாட்டா பண்ணி அதெல்லாம் ஒர்க் அவுட்டாகாததால, பிளாக்மெயில் பண்ணி பிருந்தாவை கல்யாணம் செய்துக்க பார்க்கறீங்க. இல்லேன்னு சொல்ல முடியுமா?"

செல்வா எதை வைத்து இப்படி பேசுகிறான். புரியாமல் அவனை முறைக்கும் தேவா நகத்தை கடிக்கிறான். இந்த மோதலை குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி இருக்கும் ஒரு வேலைக்காரன் நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். தேவாவிடம் அடர்த்தியான மௌனம்.

"என்ன தேவா மௌனமாயிட்டீங்க...நான் கேட்டதுல என்ன தப்பு?" திரும்பவும் செல்வாவிடம் கிண்டல்.

"எல்லாமே தப்பு..."

"எப்படி?"

"பிருந்தாவும் நானும் காதலிக்கிறது நிஜம். ஆனா அதுக்காக நான் எந்த குறுக்கு வழியிலேயும் போகலை.

போகவும் மாட்டேன். பிருந்தாவுக்கு துளியும் சளைக்காத லேகா இந்த நிமிஷம் நான் கல்யாணம் பண்ண மாட்டே னான்னு ஏங்கிகிட்டு இருக்கா. பணம் அந்தஸ்து வேணும்னா நான் அவளுக்கு தலையாட்டி இருப்பேனே... எதுக்காக பிருந்தாவை நினைக்கணும்.

"எங்கேயும் தப்பு நடந்துருக்கு. அதுதான் உங்களை இப்படி பேச வைக்குது..."

எங்கேயும் தப்பு நடக்கலை முதல்ல பிருந்தா பிறகு

லேகான்னு கூட நீங்க திட்டமிட்டிருக்கலாம்."

"இது அபத்தமான குற்றச்சாட்டு இந்த கல்யாண விஷயத்துல நீங்கதான் பல்டி அடிச்சீங்க. திடீர்னு கல் யாணம் பண்ணித்தரேன்னு சொல்லி என்னை வந்து பார்த்தீங்க. ஜாமின்லையும் வெளியே எடுத்தீங்க. அப்பவே நான் சந்தேகப்பட்டேன். இப்பதான் புரியுது. என்னை இப்படி கூப்பிட்டு ஆசை காட்டி ஏமாத்தத் தான். அதுன்னு..."

கைலாஷ் உடனே குறுக்கில் நுழைகிறார்.

"செல்வா ப்ளீஸ் கீப்கொய்ட். தேவா வெரி சாரி. நீ நினைக்கிற மாதிரி இல்ல. நான் மனசாரதான் சம்மதிச் சேன். நீ தப்பா எடுத்துக்காதே. செல்வாவுக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்." கைலாஷ் தேவாவின் காலில் பொத்தென்று விழுகிறார். அதை பார்த்துவிட்டு வைதேகி ஓடிவருகிறாள்.

"என்னங்க வேண்டாம். நீங்க விழக்கூடாது நில்லுங்க."கத்துகிறாள். தேவா சிலிர்த்து எழுந்து கொள் கிறான்.

"சார் நீங்களா கால்ல விழுந்தீங்க?" நம்ப முடி யாமல் கேட்கிறான். கைலாஷ் கையும் காலும் நடுங்க அவனை பார்க்கிறார்.

"என்னால நம்ப முடியல சார்... நீங்கதான் எவ்வளவு மாறிட்டீங்க. உங்களை பார்க்கணும்னாலே அப்பாய்ன்ட்மெண்ட் வாங்கணுமே...இன்னிக்கும் எங்கப்பாவுக்கு நீங்க முதலாளிதானே?

எங்க போச்சு சார் உங்களோட அந்த டிகினிடி? எங்க போச்சு அந்த மிடுக்கு...? எதுக்காக இப்படி கால்ல விழறீங்க? நான் ரொம்ப சாதாரணமானவன் சொல்லப் போனா ஒரு குற்றவாளி..."

தேவா நெகிழ்ந்து பேசுவது எல்லோரையுமே ஆச்சரியப்படுத்துகிறது. ஆனால் செல்வா மட்டும் நம்பாமல் கத்துகிறான். "ஏதோ குற்றவாளின்னு ஒத்துக்கற நேர்மையாவது இருக்கே...ரொம்ப சந்தோஷம் இப்படி ஒத்துக்கறதுல இருக்கற நேர்மை கல்யாணம் செய்துக்க ஆசைப்படறதுலேயும் இருக்கணும்."

"என்ன சொல்றீங்க செல்வா?"

"என்ன சொல்றேனா... நேரா கேட்டா எங்க அங்க்கிள் சம்மதிக்கமாட்டார்ன்னு அந்த கள்ள நோட்டு தர்மராஜ் மூலமாக மிரட்டில எங்க மாமாவை சம்மதிக்க வெச்சுருக்கீங்க?"

"என்னது... தர்மராஜ் மூலமாக சம்மதிக்க வெச்சேனா...? அவன் என் பரம விரோதி...இவருக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்னு தெரிஞ்சிக்கத்தான் நான் வந்திருக்கேன். ஆனா நீங்க அந்த தர்மராஜ் என்னமோ என்னோட பாக்கெட்ல இருக்கிறமாதிரி பேச நீங்களே...?"

தேவாவின் பதில் கிட்டதட்ட இருதரப்பும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள ஆயத்தப்பட்டுவிட்டதை உணர்த்த அந்த ஒட்டுக் கேட்கும் வேலைக்காரன் மள

மளவென்று வெளியேறுகிறான். பார்த்துவிடுகிறான் தேவா!



# 80

அவன் வெளியேறுவதை பார்த்து ஒரே பாய்ச்சல்! அவன் எதிரில் போய் ஒரு தினுசாக சிரிக்க அவன் முகத்தில் கலவரம்.

"எங்க நைனா கிளம்பிட்டே?"

"அது...அது...கடைவரை போகலாம்னு"

"எந்த கடைவரைக்கும்...?"

"அது...அது..."-தேவா கரம் அவன் சட்டை காலரை பற்றுகிறது. தரதரவென்று பிடித்து இழுத்து வருகிறது.

"சார் இவன் யார்-இவனுக்கு இங்க என்ன வேலை."-தேவா கைலாசத்தைத் பார்த்து கேட்க கைலாஷும் "இவன் இந்த வீட்ல இருக்கிற பல வேலைக்காரங்கள்ல ஒருத்தன்...."-என்று சொல்ல,

"இவன் உங்களுக்கு மட்டும் வேலைக்காரன் இல்ல... அந்த தர்மராஜுக்கும் வேலைக்காரன்"-என்று அவன் சட்டையை கசக்க எல்லாரும் அதிர்கின்றனர்.

"நாம பேசறதை எல்லாம் ஒட்டு கேட்டுக்கிட்டிருந்தான். இவனை கவனிச்சுகிட்டேதான் நான் பேசினேன். இவனை அப்புறம் கவனிக்கலாம். முதல்ல இவனை கட்டிப்போடுங்க..."- என்று அவனை ஒரு அறையில் கட்டிப்போட்டு வெளியே வருபவன் அவர்கள் முன் ஆழமாய் ஒரு பார்வை பார்க்கிறான்.

"ஒரு உண்மை நல்லா தெரியுது... நீங்களும் அந்த தர்மராஜ் கையாள் இல்ல நானும் இல்ல. ஆனா நமக்கு இடைல அவன் சாமர்த்தியமா சில விளையாட்டு விளையாட விரும்புகிறான்னு தெரியுது..."

-தேவாவின் கருத்தை கைலாசமும் ஏற்றுக் கொள்கிறார். இருந்தும் கேட்கிறார். "தேவா....நீ அவன் கையாள் இல்லேன்னா எதுக்காக பார்த்துக்கிட்டிருந்த வேலைய விட்டே...போதை மருந்து கடத்தினே... மாட்டிக்கிட்டும் காட்டிக்கொடுக்காம இருந்தே?"

-தேவா அதற்கு பதில் சொல்லாமல் கைலாஷை மடக்குகிறான். "என்னை நீங்க கேட்ட கேள்விக்கு நான் பிறகு பதில் தரேன். எனக்கு நீங்க சொல்லுங்க. உங்களுக்கு எப்படி அந்த தர்மராஜை தெரியும், நீங்க எதுக்கு அவனுக்கு பயப்படறீங்க?"

-தேவாவின் மடக்கல் முன் கைலாஷ் மூச்சுத் திணறுகிறார்.

"அது...அது..."

செல்வா குறுக்கில் புகுந்து கத்துகிறான்.

"அங்கிள்...அவசரப்பட்டு அதை சொல்லிடாதீங்க. இவன் நடிச்சாலும் நடிக்கலாம்..."

-செல்வாவின் பதில் தேவாவை சிரிக்கச் செய்கிறது.

"இப்படி சிரிச்சாலும் நான் உன்னை நம்ப மாட்டேன்..."

"வேண்டாம்...நம்ப வேண்டாம். நான் வரேன். எப்ப நம்பிக்கை வருதோ அப்ப பேசுங்க. அதுவரை கல்யாணமும் வேண்டாம், கல்யாணம்கறது மனசு விரும்பி நடக்கற விஷயம். இப்படி கசமுசான்னு பேசி பண்ற விஷயம் இல்ல..."

-வைதேகி அதை கேட்டு இடை நறுக்குகிறாள்.

"இப்படி இரண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் சந்தேகப்பட்டா எப்படி? யாராவது ஒருத்தர் முதல்ல மனசுவிட்டு பேசுங்க. உண்மையை சொல்லுங்க... அப்பதான் எதிரியை நாம் ஜெயிக்க முடியும்..."

"சும்மா இருங்க ஆன்ட்டி நீங்க...இவனுக்கு என்ன வீம்பு, பிருந்தா வேணும்னா சொல்லட்டுமே இவன்..." செல்வா விடுவதாக இல்லை.

"சரி சொல்றேன்."-தேவாவிடம் வெடுக்கென்று பதில். எல்லாரும் அவன் சொல்லப்போவதை காது கொடுத்து கேட்க தயாராக பிருந்தாவும் இறங்கி வருகிறாள்.

இவர்களிடம் உண்மையை சொல்லிவிடக்கூடாது என்கிற எச்சரிக்கையோடு பேச்சை ஆரம்பிக்கிறான். ஒரு பொய்யான காரணத்தைதான் கண்டுபிடித்து சொல்ல வேண்டும்... எதைச் சொல்லலாம்...? சில வினாடிதான் சிந்தனை உடனேயே அருவியாக பெருக்கெடுக்க ஆரம்பிக்கிறது அவன் கற்பனை.

"ராமானந்தத்தை கொலை செய்துட்ட தர்மராஜ் அடுத்த குறியா என்னை தேர்ந்தெடுத்தான். அவன் நினைச்சமாதிரியே என்னையும் வளைச்சுட்டான். நானும் இன்னியோட தீர்ந்தேன்னுதான் நினைச்சேன். ஆனா அவன் புத்திசாலி...உன்னை கொல்லாம கொல்லணும் அதுதான் எனக்கு தேவை. நான் சொல்றபடி எல்லாம் நீ கேட்கணும் இல்லேன்னா உன் இரண்டு அக்காளையும் பரலோகம் அனுப்பிடுவேன்னான். இதுக்குமேல என்னால பயப்படாம இருக்கமுடியல. அதான் வலைல விழுந்தேன். அவன் சொன்னபடி

எல்லாம் கேட்க ஆரம்பிச்சேன். போதை மருந்து கடத்தினேன். அதுல நான் காட்டிக் கொடுக்கறேனா? இல்லையான்னு எனக்கு பரிட்சை வச்சான். அதுல பாஸ் பண்ணலைன்னா என் சகோதரிகள் கதி அதோகதிதான். அதனாலதான் பல்லை கடிச்சுகிட்டு எதுவும் சொல்லாம இருந்தேன். அப்பதான் நான் கொஞ்சமும் எதிர் பார்க்காத விதமா நீங்க வந்து முத்துப்பாண்டியை உள்ள தள்ளி என்னவெளிய கொண்டுவந்தீங்க. எனக்கு ஒரே ஆச்சரியம். சரி, நீங்கதான் தர்மராஜோன்னு கூட நான் நினைச்சேன்."

-தேவா சொல்லி முடிக்கிறான். அனைவரும் நம்பி விட்டமாதிரிதான் தெரிகிறது. எதுவும் பேசாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றனர் பிருந்தாவும் கிட்டே வந்து தேவா அருகில் இழைவாக நின்று 'சாரி' என் கிறாள். தேவா, அப்பாடா என்ற பெருமூச்சோடு கைலாஷை பார்த்து கேட்கிறான்.

"நான் சொல்லிட்டேன்...நீங்க...?" அவன் வளைப் பில் இப்பொழுது அவர் திணற 'பிருந்தா' அவனை முழு நம்பிக்கையோடு பார்த்து சொல்லத் தொடங்குகிறாள்.

## 81



**பி**ருந்தா பேச ஆரம்பிக்கவும் செல்வா குறுக்கிடு கிறான்.

பிருந்தா வேண்டாம்...நீ சொல்லாதே-நான் சொல் கிறேன்."

-அவன் குறுக்கீட்டை ஒரு வகை புன்னகையோடு தேவா கவனிக்கிறான்.

"என்ன தேவா கவனிக்கிறே...நான் சொல்லக் கூடாதா?"

"தாராளமா...யார் சொன்னா என்ன...ஆனா உண்மையைச் சொல்லணும்..."

"அப்படின்னா நான் பொய் சொல்வேன்கறது உங்க எண்ணமா?"

"இல்லேன்னா எதுக்கு பிருந்தாவை சொல்ல வேண்டாம்னு சொல்லணும். யார் சொன்னா என்ன..."

"கரெக்ட் தேவா... நானே சொல்றேன்..."

-பிருந்தா துள்ளி எழுகிறாள். கைலாஷ் முகமும், வைதேகி முகமும் அஷ்டகோணலாகிறது.

"ஆனா ஒண்ணு..."

-பிருந்தாவிடம் பீடிகை.

"என்ன?"

"நான் சொன்னபிறகு என் விருப்ப்ப்படிதான் நீங்க நடக்கணும்"

"உன் விருப்பப்படின்னா?"

"அதை சொன்ன பிறகு சொல்றேனேண..."

"சரி சொல்லு..."

-பிருந்தா சொல்ல ஆரம்பிக்கிறாள். கைலாஷ் தேவாவிடம் சொன்னதை அப்படியே ஒப்பிக்கிறாள். கைலாஷ் நிறைய வியர்த்திருக்கிறார். இதுநாள் வரை அவர் பெரிய தொழிலதிபர். ஆனால் இன்றோ ஒரு கொலைகாரரும் கூட....அதிலும் கூட பெற்ற மகனையே கொன்றவர்.

தேவா முகத்தில் பலமான அதிர்ச்சி. நெடுநேரம் அவனிடம் பேச்சே இல்லை. அவன் நினைத்ததற்கு நேர் மாறாக அல்லவா கைலாஷ் இருக்கிறார்.?

"என்ன தேவா-ஏதாவது பேசுங்க...?"

-பிருந்தா அவனை உசுப்ப செல்வா சற்று கோப மாய் பேச ஆரம்பிக்கிறான்.

"அவசரப்பட்டுட்டே பிருந்தா...தேவாகிட்ட எதை சொல்லணுமோ அதை மட்டும் சொல்லாம அப்பா கொலைகாரர்னும் போட்டு உடைச்சுட்டே. உன் காத லுக்கு கண்ணே இல்லை..."

தேவா சிரிக்கிறான்.

"எதுக்கு சிரிக்கிறே...நான் சொன்னதுல என்ன தப்பு?"

"என்ன தப்பா...மூணாம் நபர் உனக்கு தெரிஞ் சிருக்கலாம். நான் இந்த வீட்டு மாப்ளையா போறவன். எனக்கு தெரியறத தப்புன்னு சொன்னே பார் அதுக்காக சிரிச்சேன்."

"நான் மூணாவது நபர் இல்ல தேவா...இந்த குடும் பத்துல ஒருத்தன். என் அங்கிளுக்காக ஜெயிலுக்கு கூட போவேன்...ஆனா நீ போவியா...?"

"அது அவசியத்த பொருத்து...சில உண்மைகள் தெரிய அதை கண்டுபிடிக்க நான் ஏற்கனவே போனவன். அது உங்களுக்கு தெரியாது..."

இருவரும் விட்டால் கட்டி உருளுவார்கள் போல இருக்கிறது. வைதேகி குறுக்கே புகுகிறாள்.

"இரண்டு பேரும் வாக்கு வாதம் செய்தது போதும். இவரை காப்பாத்தறது எப்படின்னு யோசிங்களேன்."

"ஆமாம் தேவா...அந்த தர்மராஜ் பிடியில் இருந்து விடுபடணும். அவனையும் கண்டுபிடிக்கணும். நான் உன்

வரைல இனி ஏழை பணக்காரன் வித்யாசமெல்லாம் பாக்கலை. மூளைதான் பெரிய செல்வம். அதை நான் ஒத்துக்கறேன்...”

-கைலாஷ் சற்று கலங்கிப் போய் கெஞ்சுவது போல பேசுகிறார்.

மீண்டும் துளி அமைதி. தேவாவிடம் தீவிர சிந்தனை, அதன்பின் கேள்வி.

“சார்...விஜயனை நீங்க கொன்னதா சொன்னீங்களே எப்படி?”

-கைலாஷ் அந்த கேள்விக்கு திணறித் திணறி பதில் சொல்ல ஆரம்பிக்கிறார்

“அது வந்து...அவன் வைதேகியை கோபமா குத்த வந்தான். நான் பாஞ்சு தடுத்தேன். அவன் கையை பிடிச்சேன். கத்தி கீழே விழுந்தது...அவன் என்னை தள்ளி விட்டுட்டு கத்தியை எடுத்துக்கிட்டு திரும்ப என்னை குத்த வந்தான். திரும்பவும் தள்ளிவிட்டு அவன் கழுத்தை இறுக்கி பிடிச்சேன். மூச்சு திணறினான். கத்தியை கைப் பிடில இருந்து விட்டுடுவான்னு நினைச்சேன். அவன் சகாக்கள் இப்ப என்னை பிடிச்சு இழுத்தாங்க. இழுத்து வெளியே தள்ளினாங்க. நான் தடுமாறி திரும்ப உள்ளே வந்தேன். வைதேகி மயக்கமாயிட்டா. அதே சமயத்துல நான் கழுத்த நெரிச்சதால விஜயன் கீழே விழுந்து உயிரை விட்டுட்டான்.

எல்லாரும் என்னை உடனே பிளாக்மெயில் பண்ண ஆரம்பிச்சாட்டாங்க...”

“அப்படின்னா...நீங்க கழுத்ததான் நெரிச்சீங்க... வேற எதுவும் செய்யல...இல்லியா?”

“ஆமா...”

"நல்லா யோசிச்சு சொல்லுங்க..."

"சத்யமா...நடந்தது எதுவோ அதை சொல்லிட்டேன்."

"அப்படின்னா நீங்க கொலை செய்யலை... அது தெரியுமா உங்களுக்கு?" தேவா திடீரென்று இன்ப அதிர்ச்சி அளிக்கிறான்.

"என்னது நான் கொலை செய்யலையா...என்ன சொல்ற நீ"

"ஆமாம்...விஜயன் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என்னன்னு தெரியுமா உங்களுக்கு...உங்ககிட்டையும் கையெழுத்து வாங்கியிருப்பாங்களே..."

"போட்டேன்...ஆனா பயத்துல இருந்ததால அதை சரியா படிக்கல."

"விஜயன் உடம்புல கத்திகுத்துகள் இருந்துருக்கு. அதுமட்டுமில்ல. மூச்சுக்குழல் வெடிக்கல. மார்புல பலத்த அடி பட்டதுல மார்பெலும்பும் உடைஞ்சிருக்கு மரணத்துக்கு மேஜர் ரீசனும் அதுதான்."

"நிஜமாவா?"...கைலாஷ் காற்றுபோன பலூனைப் போல லேசாகிறார்.

"உண்மையும் அதுதான். அவங்க கொலை செய்துட்டு பழி உங்கமேல வர சாமர்த்யமா செயல்பட்டிருக்காங்க. அதன்மூலமா உங்களைய வளைச்சுட்டாங்க."

-வைதேகியும் பிருந்தாவும் தேவாவின் விளக்கத்தினால் நெகிழ்ந்து கண்ணீர் விட செல்வா எழுந்து வந்து கட்டியே கொள்கிறான்.

வெளியே இப்படி ஒற்றுமைச் சங்கமிப்பு உருவாகும் இந்த சமத்தில் உள்ளே கட்டப்பட்டிருக்கும்

வேலைக்காரனின் கட்டுகளும் அவனாலேயே அவிழ்க்கப்பட்டு விட...



# 82

**அ**றைக்குள் விடுதலை கிடைக்கப் பெறுபவன் ஒரு வினாடி அதுவரை கைக்கட்டுகளோடு போராடியதற்கான களைப்போடு ஒரு சில விநாடிகள் அப்படியே நடுங்கி அமர்கிறான். பின் நிமிர்ந்து தப்பிக்கும் வழியைப் பார்க்க நாலாபுறமும் பார்வையை விடுகிறான்.

அறைக்குள் ஜன்னலோ சாளரமோ எதுவும் இல்லை. பூட்டியடைக்கப்பட்ட கதவுதான் திறந்து கொண்டு தப்பிக்க ஒரே வழி.

என்ன செய்யலாம்?

கதவை நெருங்குபவன் காதில் கதவுக்கு அப்பால் கைலாஷ், தேவா, செல்வா என்று அனைவரும் பேசும் பேச்சுக்குரல் காதில் விழுகிறது. அதுவும் தன்னைப் பற்றியே அவர்கள் பேசுவது கேட்டு அவனிடம் பதைப்பு கூடுகிறது.

“அங்கிள் உள்ள கட்டிப்போட்டிருக்கிற அந்த நாயை நாலு வெளுவெளுத்தா தர்மராஜ் யார்னு தெரிஞ்சிடாதா?”

“அவனுக்கு தெரிஞ்சிருக்கும்னு நினைக்க வாய்ப்பே இல்லை. தர்மராஜோட உலகம் ரொம்பப் பெரிசு. அவன் தன்னை யார்னே காட்டிக்காம தனக்கு நம்பிக்கையான வெகு சிலர் மூலமாதான் தன் திட்டங்களை நிறைவேத்திக்கறான்.

இவனுக்கு தர்மராஜை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இவனைத் தொட்டு இவனுக்கு அடுத்தவனை, அவனை தொட்டு அவனுக்கு அடுத்தவனைன்னு போனா ஒருவேளை தர்மராஜ் அகப்படலாம்...”

-கைலாஷ் விளக்கமாக சொல்வது காதில் விழுகிறது. உள்ளிருப்பவன் முகம் வெளிறிப்போகிறது.

“எமகாதகங்களா...தர்மராஜ் முதலாளிய தூக்கிச் சாப்பிடுவீங்க போல தெரியுதே. முணுமுணுப்போடு தப்பிக்கும் வழி பார்க்க கதவு வெளியே திறக்கப்படும் சப்தம், அவனிடமும் அபரிமிதமான பதற்றம் நடுக்கம். அப்படியே ஒரு ஓரமாக கதவை ஒட்டி ஒளிபவன் கதவு திறக்கப்பட்டு அவர்கள் நுழைந்த விநாடியில் திறந்து கொண்ட கதவின் வழியாக ஒரே பாயாக பாய்ந்து ஓட, ஆரம்பிக்கிறான்.

“தேவா ஹி எஸ்கேப்ட்டு...”

-செல்வா அலற தேவா அடுத்தநொடி அம்பாக சீறித் திரும்ப அவன் தரையில் விழுந்து எழுந்து வாசலைத் தாண்ட,

“கமான்...”

-தேவா செல்வாவையும் துணைக்கு அழைக்க இப்பொழுது இருவரும் வேங்கையாக கருதி அவனைத் துரத்த அவன் வீதியில்...

மதுரை நகர் வீதிகள் அகன்றும் அழகாயும் இருந்ததெல்லாம் சரித்திர காலத்தில். இன்று அது குறுகி ஆக்ரமிப்புகளால் திணறிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் வாகனங்கள். அவற்றை குடைந்து ஓடிக் கொண்டிருக்கிறான் அவன். சளைக்கவில்லை தேவாவும் கிட்டத்தட்ட இருபது அடிதான் இடைவெளி...

போவோர், வருவோர் வேடிக்கை பார்க்க சில டி.வி.எஸ்.50-கள் ஓரங்கட்டி உருண்டு விழ ஓடும் அந்த

நபரின் எதிரில் இப்பொழுது ஒரு அரக்கனைப்போல் செங்கல் லாரி ஒன்று.

கண்ணிமைப்போதில் அதன் நடுப்பாகத்தில் மோதிச் சமாளிப்பவனை தூக்கி எறிகிறது லாரி. தேவாவும் செல்வாவும் அப்படியே நடுங்கி ஓரம் கட்டுகின்றனர்.

எறியப்பட்டு விழுந்தவன் சில நிமிடம் துடித்து விட்டு ஜீவனைவிட கூட்டமும் கூட தேவா எட்டிப் பார்க்கிறான். உயிர் போய்விட்டது உத்தரவாதமாக தெரியவருகிறது.

"சார் நீங்கதானே துரத்துனது?"

-கூட்டத்தில் ஒருவன் கச்சிதமாக கேட்க...தேவா,

"இல்லை நாங்க இல்லை."

-என்றபடி நைசாக நழுவ தொடங்க...

❑ ❑ ❑

**ஹா**லில் அனைவருமே கவலையோடு, ஆனால் கைலாஷ் முன்போல சோர்ந்திராமல் சற்று பிரகாசமாக இருக்கிறார்.

"சரி விடுங்க...தப்பிக்க ஓடினவன் உண்மையை சொல்லாம செத்துத்தானே போனான். இதுக்காக கவலைப்பட்டா எப்படி?"

-வைதேகி புரியாமல் கேள்வி கேட்கிறாள்.

"அவன் செத்து தொலைச்சதுலதான் இப்ப சிக்கலே?"

-தேவாவிடம் மின்னல் வேகத்தில் பதில்.

"எப்படி?"

"அவன் எப்படி செத்தான்...ஏன் ஓடினான். யார் துரத்தினதுன்னு போலீஸ் கேட்டாகூட பதில் சொல்ல லாம். ஆனா தர்மராஜ் கேப்பானே. நம்மை சந்தேகப்பட தொடங்குவானே..."

"ஆமாம்ல..."

"அதுல இருந்து தப்பிக்கணும் முதல்ல..."

"அதுக்கு என்ன செய்யலாம்?"

-பிருந்தா மிகவும் கவலையோட கேட்க...

"ஐடியா..."

-என்று கையை சுண்டும் தேவா அதைச் சொல்ல வும் அனைவர் முகத்திலும் பிரகாசம்!

"சபாஷ் தேவா...அதுதான் சரி, போலீஸ்ல தர்ம ராஜை காட்டிக்கொடுக்க அவன் போனான். அவன் ஒரு போலீஸ் ஆள்னு அலிபி செட் பண்ணிட்டா. அதை தடுக்க நாம போனோம். நடுவுல இப்படி ஆயிடுச்சுன்னு வந்துடும். அது சரி அவன் போலீஸ் ஆள்னு போலீஸ் சொல்லுமா?"

"சொல்ல வைக்கிறேன் அது என் வேலை..."

"எப்படி?"

"அது அப்படித்தான்..."

-கண்சிமிட்டுபவனை பிருந்தா புரிந்தது போல பார்த்து கேட்கிறாள்.

"தேவா...உண்மையை சொல்லுங்க. நீங்க போலீஸ் ரெப்சன்டேடிவ்தானே?"

அரைமனதாய் தலையை அசைப்பவனைப் பார்த்து நெருங்கி வந்து கட்டிக் கொள்கிறார் கைலாஷ்.

"தேவா...ரியலி ஐஆம் பிரவுட் ஆஃப் யூ. என் பிசினஸ்ல நான் காட்டுன கிளவர் மூவ் எல்லாம் உன் முன்னால அடிப்பட்டுப் போச்சு. ரியலி ஒண்டர்."

எல்லாருக்குமே பெருமையாகத்தான் இருக்கிறது. தேவா அதை எல்லாம் பொருட்படுத்தாமல் தலை குனிந்து கொள்ள,

"ஹாய் தேவா" என்றொரு பெண் குரல். வந்த திக்கை நோக்கினால் அங்கே லேகா!



# 83

**லே**காவின் வருகை தேவாவுக்கு திகைப்பைத் தருகிறது. அது அவன் முகத்தில் தெரிகிறது. பேச்சிலும் எதிரொலிக்கிறது.

"லேகா நீயா...நீ எப்படி இங்க?"

"உங்க வீட்டுக்கு போயிருந்தேன். அவங்கதான் நீங்க இங்க வந்திருக்கிறதா சொன்னாங்க. அதான் கிளம்பி வந்தேன்."

"இது யார் வீடுன்னு தெரிஞ்சுமா வந்தே?"

"எனக்கு இது யார் வீடுங்கறது விஷயமே இல்லை. தேவா நீங்க எங்க இருக்கீங்கறதுதான் முக்கியம்."

-பேச்சுக்கு பேச்சு பதில் வளருகிறது. பிருந்தா அதைக் கேட்டு கலங்கிப் போகிறாள்.

"சரி கிளம்பு. என்ன...விஷயம்...?" தேவா கிளம்பிய படி கேட்கிறான். "சார் போய்ட்டு வந்துட்றேன்." என்று போகிற போக்கில் சொல்லவும் செய்கிறான். லேகா

அவனை பின் தொடர்கிறாள். வெளியில் கார் நின்று கொண்டிருக்கிறது. அவன் அவளுடன் செல்வதைப் பார்த்து உள்ளே பிருந்தா கலங்கிப் போக அறுதலாய் பேசுகிறாள் வைதேகி.

"கவலைப்படாதே பிருந்தா... தேவா கூட முன்னேயே சொல்லையா? அந்த பொண்ணு தான் அவன் மேல விழுந்து பழகறா. தேவா அப்படி இல்லை..."

நடுவில் பெருமூச்சோடு எழுந்திருக்கிறான் செல்வா...

"என்ன செல்வா...எங்க கிளம்பிட்டே?"

"வரேன் அங்கிள். நிறைய வேலை இருக்கு கிளம்பணும்."

"என்னப்பா இது...இப்பதான் சொன்னே எனக்காக உயிரையும் கொடுப்பேன்னு இப்ப ஊருக்கு கிளம்பறேங்கற..."

"சாரி அங்கிள். நான் இனி உங்களுக்கு தேவையே இல்லை. எனக்கு பதிலாதான் தேவா இருக்கானே..." செல்வா பேசுவது எதார்த்தமா இல்லை மனப் பொறுமலா என்று தெரியவில்லை.

வைதேகி அவனுக்கு ஆறுதலாக பதில் தருகிறாள்.

"தம்பி...இன்னார்க்கு இன்னார்னு நாம முடிவு செய்யறது கிடையாது. அந்த ஆண்டவன்தான் முடிவு செய்யறான். அந்த முடிவை நாம ஏத்துக்கறதுதான் நல்லது. மனசை தேத்திக்குங்க. இப்ப ஊருக்கு போகிற கோலத்தை விட்டுட்டு இங்கையே இருந்து இவருக்கு உதவியா இருக்க பாருங்க." அரை மனதாக அதை அங்கீகரிக்கிறான்.

❑ ❑ ❑

ராஜாஜி பார்க்!

ஓரம்கட்டி நிற்கிறது லேகாவின் கார்.

உள்ளே உரசியபடி லேகா. அது தேவாவை என்னவோ செய்கிறது. நகர்ந்து அமருகிறான். "நான் உங்கமேல ரொம்ப கோபமா இருக்கேன்." என்று அவன் பக்கம் திரும்பி அவன் முகத்தையே பார்க்கிறாள். அவன் வேறு பக்கம் பார்க்கிறான்.

"ஆமா உங்களுக்கு என்ன வந்துச்சு?"

"......"

"கேக்கறேன்ல."

"என்ன வந்துச்சுன்னா?"

"நல்லாதானே இருந்தீங்க பெரிய ஹீரோன்னு நினைச்சேன். இப்படியா ஜீரோ மாதிரி நடந்துப்பீங்க. குடி, போதை மருந்துன்னு நீங்க மாறினதுக்கு ஏதோ காரணம் இருக்கு தப்பு செய்யற ஆள் கிடையாது நீங்க."

"அப்படின்னா?"

"நடிக்கறீங்க..."

"சரி இப்ப அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா? ஏன் இப்படி நடந்துக்கணும். எல்லாரும் நல்ல பேர் எடுக்கத்தான் நினைப்பாங்க. உங்கள மாதிரி இல்ல..."

"சரி நான்தான் கெட்டுப் போயிட்டேன் இல்ல நடிக்கறேன்.என்னை எதுக்கு இன்னும் விடமாட்டேங்கறே நீ?"

"அப்ப நான் விடணுமா அதுக்குதான் இப்படி நடந்துக்கிறீங்களா?"

"நீ சொன்னதுக்காக சொன்னேன்."

"என்னால விட முடியாது தேவா. காதல்னா என்னன்னு நினைச்சீங்க சட்டை கிழிஞ்சா தூக்கி எறியலாம். ஆனா காதல் கிழிஞ்சா அப்படியெல்லாம் எறிய முடியாது.

"இந்த மாதிரி பேச்செல்லாம் சினிமாவுக்கு எடுப்பா இருக்கும். வாழ்க்கைக்கு ஒத்துவராது. நம்ம கடைய குறிவெச்ச கள்ள நோட்டு கும்பல் இப்ப என்ன குறி வெச்சுருக்காங்க. நான் இப்ப அவங்க பிடியிலே. அதனாலதான் நான் கடை வேலைய கூட விட்டேன். என்னால கடைக்கு கெட்ட பேர் வரவேண்டாம். என் கூட பழகறதால உனக்கும் வரவாய்ப்பு இருக்கு. வேண்டாம் லேகா விலகியே இரு...அதுதான் எல்லார்க்கும் நல்லது?"

மிக பக்குவமாக நான் உன்னை காதலிக்கவில்லை என்று சொல்லிப் பார்க்கிறான். அது லேகாவுக்கு புரியவில்லை.

"நோ தேவா...உங்களுக்கு ஒரு கஷ்டம் வந்தா அது எனக்கும்தான். சந்தோஷப்படும்போது மட்டும் தேடி வர்றவ நல்ல காதலி கிடையாது."

தேவாவுக்கு பெரிய சங்கடத்தை தன் பேச்சால் தருகிறாள். மேலும் அவனை பேச விடாமல் அவளே பேசுகிறாள்.

"தேவா... எது வந்தாலும் சரி. நான் உங்க கூட துணைக்கு இருக்கேன். கவலைப்படாதீங்க. அப்பா கூட உங்கள மறந்துடச் சொன்னார்! அந்த கள்ள நோட்டுக் கும்பல் கைலாசத்தோட மகளைத்தான் நீங்க கல்யாணம் பண்ணிக்கணும்னு உத்தரவு போட்டுருக்கு ஆகையால நீ மறந்துதான் தீரணும் இல்லேன்னா அது தேவாவுக்குத்தான் ஆபத்தா முடியும்னு சொன்னார். உண்மையா

தேவா?" சின்னக்குழந்தை போல கேட்கிறாள். தேவா அவளை முதல் முறையாக மிகுந்த பரிதவிப்போடு பார்க்கிறான். மௌனத்திலேயே ஆமோதிப்பை தரு கிறான்.

"அது உண்மையா இருந்தாலும் நான் ஒத்துழைக்க மாட்டேன்." என்று குண்டை தூக்கிப்போடுகிறாள்.



# 84

**லே**காவின் அந்த திடமான முடிவும்-மன உறுதி யும் தேவாவை புரட்டி எடுக்கிறது. "இந்த பெண்ணை எப்படி சமாளிப்பது?" கலக்கம் பரவுகிறது.

"என்ன தேவா பேசமாட்டேங்கறே. வாயத்திறந்து பேசு. என் அப்பாவை கூட ஜாமின்ல எடுக்கவிடாம கைலாசம் சார் மூலமாக சாமர்த்யமா வெளியே வந் திருக்கே. இதை எப்படி ஒத்துக்கிட்டே.....?"

-தேவா வாயையே திறக்கவிடாதபடி கேள்விகளாக அடுக்கிக்கொண்டே போகிறாள் லேகா. அவனுக்கு தனியாக எங்காவது ஒதுங்கி அழலாமா என்று கூட தோன்றுகிறது.

"பேசு தேவா...இப்படி பேசாம இருந்தா எப்படி? ஆமா இப்ப எதுக்கு அந்த கைலாஷ் வீட்டுக்கு போனே? அவர் வரச் சொன்னாரா?"

"ஆமாம்!"

"முடியாதுய்யா...முடிஞ்சத பார்த்துக்கோன்னு சொல்ல வேண்டியதுதானே?"

“ஏன் சொல்லணும், எதுக்கு சொல்லணும்.”

“அப்ப...அந்த பிருந்தாவை கல்யாணம் செய்துக் கறதுன்னு முடிவு செய்துட்டியா? இந்த கட்டாய கல்யாணத்துக்கு நீ சம்மதம் தர்ரியா?”

“கொஞ்சம் என்னை நிம்மதியா இருக்க விட்றியா? வெண்கலக் கடைக்குள்ளே யானை புகுந்தமாதிரி பேசிக் கிட்டே போறீயே...”தன்னையும் மீறி சுய நிலை இழக் கிறான். அவள் முகம் வெளிற ஆரம்பிக்கிறது.

“தேவா...தேவா...நான் உன் நல்லதுக்கு பேசறேன். என்னை புரிஞ்சுக்காம...”அவள் கண்களில் நீர் முண்டு கிறது.

“சாரி லேகா...என்னை கொஞ்சம் புரிஞ்சுக்க. நான் ரொம்ப குழம்பின நிலைல இருக்கேன். என்னை கொஞ்சம் சிந்திக்க விடு...”

“குழம்பற ஆளா நீ...? ஓ.கே...எது எப்படி இருந் தாலும் சரி. நீ நல்ல முடிவுக்கு வரே. அந்த கள்ள நோட்டு கும்பலை நினைச்சோ அவங்க பிளாக் மெயிலை நினைச்சோ கவலைப்படாதே. அப்பா இருக்கார். சொத்தே போனாலும் சரி. அவங்கள இரண்டுல ஒண்ணு பார்த்துடுவோம்.”

“சரி...இப்ப கிளம்பறியா?”

“வேற விஷயம் பேசலாமே. கொஞ்சம் ரிலாக்ஸ்டா...”

“சாரி...ரிலாக்ஸா பேசற மூட்ல நான் இல்லை. அந்த கும்பலை சேர்ந்தவங்க நம்மளை நோட்டம் போட்டுக் கிட்டு இருக்கலாம்.”

“போடட்டும். நல்லதுதானே?”

"உனக்கு உன் காதல்தான் பெரிசு. எனக்கு அப்படி இல்லை, என் குடும்பம், நம்ம கடை மானம் எல்லாம் பெரிசு. ப்ளீஸ் புரிஞ்சுக்கோ...கிளம்பு..."

-சொன்னபடி காரிலிருந்து கீழே இறங்குகிறான். அவள் அவனையே வெறித்து பார்த்தபடி இருக்க நடக்கிறான்.

❑ ❑ ❑

**வீ**ட்டில் சாப்பிட அமரும்போது வாசல் பக்கம் யாரோ வரும் சப்தம் கேட்கிறது. எட்டிப் பார்க்கிறான். முத்துப்பாண்டி. அவனை கொஞ்சம்கூட எதிர் பார்த்திராத பதற்றம் பரவுகிறது. பாதிச் சாப்பாட்டில் எழுந்து கை கழுவிக் கொள்ள அம்மா ஒரு மாதிரிப் பார்க்கிறாள்.

"என்னடா இது பாதிச் சாப்பாட்டுல?"

"இரும்மா வரேன். வரக்கூடாதவன் வந்துட்டான்..."

-முத்துப்பாண்டியை பார்த்தபடி அவனை நெருங்குகிறான்.

"என்ன முத்துப்பாண்டி?"

"கொஞ்சம் வா, ஒரு முக்கியமான வேலை"

"என்ன வேலை?"

"வா, சொல்றேன்..." தோளில் கை போட்டு அழைத்துச் செல்கிறான் அவன். அவனது உருவம், நடை, உடை, பாவனை எல்லாமே வீட்டில் இருப்பவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

"அம்மா தேவாக்கு என்னவோ ஆயிருச்சு. அருணாசலம் மாதிரி கோடீஸ்வரங்க வந்து பார்த்தது

போய் இப்ப பார்த்தியா கண்ட நாயிங்க வரதை..."பெரிய சகோதரி வெடிக்கிறாள்.

"பொறுமையா இருங்கடி - எம்புள்ள காரண மில்லாம இப்படி நடந்துக்கமாட்டான். அவன் இப்ப ஒரு தர்மயுத்தம் நடத்திக்கிட்டு இருக்கான். அமைதியா இருந்து நடக்கிறத கவனியுங்க."அம்மா அற்புதமாக பதிலளிக்கிறாள்.

"எப்படிம்மா துளிகூட கவலையில்லாம உன்னால இப்படி நினைக்க முடியுது..."

"என் வயித்துக்கு தெரியும்டி, அவன் நிஜமாலுமே தப்பானவனா இருந்தா இந்த நிமிஷம் என் வயித்துல ஒரு பாரம் தெரியும். என் புள்ள அப்படி இல்லை..."

உள்ளே தர்க்கம் நடக்க வெளியே...

"தேவா முக்யமான விஷயம் தலைவர் சொல்லச் சொன்னார்..."

"என்ன?"

"நம்ம கூட்டத்து ஆட்கள் சிலர் போலீசுக்கும் ஆள் காட்டியா இருக்காங்கன்னு தெரியுது. ஆகையால இனி பல விஷயங்களை காதும் காதும் வெச்சமாதிரி உன்னை மட்டுமே வெச்சு முடிக்க இருக்காரு..."

"என்ன அது."

"ஒண்ணுமில்ல. தலைவர்க்கு எப்பவும் தங்கம்னா கொள்ளை இஷ்டம். ஆகையால் அவர் இந்த முறை தங்கத்தை கடத்த உன் உதவிய எதிர்பார்க்கறாரு..."

தேவா உடனே தாடையை தடவுகிறான்.

"பயப்படாதே...நீ மனசு வெச்சா சுலபமா இதை முடிக்கலாம். உன் பழைய முதலாளி அருணாசலம்

எப்பவும் பம்பாய் மார்க்கெட்டுல தங்கம் வாங்கறவர். அவர் தங்கம் வாங்கற பார்ட்டிதான் நமக்கும் தங்கம் தரப்போற பார்ட்டி. தலைவர் உனக்கு பணம் தருவாரு. நீ அதோட அந்த பார்ட்டியை பார்த்து தங்கத்த வாங்கணும். வாங்கிட்டு வந்து தலைவர் சொல்ற இடத்துல போய் அதை கொடுத்திடு"

"இதை எதுக்கு நான் செய்யணும்? பணத்தை கொடுத்து யார் வேணும்னா வாங்கலாமே..."

"அங்கதான் இருக்கு சூட்சுமம். அந்த பார்ட்டிக்கு உன்னை தெரியும். உன் மேல நம்பிக்கையுள்ளவன். எனவே உன்கிட்ட நல்லபடி பிசினஸ் பண்ணுவான்.

"ஆனா நீ கொடுக்கப்போறதோ கள்ளநோட்டு."

-குண்டைத் தூக்கிப் போடுகிறான் முத்துப்பாண்டி.

# 85



**த**ங்கம் வாங்க பயன்படுத்த வேண்டியது கள்ள நோட்டுகளை என்று தேவாவிடம் முத்துப்பாண்டி சொல்லவும் தேவா முகம் போன போக்கில் அனல் பறக்கிறது.

"என்ன தேவா ஸ்டன் ஆயிட்டே...இதை நீ செஞ்சா உனக்கு பத்து பர்சன்ட் கமிஷன். அது இல்லாம அஞ்சு லட்சம் கேஷ் தேவா..."

-முத்துப்பாண்டி ஒரு பீடியை பற்ற வைத்தபடி கமருகிறான். தேவாவிடம் கோபத்தின் புகைச்சல்.

"என்ன பேசமாட்டேங்கறே... இப்படி ஒரு சான்ஸை பாஸ் எனக்கு தரமாட்டேங்கறாரு. தந்தா லைஃப்ல்லையே செட்டில் ஆயிடுவேன்..."

"ஏன் இப்பகூட ஒண்ணும் ஆயிடலை நான் உனக்கு தரேன் நீயே செய்துடேன்."

நழுவப்பார்க்கிறான் தேவா.

"அதான் முடியாது பாஸுக்கு தெரியும். யாருக்கு என்ன வேலை கொடுக்கறதுன்னு...அதை யாராவது மாத்தி செஞ்சா அவர் கோபத்துக்கு அளவே இருக்காது. அதோட இந்த தங்கம் வாங்கற விஷயத்துல எனக்கும் அனுபவம் கிடையாது. விக்கற பார்ட்டிக்கும் என்னை தெரியாது.

நீன்னா அப்படி இல்லை. உன்மேல நிறைய நம்பிக்கை உள்ள நபர் அந்த பார்ட்டி. அந்த நம்பிக்கை தானே இந்த பிசினசோட பலமே...?"

-முத்துப்பாண்டி கூறுகட்டி பிரிக்கிறான்.

"சரி இதை பாஸ் எப்ப சொன்னார்...?"

"எதுக்கு கேக்கறே?"

"இல்லை உன் மூலமா என்கிட்ட சொல்றதுக்கு அவர் நேராகவே என்னை கூப்பிட்டு சொல்லலாமே..."

"சரிதான்...பாஸ் யார்னு பார்க்கணும்னு நேராவே சொல்லேன். என்ன இப்ப? நானே இதுவரை பார்த்ததில்லை. பேசினதில்லை. நீ தானே பார்த்துடப்போறே?"

"அப்ப உனக்கு இதெல்லாம் யார் மூலமா நடக்குது"

"ஐநூத்தி ஒண்ணுன்னு ஒருத்தர். என்னடா சோப்பு பேர் மாதிரி இருக்கேன்னு நினைக்கிறீயா. இவரும் அப்படித்தான். சோப்பு மாதிரி நழுவிட்ற நபர் இவர்.

இவர் மூலமாதான் எனக்கு ஆர்டர் வரும். பணம் காசு எல்லாமும் கூட இவர் மூலமாதான்...”

“அது சரி... இந்த ஐநூத்தி ஒண்ணு யார்?”

“இவரையும் நான் பார்த்ததில்லை...போன் பண்ணுவார். இல்லாட்டி யார் மூலமாச்சும் லெட்டர் கொடுத்து விடுவார். காரியத்த செய்வேன்.”

-முத்துப்பாண்டியின் விளக்கம் தேவாவை வெகுவாக யோசிக்க வைக்கிறது. தர்மராஜ் மிக எச்சரிக்கையான ஒரு நபராக ஏழுகடல், ஏழு கோட்டை தாண்டி அமர்ந்திருக்கும் ஒரு மனிதனைப் போலத்தான் தன்னை வைத்துக் கொண்டிருக்கிறார்.

அத்தனை பாதுகாப்பாக புத்திசாலித்தனமாக இருக்கும் நபரை எப்படி பிடிக்கப்போகிறோம்? மலைப்பு தட்டுகிறது.

“என்ன தேவா...தலையை சுத்துதா? அதான் நம்ம கூட்டத்தோட ஸ்பெஷாலிட்டி. சரிதான் பாஸ் யார்னே தெரியலை. ஆகையால் நாம தப்பு தண்டா பண்ணலாம்னாலும் நடக்காது. தப்பு பண்ணுனா பத்தாவது நிமிஷம் நமக்கு எச்சரிக்கை வரும். இந்த மதுரைல எந்த மூலைல இருந்தாலும் அங்க ஒருத்தன் கரெக்டா தேடி வருவான். போட்டுத் தள்ளிடுவான்...”

-முத்துப்பாண்டி சாதாரணமாக விவரிக்கிறான். ஆனால் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூன்றிலும் தயாரிக்கப்படும் ஒரு பல்கோடி பட்ஜெட் திரைப்படம் போல இருக்கிறது அவன் சொல்வதெல்லாம்.

“என்னால நம்ப முடியலையா?”

“ஆமாம்...எப்படி இப்படி நடந்துக்க முடியும். சினிமான்னா அதுல கற்பனை இருக்கு. முடியாததை

நினைச்சுப் பார்த்தோம்னு சொல்ல ஒரு இடம் இருக்கு. இது அப்படியில்லையே..."

"அப்படியா...அப்படின்னா ஒரு தப்பு பண்ணு-பின்ன தர்மராஜ் சாமர்த்தியத்த தெரிஞ்சுக்கோ. சரி சரி நான் ஒருத்தன் வந்த வேலையை விட்டுட்டு வளவளன்னு பேசிக்கிட்டிருக்கிறேன் பார். என்ன சொல்ற முடிவா? நான் உன் பதில உடனே ஐநூத்தி ஒண்ணுக்குக்கு போன் பண்ணி சொல்லணும்."

"முடியாதுன்னா என்ன சொல்வார் பாஸ்..."

"தெரியாது போய் தொலையிதுன்னு விடலாம். இல்ல முடியாதுன்னா சொன்னேன்னு கேட்டு ஆளை வெச்சு தாளிக்கவும் செய்யலாம்."

"சரி...நான் தயார்னு சொல்லு..."-முத்துப்பாண்டி தேவா சொன்ன பதிலோடு அங்கிருந்து விடை பெறு கிறான். தேவாவிடம் ஒரு தீவிர சிந்தனை. எப்படி இந்த சிக்கலில் கள்ளநோட்டும் கை மாறாமல் தர்மராஜையும் பிடிக்கப் போகிறோம்?

❑ ❑ ❑

**தோ**ட்டத்து செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிய படி இருக்கிறார் பிரேம்நாத். நிழல் ஒன்று மேலே விழுகிறது. திரும்பினால் முத்துப்பாண்டி.

"குட்மார்னிங் சார்" அவன் குரலில் எகத்தாளம்.

"வாய்யா...என்ன லாக்கப்புல இருந்து அவுத்து உட்டுட்டானா இன்ஸ்பெக்டர்..."

"போலீஸ்ல இல்லாட்டியும் தொழில் புத்தி போகலியே உங்களுக்கு. அதான் ராவானா லாக்கப்புக்கு படுக்க போயிட்றேனே..."

"எஸ்.பி. திடீர்னு விசிட்டுக்கு வந்தா என்ன ஆகும் தெரியுமா?"

"எதுக்கு இருக்கு பேஜர். அதுல தகவல் வந்துடும் போய் ஆஸ்பத்திரியில வவுத்து வலின்னு படுத்துக்கு வேன். அங்க ஸ்டேஷன்லையும் எஸ்.பி.கிட்ட என்ன ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்கிறதா சொல்லி இன்ஸ்பெக்டர் சமாளிச்சிடுவார்..."

"எப்படியோ உன் வண்டியும் ஓடுது. பார்த்து..."

"என் வண்டிதான் எப்பவும் நல்லா ஓடும் சார். ஏன்னா மந்திரியில இருந்து எல்லாரும் பாக்கெட்ல."

"சரி என்ன விஷயம் இங்க வந்திருக்கே?"

"சுமார் ரூ.ஒரு கோடி மதிப்புல தேவா தங்கம் வாங்கப் போறான். நீங்க கூட துணைக்கு போனா நல்லது. என்ன சொல்றீங்க?"

இது யாரோட உத்தரவு. அந்த தர்மராஜ் உத்த ரவா?"

"கேள்வியும் நீங்களே... பதிலும் நீங்களே.... புரிஞ்சுகிட்டா சரி."

"அது சரி...அந்த உத்தரவை தர்மராஜ் எனக்கு போடறதுக்கென்ன?"

போடுவார்.. காத்திருங்க. நாலு மணிக்கு போன் வரும்."

"போடட்டும். அப்புறம் பார்க்கிறேன்."

"அப்ப நான் கிளம்பறேன். காத்திருங்க நாலு மணிக்கு ..."பீடியை பற்ற வைத்துக் கொண்டு நகருகிறான் முத்துப்பாண்டி. முகத்தில் பிரேம்நாத்தை எடைபோடும் ஒரு புன்னகை...



# 86

பிரேம்நாத்தும் யோசிக்கிறார். போலீஸ் மூளை மறுபுறம் பல கோணங்களில் போகிறது. ஒரு புறம் தேவாவுக்கு கட்டளை, மறுபுறம் தனக்கும்... ஒருவேளை இது தனக்கும் தேவாவுக்கும் அந்த தர்மராஜ் வைக்கும் பரீட்சையா?

இன்னமும் அவன் சந்தேக வட்டத்தில்தான் வைத்திருக்கின்றானா? எதற்கு போன் செய்யப் போவதை சொல்லிவிடுகிறான். சொல்லிவிடும் நேரத்துக்கு போன் செய்து பேசிவிட்டிருக்கலாமே...? அப்படி செய்யாமல் போன் செய்யப் போவதை சொல்லக் காரணம், அவனை பிடிக்க நான் ஏதாவது ஸ்டெப் எடுக்கிறேனா என்று பார்க்க இருக்குமோ? டெலிபோன்ஸ் டிபார்ட்மெண்ட்டுடன் சேர்ந்து நம்பரை நோட் செய்கிறேனா என்று கூட நினைக்கலாம்...

நோ...இந்த சந்தர்ப்பத்தில் தர்மராஜை நன்றாக ஏமாற்ற வேண்டும். எதுவுமே செய்யக்கூடாது. அதோடு போன் செய்பவனும் தர்மராஜாக இருக்கமுடியாது. வேறு யாராவது தான் இருக்க வேண்டும்...

-பிரேம்நாத் சிந்தனையும் தீர்மானமுமாக இருக்க நான்கு மணி அடிக்கிறது. ஏமாற்றாமல் தொலைபேசியிடமும் சிணுங்கல்.

எடுத்து காதைக் கொடுக்க மறுமுனையில் "வணக்கம் பிரேம்நாத். உனக்கு என் பாராட்டு" என்று கரகரப்பாய் ஒரு குரல்.

“பாராட்டு எதுக்கு?”

“நல்லா கேட்டே போ...நான் நாலு மணிக்கு போன் பண்ணுவேன்னு சொல்லியிருந்தேன். நீ போலீசா இருந் திருந்தா இந்த நிமிஷம் என் வாய்சை டெலிபோன்ஸ் டிபார்ட்மென்ட் ரெக்கார்ட் பண்ணிகிட்டிருப்பாங்க. என் டெலிபோன் நம்பரையும் சேஸ் பண்ணியிருப்பாங்க. ஆனா நீ எதுவும் செய்யலை. அதான் பாராட்டினேன்...”

-பிரேம்நாத் அவன் பேச்சை கேட்டு தன் கணிப் புக்கு தனக்குத்தானே பாராட்டு கூறிக் கொள்கிறார்.

“என்ன தர்மராஜ்...அப்ப இன்னும் என் மேல் சந்தேகம் தீரலையா?”-என்று வாஞ்சையாக கேட்கிறார்.

“சாரி பிரேம்நாத். சந்தேகம் என் மாதிரி நபர்க ளோட கண்காணிப்புக் கருவி. அது சாகறவரை எங்களை விடாது. போகட்டும். தேவாவோட பாதுகாப்புக்கு போறே நீ. சரிதானே?”

“போறேன். எனக்கு அதுல என்ன ஆதாயம்?”

“என்ன ஆதாயம்னு கேக்கலாமா பிரேம்நாத். எவ்வளவு வேணும்னு கேள் தரேன்.”

“எவ்வளவு கேட்டாலும் தருவியா தர்மராஜ்?”

“ஷ்யூர். அப்பதானே அடுத்து நான் சொல்றத நீ கேப்பே...”

“பரவாயில்லியே நல்லாவிட்டுப் பிடிக்கிறியே...சரி ஒரு பத்து லட்சம் தந்துடு...”

“ஓ.கே. பிரேம்நாத்...ஆனா காரியத்த மிகச் கச்சி தமா முடிக்கணும். ஒரு கோடி ரூபாயும் கள்ள நோட் டுங்க. வீசைக்கு போட்டா இருபத்தஞ்சு கிலோ தேறும். இரு நூறு ரூபா கூட போகாது காகித மதிப்பு. அதுக்கு விலைதான் ஒரு கோடி ரூபாய்! அதனால இளப்பமா

நினைச்சுடக் கூடாது. தேவா சாமர்த்யமா நடந்துக்கு வான்னு நினைக்கறேன். காவல்தான் நீ...”

“சரி எப்ப கிளம்பறோம்?”

“அவசரப்பட்றியே பிரேம்நாத். நோட்டே இனி தான் அச்சாகணும், அப்புறமா அது காயணும், கட்டுக் கட்டணும். எவ்வளவு வேலை இருக்கு...”

பிரேம்நாத்துக்கு தர்மராஜின் பதிலும், அநா யாசமும் திகைப்பை தருகிறது.

“சரி. முடிச்சுட்டு சொல்லுங்க.”

“நிச்சயமா. வெச்சுடட்டுமா?”

“ரைட்!” தொலைபேசி முடங்குகிறது. பிரேம்நாத் முகத்தில் வியர்வை முத்துக்கள். திரும்பவும் சிணுங்கல். இந்த முறை யார்? கேள்வியோடு எடுக்கிறார். தேவாவே பேசுகிறான்.

“சார் நான் தேவா பேசறேன். ஒரு முக்கிய விஷயம்.”

“தெரியும் தர்மராஜ் ஒரு கோடி ரூபா வேலைய கொடுத்துருக்கான் அதானே?”

“உங்களுக்கு எப்படி தெரியும்?”

“உன்னை கண்காணிச்சு காவல் காக்கற பொறுப்பு எனக்கு. அப்புறம் எப்படி தெரியாம போகும்?”

“என்ன பண்ணலாம் சார்?”

“இது அவன் நமக்கு வைக்கற பரீட்சை தேவா. அதான் இரண்டு பேரையும் சேர்த்து இந்த காரியத்துல இறக்கறான். இந்த நிமிஷம் நம்மை கண்காணிக்கவும் செய்யலாம். ஆகையால் ஜாக்ரதையா இருக்கணும். இதை முடிச்சு கொடுத்தாதான் தர்மராஜ் நம்மை நம்ப ஆரம்பிப்பான்.”

"அப்படின்னா?"

"இதை நாம செய்து முடிக்கறோம்..."

"சார் என்ன நீங்க, ஒரு கோடி கள்ள நோட்டை கொடுத்து தங்கம் வாங்கறோம். தங்கம் தரும் பார்ட்டி ஏமாந்த பிறகு சும்மா இருப்பானா...? வினையை விலைக்கு வாங்கறோம்..."

"வாங்கறோம் இல்ல...வாங்கியாச்சு. இனி பின் வாங்க முடியாது. ஒண்ணு பண்ணுவோம். நம்ம கள்ள நோட்டுக்கு அவன் பித்தளையை தங்கமா கொடுத்து ஏமாத்திட்டான்னு தர்மராஜ்கிட்ட பொய் சொல் வோம். ஆனா அவன் கொடுக்கற அசல் தங்கத்தை தொடவேண்டாம். அது எஸ்.பி. கண்ட்ரோல்ல இருக் கட்டும், பம்பாய் பார்ட்டி கள்ளநோட்டு சிக்கலை போலீஸுக்கு கொண்டு போகும்போது அவங்க தங்கத்தை அவங்களுக்கு கொடுத்து சமாதானப் படுத்து வோம்..."

"இதெல்லாம் நினைக்க நல்லா இருக்கு. தர்மராஜ் ஏமாறணுமே எனக்கென்னவோ அவன் ஏமாறமாட் டான்னு தோணுது. தப்பு செய்ய நினைச்சா நாமதான் மாட்டணும்."

"சரி என்னதான் செய்யலாம்கிறே..."

"முதல்ல மீனாட்சியம்மன் கோயில் போய் தரிசனம், பின்னால பசுபதிநாதனை தரிசிக்கப் போறேன். இந்த சிக்கலுக்கு அவர்தான் வழிகாட்டணும்..."

- சலிப்போடு போனை வைக்கிறான் தேவா.

# 87



**மீ**னாட்சியம்மன் கோயில்! வழக்கம் போல் கூட்டம். உள்ளே நுழைபவன் மீனாட்சியை தரிசித்து விட்டு சுந்தரேஸ்வரரையும் தரிசித்துவிட்டு நேராக பசுபதி நாதன் கண்ணில் படுகிறாரா என்று பார்க்க கம்பத்தடி மண்டபம் வருகிறான். அவர் அங்கே இல்லை. நாலாபுறம் பார்வையை துழாவவிட்டும் பலனில்லை. எங்கே போனார்? கலக்கத்தோடு தேடுகிறான். சுற்றிச்சுற்றி வருகிறான். எங்கேயும் இல்லை. எள் விளக்கு விற்கும் நபரிடம் கேட்கிறான்.

"அங்கே ஒரு பெரியவர் இருப்பாரே அவர்..."

"அவர் இப்ப வரது இல்லீங்க. ரொம்ப உடம்பு முடியாம படுத்த படுக்கையா இருக்கறதா கேள்வி."

"என்னது உடம்புக்கு முடியலையா?"

"ஆமாம் தம்பி அழகர் கோயில் மலையில் கற்பூரம் விக்கற முத்துச்சாமிங்கறவர் வீட்லதான் அவர் இப்ப இருக்கறதாவும் உங்கள மாதிரி யாராவது தேடிவந்தா சொல்லவும் சொன்னார்."

"என்ன உடம்புக்கு?"

"என்னன்னு தெரியல, ஆனா நான் இன்னும் பத்து நாள் கூட உயிரோட இருக்கமாட்டேன்னு சொல்லிக்கிட்டிருந்தார்."

-தோவாவுக்கு பக்கென்றது. கொஞ்சநாள் இடைவெளியில்தான் என்னென்ன நடந்துவிட்டது? உடனே அவரை பார்க்க கிளம்புகிறான்.

அழகர் கோயில்!

புராண பிரசித்தி பெற்ற ஸ்தலம். இன்றைக்கு அது ஒரு விடுமுறை களிப்புப் பகுதியாவும் மாறிவிட்டது.

பொரிகடலை வியாபாரம், கொய்யாப்பழ கடைகள் என்று நொறுக்கு தீனிக் கடைகள் ஏகத்துக்கும். இதில் கற்பூர வியாபாரம் செய்யும் முத்துசாமி யார்? தேட ஆரம்பிக்கிறான் தேவா. இறுதியில் அகப்படுகிறார் அந்த நபரும்.

"ஐயா! பசுபதிநாதன் உங்க வீட்டுலையா இருக்காரு...?"

"ஆமாம்...நீங்க..."

"நான் அவரை பாக்கணும். என் பேர் தேவா!"

"ஓ நீங்கதானா அது? இன்னிக்கு நீங்க அவரை பார்க்க வருவீங்கன்னு சொன்னார்"

"அதான் சாமி...நான் இங்க நினைச்சா அங்க அவருக்கும் தெரிஞ்சிடுது."

"சரி வாங்க போகலாம். பார்க்கலாம்..." அழைத்துச் செல்கிறான் முத்துச்சாமி. நத்தம் சாலையில் ஒரு குடிசை. உள்ளே நுழைகின்றனர். பசுபதிநாதன் ஒரு ஓரமாக படுத்துக்கிடக்கிறார்.

"சாமி"

-குரல் கேட்டு திரும்புகிறார். மிகவும் வாடிப்போய் களையிழந்து காணப்படுகிறார்.

"சாமி என்ன சாமி இது...இப்படி ஆயிட்டீங்க?"

"வா தேவா...வயசாயிடிச்சு இல்லையா?"

அது எங்களுக்கு...உங்களை வயோதிகம் என்ன செய்துடமுடியும்? உங்க சக்தி எல்லாம் எங்க போச்சு?"

"எங்கையும் போகலை. எல்லாம் உன்கிட்டதான் இருக்கு"

"என்ன சொல்றீங்க?"

"புரியலியா? இப்ப உன்கிட்ட இருக்கிற ரசமணியும் பிருந்தாகிட்டே இருக்கிற ரசமணியும் என்னோடது தான்..."

"ஏன் வேற ரசமணிகள் உங்ககிட்டே இல்லையா?"

"ரசமணிங்கிறது என்ன கோலியா? நினைச்சப்ப நினைச்சு எண்ணிக்கையில செய்துக்க. அது அபூர்வம். அதை செய்யறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? அது பிடிபட்றதும் அதைவிட கஷ்டம்"

"அப்ப அப்படிப்பட்ட ஒரு அபூர்வத்தையா எங்களுக்கு தந்தீங்க?"

"என்ன பண்ணட்டும். விதி உன்னையும் என்னையும் சேர்த்து வெச்சு பிருந்தாவையும் கண்ணுல காட்டி அவளையும் உன்னையும் கூட சேர்த்து வெச்சுடிச்சு. நான்தான் எல்லாத்துக்கும் காரணம். நீங்க ரெண்டு பேரும் சேரணும். அப்பதான் நான் செய்த தவறு சரியாகும். அதுக்காகதான் அந்த ரசமணிகளை உங்களுக்கே தந்தேன். போதாதத்துக்கு சுடுகாடுவரை போனதால அதோட எதிரொலிகள் வேற..."

பசுபதிநாதனின் விளக்கம் தேவா மனதை நெகிழ்த்துகிறது.

"சாமி உங்களை ரொம்பவும் பாதிச்சுட்டோம் நாங்க" என்று அவர் கைகளை பிடித்துக்கொண்டு அழுகிறான்.

"எல்லாம் சிவத்தோட விளையாட்டு. கவலைப் படாதே. இப்பதான் நீ திடமா இருக்கணும்."

“முடியாது போல இருக்கே சாமி. பிள்ளையார் பிடிக்க குரங்கா ஆயிட்டா மாதிரி இருக்கு என் நிலை. தப்புக்கு மேல தப்பு செய்யற சூழ்நிலை. நீங்களோ இப்ப சின்ன உதவிகூட செய்ய மாட்டேங்கறீங்க”

“தேவையில்லை தேவா. யார் உதவியும் தேவையில்லை உனக்கு. நீயே அந்த குற்றவாளியை கண்டு பிடிச்சிடுவே”

“அது நிச்சயம். ஆனா அதுக்காக நான் செய்யப் போற தவறுகளை நினைச்சா ரொம்ப பயமா இருக்கு சாமி. எனக்கு மேல பிரேம்நாத்தும் கஷ்டப்பட்றார்.”

“கவலைப்படாதே...குற்றவாளி எங்கேயும் இல்லை. உன்னை சுத்திதான் இருக்கான். நீ நிதமும் அவனைப் பார்க்கறே. பேசறே? அவங்கள்ள யார்னு தேடு. அது போதும். மிச்சம் தானா நல்லபடி நடக்கும்”

“இது போதும் சாமி. இந்த ஒரு க்ளூ போதும். நான் யாருன்னு கண்டுபிடிச்சிடுவேன். நீங்க உங்க உடம்பை பார்த்துக்குங்க சாமி”-சொல்லிவிட்டு வெளியே செல்பவன் என்ன நினைத்தானோ தன் இடுப்பு ரசமணியை எடுக்கிறான் வெளியே...உற்றுப் பார்க்கிறான். பின் முத்துச்சாமியை அழைக்கிறான்.

“என்னங்க?”

“இந்த ரசமணியை சாமி இடுப்புல கட்டிடுங்க. அவர் நல்லா இருக்கணும். என் பிரச்சினைகளை நான் சமாளிச்சுக்குவேன்...”

-தேவா அதிர்ச்சி தருகிறான்.

# 88



ரசமணியை தந்துவிட்டு தேவா செல்ல அத்துடன் உள்ளே நுழைகிறார் முத்துச்சாமி.

"என்ன முத்து? தேவா போயிட்டானா?" உள்ளிருந்து பசுபதிநாதன் கேள்வி.

"போயிட்டார் சாமி. போகும்போது இந்த ரசமணியை கழட்டி உங்களுக்கே கொடுக்கச் சொல்லி கொடுத்துட்டுப் போய்ட்டாருங்க..."

"நிஜமாவா?" பசுபதி கேள்வியோடு முத்துச்சாமி கைகளில் பிடித்தபடி காட்டும் ரசமணியை பார்த்து கண்ணீர் வடிக்கத் தொடங்குகிறார்.

"ஏன் சாமி அழறீங்க?"

"இது ஆனந்தக் கண்ணீர் முத்து. தேவா ஒரு நல்ல இதயமுள்ள மனுஷன்கறத நிரூபிச்சுட்டு போறான். என் உடல் நிலையைப் பார்த்து தனது வெற்றிகளைவிடவும் என் உடல்நிலைதான் முக்கியம்னு சொல்லாம சொல் விட்டுப் போறான். இதுதான் நல்ல குருபக்தி"

ரசமணியை வாங்கி இடுப்பில் கட்டியபடி கண்ணீரை சுண்டிவிட்டுக் கொள்கிறார் அவர்.

"இதனால் அந்த தம்பிக்கு எதுவும் கெடுதல்..."

"வராது...வரவும் விட மாட்டேன்" என்பவர் ரச மணியைக் கட்டிக்கொண்ட மாத்திரத்தில் எழுந்து அமர்ந்து கொள்கிறார்.

"சாமி என்ன அதிசயம் இது. உடம்பு நடுக்கம்லாம் போய் பார்க்க நல்லா ஆயிட்டமாதிரி தெரியுதே"

"ஆமாம் முத்து. மின்சாரம் வந்துட்டா விளக்கு எரிய வேண்டியதுதானே"

"அப்ப இந்த ரசமணி மின்சாரத்துக்கு சமமானதா?"

"அதைவிடவும் பல படிகள் மேலானது"

"எப்படின்னு சொல்லுங்களேன்"

"இந்த உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது, ஒத்துக்கிறியா?"

"ஆமாம் சாமி நிலம், நீர், வாயு, பூமி, ஆகாயம்னு பஞ்ச பூதம் இருக்கு."

"இது உலகத்துல மட்டுமில்லே. உலகத்தைச் சார்ந்த உயிர்கள் கிட்டேயும் இருக்கு. உன் உடம்புலையும் நீர், நெருப்பு, காற்று மூன்றோட மனசுங்கற ஆகாயமும் உடலை தாங்கி நிற்கிற தளமான கால்கள் பூமியிலையும் தானே இருக்கு...?"

"ஆமாம்."

"இந்த ஐந்துக்கும் சக்தி எங்கேருந்து வருதுன்னு தெரியுமா?"

"தெரியலையே சாமி."

"கட்டடம்னு ஒண்ணு இருந்தா கட்டினவன்னு ஒருத்தன் இருக்கணுமா இல்லியா?"

"ஆமாம்...அதுபோல இவை இருக்குன்னா இதை படைச்ச சக்தியும் இருந்துதானே தீரணும்."

"ஒத்துக்கறேன்."

"அந்த சக்தியோட திடவடிவம்தான் ரசமணி."

"அப்படின்னாஇது பஞ்ச பூதங்களையே ஜெயிக்க முடிஞ்சதா?"

“ஜெயிக்க மட்டுமில்லை... அவற்றை கட்டுப் படுத்தி வைத்துக் கொள்ளவும் கூடியது. பாதரசம் இதோட மூலம். ஆலகால ரசம் இதோட எதிரி. அதாவது விஷம் இதுக்கு எதிரி, விஷம் அழிக்கக்கூடியது. பாதரசம் ஆக்கக் கூடியது. ஒன்று பிளந்தால் நூறாகும், நூறு ஆயிரமாகும். பாதரசம் மணிகளாக சிதறினா திரும்ப சேர்க்க முடியாது. தெரியுமா உனக்கு?”

“ஆமாம் சாமி. பார்த்திருக்கேன்.”

“அப்படி சேர்க்க முடியாததை சேர்த்து கெட்டிப் படுத்தி சித்தர்கள் சொன்ன மூலிகை சாறை கலந்து விடாமுயற்சியில் உருவாக்கற ரசமணி நம் இடுப்புப் பகுதியில் இருந்துச்சுன்னா உடம்புல உஷ்ணநிலை, மின்சாரநிலை, எல்லாம் கட்டுக்கடங்கி சரியான அளவுல இருக்கும். அது மட்டுமில்லை. திருஷ்டி, ஏவல்ங்கற பொறாமை மனுஷங்களோட எந்த ஒரு செயல்பாடும் நம்மை பாதிக்காது.”

“அப்படின்னா நிறைய பண்ணி எல்லாருக்கும் தரலாமே சாமி...”

“அறுசுவையா சாப்பாடு இருந்தாலும் சாப்பிட எண்ணம் இருந்தாதானே நீ சாப்பிடுவே...”

“ஆமா.”

“அந்த மாதிரிதான் இதுவும், இதன்மேலே நம்பிக்கையும் இதைப்பற்றிய ஞானமோ கல்வியோ இல்லை. இதை கட்டிக்க விதிப்பாடோட இருக்கணும்”

“இதுக்கும் விதிக்கும் என்ன சம்பந்தம்?”

“நீயும் நானும் இங்க உக்காந்து பேசிக்கிட்டிருக்கறதுக்கே சம்பந்தம் இருக்கும்போது அப்படி சாதாரணமா கேட்டுட்டியேப்பா.”

“எனக்கும் அப்ப ஒரு ரசமணியை தரக்கூடாதா சாமி.”

“தரேன். செய்து தரேன்.”

“நல்லது சாமி. கிளம்புகிறான். கூரை வாசல் கடந்து சாலைக்கு வந்து தனது கற்பூரக் கடைக்குச் சென்று நிற்க எதிர்ச்சாரியில் கார் ஒன்று வந்து நிற்கிறது. உள்ளிருந்து இறங்குகிறாள் பிருந்தா. அங்கேயும் இங்கேயும் விசாரித்து விட்டு முத்துச்சாமியிடம் வருகிறாள்.

“இங்க பசுபதிநாதன்னு ஒருத்தர்...”

“தெரியும்மா. வாங்க என் குடிசைலதான் தங்கியிருக்கார். நீங்க வருவீங்கன்னும் சொன்னார்.”

-பிருந்தா அதைக் கேட்ட மறுநொடி ஆச்சரியம் கொள்கிறாள். அவனை தொடர்ந்து நடக்கிறாள். குடிசை வருகிறது. பசுபதிநாதன் யோகாசனம் செய்ய தொடங்கி விட்டிருக்கிறார்.

“வணக்கம் சாமி.”

“வாம்மா...உக்கார். வந்துடறேன்.”

“உங்களுக்கு ரொம்ப உடம்பு முடியலே. படுத்த படுக்கையா இருக்கீங்கன்னு சொன்னாங்க. நீங்க என்னடான்னா அஸ்யூஷ்வல் எல்லாம் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே...”

“நான் பண்ணலை. என்னை அந்த ரசமணி பண்ண வைக்குது. சரி எங்கம்மா வந்தே...?”

-ஆசனத்தை கலைத்தபடி கேள்வியோடு வருகிறார்.

“முதல்ல உங்களுக்கு பல விஷயங்களுக்கு நன்றி சொல்லணும் சாமி. முன்னைக்கு இப்ப குடும்ப சூழ்நிலை எவ்வளவோ மாறிப் போச்சு. அப்பாவும் ரொம்ப மாறிட்

டார். எங்க காதலுக்கு பரிபூரண சம்மதம் கொடுத்துட் டாங்க. ஆனா...”

“தர்மராஜ்னு ஒருத்தன் எங்கேயோ இருந்துகிட்டு ஆட்டி வைக்கறனாக்கும்.”

“சாமி...உங்களுக்கு எப்படி?”

“இந்த மாதிரி கேள்வியே கேட்காத குழந்தை. ஒரு நல்ல சித்தனுக்கு மூணுகாலம் சாதாரணமா தெரியும். நான் இறந்த காலத்த மட்டும் சொல்ற நபர். சாதாரண பக்கிரிம்மா...”

“இவ்வளவு சொல்ற நீங்க அந்த தர்மராஜ் யார்னும் சொல்லிடக்கூடாதா?”

தர்மசங்கடமான கேள்வியாக கேட்கிறாள் பிருந்தா.

## 89



**பி**ருந்தாவின் கேள்வியை உத்தேசித்து சிரிக்கிறார் பசுபதிநாதன்.

“நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா?”

“இல்லம்மா. இது எல்லார்க்கும் வரும் ஆசைதான். நியாயமான கேள்விதான். ஆனா இவன்தான் தப்பு பண்றவன்னு ஒரு நபரை சுட்டிக்காட்ற சக்தியை நான் இன்னும் அடையல. அதுக்கெல்லாம் சில வித்தைகள் இருக்கு. அவைகள்ள ஈடுபடணும். அப்பதான் அது சித்திக்கும்.”

பசுபதிநாதன் பதில் பிருந்தாவுக்கு சோர்வைத் தருகிறது. அது அவள் முகம் போகும் போக்கில் தெரி கிறது;

"என்னம்மா...பிரச்சினை எப்படி போகுமோ என்ன ஆகுமோன்னு இருக்கா?"

"ஆமாம் சாமி, பாவம் தேவா. அவருக்கு ஏதாவது ஆபத்து வந்திடுமோன்னு பயமா இருக்கு..."

"இதுவரை வரலை. ஆனா இனி வர வாய்ப்பிருக்கு. உன்கிட்ட நான் தந்த ரசமணி இருக்குல்ல."

"இருக்கு சாமி. பத்ரமா பூஜை அறைல வெச்சுருக்கேன். அதுவந்த நேரம்தான் ஏதோ இந்த மட்டும் இருக்கோம். எல்லாத்துக்கும் காரணம் தேவாதான். அவர் நல்லா இருக்கணும். அவருக்கு எந்தவித ஆபத்தும் வரக்கூடாது. அதுக்குதான் உங்களை பார்க்க வந்தேன்."

"அப்படின்னா உன்கிட்ட இருக்கற அந்த ரச மணியை நீ தேவாவுக்கு தந்துடு. இப்பத்தான் அவர் வந்துட்டுப் போறார்."

"அப்படியா?" பிருந்தா அவன் வந்தது தெரிந்து நெகிழ்ந்து போகிறாள். கண்களிலும் கலக்கம்.

"எப்பதான் ஜோடியா சேர்ந்து வந்து உங்களைப் பார்க்க போறோமோ?"

"நடக்கும்மா...கூடிய சீக்கிரம் நடக்கும். இப்ப நீ நான் சொன்னதை செய். அவன் தன்கிட்ட இருந்ததை எனக்கு கொடுத்து குருபக்தியை காட்டிட்டுபோய்ட்டான். நல்லவேளை நீ வந்தே. உன் மூலமா இப்ப அந்த குறையும் தீர்ந்துடட்டும்"

"சந்தோஷம் சாமி. அவர்கிட்ட இப்ப அது இல்லைங்கறதே எனக்கு பயத்தை தருது. நான் உடனடியா அவரைப் பார்க்கறேன்."

"போம்மா, போய்ப்பார். தாமதிக்காதே"

"அப்ப கிளம்பறேன் சாமி"

"ஜாக்கிரதையா போய்ட்டு வா!" பசுபதிநாதன் ஆசீர்வதித்து அனுப்புகிறார். முகத்தில் மந்தகாசப் புன்னகை!

❑ ❑ ❑

**வை**ண்டிங் செக்ஷனில் தள்ளாடியபடி வேலையில் இருக்கிறார் அருணகிரி. தேவாவின் அப்பா. அவர் அருகே இப்பொழுது ஒருவன் வந்து நிற்கிறான்.

"அருணகிரி...உன்னை முதலாளி கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்" என்கிறான்.

"போ. வரேன்"

"ஆங்...கையோட இழுத்துக்கிட்டு வரச் சொன்னார்" அருணகிரி அரை மனதாக எந்திரங்களின் ஓட்டத்தை நிறுத்திவிட்டு அவனைப் பின் தொடர்கிறார்.

பிரமாண்ட மில் கட்டடத்தின் ஓர்க்ஸ்பாட்டை விட்டு வெளியே வருகின்றனர். சப்தம் கொஞ்சம் குறைந்து காதுக்கு இதமாக இருக்கிறது.

"முதலாளி எங்க இருக்கார்?"

"அவர் வீட்ல"

"ஆபீஸ்ல இல்லையா?"

"எங்க இருந்தா என்ன...? கார்ல கூட்டிக்கிட்டு போகப் போறேன். நீயும் வரப்போறே. பேசாம வா..."

அழைக்க வந்தவனிடம் திமிரான பதில்.

அவனை முன்பின் பார்த்த மாதிரி கூட தெரியவில்லை. மிகப்பெரிய மில்லில் ஆயிரக்கணக்கான பேர். அத்தனை பேரையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியுமா என்ன?

அவர்களிடம் வேகவேகமான நடை. அருணகிரியால் அந்த அளவு அவர்களை பின் தொடர முடியவில்லை.

வெளியே மரத்தடியில் ஒரு அம்பாசிடர். அதில் ஏறி அமருகின்றனர். அது சீறிக் கிளம்புகிறது. மெயின் கேட் வழியாக செக்யூரிட்டி செக்-அப்போடு தாண்டாமல் மில்லின் பின்புற எமர்ஜென்சி கதவு வழியாக கார் பாய்கிறது.

"ஏய்...என்ன இது? கார் எங்க இந்தப் பக்கம் போகுது?"

"பேசாம வாய்யா..." ஒருவன் மிரட்டுகிறான். அருணகிரிக்கு மெல்ல நடுக்கமாகிறது.

"உண்மையச் சொல்லுங்க. யார்டா நீங்க?"

"பரவால்லியே. நாங்க வேற பார்ட்டிங்கறத அதுக்குள்ள தெரிஞ்சுக்கிட்டியே." பதில் சொல்லும்போதே எமர்ஜென்சி கேட் வழியே கார் வெளியேறி மதுரையின் ஜன சந்தடி மிகுந்த கூட்டத்தில் கலந்துவிடுகிறது.

உள்ளே கத்தப் பார்த்த அருணகிரியின் வாய்க்கு பெரிய பிளாஸ்திரி ஒன்றை போட்டு ஒரே அமுக்காக அமுக்கிப் பிடித்துக் கொண்டு விடுகின்றனர்.

எதற்கு?

❑ ❑ ❑

**மே**ஜைமேல்.

சலவை நோட்டுக் கட்டுகளின் அணிவகுப்பு! மொத்தமாக ஒரு கோடி ரூபாய் கண்ணைப் பறிக்கிறது. பார்க்க பார்க்க பரவசமாக இருக்கிறது. நல்ல நோட்டு ஒன்றை பக்கத்தில் வைத்து பொருத்தம் பார்க்கிறார்

ஒருவர். அவர் இடுப்பில் செல்போன். அதன் சிணுங் கலைத் தொடர்ந்து யார் என்று அறிய முற்படுகிறார்.

"என்ன எல்லாம் ரெடியா?"

"ரெடி சார். சூட்கேஸ்ல போட்டு தேவாகிட்ட ஒப்படைக்கணும். அது ஒண்ணுதான் பாக்கி..."

"ஏர் டிக்கெட் பம்பாய்க்கு வாங்கியாச்சா?"

"அதுவும் ரெடிசார். தேவா. பிரேம்நாத் இரண்டு பேருக்கும் போக வர சேர்த்தே போட்டாச்சு. டிக்கெட்ல பேர் வேற. எல்லா ஏற்பாட்டையும் ஜாக்ரதையா செய்து இருக்கோம்." என்ன ஜாக்ரதையா? கோடி ரூபாயை எப்படி கொண்டுட்டு போகப்போறாங்க. ஏர்ல செக்கிங் இருக்கும் தெரியும்ல."

"தெரியும் சார், லோக்கல் ஏர்போர்ட்ல நம்ம ஆள் ஒருத்தன் இருக்கான். அவன் சூட்கேஸை ரொம்ப நோண்ட மாட்டான். ரைட் ரைட்டுன்னு சொல்லிடுவான். பம்பாய்ல கொஞ்சம் பணத்தை வெட்டினா முடிஞ்சிடும். தங்கம், வைரம்னா மெட்டல் டிடெக்டர்ல தெரிய வரும். இது காகிதம்தானே சார"

"முட்டாள் மாதிரி பேசாதே. தேவா, பிரேம்நாத் ப்ளைட்ல பம்பாய் போகட்டும். பணத்தை பின்னால் கார்ல நம்ம ரஞ்சித்கிட்டே கொடுத்தனுப்பு. வியா பாரத்துல லொள்ளு பண்ண நெனைச்சா தேவாகிட்டே சொல்லு அவனோட அப்பா இப்ப நம்ம கைல!"

"சங்க சார்..."

"ஜாக்கிரதை ஐநூத்தி ஒண்ணு"

"ஓ.கே. சார்"

செல்போன் அடங்குகிறது.

# 90



அடங்கிய செல்போனை முடக்கி பாக்கெட்டில் போட்டுக்கொள்ளும் அந்த 501 என்னும் மனிதர் அடுத்து டிராவல் ஏஜென்சியில் இருந்து வந்திருக்கும் ஏர் டிக் கட்டையும் எடுத்து தனது கோட்பாக்கெட்டில் போட்டுக்கொள்கிறார்.

வெளியே வருபவரை ஒரு மாருதி 800 காத்திருந்து அழைத்துக் கொள்கிறது. "நேரா பிரிண்டிங் பிரஸ்சுக்கு போ..." என்று டிரைவருக்கு கட்டளையிடப்பட்ட கார் மதுரை நகரவீதியில் சீறிடத் தொடங்குகிறது.

❑ ❑ ❑

"சூப்பர் பவர் பிரஸ்" என்று பெரிய வகை தொங் கும் பிரஸ் முன்பு கார் நிற்கிறது. இறங்கிச் செல்பவருக்கு உள்ளே ஏ.சி. அறை! நுழைந்து கொண்டு கதவை சாத்திக் கொள்பவர் இண்டர்காமில் இளங்கோ என்று ஒரு வனை அழைக்க எதிரில் வந்து நிற்கிறான் அவன்.

"இளங்கோ உனக்கொரு வேலை"

"சொல்லுங்க சார்"

"டிரைவர் மூர்த்தியை என்னை வந்து உடனே பார்க்கச்சொல். அப்படியே இந்த ஏர் டிக்கெட்டை யாராவது ஒரு பையனைவிட்டு தேவாங்கற நபர் உள்ள இந்த அட்ரஸ்ல கொடுத்துடச்சொல்."

"சரிங்க சார்" இளங்கோ டிக்கெட்டை எடுத்துக் கொள்கிறான்.

"ஜாக்ரதை...நீ போகக்கூடாது. யாராவது ஒரு பையன்தான் போகணும். டிக்கெட் அரைமணி நேரத்துல இந்த அட்ரஸ்க்கு போய் சேரணும்."

"ஆகட்டும் சார்."

இளங்கோ கிளம்புகிறான். 501 என்னும் அந்த மனிதர் எந்த பரபரப்பும் இன்றி இப்பொழுது தனது அச்சுப்பணிகளில் மூழ்க ஆரம்பிக்கிறார்!

❑ ❑ ❑

**வீ**டு முழுக்க கவலை!

வேலைக்கு போன அப்பாவை இன்னும் காணவில்லையே?

"தேவா...கொஞ்சம் என்னன்னு பாருப்பா. எனக்கு ரொம்ப கவலையா இருக்கு..." ஷேவ் செய்தபடி இருக்கும் தேவா முன் சங்கடப்பட்டபடி வந்து நிற்கிறாள் அவன் அம்மா சிவகாமி.

"ஓவர் டைம் இருக்கும்மா"-என்று சமாளிப்பவனை சகோதரிகள் சாவித்திரியும்-சந்திராவும் வளைக்க ஆரம்பிக்கின்றனர்.

"தேவா உன் போக்கே எங்களுக்கு புரியல-பயமாவும் இருக்கு. அம்மாவுக்கு உன் மேல நம்பிக்கை இருக்கலாம். ஆனா நாங்க நம்பத்தயாராயில்லை"-சாவித்திரி கோபமாக பேசுகிறாள்.

"உம் அப்புறம்? சாவதானமாக முடியை மழித்தபடி கேட்கிறான் தேவா. என்ன அப்புறம் விழுப்புரம்? எப்படிடா உன்னால நிம்மதியா இருக்க முடியுது. எப்பப் பார் யாராவது தேடி வராங்க. குசுகுசுன்னு பேசிக்கறே. கேட்டா எதையும் சொல்லமாட்டேங்கறே. வெளியேயும் பலர்கிட்ட பலவிதமா பேச்சு. உன் தம்பி கடத்தல்

பண்ணினானாமே? ஜெயிலுக்கு போனானாமேன்னு குத்தலா கேள்விங்க. சொந்தக்காரங்க முன்னால் தலை நிமிர முடியல தெரியுமா எங்களால..."

"சொந்தக்காரங்களா...யார் அவங்க?"-திரும்பவும் தேவாவிடம் கிண்டல்.

"போதும் நிறுத்து...உன்னால எங்களுக்கு கல் யாணம் ஆகுமான்னு சந்தேகமா இருக்கு. எங்களுக்கு ஒரு மாப்பிள்ளை பாக்கற வழியைக் காணோம். ஆனா நீயோ ஒரு பொண்ணுக்கு இரண்டு பொண்ணுன்னு சுத்தறே" சந்திரா ஆழமாகவே சீறுகிறாள். அவன் முகம் மாறு கிறது.

இவ்வளவு நாள் குடும்பம் என்கிற ஒன்றில் இப்படி புயல் வீசாமல் இருந்ததே ஆச்சரியம்தான். எனவே வலித்தாலும் தாங்கிக் கொள்கிறான்.

சாதாரணமாக வக்காலத்து வாங்கிவரும் அம்மா வும் இன்று அப்படியே பேசாமல் இருப்பது அவளும் அவர்களுடன் சேர்ந்துவிட்டதைக் காட்டுகிறது.

பத்தாததற்கு அப்பா வேறு காணவில்லை என்கிற கவலை.

தேவா தன் அக்காக்களை ஒரு தினுசாக பார்த்து "பேசி முடிச்சாச்சா?" என்று கேட்கும்போது வாசற் பக்கம் ஒரு பொடியன்.

"சார்..."என்கிற சன்னமான குரலோடு உள்ளே வரும் அவனை தேவா பார்த்து "யாருப்பா- என்ன வேணும்?"-என்று கேட்க ஏர்டிக்கட் கவரை நீட்டு கிறான். வாங்கும் தேவா பிரித்து பார்க்க உள்ளே ஏர்டிக்கட் கூடவே ஒரு கடிதம். அதில்....

தேவா!

இது பம்பாய் செல்லுவதற்கான ஏர்டிக்கட். பிரேம் நாத்தும் உனக்கு காவல். பம்பாயில் கன்னாட்பிளேசில் ரம்பா லாட்ஜில் உன்னை எங்கள் ஆட்கள் சந்தித்து ஒரு கோடி கள்ளநோட்டை தருவார்கள். நீயும் மாதுங்கா சென்று வியாபாரத்தை சுச்சிதமாக முடித்து அடுத்த ஃப்ளைட்டில் கிளம்பி வா. வியாபார தங்கம் என்பதால் கஸ்டம்ஸ் கெடுபிடி இருக்காது. வவுச்சர் பில் இருக்கும். இருந்தாலும் தாண்டி வர வேண்டும் . அதை என் சகாக்கள் பார்த்துக்கொள்வார்கள். நீ தங்கம் வாங்கி அவர்களிடம் சேர்த்தால் போதும். தரைமார்க்கமாக அது என்னை வந்து சேரும். மாறாக வேறு பாதையில் போக நினைத்தால் எங்கள் வசம் இருக்கும் உன் அப்பாவை நாங்கள் நல்ல ஜவ்வாது மாலையாக போட்டு பிணமாக வீட்டுக்கு அனுப்ப தயங்க மாட்டோம். உன் மேல் முழு நம்பிக்கை வரும்வரை இப்படி நடப்பதை தவிர்க்க முடியாது. தங்கத்தோடு வா... அப்பாவோடு+கமிஷன் தொகையாக போ. கடிதத்தை படிக்கும் தேவா முகம் வெளிறிப் போகிறது. நிமிர்ந்தால் அந்த சிறுவன் மாயம்.

சந்திராவும், சாவித்திரியும் எட்டிப்பார்த்து கேட்கிறார்கள். "என்னடா என்ன விஷயம்... எங்கே காட்டு?"கடிதத்தை எட்டிப்பார்க்கின்றனர். சட்டென்று மடித்து கவரில் நுழைப்பவன் "ஒண்ணுமில்லை..." அப்பாவை கைலாசம் சார் முக்கியமான ஆபீஸ் வேலையா மெட்ராஸ் அனுப்பியிருக்காரம். எனக்கும் பம்பாய்ல ஒரு வேலை இருக்கு. முடிச்சிட்டு வரச் சொல்லி டிக்கெட் அனுப்பியிருக்கார்"என்று தடா லடியாக சமாளிக்கிறான்.

சமாளித்த வேகத்தில் டிக்கெட்டோடு பிரேம் நாத்தை சந்திக்க கிளம்புகிறான். வீட்டில் எல்லார் முகத்திலும் குழப்பம், கவலை அவன் வெளியேறவும்

அதுமேலும் அதிகமாகும்போது வாசல்பக்கம் கார் ஒன்று வந்து நிற்க உள்ளிருந்து பிருந்தா இறங்கிக் கொண்டிருக்கிறாள்.

# 91



பிருந்தாவை பார்க்கும் சாவித்ரியும், சந்திராவும் அரைமனதாய் "வாங்க" என்று சொல்ல வியர்க்க விறு விறுக்க நுழைபவள் வந்ததும் கேட்ட முதல் கேள்வியே "தேவா இல்லையா?" என்பதுதான்.

"ஏன் எங்களை எல்லாம் பார்த்தா மனுஷங்களா தெரியலியா?" -சந்திரா ஊசி குத்துவது போல கேட்கிறாள்.

"சேச்சே நான் அப்படி சொல்லலை...தேவாவை உடனே பார்க்கணும் அதான். ப்ளீஸ் கொஞ்சம் அவரை."

"அவன் இப்பதான் வெளியே போறான். உங்க அப்பாதான் அவனை பம்பாய் போகச் சொல்லியிருக்காரே..."

"என்னது...என் அப்பா பம்பாய் போகச் சொன்னாரா? என்ன இது பேத்தல்..."

"பேத்தல் இல்ல...ஒரு பையன் வந்து ஏர்டிக்கட்டும் தந்து லெட்டரும் தந்திருந்ததை வெச்சுதான் சொல்றோம். பத்தாததுக்கு என் அப்பாவை வேற வீட்டுக்கே வராமே அப்படியே மெட்ராஸ் போக சொல்லியிருக்கார் உங்க அப்பா..."

"இல்ல...ஏதோ தப்பு நடந்துருக்கு. நான் அப்பாவை பாத்துட்டுதான் வரேன் இந்த ரசமணியை தந்துட்டு

போக வந்தேன்."

"அப்படின்ன எங்க அப்பாவும் மெட்ராஸ் போக லியா?"

"நிச்சயமா இல்லை. சம்திங் ராங்."

"என்ன எழவோ. அவன் நடவடிக்கைகள் எல்லாமே பெரிய புதிர். இது எதுல போய் முடியுமோ தெரியலை."-சாவித்ரி சலிக்க அம்மா பாய்ந்து வருகிறாள்.

"என்னடி சொல்றீங்க... எனக்கு பயமா இருக்குடி."

"எல்லாமே கைமீறி போய்கிட்டிருக்கும்மா. தலை எழுத்தை யாராலும் மாற்ற முடியாது."

-அவர்கள் இடையே வருத்தம் வெடிக்கவும் பிருந்தா மின்னல் வேகமாக ஒரு முடிவுக்கு வருகிறாள்.

"தேவா, பம்பாய் போகப் போறாதாதானே சொன்னீங்க..."

"ஆமாம்...ஏர் டிக்கட்லாம் கைல வெச்சிருந்தானே?"

"அப்ப ஏர்போர்ட்ல அவரைப் பிடிச்சுடலாம். கவலைப்படாதீங்க..."

சொல்லிவிட்டு கிளம்புபவள் பின்னே சந்திராவும் செல்கிறாள்.

"நானும் வரேன்...அவனை பார்த்து நல்லா நாலு வார்த்தை கேட்கணும். அப்பா பத்தியும் தெரிஞ்சுக்கணும்."

"ஓ.கே. வாங்க!" இருவரும் வெளியேறி காரில் ஏற கார் சீற்றம் எடுக்கிறது.

❑ ❑ ❑

பிரேம்நாத் முன்னால் ஏர்டிக்கட்டும், கடிதமும். அவர் முகத்தில கலவரக் கோடுகள். "எமகாதகனா இருக்கானே இந்த தர்மராஜ்" என்று உதட்டில் முணு முணுப்பு,

"அவன் எமகாதகன்றது ஒவ்வொரு விஷயத் துலயும் தெரியுதே...நாம என்ன பண்ண? இந்த இக் கட்டுல இருந்து எப்படி விடுபட்றது?"தேவா கையை பிசைந்து கொண்டு கேட்கிறான்.

"ஆமாம் தேவா...இது விளையாட்டு விஷயமில்ல தமிழ்நாட்டு சமாசாரமா இருந்தாலும் பரவால்ல. ஏதாவது ஒரு டிராமா போடலாம். இது பம்பாய் விவ காரம்."

"சார் விஷயம் பெரிய சவாலானதுதான். சந் தேகமே இல்லை இதை ஜெயிச்சா நிச்சயம் தர்மராஜை நெருங்கிடலாம்..."

தேவாவின் நிமிண்டல் பிரேம்நாத்தை மண் டையை பிய்த்துக் கொள்ள வைக்கிறது. அப்படியே முகம் கசங்கி தலையை சிலிப்பிக் கொள்பவர் "தேவா நாம யாரோட இப்ப பிசினஸ் பண்ணப் போறோம்?" என்று கேட்க அவனும் "ஜெய் கிஷன்தாஸ் பிரதர்ஸ்னு அழைக்கப்பட்ற ஜெய்கிஷன் கிட்ட..."

"இவர் கோல்ட் பிசினஸ் மேனா?"

"ஆமா...சௌத் இண்டியாவுல உள்ள நகை கடை களுக்கு எல்லாம் கோல்ட் பிஸ்கட் சப்ளை பண்ற ஆதரைஸ்ட்டு கோல்ட் மெர்ச்சண்ட். சென்ட்ரல் கவர்மெண்ட்டோட ஸ்பெஷல் பர்மிஷனும் கடாட் சமும் உள்ள பெரிய புள்ளி."

"இவனுக்கு கள்ளநோட்டு எது, நல்ல நோட் எதுன்னு அவ்வளவு கூடவா தெரியாது..."

“நிச்சயமா தெரியும். அவன் தெரிஞ்சுக்கிற துக்குள்ள நாம கழண்டுக்கணும்.”

“சாதாரணமா இந்த மாதிரி பிசின்ஸ்ல செக் டிரான்சாக்ஷன் தானே இருக்க முடியும்?”

“இல்ல...கேஷாவும் வாங்கிக்கிறான் ஜெய்கிஷன். காரணம் வியாபாரத்தை கருப்பு வியாபாரமா செய்தா நிறைய டேக்ஸ் கட்ட வேண்டியிருக்காதே...”

“ஸோ...கிஷன்தாஸ் அண்டர் கிரவுண்ட் சேல்சும் பண்றவன் அப்படிதானே?”

“இல்லேன்னா தர்மராஜ் எதுக்கு கேஷ் கொடுத்து போய் முடிச்சுகிட்டுவான்னு சொல்றான்.”

“அப்ப இதுக்கு ரசீது தருவானா?”

“தருவான்...தந்தாதான் நல்லது. இல்லேன்னாலும் பாதகமில்லை. ஏன்னா தங்கத்தை எடுத்துக்கிட்டு போய் தர்மராஜ்கிட்ட சேர்க்கப் போறது நாம இல்லை. அவன் கோஷ்டியே...”

“அப்படின்னா ஜெய்கிஷன் ஏமாத்தறதுக்கு அவ னுக்கு பயன்படப் போற முகமூடி மட்டும்தான் நாம் இல்லியா?”

“எக்ஸாட்லி...”

“அப்ப ஒண்ணு பண்ணுவோம்...”

“என்ன சார்... ஜெய்கிஷன்கிட்ட முதல்லயே நம்ம பிளா.னை சொல்லிடலாம். வியாபாரத்தை பண்ண வேண்டாம். கள்ள நோட்டையும் போலீஸ்ல ஒப் படைச்சுட்டு தங்கம் உள்ள பெட்டின்னு தர்மராஜ் கோஷ்டிகிட்ட ஒரு வெத்துப் பெட்டிய கொடுப்போம். கொடுத்த கையோட அவங்களை பிடிப்போம். போலீஸ் பாஷைல பேசினா உண்மைய கக்குவாங்க. என்ன சொல்றே?”

"அப்படியே தர்மராஜ் பிடில இருக்கிற எங்க அப்பாவும் உயிரை கக்கிடுவார். அதையும் சேர்த்துக் குங்க..."

தேவா கிண்டலாய் சொன்னாலும் அதுதானே உண்மை. திரும்ப பிரேம்நாத் தாடையை தடவிக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடக்க "நான் ஒரு ஐடியா சொல்றேன்" என்று சொல்லி அதை சொல்ல ஆரம் பிக்கிறான்.

அது...



# 92

ஒரு ஐடியா என்று கையைச் சொடுக்குபவனை ஆர்வமாய் பார்க்கிறார். "என்ன தேவா...சொல்லு" என்று நிமிர்ந்து அமருகிறார் பிரேம்நாத்.

"ஜெய்கிஷன் தாஸ் ஊர்ல இருந்தாதானே வியா பாரம் சிக்கல் எல்லாம்..."

"அப்படின்னா..."

"ஜெய்கிஷன் தாஸ்க்கு மிரட்டல் போன் ஒண்ணு போகப் போகுது. அது அவனை எச்சரிக்கட்டும். அப்ப டியே இங்கு தர்மராஜ்ுக்கும் போன் பண்ணி தர்மராஜ் உன் பிளான் தெரிஞ்சு போயிடிச்சு. பிரேம்நாத்தையும், தேவாவையும் நாங்க கைது செய்யப் போறோம்னு போலீஸ் சொல்ற மாதிரி சொன்னா..."

"ஜெய்கிஷனை எச்சரிக்கை செய்து பம்பாய் லையே இல்லாம பண்ணிடலாம். ஆனா தர்மராஜை எப்படி எச்சரிக்கிறது. போன் நம்பர் தெரியாதே.

ஏர்டிக்கெட்டை நாலு கை மாத்தி கொடுத்துவிட்டவன் நம்பகிட்ட மாட்டுவானா என்ன?"

"இந்த பிளான் ஃபெயிலியர் முத்துப்பாண்டி போட்டு உட்டுட்டான்னு சொன்னா நிச்சயம் அவன் வெளில வந்தே தீருவான்னு நம்பறேன்..."

"அப்ப முத்துப்பாண்டியை பலிகடா ஆக்கச் சொல்றியா, இதுக்கு முத்துப்பாண்டி ஒத்துப்பானா..."

"முத்துப்பாண்டி ஒத்துக்கமாட்டான். அதோட அவன் இப்ப லாக்கப் கைதி. அவனுக்கு ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் கோவாப்பேரசன் நிறைய இருக்கு . ஆகையால் நீங்க சுடுகாட்டுக்கு வெளியே எடுத்த போட்டோவை ஆதாரமா வெச்சு அந்த இன்ஸ்பெக்டர், முத்துப்பாண்டி இரண்டு பேரையும் கைது செய்வோம். கைது செய்தவங்களை யாருக்குமே தெரியாம ஒரு ரகசிய இடத்துக்கு கொண்டு போய்டுவோம்.

அவங்க தர்மராஜ் பத்தி எல்லாம் சொல்லிட்டதா ஒரு பீதியை கிளப்புவோம். இன்னும் இரண்டு நாள்ல தர்மராஜை கைது செய்துடுவோம். ஆளை நெருங்கிட்டோம். அவர் ஒரு பெரிய மனிதர் போர்வைல இருக்கிறவர்னு பத்திரிகைகளுக்கு செய்தியனுப்பு;வோம்."

"அனுப்பினா?"

"நிஜ தர்மராஜ் கொஞ்சமாவது பயப்படுவான். ஊரைவிட்டு தற்காலிகமா ஓடப்பார்ப்பான். அப்ப பிடிக்கலாம்."

"யார்னே தெரியாம எப்படி பிடிப்பே..."

"ஆளைத் தெரியும் சார். நீங்க கவலைப்படாதீங்க..."

"தெரியுமா? என்ன சொல்றே?"

"ஆமாம்...நான் தினமும் சந்திக்கற பேசற நபர்ல ஒருத்தர்தான் தர்மராஜ்."

“என்ன தேவா...புதிர்மேல புதிர் போட்ற?”

“ஆமாம் சார்...நான சந்திக்கற பேசற மனிதர்கள்ல ஒருத்தர்தான்னு பசுபதிநாதன் சொல்லியிருக்கார். நான் சந்திக்கற பேசற மனிதர்கள் யாருன்னு எனக்கு நல்லா தெரியும். எல்லாரையும் கவனிக்கிறேன். யார் இந்த இரண்டு நாள்ல வெளில கிளம்பினாலும் சரி... அவர் தான் தர்மராஜ்...”

“கேக்க நல்லா இருக்கு தேவா. ஆனா இதுல தப்பு நடக்கவும் வழி இருக்கு...”

“தெரியும் ...நிஜமாலுமே நியாயமான காரணத்துக் காக யாராவது ஊருக்கு கிளம்பினாலும் அவங்களை சந்தேகிக்க வேண்டிவரும். அதைத்தானே சொல்றீங்க?”

“அதுமட்டுமில்ல... அந்த தர்மராஜ் ஊருக்கு போகாம உள்ளூர்லேயே எங்கையாவது ஒளிஞ்சுகிட்டா...”

“அதுவும் நல்ல பாய்ண்ட்தான், அதுக்குதான் இன்னொரு ஏற்பாடும் செய்யணும்?”

“என்ன அது?”

“ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் தான் தர்மராஜ்னு முடிவு பண்ணி அவரை கைது செய்யணும்.”

“செய்தா?”

“நான் இல்லைன்னு சாதிப்பான் அந்த ஆள். இல்ல நீதான்னு சொல்லி கேஸை குளோஸ் பண்ணப் பார்க்க ணும்.”

“புரிஞ்சு போச்சு...அந்த ஆள் தனக்கு மேலே உள்ளவனைக் காட்டுவான். அப்படியே போனா தன்னை ஒரு வியூகத்துக்குள்ள வெச்சிருக்கற தர்மராஜ் மாட்டு வான். அதானே?”

“அதேதான்...”

“இப்பவே எஸ்.பி.கூட பேசறேன்...”

பிரேம்நாத்திடம் ஒரு புதிய பாதை தென்பட்டு விட்ட மகிழ்ச்சி.

“சார் ஜாக்ரதை....இதை ரொம்ப ரகசியமா செய்ய ணும். விஷயம் லீக்கானா இன்ஸ்பெக்டர், முத்துப் பாண்டி இருவரும் தலைமறைவாக வாய்ப்பிருக்கு...”

“தேவா எல்லாம் சரி...உன் அப்பா இவன் பிடியிலே இருக்காரே அவருக்கு ஏதாவது ஆபத்து வந்துட்டா...?”

“கடவுளை நம்பறேன் சார்...வேற வழியில்லை... முக்கியமா நம்ம எதிரியா நினைச்சு நாம இதை செய்ய றதா நினைச்சாதான் தர்மராஜ் என் அப்பாவை எதாவது செய்வான். நாமதான் போலீஸ்ல அரெஸ்ட் ஆகிடப் போறோமே... தர்மராஜால அவன் செய்யச் சொன்ன கடத்தலால மாட்டிக்கிட்டவங்கதானே நாம?”

“வெரிகுட்....இப்பவே எஸ்பிக்கு தகவல் தரேன்.”

அசுரவேகம் காட்டுகிறார் பிரேம்நாத்!

❑ ❑ ❑

**போ**லீஸ் ஸ்டேசன்.

எஸ்.பி. ஆபீஸ் ஜீப் ஒன்று புழுதிபறக்க வந்து நிற்கிறது.

எஸ்.பி.விரைப்பாக லாக்கப்பை பார்க்கிறார். உள்ளே முத்துப்பாண்டி அப்பாவியாக அவரைப் பார்க்கிறான்.

“ஆமாம் இவர் லாக்கப்புலதான் இருக்காரா?”

“ஆமாம் சார்!”

“இவரை வெளில பார்த்து சி.ஐ.டி. ஒருத்தர் போட்டோவும் எடுத்துருக்கார் தெரியுமா?”

"இருக்காது சார்..."

"என்ன இருக்காது இதோ பாருங்க போட்டோவை..."

எஸ்.பி. பிரேம்நாத் போட்டோவை காட்டுகிறார்.

"சார்...சார் இது ஏதோ பழைய போட்டோ..."

"தெரியும் இப்படி சொல்வீங்கன்னு போட்டோ படத்துக்கு பின்னால் ஒரு பிணம் எரியுது. நின்னு கிட்டிருக்காங்க. அவங்க இரண்டு நாளைக்கு முந்திதான் சுடுகாட்டுக்கு போயிருக்காங்க. விசாரிச்சுட்டோம்.

நீங்க தர்மராஜ் ஆள் அதனாலதான் இவனை இஷ்டத்துக்கு அவுத்து விட்ருக்கீங்க. உங்களை அரெஸ்ட் பண்றேன்."

-எஸ்.பி.யின் வேகம் புளியை கரைக்கிறது.

# 93

ஏர்போர்ட் ஒன்றுமே தெரியாத மாதிரி அமர்ந் திருக்கும் பிரேம்நாத்தையும். தேவாவையும் கைது செய் கிறது போலீஸ். ஜீப்பில் ஏற்றப் போகும் போது ஓடி வருகின்றனர் பிருந்தாவும், சந்திராவும்.

"தேவா...என்ன இது எதுக்காக கைது செய்ய றாங்க."

"என்னை கேட்டா? போலீசை கேளு"-தேவா சாதாரணமாக பதில் சொல்றான்.

"டேய்...ஏண்டா எங்களை இப்படி குழப்பறே. என்ன தாண்டா நீ பண்றே? கைலாசம் சார் உன்னை

பம்பாய் போகச் சொன்னார்னு எதுக்குடா பொய் சொன்னே... அப்பா வேற இன்னும் வரலை-அவர் எங்கடா..."சந்திரா கதறுகிறாள்.

பிருந்தா ஊடே புகுந்து சட்டென்று அவனை கட்டிக் கொள்பவள் அந்த தருணத்தில் அவன் சட்டைப் பையில் ரசமணியைப் போட்டு விடுகிறாள்!

போலீஸ் பிரித்து விடுகிறது. அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஜீப்பை எடுக்கிறது.

சற்று சங்கடமாக இருந்தாலும் தேவா அர்த்தத் துடன் பிரேம்நாத்தை பார்த்து சிரிக்கிறான்.

பாக்கெட்டில் ஏதோ நிரடவே தொட்டுப் பார்க் கிறான் ரசமணி! அதை பார்த்த மறுநொடி பிருந்தா கட்டிப்பிடித்ததன் அர்த்தம் புரிந்து விடுகிறது. புதிய தெம்பு வந்தது போலவும் இருக்கிறது. பசுபதிநாதன் நினைவு படர்ந்தெழுகிறது.

இனி நினைத்தபடி எல்லாம் நடந்து விடுமோ?

❑ ❑ ❑

**ப**த்திரிகையெல்லாம் பரபரப்பான செய்திகள்! எட்டுக்கால பத்தியில் இன்ஸ்பெக்டர் முதல் பலர் வரை தர்மராஜின் ஆட்களாக இருந்ததன் விரிவுகள்...

கள்ளத்தங்கம் வாங்கச் சென்ற தேவாவும் பிரேம் நாத்தும் கைது என்றும் பளிச்சென்று செய்தி! அதைப் பார்த்து தேவாவின் தாய் சிவகாமி மயக்கமே போட்டு விழுந்து விட்டாள். பிருந்தாதான் இருந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறாள். குடும்பமே பித்துப் பிடித்த மாதிரி இருக்கிறது.

இங்கே இப்படி என்றால் அருணாசலத்தின் வீட் டில் அதைவிட மோசமான நிலை. லேகாவின் முகம்

அழுதழுது வீங்கியே போய்விட்டது. அருணாசலத்துக்கு அவளுக்கு ஆறுதல் சொல்லவே முடியவில்லை.

"லேகா சொன்னா கேளு...தேவா மீள முடியாதபடி குற்றவாளியாயிட்டான். இனி அவனை நினைக்கறதுல அர்த்தமில்லை. மறக்கப்பார். நல்லவேளை இப்ப அவன் நம்ம கடைல இல்லை..."

"அப்படி சொல்லாதீங்கப்பபா. அவர் அப்படிப் பட்ட ஆள் இல்ல. அவ்வளவுக்கும் பின்னால் ஏதோ சதி இருக்கு..."

"சரி இருந்துட்டு போகட்டும்-என்னவோ ஆகட்டும். உரறிய கெட்டு போயிட்ட ஒருத்தனை நான் இனி என் விஷயத்துக்காக கன்சிடர் பண்ண முடியாது. எனக்கு மானம்தான் பெரிசு."

"இதோ பாருங்க...இனி அப்படி ஏதாவது பேசினா நடக்கறதே வேற தேவாவோட இந்த நிலைக்கு ஒரு வகைல காரணமே நாமதான்."

"என்ன சொல்றே நீ...அவன்புத்தி கெட்டு தப்பு பண்ணினதுக்கு நாம எப்படி காரணமாக முடியும்"

"நம்ம கடைக்கு வேலைக்கு வந்ததால இவ்வளவு சிக்கல். நம்ம கடைல கள்ளநோட்டு புழங்கினதாலதான் இத்தனை கஷ்டங்கள்..."

"அதுசரி...போலீஸ் பார்த்துக்கும்னு விட்டுட்டுப் போக வேண்டியதுதானே? இவர் எதுக்கு பர்சனல் இன்ட்ரஸ்ட் எடுத்துக்கணும். இவன் என்ன சி.ஐ.டி.யா? போலீஸ் டிபார்ட்மெண்ட்டா...?"

"ஏன் தனி ஒரு மனுஷனுக்கு பிரக்ஞை இருக்கக் கூடாதா?"

"பிரக்ஞை எல்லாம் எதுலன்னு இருக்கு. கண்டதுல கிடையாது."

"சரி...இனிமே நான் உங்ககிட்டே பேசப்போற தில்லை. நான் பார்த்துக்கறேன். நீங்க சுத்த நன்றியில்லாத மனுஷன் ஆயிட்டீங்க..."

-லேகா பிடிபிடி என்று பிடித்துவிட்டுக் கிளம்பு கிறாள்...துல்லியமான அந்த வினாடிகளில்...

❑ ❑ ❑

**தொ**லைபேசி சப்தத்தை தொடர்ந்து காதைக் கொடுப்பவர் ஐநூத்தி ஒன்று.

"என்னய்யா ஐநூத்தி ஒண்ணு...எல்லாம் யாரோட வேலை?"

"எதுங்க சார்..."

"எதுவா? நாம போட்ட திட்டம் மொத்தமும் போலீசுக்கு தெரிஞ்சிருக்கு. முத்துப்பாண்டியில இருந்து தேவா, பிரேம்நாத்வரை அரெஸ்ட் ஆகியிருக்காங்களே. யார் வேலை?"

"அதான் சார் எனக்கும் தெரியல. யார் போட்டு விட்டதுன்னும் தெரியல...பத்திரிகைகாரங்க இன்ஸ் பெக்டரையும் முத்துப்பாண்டியையும் சொல்றாங்க."

"நான் சொல்றேன்...எல்லாம் அந்த தேவாப் பைய் யன் வேலை. அவன் எனக்கே அல்வா கொடுக்கப்பார்க் கிறான். இது எல்லாம் அவன் செட்டப். அல்வாவை அவனுக்கு நாம கொடுக்கணும்."

"எப்படின்னு சொல்லுங்க சார். செய்துடுவோம்"

"அவன் அப்பா இப்ப எங்க இருக்கார்?"

"நம்ம குடோன்ல."

"நல்லது. நான் சொல்லும்போது அவரை தீர்த்துக் கட்டிடு. பாய்சன் ஊசி போட்டு தீர்த்துக்கட்டணும்.

அதுக்கு முந்தி அந்த நபர் கையால இப்படி எழுதி வாங்கிடு. "நான்தான் தர்மராஜ், ஊருக்காக ஏழை அருணகிரியா வேஷம் போட்டேன். உண்மைல நான் இப்ப பெரிய கோடீஸ்வரன். என் பணம் நகை இருக்கற இடம்லாம் என் மகன் தேவாவுக்கு தெரியும். தேவா, போலீசை திசை திருப்பத்தான் போலீஸ் ஆள் மாதிரி அவங்கள்ல சேர்ந்து நடிச்சுகிட்டு இருக்கான்.

இந்த பொழப்பு என்னோட போகட்டும்னு பார்த்தா என் மகனும் தொடருவான் போல இருக்கு. ஆகையால இதுக்கு ஒரு முடிவு கட்டத்தான் சாகறேன்.

என் சாவை பார்த்தாவது என் மகன் மாறட்டும், என் மகள்களுக்கு நல்ல இடத்துல திருமணம் நடந்தா அதுவே எனக்கு போதும்."

-இப்படி எழுதி கையெழுத்து வாங்கிடு. மற்றதை நான் பிறகு சொல்றேன்.

-தர்மராஜ் அந்த பக்கமாக போனை வைக்க இந்த பக்கத்தில் ஐநூத்தி ஒண்ணு வாயைப் பிளக்கிறார்.

அடேயப்பா இந்த நபர்தான் எத்தனை பெரிய கிரிமினல்?

# 94



**அ**திர்ச்சி ஐநூத்தி ஒன்றிடம் தொடர்கிறது. இப்படி எல்லாம் யோசிக்க தனக்கு தோன்றவில்லையே... தனால் தான் எடுபிடியாகவும் தர்மராஜ் தலைவனாகவும் திகழ்கிறாரோ...? கேள்வி வந்து முட்டுகிறது.

நெடுநேரம் எதையும் செய்யத் தோன்றாமல் தர்ம ராஜ் சொல்வதை எப்படி செயல்படுத்தப் போகி றோமோ என்பதிலேயே இருக்கிறது.

எல்லாம் திட்டமிட்டபடி நடக்குமா? இல்லை மாறிப் போகுமா...கவலையும் குழப்பமும் சில வினாடி தொடர்ந்தாலும் அடுத்து செய்ய வேண்டியதில் கவனம் செல்கிறது.

உடனடியாக அருணகிரியை அடைத்து வைத்திருக் கும் தனது குடோனுக்கு செல்ல ஆரம்பிக்கிறார்.

❑ ❑ ❑

**போ**லீஸ் செல்!

ஒரு புயற்காற்றைப்போல அங்கு வந்து சேருகிறாள் லேகா உள்ளே எனக்கென்ன என்று அமர்ந்திருக்கும் தேவாவை பார்க்கவும் அழுகை பீறிடுகிறது. போலீஸ் ஸ்டேஷனே வேடிக்கை பார்க்கிறது. யாரையும் கேட் காமல் நேராகச் செல்லின் இரும்புக் கம்பிகளை போய் பற்றி நிற்பவளை ஒரு கான்ஸ்டபிள் கண்டிக்கிறார்.

“என்ன மேடம் இது...நாங்க இருக்கோம். நீங்க பாட்டுக்கு இப்படி போய் நின்னா என்ன அர்த்தம்? ஏற்கனவே எங்களுக்கெல்லாம் கெட்டபேர்...”

“யோவ் நின்னு கதை பேசாம அந்த பொண்ணை இந்த பக்கம் அனுப்பு...” புது இன்ஸ்பெக்டரின் குரலைத் தொடர்ந்து லேகாவே அவரை நோக்கி செல்கிறாள். கண்களில் கண்ணீரின் திரட்சி.

“சார்...நான் அவரோட கொஞ்சம் பேசணும். ப்ளீஸ்...”

“அப்படி எல்லாம் பேச முடியாதும்மா. அவர் ஒரு விசாரணை கைதி.”

“அவர் நடிக்கறாரு. அவர் ரொம்ப நல்லவர். இவ்வளவு சிக்கலுக்கும் காரணம் என் அப்பாதான். அவரை வெளியே எடுக்கணும், நான் வேணா வக்கீலை கூட்டி கிட்டு வரட்டுமா?”

“யார் வந்தாலும் ஒண்ணும் பண்ண முடியாது. ஏற்கனவே அவர் ஜாமீன்ல வெளியே வந்திருக்கற ஒரு நபர். அந்த நிலையில் அவர் திரும்ப ஒரு குற்றச்செயல் பாட்டுல இறங்கியிருக்கார்...”

-இன்ஸ்பெக்டரின் விளக்கம் உள்ளே தேவாவை சிரிக்கச் செய்கிறது. பிரேம்நாத்தும் முகத்தை மறைத்துக் கொண்டு சிரிக்கிறார்.

“ஏய் தேவா...அந்த பொண்ணுக்குத்தான் உன்மேல எவ்வளவு நம்பிக்கை பாாத்தியா?”

“ஆமாம் சார்...ஒரு பக்கம் அதை நினைச்சா சந் தோஷமா இருக்கு. மறுபக்கம் ரொம்ப வருத்தமா இருக்கு”

“வருத்தப்பட என்னப்பா இருக்கு”

“என்ன இருக்கா? என் மேல உள்ள காதல்ல அவ இப்படி நடந்துக்கறா. ஆனா என்னால எந்த நிலை யிலையும் அவளை கல்யாணம் பண்ணிக்க முடியாது. நானும் ஜாடை மாடையா எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். புரிஞ்சுக்க மாட்டேங்கறா...”

“நோ தேவா...இதை வளர விடாதே. அது நல்ல தில்ல. நம்ப லட்சியத்துக்கு குறுக்க இவளது காதல் பெரிய தடையாகலாம்.”

“அதை பத்திதான் சார் நானும் யோசிக்கிறேன்.”

“யோசிக்காதே. கூப்பிட்டு மனசு வருந்தும்படி பேசி அறுத்து விடு. அப்பதான் இது அறுபடும். நீ

சொன்னமாதிரி பிருந்தான்னு ஒரு பொண்ணு உனக்காக காத்துக்கிட்டிருக்கா. இந்த நிலைல இந்த பொண்ணு இப்படி செயல்பட்றது உனக்கும் நல்லதில்லை-அவளுக்கும் நல்லதில்லை..."

-பிரேம்நாத் ஏற்றிவிட எழுந்து கம்பிக் கதவு வழியாக லேகாவை பார்க்கிறார். அவள் இன்ஸ்பெக்டரிடம் மல்லுக்கட்டி கொண்டிருக்கிறாள்.

"இன்ஸ்பெக்டர் சார்..." அழைக்கிறான். அவரும் திரும்பிப் பார்க்கிறார். "ஒரு நிமிஷம் அந்த பெண்ணை அனுப்பறீங்களா? ஒரு வார்த்தை சொல்லிக்கறேன்...

-இன்ஸ்பெக்டர் அதற்கு சம்மதம் என்கிற மாதிரி லேகாவை பார்க்கிறார். லேகாவும் அவனை நோக்கி கண்ணீருடன் நடக்கிறாள். தேவா முகத்தில் இப்பொழுது செயற்கை கோபம் அனற்கனலாய் உருவெடுக்க ஆரம்பிக்கிறது.

"இதோ பார் லேகா, எனக்காக நீ இப்படி உருகறதை, கஷ்டப்பட்றதை இத்தோட நிறுத்திக்கோ. நான் எப்பவும் உன்னை லவ் பண்ணினதில்லை. என் மனைவியா பிருந்தாதான் வரமுடியும். உன்னை பார்க்கறதுக்கு முந்நி இருந்தே அவள் என் காதலி, இதை தெரிஞ்சுக்கோ, இப்ப இந்த இடத்தை காலி பண்றியா?"

-தேவா விடுவிடுவென்று போட்ட போடைப் பார்த்து ஆடிப்போகிறாள் லேகா. சிலைபோல நின்று அவனை பார்க்கிறாள். தேவா ஆவேசமாக பேசி விட்டு சட்டென்று திரும்பி பிரேம்நாத் அருகே சென்று நிற்க அவர் தோளை தட்டி ஆறுதல் கூறுகிறார்.

ஆனால் லேகாவிடம் அவன் சொன்னது வேறு விதத்தில் எதிரொலிக்கிறது.

"இனி ஒரு நிமிஷம் நான் உயிரோட இருக்க மாட்டேன் தேவா..."

-என்று கத்தியபடி அவள் அங்கிருந்து ஓட ஆரம்பிக்கிறாள்.

# 95



**லே**கா வெளியே சென்று விட்டாள். சென்றவிதம், கத்திய விதம் எல்லாமே தேவாவுக்கு துளி பீதியை கிளப்பத்தான் செய்கின்றன. அது அவன் முகத்தில் பரவி துல்லியமாக தெரிகிறது.

"என்ன...ரொம்ப பயந்துட்டியா? இந்த பொம்பளங்களே இப்படித்தான். பூச்சாண்டி காட்டுவாங்க பலமா-காதுல வாங்கிக்ககூடாது."

-பிரேம்நாத் திரும்ப வந்து சமாதானம் செய்கிறார்.

"இல்ல சார்...லேகா பூச்சாண்டி காட்டற டைப் கிடையாது. லேகா..."

"சரி. அதுக்காக எவ்வளவு நாளைக்கு ட்ராமா போடுவ. ஒருநாள் ஒரு முடிவுக்கு வந்துதான் தீரணும்?"

"வாஸ்தவம்தான். ஆனா அது எதுவும் விபரீதமாக ஆயிடக்கூடாதேன்னுதான் கவலைப்படறே..."

"நம்ம கைல எதுவுமே இல்லை தேவா. நீயும் நானும் நினைச்சு பார்த்திருப்போமா. இப்படி லாக்கப்புல இருக்கப்போறதை? நாம எப்பவுமே சூழ்நிலை கைதிகள்தான். விரும்பியோ விரும்பாமலோ சில நேரங்கள்ல சிலமாதிரி நடந்துக்கத்தான் வேண்டியிருக்கு..."

"என்ன சொன்னாலும் சரி...லேகாவை நினைச்சா ரொம்ப பயமா இருக்கு. கூடவே அப்பா நினைப்பும் இப்ப சேர்ந்துருச்சு..."

"ஆமாம்ல... அந்த தர்மராஜ் கிட்ட உங்கப்பா என்ன பாடுபட்டுக்கிட்டிருக்காரோ, ஒரு தர்மயுத்தத்துல எத்தனை பேர் கஷ்டப்பட வேண்டியிருக்கு..."

"இத்தனை கஷ்டங்களுக்கும் நல்ல பலன் கிடைக்குமா சார். காசு பணத்தை அடகு வெச்சு போராட்றவங்களுக்கு நடுவுல கேரக்டரையே அடமானமா வெச்சு நாம போராடிக் கிட்டிருக்கோம். ஜெயிச்சுருவோமா சார்?"

"ப்ளீஸ்...ஆல்வேஸ் பீ பாசிடிவ் தேவா நினைப்பு தான் செயலாகுது. என்னால முடியும், என்னால முடியும்னு நினைச்சே பழகணும். அது எவ்வளவு பெரிய செயலா இருந்தாலும் சரி. முடியும்னு நினைக்கும்போது முடிஞ்சு போயிடுது அது. முடியும்னு நினைக்கிறது ஒரு மந்திரம் தேவா."

-பிரேம்நாத் தெம்பூட்டுகிறார். தேவா சற்று நிமிர்கிறான்!

❑ ❑ ❑

**அ**ருணகிரி! தேவாவின் அப்பா....

கஷ்டப்படுவதற்கென்ற சிலர் இந்த உலகில் பிறக்கிறார்கள். கோடி ரூபாய் அவர்களுக்கு கிடைத்தாலும் அதை அப்படியே ஒதுக்கிவிட்டு தொடர்ந்து கஷ்டப்படுவார்கள். அருணகிரி அந்த ஜாதி. அதிர்ந்து பேசத் தெரியாது. அழகான துணி உடுத்தத் தெரியாது. ஏன் இருக்கிற இடமே யாருக்கும் தெரியாது. அப்படிப்பட்டவரை ஒரு நாற்காலியில் கட்டிப் போட்டிருக்கிறார்கள்.

எதற்காக இப்படி செய்திருக்கிறார்கள் என்பதுகூட அவருக்கு தெரியவில்லை. கட்டிப்போடப்பட்ட நிலையில் எதிர்ப்பு காட்டக்கூட தெரியாமல் தனக்கு காவல் இருக்கின்றவர்களை பார்த்துக் கேட்கிறார்.

"ஏம்ப்பா...நான் ஒரு சாதாரண வைண்டர். எட்டாம் கிளாஸ்! என்னைப் போய் முதலாளி கூப்பிட்டதா சொல்லி கூட்டி வந்து கட்டி போட்டு வெச்சிருக்கீங்களே எதுக்குப்பா?"

"எதுக்குன்னு சொன்னா நீ புரிஞ்சுக்க போறீயா இல்லை புரிஞ்சுதான் ஏதாவது ஆகப் போகுதா?"

"இப்படி சொன்னா எப்படிப்பா? என் மகன் ஏதாவது தப்பு பண்ணிட்டானா அதுக்கு தண்டனையா என்னை பிடிச்சிக்கிட்டு வந்துட்டீங்களா?"

தப்பு பண்றவனா உன் மகன்? ஏழையா பொறந்துட்டாலும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி ஹீரோவாகிட்டவன் ஆச்சே...

"அதுல என்ன தப்பு?"

"அது தப்பு இல்ல-ஆனா ஹீரோ வில்லனை எதிர்க்கறது தப்பு தானே?"

"அப்ப என் மகன் எதிர்த்த அந்த வில்லன் யார்?"

"அத எங்களாலேயே கண்டுபிடிக்க முடியலை. நீதான் தெரிஞ்சுக்க போறியாக்கும்?"

"என்ன அதிசயமப்பபா இது...ஒரு வில்லன் தன் சகாக்களுக்கு கூட தெரியாம சினிமால இருந்து பாத்துருக்கேன். நிஜத்துலையுமா?"

"நிஜம்தானே பின்னால சினிமா ஆகுது?"

அவர்கள் சகஜமாக பேசிக் கொண்டிருக்கும் போது, அங்கு நுழைகிறார் 501. அவர் வரவும் அனைவரும் விரைப்பாக எழுந்து ஒதுங்கி நிற்கின்றனர்.

"என்னடா அரட்டை இந்த ஆள்கூட...?"

"ஒண்ணுமில்லைங்க...சும்மா அப்படியே வாயை கிண்டிக்கிட்டிருந்தோம்."

"சரி சரி போங்க அப்பால..." அவர்களை விரட்டி விட்டு 501 அருணகிரி எதிரில் ஒரு ராஜபார்வை பார்க்கிறார். கைவசம் சுருட்டி எடுத்து வரப்பட்டிருக்கும் ஒரு காகிதம். அருணகிரி தன்னை ஒருவிதமாக பார்க்கும் 501-ஐ தானும் ஒருவிதமாக பார்க்க,

"வணக்கம் முதலாளி..." என்று கிண்டலான ஆரம்பம் ஐநூத்தி ஒன்றிடம்.

"என்னப்பா கிண்டல் பண்றியா..."

"இல்ல ...இனி நீங்கதான் எங்க முதலாளி. அதான் அப்படி சொன்னேன்"

"எனக்கு புரியலியேப்பா..."

"புரிய வைக்கறேன். இதுல ஒரு கையெழுத்து போட்றீங்களா?"

"எதுக்கு?"

"இங்க சொல்றதை செய்யணும். கேள்வியெல்லாம் கேட்கக்கூடாது."

"சரிப்பா..." அருணகிரி இத்தனை சீக்கிரம் சம்மதம் சொல்வார் என்று 501 நினைக்கவேயில்லை. தர்மராஜ் சொன்னதுபோல எழுதி எடுத்து வந்திருந்த காகிதத்தை நீட்ட அதில் எல்லாம் அவரது கையெழுத்து பதிய ஆரம்பிக்கிறது. கூடவே முகத்தில் ஒருவித சிரிப்பு!

# 96



**அ**ந்த சிரிப்பு 501-ஐ ஏதேதோ நினைக்கச் செய் கிறது.

“என்ன முதலாளி கேட்ட உடனே கையெழுத்து போட்டுட்டீங்க என்ன எழுதியிருக்குன்னு கூட படிக் கலை கையெழுத்து போட்டுட்டு பெரிசா சிரிக்க வேற செய்றீங்க?”

“சிரிக்காம வேற என்ன பண்ணச் சொல்றே? நடக் கறது தானே நடக்கும்?

“அப்படின்னா?”

“தலைகீழா நின்னாலும், தண்ணியே குடிச்சாலும் ஏற்கனவே தீர்மானிச்சதை யாராலையும் எதுவும் செய்ய முடியாது. அதான் சிரிச்சேன்.”

“கொஞ்சம் தெளிவா சொல்றீங்களா?”

“இதைவிட என்னப்பா தெளிவா சொல்ல இருக்கு, நான் எதுக்காக கையெழுத்து போட்டாலும், போடாட்டியும் அடுத்து நடக்க இருக்கறதை யாராலை யும் மாத்த முடியாது.”

“அடுத்து நடக்க இருக்கறதைன்னா..”

“நீ கடிதத்துல எதை எழுதியிருக்கையோ அதைன்னு வெச்சுக்கயேன்.”

அதுல எல்லா தப்பையும் உங்கமேல தூக்கி போட்ருக்கோம். நான்தான் காரணம்னு நீங்க எழுதி யிருக்கீங்க இந்த தவறுகளுக்கு உங்க மகனும் பொறுப்

புன்னு சொல்லியிருக்கோம். எங்க கண்ல விரலைவிட்டு ஆட்டலாம்னு நினைக்கிற உங்க மகனை நாங்க ஆட்டப் போறோம். சினிமால ஹீரோ ஜெயிக்கலாம். ஆனா நிஜவாழ்க்கலை எப்பவும் வில்லன்கள்தான் ஜெயிக்க றாங்க.

-ஜெயிக்கப் போறாங்கன்னு புரூஃப் பண்ணப் போறோம்." 501-ன் பேச்சு திரும்ப அருணகிரிக்கு சிரிப்பை தருகிறது. சாதாரணமாய் இந்த மாதிரி கூட்டத்தில் ஒரு மனிதர் அழுவார், பிடிவாதம் பிடிப்பார், ஆகாசத்துக்கும் பூமிக்கும் எகிறிக் குதிப்பார். ஆனால் இங்க எல்லாமே தலைகீழாக இருக்கிறது.

இம்மியளவு பதற்றமும் அருணகிரியிடம் இல்லை. இப்படி ஒரு டென்ஷனே இல்லாத மனிதரை 501-உம் பார்த்ததேயில்லை. அந்த வியப்பை முகத்தில் தேக்கும் 501.

"என்ன முதலாளி...இவ்வளவு சொல்றேன் பதற்றமோ பயமோ இல்லாம சிரிக்கிறீங்களே..."

-என்று ஆழம் பார்க்க ஆரம்பிக்கிறார்.

"சிரிக்காம என்ன செய்யட்டும். நான் குற்றவாளின்னு சொன்னா யார் ஒத்துக்குவா? நான் முப்பது வருஷாமா மகாதேவி மில்லுல முப்பது ரூபா சம்பளத்துல தொடங்கி இன்னிக்கு மூவாயிரம் ரூபா சம்பாத்யம் வரை வந்துருக்கற ஒரு சாதாரண லேபர். என் குடும்பமும் ஒண்டுக் குடுத்தனத்துலையும், காலனிகள்லையும் குடியிருந்து இப்பதான் என் மகனால ஏதோ கொஞ்சம் முன்னுக்கு வந்துருக்கு. கடிதத்தை படிச்ச உடனேயே போலீஸ் இலாகா இது ஒரு திசை திருப்பல்ன்னு முடிவு கட்டாதா...?"

யோசிக்க வைக்கிறார் அருணகிரி.

"ஏன் முதலாளி...ஊரை ஏமாத்த நீங்க போட்ட வேஷம் அதுன்னு நினைக்கலாம் இல்லியா?"

"சரி வேஷம் போட்டேன்னே வெச்சுப்போம்- எல்லாம் எதுக்கு? சம்பாதிக்கத்தானே?"

"ஆமாம்"

"அப்படி சம்பாதிச்சதை அனுபவிக்காம மில்லுல கிடந்தா கஷ்டப்படுவேன்? குடும்பத்தையும் கஷ்டத்துல வெச்சுருப்பேன்?"

-அருணகிரி ஆனாலும் அதிகமாக 501-ஐ யோசிக்க வைக்கிறார்.

"என் முதலாளி ஒண்ணும் முட்டாள் இல்லை. எல்லா கணக்கையும் போட்டு பார்த்துட்டுதான் இந்த முடிவுக்கு வந்துருப்பார்."

-என்று 501 சமாளிப்பதைக் கேட்டு திரும்பவும் சிரிப்பு அருணகிரியிடம்.

இந்த சாதாரண லேபர் மனிதனுக்குள் இத்தனை அழுத்தமா?

வாய் பேசாத மௌனி பேசினால் இப்படியா அர்த்தமுள்ள கேள்வியாக அது இருக்கும். மிக மோசமான ஒரு சிக்கலிலும் சிரிக்க முடியுமா என்ன?" அசந்து போனார்.

"இப்படி எதுக்கெடுத்தாலும் சிரிச்சா நாங்க அசந்துவிடுவோமா? எல்லாத்துக்கும் துணிஞ்சுதான் இறங்கியிருக்கோம்."

-என்று கையெழுத்து வாங்கின பேப்பரை உறை யில் போடுபவர் அடுத்து விஷ ஊசி போட கொண்டு வந்த கிட்பேக்கை திறக்கிறார்.

"என்ன ஊசி போட்டு கொல்லப் போறியா?"

-கச்சிதமாக கேட்கிறார் அருணகிரி.

"அது எப்படி உங்களுக்கு தெரியும்?"

"இந்த மாதிரி கேஸ்லல்லாம் எல்லாரும் இப்படித் தான்யா நடந்துப்பாங்க. விஷ ஊசி கொலை வழக்குன்னு ஒண்ணு நடந்தது படிச்சிருக்கியா பேப்பர்ல?" இல்லையே... இது வீரப்பன் யுகம். அவன்தான் இப்ப கிரிமினல் கேஸ்ல அரசன். எங்க காலத்துல லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கு, விஷ ஊசி கொலை வழக்கெல்லாம் தான் ரொம்ப ஃபேமஸ்."

-அருணகிரி துளிகூட பதற்றமின்றி அவனுக்கு கதை சொல்வதுபோல சொல்லத் தொடங்க அவனும் அதற்கு காது கொடுக்கிறான்.

"ரொம்ப சாமர்த்தியமா ஊசியை போட்டு போட்டு பலபேரை கொன்னுட்டாங்க. ஆனா போலீஸ் பிடிச்சுட்ட பிறகு தப்பிக்க முடியலை. எப்படின்னு கேக்க றியா?"

-501 ஆமாம் என்கிற மாதிரி பார்க்கிறார்.

"தானா ஊசி போட்டுக்கறதுக்கும், அடுத்தவங்க ஊசி போட்றதுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. கைல ஊசி போட்ற இடம் கைவாகுக்கு தகுந்த மாதிரி மாறும். அந்த மாற்றத்தை வெச்சும் போலீஸ் இது தற்கொலை-இல்லை பிறர் செய்த கொலைன்னு கண்டுபிடிச்சுரும்."

அருணகிரிக்குள் துப்பறியும் மூளைகூட இருப்பது மெல்ல தெரிய வருகிறது. 501-ன் முகம் வெளிற ஆரம் பிக்கிறது.

"நீங்க கொலைக்கு அஞ்சாதவங்கதான் ஒத்துக் கறேன். போலீஸ்ல கூட உங்களுக்கு ஆள் இருக்கு

ஒத்துக்கறேன். அதுக்காக செய்யறதை சரியா செய்ய வேண்டாமா? இல்லேன்னா சின்ன ஓட்டைபோதும் சின்ன ஓட்டைன்னா ஊசித் துவாரமளவு இருந்தா கூட போதும். சாமர்த்யமுள்ள போலீசுக்கு அதுவே பெரிய விஷயமாயிடும். கிட்ட நெருங்கிடுவாங்க."

அருணகிரி நிதானமாக 501-ஐ கலாய்க்கத் தொடங்குகிறார்.

## 97



**அ**சருவது என்பது அகராதியிலேயே இல்லாத நபர் 501. இருந்தும் அருணகிரியின் மிருதுவான பேச்சும், பதற்றமேயில்லாத அணுகுமுறையும் 501-ஐ அசத்துகிறது. ஒரு வினாடி புத்தி தடுமாறுகிறது. இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ஜ் நடுங்குகிறது.

"நான் சாக பயந்து இதை சொல்லலை. வாழ்க்கைல பிறக்கும்போதே சாகற தேதியும். ஒருத்தருக்கு நிச்சயமாயிடுது. இந்த இரண்டும் யாரோட கையிலையும் இல்லை. அதனாலதான் சிலர் சாக ஆசைப்பட்டும் முடியாம பிச்சைக்காரங்களா, ஆண்டிகளா வயிறு வளர்க்கறாங்க. சிலர் வாழ விரும்பியும் முடியாம செத்துப் போறாங்க.

நான் என் வாழ்க்கைல இதுவரை ஒரு ஈ எறும்புக்கு கூட கெடுதல் நினைக்கலை. சாகும்போது உன்னை மாட்டி விட்டுட்டு சாக என் மனசு இடம் கொடுக்க மாட்டேங்குது; அந்த விஷஊசியை தா நானே போட்டுக்கறேன்."

-அருணகிரி ஒரு யோகியைபபோல மிருதுவாகப் பேசி 501-ஐ பார்க்கிறார்.

"ஊஹூம்...மாட்டேன் உங்ககூட பேசினது தப்பா போச்சு. கண்டதை சொல்லி என் மனசை கலைக்க பார்க்கறீங்க. பயமே இல்லாம இருக்கீங்களேன்னு உங்களை பார்த்து கேள்வி கேட்டது தப்பாபோச்சு. நீங்க என்னை வசியப்படுத்த பார்க்கறீங்க. நான் மயங்க மாட்டேன்" 501 தீவிரமாகிறார். விஷம் குடுவையில் இருந்து சிரிஞ்சுக்கு மாறுகிறது. முகத்திலும் கடூரம் பரவுகிறது.

குத்துவதற்காக கிட்டே நெருங்குபவரை பார்த்து ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு, நான் நிம்மதியா சாகறேன் என்கிறார் அருணகிரி.

"என்ன?"

"அந்த தர்மராஜ் யாருன்னு உனக்கு தெரியுமா?"

"..."

"என்ன, ஸ்தம்பிச்சுட்டே...உன் முதலாளி பேரை எப்படி சொல்றேன்னா...? இங்க இருந்தாங்களே தடியன் கள் -அவங்க பேசிகிட்டதுல இருந்து தெரியவந்தது. அவர் யாருன்னு உனக்கு தெரியுமா?"

"தெரியாது..."

"தெரியாத ஒரு மனிதனுக்காகவா நீ இவ்வளவு பெரிய கொலைகாரன் ஆகறே?"

"இது என்ன கேள்வி..தன்னை மறைச்சு வெச்சு கிட்டிருக்கிறது அவர் சாமர்த்தியம்."

"அந்த சாமர்த்தியம் உனக்கு வேண்டாமா?"

-நானும் என்னை மறைச்சு வெச்சுக்கிட்டிருக்க றவன்தான். 501-ன்னாதான் எல்லார்க்கும் என்னை

தெரியும். என் உண்மையான பேர்-தொழில் யாருக்குமே தெரியாது...”

“அது என்னப்பா ஜெயில்கைதிக்கு நம்பர் தர்ற மாதிரி உனக்கு போய் 501, 601ன்னு நம்பர்...?”

“சரி...இனியும் உன்னை பேசவிட்டா என்னை குழப்பிடுவே. உன்னை வாயில்லா பூச்சின்னு நினைச்சது என் தப்பு. அப்பா, பிள்ளை எல்லாருமே எமகாதகன்கள்தான்”...501 அதுவரை தந்த மதிப்பு மரியாதையை விட்டு விட்டு ஊசி போட ஆயத்தமாகி ஒரு சில துளிகளே சிரிஞ்சில் இருந்து பீறிடும்போது குண்டைத் தூக்கிப் போடுகிறார் அருணகிரி.

“தர்மராஜ் நிஜமா பெரிய சாமார்த்தியசாலிதான். என்கிட்ட போட்ட சபதத்துல ஜெயிச்சுட்டான் அவன்!”

-501 அடுத்த நொடி அதிர்ந்து திரும்பிப்பார்த்து “என் முதலாளியை தெரியுமா?”-என்று கேட்கிறார் வெகு வேகமாக ... “தெரியாம...உலகத்துலயே தர்மராஜ் யாருன்னு தெரிஞ்ச ஒரே ஆள் நான் தானே.” -அருணகிரி. 501-ஐ சுழற்றத் தொடங்குகிறார்.

“பொய்...நான் நம்பமாட்டேன்...முதல்ல உன்னை கொன்னுட்டுதான் மறுவேலை. விட்டா நான்தான் தர்மராஜ்னு கூட சொல்வே போல இருக்கே...”

ஊசியை கையின் சதைமேல் பதித்து குத்தியும் விடுகிறது 501-ன் கரங்கள்.

“ஆக்கப் பொறுத்த உனக்கு ஆறப்பொறுக்க மாட்டேங்குதே. நான் ஆள் யார்னு சொல்றேன் அதுல உண்மை இல்லைன்னா என்னை என்னவேணா செய். எனக்கு நேர்ந்த கதி உனக்கு நேரக் கூடான்னு பார்க்கறேன். நல்ல எண்ணத்துல சொல்றேன். கொஞ்சம் காது கொடுக்கமாட்டியா? நான் பதற்றப்படாம இருக்க

காரணமே தர்மராஜ் பத்தி எனக்கு நல்லா தெரிஞ் சுருக்கறதாலதான்..."

-அருணகிரியின் பேச்சும், அவரது உறுதியான விதியும்501-ஐ சற்று கவனிக்கச் செய்கிறது. ஊசி தோலை விட்டு பிரிகிறது.

"யார் தர்மராஜ் சொல்?"

"தர்மராஜை நீ தெரிஞ்சுகிட்டா எனக்கு என்ன தருவே?"

"சாகப்போற உனக்கு நான் என்ன தரமுடியும். நீதான் எதை வாங்கிக்க முடியும்?"

"குறைஞ்சபட்சம் என் மகனை காப்பாத்தலா மில்லியா?"

"அவன்தான் போலீஸ்ல இருக்கானே...?" 501 மெல்ல திரும்பவும் வலையில் விழுகிறான். "போலீஸ்ல குற்றவாளியா இல்லையே... அவங்க ஆள் போலத்தானே இருக்கான்?" அருணகிரியும் சாதுர்யம் காட்டுகிறார்.

"தெரியும் ...அவன் ஒரு போலீஸ் கையாள்தான். அதுக்கென்ன இப்போ?"

"என்னப்பா சாதாரணமா கேட்டுட்டே. நீ யார் என்ன ஏதுன்னு கூட என் மகனுக்கு தெரியும்" அருணகிரி போட்ட போடில் 501-க்கு தூக்கி வாரிப் போடுகிறது.

"என்னய்யா சொல்றே...நான் யார்னு தெரியுமா?"

"தெரியாம...உங்க கூட்டத்தோட வரலாறே அவன் கிட்ட இருக்கு. அதுமட்டுமல்ல... அப்பா உங்களை கடத்தி என்னை வழிக்கு கொண்டுவர பார்ப்பாங்க. தர்மராஜ் இந்த விஷயத்துக்கு 501-ஐ பயன்படுத்துவான். இந்த 501 யார் என்ன பண்றாங்கறதை கண்டுபிடிச்

சுட்டோம், அவன் உங்களை ஏதாவது செய்யப் பார்த்தா இதை சொல்லி அப்ரூவர் ஆக்கப் பாருங்க.

இல்லேன்னா பராவாயில்லை... உயிர் போகட்டும். ஆனா அவன் தப்பிக்க முடியாதுன்னு உன்னை பத்தி சொன்னானே?" -அருணகிரி கொஞ்சம் சளைத்தவனை பெரிய அளவில் உலுக்கவே தொடங்கிவிடுகிறார்.



# 98

அருணகிரியின் வளைப்புக்கும் நல்ல பலன் தெரி கிறது 501-ன் முகம் மிகவும் மாறிப்போகிறது. ஆனால் எல்லாம் சில வினாடிகள்தான்.

"சரி...அந்த தர்மராஜ் யாருன்னு சொல்லு. அது மட்டும் உண்மையா இல்லேன்னா நடக்கறதே வேற அதோட என்னை பத்தி உன் மகனுக்கு தெரியும்னு சொன்னதையும் நான் கன்ஃபர்ம் பண்ணிகிட்டு உன் கிட்ட வரேன்.

நீ தற்காலிகமாக தப்பிக்கறதுக்காக இந்த பொய் களை சொல்லியிருந்தா வந்து உன்னை சும்மா விட மாட்டேன். பீஸ் பீஸா கிழிச்சு போட்டுடுவேன்..."

501 கறுவிக்கொண்டே ஊசி சிரிஞ்சை அப்படியே ஓர் ஓரமாக வைத்துவிட்டு கேட்க ஆரம்பிக்கிறான்.

"என் முதலாளி தர்மராஜ் யாரு?"

"அவர் பேர் ராமச்சந்திரன், தர்மராஜ்ங்கறது உங்களுக்காக வெச்சுட்டிருக்கற பேர். அண்ணாநகர்ல வால்மீகி தெருவுல உள்ள மனோரஞ்சன்கற பங்களால

இருக்கார் அவர். போய் சந்தேகத்தை தீர்த்துக்கோ அப்படியே லாக்கப் செல்லுல இருக்கற என் மகனை போய்ப் பார். அவன் உன்னை பார்க்கற பார்வையிலேயே நீ எல்லா விஷயமும் பொய்யா மெய்யான்னு தெரிஞ் சுப்பே...”

“நல்லாயிருக்கே...செல்லுக்கு போய் இந்தா குடுமி-பிடிச்சுக்கோன்னு கொடுப்பேனா நான். உன் மகன் விஷயத்தை எப்படி சரி செய்துக்கறதுன்னு எனக்கு தெரியும். வரேன்.”

*501 வெளியேறுகிறான். அருணகிரியிடம் தற் காலிகமாய் பெருமூச்சு. அடியாள் பட்டாளம் இப் பொழுது திரும்பவும் சுற்றி வளைத்து நிற்கத் தொடங்கு கின்றனர்!*

❑ ❑ ❑

**அ**ந்த பிரத்யேகச் செய்தி பிரேம்நாத் எதிர் பார்த்தபடி எட்டுக் காலபத்தியில் எல்லா பேப்பர் களிலும் வந்து விட்டது. கள்ள நோட்டு அதிபர் தர்ம ராஜை போலீஸ் அடையாளம் தெரிந்து கொண்டது என்பதில் இருந்து இன்னும் இரண்டு நாளில் பிடித்து விடுவோம் என்பது வரை எல்லா பேப்பர்களுமே செய் தியை போட்டு முடித்துவிட்டன. ரயில் நிலையம், ஏர்போர்ட், பஸ் ஸ்டாண்ட், மதுரையின் பிரதான அவுட்போஸ்ட் என்று சகல இடங்களிலும் நாணயமான போலீசின் கண்காணிப்பு தொடங்கிவிட்டது.

இந்த செய்தி ஒரு பக்கம், இதனால் உருவான குழப்பம் மறுபக்கமாக இருக்கிறது. பிருந்தா செய்தியை பார்த்து விட்டு கைலாசத்தையும், செல்வாவையும் அழைத்து ஒரு மகாநாடே போட்டுவிட்டாள்.

“அப்பா...தேவாவை நாம உடனடியாக பாக்கணும். இந்த செய்தியெல்லாம் அவராலதான்னாலும் வேறு விதமாகவும் நடக்க வாய்ப்பிருக்கு... எனக்கு ரொம்ப பயமா இருக்குப்பா....”

“எனக்கும்தாம்மா...அந்த தர்மராஜ் நம்மை என்ன செய்வானோன்னு நினைச்சா அதவிட பயமா இருக்கு. நாமளும் தேவாவும் ராசியாயிட்டது தர்மராஜ்க்கு தெரியாது. ஆகையால வழக்கம் போல என்னை பிளாக் மெயில் பண்ணிதான் தப்பிக்க ஏதாவது செய்யலாம்.”

“என்ன செய்யறான்னுதான் பார்ப்போமே...இந்த தடவை நிச்சயம் அவன் நேரடியாதான் உங்க கூட பேசுவான். அவன் எங்க இருந்து பேசினாலும் சரி-நம்பரை ட்ரேஸ் பண்ணச் சொல்லியிருக்கேன். அது மட்டுமல்ல உங்க நம்பரை எல்லா எஸ்.டி.டி. பூத்துக்கும் கொடுத்து இந்த நம்பரை ட்ரை பண்ற நபரை நல்லா பார்த்துவெச்சுக்க சொல்லியிருக்கேன் கவலையே படாதீங்க. அவனை பிடிக்க போலீஸ் ஒரு பக்கம் தன் பாணியில ட்ரை பண்ணினா நானும் ஒரு பாணியில் முயற்சி செய்துருக்கேன். அவன் எப்ப பேசுவான்னுதான் காத்துக்கிட்டிருக்கேன்...”

செல்வாவும் தன் பங்குக்கு கிரிஸ்ப்பாக சில செய்திகளை புத்திசாலித்தனமாகவே செய்துதான் வைத்திருக்கிறான். ஆனால் போன் தான்வரவில்லை.

“அப்பா...வாங்க தேவாவை லாக்கப்புல விட்டு வெச்சுருக்கறது எனக்கு என்னமோ மாதிரி இருக்கு. போய் பார்த்துட்டு வருவோம்...” பிருந்தா காதலாகிக் கசிகிறாள்.

“போகக்கூடாதும்மா...போயெல்லாம் பார்க்கக் கூடாது. பார்த்தா அந்த தர்மராஜ்க்கு தெரியவந்து நம்ம பிளான் கெட்டுப் போயிடும். தேவா நடத்திக்கிட்டுருக்

கிறது தர்மயுத்தம். பொறுமையா நடக்கறதை கவனிப்போம்..."

கைலாசம் விவேகமாக பதில் சொல்லி கண் கலங்கி விட்ட பிருந்தாவை தேற்றும் போது அவர்கள் ஆவலாக காத்திருக்கும் தொலைபேசி சப்திக்கிறது.

செல்வா பாய்ந்து சென்று எடுக்கிறான்.

எல்லோர் கவனமும் செல்வாவின் மேல் நிலைக்க அவன் முகத்தில் அசுர மாறுதல்கள்.

"என்ன செல்வா...தர்மராஜா? என்ன சொன்னான்?" நடுங்கியபடி கேட்கிறார் கைலாசம்.

"இல்ல அங்கிள் இந்த போன் அவன்கிட்ட இருந்து இல்லை..."

"அப்படின்னா யார்கிட்ட இருந்து சீக்கிரம் சொல்."

"சொல்றேன். அந்த நகைக் கடைக்காரர் பொண்ணு லேகா இல்லை...."

"ஆமாம்...அன்னிக்குகூட நம்ம வீட்டுக்கு வந்துச்சே... அதுக்கென்ன?"

"அது விஷம் சாப்பிட்டு ஆபத்தான நிலைல ஆஸ்பத்திரியில இருக்காம். நம்ம பிருந்தாவை பார்க்கணுமாம். ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்லி அந்த பொண்ணோட அப்பா அருணாசலம் போன் பண்ணி பேசினார்..."

"வாட் எ ஸ்டுப்பிட் திங்க்...!" கைலாசம் கவலை கொள்ள பிருந்தா எழுந்திருக்கிறாள். அதே சமயம் திரும்பவும் தொலைபேசி சப்தம்!

# 99

இந்த முறை கட்டாயம் தர்மராஜாகத்தான் இருப்பான் என்று செல்வா நினைக்க அது ஊர்ஜிதமாகிறது.

"யார் பேசறது...கைலாஷா?"

"இல்ல....செல்வா பேசறேன். நீங்க யாரு?"

"உனக்கு தெரிய வேண்டிய அவசியமில்ல. போனை அந்த ஆள்கிட்ட கொடு..."

-டெலிபோன் கை மாறுகிறது.

"யெஸ்...கைலாஷ் நடக்கற நாடகத்துல உனக்குக் கூட பெரிய அளவுல பங்கு இருக்குபோல இருக்கே..."

"நாடகமா...என்ன சொல்ற தாமராஜ்?"

"இன்னும் நடிக்கிறியே...நான் ஆயிரங்கண் உடையவன் கைலாஷ். ஒவ்வொரு கண்ணும் ஒவ்வொரு இடத்தை பார்த்துக்கிட்டிருக்கும். அதுல இருந்து எதுவுமே தப்ப முடியாது..."

"அதுசரி...இப்ப நாடகம் அது இதுன்னு சொன்னியே என்ன நாடகம்? நான் என்ன செய்தேன். உன் விருப்பத்துக்கு மாறா எதையும் செய்யலியே..."

"செய்யாமதான் உன்வீட்ல வேலை பார்த்த என்னோடா உளவாளி ரோட்ல ஓடிவந்து அடிபட்டு செத்தானா?"

"அவன் உனக்கு துரோகம் செய்யப் பார்த்தான். அதை தேவா கண்டுபிடிச்சுட்டான்.அதனால தப்பிக்க பார்த்தான். அடிபட்டு செத்தான். இதுல எங்க தப்பு எதுவும் இல்லை தர்மராஜ்..."

"திரும்பவும் சொல்றேன் கைலாசம். சினிமால மட்டும்தான் வில்லன் தோப்பான். நிஜவாழ்க்கை அப்படியில்லை. நான் மாடுமேய்ச்சு, சாணி தட்டி, பிளாட்ஃபாரத்துல படுத்து எழுந்து வாழ்க்கைல முன்னுக்கு வந்தவன். எப்படி தப்பு செய்யறதுங்கறதை விட மாட்டிக்கிட்டா செய்த தப்புல இருந்து எப்படி வெளிய வரதுங்கறதுலதான் முதல்ல என் கவனம் இருக்கும். அத்தோட என்னோட விஸ்வா சியார் எதிரி யார்னு நல்லா தெரிஞ்சுதான் பழகறேன். இதை நீ புரிஞ்சுக்கணும்."

"இந்த பீடிகையெல்லாம் எதுக்கு தர்மராஜ். இப்பவும் சொல்றேன் நீ சொன்னபடிதான் நான் நடந்துகிட்டிருக்கேன். என் மகளையே உன் பேச்சுக்காக தேவாவுக்கு கொடுக்க நான் முன் வரலியா?"

"அப்படியா....சரி இப்ப சொல்றேன் கேட்டுக்க. எந்த நிலையிலையும் இனி உன் மகளுக்கு தேவாவைக் கொடுக்க கூடாது. அவன் இனி லேகாவைதான் கல்யாணம் செய்துக்கணும்."

"என்ன தர்மராஜ் குண்டைத் தூக்கி போட்றே... நினைச்சு நினைச்சு மாத்த கல்யாணம் என்ன ரெடிமேட் சட்டையா?"

"இந்த கதையெல்லாம் என்கிட்ட வேண்டாம். நீ தானே சொன்னே, என் பேச்ச கேக்கறதா? தேவா லேகாவைதான் கல்யாணம் பண்ணிக்கணும். இனி பிருந்தாவை நினைச்சுக்கூட பார்க்கக்கூடாது. இதுல தெரிஞ்சுடும் நீ என் பேச்சை கேக்கறவனா இல்லியான்னு...டொடக்!"

-தர்மராஜ் மறுமுனையில் முடக்கி விட இந்த பக்கத்தில் ஏராள வியர்வையோடு கைலாஷ் நிலை குலைந்து சோபாவில் விழுகிறார்.

"என்ன அங்க்கிள் சொன்னான் தர்மராஜ்?" செல்வா அவர் முகம் முன் முட்டுவது போல போய் நிற்கிறான்.

"என்னத்த...நாம போட்ட பிளான் எல்லாம் அவனுக்கு அணு சுத்தமா தெரிஞ்சிருக்கு. எப்படின்னே தெரியல. எனக்கு ஆயிரம் கண்ணுன்னு வசனம் பேசறான்."

"குலைக்கற நாயும் அப்படித்தான். கடிக்காது..."

"சும்மாயிரு செல்வா...உயிர்க்குலையே வலிக்கற அளவு கடிச்சுட்டான் அவன்..."

"என்ன சொன்னான்?"

"பிருந்தாவுக்கும் தேவாவுக்கும் கல்யாணம் பண்ணக் கூடாதாம். தேவா இனி லேகாவுக்கு தானாம்..."

-பிருந்தா அடுத்த நொடி காலில் முள் ஏறியது போல விடைக்கிறாள்.

"என்ன இப்படி கட்சி மாத்தறான்."

"அவன் பயங்கர டேஞ்சரஸ் பர்சனா இருக்கான். இந்த வீட்ல ஏங்காவது மைக்ரோ மைக்-பிக்ஸ் பண்ணி நாம பேசறதை எல்லாம் கேக்கறானோ என்னவோ. நம்ம திட்டம் பூரா தெரிஞ்சிருக்கு..."

"சாத்யமே இல்லை அங்கிள். ஒரு எலெக்ட்ராணிக்ஸ் டாக்டரை வெச்சு வீடு பூரா செக் பண்ணிட்டேன். அந்த மாதிரி இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ் எதுவும் இல்லை."

"அதுவா இப்ப முக்கியம். என் கல்யாண விஷயத்துல உங்க முடிவு?"

-கலங்கிப்போய் விட்டிருக்கிறாள் பிருந்தா.

“பிருந்தா யார் சொன்னாலும் சொல்லலேன்னாலும் தேவாதான் உன் வருங்கால கணவன். இதுல மாற்றமில்லை. மாற்றமிருக்க தேவாவும் இடம் கொடுக்க மாட்டான். ஏன் அநாவசிய கவலைப்பட்றே?”

“சரிம்மா-நீ இப்ப முதல்ல அந்த லேகா பொண்ணைப் போய் பார்த்துட்டுவா. சாகக் கிடக்கற அதோட விருப்பம்தான் இப்ப நமக்கு முதல்ல...”

“மனிதாபிமான ரீதியா நீங்க சொல்றது சரி. ஆனா இந்த சூழ்நிலைல பிருந்தா லேகாவை பார்த்தா சிக்கல் வரும்னு தோணுது அங்க்கிள்...”

“எது வந்தாலும் சரி...முதல்ல மனிதாபிமானம். அப்புறம்தான் மற்றதெல்லாம் நீ கிளம்பும்மா...”

-பிருந்தா கிளம்புகிறாள். பிருந்தா சென்ற மறு நொடி செல்வா: கைலாஷை குடைய ஆரம்பிக்கிறான்.

“அங்க்கிள்...லேகாவே சாகக் கிடக்கற, ஆனா தர்மராஜோ அவளுக்கு தேவாவை தரணும்கறான், குழப்பமா இல்லை?”

“என்ன குழப்பம் செல்வா?”

“சாகக் கிடக்கிறவ பிழைச்சுடுவான்னு நம்பி இப்படி சொல்றானா இல்லை சாகக் கிடக்கறதே ஏதாவது நாடகயா?”

“செல்வா நீ ரொம்ப குழப்பறே?”

“குழப்பலே அங்க்கிள் தெளியறேன். முதல்ல பிருந்தான்னவன் இப்ப ஏன் லேகாங்கறான். அடுத்து தங்கம், வெள்ளி, கள்ளநோட்டு , கறுப்பு பணம்னு வியாபாரம் செய்யறவன்-செய்ய வேண்டியவன் கல்யாண விஷயத்துல்லாம் ஏன் தலையிடறான்...?”

“முடிவா என்னதான் சொல்றே?”

“அந்த தர்மராஜுக்கும் தேவா கல்யாண வாழ்க்கைக்கும் ஏதோ ஒரு முக்கிய தொடர்பு இருக்குன்னு சொல்றேன்.”

-செல்வாவின் சேஸ் கைலாஷுக்கு வியப்பை தருகிறது.



# 100

**செ**ல்வா சொல்வதில் அர்த்தம் இல்லை என்று நிச்சயம் ஒ்துக்கிவிட முடியாது. ஒரு கள்ளக்கடத்தல்காரன் காசு சம்பாதிப்பதை விட்டு விட்டு எதற்காக இப்படி உறவு முறைகளில் எல்லாம் தலையிடுகிறான்? கைலாஷின் மண்டையையும் கொத்துகிறது அந்த கேள்வி.

“சபாஷ் செல்வா. உன் கேள்வியை என்னால சாதாரணமா நினைக்க முடியல. அப்படின்னா அந்த தர்மராஜ் தேவாவுக்கு உறவுக்காரனாவோ இல்லை, உறவால பாதிக்கப்பட்டவனாவோ இருக்கலாம்னு தோணுது. என் கருத்து சரிதானே?”

“ஆமாம் அங்கிள். நீங்க சொல்ற கேட்டகரிலதான் அவன் இருந்தான். முன்ன ஏன் பிருந்தாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொன்னான். இப்ப ஏன் மாத்தி லேகாவை கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்றான்கறதுல எல்லாம் கொஞ்சம் நுழைஞ்சா விஷயம் விளங்கிடும்.”

“இதுல விளங்க என்னபபா இருக்கு? லேகாவுக்கு அவனை கொடுன்னா நான் தப்பிச்சேன்னு நினைக்க

றேனா இல்லை வருத்தப்பட்றேனான்னு சோதிக்கக்கூட இருக்கலாமில்லையா?"

"இப்போதைக்கு நீங்க வருத்தப்படணும் அதை செய்யுங்க அங்க்கிள். மத்ததை நான் பார்த்துக்கறேன்."

"அது சரி...ஏதோ .அவன் போன்ல பேசினா ட்ரேஸ் பண்ண பல ஏற்பாடு பண்ணி வெச்சுருக்கேன்னுல்லாம் சொன்னியே. அது என்ன ஆச்சு. அவன் நம்மகூட பேசி முடிச்சு பத்து நிமிஷம் ஆயாச்சு. யாரும் போனே பண்ணலையே..."

"அதான் எனக்கும் புரியலை. ஒருவேளை வெளியூர் எஸ்.டி.டி. பூத்ல இருந்து பண்ணியிருப்பானோ?" - செல்வா தாடையை வருடும்போது அவசியமில்லை என்கிறாற் போல தொலைபேசி அழைக்கிறது.

"யெஸ்..செல்வா ஸ்பீக்கிங்."

"சார்...நான் சுப்ரமண்யபுரம் முதல் மெயின் ரோட் பூத்ல இருந்து பேசறேன். நீங்க் சொல்லியிருந்த மாதிரி உங்க நம்பருக்கு ஒருத்தர் இங்கே இருந்து பேசினாரு."

"வெரிகுட்...அவர் எப்படி இருந்தாரு?"

"வேஷ்டி சட்டைல இருந்தார். கண்ணாடி போட்டுருந்தார். கார்ல வந்து பேசிட்டு போனார். கார் நம்பர் கூட நோட் பண்ணி வச்சிருக்கேன்."

"சபாஷ்...என்ன நம்பர்?"

"என்ன சார் நீங்க... நேர்ல வாங்க தரேன். கொஞ்சம் என்னையும் கவனிக்க வேண்டாமா?"

"அவ்வளவு தானே... இப்பவே வரேன்..." தொலைபேசியை முடக்கிவிட்டு உற்சாகமாக நிமிருமுன் கைலாஷை பார்த்து கண் சிமிட்டுகிறான்.

“அங்க்கிள்...புலி வலைல மாட்டிகிச்சு இனி அது தப்ப முடியாது...”

“நிஜமாவா செல்வா...யார்னு தெரிஞ்சு போச்சா?”

“கிட்டதட்ட அரைமணி நேரத்துல நபர் யார்னு சொல்றேன் பாருங்க...”-சிட்டாக வெளியே பறக்கிறான் செல்வா.

காத்திருக்கும் பியட்டையும் ஒரு புரவியை போல தட்டி கிளப்புகிறான்.

கைலாஷ் மெல்ல திரும்பி ஹாலில் அமர்ந்திருக்கும் பிள்ளையார் விக்ரகம் ஒன்றைப் பார்த்து கைகூப்புகிறார்.

❑ ❑ ❑

**ஹா**ஸ்பிடல்.

சலைனும், குளுகோசும் மாறிமாறி ஏறியதில் சுமாராக தேறியிருக்கிறாள் லேகா. திரும்பவும் மயக்கம் இருந்தும் ஒரு பக்கம் குளுகோஸ் இறங்கிக் கொண்டிருக்கிறது. பக்கமாக அருணாசாலமும் வேலைக்கார பெண்ணும் நின்று கொண்டு துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர். மெல்ல உள்ளே நுழைகிறாள் பிருந்தா.

“வாம்மா...” அருணாசலம் வேற்றுமையெல்லாம் துளியும் இன்றி வரவேற்கிறார்.

“என்ன சார் இரு...நீங்கள்லாம் இருக்கும்போது லேகாவை எப்படி இப்படி செய்ய அனுமதிச்சீங்க?”

-சப்தமில்லாத குரலில் விசாரிக்கிறாள். “தெரிஞ்சா விடுவேனாம்மா. அதுலையும் என் மகள்தான் எனக்கு உலகம்னு இருக்கும்போது விடுவேனா என்ன?”

"இப்ப எப்படி இருக்காங்க?"

"அபாய கட்டத்தை தாண்டிட்டதா சொல்றாங்க. ஆனா எனக்கு இன்னும் பயமாத்தான் இருக்கு..."

"பயப்படாதீங்க. வர்ற வழியிலே கோயிலுக்கு போய்ட்டுதான் வந்துருக்கேன். இனி எதுவும் நடக்காது."

-பேசிக்கொண்டே மீனாட்சி கோயில் குங்குமத்தை பேக்கில் இருந்து எடுத்து நெற்றியில் இடுகிறாள்.

"உன்னை பார்க்கணும் உன்கூட பேசணும்னா. அதான் வரச் சொன்னேன். என்ன மந்திரம் போட்டானோ அந்த தேவா சதா அவன் நினைப்புதான். தேவா வந்துட்டானா... தேவா வந்துட்டானான்னு அதே கேள்விதான்."

"நிஜமா சொல்றேன். லேகா இவ்வளவு தூரம் தேவாவை விரும்பறது தெரிஞ்சிருந்தா நான் குறுக்கிட்ருக்கவே மாட்டேன்."

"எதுதான் நம்ம விருப்பத்துக்கு நடக்குது. சொல் பார்ப்போம். தேவாவும் இப்ப ரொம்ப மாறிட்டான். குற்றவாளியை கண்டுபிடிக்க வேஷம் போடப் போறேன்னு சொல்லி தப்புமேல தப்பா பண்ணிகிட்டே போறான். இது எதுல போய் முடியும்னு தெரியலை."

"இப்ப கவலைப்படறதவிட காரியம் செய்யறது ரொம்ப முக்யம். லேகாவை பார்க்க பார்க்க எனக்கு பரிதாபமா இருக்கு. இப்பக்கூட நான் விலகிக்கிறேன் சார். தேவாவுக்கே லேகாவை கல்யாணம் பண்ணிக் கொடுங்க . ஒரு பெண்ணோட ஆசை மேல் நான் என் வாழ்க்கையை அமைச்சுக்க விரும்பலை. இதை லேகா கிட்ட சொல்லிடுங்க."

அதே போல தேவாவையும் நடிச்சது போதும் தர்மராஜ்ங்கற கடத்தல் பேர்வழியை போலீஸ் கண்டு பிடிக்கட்டும். நீங்க வந்து லேகாவோட செட்டில் ஆகற வழியைப் பாருங்கன்னு சொல்லுங்க.''

"இதை தான்மா நான் ஆரம்பத்துல இருந்தே சொல்றேன். நேத்துக்கூட லாக்கப்ல பாத்து பேசினேன். தேவா கேட்க மாட்டேங்கிறான். என்னம்மா பண்ணட்டும்.''

"இனி கேட்பார். கவலைப்படாதீங்க. லேகாவை தான் அவர் கல்யாணம் செய்துக்கணும்னு அந்த கடத்தல் காரன் கூட சொல்லிட்டான்.''

"மீறினா என்ன நடக்குன்னு தேவாவுக்கும் தெரியும். அது மட்டுமல்ல நானும் இனி தேவா விருப்பத்துக்கு இணங்க போறதில்லை. நீங்க முதல்ல லேகா-தேவா கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்க.''

-சற்று ஆவேசம், சற்று கலக்கம், சற்று கண்ணீர் என்கிற கலவையில் பேசிவிட்டு கிளம்புகிறாள் பிருந்தா.

அருணாசலத்துக்கு அவள் முடிவு திகைப்பை தந்திருக்கிறது. என்ன ஒரு ஆச்சரியமான பெண் இவள்?

## 101



சுப்ரமணியபுரம் எஸ்.டி.டி.பூத் அதன்முன் பியட்டை அமைதிப்படுத்தி விட்டு இறக்கை முளைத்தவனாட்டம் பாய்ந்து இறங்குகிறான் செல்வா. உள்ளே நுழைகிறான்.

“வாங்க சார்...உங்களுக்காகதான் காத்துகிட்டிருக்கேன்.”

பூத் வைத்திருக்கும் நபர் பீடிகை போடுகிறான்.

“சரி சரி கார் நம்பர் என்ன சொல்லு...”

“ஆமாம் எதுக்கு சார் இப்படி பர்சனலா ட்ரேஸ் பண்றீங்க. எதுனா வில்லங்கமா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா. நீ நம்பரை கொண்டா.”

“முதல்ல ஐயாயிரத்த வெட்டுங்க.”

“ஐயாயிரமா?”

“அப்ப சரி...நீங்க வேற இடம் பாருங்க.”

“சரி இந்தா...”செல்வா ஐயாயிரத்தை ஒரு கட்டாக தூக்கிப் போட, “இப்படின்னு தெரிஞ்சிருந்தா பத்தாயிரத்துக்கு வெடி வெச்சிருப்பேன்” என்றும் அவன் கார் நம்பர் எழுதிய துண்டுசீட்டை எடுத்து நீட்ட கழுகைப் போல கவ்விக் கொள்ளும் செல்வா அடுத்து நேராக குறிவைப்பது ஆர்.டி.ஓ. ஆபிசுக்குதான்...

❑ ❑ ❑

**அ**ண்ணாநகர் வால்மீகி தெருவில் பயத்தோடு நுழைந்திருக்கிறான் 501. எங்கே இருக்கிறது மனோரஞ்சன் பங்களா? விழிகள் தேட பங்களாவும் பணக்கார பவிசோடு கண்ணில் படுகிறது. விசிறி வாழை ஜெர்மன் புல்வெளி, போகன் வில்லா, பொமரேனியன் நாய் கூட்டம் என்று எல்லா பணக்கார சமாச்சாரங்களும் தெரிய வாசலில் கூர்க்கா. 501 நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டு கூர்க்காவிடம் நைசாக பேச்சு கொடுத்து பார்க்கிறான்.

"ஐயா உள்ள இருக்காரா?"

"யார் முதலாளியா?"

"ஆமாம்..."

"அவர் எங்க இங்க இருக்காரு...அவ அமெரிக்கா போய் மாசம் இரண்டாச்சே..."

-கூர்க்கா பதில் 501 ன் நெஞ்சில் குத்துகிறது.

"ராமச்சந்திர முதலாளியா அமெரிக்கா போயிருக்காரு..."

"வேற யார்...அவரேதான்."

-501 அதற்கு மேல் நிற்க பிரியமின்றி தன் இருப்பிடம் திரும்ப ஆயத்தமாகும் போதுஅருணகிரி மேல் அசாத்ய கோபம்.

"யோவ் அருணகிரி நீ என்னையே நல்லா குழப்பி விட்டுட்டே. உன்னை முதல்ல பரலோகம் அனுப்பிட்டு தான் மறுவேலை! என்று மனதில் அந்த கோபம் உருத்திரளும் போது கூர்க்கா கைதட்டி அழைக்கிறான்.

"ஏய்...கொஞ்சம் வா."

"என்ன?"

"நீ யார்...எதுக்கு கேட்டே?"

"சும்மாதான். சாரை பார்க்கணும் அதான்!"

"ராமச்சந்திர முதலாளிதான் ஊர்ல இல்லை. ஆனா அவர் தம்பி தர்மராஜ் உள்ளதான் இருக்காரு. அவரை பார்க்கறியா?"

"என்னது தர்மராஜா?"

"ஆமாம். அவர் பேர் தர்மராஜ். உனக்கு தெரியா தாட்டம் இருக்கே. சரி சரி போய்க்கோ..."

“ஏய்...இல்லையில்லை! தர்மராஜ் சார் இங்கதான் இருக்கார்னு தெரியாது. அதான் அப்படி கேட்டேன்.”

“அப்ப இரு...உன் பேர் என்ன சொல்லு முதலாளி கிட்ட கேட்டுட்டு உன்னை நான் அனுப்பறேன்.”

“பரவால்ல நான் பாத்துக்கறேன்.”

“என்ன பாத்துக்கறே...தெரியும்னு சொல்லிட்டு பார்க்காம போனா என்ன அர்த்தம்?”

“இது என்னய்யா வம்பா போச்சு... பாக்கறதும் பாக்காததும் என் விருப்பம். ஆளைவிடு நான் வரேன்.”

-501 பயத்துடன் எங்கே தர்மராஜ் சப்தம்கேட்டு எட்டிப்பார்த்து தான் தேடிவந்தது தெரிந்து நொறுக்கி எடுத்துவிடுவாரோ என்று பயப்பட, கூர்க்கா எகிறி சட்டைக் காலரை பற்றுகிறான். அதுவரை நேபாள தமிழ் பேசியவன் தூய தமிழுக்கும் மாறுகிறான்.

“ஏய்...உண்மைய சொல். மாஜி பிரைம் மினிஸ்டர் கொலை வழக்குல ஸ்பெஷல் ஆபீசரா இன்வெஸ்டிகேட் பண்ண நியமிக்கப்பட்டிருக்கற தர்மராஜ் சாரை வேவு பாக்கவந்தவன் தானே நீ.”

“என்னது தர்மராஜ் சார் ஸ்பெஷல் ஆபீசரா?... ஐய்யா நான் வந்ததே வேறு விஷயத்துக்கு நீ என்னப்பா என்னென்னமோ சொல்றே?”

“தெரியும்...வீட்டை நோட்டம் போட்டுட்டு போய் பிறகு சாமர்த்யமா வந்து எங்க குண்டு வைக்கலாம் எப்படி வைக்காலம்னுல்லாம் பிளான் பண்ணுவீங்க. எங்களுக்கு தெரியாதாக்கும்...”

“ஐய்யோ...சத்யமா நீ சொல்ற எதுவும் எனக்கு தெரியாது. ஆளைவிடு”...501 ஓடப்பார்க்க திபுதிபுவென்று உள்ளிருந்து சில போலீஸ் முகங்கள் எட்டிப்

பார்த்து ஓடி வருகின்றன. அவர்களின் கைகளில் எல்லாம் துப்பாக்கி-501 ஆடிப்போய் அப்படியே கையை உயர்த்த ஒருவர் அவனை அரெஸ்ட் செய்கிறார்.

501-ன் முகத்தில் பேயறைந்தது போல மாற்றம். எதற்கோ கிளம்பி எங்கோ போனவனைப் போலாகி விட்டது நிலை.

"சார் சொல்றத கேளுங்க...நான் பார்க்க வந்த தர்மராஜ் வேற. இவர் ஸ்பெஷல் ஆபீசர். இவரை நோட்டம் போட்டு நான் என்ன பண்ணப் போறேன்"

-501 விளக்கம் தரும்போது சட்டை பாக்கெட்டை எல்லாம் சோதிக்கிறார். ஒரு போலீஸ்காரர். அதில் தர்மராஜ் சொன்ன குறிப்புகள்...அதை படிக்கிறார்.

"ஆமாம் உன்பேர் என்ன?"

"விக்ரம்"

"இதுல 501-ன்னு...போட்ருக்கு."

"அது...அது...என் டோக்கன் நம்பர்."

"எந்த ஆபீஸ்ல?"

"ஆபீஸ்ல...ஆபீஸ்ல?"

"ஓ.கே...இந்த ஆள் கமிஷனுக்கு எதிரா ஏதோ பண்ண வந்தவன்தான். கட்டிவெச்சு பஞ்சாப் கட்டு போடுங்க. தன்னால உண்மையை சொல்வான்."

"ஐய்யய்யோ...சத்யமா நான் நீங்க நினைக்கற மாதிரி ஆள்கிடையாது. நம்புங்க சார்...நம்புங்க சார்." கத்தக்கத்த 501-ஐ தூக்கிப்போகிறது போலீஸ்.

அது சரி...அருணகிரிக்கு எப்படி தெரியும் 501ஐ இப்படி டைரக்ட் செய்தா அது இப்படித்தான் முடியும் என்று?

# 102



**வி**டையை அருணகிரியே சொல்லிக் கொண்டிருக்கிறார்.. சுற்றிலும் 501 ஆல் காவலுக்கு நிற்கும் தடியர்கள்.

"ஊசி போடவந்த உங்க பாஸ் ஊசி போட வேண்டியதுதானே? போட்டுருந்தா இந்த நிமிஷம் செத்துருப்பேன். ஆனா அதைவிடவும் அந்த ஆளுக்கு வேற விஷயம் பெரிசாபோச்சு மாஜி பிரதமர் கொலைல அவருக்கும் சம்பந்தம் இருக்கறதா க்ளியர் பண்ணிகிட்டு உன்கிட்ட வரேன்னுட்டு போயிட்டான்.

தர்மராஜ்கிட்ட தலையால அடிச்சுகிட்டேன். இவனை மாதிரி ஆளை எல்லாம் வெச்சுக்காதே. கடைசியில சிக்கல்ல கொண்டு போய் நிறுத்திடுவாங்கன்னு. கேக்கலை அவன்..."

-அருணகிரி மிக சாதாரணமாக தர்மராஜையும் பேச்சில இழுத்துப்போட்டு பேசவும் தடியர்களுக்கு முள் குத்தியதுபோல் ஒரு வலியும் ஆச்சரியமும்.

"என்ன கிழவா பீலா விட்றே... எங்க தலைவரை என்னமோ நேர்ல பார்த்தமாதிரி"-ஒருவன் எகத்தாளமாக கேட்கிறான்.

"ஏன் பார்க்க முடியாதா...உன் தலைவன் என்ன பரமசிவனா இல்லை மகாவிஷ்ணுவா? பார்க்க முடியலைங்கறதுக்கு...இன்னும் சொல்லப்போனா அவனை எனக்கு நல்லா தெரியும்கற காரணத்தாலேயே அவன் என்னை கொல்ல பாக்கறான். அதை தெரிஞ்சுக்குங்க."

-அருணகிரி அசராமல் அவர்களை கலாய்க்கத் தொடங்குகிறார்.

"நம்பவே முடியவில்லையே..."

"அப்படின்னா 501 எனக்கு இந்த நிமிஷம் ஊசி போட்டு முடிச்சிருக்கணுமே ஏன் போடலை?"

"அதுக்கும் ஊசிபோட்றதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கு...நிறைய இருக்கு...நான் செத்து போயிட்டா நானும் தர்மராஜும் எடுத்துகிட்ட போட்டோ எங்க இருக்குன்னு தெரியாம போயிடுமே..."

"அப்ப இப்ப சொல்லிட்டியா?"

"ஆமாம் அதை எடுக்கத்தான் போயிருக்கான். அப்படியே போலீஸ்ல தன் பேர் இருக்கான்னு தெரிஞ் சுக்குவாராம்..."

"நாங்க இப்ப உன்கிட்ட கேக்கறோம். 501-க்கும் அந்த கொலைக்கும் தொடர்பு உண்டா என்ன?"

"தர்மராஜ் எதை நேரா செய்திருக்கான். 501 தானே அவனோட ஆயுதம். செய்திருந்தாலும் செய்திருப் பான். போகட்டும் கொஞ்சம் கைகட்டை அவிழ்த்து விடுங்களேன். டாய்லெட் போகணும் அவசரமா..."

"அது மட்டும் முடியாது. விளையாட்றியா?"

"சரி...அந்த ஊசியையாவது போட்டு கதையை முடி. எனக்கு இந்த அவஸ்தை இல்லாம போனா போதும்."

அருணகிரியின் விளையாட்டில் தடியன்களிடம் பூச்சி பறக்க ஆரம்பிக்கிறது. குழப்பம் சிண்டை பிய்க் கிறது.

"யோவ் உண்மை சொல்லு...சாதாரண வைண்டர் நீ உனக்கென்னமோ உலக அளவுல தொடர்பு இருக்கற

மாதிரி பேசறே. தர்மராஜ் முதலாளியை எல்லாம் தெரியும்கறே. காதுதானே குத்தறே...”

“ஆமாம் அப்படியே வெச்சுகிட்டு ஒண்ணு ஊசியை போடுங்க. இல்லை கை கட்டை அவிழ்த்து விடுங்க. என்ன நம்புங்க. நான் நீங்க நினைக்கற மாதிரி தப்பு பண்ற ஆள்லாம் இல்லை. டாய்லெட் போய்ட்டு ஓடி வந்துடுவேன்.”

அருணகிரியின் அசாத்ய மனோதிடமும் புத்தி சாலித்தனமான மூவ்களும் அந்த முரட்டு மனிதர்களை அவர்களுக்கும் மூளைக்கும் சம்பந்தமில்லை என்றாக்கு கின்றன. வேறு வழி தெரியாமல் அதே சமயம் ஊசி போட தைரியமும் இல்லாமல் கை கட்டை அவிழ்த்து விடுகின்றனர். டாய்லெட் கதவருகே ஒருவன் எஸ்கார்ட் போல நின்று கொள்கிறான்.

கட்டவிழுந்து எழுந்து நிற்கும் அருணகிரி முத லில் சோம்பல் முறிக்கிறார். கால்கள் மரத்துப் போயிருக்கின்றன அருகிலேயே டேபிள் மேல் 501 வைத்துவிட்டு சென்ற ஊசி உள்ளே விஷத்தோடு படுத்துக்கிடக்கிறது. அருணகிரி பார்வை அதை ஒரு முறை பார்க்கிறது.

வினாடியில் அதை கையில் எடுக்கிறது. எடுத்த வேகத்தில் நிமிர்பவர் கண்களில் அசாத்ய கனல். தடி யர்கள் அதை பார்த்து அரண்டு போய்விட ஒருவன் பாய்ந்து அதை பறிக்கப் பார்க்கிறான்.

“வேண்டாம்...கிட்ட வராதீங்க. இதை நான் குத்தி கிட்டாலும் சரி, இல்ல நீங்க குத்திவிட்டாலும் சரி” அதிகப்படி முப்பது வினாடிதான் அப்புறம் நம்ம பூமிவாசம் ஞாபகம் இருக்கட்டும். கிழவன்தானே தட்டிவிட்டுடலாம்னு மட்டும் நினைக்காதீங்க. ஸ்டேனர்

பிடிச்சுபிடிச்சு காப்பு காஞ்சு போன கை. உங்க வேகத்துக்கு கொஞ்சமும் சளைக்காது ஜாக்ரதை..."

அருணகிரியின் அரட்டலும், உருட்டலும் அவர்களை குழப்பி பயமுறுத்த அருணகிரி அங்கிருந்து நேராக தொலைபேசி இருக்கும் இடத்திற்கு செல்கிறார். ஊசியை ஒருகையில் குத்துவது போல் பிடித்தபடி நின்று கொண்டு டைரக்டரியை புரட்டுகிறார். அதில் தர்ம ராஜன் என்று பேர் வரும்வரிசையில் அண்ணாநகர் வால்மீகி தெரு தொடர்பை பிடித்து விசாரணை கமிஷன் ஸ்பெஷல் ஆபிசரின் அலுவலக எண்ணைப் பார்க்கிறார்.

அடுத்த நொடி தர்மராஜின் தொடர்பில் தொலைபேசியின் அலறல்.

"வணக்கம்...தர்மராஜ் சார் இருக்காரா நான் அவரோட பால்ய ஸ்னேகிதன் அருணகிரி பேசறேன்னு சொல்லுங்க..."

சில வினாடிகளில் தர்மராஜே நேரடி தொடர்பில்....

"டேய் அருணா எப்படிடா இருக்கே?"

"நல்லா இருக்கேன். தர்மா. பரவால்லியே நல்லா ஞாபகம் வெச்சிருக்கியே..."

"ஆமாம் எப்படி கண்டு பிடிச்ச என்னை?"

"என்ன தர்மா...உன்னை கண்டுபிடிக்கறதா கஷ்டம்? நான் சாப்பிட மறந்தாலும், தினசரி பேப்பரை டீக்கடைல படிக்க தவறினதில்லை. நீதான் பயங்கர பிரபலம் ஆச்சே. பேப்பர்ல உன் போட்டோ, பேரை எல்லாம் பார்த்து சந்தோஷப்படுவேன்."

"ரொம்ப சந்தோஷம். எப்ப வரே வீட்டுக்கு...?"

"அதுக்கு முந்தி ஒரு விஷயம் அங்கு 501-ன்னு ஒரு வினோத பேரோட உன்னை விசாரிச்சுகிட்டு யாரும் வந்தாங்களா?"

"ஆமாம்...என் ஆட்கள் அவனை சந்தேகப்பட்டு என்கொயரி பண்ணிகிட்டருக்காங்க..."

"கடவுளுக்கு நன்றி. என் கணக்கு பொய்யாகலை, தர்மா அவனை விட்டுடாதே. அவன் நீ தேட்ற கொலை யாளிகளை விட மோசமானவன். மிச்சத்த நான் நேர்ல சொல்றேன். கொஞ்சம் இப்ப நான் இருக்கற அட்ரசுக்கு வரியா? நான் பெரிய ஆபத்துல இருக்கேன்."

"என்ன ஆபத்து..அட்ரஸ் என்ன?"

"சொல்றேன். டேய் தடியன்களா இந்த வீட்டு அட்ரஸ் என்ன? சொல்லுங்க..." அருணகிரி புதுத்தெம்பு வந்தமாதிரி கேட்கும் அந்த நொடியில் ஒரு தடியன் அப்படியே அவரது ஊசி பிடித்த கையை மடக்கி அவரது இடுப்புப் பக்கம் வளைச்சு, அந்த ஊசி இடுப்பில் ஏறுகிறது!



# 103

அருணகிரியின் இடுப்பில் ஏறும் அந்த ஊசி அவரை ரீசிவரை கீழே விட்டபடி கத்த வைக்கிறது.

"தர்மா என்னை ஊசிபோட் கொல்றாங்க. அந்த 501ஐ பிடிச்சு உனுக்கு எல்லா விவரமும் தெரியவரும்."

-ரிசீவர் நடுபக்கம் பிரிய, அருணகிரி உடம்பின் ஒரு பக்கம் பிரிய கீழே விழும் அந்த புத்திசாலி மனிதர் ஒரு

காக்கை வலிப்புக்காரனைப் போல உடம்பு வெட்டி வெட்டி இழுத்துக்கொள்ள துடிக்க ஆரம்பிக்கிறார்.

தடியன்களிடம் அடங்காத ஆவேசம்.

"கொஞ்ச நேரத்துல நம்மை எல்லாம் பாடாப் படுத்திட்டானே..." யாருக்கு தகவல் கொடுத்தான்னு தெரியல. நிச்சயமா போலீஸ் எப்படியும் இங்க வரு வாங்க. நாம இங்க இருந்தா தொலைஞ்சோம் கிளம் புங்க."

"உடம்பை என்ன பண்றது?"

"ஊறுகாயா போடமுடியும். பெட்ரோலை ஊற்றி கொளுத்திட்டு கிளம்புவோம்."

"இதை எல்லாம் தர்மராஜ் முதலாளிகிட்ட சொல்லனும். நம்ம 501 வேற எசகுபிசகா எங்கியோ மாட்டிகிட்டிருக்காரே."

"எங்கியோ இல்லடா... என்கொயரி கமிஷன் தலைவர் தர்மராஜ்ங்கிறவர் கிட்ட நம்ம தலைவர் பேரும், அந்த ஆள் பேரும் ஒண்ணு. இந்த கிழட்டுநாய் அதை பயன்படுத்தி 501ஐ குழப்பி அங்க அனுப்பி சிக்கவெச்சுட்டான். நாமளும் மாட்ட தெரிஞ்சோம். நல்லவேளை இத்தோட அட்ரஸை சொல்லும் முன்னே போட்டு தள்ளியாச்சு கிழவன் தானேன்னு நினைச்ச துக்கு நல்லா தண்ணி காமிச்சுட்டான் கிழவன்..." ஊடே தொலைபேசியின் சிணுங்கல். போய் எடுக்கின்றனர். மறுமுனையில் இப்பொழுது அசல் தர்மராஜ்.

"எங்கடா...501 இல்லை?"

"முதலாளி நடக்க கூடாதெல்லாம் நடந்து போச் சுங்க. அவர் இப்ப உங்க பேர் கொண்ட விசாரணை கமிஷன் தலைவர்கிட்ட மாட்டிகிட்டிருக்காரு..."

“எப்படிடா?”

“இங்க இந்த அருணகிரி பண்ணவேலை, அவரும் நீங்களும் ஒண்ணுன்னு சொல்லி குழப்பிவிட்டான். 501-ம் நம்பிப்போய் இங்க மாட்டிகிட்டார்.”

“என்னை யார்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டானா 501. அப்ப அவன் மாட்டிகிட்டது சரிதான். சரி அருண கிரி என்ன ஆனான்?

“அந்த ஆள் ஹீரோ மாதிரி பயங்கரவேலை யெல்லாம் பண்ணப் பார்த்தான். நல்லவேளை விஷ ஊசி போட்டு கொன்னுட்டோம்.”

“சபாஷ்!”

“ஆனா?”

“என்ன ஆனா? ஆவன்னா...”

“அருணகிரி அந்த கமிஷன் அதிகாரி தர்மராஜுக்கு போன் பண்ணி 501ஐ பத்தி சொல்லி தானும் ஆபத்துல இருக்கறதா சொல்லிட்டாரு. போலீஸ் இப்ப அவரை போட்டு நோண்டி நொங்கு எடுத்துகிட்டு இருப்பாங்க...”

“சரி அதை நான் பார்த்துக்றேன். நீங்க அருண கிரியை எரிச்சுட்டு பறந்துடுங்க...”

“நல்லதுங்க!”

தடியன் போனை வைத்துவிட்டு திரும்புகிறான். கிழட்டுச் சிங்கமாய் கீழே விரைப்பாக கிடக்கும் அருண கிரியின் உயிர் போன சடலத்தை ஒரு பார்வை பார்க் கிறான். பின்னர் உள்ளே சென்று பெட்ரோல் கேனை எடுத்து வந்து பெட்ரோல் அபிஷேகம் செய்கிறான். சுற்றி தடியர்கள் நின்று ஒரு வினாடி மௌன அஞ்சலி செய்கிற மாதிரி அருணகிரி உடம்பை பார்க்கின்றனர்.

தீக்குச்சியும் உரசப்படுகிறது. அதன் சுங்கு அருண கிரி உடம்பைத் தீண்டத் தயாராகும்போது குடோனின் வாயிற்புறம் போலீஸ் ஜீப்பின் சைரன் சப்தம். அவர் களுக்கு வியர்க்க ஆரம்பிக்கிறது. தீக்குச்சி சற்று தள்ளி கீழே விழுகிறது. திபுதிபு என்று சிலர் ஓடிவரும் சப்தம் தடியர்களைச் சுற்றி இப்பொழுது ஒரு பெரிய போலீஸ் வளையம் நடுநாயகமாக சிவில் உடுப்பில் தர்மராஜ் எனும் என்கொயரி கமிஷன் ஆபீசர். கூடவே கைகளில் விலங்கிடப்பட்ட நிலையில் 501.

❑ ❑ ❑

**லா**க்கப் கதவு திறந்து கொள்கிறது.

உள்ளே அக்கடாவென அமர்ந்திருக்கும் பிரேம் நாத்தையும், தேவாவையும் புதிய சப்-இன்ஸ்பெக்டர் வெளியே அழைக்கிறார்.

“என்னய்யா...கோர்ட்டுக்கு போகணுமாக்கும் வாய்தா வாங்கணுமாக்கும்?” பிரேம்நாத் தொழில் சுத்தமாக கேட்கிறார்.

“இல்ல சார்...ஒரு வருத்தமான விஷயம்.”

“என்ன?”

“தேவாவோட அப்பா அருணகிரியை கொன்னுட் டாங்க.”

தேவா நின்ற இடத்தில் தீப்பிடித்தது போலா கிறான்.

“என்ன சார் சொல்றீங்க எப்ப...யார் எங்கே...?” பாய்ந்து அவர் முன்வந்து படபடக்க தொடங்குகிறான்.

“பதறாதீங்க தேவா. உங்கப்பா ரியலா பெரிய கிரேட்மேன். அவர் சாகும்போதும் சும்மா சாகலை.

எதிரிகள்ல முக்கியமான ஒருத்தரை பிடிச்சு கொடுத்துட்டுதான் செத்திருக்கார். பாடி இப்ப மார்ச்சுவரில இருக்கு, ஈமகாரியங்கள் நீங்க செய்யணுமாமே... எஸ்.பி.சார் உங்களை உங்க விருப்பப்படி விடச் சொன்னார்..."

-மிக பணிவாக பேசுகிறார் சப்-இன்ஸ்பெக்டர் அப்படியே பிரேம்நாத் பக்கம் திரும்பி "தெரியும் சார்.... இதெல்லாம் நீங்க போட்ருக்கற வேஷம்னு தெரியும் எஸ்.பி. நேரா சொல்லலைன்னாலும் நான் புரிஞ்சுகிட்டேன். சிலிர்த்து போயிட்டேன். உங்களையே பணயம் வெச்சு நீங்க நடத்தற இந்த போராட்டத்துக்கு நான் என்ன சார் செய்யணும், அதை சொல்லுங்க..."

-சப்-இன்ஸ்பெக்டரின் கடமையுணர்ச்சியும், உதவ முன்வரும் குணமும் பிரேம்நாத்துக்கு அந்த கசந்த வேலையிலும் துளி இனிக்கிறது. தேவா நொறுங்கிப் போயிருக்கிறான். கண்கலங்கியே இராதவன் அருவியாட்டம் கண்ணீர் பெருக அழ ஆரம்பிக்கிறான். பிரேம்நாத்தும் அழட்டும் தடுக்கவேண்டாம் என்று விட்டுவிடுகிறார்.

"அப்பா...அருமை அப்பா...காலமெல்லாம் கஷ்டம் மட்டுமே பட்ட அப்பா...அப்பாவும் மரமும் ஒன்று. மரத்தின் நிழலில் எல்லாரும் தங்கலாம். ஆனால் அது மட்டும் வெயில் மழை எல்லாவற்றிலும் காயும். ஆயிரம் பறவைகளை கிளைகளிலும் தங்க வைக்கும். அதற்கு காப்பாற்ற மட்டும்தான் தெரியும். அதற்குமேல் எதுவுமே தெரியாது.

அப்பாவும் ஒரு மகனுக்கு அப்படித்தானே? உலகில் தங்கம், வைரம், பிளாட்டினம், பாதரசம் எல்லாம் கிடைக்கும். இப்பொழுதெல்லாம் கிட்னி, கண்கள், இதயம், ஈரல் என்று உடம்பின் உறுப்புகள் கூட கடைக் கடைக்கு விற்பனைக்கு வந்துவிட்டது.

ஆனால் எந்த கடையால் ஒரு அப்பாவை தர முடியும்? நினைத்து நினைத்து அழுகிறான் தேவா. அதே அழுகை உள்ளுக்குள் தர்மராஜ் மேல் ஆவேசமாகவும் அப்படியே உருத்திரள ஆரம்பிக்கிறது. 'விடமாட்டேன் உன்னை'-என்று கறுவச்செய்கிறது.



# 104

**தே**ம்பி அழுதபடி நிற்கும் தேவாவை ஆறுதலோடு அணைக்க தொடங்குகிறார் பிரேம்நாத்.

தைரியமாக இரு தேவா. மனசு தளர்ந்துடாதே... இழக்கற பொருளுக்கு தகுந்த மாதிரிதான் கிடைக்கிற பொருள் இருக்கும்பாங்க. அப்பாங்கற பெரிய உயிரையே நம்ம போராட்டத்துக்கு பணயம் வெச்சு இழந்துட்டோம். இந்த போராட்டத்துல நிச்சயம் நாம ஜெயிச்சுடுவோம். கவலைப்படாதே. இப்ப கிளம்பு.

"எங்க சார்?"

"எங்கயா...ஈம காரியங்கள் இருக்குப்பா. நீதானே செய்யணும்?"

"வாஸ்தவம்தான், நான் இப்ப போனா அது அந்த தர்மராஜ் சந்தேகத்தை வலுப்படுத்தாதா?"

"இனியும் அவனைப் பத்தி யோசிக்கறத விடு. அப்பா காரியத்த பார். அவன் எது வேணா நினைக்கட்டும். நாம அதை சமாளிப்போம். ஒண்ணு தெரிஞ்சுக்கோ இந்த மாதிரி சமயத்துல தூக்கு தண்டனை

கைதிக்குக் கூட விதிவிலக்கு உண்டு. நாம நாடகம் போட்டுக்கிட்டுருக்கற பாசாங்கு கைதிகள் தானே?"

-பிரேம்நாத் அவனை மனதாலும் உடலாலும் தூக்கி நிறுத்தி அழைத்துச் செல்ல ஆயத்தமாகிறார்.

❑ ❑ ❑

**ஆ**ர்.டி.ஓ. ஆபீஸ்! அங்குள்ள கட்டடங்களில் முளைவிட்டிருக்கும் அரசஞ் செடிகள் கூட லஞ்சம் கேட்குமிடம். செல்வாவும் துளியும் தயங்காமல் ஆயிரங்களை வெட்டியதில் ஒருவன் கம்ப்யூட்டரை தட்டி செல்வா காட்டிய டி.எம்.ஒய். 9521 என்கிற எண் கொண்ட கார் யாருடையயது என்று தேடி ஒரு முகவரியைப் பிடிக்கிறான்.

"சார் இந்த கார் 1988 மாடல். வாங்கினவர் பேர் செல்வவினாயகம். ஊர் பெரியகுளம் அட்ரஸ் 18, மாட வீதி, பெரியகுளம்."

-அவன் கம்ப்யூட்டர் திரையைப் பார்த்து ஆர்.சி. புக்கின் அட்ரஸ் பேஜை அப்படியே வாசித்து குறித்துக் கொள்ளும் செல்வா உற்சாகமாக வெளியே வருகிறான்.

"யோவ் செல்வவிநாயகம் நீதான் தர்மராஜனா? வெச்சுக்கறேன் இரு உன்னை" -மனதுக்குள் முணகியபடி கிளம்புகிறான்.

**தே**வாவின் வீட்டில் நடுஹாலில் கிடத்தப் பட்டிருக்கிறார் அருணகிரி. மகாதேவி மில்லின் காக்கி சட்டை ஊழியர் கூட்டம் தெருவையை வளைத்துக் கட்டி நிற்கிறது. கைலாசமும், பிருந்தாவும் கூட வந்திருக்கின்றனர்.

தேவாவின் அம்மா சிவகாமி அழுது அழுது முகம் வீங்கி போய் கிடக்க சந்திராவும், சாவித்திரியும் ஆறுதல் சொல்லி மாளாது போய் மூலைக்கொருவராக முடங்கிக் கிடக்கின்றனர்.

வெளியே கூட்டத்தை குடைந்தபடி ஊடுருவுகிறது போலீஸ் ஜீப். உள்ளிருந்து இறங்குகிறான் தேவா. மொத்த கூட்டமும் அவனையே பார்க்கிறது. மெல்ல நடக்கிறான். உடன் பிரேம்நாத். கைலாசம் சற்று முன் வந்து தேவாவை கையைப் பற்றுகிறார்.

"தேவா...ஐ. ஆம் டெரிபிலி சாரி..."-என்கிறார். அவன் எதுவும் சொல்லாமல் அவரைத் தாண்ட பிருந்தா அவனைப் பார்த்துப் பாராதது போல முகத்தை திருப்பிக் கொள்கிறாள்.

கூட்டத்தில் திரும்ப சலசலப்பு. அருணாசலம் வந்து கொண்டிருக்கிறார். மிகவும் பதறிப்போய் வருகிறார்.

"தேவா...என்னப்பா இது கொடுமை!" என்று கேட்டபடி வந்து அவனை கட்டிக் கொள்கிறார்.

"கொடுமை மட்டுமில்லீங்க, இது ஒரு பெரிய அநியாயம். இனியும் என் தம்பி நிறைய சம்பாதிக்க றேன்னு கிளம்ப வேண்டாம். பிரச்சினை வந்து எங்க குடும்பம் இப்படி ஆகவும் வேண்டாம். எங்களுக்கு அவனாவது மிஞ்சினா போதும்.

தேவா நீ இந்த வீட்டை விட்டே வெளியே போகக் கூடாது. உனக்கு நாங்க சோறு போடறோம். போதும்டா. நாம அனுபவிச்சது. இனி இந்த பங்களா வீடு வேண்டாம். மாசமானா கட்டு கட்டா சம்பளம் வேண்டாம். போதும்டா...போதும் எல்லாம்..." அக்காக் கள் இருவரும் சொல்லி வைத்தமாதிரி புலம்பு கின்றனர்.

தேவா அமைதியாக அம்மாவிடம் சென்று அமர்கிறான். அவள் சகோதரிகள் போல புலம்பவில்லை. கதறவில்லை. மாறாக மகனை கட்டிக் கொள்கிறாள். உடன் நிற்கும் பிரேம்நாத் நிமிர சற்றுதள்ளி என்கொயரி கமிஷன் ஆபீசர் தர்மராஜன்.

"சார் நீங்க எங்க இங்க?"

"நல்லா கேட்டீங்க போங்க...அருணகிரி என் பால்ய ஸ்னேகிதன்."

"இவர் டெத் எப்படி உங்களுக்கு தெரியும்?"

"அது பெரிய கதை. உங்க டிபார்ட்மெண்ட் தேடற ஒரு திருடன் இப்ப என் கைல. அவனுக்கு 501ன்னு வினோத பேர். ரொம்ப சாமர்த்தியமா அருணகிரி அவனை என் பிடியில் மாட்டி வெச்சுட்டுத்தான் செத்துருக்கான். என் பேர் கொண்ட இன்னொரு கிரிமினலைத்தான் உங்க டிபார்ட்மெண்ட் ராப்பகலா தேடுதுபோல இருக்கே...?"

"ஆமாம் சார் அவனாலதான் எல்லா குழப்பமும்! வரிசையா பல கொலைகளை செய்துட்டான் அவன், ஆள் ஒளிஞ்சிருந்து விளையாட்றான்."

"டோண்ட் ஒர்ரி. இந்த 501 அவனோட ரைட் ஹேண்ட், நாலு தட்டுதட்டுங்க. உண்மையை சொல்லிட்டு போறான்."

"அதான் இப்ப இருக்கற ஒரே வழி...எங்க இப்ப அவன்?"

"வெயிட் பிரேம்நாத். அருணகிரி உடம்பு எரியத் தொடங்கட்டும். நாம அவனை எரிப்போம். என் நண்பனை கொன்னவனை பழிவாங்க எனக்கும் தானே ஆசை இருக்கும்?"

“நிச்சயமா?”-இரு அரசு ஊழியர்களும் அங்கேயே ஒரு ஒப்பந்தத்துக்கு வர அருணகிரியின் இறுதியாத்திரை ஆரம்பமாகத் தொடங்குகிறது.

❑ ❑ ❑

**பெ**ரியகுளம் மாடவீதிக்குள் நுழைந்து கொண்டிருக்கிறது செல்வாவின் கார். சரியாக 18-ஆம் நம்பர் வீட்டின் முன்னும் நிற்கிறது. இறங்குகிறான். பெரிய பங்களாதான். ஆனால் கூர்கா இன்றி நாய்கள் ஜாக்கிரதை போர்டோடு கிடக்கிறது.

எடுத்த எடுப்பில் நேராக போய் கதவை தட்டி தர்மராஜன் பார்வையில்பட்டு உபத்ரவத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளாமல் முதலில் அவன் யார் என்று தெரிந்து கொள்ள முயலுவோம். வெளியே வராமலா போய்விடுவான்? -மனதில் கேள்வியோடு தெருவில் உள்ள ஒரு பெட்டிக் கடை வாசலுக்கு காரை நகர்த்தி நிறுத்துகிறான். இறங்கி சிகரெட் பிடித்தபடி காத்திருக்க தொடங்குகிறான்.



# 105

**பெ**ட்டிக்கடை வாசலில் காரை நிறுத்திவிட்டு ஒருவன் வந்து நின்று சிகரெட் வாங்கினால் பெட்டிக் கடை காரனுக்கு குஷி கிண்டை பிய்க்காதா என்ன?

“சார் யார்...வெளியூரோ?”

பெட்டிக்கடைக்காரன் நட்புடன் கேட்கிறான்.

"ஆமாம்...?"

"மதுரையா?"

"ஆமாம்...ஆமாம்...."

"யாரை பார்க்கணும்...யாரையோ தேடி நிக்கற மாதிரி தெரியுதே?"

"அது ...அது... ஒண்ணுமில்லை நம்ப செல்வ விநாயகம் சார் இல்லை..."

"ஆமாம்...பங்களாக்காரரு"

"அவர் பையனுக்கு பொண்ணு பாத்துருக்கோம். நான் பொண்ணு வீட்டுக்காரன். பையன் எப்படின்னு தெரிஞ்சுக்க வந்திருக்கேன்..."

"என்னது...பங்களாக்காரர் பையனுக்கு கல்யாணமா? அவர் சொல்லவேயில்லையே!"

"சொல்றதுக்கு நீங்க என்ன அவ்வளவு பழக்கமா?"

"என்ன அப்படி கேட்டுட்டீங்க...இப்பதான் அவர் பங்களாக்காரர், காரு ஏ.சின்னு ஆயிட்டாரு, இதுக்கு முந்தி அவரு நம்மைப் போலதான்..."

"நிஜமாவா?"

"ஆமாம்...மனுஷன் துணிச்சலா சில விஷயங்கள செஞ்சாரு. மேலே வந்துட்டாரு..."

"துணிச்சலான்னா?"

"இதை எல்லாம் எப்படி உடைச்சா சொல்ல முடியும்? கொஞ்சம் அப்படி இப்படின்னுதான்"

"எனக்கு புரியலை..."

"புரியாட்டி விடுங்க. புரியாம இருக்கறதே நல்லது."

"அது சரி அவர் பையன் எப்படி?"

"பையன் நல்ல பையன்தான்..." பேச்சு வளரும் போதே செல்வவிநாயகம் பங்களாவில் இருந்து கார் ஒன்று வெளியில் வருகிறது.

"செல்வவிநாயகம் மகன்தான் வரார்..." பெட்டிக் கடைக்காரன் சொல்லும் போதே கார் தாண்டிச் செல்கிறது. டிரைவிங் சீட்டில் செல்வவிநாயகம் மகன். படிய வாரிய தலை, நெற்றி நிறைய விபூதி குங்குமம், கைகளில் பிரேஸ்லெட், ஜிப்பா வேட்டி என்கிற அடையாளம், கோல்ட் ஃபிரேமிட்ட சங்கிலி மாட்டிய கண்ணாடி.

செல்வா அவரை ஊன்றி பார்த்துக் கொள்கிறான். கடைக்காரன் கச்சிதமாக கேட்கிறான்.

"என்ன புதுசா பாக்கற மாதிரி பாக்கறீங்க. ஐயா நேரா தன்னோட மாவு மில்லுக்குதான் போய்கிட்டிருக் கார். இவர்தான் மாவு மில்லை பாத்துக்கறாரு. அங்க போய் வேலை பாக்கறவங்க கிட்டே கேட்டா இன்னும் தெளிவா சொல்வாங்க..."

செல்வா உடனடியாக தன் காரை கிளப்புகிறான். முகத்தில் அதிதீவிர சிந்தனை. மகனை பார்த்தாயிற்று. அப்பன் தான் ஒளிந்து கொண்டு முகத்தை காட்ட மறுக்கிறான்.

எப்படியோ இடம் தெரிந்து விட்டது. ஆளையும் தெரிந்து விட்டது. கையும் களவுமாக பிடிக்க வேண்டியது தான் பாக்கி...

என்ன செய்யலாம்?

யோசிக்க ஆரம்பிக்கிறான் செல்வா.

❑ ❑ ❑

இப்படி ஒரு உதையை வாழ்க்கையில் வாங்கியதில்லை 501. தினுசு தினுசாக உதை, கொதிக்க கொதிக்க வெந்நீரை பானையில் விட்டு அதில் ஓட்டை போட்டு சொட்டுச் சொட்டாக அதை சரியாக முதுகு தண்டிமேல் சொட்ட விட 'ஜிவ்ஜிவ்' என்று இழுக்கிறது நரம்பு வலி ஒவ்வொரு சொட்டிலும் எமலோகத்தை காட்டிக் காட்டி மறைக்கிறது.

ஆனால் இவ்வளவு உதையிலும் உண்மையை மட்டும் சொல்ல முடியவில்லை 501 ஆல்...

"அடிவாங்கி செத்து வைக்காதே....உண்மையை சொல். என்னன்ன குற்றங்கள்...எப்பப்ப பண்ணீங்க? அருணாசலம் கடைல உள்ள நோட்டை கலந்ததுல இருந்து தேவா அப்பா அருணகிரியை கொன்னதுவரை எப்படி செய்தீங்க...செய்யச் சொன்ன அந்த தர்மராஜ் யார்?

பிரேம்நாத்தும், எஸ்.பி.யுமே அருகில் நின்று பின்னி எடுத்துவிட்டு கேள்வியும் கேட்கின்றனர்.

"சார்...சத்யமா சொல்றேன். எனக்கு ஒண்ணும் தெரியாது தர்மராஜை நான் பார்த்ததேயில்லை. செல்வ விநாயகம்னு எனக்கு ஒரு நண்பர். பெரியகுளத்துக்காரர். அவர் மூலமாத்தான் தர்மராஜ் எனக்கு தெரிய வந்தார். எப்பவும் டெலிபோன்லதான் பேசுவார். அவர் சொல்ற காரியத்தை கச்சிதமா முடிச்சுட்டா எப்படியாவது யார் மூலமாவது பணம் வந்து சேர்ந்துடும். நான் தர்மராஜை பார்க்க நினைச்சப்ப கூட அவர் சம்மதிக்கவில்லை..."

"யார் அந்த செல்வ விநாயகம். அவருக்கு தெரியுமா தர்மராஜை?"

"நல்லா தெரியும்னுதான் நினைக்கறேன். நான் தர்மராஜ் சொல்லி என்னென்ன குற்றம் செய்தேன்னு

எழுதித் தரேன். இப்போ அடிச்ச கள்ள நோட்டுக் களையும் ஒப்படைச்சுட்றேன். மத்தபடி எனக்கு எதுவும் தெரியாது. எல்லாம் செல்வவிநாயகம்தான்...”

அப்பொழுது கச்சிதமாக தொலைபேசி அழைப்பு. அழைப்பது செல்வா. பிரேம்நாத் ரிசீவரை எடுக்கிறார். “சார்...நான் கைலாஷ் சார் ரிலேஷன் செல்வா பேசறேன். தர்மராஜ் யாருன்னு கண்டுபிடிச்சிட்டேன். கொஞ்சம் பெரியகுளம் வரீங்களா?”

“என்னது...தர்மராஜ் யார்னு தெரிஞ்சு போச்சா?” “ஆமாம்... செல்வவிநாயகம்கற பேர்ல இருக்கிற தொழிலதிபர்தான் தர்மராஜ். எங்க வீட்டுக்கு போன் பண்ணினதை வெச்சு நம்பரை ட்ரேஸ் பண்ணி ஆர்.டி.ஓ. ஆபீஸ்லாம் போய் சி.ஐ.டி.வேலை பார்த்து ரொம்ப கஷ்டப்பட்டு அந்த ஸ்கௌண்ட்ரலை கண்டுபிடிச் சிருக்கேன். வாங்க சீக்கிரம். இப்ப அவன் வீட்டுகிட்ட இருந்துதான் பேசறேன்...” செல்வாவின் அழைப்பை தொடர்ந்து பிரேம்நாத்திடம் பலத்த மாறுதல், உற் சாகமாக கத்துகிறார்.

“தர்மராஜ் மாட்டிக்கிட்டான்...”

## 106



**பி**ரேம்நாத் போடும் சப்தம் அந்த பிளாக் செல்லையே கலக்குகிறது. 501 காதிலும் விழுகிறது. வியர்வை ஒழுக லுடன் நிமிர்ந்து பார்த்து கண்களில் ஆச்சரியம் காட்டு கிறான்.

"என்ன பாக்கறே...அந்த செல்வவிநாயகம்தான் தர்மராஜ். உனக்கு ஒரு பக்கம் நண்பனா மறுபக்கம் தர்மராஜா நடந்துகிட்டு ஊர் உலகுத்தை ஏமாத்தி யிருக்கான். நீ கூட தன்னை தெரிஞ்சு வெச்சுக்க கூடா துன்னு எவ்வளவு திட்டம் போட்டு வேலை செய்திருக் கான் பார்த்தியா?"

பிரேம்நாத் மிக பலமாக பேசுகிறார். டி.எஸ்.பி. முகத்தில் ஒரு நிம்மதி தெரிகிறது.

"பிரேம்நாத் யார் சொன்னது இதை?"

"செல்வா சார்...மில் ஓனர் கைலாஷ் சாரோட ரிலேடிவ் பையன்."

"அவன் எப்படி கண்டுபிடிச்சான்?"

"எல்லாம் ஒரு பர்சனல் இண்ட்ரஸ்ட்தான். கைலாஷை கொலைகாரனாக்கி ரொம்பதான் மிரட் டிட்டான் தர்மராஜ்ங்கற செல்வவிநாயகம். அதுதான் தப்பிக்கறதுக்காக அவர் செல்வாவை தட்டிவிட்டுருக் கார். பய கில்லாடி. நம்ம டிபார்மெண்ட்டால நாம ஒரு பக்கம் கண்டுபிடிச்ச நபரை மறுபக்கம் தனியாளா நின்று கண்டு பிடிச்சிருக்கான். பேசாம நம்ப டிபார்ட்மெண்ட்ல சேர்த்துட வேண்டியதுதான்..."

"ரைட் இது பேசற நேரமில்லை... ஸ்பெஷல் விங்கோட முதல்ல பெரியகுளம் கிளம்புங்க. அந்த தர்மராஜ் எட்டகாதகன். தப்பி ஓடிடப் போறான்."

டி.எஸ்.பி. பரபரப்பு காட்ட பிரேம்நாத்தும் தேவா வும் அடுத்த நொடி ஜீப்புக்கு தாவுகின்றனர். தேவாவுக்கு மனதுக்கு மிக தெம்பாக இருக்கிறது.

"சார் எனக்கு இப்பதான் திரைவிலகின மாதிரி இருக்கு. சண்டாளன் எல்லாரையும்தான் என்னமா படுத்திட்டான்...இல்ல..."

"ஆமாம் தேவா இருந்தாலும் அவன் அகப்பட்ற வரையிலையும் நிம்மதி இல்லை..."

-செருமும் ஜீப்புக்குள் பிரேம்நாத் விவேகம் காட்டு கிறார் ஜீப்பும் சீறத் தொடங்குகிறது!"

❑ ❑ ❑

**பெ**ரியகுளத்து மாடவீதியில் பாய்கிறது போலீஸ் ஜீப். அதற்கு முன்பே அங்கொரு போலீஸ் வேன். தெருவின் ஒவ்வொரு முனையிலும் போலீஸ் காரர்கள்.

தர்மராஜ் தப்பி ஓடிவிடாதபடி இருக்க விஷயம் தெரிந்த மறுநொடி லோக்கல் போலீசுக்கு டி.எஸ்.பி தகவல் தந்ததன் எதிரொலி ஜீப் பங்களா வாசலில் குலுங்கி நிற்கிறது. தேவாவும் பிரேம்நாத்தும் தாவிக் குதித்து இறங்குகின்றனர்.

பெரியகுளம் இன்ஸ்பெக்டர் வாசலிலேயே காத் திருக்கிறார். பிரேம்நாத்தை பார்த்து சல்யூட் செய்த படி முன் வருகிறார். அவர் வரும் விதம் நிற்கும் விதம் எல்லாம் ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதைப் போல காட்டுகிறது.

"என்ன சார்...வாட் ஹேப்பண்ட் ஏன் இப்படி எல்லாரும் கூட்டமா நிக்கறீங்க..."

"சாரி சாரி...அந்த தர்மராஜை உயிரோட பிடிக்க முடியல. விஷயம் தெரிஞ்சு சுத்தி வளைச்சு பிடிக்க றதுக்கு முந்தியே செல்வான்னு ஒருத்தர் அவரை பார்த் துட்டார். இரண்டு பேரும் பயங்கரமா மோதிக்கிட் டாங்க. அதுல செல்வாவை தர்மராஜ் சுட்டுட்டார் அப்படியே தானும் சுட்டுகிட்டு..."

"சுட்டுகிட்டு...?"

“தற்கொலை செய்துகிட்டிருக்காரு...”

-அடுத்த நொடி பிரேம்நாத் உள்ளே ஓட தேவா பின்தொடர நடு ஹாலில் அத்தனை பெரிய வீட்டில் தர்மராஜ் எனும் செல்வவிநாயகம் நெற்றிப் பொட்டில் சுட்டுக்கொண்டு சவமாக கிடக்க தரை எங்கும் ரத்தக் காடு.

“ஆமாம் எங்கே செல்வா?”

“ஹாஸ்பிடலுக்கு கூட்டிக்கிட்டு போயிருக் கோம்...” முந்தியே நடந்துடுச்சா?”

“ஆமாம் சார்...நாங்க வரும்போது உள்ள சத்தம் கேட்டது. ஓடிவந்து பார்த்தப்போ செல்வவிநாயகம் செத்துக்கிடக்க செல்வா கால்ல குண்டு பாஞ்ச நிலைல துடிச்சிக்கிட்டு இருந்தாரு...”

“ஐ.சீ...” சொன்னபடி பிரேம்நாத் தங்களை அத் தனை நாட்களாக அலைக்கழித்த அதி திறமைசாலி மனிதனின் முகத்தை திருப்பிப் போட்டு பார்க்க கத்திய படி வருகிறார்கள் அவரது மனைவி மக்கள்.

எல்லாரையும் போலீஸ் ஒரு அறையில் முடக்கி வைத்திருக்கிறது.

“ஏன் அவங்களை அறைக்குள்ள தள்ளி அடைச் சிருக்கீங்க.”

“என்கொயரிக்கும் வெரிஃபிகேஷனுக்கும் டிஸ்டர்பா இருக்கும்னுதான். அதோட டெட்பாடியை கட்டிப்பிடிச்சு அழுது தடயங்களை கலைக்க பார்த் தாங்க...”

“ஐ.சீ..”

பிரேம்நாத் தாடையை வருட தேவா, தர்மராஜ் எனும் செல்வவிநாயகம் சடலத்தையே பார்த்தபடி இருக்க "எக்ஸ்க்யூஸ்மீ சார்..."என்கிறது ஒரு குரல்.

"யெஸ்..."-பிரேம்நாத் நிமிர எதிரில் செல்வ விநாயகம் மகன்.

"சார், அப்பா நிச்சயமா தர்மராஜ் இல்லை. அப்பாவும் தர்மராஜோட கையாள்தான்." குண்டைத் தூக்கி போடுகிறான் அவர்மகன்.

"என்னப்பா சொல்றே?"

"ஆமாம் சார்....உண்மையான தர்மராஜை எனக்கு தெரியும். அவர் அப்பாவோட நெருங்கின நண்பர். அப்பா அவரோட சேர்ந்து கெட்டு போயிட்டதுல எங்களுக்கே உடன் பாடில்லை. இருந்தும் அப்பாங்கற தால சகிச்சுக்கிட்டோம்..."

"அதெல்லாம் இருக்கட்டும் யார் அது?"

-பய்கிறார் பிரேம்நாத்.

"அது..."அவனும் சொல்ல...



# 107

**செ**ல்வ விநாயகத்தின் மகன் பிரேம்நாத்தை நெருங்கி உண்மையான தர்மராஜ், அப்பா இல்லை என்று சொன்னதில் பிரேம்நாத் மட்டுமல்ல தேவாவே அதிர்ச்சியின் உச்சிக்கு போகிறான்.

பிரேம்நாத் அவனை நெற்றிக்கண்ணை திறந்தது போல பார்க்கிறார். தனியே அழைத்து "என்னப்பா,

உன் அப்பாவை காப்பாத்த இப்படி ஒரு கதை அடிச்சு பாக்கறியா?" -கோபம் குறையாதபடி கேட்கிறார்.

"இல்ல சார். அப்பாவை காப்பாத்த என்ன இருக்கு. அவர்தான் போய்ட்டாரே-நான் உண்மையை காப்பாத்ததான் பேசறேன்." அவன் இதமான குரலில் பேசுவதை கேட்கும் போது பொய் சொல்கிற மாதிரியோ திசை திருப்புகிற மாதிரியோ துளிகூட தெரியவில்லை.

அப்ப யார் அந்த தர்மராஜ் உனக்கும் தெரியும்னு சொன்னியே...அது எப்படி...?" பிரேம்நாத் கேள்விக்கு அவன் உடனே உள்ளே செல்கிறான். சில விநாடி கழித்து ஒரு டைரியுடன் வருகிறான். அதை பிரேம்நாத் எதிரில் நீட்டுகிறான்.

"இது அப்பாவோட ரகசிய டைரி. இதை இது வரை நாங்களே பார்த்ததில்லை. அப்பா பார்க்கவும் விட்டதில்லை. ஆனா ஒண்ணு மட்டும் அடிக்கடி சொல் வார். நான் இயற்கையா சாகலைன்னா அப்ப இந்த டைரியை எடுத்து போலீஸ்கிட்ட கொடுத்துடுங் கன்னு...இந்த டைரியிலே அவர் நிச்சயமா தன் பார்ட்னர் பற்றியும், தான் செய்த அத்துமொத்த விஷயங்கள் பத்தியும் எழுதியிருப்பார்னு நம்பறேன். நான் என் வாயால அந்த நபர் யார்னு சொல்றதவிட இந்த டைரி யில என் அப்பா கைப்பட சொல்லியிருக்கறது ரொம்ப ஸ்ட்ராங் எவிடன்சா இருக்குமில்லியா?"

-அவர் டைரியை தந்துவிட்டு சொன்னதைக் தொடர்ந்து பிரேம்நாத் அவனை சற்று மதிப்புடன் பார்க்கிறார். இப்பொழுது அவர்களை சுற்றிலும் ஒரு ஜனசமுத்திரமே உருவாகியிருக்கிறது. ப்ளாஷ் கேமராவும் கையுமாக பத்திரிகையாளர் கூட்டம் ஒரு

பக்கம். போலீஸ் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது அவர்களிடம். கீழே செல்வ்விநாயகம் சடலம்!

பெரியகுளம் இன்ஸ்பெக்டரும் எஸ்.பி.யும் உடனடியாக சடலத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் இறங்க செல்வவிநாயகம் குடும்பம் கண்ணீருடன் அதை வேடிக்கை பார்க்கிறது.

பிரேம்நாத்தும், தேவாவும் ஒதுங்கி ஓரமாய் நின்று டைரியை புரட்டத் தொடங்குகின்றனர்.

"சார்...தர்மராஜ் பிடிபட்டுட்டாரா? இவர் தான் தர்மராஜா...." ஒரு நிருபர் கூட்டத்தில் இருந்தபடியே கத்துகிறார்.

டைரிக்குள் நுழைய முடியாதபடி சப்தம்... கேள்விகள்.

-எஸ்.பி. நெருங்கி வரவும் மரியாதை நிமித்தமாகவும் கடமை நிமித்தமாகவும் டைரியை அவர் வசம் தருகிறார் பிரேம்நாத்.

"பரவால்ல பிரேம்நாத் வெறும் டைரியை மட்டும் தராம அந்த குற்றவாளியையும் பிடிச்சுத் தாங்க. எந்த நிலைலயும் தர்மராஜ் வெளியே இருக்கான்கறது தெரிய வேண்டாம். அது அவன் தப்பி ஓட இடம் தரலாம்."

-எஸ்.பி. சாதுர்யமாக சொல்வதை கேட்ட மறுநொடி பிரேம்நாத் "பிரஸ்..." என்று கைதட்டி சப்தமிட அந்த வீட்டுக்கு வெளியே ஒரு மர நிழலடியில் அனைவரும் ஒன்று படத் தொடங்குகின்றனர்.

பிரேம்நாத் முகத்தில் ஒரு பக்கம் பெருமிதம் மறு பக்கம். கலவரம். எங்கே இந்த இடைவெளியில் உண்மையான தர்மராஜ் தப்பி விடுவானோ என்கிற கலவரம் தான். வேக வேகமாக பத்திரிகைகாரர்களுக்கு பதில் சொல்லிவிட்டு கிளம்ப வேண்டியதுதான்.

"யெஸ்...என்ன கேக்கணுமோ கேளுங்க."

"சார்...இப்ப நீங்க கைதியா இல்லை போலீஸ் அதிகாரியா?" "நல்ல கேள்வி. நான் போலீஸ் அதிகாரிதான். நான் மட்டும் இல்ல., தேவாவும் குற்றவாளி கிடையாது. அவர் காக்கிச் சட்டை போடாத ஒரு போலீஸ்காரர்.. இந்த கேஸ் உண்மைகளை வரவழைக்க நாங்க எஃஸ்.பி.யோட பர்மிஷன் மற்றும் உத்தரவு பேர்ல இப்படி ஒரு நா!...கமாட வேண்டியிருந்தது."

"அப்ப இந்த கேஸ்ல எல்லா குற்றவாளிகளும் பிடிபட்டுட்டாங்களா...?"

"கிட்டத்தட்ட..."

"செல்வவிநாயகம்தான் தர்மராஜா?"

"ஆ...ஆ...ஆமாம்!"

"நம்ப முடியாத இந்த உண்மையை எப்படி கண்டு பிடிச்சீங்க?"

"அதான் போலீஸ்... அதான் அதோட சீக்ரெட்"

"இந்த உண்மையை தெரிஞ்சுக்க தேவாவோட அப்பா எதுவும் உதவி செய்தாரா?

"ஆமாம் அவர் உதவியும் இதுல இருந்தது. அவர் மூலமாதான் ஒரு பெரிய கிரிமினல் மாட்டினான். அவன் மூலமா செல்வவிநாயகம் மாட்டியிருக்காரு....?"

"இந்த கேஸ்ல போலீசைவிட சில தனி நபர்க்ள் பிரமாதமா துப்பு துலக்கினதா கேள்விப்பட்டோம் நிஜமா?"

"நிஜம்தான்"

"அது யார்...எப்படின்னு சொல்லமுடியுமா?"

“இப்ப வேண்டாமே”

“அப்ப எப்ப தெரிய வரும்?”

“இப்ப வழக்குல இன்னும் ஒரு பெரிய குற்றவாளி அகப்பட வேண்டியிருக்கு. அவன் அகப்பட்டு முடியட்டும். அப்புறம் சொல்றேன்”

“தொழிலதிபர் கைலாஷ் மகன் விஜயன் கொலை செய்யப்பட்டதற்கும் இந்த தர்மராஜ் கூட்டத்துக்கும் சம்பந்தம் இருக்கா...?”

“இருக்குன்னுதான் நினைக்கிறோம். ஓ.கே. இப்ப இவ்வளவு போதும்” பிரேம்நாத் அந்த கூட்டத்திலிருந்து கிளம்ப ஆயத்தமாகிறார்.

“ஒன் மினிட்...”

“யெஸ்”

“இன்னும் ஒரு பெரிய குற்றவாளின்னு சொன்னீங்களே. அவர் யார்னு சொல்லமுடியுமா?”

“சாரி...அரெஸ்ட் பண்ணிட்டு சொல்றோம். தெரிஞ்சுக்குங்க...”

“அவர் இந்த தர்மராஜைவிடவா பெரிய குற்றவாளி?”

“அது அவர் பிடிப்பட்ட பிறகு தெரியவரும். இனி யார் எந்த கேள்வி கேட்டாலும் நோ ஆன்சர்”

-பிரேம்நாத் அங்கிருந்து பிரிகிறார். தேவா தொற்றிக் கொள்கிறான். ஜீப் சீற ஆரம்பிக்க டைரி விரிபடுகிறது. அதில் குறிப்பிட்ட இடத்தில் உண்மையான தர்மராஜ் யார் என்னும் குறிப்பு. அதை பார்த்த நொடி இருவருமே வியப்பின் உச்சிக்கும் மேலே செல்கின்றனர்.

# 108



வீட்டுக்குள் நுழையும் தேவாவை சகோதரிகள் ஆரத்தி எடுத்து வரவேற்பு தருகின்றனர். அம்மா நெருங்கி வந்து கட்டித் தழுவிக் கொள்கின்றாள்.

"தேவா...நீ எந்த நிலையிலையும் தப்பு செய்ய மாட்டேங்கற என் நம்பிக்கை வீண் போகலை. உன் போராட்டத்துல நீ தோற்கவும் இல்லை."என்று கண் கலங்குகிறாள். அப்படியே நேராக மாலையிடப்பட்ட அருணகிரியின் படத்துக்கு முன் அழைத்துச் செல்ல, தேவா அப்பாவின் படத்தை பார்த்து கண் கலங்கு கிறான். சகோதரிகளும் நெருங்கி வந்து கட்டிக்கொள் கின்றனர். "சாரிடா உன் மனசு தெரியாம பல கட்டத்துல பலமாதிரி பேசிட்டோம்." என்கிறாள் சாவித்ரி.

"தேவா இப்ப உன்னை நினைக்க ரொம்ப பெரு மையா இருக்கு. பேப்பர்ல எல்லாம் உன்னை ஹீரோவா போட்டிருக்காங்க. கிட்டத்தட்ட நீயும் சினிமா ஹீரோவும் ஒண்ணாயிட்டீங்க." என்கிறாள் சந்திரா

அனைத்தையும் கேட்டு தேவா பெருமிதம் கொள் ளும் போது அந்த அதிர்ச்சியான தகவல் வருகிறது. லேகா இறந்து. விட்டாள்!

❑ ❑ ❑

அருணாமகாலில் மலர் படுக்கை மேல் கிடக்கிறது லேகாவின் சடலம். எவ்வளவு முயன்றும் காப்பாற்ற முடியவில்லை. இருந்தும் சாகும்போது சிரித்தபடியே இறந்திருக்கிறாள். முகத்தில் இறப்பின் சாயலே தெரி

யாதபடி ஒரு தேவதை தூங்குவது போலத்தான் இருக்கிறது. தலைமாட்டில் அழுதபடி நின்று கொண் டிருக்கிறார் அருணாசலம்

தள்ளாடியவாறே தேவா வரவும் ஓடி வந்து அணைத்துக் கொள்கிறார். தேவா வாயிருந்தும் ஊமை யாகிவிட்டதுபோல அவரைப் பார்த்து வெறிக்கிறான். அப்படியே நெருங்கி லேகாவின் சடலம் அருகே செல் கிறான்.

நெருங்கி அமருகிறான். மனது குமுறத் தொடங்கு கிறது. பெண்ணே உனக்கு இத்தனை காதலா?

எனக்காக சொன்னபடி செய்து விஷத்தை கூட குடித்து உயிரை விட்டுவிட்டாயே...? நான் என்ன அத் தனை பெரிய மனிதனா? இந்த பாவத்துக்கு எப்படி நான் பரிகாரம் செய்யப்போகிறேன். ஒரு பெரிய திருடனை பிடித்த வெற்றியை உன் மரணம் என்னும் இழப்பால் இழந்துவிட்டேனே...இனி நான் எங்கு எதில் வெற்றி பெற்று என்ன பயன்? போன உன் உயிரை மீட்க முடியாதே ஐய்யோ...?"

அப்படியே லேகா மேலே விழுந்து புரளத் தொடங்குகிறான். வாய்விட்டு அருணாசலத்தை பார்த்து கத்துகிறான். "சார் நான் பெரிய பாவி பெரிய துரோகி. என்னாலதான் லேகா போய்ட்டா. என்ன மன்னிக்கா திங்க சார். எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் தாங்க சார்...என்ன தண்டனை வேணும்னாலும் தாங்க..."

அப்படியே திரும்பி அருணாசலத்தை கட்டிக் கொண்டு அழுபவனிடம் அருணாசலம் ஒரு கடிதத்தை தருகிறார்.

"என்ன லெட்டர் சார் இது?"

"லேகா எழுதினது."

அடுத்த நொடி பிரித்து படிக்கிறான்.

அன்புள்ள தேவா!

என்னை மன்னித்துவிடுங்கள். நான் தவறு செய்து விட்டேன். காதல் என்னும் பெரும் தீ என்னை விழுங்கி விட்டது. உங்கள் பேரில் ஒரு தப்பும் இல்லை. நீங்கள் ஒரு ஜென்டில்மேன். பிருந்தாவோடு உள்ள உங்கள் காத லாவது சிறக்கட்டும். என் சாவைப் பார்த்து காதல் மேலேயே வெறுப்பு வந்துவிடப் போகிறது உங்களுக்கு. எனக்கு நீங்கள் செய்யும் அஞ்சலி ஒன்றுதான் அது பிருந்தாவோடு நீங்கள் சேருவது மட்டும்தான். என்னை வாழும்போதுதான் ஏமாற்றினீர்கள். செத்த பிறகாவது ஏமாற்றாமல் என் ஆசையை நிறைவேற்றுங்கள். உங்கள் வயிற்றில் நான் வந்து நிச்சயம் பிறப்பேன். எனக்குப் பிறகு தனிமரமாக நிற்கும் அப்பாவையும், கைவிட்டு விடாதீர்கள். அவரை உங்களை நம்பி ஒப்படைத்து செல்கிறேன்.

உங்கள் அன்பை பெற முடியாத லேகா.

கடிதத்தை படிக்கும் தேவா எதுவுமே பேச முடியாத படி அழுது குமுறுகிறான். தாங்கிப் பிடிக் கிறார். அருணாசலம்!

❑ ❑ ❑

ஒரு வாரம் கழித்து விட்டது எல்லாமே இயல்பு நிலைக்கு திரும்பிவிட்டார்கள். கோர்ட்டில் போலீஸ் தர்மராஜ் என்னும் உண்மையான நபரை நிறுத்தி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் போகிறது.

பிரேம்நாத் மிடுக்கு குறையாதபடி அந்த செயல் பாடுகளில் இருக்கிறார்.

கோர்ட்டுக்கு தேவா, கைலாசம், பிருந்தா, அருணாசலம் என்று அனைவருடனும் வந்து பார்வை யாளர் வரிசையில் அமர்ந்திருக்கிறான்.

அனைவர் கண்களிலும் விரலைவிட்டு ஆட்டிய அந்த குற்றவாளியை போலீசும் பிடித்து இழுத்த வருகிறது. அவனிடம் இப்பொழுது உயிர் துடிப்பே இல்லை.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பதை பார்த்துவிட்டதால் வந்ததோல்வி அவனை துவட்டி யிருக்கிறது.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க போகக் கூடாத பாதையில் எல்லாம் போன அந்த நபரை கூண்டில் ஏற்றுகின்றது போலீஸ். கூடவே 501, மற்றும் அடியாட்கள் கூட்டம் சத்யப்பிரமாணம் முடிகிறது. மாஜிஸ்ரேட் கேட்கிறார்.

"நீங்கதான் தர்மராஜா?"

"ஆமாம்!"

"குற்றங்கள் சகலத்தையும் ஒப்புக்கொள்கிறீர்களா?"

"ஆமாம்..."

"அப்ப வக்கீல் வெச்சு வாதாடி தண்டனையில் இருந்து தப்ப உங்களுக்கு எண்ணமில்லையா?"

"எண்ணமிருந்தாலும் பலனில்லை, எந்த ஒரு வக்கீலும் அதுக்கு தயாராவும் இல்லை, என்வரைல இரண்டு நிலைதான் ஒண்ணு தர்மராஜா மாட்டிக்காம ஏகபோகமா வாழணும் முடியலையா தூக்குல தொங்கிடணும் ப்ளீஸ் ஆனா என்னை தூக்குல போட்டுருங்க சீக்கிரமா."

-அவன் சொல்லிவிட்டு தலையை குனிந்து கொள் கிறான்.

அரசாங்க வக்கீல் குறுக்கில் புகுகிறார்.

"சாரி மிஸ்டர்....நீங்க சொல்றபடி கேட்க இது உங்க வீடு இல்லை நீதிமன்றம் தூக்கு போட்றத பத்தி ஜட்ஜ் டிசைட் செய்வார். நீங்க கவலைப்பட வேண்டாம்.

கல்கத்தாவுல இருந்த நீங்க இந்த மதுரைல செல்வ விநாயகம் தயவோட தர்மராஜா செய்த தவறுகளை பத்தி இந்த கோர்ட்ல சொல்லுங்க.

கைலாசம்கற உங்க உறவுக்காரரையே ஏமாத்தியும் அவர் மகளை மணந்துக்க முடியாம போனதால அதுக்கு போட்டியா வந்த தேவாவை ஒழிச்சு கட்ட கள்ள நோட்டுகளை தேவா கடைக்கு சப்ளை செய்து தேவாவை மாட்ட முயற்சி செய்ததையும் கைலாசத்தை மறைமுகமா உங்க பிடியில வெச்சுக்க விஜயனை கொலை செய்துட்டு பழியை அவர் மேல போட் டதைப் பத்தியும் வரிசையா நீங்க ஒத்துக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கு.

இந்த செயல்கள் நடக்கும்போது உங்களுக்கு ஆக்சி டெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில இருக்கறதா உங்களை நீங்க பாதுகாத்துகிட்டதுல இருந்து-பின்ன போலீ ஸோட ஸ்டெப்புக்கு தகுந்த மாதிரி ஒவ்வொரு கட் டங்கள்ளையும் முடிவெடுக்க தோதா இங்க கைலாசம் வீட்லையே வந்து தங்கினதைப் பத்தியும் கொஞ்சம் சொல்லுங்க.

எல்லாத்துக்கும் மேலா தர்மராஜ்ங்கற நபர் வெளியே இருக்கற ஒரு நபர்ங்கற எஸ்டாபிளிஷ்மெண்ட்டுக் காக டெலிபோன் நம்பர் சேஸ், கார் நெம்பரை வெச்சு அட்ரஸ் கண்டுபிடிக்கறதுன்னு உங்க கூட்டாளியையே

தேடற மாதிரி நீங்க தேடினதும் அவரை கொன்னு அவரையே தர்மராஜ் ஆக்க முயன்றதையும் எதிர் பாராதவிதமா உங்க கூட்டாளி செல்வவிநாயகம் டைரி உங்களை அப்படி இப்படி அசைய முடியாதபடி காட்டிக் கொடுத்ததையும், கூட உங்க வாயாலையே ஒத்துக் கறதும் இந்த கேஸ் சீக்கிரம் முடிய உதவும். சொல் வீங்களா?"-அரசாங்க வக்கீலின் கேஸ் ஃபைலையும் நீண்ட மடக்கலையும் தொடர்ந்து அனைத்துக்கும் ஒப்புதல் தர நிமிர்கிறான் தர்மராஜ் எனும் போர்வையில் சகலரையும் கைப்பொம்மையாக ஆட்டுவித்த செல்வா!

முதல் பாகம் முற்றிற்று.



# மேலே உயரே உச்சியிலே

(முதல் பாகம்)

இந்திரா சௌந்தர்ராஜன்

